# வேத
# விளக்கம்.

# வேதவிளககம்.

இஃது

மிகுந்த கீர்த்திப் பெயர்பெற்ற
மெய்ம்மறைப்போதக
வீரமாமுனிவர்
என்னுஞ் சேசுசபைக்குருவாகிய விராஜரிஷி
தைரியநாதசுவாமியாரவர்களால்
அருளிச்செய்யப்பட்டு
புதுவையிலெழுந்தருளியிருக்கும்
மகா கனம்பொருந்திய- ஆண்டவராகிய
கிளெமேனசுபொனுந்
துரிசிப்பாரொன்னும்
நாமதேயங்கொண்டிருக்கிற
மேற்றிராணியாரவர்களநுமதியில்
வெளிப்பட்ட பிரகாரம்
உரோமாபுரியினின்றுவந்த
உத்தாரத்தின்படியே



௲அ௱௬அ ௵
புதுவையிற் சன்மவிராக்கினிமாதாக் கோவிலைச்சேர்ந்த
அச்சுக்கூடத்தில் ௯-வது. பதிப்பிக்கப்பட்டது.

# பிரசித்தபத்திரிகை.

## புதுவையி லச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்தினபுத்தகங்களாவன:

| புதுவையிலே. | அணா. |
|---|---|
| அஞ்ஞான தூஷணமறுதல். | ௧ |
| அதிரோஷ் —சபையொழுங்கு. | ௨ |
| அநுசாரம். | ௮ |
| அர்ச் -அஞ்ஞேசம்மாள் சரித்திரம். | ௧௨ |
| அர்ச்.-அத்தனாசியார் சரித்திரம். | ௧௨ |
| அர்ச்.-அந்தோனியார் சரித்திரம். | ௧ |
| அர்ச் -இஞ்ஞாசியார் சரித்திரம். | ௧ |
| அர்ச் -இஞ்ஞாசியார் ஞானத்தியானங்கள். | ௬ |
| அர்ச்.-இஞ்ஞாசியார்தியானங்கள். | ௰ |
| அர்ச் -ஐந்தாகயபிராஞ்சீஸ்குவின் சரித்திரம். | ௬ |
| அர்ச்.-சவேரியார் சரித்திரம். | ௮ |
| அர்ச்சியசிஷ்டவர்களின் சரித்திரம் ௩-காண்டமும். | ௫௪௨ |
| அர்ச்.-சூசையப்பர் வணக்கமாதம். | ௰ |
| அர்ச்.-செபஸ்தியார் சரித்திரம். | ௧ |
| அர்ச்.- ஞானப்பிரகாசியார் சரித்திரம். | ௮ |
| அர்ச்.-தேவஅருளப்பர் சரித்திரம். | ௧௨ |
| அர்ச்.-பொலிக்காப்பியார் சரித்திரம். | ௧ |
| அர்ச் -மக்காரியார் சரித்திரம். | ௧ |
| அர்ச்.-மர்த்தீனூர் சரித்திரம். | ௧௨ |
| அர்ச் -முடியப்பர் சரித்திரம். | ௧௨ |
| அர்ச்.-லவுரேஞ்சியார் சரித்திரம். | ௧௨ |
| அர்ச்.-வனத்துச்சின்னப்பர் சரித்திரம். | [illegible] |
| ஆதிச்சுவடி. | ௧௨ |
| ஆதிச்சுவடிபரமார்த்தகுருவின்கதை. | ௩ |
| ஆத்துமநேசம். | ௮ |
| இலக்கணச்சுருக்கம். | ௭ |
| இலக்கண நூலாதாரம். | ௪ |
| இலத்தீனிலக்கணம். | ௰௨ |
| இலத்தீன் பிராஞ்சுதமிழகராதி. | ௫௪ |
| இல்லறவுத்தியானம். | ௰௨ |
| கன்னியரநுசாரம். | ௨ |
| கதாமஞ்சரி. | ௪ |
| கருணாகரக்கடல். | ௰௬ |

புதுவையிலே.

கிறீஸ்துநாதாநுசாரம்.
சத்தியசபைப்பரீட்சை.
சத்தியவேதசரித்திரச்சுருக்கம்.
சத்தியவேதப்பரீட்சை.
சத்தியவேதார்ப்புதங்களின்சுருக்கம்.
சம்பாஷணையநுசாரம்.
சரித்திர உபதேசச்சுருக்கம்.
சாங்கோபாங்கமார்க்கம்.
சாதாரணம்.
சிலுவைப்பாதை.
சிறுவர்எண்சுவடி.
சிறுவர்சுவடி.
சிறுவர்கல்விப்புதையல்.
சுவிசேஷம்.
ஞானவுணர்த்துதல்.
ஞான உபதேசம்.
ஞானமுயற்சி.
ஞானாமிர்ததடாகம், சித்திரக்கட்டிடம்.
  ஷை தங்கவிரேக்குக்கட்டிடம்.
  ஷை தோற்கட்டிடம்.
ஞானாமிர்தம்.
ஞானானந்தம்.
தமிழ்ப்பிரஞ்சகராதி-உ-காண்டமும். ரூ
தர்க்கக்கும்மி.
திருநாமங்களின்விளக்கச்சுருக்கம்.
திருப்பாவணி.
திருமுகத்தின் பிரார்த்தனை.
திருவள்ளுவர்குறட்சங்கிரகம்.
திவ்வியமாதிரிகை.
தெய்வப்பரீட்சை.
தேம்பாமாலை.
தேம்பாவணி. மூன்றுபுத்தகமாக.
தேவசகாயம்பிள்ளைசரித்திரம்.
தேவமாதாவின்வணக்கமாதம்.
நன்மரண ஆயத்தம்.
நன்றாய்நினை
நெடுநாட்பஞ்சாங்கம்.

# பிரசித்தபத்திரிகை.

## புதுவையிலே.

அணா.

ஞ்சுதந்திரக்கதை. ௫
டங்... ல்விளக்கப்பட்டஞானோபதேசம். ௰௪
ரமார்த்தகுருவின்கதை. ௩௮
ாலர்சுவடி. ௩
ல அர்ச்சியசிஷ்டவர்களின்சரித்திரம். ௰உ
ிராஞ்சிலக்கண நூற்சுருக்கம். ௰
ிராஞ்சுதமிழகராதி. ௫௨ உ
ிராஞ்சுதமிழ் எளிதானபாடங்கள். அ
ிராஞ்சுதமிழ் விஞானிடை. ச
ிராஞ்சுதமிழ் பூமிசாஸ்திர நூலாதாரம். ௰
ிரார்த்தனைமாலை. ௰
ிரார்த்தனைமாலையும் ஞானாமிர்தமுஞ்சேர்ந்தது. ௰௪
ரோடெஸ்டாண்டு மதங்களின் அழிவு. ௩௭
;சையுதவிமந்திரம். ௩
மிசாஸ்திரச் சுருக்கம். ௰௪
மிசாஸ்திர நூலாதாரம். ௪
மிசாஸ்திரப்படங்கள். ச௰
ர்வீகமறைவிளக்கம். ௫
த்திப்பேறுபெற்ற அருளானந்தர் சரித்... அ
ன்றுஞ்சபையொழுக்கம். ௪
மாக்ஷவிராக்கினி பிரார்த்தனை. ௭
புத்தேரினத்தியல்பு. ௩
ருஷத்தின் பிரதிதினசுகிர்த பிரசங்கம், 
ஒவ்வோர் காண்டம். உச
௲-௱-காண்டமும்மூன்றுபுத்தகமாக. ௫உசஎ
ாலர்கணிதம். ௰
ாலர்துணை. உ௭
ாலர்பொக்கிஷம். ௱௭
சுவாசப்பரம்புதல் ௲-காண்டம். ௰
ஷை அந்தந்தக்கை. ௩
வதப்புரட்டலை நீக்குஞ்சஞ்சீவி. ௰௪
வதப்புரட்டலைமறுத்தல். ௩
வதவிளக்கம். உ௰
வதியரொழுக்கம். அ
ictionarium Latino Gallico-Tamuricum. 4 R.
ictionnaire Français-Tamoul, 1re. livraison. 1 R.
Id. 2e. livraison. 1 R.

## பிரசித்தபத்திரிகை.

| புதுவைவிலை. | அணு |
|---|---|
| Dictionnaire Tamoul-Français. | 8 R |
| Élémens de Géographie, cartonné. | 10 A |
| Grammaire Française Tamoule. | 1 R. 8 A |
| Notice sur la poésie Tamoule, le R. P. Beschi et le Tembavani, broché. | 4 A |
| Tembavani, 3 vol. | 5 R |
| Vocabulaire Français-Tamoule. | 2 R |

கல்லச்சுப்புத்தகங்கள்.

| | |
|---|---|
| ஆயத்தம். | [illegible] |
| ஞானஆறுதல். | உ |
| தேவமாதாவின் நவநாட்பிரசங்கம். | [illegible] |
| திங்கட்கிழமைப் புதுமை | [illegible] |
| செவ்வாய்க்கிழமைப் புதுமை. | [illegible] |
| புதன்கிழமைப்புதுமை. | [illegible] |
| வியாழக்கிழமைப் புதுமை. | [illegible] |
| வெள்ளிக்கிழமைப்புதுமை. | ௰உ |
| சனிக்கிழமைப்புதுமை. | ௰உ |
| ஞாயிற்றுக்கிழமைப் புதுமை. | ௰உ |

☞ இலுவைபாதைமுதலிய புத்தகங்கள் அரைக்கட்டு டத்துக்கு -உ- அணு குறைவாம். தேப்பாமாலைமுதலிய து கள் தோற்கட்டிடத்துக்கு இரண்டு அணு அதிகமாம். வ வர்பொக்கிஷமுதலியதுகள் தோற்கட்டிடத்துக்கு ஒன் ரை அணு அதிகமாம். ஆதிச்சுவடி முதலியதுகள் அரைக்க டடத்துக்கு ஒரு அணு அதிகமாம்.

வெளிவிலை-வ-ரு பாய்க்கு ஆறுகாசதிகமாம்.

அநாதிநம.

# இப்பிரபந்தத்தைப் பிரசித்தப்படுத்தியவரால்

# முகவுரை.

இவ்வுத்தம பிரபந்தத்தை முக்கியப்படுத்துதற்கு நெடும்புகழ்கூற வேண்டுவதில்லை. பழுதிலாக்கல்விநலமும் வழுவிலாத்தவநிலையும் புகரிலாச்சுகிர்தவறங்களு நிகரிலாப்புலமைத்திறமு மிவைமுதலியநல்வரமு நிறைந்தசொல்லருமாட்சிமைத்தத்துவங்களா லலங்கரிக்கப்பட்டவரா யிந்நாட்டிற் றேவகிருபையா லனுப்பப்பட்டுச்சத்தியமறையின் மங்காவொளிவீசும் பலகிரந்தங்களையுண்டாக்கி யஸ்தமியாத சூரியனாய்விளங்கிய வீரமாமுனிவர்தாமேயிதனைச்செய்தாரென்பதேயெல்லாப்புகழினு மேன்மையாமன்றே. எவர்க்குமின்பமு மீடேற்றமுமுண்டாம்பொருட் டவர்தமததிசயப் புலமைத்திறத்தினாற் சத்தியமறையி னற்புதங்களையும் பரமவுணர்ச்சிகளையுந் தேவஸ்துதிகளையுந் தேனினுமினியதீஞ்சுவைபொருந்துஞ் செந்தமிழ்ச் செய்யுட்களிற் கற்பனையலங்காரத்துடன் புனைந்துபாடிப்பெருங்காப்பியமென்னுந் தேம்பாவணிமுதலிய விலக்கிய நூல்களு மற்றிலக்கண நூல்களுஞ் செய்துகொண்டுவருகையிற்றும்-நல்லாயனாக வன்புடன்காத்து நடத்துகின்றமந்தையாடுகளைச் சிதறடித்து விழுங்கும்பொருட்டு வேதத்தி லோநாய்களென்னப்பட்டபதிதர்மாறின வேஷந்தோடுதோன்றிப் பலதந்திரங்களைச்செய்து தேவவாக்கியங்களைப்புரட்டிவேதவிசுவாசத்தைக் கெடுக்கவருகிறார்களென் றறிந்தி

ணியகவிப்புனை தலைவிட்டுவேதவாக்கியங்களையுஞ் சத்தியத்தின் பலத்தநியாயங்களையு மாயுதமாக வேந்தி வந்தசத்துருக்களை வெல்லுதற்குவேதவிளக்கத்தைச்செய்துதந்தார். சர்ப்பம் பல்புல்லிலொளிந்து பலவழிச்சுற்றிநுழைந்திரகசியமாய்த் தன்விஷத்தா லுயிரைக் கொல்லுவதுபோலப்பதிதரும்பலதந்திரமாய்த் தங்கள் விஷமுள்ள போதனைகளைமறைத் துபாயத்தினாலவைகளை நுழைப்பித்துவருதலா லவர்களுபாயதந்திரமெல்லாம் வீரமாமுனிவர்வெளிப்படுத்தியவர்கள்போதகத்தி லொளிந்தவிஷமுள்ள வபத்தங்களைப்பிரசித்தமாய்க் காண்பிக்கின்றார். அவருச்சிப்பகலினுந் தெளிந்தநியாயங்களா லவர்கள்பொய்களை மறுத் தவைகளைச் சொல்லித் திரிகின்றவர்களு நாணும்படிசெய்கிறார். அவர்கையில்வேதவாக்கியங்களுஞ் சத்தியத்தினியாயங்களுஞ் சத்துருக்களை யூடுருவிவெல்லுங்கூர்ந்தவம்புவாளாகவு முண்மைவிரும்புகின்றவர்களுக்கு ஞானச்சுடர்விளக்காகவுந் தவறினவர்களுக்கு வழிகாட்டியாகவு நல்லோரைச் சகிர்தசத்தியநிலையினிறுத்து முறுதியாகவும் யாவர்க்குமாத்துமசஞ்சீவியாகவு மிருக்கின்றன. உதித்தசூரியன்முகத்துமுன் னிருணிற்கமாட்டாதுநீங்கியொழிவதுபோலப்பதிதரபத்தங்களும் வீரமாமுனிவர்செய்தருளிய விப்பிரபந்தமுகத்துமுன் னிற்கமாட்டா தழிகின்றமையாற்சத்தியத்தையறியவேண்டி யிதைவாசிப்பவரெல்லாருந்தெளிந்து சத்தியநெறியிற்றேறி ஞானமகிழ்ச்சியையடைவாரென்பதற் கையமில்லை.

பொய்க்கஞ்சாமெய்த் தாமுணர்ந்தசத்தியத்தைப்பகைத் தெதிர்த்தும் பதிதர்க்கியல்பாகையிலவர்கள் வீரமாமுனிவர் சத்தியப்பொருளாய்

ந்தத்தஞானக்கதிர்வீசும்வேதவிளக்கத்திலுள்ள பலத்தநியாயங்களுக்கடங்காது ஒசித்தான் பாஷையிற் பிரசித்தப்பட்டபொய்ந்நிறைந்ததோர்சிறுசுவடியைக் கீழ்மொழிக் கொடுந்தமிழாகத் திருப்பித் திருச்சபைப்பேதகமென்னும் பெயர்தந்து துணிவுடன்வெளிப்படுத்தினார்கள். அதிலடங்கிய வபத்தங்களெல்லாம் யாவர்க்கும்விளங்கும்பொருட்டு வீரமாமுனிவரானவரவர்களெழுதிபவந்தந்தப்பேதகத்தை யெடுத்துக்காட்டித் தனித்தனியே நியாயத்தைக்கொண்டுமறுத்துப்பதின்மூன்றேடுள்ள வவர்களுடைய வச்சிறுசுவடியி லெழுபத்தெட்டுப்பொய்களைத்தெளிவுறக்காட்டும் பேதகமறுத்தலையுஞ்செய்துதந்தார். அதற்குவீரமாமுனிவர் பொருளட்டவணையெழுதாமையாலதிலடங்கியபொருளையாவரும்வேண்டும்பொழுதிற் றடவாமலெடுத்துக்கொள்ளும்படிக் கப்பிரபந்தத்துள்வகுத்த விருபத்துநான்கு பேதகமறுத்தலி லொவ்வொன்றற்குள்ள பொருளைக்காட்டுமட்டவணையதன்முடிவிலேதந்திருக்கின்றோம்.

மீளவும் வீரமாமுனிவர்க்குப் பிரியனானகுருந்தமிழ்ச்சாத்த னொருவற்குக் கீழ்த்திசையினின்றொருவன்வந்து மேற்கதிதருந் தமிழ்ப்பயனிதென்று பொற்பொறிச் சிறப்போடுகட்டியபதிதர்புத்தகமொன்றைத் தந்தான். சொன்ன செந்தமிழ்ப்புலவ னதிற்கீழிழிந் திடறியகொடுமொழித் தமிழ்வசனங்களைப்பார்த்து வெகுண்டதையெதிந் தப்படிக்கொத்தபுத்தகத்தையுண்டாக்கின லுத்தேரானிகள் யாவரென்றறிய வீரமாமுனிவர்க்கோலையெழுதி விண்ணப்பஞ் செய்துகொண்டான். அதற்கு வீரமாமுனிவர் மறுவுத்தரமாக அர்ச்.-அருளப்பர் தாங்கண்டெழுதிய வரியகாட்

ஸியில் வான்மேனின்று விழுந்து நரகக்குழிவாய் திறக்குங்கோலைவாங்கினவொளியினாக லுத்தேர் குறிக்கப்பட்டதாகவும்—ஆண்முகம் பெண்கூந்தற் றேட்கொடுக்குச் சிங்கப்பல்லுமுதலியவிகாரவுருவொடு நரகப்புகையினின்று மொய்த்தவிட்டிற்பறவைகளாக லுத்தேராணிகள் குறிக்கப்பட்டதாகவு மிகுந்தசாமர்த்தியத்துடனேகாட்டும்லுத்தேரினத்தியல்பையுஞ் செய்துதந்தார்.

பதிதர்சமயங்களாற் பரவினவிருளைநீக்கிச்சத்தியவேதவொளியை விளங்கச்செய்யு மிவ்வுத்தமபிரபந்தங்க ளிதுவரைக்கு மச்சிற்பதிக்கப்படாமையாலே நாள்வட்டத்திற் பலமுறை பிரதிகளைப்பெயர்த்தெழுதினவர்களினறியாமையினாலவைகளிலெழுத்துப்பிழை சொற்பிழை வசனவிகற்பம்பொருண்மாற்றமுதலியகுற்றங்கண்மிகுந்தொன்றற்கொன் றெவ்வாதிருந்ததைப்பற்றி யக்குறையெலாந் துடைத் திப்பிரபந்தங்களின்முற்சிறப்பானவடிவிளங்கச் செலவுக்கும்பிரயாசத்துக்குமஞ்சாது நானாதிசையினின் றோலையினுங் கடுதாசியினு மெழுதப்பட்டபழம்பிரதிகளையழைப்பித் தவைகளையெல்லா மிகுந்தகவனத்துட னாராய்ச்சிசெய்து சுத்தப்பிரதியாக்கித் தகுந்தவிலக்ஷணத்துட னச்சிற்பதிப்பித்துத் தருகின்றோம். தேவகிருபாகடாட்சத்தினா லிம்முயற்சிதொடங்கி நிறைவேறப்பட்டதன்மை சத்தியத்தைவிரும்புகின்றயாவர்க்குமகமகிழ்ச்சியுஞானப்பிரயோசனமுமா யிருக்குமென்று நம்பிக்கைகொண்டிருக்கின்றோம்.

## வெண்பா.

பதிதரும் பொய்ம்மதமும் பட்டொளிப்பவான் மேற்
பதிதரு மாறிலங்கப் பண்பாய்ப் பதிதரும்
வேதவிளக்கம் விரித்தசுடர்மங்கா
நீதவிளக்கா திலத்து.

நல்லோர்க்கொளிசுடர்நா லொன்கிரண்டாமூவ றுவேற்
புல்லோர்க்காமூவாறுப்பூட்டிய நூ லெல்லோ ர்க்குஞ்
சீதவான்வீட்டைத்திறக்குங்கோற் றத்தாரே
வேதவிளக்கந் தந்தார்.



# பாயிரம்.

பராபரவஸ்துத் தயைபுரிந்தருளிச்செய்தவாக்கிய மேற்கதியடையும்வழியென்னும் வேதமாமே. அவரளவிறந்தஞானமுடையாராகையி லறியாமற்றப்பி விபரீதங்களைச் சொல்லவுமாட்டார். அவரளவிறந்தநீதியுடையாராகையி லறிந்து பொய்யைச்சொல்லவுமாட்டார். ஆகையாற்பராபரவஸ்துவாகியசர்வேசுர னருளிச்செய்த மெய்யானவேதம்வேறுபடாமலும் விபரீதப்படாமலு மெக்காலத்து மெவ்விடத்து மொன்றாய்நிற்கும் வேதமென்பது சத்தியந்தானே. இந்நாள்வரைக்குமொன்றாய்நின்று நிகரில்லாத சர்வேசுரன் வேதம்வேறுபடாம லொன்று யிந்நாட்டிலேயும் வழங்கினபின்புபசாசுதந்திரத்தா லதனைவேறுபடுந்தமற்றொருபொய்ச்சமயந்தானுஞ் சர்வேசுரன்வேதமென்று வேஷமும் பெயருமெடுத்துக் கொண்டெல்லாருக்குங்கேடாகவிங்கே நுழையத் துவக்கினதாம். வச்சிரமணியும்வளையலோடுமொன்றிற்கொன்றை யெதிர்படவைத்துப் பார்த்தவளவிலேசொல்வாருமின்றி வேற்றுமைதோன்றுமென்றாலும் பிரித்துத் தனியேபார்க்குமிடத்துச் சிலர் மயங்குவாரொன்றஞ்சி மெய்யானவேதக்குணமு முறையும்விளங்கச் சிறிதுநியாயங்களையிங்கே சொல்லிக்காட்டுவோமென்றமையா லிதற்கு வேதவிளக்கமென்னும் பெயர் வழங்கினமுறை

யே. வானில்விளங்கினசூரியன் றன்றெளிமுகத்தைக்காட்டாமற் சுற்றிவந்தாற்போலநம்முடையதிவ்வியகர்த்தராகிய சேசுநாதர் பன்னிருசீஷருளொருவராகிய அர்ச்.-தோமையாருமன்றியற்புதங்களைப்பரப்பிவிளங்கின அர்ச்.-சவேரியாருமிந்நாட்டிற்புகாமற்சுற்றிவந்து சத்தியவேதத்தைப் போதித்துத்திரிந்ததனு லிந்நாட்டிருள்விடியாமனெடுங்காலமிருந்ததல்லோ. கடைசியிலுதயநேரத்துச் சூரியன்முகத்துப் புறப்படவீசினகதிர்களெங்குமொய்த்தவிரவினிருளைத்துடைத்துநீக்கி விளக்குவதுபோலவக்கியானமூடியிருந்தவிந்நாட்டின்மேலாண்டவர் தன்றிருக்கண்களைத்திருப்பித் தயைபுரிந்துயிர்களைவிளக்கநாற்றிருபத்திரண்டு வருஷத்துக்குமுந்தி யிங்கேவேதநெறியிற் பிறழாமொழிக்குருக்களையனுப்பத்திருவுளமானர். மாறுததவமும்பொய்யாத நூலுங்குறையாதவறங்களும்வடிவாகக்கொண்டுதோன்றித் தத்துவபோதகசுவாமி யெவர்க்குமுன்னேயாண்டவரா லனுப்பப்பட்டு விடியற்காலத்தொளிபோ லிங்கேநெடுநாள்விளங்கி வேதநூலாகக்கதிராலெழுதப்பட்டதன்மையா லவரேயெழுதிவைத்த காண்டமுதற்பலவு மங்காவொளியோடின்னமஸ்தமியாதசூரியனுகவழங்குந்தன்மையல்லோ. தொடர்புவிடாதமாலையாகவந்நாள்-முதற்கொண்டிந்நாள்-மட்டுமெண்ணப்படாதகாரணக்குருக்கள்-தம்முட்பின்றெடர்ந் தோயாமல்வந்து பிறந்தநாடுங் காட்டினவுருவுங்கொண்டகுணமுந் தம்முள்வேறுவேறுகியுந் தாமெல்லாரும்போதித்த வேதநெறியொன்றுகித் திவ்வியதிருவிளக்காகச் சத்தியவேதத்தைக் கையிலேந்தித்திரிந்தார்களென்றதனு லெண்ணப்படாதசனங்களுந் தெளிந்தொருதிருச்சபையாக நன்

னெறிவழுவாம னடந்துவருவதேகண்டோம். புண்ணியநெறியிலொழுகினவரைப்பறித்துக்கொல்லுங் கள்ளராகவோரோரிடத்துப்பசாசுகள்கிறீஸ்துவர்களைக்கெடுக்கப் பலவிதமாய்ப் பிரயாசப்பட்டுக்கடலைக்கலக்கினபெருங்காற்றுப்போலப்பலகலகங்களையுங்கிளப்பிக் குருக்களுஞ்சீஷரு நிந்தைப்படவடிபடச் சிறைபடப் பொருளுமிழந்திரத்தமுஞ்சிந்தி யோரோரிடத் துயிருந்தந்து வேதசாட்சியாகப்பாடுபட்ட துள்ளது தானே. ஆகிலும்-உலையிற்போட்ட செம்பொன்-நெருப்புச் சுடச்சுடச் சுடரும்போது பொன்னோடுகலந்திருந்தகன்மஷங்களே வெந்தழியு மென்றதுபோலச்சொன்னபலகலகங்களிலேவிசுவாசமில்லாதவன் கெட்டொழிய மற்றத்திருச்சபை வளர்ந்து விளங்கினதல்லோ. சர்வேசுரனைக்கைவிடச்சொல்லி யிந்நாள்வரைக்கும் பகையைச்செய்த பசாசுக ளதைக்கொண்டுசெயங்கொள்வதரிதென்றெண்ணி யிப்போதுவேஷமாறித் தாமுஞ்சர்வேசுரன் பேரைச்சொல்லிப் பெரும்பகைநினைத்துநாடெல்லாங் கெடுக்க நுழையும்வழிபார்த்துக்கொண்டு திரிவதாமே. உருவினவாளையேந்தித்தன்மேலெதிர்த்தவன் பகையைவிலகிக் காத்தலெளிதே யுறவினைக்காட்டித் தழுவினதன்மையாற் குத்தவந்தவன்பகையோவென்று லறியவும்விலகவுமரிதாம். ஆகையாற்புருஷின்சத்தமாறிக் கற்புடையாளைக்கெடுக்கவந்தவனைப்போலக்கீழ்த்திசையினின்று சர்வேசுர னுடைய திருநாமத்தைச்சொல்லிச் சர்வேசுரனைப்பகைத்துச்சனங்களைக்கெடுக்கச் சிலரேவருவதைக்கண்டு நல்லவர்கேடுபடாதபடிக்குச் சிலவிசேஷங்களை யறிவிக்கத்துணிந்தோம். ஆட்டுக்குட்டிகளைக்கொன்று விழுங்க வோநாயும்-ஆட்டுத்தோலைப் போர்த்

னுக்கொண்டுவருமென்று நம்முடைய கர்த்தராகியசேசுநாதர் திருவுளம்பற்றியதற்குபாயமாக மேற்பார்த்த தோஷப்பாராம லுள்ளேமூடியிருந்தவுருவத்தை நோக்கி யாட்டுரூபமாக வந்தவோநாயை யறிந்து துரத்தினதுபோலே சொன்னவார்த்தையுங்காட்டினவேஷமும்பாராம லுள்ளே நடக்கைகளைப்பார்க்கக் கட்டளையிட்டருளினார். அவ்வண்ணமேயிப்போது சர்வேசுரனருளிச்செய்த வேதமேவேஷமாகக்கொண்டுவருஞ் சத்துருக்க ளண்டவொட்டாமற் றுரத்தும்படிக்கவர்கள்-மேற்போட்டவேஷத்தைநாமே பிடுங்கியெறிந்து-அவர்க ளாண்டவருடைய மந்தையாடுகளோ வா[illegible]களை விழுங்கவந்தவோநாய்களோவென்று வெளியாக வுள்ளேமூடியிருக்கிறதைக் காட்டித்தருவோம். அதன்பின்பு வேதமுறைமைக்கடுத்த சிலசந்தேகங்களைத்தீர்த்து மெய்யான வேத மின்னதென்றுவிளங்கச் சிலநியாயங்களை வெளிப்படுத்துவோம். மீளவும் வேண்டும்பொழுதி லிதிலேவைத்தபொருளைத் தடவாமலெடுத்துக்கொள்ளும்படிக்குப் பதினெண்ணதிகாரமாகமுடித்த நூலை நூற்று நாற்பது பிரிவாகவகுத்திலக்கமுமிட்ட வவ்விலக்கப்பிரிவுகளைப்பற்றிப் பொருளட்டவணை முடிவி லெழுதித்தருவோம்.

பாயிர முற்றிற்று.

# வேதவிளக்கம்.

## முதலதிகாரம்.

### புறச்சமயமுளைத்தவகை.

க. ஆடுகளடைத்த மந்தையைச்சுற்றி நுழையும்வழியைத்தேடித்திரியுமோநாய்களைப்போலக்கீழ்த்திசைமதத்தார் நெடுநாளிந்தநாட்டினுழையத்தேடினவழியைக்காணுமலிந்நாளிலே மாறினமுகத்தோடே நுழைந்துதளர்ந்தநடையோடேவந்து நடுங்கினமொழிகளோடே பிதற்றிச்சர்வேசுரனுடையவேதத்தைப்போதிக்கிறுமென்று சொல்லுமளவிலே யெப்படிப்பட்டவேதமதென்று நீங்களெண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். மனிதனாய்ப்பிறந்து தரித்திரனாய்வளர்ந் தெளியவனாய்த்திரிந்து நம்முடைய கர்த்தராகிய சேசுநாதர்திருவுளம்பற்றினவேதமோவல்ல. அவர்தான்றெரிந்து கொண்டசிஷீராகிய-அப்போஸ்தலர்மாருலகமெங்கும்பரப்பினவேதமோவல்ல. சேசுநாதர் தமதுஸ்தானத்திலே-அர்ச்.- இராயப்பரைவைத்துப்பசாசுகளாலசைக்கப்படாதசெங்கோன்மைகொடுத்தமுறையோடு-இராயப்பர்துவக்கியிந்நாள்வரைக்கும் வழுவாமலுரோமாபுரியிற் றிருச்சபைக்குத் தலைவராகநின்ற-அர்ச்.- பாப்புக்கள் வெளிப்படுத்தினவேதமோவல்ல. ஆளாஉய அ-வருஷமட்டுங்குறையாமலுமிகாமலும் வேறுபடாமலுமொருமுகமாய்ப் பூவுலகெங்கும் பரம்பினவேதமோ வல்ல, எக்காலத்துமெவ்விட

த்துஞ் சந்தேகமுமின்றி யெண்ணிக்கையுமின்றி வழங்கின புதுமைகளா லொப்பிக்கப்பட்டவேதமோவல்ல. எல்லாவிடத்து மெல்லாக்காலத்து மெல்லாவயதிலுமெல்லாக்குலத்திலு மாணும்பெண்ணுங்கோடாகோடி சனங்களே மகிழ்ந்தமனத்தோடு மலர்ந்தமுகத்தோடுமெண்ணப்படாத கொடியமுறைகளால் வருத்தப்பட்டுவலியப்பிராணனைத்தந்து சாட்சிசொன்னவேதமோ வந்தவேதமுமல்ல. நாமிப்போதுசொன்னவேதஞ் சமுகீதப் பிரயோசனமாகநிற்குங் கத்தோலிக்குரோமான்வேதமென்னத்தகுமொழிய வதனைவிட்டு மனிதராற்பிரிக்கப்பட்ட சமயங்களல்ல.

௨. இந்நாளிலேசர்வேசுரனுடையவேதமென்னும் வேஷித்தைப்போர்த்துக்கொண்ட கீழ்த்திசையார்சொல்லுஞ்சமயமேதெனில்-இருநூறுவருஷத்துக்குமுன்னேயாண்டவருக்குமனம்பொருந்திக்கொடுத்த மூன்றுவார்த்தைப்பாடுகளைமிதித்துநிந்தித்தவாங்காரத்தினுலேயுங்கன்னியாஸ்திரீகளைக் கட்டாயமாகக்கற்பழித்த காமவெறியினுலேயுஞ்சாராயநிறையக்குடித்த மயக்கத்தினுலேயும்பழியைவாங்கநினைத்த கோபத்தினுலேயுமதிகெட்டவனொருவன்பிதற்றினவொன்றோடொன்றொவ்வாததப்பறைகளாக்குமந்தமதத்தார் சர்வேசுரனுடையவேதமென்று வெட்கமில்லாமற்சொல்லுகிறார்களென்றறியக்கடவீர்கள். செத்ததாய்ப்புழுத்து நாறிமுளைத்தபுழுவே யுலகமியாவையும்விளக்கத்தகுஞ்சூரியனென்றுநினைக்கினுஞ் சகலபாவங்களிலேபிறந்து முளைத்ததப்பறையீடேற்றத்துக்குரிய வேதமென்று கருதவுந்தகுமோ.

௩. ஆகையாற் செருமானியதேசத்திற்பிறந்த லுத்தேரென்பவன் சத்தியவேதத்தைப்பட்டாலேசு

ண்டுவளர்ந்துபூவுலகுள்ளபொய்யானவாழ்வுகளை வெறுத்துவாலசந்நியாசம்பண்ணி—அர்ச்.— அகுஸ்தீனுடைய சபையுட்பட்டு மனம்பொருந்தியாசையோடாண்டவர்பாதத்திலெல்லாருமறிய மூன்று வார்த்தைப்பாடுகளைத்தந்து மண்ணாசை பொன்னாசைபெண்ணாசைவெறுத்து மரணபரியந்தம் விரத்தனாகவுந் தரித்திரனாகவுஞ் சேஷ்டர் சொற்படிகேட்பவனாகவுந்துணிந்தான். துணிந்தபடியேநெடுநாளுநடந்துகுருப்பட்டமும்வாங்கியெவர்க்கும்புண்ணியநெறியைக்காட்டிக்கொண்டுதிரிந்தான். அப்போதுகத்தோலிக்குரோமான்றிருச்சபைக்கப்பாலேகரையேற்றமில்லையென்றுமுரோமாபுரியிலாளும்—அர்ச்.— பாப்புச்சேசுநாதருடைய ஸ்தானத்திலிருப்பவனொன்றுமவர்கட்டளையிட்டமுறைகளாண்டவர்கட்டளையிட்டதென்றுமொருசந்திசெப்நிருநாட்கள்—மற்றத் திருச்சபையாசாரமெல்லாநல்லதென்றும் பரிசுத்ததேவமாதாவையுமற்றவர்ச்சியசிஷ்டர்களையும்வணங்குவதுநல்லதென்றுந்தானே நிச்சயித்துநடந்ததொழியமற்றவர்க்குஞ்சொல்லிமோக்ஷக்கரையேறும்வழியிதென்றுகாட்டிக்கொண்டு திரிந்தான்.

௪. அதன்பின்பிதுக்கிருநூற்றுப்பதினொருவருஷத்துக்குமுன்னேசர்த்தர் திருவவதாரத்தாயிரத்தைஞ்ஞூற்றுப்பதினேழாமாண்டிலே—அர்ச்.— பாப்பானவரிட்ட தோர்கட்டளை லுத்தேரென்பவனுக்குப் பொருந்தாமையாலிருந்தாற்போலே கண்கெட்டு மதியுங்கெட்டுக் கல்லிலேமோதிமுள்ளிலேவிழுந்து சேற்றிலேபுரண்டு திரிகிறவனைப்போலே தான்சகலபாவத்தின் பாதாளத்தில் விழுந்துகெட்டவகையைச் சொல்லிக்காட்டுவோ

உ

ம். அதெதப்படியென்றாற் கர்த்தர்நமக்காகச் சிந்தின திவ்வியவிரத்தத்தின் பலனே பொக்கிஷமாகத்திருச்சபையிலிருக்கவதிலே யவசரங்களைப்பற்றியெடுத்து நீதிமுறையோடு - அர்ச்.- பாப்புவானவர்க்கு நன்மையாகச்செலவழித்துப்பூரணபலன்களைஸ்தாபிப்பது திருச்சபையுள்ள பழையமுறைமையென்னத்தகுமே. இப்படிஸ்தாபிக்கப்பட்டபூரணபலன்களைச் சனங்களுக்கறிவிப்பதந்நாள்வரைக்கும்-அர்ச்.-அகுஸ்தீனுசபையிலுட்பட்ட சந்நியாசிகளுக்கு நியோகமாய்நடந்ததாம். சொன்னவருஷத்திலோவெனில்-அர்ச்.- பாப்புப் பத்தாஞ்சிங்கராயனென்பவரேதோர்காரணமாக-அகுஸ்தீனுசபையாரைவிட்டுப்பலன்களைச்சீர்மையிலறிவிக்க-அர்ச்.-தொமினீக்குச்சபைச்சந்நியாசிகளைக்குறித்தார். அது தன்சபைக்கு நிந்தையாகவெண்ணி யடிபட்டநச்சுப்பாம்பு சீறினாற்போல லூத்தேரென்பவன் சினந்துமுறைப்பட்டதற்கு-அர்ச்.-பாப்புக்கேளாததனலொருநாள் லூத்தேர் நிறையச்சாராயங்குடித்தவெறியிலே கால்-தளர்ந்தாடினதன்மைத்து மதியுந்தளர்ந்து மயங்கிப் பூரணபலனேதென்றும்-அர்ச்.-பாப்பு-ஆரென்றுஞ்சொல்லியந்நாள்வரைக்கு மற்றவுலகத்தோடெல்லாந் தானுஞ்சேசுநாதர் ஸ்தானத்திலிருப்பவராக-அர்ச்.- பாப்பைவணங்கின லூத்தேரன்றுதானவரைப்பசாசுஸ்தானத்திலிருக்கிற பெருங்கள்ளனென்று சொல்லத்தொடங்கினான். தன்சபையார்முன்னறிவித்தபோதுசேசுநாதரிரத்தத்தினலெல்வர்க்குநன்மைதரும் பூரணபலன்கள்-தன்சபையாரல்லாதே புறச்சபை குறிக்கப்பட்டபின்புமனிதரையேய்க்கு மப்பிரயங்களென்றும் வீண்சடங்குகளென்று மநுகளைச் சொல்லத்துணிந்தான். கள்ளுண்டவெ

றியின் மயங்கிப்பிதற்றின வபத்தங்களை மீளவும் பிறகுபின்வாங்காமற்சலஞ்சாதித்துச் சொன்ன தனுல்-அச்ச.- அகுஸ்தீனுசபையிலுட்பட்ட மகாத்துமாக்களாகிய மற்றச்சந்நியாசிகள் லுத்தேரொன்பவனை மிகவுந்தண்டித்துக் கோபித்தார்கள் ஆயினுந் தூக்கணங்குருவிகுரங்குக்குப் புத்தி சொன்னதுபோல லுத்தேரொன்பவனுங் கேட்ட நல்லுணர்ச்சிகளாலதிகமாய்மயங்கிப் பசாசினுலேவப்பட்டுச் சந்நியாசமாவதேதென்றுஞ் சேஷ்டராவதேதென்று மிதெல்லாமபத்தமென்றுஞ்சொல்லவனைச்சிறைச்சாலையிலடைக்கவேண்டுமென்றிருக்கையிற் றனதையறிந்துதப்பியோடிப்போனுன்.

௫. ஓடினபின்பு கொண்டமயக்கமெவ்வளவாகிலுமாறி யொருநா ளுயர்ந்தவிடத்தினின்றுவிழுந்தவனிழந்தவிட'மேற்பார்த்தாற்போல லுத்தேர்தானுஞ்செய்தவபத்தங்களைக்கண்டுகூசிவெட்கப்பட்டு மனதினைந்தான். அப்பொழுதவர்க்குப்பசாசுதோன்றி யவன்றிரும்பினுற் றிரும்பினகாலத்தவனைச் சிறைச்சாலையிற் போட்டுமிகவுமுபாதிப்பார்களென்று மனதிலஞ்சும்படிக்குப் பயங்கரமாக நெடுநேரம்பசாசுசொன்னதற்கு லுத்தேரொன்பவன்-தான்சொன்னதுஞ்செய்ததுமபத்தமாகையி லெல்லாருமென்னை நிந்தித்துச் சேர்க்கமாட்டாமற் றள்ளுவார்களேயென்றுன். அதற்கு மிகவுங் கூர்ந்தவறிவுள்ள பசாசுசொன்ன மறுமொழியேதெனில்-நீ நிந்தைப்படாம லெங்கும்புகழப்படும்படிக்கு நான்காட்டினவழியால்-நீசெய்ததெல்லாஞ் செய்யத்தகும் வேதமுறையென்றெப்பிக்கக்கடவாய். சந்நியாச மபத்தமென்பாய். விரத்தனுயிருப்பதுபாவமென்பாய். தவமொருசந்தியுபவாசங்களாண்டவருக்கேற்காதமுறை

மைகளென்பாய். கற்புக்காத்தவள் - மதிகெட்ட பேதையென்பாய். பாவமேமனிதற்கியற்கையென்பாய். கரையேறுவேனென்று தளராதவிசுவாசமாத்திரமுண்டானாலெவ்வகைத்துரோகங்களைச் செய்தாலுந் தவமுமின்றிக் கரையேற்றமுண்டாமென்பாய். இத்தொகைப்பட்ட பலவையுஞ்சொல்லி யொப்பிக்கும்படிக்குச் சுகிர்தவேதவாக்கியங்களையெடுத் ததிலேசில துகுறைக்கவுஞ்சில துமாற்றவுஞ் சிலதுவிரோதமுகமாய்த்திருப்பி யர்த்தத்தைச்சொல்லவும் பாவத்திற்சாய்ந்தகுணமுள்ளவேழைச்சனங்களெல்லாமயங்கிச்சொன்னயாவையுமொத்துக்கொண்டு பின்றொடர்ந்துன்னை மிகவும்புகழ்வார்களென்று பசாசுசொன்னதற்கு லுத்தேர் நடையொன்றின்றிக் காமச்சேற்றிற்புரளவும் பேரொடுத்தெங்கும் விளங்கவுமாசையால் மயங்கிமகிழ்ந்துடன்பட்டான்.

௯. இதெல்லாம் விரோதத்தாற்சொன்னதென்றுதோன்றாதபடிக்குலுத்தேரென்பவன்றானே பூசைமுறைமைக்கெழுதின புஸ்தகத்திலேசொன்னதாவது நானொருவனறிந்தவனோமற்றனேவோரு மதிகெட்டவரோ-இந்நாள்வரைக்குந் திருச்சபையெல்லா மயங்கினதோ நானும்வழிதப்பிமற்றவரும் வழியிற்றவறச்செய்தால் வருமாக்கினை சொல்லத்தகுமோவென்று நெடுநாளஞ்சிக்கூசி நடுங்கினேனென்றான். பிறகு தான்றேறித்துணிந்தவகையைச்சொல்லிப் பசாசுதன்னோடொருசினேகிதனைப்போல வநுதினமும்வந்து பழகிக்கூடவொருகலத்திலுண்டு சொன்னவுறுதிகளாற்சந்தேகமெல்லாம்போய்த் தெளிந்து தன்மதத்தைத்தானுண்டாக்கினதென்றான், என்றவுடனேசொன்னதாவது பூசையொழிப்பவோவில்லையோவென்றுபசாசோடுநெடிதாய்த் தர்க்கம்பண்ணினே

ன். கடையிலே பசாசுசொன்னபடி கேட்டேன்.
அதேனென்று லொருக்ஷணத்துக் கண்ணிமைக்
குமுன்னே பசாசுவெருவிடுமுறையோடென்மனை
யெல்லா மச்சத்தாலுமிருளினாலுநிரப்பிமயக்குவி
த்ததென்றான். லுத்தேர் தானேயிதெல்லாமெழு
திவைத் தச்சிலேயும் பதித்தபின்பவன்வழியாகவ
ந்தசமய மனிதரீடேற்றத்துக்குரிய வேதமென்ப
வோ பசாசோடுநரகத்திலென்றென்றைக்கும்வே
கக்கொண்டுபோய்விடும்வழியென்பவோ நல்லறி
வுடையயாவருமெளிதாய்க்கண்டுதெளிவார்களே.

எ. இவ்வண்ணமேலுத்தேரென்பவனுக்குப்ப
சாசுதான் குருவானதனு லொருநாட்சொன்ன
தைமறுநாள் -மறுத்து லுத்தேர் தான்றன்னோ
டொவ்வாமல் விபரீதமொழிகளைப்பிதற்றி யொ
ன்றோடொன்றெவ்வாதவசனங்களைத்திவ்விய நற்
கருணைக்காரியத்திலேமாத்திர முப்பத்தாறு மெ
ழுதிவைத்தான். லுத்தேர்தானே சேசுநாதர்நம்
மையிரட்சிக்கவந்த மெய்யானசர்வேசுரனுமெய்
யானமனுஷனுமென்று பின்பு தன்குருவாகிய ப
சாசினாலேவப்பட்டு - அர்ச்.-சின்னப்பர் கலாசிய
தேசத்தாருக்கெழுதின நிருபத்தில்லுத்தேர்வியா
க்கியானம்பண்ணினதிலேயு ஞானஸ்நானத்துக்
கடுத்த முதற்பிரசங்கத்திலேயு மவனெழுதிவை
த்ததாவது சேசுநாதரைச்சகலபாவிகளினும் பா
வியென்று மவரையொழியப்பாவியில்லையென்று
மவரைக் கள்ளனென்றுங் கர்த்த துரோகி யெ
ன்றுந் தேவதூஷணனென்றும் வேதத்தைக்கெ
டுத்தவனென்றுமவரைப்பசாசென்றும்-நரகவா
யானகிய லுத்தேரென்னும் பெருந்துரோகி யுல
கெல்லாமஞ்சிக் கூசும்படிக்குக் கக்கினபின் பிவ
னேசேசுநாதராலுலகமிரட்சிக்க வனுப்பப்பட்ட
வன். இவனேவழுவினவேதநெறியை யொப்புர

வாக்கினவன். இவனேமற்றத்திருச்சபையெல்லாங்கெட்டு மயங்கிநிற்பவொருவன் றளராதஞானத்தையறிந்துபோதித்தவன். இவையெல்லாஞ்சகலபாவத்துக்கு வாசலைத்திறக்கும் வழியைவிரும்பிக்கண்மூடி மதிகெட்டவ னநுசரிப்பானொழியக் கரையேறவாசையுள்ளவ னொருவனாகிலுஞ் சொல்லவுங்கருதவுமாட்டான்.

அ. மலையினின் றுருண்டுவிழும் பெருங்கல்லுப் போகப்போக விசையுமதிகமாகித்தகர்ந்துடைந்துபாதாளமட்டும் விழுவதுபோல லுத்தேருஞ் சொன்னபடிபசாசினுற்றள்ளுண்டுதிருச்சபையாகியமலையினின் றுருண்டுவிழுந்துமுன்னிருந்தவெண்ணப்படாத பதிதரெல்லாருஞ் சொல்லிமறுத்திருந்த வபத்தங்கள்யாவையு மொருப்படக்கூட்டித் தானொருவன்சொல்லவுஞ் செய்யவுந்துவக்கினன். விரத்தனுக்வார்த்தைப்பாடுகொடுத்திருந்தலுத்தேர்காமவெறியிற்போய்க் கத்தரீன்போரேயென்கிற வொருகன்னியாஸ்திரீயைக் கட்டாயமாகப்பறித்து நாயாட்டமாகவவளைக் கற்பழித்துக் கலியாணப்பெயரைச்சாட்டி மெய்யானவைப்பாட்டியாகவைத்துக்கொண்டான். ஆகிலும் லுத்தேருமவன்சீஷருமிந்தக்கலியாணமுகாந்தரமாகவெட்கிப்போய்நிந்தைப்பட்டு மிகவும்வருந்தினுர்கள். ஆகையால்—௲௫௱௨௰௫-ம், ஆண்டில்—௪௰௨-வயதுள்ள லுத்தேர் தன்சினேகிதருக் கொன்றுஞ்சொல்லாமல்வேறேமூன்றுபேர்களைமாத்திரம் விருந்துக்கென் றழைத்துத் தானேயந்தப்போரேயென்பவளைக் கட்டிக்கொண்டான். இந்தச்செய்தியைப்பற்றி லுத்தேர்பிரியசீஷனாகிய மேலந்தோன்கமெறுரிபென்பவனுக்குக் கிரேக்பாஷையாலெழுதினதாவது—இதிலே லுத்தேர்நீசக்குணத்தைக்காட்டித் தன்பெயரிகழ்ச்சிப்பட் டெவரா

ழ்நகைக்கப்படக்கலியாணஞ் செய்தானேயுட்சுடு ங்காமக்கொடுமையைப் பொறுக்கமாட்டாமையா லிதுனிதற்குத் துணிந்தானென்றறிவோம். ஆகிலு மிப்போது லுத்தேர் தானேயிந்தக்கலியாணத்தி னுல்வெட்கிவருந்திக்கிடக்கிறன். நானேவெனிலெ ன்னுலானமட்டு மவனைத் தேற்றிக்கொண்டுவரு கிறேனென்று சொன்ன மேலந்தோனெழுதினு ன்.

௬. தானடந்தபடி மற்றெவர்க்குஞ்சொல்லிக் கன்னிமையுஞ் சந்நியாசமு மிகவ் மாண்டவர்க்கு ப்பொருந்தாத பாவமென்று – ௲௫௱௨௨-ம். ஆ ண்டிற்சொன்னபிரசங்கத்திலே லுத்தேர்சொன் ஞன். மீளவுமறுவருஷித்துக் கர்த்தர்பாடுபட்ட திருநாளிலே லுத்தேர்சிஷாக்கள்போய் நிமிசெ ணமென்னுமூரிலே கன்னியாஸ்திரீமடத்திலேபுகு ந் தேழுகன்னியாஸ்திரீகளைப் பறித்துக்கொண் டுபோய்க் கற்பழித்தார்கள். அதையறிந்து லுத் தேர் பொதுப்பிரசங்கத்திலே யவர்களைக்கொண் டாடி நம்முடையகர்த்தரானசேசுநாதர் பிதாக்க ளிருந்தஸ்தலத்திலேபோயவர்களைமீட்டிரட்சித் தபாவனையாகவந்தச்சண்டாளருமன்றுபுண்ணி யத்தைக்கட்டிக்கொண்டார்களென்று சொன்ஞ ன்.

௭. ஆயினும் லுத்தேரொருவன்செய்ததப்பித ங்களையுஞ்சொன்னவபத்தங்களையுமொருங்குடன் கூட்டியிங்கேயெழுதிக்காட்டுவது நமக்குக்கருத் தல்ல. பெருங்கடல்வெள்ளஞ் சிறிதோர்கலத்தில டங்கினும் லுத்தேர்தப்பன்றகள் பெரிதோர்புஸ் தகத்திலுமடங்குந்தன்மையல்ல. தன்குருவாகிய பசாசினு லேவப்பட்டமையா லெல்லாப்பாவநு ழையும் பெருவாசலைத்திறக்கும்படிக்கு மனிதனை யெய்க்கச்சிலபுண்ணியங்களைப்படிப்பித்தாற்போ

லேசொன்னபின்புமனிதருக்குப் புண்ணியமுமில்லைபாவமுமில்லையென்றான். ஆண்டவனைத்துதிப்பதுமவனைநிந்திப்பதுமொன்றென்றான். அவனவன்றன்றேப்பனைவணங்குவது மிதித்துதைக்துமொன்றென்றான். ஆருமரசர்க்கிறையைக்கொடுப்பதுந் துரோகஞ்செய்வதுமொன்றென்றான். அதுவும்புண்ணியமல்லவிதுவும் பாவமல்ல. பாவங்களென்றாலுமதுகளால்-மனிதற்கோரற்பவாக்கினையாகிலும் வரவறியாது. விசுவாசமில்லாதவனொருவனரகத்திற்போவானொழியமற்றவனென்னபாவஞ்செய்தாலும்விசுவாசத்துடனேசற்றுமஞ்சாமலாண்டவர் பொறுத்தாரென்று நம்பின-மாத்திரத்துத்தவமொன்றில்லாமற்பாவமெல்லாம்மிழ்ந்தியொழியுமென்றுசத்தியாசவிரதங்கெடுக்கலுத்தேருண்டாக்கினபுஸ்தகத்திலெழுதிவைத்தான். மீளவுமிராயப்பர்மேலேசெய்தவேறொருபிரசங்கத்திலேதானெழுதிவைத்ததாவது-எத்தனைபெரும்பாவியாயிருக்கிறாயோ வத்தனைசீக்கிரமாயாண்டவர் தம்மிஷ்டப்பிரசாதத்தைநிறையத்தருவாரென்றான். ஆகையாலாண்டவருக்குப் பிரியனாகவுமவரிஷ்டப்பிரசாதத்தையடையவும்பாவமேவழியாமென்றதாயிற்றே. ஆகையாற் புண்ணியங்களைத்தவங்களைச்செய்யாமல்-மிகவும்பாவங்களைச்செய்வதுநல்லதென்றதாயிற்றே. மதிகெட்டவனையினுங்கருதவொட்டாதவபத்தங்களை மனுக்குலம்-நிந்தைப்படவும் பாவமெல்லாம் வளரவுமுளைத்தபெரும்பாவியாகியலுத்தேர்வெட்கமில்லாமல் வேதமாகச்சொல்லக் கூசாதேபோனான். இதுபாவங்களைத்தீர்த்துப் புண்ணியவழியைக்காட்டவந்தசேசுநாதரருளிச்செய்தவேதமோ. இதின்மேலக்கியானத்திலும்பாவத்துக்குநரகத்துக்கும்பெரும்பாதை திறந்ததுண்டோ. நாமிங்கே

சுலபமாய்ச்சொன்னதெல்லாம் லுத்தேர்சிஷ்ரா கியகிழ்த்திசையார்மறுத்துப் பகையாற்சொன்ன பொய்யென்பார்களாக்கும். ஆகிலுநடந்தசெய்தி யறியாதசனங்களுக்கிதுபொய்யென்பார்களொழி யத்தங்கள்புஸ்தகங்களைக்கொண்டிதெல்லாமவர் களுக்கொப்பிக்கநாம்வல்லவராயிருக்கக்கொள்ள ச்சொன்னதிலேயொன்றுகிலுமெம்முன்பாகப்பொ ய்யென்று சொல்லமாட்டார்கள். சொன்னாலும் வெட்கிநாணும்படிக்குச்செய்வதெளிதே.

முதலதிகாரமுற்றிற்று.

## ௨-ம். அதிகாரம்.

### புறச்சமயவிபரீதம்.

௰௧. அரசர்நீதிகோணவுநன்னெறியொழுக்கம்வழுவவுந் தூயறங்கெட்டுமெலியவு மருந்தவமொடுங்கியொழியவுநல்வினையெல்லாமடிந்தகுறையவுஞ்சத்தியவேதம்வேறுபட்டொளிமங்கவும் பெண்கற்புரியகாவலற்றழியவும்பகைசினங்காமங்களவுகொலையுலோபமற்றப்பாவங்கள்கரையொன்றின்றிப்பெருகிவெள்ளமாக மொய்ப்பவுமுளைத்த லுத்தேரென்னும் பெரும்பாவிதிறந்த பாவவழியைக்கொடியநெஞ்சினருங்காமத்தழிந்த வுணர்வினருங்கள்ளுண்டவெறியின்மதிகெட்டவருமநுசரித்தார்களொழிய நல்லோரெல்லாரு மவ்வழிப் பகைத்துலுத்தேர்மேலிரங்கியவனை நன்னெறியினிறுத்தவுபாயங்களைத்தேடிமறுக்கப்படாதநியாயங்களையொப்பித்துத் தூங்கினவனையெழுப்பப் பிரயாசப்பட்டார்கள். அதற்கு லுத்தேரனசயாமற்றிருச்சடைகூடினாற் சொன்னபடி கேட்பே

னென்றான். அப்படியே அர்ச்.-பாப்பு-உலெகந் குமிருந்தமேற்றிராணியரும் வேதபாரகரு மிராசாக்கள் ஸ்தானபதிகளுங்கூடச் சொல்லியழைத்துத் திறிதேந்தென்னுமாநகரில்-௨௲௫௰௬-பேருங்கூடிநம்பிக்கையோலைகளையனுப்பிலுத்தேரென்பவனைப்பலமுறையழைப்பித்தார்கள். லுத்தேரோவெனில் உண்மையையறிய வாசையில்லாமையானுந் தான்சொன்னதெல்லா மபத்தமென்று தானன்றுயறிந்ததனுலுமொளியைத் தாங்கமாட்டாதவெளவாலைப்போலவொளித்திருந்தான். ஒளித்தலுத்தேராங்காரத்தையொளியாமல்வந்த நம்பிக்கையோலைக்கெழுதின மறுவுத்தரமாவது-இருபதினாயிரங்காலாளுமையாயிரங்குதிரையுமென்னைச்சூழ்ந்துவரக்கூடினபின்புநானந்தக்கூட்டத்துக்குவருவேன். அப்போது நான்சொன்னதைவிசுவசிக்கச்செய்வேனென் றெழுதினான். ஆகையாலே ழைச்சனங்களையேய்த்தாற்போலே யங்கேகூடினசாஸ்திரிகளையேய்க்க நம்பாமற் றான்சொன்னவபத்தங்களைச்செலுத்தவொருபெரும்படைவேண்டியதொழியவதுகளையொப்பிக்கத்தனக்கொருநியாயமுமில்லையென்றுதானேகண்டுகொண்டானல்லோ. அப்படியவன்வரமாட்டாமையாலங்கேகூடினநல்லோர்லுத்தேருண்டுபண்ணினதப்பறையெல்லாநெடுநாளாராய்ந்து வேதத்திற்குநியாயத்திற்குமொவ்வாததென் றென்றென்றுய்ச்சொல்லிச்சபித்தபின்பு சேசுநாதர் - அர்ச்.-மத்தேயுஸெழுதினசுவிசேஷத்து-௰௮-ம். அதிகாரம்-௰௭-ம். வசனத்திற்சொன்னபடிகூடினதிருச்சபைவார்த்தையைக்கேளாதவனனக்ஞானிகளிலொருவனைக்கடவானென்றமையாலழிந்தவுறுப்பினைமற்றவுடல்கெடாதபடிக் கறுத்தெறிந்தாற்போலலுத்தேரென்பவனையுமவனைச்சே

ர்ந்தயாவரையும்பெருஞ்சாபமாகவிடித்துத்திரு
ர்சபைக்கப்புறத்தொழியவிலக்கினார்கள்.

௩௨. இட்டசாபத்தை நகைத்தலுத்தேர் கொ
ஞ்சநாட்போனபின்னிராத்திரி நன்றாய்ச்சாப்பட்
டுப்படுத்துக்கொண்டவிடத்துத் தன்பாவத்தின்
பாரத்தைத்தானேபொறுக்கமாட்டாமற்றன்கை
யாற் றன்கழுத்தைநெருக்கிச் சகலபாவங்களைப்
போதித்தநாக்குப்புறப்படச்செத்துப்பசாசுகள்-
மிகக்களிகூரக்கீழ்நரகத்துவீழ்ந்தான். இது நாம
றிந்தவகையேதெனிலவன்றுர்ப்புத்தியைக்கேட்
டுமயங்கியவனுக்கூழியஞ்செய்திருந்தவொருவன்
கூடநின்றுதன்குருச்செத்த வவலமானசாவைக்
கண்டஞ்சி யோநாய்செத்துத் தப்பிப்பிழைத்த
வாட்டுக்குட்டியைப்போ லவனுந்தப்பிவந்துசக
லபாவத்துக்கேதுவாகிய நீசலுத்தேர்சமயத்தை
வெறுத்துத் திருச்சபைமடியில்வீழ்ந்து நடந்த
யாவையுஞ்சொல்லிமுன்றன்செய்தபாவங்களைக்
கழுவமிகவுமழுதுநன்னெறிவழுவாமனடந்தான்.

௩௫. இதெல்லாமாகிக்கொண்டுவருகையிற்கா
லியவிராச்சியத்திற்பிறந்தகல்வீனென்பவன்றன்
னூர்ப்பாவிகளுக்குள்ளேபெரும்பாவியாகவிளங்
கிச்செய்ததுரோகங்களாற் றள்ளுண் டோடிப்
போய்லுத்தேரோடேகூடியவனையாண்டவரால
னுப்பப்பட்டவப்போஸ்தலனென்றுபுகழ்ந்துசில
நாட்பின்றொடர்ந்தபின்புதனக்கும்பேராகும்படி
க்கவனைவிட்டுப்பிரிந்து விரோதமாய்ச்சிலதுகளை
யுணர்ந்தி லுத்தேரொன்றவனை யக்கியானியென்
றுமதிகெட்டவனென்று மிகழ்ந்துகூடின நாய்க
ள்-தம்மைக்கடித்ததுபோலவிருவருங்கூடியும்பி
ரிந்துமொருகருத்தோடுவேதத்தைக்கெடுக்கவரு
ந்தினார்கள். அப்படியே கல்வீனுக்கும்லுத்தேருக்
கும்விரோதமும்பகையுமட்டின்றி வளர்ந்துவரு

கையில் லுத்தேர்பிரியசிஷ்ஷனாகிய மேலந்தோனுக்குக்கல்வீனெழுதினதாவது நமக்குள்ளேவந்தவிரோதங்களினிவருங்காலத்தெவர்க்குஞ் சந்தேகத்தோடாயினும் பரம்பாதபடிசெய்வது மிகவும் வேண்டினவெச்சரிக்கைதானே. அதேனென்றுலொருங்குடனுலகமெல்லாமநுசரித்துட்கொண்டவிசுவாசத்தை நாமேகைவிட் டெல்லாரையும் பகைத்தபின்புவழுவினதிருச்சபையைநெறியினினுத்தவந்தோமென்றுநாந் துணிந்த துவக்கத்திலேதானேநமக்குள்ளேயொவ்வாமல் விரோதித்திருந்தோமென் றறிந்தாலிதின்மே லனைவருநகைத்திகழத் தகுவதொன்றில்லையென்றான். இதோவாண்டவர்பரமநீதியாற்பதிதரேதங்கள்வாயாற்றங்களுக்குக்கேடாகத்தீர்வையிட்டமுறை. மீளவுங்கல்வீன் லுத்தேரொன்றிருவர்தம்முட் சிலதுகளிற்பகைத்ததன்றியொவ்வொருவன் றன்னோடொவ்வாமலின்றுசொன்னதைத்தானே நாளைமறுத்துவிரோதமாயுணர்த்திக்கொண்டொருநிலைகொள்ளாமற்சொன்னவொவ்வாத தப்பறையெல்லாமாண்டவருளிச்செய்தவேதமென்றுதிரிந்தார்கள்.

௩௪. இவ்விருவர்செய்தபடிக் கிவர்களைப் பின்சென்றசிஷ்ருங் குருவழிவிட்டுக் கொஞ்சவருஷத்திலே லுத்தேர்சமயம் -எ௰அ- பிரிவாகவுங்கல்வீன்சமயமும் விபரீதப்பலமுகமாகவுங் கண்டோம். நீசர்நினைவுமெய்வழிதப்பிவழுவினதப்பறையு மாடுகள்சாயுங்காட்டுவழியைப்போலவாயிரமுகத்தனவாகப்பிரிந்துபூவுலகெங்குதிந்தையாகமெலிந்து கிடந்தமையாலது பொய்வழியென்று தோன்றுமல்லோ. அதெப்படியென்றாலாண்டவரருளிச்செய்தவேதமெய்யாகையிற்றீயின்முகத்தழியாத தங்கத்தைப்போலவுங்காற்றின்முகத்தசையாத

வயிரமலையைப்போலவு மேகமுகத் தழுக்கடையா
தசூரியனைப்போலவுமெக்காலத்துமொருமுகமாய்
நின்றுவந்தபகையின்முகத்தொளிபெற்று வளர்
வதொழியக்குறையவுங்கெடவுமாட்டாது. அப்படி
யே சேசுநாதர்மனுஷனாகப்பிறந்த — ௲௫௱௨௰
அ-ம். வருஷமுமாகியவரருளிச்செய்தவேதத்தை
ப்பகைத்துத் தம்முளொன்றோடொன் றொவ்வா
மல்-முந்நூறுவெவ்வேறேபுறச்சமயங்கள் பிரிந்
தும்தோன்றினதாம். ஆட்டுக்குட்டிகளைச்சூழ்ந்த
வோநாய்க்கூட்டம்போலவெப்போதுமெங்குமா
யிரம்வகைப்பதிதர் சத்தியவேதத்தை விழுங்கச்
சூழ்ந்துபகைத்தாலு மது சத்தியவேதமாகக்கொ
ள்ளவிந்நாள்வரைக்குஞ் சற்றுங்கெடாம லுலக
மெங்குமொருகண்டசீராய்விளங்கினதொழியவே
றுபடாமல்-நிலைகொண்டதாகக்கண்டோம். இந்
நாள்வரைக்கும்-அர்ச்.- பாப்பு மற்றவேதபாரக
ருஞ்சொன்னதேவரகசியங்களை யொன்றுமறியா
தகிழவியு மாறுமறச்சொல்வாள். புறச்சமயத்தா
ரோவெனிற்காற்றின்முகத்து விரித்தகொடிகளை
ப்போலேயாடினவுணர்வினோடுநாடோறும்வழி
யைமாறிவேர்க்கொள்ளாத பாசியைப்போலவலை
ந்துநீர்மேற்குமிழியைப்போலவழிந்துமறைந்து
போனார்கள். அப்போஸ்தலர்மார்நாளிலே துவக்
கியோயாமற்பிறந்தபலபுறச்சமயங்கள் லுத்தேர்
முளைத்தநாளில்-ஐரோப்பாக்கண்டத்திலேயெல்
லாமடிந்துபுதைக்கப்பட்டிருந்ததொழியவொன்
றுகிலுமப்போதுவிளங்கிநின்றதுமில்லையதற்கொ
ருகோயிலுமொருகூட்டமுமொருஸ்தலமு நின்ற
துமில்லை. லுத்தேர்முதற்கொண்டு தோன்றின பு
றச்சமயங்களோவெனிலின்ன நின்றாலு மொருவ
ழியாய்நில்லாமலாயிரம்பிரிவாகவேறுபட்டொரு

முகமுமொரு நிலையுமில்லாமற் சிறிதுமூலையிலே யலைவதுகண்டோம்.

௰௫. புறச்சமயமெல்லாம் பொய்வழியாகையி லித்தவிபரீதமாவதற் கதுகாரணமொழிய விதற் குவேறொருகாரணமுண்டாம். அதேதெனில் வேதத்துக்கெல்லாமாண்டவர்திருவுளம்பற்றினவாக்கியங்களேமாத்திரையாகும். இந்தமாத்திரையாகத்தாமும் புறச்சமயத்தாரெல்லாரு நிற்பதென்பார்களாயினு மாண்டவர்திருவுளம்பற்றினவாக்கியங்களை மெய்யையறியவாசையோடுந் தெளிந்தவுணர்விஞேடு மாராய்ந்துபாராதேபோனு லுள்ளமெய்யானவர்த்தத்தைக்கண்டறிவ தரிதே. அப்படியே அர்ச்.-இராயப்பரெழுதின-உ-ம். திருபத்து-ங-ம்.அதிகாரம்-௰சு-ம்.வசனத்துத்தாமேயெழுதினதாவது சின்னப்பரெழுதிவைத்ததிலேகண் டுபிடிப்பதற்கரியசிறிதுகளைவைத்தார்.அதுகளைமற்றத்தேவவாக்கியங்களைப்போலேதெளியாமற்றளர்ந்தவுணர்விஞேர்தங்களுக்குக்கேடாக வர்த்தத்தைச்சொல்லிக் கெடுக்கிறுர்களென்றுர்.இதெல்லாமிப்படியிருக்கையிற் புறச்சமயத்தாரெல்லாருந் தேவவாக்கியங்களுக் கர்த்தத்தைச் சொல்ல வேறொருவன்வார்த்தைகேளாம லவனவன்றனக்குத்தோன்றினபடி யர்த்தத்தைக்கொள்ளச்சொன்ஞர்கள். ஆகையால்வேதபாரகர்கூடிக் கல்வியின் றுறைபெலாங்கடந்துநெடுநாளாராய்ந்து நிச்சயித்துச்சொன்ன வர்த்தத்தைவிட்டுச் சக்கிலியன்செருப்புக்களைத்தைத்தபோதும் வண்ணுன்சீலையைத்தப்பினபோதுங்குயவன்சக்கரத்தைச் சுற்றினபோதுஞ் சண்டாளனிறையக்கள்ளுண்டபோது மிவர்களெல்லாரு நினைத்தவர்த்தமே நல்லதென்று மெய்யாகவநுசரிக்கக் க

ட்டளையிட்டார்கள். இப்படியாகையிற் புறச்சமய ங்கள்-நாடோறும்வேறுபட் டாயிரமுகமாய்நிற் பததிசயமோ.

௰௬. கத்தோலிக்குரோமான் சத்தியவேதத் தாரோவெனிற்பிறந்தநாடும் பேசினசொல்லுங் கற்றநூலு நடந்தமுறையும் வேறுவேறாகித்தா மூந்தம்முள்-மற்றக்காரியங்களில்வேறானாலும்வே தமுறைமையிற் சற்றும்வேறுபடாமலொருமுக மாயொருநிலையாய்நிற்பதேதெனில்-நம்முடைய கர்த்தராகியசேசுநாதர் திருச்சபைக்கெல்லாம்- அர்ச்.-இராயப்பரைத்தொட்டு-அர்ச்.-பாப்புக்க ளைத் தலைவராகக்கட்டளையிட்டேக்காலத்து முன் விசுவாசந்தளராமலு மயங்காமலு நிற்குமென் றார். என்றமாத்திரத்திலே-அர்ச்.-இராயப்பர்து வக்கி விடாததொடர்போய் வந்த-அர்ச்.-பாப்பு க்களொவ்வொருவர் வேதத்திலேயுந் தேவவாக் கியங்களிலேயும் பிறந்தசந்தேகங்களைத்தப்பித மின்றித் தீர்ப்பதற்குறுதியாகச் சேசுநாதர்தா மேதுணையாய்நின்றார். இதனை மனதினிச்சயமாக வெண்ணின நல்லகிறீஸ்துவர்களெல்லாரும் வே தமுறையிற் சந்தேகம்வந்தவிடத்து-அர்ச்.-பா ப்புத்தாமே ஸ்தாபித்ததாகிலுந் தாங்கூட்டின மேற்றிராணியரும் வேதபாரகரு நெடிதாலோ சனைசெய்து ஸ்தாபித்ததாகிலுஞ் சலஞ்சாதியா மல்-மற்றெவரு மொத்துக்கொண்டமையா லிந் நாள்வரைக்கு மொருமெய்யானவேதத்தை யநு சரித்துவேறுபடாமனின்றார்கள்.

௰எ. இதிலேநன்றாயோசிக்கக்கடவ தொன்று ண்டாம். அதாவது-ஆண்டவ னொன்றினைப்பற் றிவேண்டும்வேண்டா மென்னவுமாட்டார்-ஆம ல்லவென்னவு மாட்டார். ஆகையா லிருநூலுவ

ருஷித்திலே யிருநூறுவிபரீதமுகமாய்த் திரிந்துநிற்கும் புறச்சமயங்களெல்லாமாண்டவரால்லாராமற் பொய்விளைவிக்குங்காரணமாகிய பசாசினால்வந்ததென்று நிச்சயமாகும். உரோமான்றிருச்சபையாரிடத் திந்நாள்வரைக்கு மற்பவிபரீதமாகிலுமில்லாதபோ தவர்களநுசரித்தவேத மாண்டவரா லருளிச்செய்யப்பட்ட வேதமென்பதற்குநியாயமாமே. புணர்வின்றி யெல்லா நன்மையிலோருத்தம நன்மையாகியொன்றாய் சர்வேசுரனருளிச்செய்தவேதமு மொன்றாகிவிரிவாய்ப்பிரிந் தெழுபத்திரண்டு புஸ்தகமாக வெழுதினதாயினும்பலரைக்கொண் டெழுதுவித்ததாயினுமதிலேதம்முள் விபரீதமுள்ளவிருமொழி காண்பதரில்லை. அவ்வண்ணமே கத்தோலிக்குரோமான்றிருச்சபை சர்வேசுரன் கட்டளையிட்ட முறைமையில் வழுவாமையினாற்சூரியன்கதிர்படாத விடமுண்டெனினுந் திருச்சபைவழங்காதவிடமே யுலகமெங்குமில்லாதாயினு மெக்காலத்து மெவ்விடத்து மெக்குலத்து மொருமுகமா யொருநிலையா யொருநூலாய்விபரீதமின்றிமயக்கமின்றி யெல்லாப்பாஷைக்கொருபொருளா யெல்லாவாய்க்கொருமொழியா யெல்லாநெஞ்சத்தொருசுடரா யெல்லாவுயிர்க் கொருபலனா யிந்நாள்வரைக்குநின்றதுமொழிய வுலகமுடியுமளவும்வேறுபடாமலழிவுபடாமனிலைகொண் டெங்கும்வழங்குமாமே.

௰௮. ஆகையாற்றன்பத்தாவைப்பார்த்தகண்ணாற்பிறரைப் பார்க்கமாட்டாத கற்புடையாளைப்போல வுரோமான்றிருச்சபை சேசுகிறீஸ்துவுக்கொருநெறிநிற்குங் கற்புடையாளாகவேதத்திற்புகழப்பட்டதாமே. பதிதர் சமயங்களோவெனில்-நாளுக்குநாள்வேறாகி யவனவனிசைக்களவாக

விபரீதங்களைக் காட்டினதுறாற் பொருளைப்பற்றி யன்பினை மாறிவந்தயாவர்க்கும்பிரியங்காட்டியெவரையும் வஞ்சகமாகக்கெடுத்தொருகாவலுமொருநெறியு மொருநட்பும் வெட்கமுமில்லாமலிகழப்படும் விலைமாதராகவச்சமயங்களெல்லாம் வேதத்தில்-நிந்திக்கப்பட்டதென்றறிவோம், ஆகையால் நல்லறிவுடையோரனைவரும் புறச்சமயங்களில் வேறெயபத்தங்காணாதாயினுமிந்தவிபரீதமொன்றினைப்பற்றி யதுகளைத்தப்பிதமென்றும் பசாசினால்வந்த மதங்களென்றுந் தாமேநிச்சயித்துயிரைக்கொல்லுங் கொடியவஞ்சகப் பரத்தையரைநீக்கி யுயிரைப்பேணுங் கற்பிலசையாதகுலஸ்திரீயை யணுகுவாரைப்போலப் புறச்சமயங்களெல்லாவற்றையும் வெறுத்து நிந்தித்தொழித்துக் கரையீடேற்றத்துக்குரியவொரேவழியாகிய கத்தோலிக்குரோமான்றிருச்சபையின் வேதமொன்றினையுட்கொள்வதற்கிதுவே நியாயமென்றுசொல்லிக்கொண்டுவருகிறார்கள்.

இரண்டாமதிகார முற்றிற்று.

## ௩-ம். அதிகாரம்.

### மோக்ஷவாசிகள்வணக்கவிளக்கம்.

௰௬. கிளைத்தகொம்புகளொன்றென்றாய் வெட்டியெறிவது நெடுநாள்வேலையென்று வேரைத்தோண்டிப் பறிப்பாரைப்போல நாமும்புறச்சமயங்களிற் கிளைத்தவபத்தங்களை வெவ்வேறெமறுத்துத்தள்ளாமலந்தச்சமயங்கள் முளைத்தவகையைக்காட்டி யொருப்படப்பிடுங்கப் பிரயாசைப்பட்டோம், இற்றைவரைக்குநாஞ்சொல்லிக்காஞ்

டினதைக்கொண்டு புறச்சமயங்களு மதுகளில்வி பரீதங்களாய்ச்சொன்னவபத்தங்களும்பொய்யெ ன்றுதோன்றவு நல்லறிவுடையோரெல்லாரு மதுகளை யொன்றென்றுய்வெறுத்து மறுக்கவுநியா யமுண்டாம். ஆகிலுங்கீழ்த்திசைப்பதிதர் தேவ மாதாவையு மற்றமோக்ஷவாசிகளையு நாம்வண ங்கினதனால்-நம்மை யக்கியானிகளென்று வெட் கமில்லாமற் சொல்வதைப்பற்றி யிதிலேதாகிலும் விரிவாகச் சொல்லத்துணிந்தோம். மதிகெட் டி வர்கள்பிதற்றிச்சொல்லு மபத்தம் லுத்தேர்நா ளிலே புதிதாய்முளைத்ததல்ல. லுத்தேருக்குமுன் னே-சூ௱-வருஷமாகக் கர்த்தர் திருவவதாரம்ப ண்ணின-சா௱உ-ம். ஆண்டிலே துவக்கின தப்பித மாகும் நாமெல்லாரும் போர்க்களமாகிய பூவுல கிற் பசாசோடியுத்தஞ்செய்துகொண்டு வருகை யின் மேற்படையென்னு மோக்ஷவாசிகள்-நமக் குதவியாகநின்று லெளிதாய்ச் செயங்கொண்டுக ரையேறுவோமென்று பசாசறிந் தந்தவுதவி ந மக்கில்லாதபடிக்குத் தேவமாதாவி ஞாதனையு மற்ற-அர்ச்சியசிஷ்டவர்களுடையவணக்கமுமொ ழிப்பதற்குப் பிரயாசப்பட்டதாம். ஆகிலுஞ்சூரிய னைப்பகைத்த வௌவாலைப்போலவுஞ் சிங்கத்தை யெதிர்த்த நரிக்கூட்டத்தைப்போலவுந்தேவமா தாவையு மற்றமோக்ஷவாசிகளையும் பசாசினலே வப்பட்டுப் பகைத்தபாவிகளுண்டுபண்ணின வப த்தமுளைத்தநாளிலேதானே யொழிந்து பழைய படிக்குச் சுகிர்தவேதமுறைமைவழுவாத வணக் கம்விளங்கினதாமே.

உ௰. ஆயிரம்வருஷத்துக்குப்பிறகு லுத்தேருங் கல்வீனு மிவர்களோடுசேர்ந்து பிரிந்தமற்றப்ப திதரெல்லாருஞ் செத்துநாறிக்கிடந்த தாயிடத்

துமுளைத்த புழுமாணிக்கமாகத் தோற்றுவிக்கதி
னைத்தாற்போலமுன் புதைத்திருந்த விந்தத்தப்
பறை வேதமாகவெளிப்படவெடுத்து வெட்கமில்
லாமற் சொல்லத்துவக்கிறூர்கள். இதிலேதெளி
வாய்நடக்கும்படிக்கிருவிசேஷிங்களைப் பிரிக்கக்க
டவோம். ௧ தின்முதலாவது. தேவமாதாவையும
ற்றமோக்ஷவாசிகளையுந் திருச்சபை வணங்கின
முறையே நல்லதோ வில்லையோவென்றியோசிக்
கவும். உ-வது. வணங்கப்பட்டமாதாவுக்கும்-அர்
ச்சியசிஷ்டவர்களுக்கும்-சேசுநாதருக்கும்- சுரூப
ங்களைவைத்து வணங்கினமுறையே நல்லதோவி
ல்லையோவென்றியோசிக்கவும். இவ் விருமுறைக
ளுமாராயாத தன்மையா லந்தப்பதிதரெல்லாரு
மக்கியானமென்ருர்கள். நாமிங்கே முதல் - மு
றைக்கடுத்த நியாயங்களை மூன்றதிகாரங்களிலே
வெளிப்படுத்தினபின்புசுரூபங்களுக்குநாஞ்செய்
யும்வணக்கத்தி னுத்தமமுறையைச் சொல்லிக்கா
ட்டித்தருவோம்.

உக. ஆகையாலிருகண்கெட்டகுருடனே யுச்சி
மத்தியானத்தின்னம்விடியவில்லையென்று சாதித்
தாற்போலச் சந்தேகமொன்றின்றித்திருச்சபை
யில்வழங்கின வழுவாமுறையின் விளக்கத்தைப்
பதிதர் காணமாட்டாமல்-மோக்ஷவாசிகளை வண
ங்கினவரை யக்கியானிகளென்ருர்கள். என்றபின்
புபதிதர் முழுத்தேங்காயைக்கடித்தவனைப்போ
லவுட்சுவையாகிய நியாயத்தைக்கண்டுபிடிக்கமா
ட்டாமற்சிலவேதவுதாரணங்களைக்கொண்டு மோ
க்ஷவாசிகளாராதனையாகாதென்றெரூப்பிக்கப் பிர
யாசப்படுகிருர்கள்.

உஉ. ஆகிலுமிங்கே யவர்கள் சொல்லுவதை
யாராய்ந்து மறுக்குமுன்னே நாம்-மோக்ஷவா

சிகளைவணங்கும்வகை யேதென்று சொல்லக்கட வோம், அதேதெனில்—அர்ச்சியசிஷ்டவர்களாண் டவர்க் குகந்தவர்களாகக்கொள்ள வவர்களைப்புக ழ்ந்து—அவர்கள்—நமக்காக வாண்டவரை வேண் டிக்கொள்ளமன்றாடுவது நாமேமோக்ஷவாசிகளு க்குச்செய்யுமாராதனையொழிய வேறாராதனைசெ ய்கிறதில்லையென்று நிச்சயமாமே. இதிப்படியிரு க்கையில்—நாமுமவர்களு மொருப்பட வொத்துக் கொண்ட வொருசத்தியவிசேஷ மறியக்கடவீர் கள். அதாவது நாமிப்பூவுலகி லுயிர்பிழைத்திருக் கிறவர்களை நமக்காகவாண்டவரை வேண்டிக்கொ ள்ளமன்றாடலாமென்று பதிதரு மொத்துக்கொ ள்ளுகிறார்கள். இதுவுநியாயந்தானே. அர்ச்.—சி ன்னப்பர் கொலோசெஞ்சியாருக்கெழுதின நிருப த்து—ச—ம். அதிகாரத்து—உ—ம். வசனத்திற் றிருவு ளம்பற்றினதாவது செபத்தைவிடாமற்கிறீஸ்து வின் பரமரகசியத்துபதேசவாசலை நமக்காண்ட வர்திறக்கும்படிக்கு நமக்காகவு மவரைவேண்டி க்கொள்ளுங்களென்றார். மீளவுமவர்தானே தெச லோனியர்க் கெழுதினமுதல்—நிருபத்து—ரு—ம். அ திகாரம்—உ௰ரு—ம். வசனத்திற் றம்பிமாரே நமக் காகமன்றாடுங்களென்றார். அவர்களுக் கெழுதின உ—ம். நிருபத்து—ரு—ம். அதிகாரத்தில்—முதல்வசன த்துத் தேவவுபதேசம் வழங்கும்படிக்கு நமக்கா கவேண்டிக்கொள்ளுங்களென்றார். அர்ச்.—யாகப் பரோவெனி லெழுதினநிருபத்தின்—ரு—ம். அதிகா ரத்து—௰௬—ம். வசனத்தில்—மோக்ஷக்கரை யேறு ம்படிக் கொருவனொருவனுக்காக வேண்டிக்கொ ள்ளுங்களென்றார். இதெல்லாமாகையில்—நாமுயி ரோடிருக்கு மற்றவர்களை நமக்காகவேண்டிக் கொள்ளமன்றாடுவது வேதத்தில்வழங்கினமுறை

மையாமே. உயிரோடிருக்கிறவர்க ளாண்டவரு க்குகந்தவரோ வில்லையோவென் றறியாமலிருக் கவு முகந்தவராகி முற்றமுடிபோக நடப்பவ ரோவழுவி நரகத்துக்குப்போகத்தக்கவரோவெ ன்றறியாமலிருக்கவு நமக்காண்டவரைவேண்டி க்கொள்ள வேதமுறையின்படியே மன்றுடலா மென்றிருக்கையி லாண்டவர் தரிசனத்தையடை ந்து-அவர்க்குச் சுறுக்களாகி வழுவமாட்டாதம காத்துமாக்களாகிய மோக்ஷவாசிகளை நமக்கு ம ன்றும்படிக்கு நாம் வேண்டப்படாமலென்ன. வேண்டிறலக்கியானவணக்கமென்பதென்ன.

உரு. இதற்குப்பதிதர்சொல்லுமுதல் - நியாய மாவதுமோயிசன்-ரு-ம். புஸ்தகத்து-சா-ம். அதி காரம்-௰ரு-ம். வசனத்திலெழுதினதாவது-உன் கர்த்தாவாகிய சர்வேசுரனை வணங்கி யவரொரு வர்க்கே யூழியஞ்செய்வாயாகவென்றார். ஆகை யா லவரொருவரைவேண்டுவது நியாயமாகை யாலவரையொழிய மோக்ஷவாசிகளை வேண்டுவ தாண்டவர்க்குச் சங்கைக்கேடாகு மென்பார்க ளாயினு மாண்டவரையொழிய வுயிரோடிருக்கி றமகாத்துமாக்களை நமக்குவேண்டும்படிக்குமன் றுவே தாண்டவருக்குச் சங்கைக்கேடாகாமல்- முன்சொன்னபடி வேதத்தில்வழங்கினமுறையா வானேன். இவ்வண்ணமேயாண்டவர்க்குக்குறை செய்யாமலிப்பூவுலகிலுள்ள நல்லோரையும் வா னுலகில்வாழுமோக்ஷவாசிகளையுஞ் சங்கித்துவே ண்டிக்கொள்ளலாம். அதேனெனில்-முன்சொன் னதேவவாக்கியத்திலே சர்வேசுரனேதேவனெ ழிய மற்றவரைத்தேவராகவணங்கவுஞ் சேவி வும்வேண்டாமென்பதாம். அப்படியே மோயிச ன் - உ-ம். புஸ்தகத்து - உ௰- ம். அதிகாரத்து

ரு-ம்.வசனத்தில் விவரமா யாண்டவர் கட்டளை யிட்டார். தாமோவெனில் - தேவமாதாவைய மோக்ஷவாசிகளையும் வணங்கிமன்றுடிபோ அவர்களைத் தேவர்களாகவெண்ணவுமில்லை மன்றுடவுமில்லை. அரசனை நமக்காக மன்றுடச்சொல்லிச் சாமாசிகளைவேண்டினு லவர்களை யரசர்களாக வணங்கினதென்று மரசற்கிதனல் குறையுண்டென்று மதிகெட்டவனுஞ் சொல்லமாட்டான்.

உச. மீளவும் பதிதர்சொல்லு மிரண்டா நியாயமாவது மனிதனைகப்பிறந்த சேசுகிறீஸ்து - ஒருவரோ யாண்டவருக்கு மனிதருக்கு நடுவேநிற்பவனென்று - அர்ச்.- சின்னப்பர் திமோத்தேயுவென்பவருக் கெழுதின முதல் - நிருபத்தில்- உ-ம். அதிகாரத்து - ரு-ம். வசனத்தி லெழுதிவைத்தார். ஆகையாற் சேசுநாதரொருவரோ மனிதருக்குதவியாக நடுநின்றண்டவருறவும் வரங்களுநமக்குவரும்படி செய்தவராகி லவரையல்லாதே மற்றமோக்ஷவாசிகளை வேண்டுவ தவருதவிபோதாதென்றுற் போலச் சேசுநாதருக்குக்குறையாகுமென்று பதிதர் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். ஆயினு முயிரோடிருக்கு நல்லவரைவேண்டுவது சேசுநாதருக்குக் குறையல்லவென்று பதிதர்தாமே சொன்னபின்பு மோக்ஷவாசிகளைமாத்திரம் வேண்டுவது குறையாமென்பதென்ன. அர்ச்.- சின்னப்பர் முன்சொன்ன விடத்தி லெழுதிவைத்ததெல்லாஞ் சொன்னற்சந்தேகப்பட விடமில்லை. ஆகையாலாண்டவருக்கு மனிதருக்கும் - சேசுநாதரொருவரோ நடுநிற்பரென்றவுடனே யதற்குநியாயத்தைக்காட்டியவர் சகலபேரீடேற்றத்துக்காகத் தம்மையொப்புக்கொடுத்தாரென்றார். ஆகையிலொழுங்குப

டத் தமிழாகச் சின்னப்பர் திருவுளம்பற்றினதை
த் திருப்பிச்சொல்லும்படிக்கு மனிதரியாவனாயு
மிரட்சிக்கிறதுக்குச் சேசுகிறீஸ்து - ஒருவரோ தா
ந் தம்மைப்பெலியாகத் தந்ததனாலவரொருவரே
ாண்டவரோடே மனிதருறவாகும்படிக்கு நடு
வேநிற்பவரென்றார் - அர்ச்.- சின்னப்பரென்க.
அப்படித்தாழும்பாடுபட்டுச் சிலுவையிலறையு
ண்டு மரணத்தையடைந்து நம்மை யிரட்சித்த
சேசுநாதரொழிய மற்றமோக்ஷவாசிகளை நம்மை
யிரட்சித்தவரென்று சொல்லவுங்கருதவுங்கூடா
து. ஆகிலுஞ் சேசுநாதர் பாடுபட்டபலனைக்கொ
ண்டு மோக்ஷவாசிகளும் பூவுலகில்வாழு மகாத்
துமாக்களு நமக்குவேண்டிக்கொள்ளச் சொன்
னாற் சேசுநாதருக்குப் புகழ்ச்சியாகுமொழியக்
குறையுநிந்தையுமாகுமென்று நல்லறிவுடையோ
ர் நினைக்கவுமாட்டார்கள்.

உரு. மூன்றாவது. பதிதர் சொல்லுவதேதெ
னி லாண்டவரளவிறந்த தயையுள்ளவரு நம்மை
யிரட்சிக்கமிகவு மாசையுள்ளவருமாகையிற் பல
மோக்ஷவாசிகளைப் புறச்சலிகையாகத் தேடியா
ண்டவனை நமக்குவேண்டி மன்றாடச்சொல்லு
ம்போ தாண்டவர்மேலவநம்பிக்கையைக் காட்டி
னாற்போலேயாகும் அர்ச்.- சின்னப்பரோவெ
னில் - எபிரேயருக்கெழுதின நிருபத்தில் - சம்.
அதிகாரத்து - ௰சு-ம். வசனத்தில் - நாம்வே
ண்டிக்கொள்ளும்போ தாண்டவர் சந்நிதியிலே
முழுநம்பிக்கையோடே சேரக்கடவோமென்றார்.
ஆகையாலாண்டவனையொழிய மோக்ஷவாசிக
ளைவேண்டுவ தவநம்பிக்கையாகி யாகாதவணக்
மாகுமென்று பதிதர்சொல்லுகிறார்கள். ஆகிலு
ந்த - அர்ச்.-சின்னப்பர்தாமே முன்சொன்ன

படி- தமக்காகச் சனங்களைவேண்டிக் கொள்ளச்சொல்லி யெழுதினவிடத்தி லாண்டவர்மேலே யவநம்பிக்கை காட்டினாரோ - இல்லையென்பார்கள் பதிதர் தாமே. ஆகையால்-மோக்ஷத்தில்வாழும் - அர்ச்சியசிஷ்டரையு மவநம்பிக்கை காட்டாமல் வேண்டிக்கொள்ளலாமென்று சொல்லுவது நியாயமாமே. மீளவும் வேதத்திலெழுதப்பட்டதைப்பார்க்கி லிதுவெளியாகும். ஆகையால்-யோபாகமத்தில் - ௪௨-ம். அதிகாரத்து - அ-ம். வசனத்தி லாண்டவர்தாமே யோபென்பவன் சினேகிதருக்குத் திருவுளம்பற்றினதாவது - உங்களுக்குவேண்டி யோபென்பவன் பூசைசெய்யவுநம்மைவேண்டிக்கொள்ளவு மவன்முகத்தைப்பார்த்து நீங்கள் - மதிகேடாகச் செய்த குற்றங்களைப்பொறுப்போமென்றார். மீளவுமோயீசன் முதற்புஸ்தகத்தில் - ௨௰-ம். அதிகாரத்து - எ-ம். வசனத்திலாண்டவர் செரார்நாட்டரசனாகிய வபிமெலேக்கென்பவன் - அபராம் பெண்சாதியைப் பறித்ததற்குத் திருவுளம்பற்றினதாவது: புருடனுக்குத் தன்ஸ்திரீயையுடனே யொப்புக்கொடுக்க வவனுந்தீர்க்கதரிசியாகையி லுனக்காக வேண்டிக்கொள்ளுவான் - நாமும்பொறுத்து நீ பிழைப்பாயென்றார். மீளவு மக்கபெயரிரண்டாம்புஸ்தகத்தில் - ௩-ம். அதிகாரத்து - ௨௩-ம். வசனந்துவக்கி - ௩௪-ம். வசனமட்டு மெழுதப்பட்டவர்த்தமானமாவது - எருசலேமாநகரிற் சர்வேசுரனுக்குக்கட்டியிருந்த கோயிலிலுள்ள திரவியங்களைக் கொள்ளையிட்டுக்கொண்டு வரும்படிக் கரசனாலனுப்பப்பட்டவெலியோதுரன்போய்க் கட்டளையிட்டபடிசெய்யத் துணிந்தவளவில் - ஆகாயத்திநின்றேன்றின வொரு மனுமனசேறின குதிரை

யெலியோதுரனை மார்பிலுதைத்தவுடனே சூழ நின்ற சேவகரொல்லாருமோடிப்போயெலியோதுரன் கீழேவிழுந்தான். விழுந்தபின்புமேவிருசம்மனசுகள் - தோன்றி யிருபக்கத்துநின்று குதிரைச்சம்மட்டிகளாலவனைமிகவுமடித்தமையாலவன் மூச்சின்றிச் சாகக்கிடந்தான். அப்போதுபிரதானகுருவாகிய வொனியஸென்பவரவன் செத்தாலிதுநாஞ்செய்த வஞ்சனையென்றிராசாநினைப்பாரேயென்று மனதிலிரங்கி யவனுக்குவேண்டிச் சர்வேசுரனைமன்றாடிப் பூசைசெய்தார். எலியோதுரனைமுன்னடித்த விருசம்மனசுகள் - மீளவுமவனுக்குத்தோன்றி - ஒனியஸென்னுங் குருவானவரைத் தோத்திரஞ்செய்யக்கடவாய் - அவரைக்குறித் தாண்டவருனக்குயிர் தந்தாரென்றார்கள். இதுவுமன்றி யித்தொகைப்பட்டவாக்கியங்களும் வர்த்தமானங்களும் வேதபுஸ்தகங்களிலெங்குமட்டின்றிக் காணப்படுமே ஆகையாற் பிறரை நமக்காகவேண்டிக்கொள்ளச்சொல்லுவது பதிதர்சொன்னபடி யளவிறந்த தயையுள்ள நாதர்மேலவநம்பிக்கையைக் காட்டினதாகி லாண்டவர்தாமே பிறருக்காகச் சிலமகாத்துமாக்களை வேண்டிக்கொள்ளச் சொல்லுவானேன்-அவர்கள் பிறருக்காகச் செய்தவேண்டுதலைத் தாமேகேட்பானேன். தான் றனக்கொருவன் கண்ணைப்பிடுங்கினாலொழிய வுச்சிப்பகலினும் விளங்கினவிந்த நியாயங்களைக் காணாதிருப்பவரொருவருண்டோ.

௨௬. ஆகிலுங் கண்ணாற்கண்ட நியாயமும் கையாற்றொட்ட சத்தியமு மறுத்துச் சலஞ்சாதிப்பது பதிதரியல்பாகையிற் சொன்னதற்கு மறுவுத்தரமில்லாமலு மொத்துக்கொள்ளாமலு நம்

மை நகைத்துச்சொல்லு நாலாங்குருட்டு நியாய மாவது: நாஞ்சொன்னபடிமோக்ஷவாசிகளே வேண்டுவது குறையில்லாதாயினு மதனாலாகிய பலனென்ன. மோக்ஷவாசிகள் – நமக்குவந்தவிடையூறுகளை யறியவுமில்லை நாமவர்களுக்குச் செய்யும்வேண்டுதலைக்கேட்கவுமில்லை. செவிடர்க்கு வாசித்தவீணையைப்போலவுங் குருடர்க்குக் காட்டின கண்ணாடியைப்போலவு மாகுமென்பார்கள். அரசர் – ௩-ம். ஆகமத்து – அ-ம். அதிகாரம். – ௩௬-ம். வசனத்திற்சகலமனிதருணர்வினையாண்டவரொருவரே யறிந்தாரென்றதாகையில்-மோக்ஷவாசிகளு மறிவார்களென்றால் வேதத்தொவ்வாத வக்கியான மென்பார்கள். ஆகிலு மனிதருணர்வினை யியற்கையாலறிந்தவர் சர்வேசுரனொருவர்தாமே. அவர் தாந்தந்தகாட்சியாற்செயற்கை யறிவினோடே மோக்ஷவாசிகளு மெம்முணர்வினை யறிந்தார்களென்றாற் குறையென்ன–அப்படித்தானல்லோதீர்க்கதரிசிகளெல்லாரும்வருவதையு மகன்றதையு மனதிலொளித்ததையு மறிந்துவெளியாகச்சொன்னார்கள். அப்படியல்லோசமுவேல் – அரசர்முதலாகமத்து –௯–ம். அதிகாரம் – ௰௯-ம். வசனத்திற் சவுல் – மனதினினைத்தயாவையு மறிந்து – அவனுக்குச் சொன்னார். அப்படியல்லோ – அரசர்–௪–ம். ஆகமத்து – ௫–ம் அதிகாரம் – ௨௫–ம். வசனத்தில் – எலிசேயுவென்பவர் தூரநின்றதன்சீஷன்செய்ததை யறிந்துசொன்னார். அங்கேதானே – ௬–ம். அதிகாரத்து – அ–ம். வசனத்தி லந்த வெலிசேயுஸ்தானே சீரியவிராசா நினைத்தயாவையு மறிந்து – இசருயேலிராசாவுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். இத்தொகைப்பட்டபலவும்வேதத்திலே

ழுகியிருக்கையி லிப்பூவுலகிலாண்டவர்தம்முடையசினேகிதருக் கிவ்வகைக்காட்சியைத் தந்தது நிச்சயமாகக்கொள்ள மோக்ஷத்தி லந்தவிதமாய்த் தம்மோடொன்றுபடவாழுஞ்சினேகிதருக்குக்கொடுக்கமாட்டாரோ.

உஎ. ஆகிலுமிதெவர்க்குந் தெளிவாகும்படிக்கிங்கே யறியவேண்டியதாவது: மோக்ஷத்திற்சென்று பேரின்பதரிசனத்தை யடைந்தயாவருஞ் சர்வேசுரனை முகமுகமாய்க் குறையொன்றின்றி யெக்காலமும் பிரத்தியக்ஷமாய்க் கண்டு வாழாநிற்பார்கள். தெளிந்தகண்ணாடியைப் பார்த்தவனதிலே தன்முகத்தைக் காண்பதொழிய வக்கண்ணாடியடுத்த யாவையுங்காண்பான். அவ்வண்ணமே யளவிறந்ததெளிவுள்ள ஞானக்கண்ணாடியாகிய தேவசுபாவத்தை மறைவின்றிப் பிரத்தியக்ஷமாய் மோக்ஷவாசிகளெல்லாருங் கண்டவளவி லாண்டவர் சுபாவமாயறிந்த யாவையு மவர்களுமதிலே காண்பார்களென்று சொல்லத்தகுஞ்சத்தியமாமே. குன்றுதவிந்தநியாயத்தை வேத வுதாரணங்களா லொப்பிக்கும்படிக்குத் தோபிய ஆகமத்து - ௰௨-ம். அதிகாரம்-௰௨-ம். வசனத்தில் - இரபயேலென்னுஞ்சம்மனசு தோபியனைப்பார்த்து நீகண்ணீராவிட்டழுதுவேண்டினவளவில் - நானேயாண்டவர்க்குன் வேண்டுதல்களை யொப்புக்கொடுத்தே னென்றார். அர்ச். அருளப்பர்கண்டகாட்சியின் - ரு-ம். அதிகாரம்-அ-ம். வசனத்திலும் - அ-ம். அதிகாரத்து- ௩-ம். வசனத்திலும் - உச-கிழவராகிய வக்காலத்துள்ள மோக்ஷவாசிகளு மற்றச்சம்மனசுகளுமாண்டவர்சமுகத்துவிழுந்து பொற்பாத்திரத்திற் பூம்புகைகாட்டினபாவனையாகப் பூவுலகிருந்தநல்லோ

ர் செய்த வேண்டுதலைக்காட்டி மன்றாடினதாக வெழுதிவைத்தார். மக்கபெயிரண்டாமாகமத்து - ௧௫-ம், அதிகாரம் - ௧௨-ம். வசனந்துவக்கியூதஸென்பவன் கண்டகாட்சியாவது பிரதானகுருவாயிருந்து முன்னிறந்துபட்ட வொனியஸென்பவரை யூதர்க்குவேண்டிக்கையெடுத் தாண்டவரைமன்றாடக்கண்டபின்னரவரண்டையிலே வயதிலும்பெருமையிலு முயர்ந்த மற்றொருவர் தோன்றி யூதஸென்பவனை நோக்கி - ஒனியஸென்பவர்சொன்னதாவது - இவரோயிசறுயேற் சனங்கள்-மேற் பட்சமுள்ளவர். இவரோ நம்முடைய சனங்களுக்காகவும்-எருசலேமென்னுந் திருநகருக்காகவு மிகவும் வேண்டிக்கொண்டிருப்பவர். இவரோ யாண்டவர் தீர்க்கதரிசியாயிருந்த -எரேமியஸென்பவரென்றார்., என்றவளவில் - எரேமியஸென்பவர் கையைநீட்டிப் பொன்னாற்பூண்டவாளை யூதஸென்பவற்குத்தந்து சர்வேசுர னுனக்கனுப்பின திருவாளைவாங்கிக்கொண்டு - இசறுயேற்சனங்களுக்குள்ள பகைவரைவெட்டிச் சங்கரிப்பாயாகவென்றார். இதுகளையும்வேதத்திலுள்ள பலவையுஞ் சலஞ்சாதியாமற்பார்த்தாற் சம்மனசுகளு மற்றமோக்ஷவாசிகளு மாண்டவரைப் பிரத்தியக்ஷமாகக் கண்டவிடத்திலவர்தேவசுபாவத்தில் - நம்முடைய துன்பங்களையும் வேண்டுதலையு மறிவார்களென்று மறிந்து நமக்காக மன்றாடுவார்க ளென்றுஞ் சந்தேகமறத் தெரியப் படுமே. மீளவும் - ஒனிய ஸென்பவரும் - எரேமியஸென்பவரும் - இசறுயேற் சனங்களுக்கு வேண்டினது முதவினதுஞ் செய்தபோது-அவரிருவர் மோக்ஷதரிசனத்தையடைந்தவரல்ல பிதாக்கள் ஸ்தலத்திலிருந்தவராகிலும

வர்களுக்குவேண்டவு முதவவுஞ் செய்தார்களெ ன்றுற் சேசுநாதர் மோக்ஷவிராச்சியத்திற் செ ன்றபின்ன ரந்தவிருவரு மற்றமோக்ஷவாசிகளு மடைந்த பிரத்தியக்ஷதரிசனத்தால்-நாஞ்செய் யும்வேண்டுதலை யறியவுமனம்பொருந்தி யுதவி யாக நமக்குவேண்டி மன்றாடவுஞ் செய்வார்க ளென்று கண்ணுடையயாவருங்கண்டுசொல்வா ர்களல்லோ. சொன்னயாவையு மெய்வழியறிவ தற்காசையோ டெவ்வளவாகிலு மாராய்ந்துபா ர்க்கில்-நியாயத்தைக் காணுதபடி தனக்குத்தா னே கண்ணைப்பிடுங்கினுலொழிய மோக்ஷவாசிக ளைக்குறித்துத் திருச்சபையில்வழங்கும் வணக்க ம் வேதத்தொத்திருக்கிற நியாயமென்று காண ப்படுமே. ஆகையா லந்தவணக்கத்தைப் பதிதர க்கியானமென்றபோ, தவர்களைப்பார்க்க மதிகெ ட்டவருமில்லை - அக்கியானிகளு மில்லையென்பது நிச்சயந்தானே.

மூன்றுமதிகார முற்றிற்று.

## ௪-ம். அதிகாரம்.

### தேவமாதா வாராதனை விளக்கம்.

௨அ. சகலமோக்ஷவாசிகளைப் பற்றிப் பொ துவாய்ச்சொன்னதெல்லாம் விசேஷமாய்த் தே வமாதாவைப்பற்றிச் செல்லுமல்லோ. ஆகிலுமற் றவான்மீன்களைத் தீண்டாததகரியதோர்பாம்புமு ழுதொளிவிளங்கின பூரணமதியை விழுங்கவரு மென் றிந்நாட்டில் வழங்கினகதை மெய்யானு ற்போலப் பதிதரனைவரு மற்ற மோக்ஷவாசிகளை

ப் பகைத்தானு மெவ்வுலகனைத்தும் விளங்கினகு
ளிர்ந்த கதிரைவீசுந் தயையுள்ள பரமதேவதா
யை விசேஷமாய்ப் பகைத்துமுழுது மவளை விழு
ங்க ஆத்தையுமழலு மொழுகி நாவுந்தமது நரக
வாயைத் திறந்து தூஷணங்களைக் கக்கிக்கொண்
டு திரிகிறார்கள். ஆகிலும் பாவம்விளைவிக்கப் பிறந்
த சமயங்களாகையிற் சகலபாவங்களைத் தீர்க்கு
மமிர்தமுமாகிப் பாவத்துக்கு முதற்காரணமாகி
ய பசாசின் றலையைமிதித்தவருமாகி வானோர்க்க
ரசாளாகிய-அர்ச்.- மரியாயென்பவளை யச்சமய
த்தாரெல்லாரும் பகைப்ப ததிசயமல்ல. தேவமா
தாவுக்கிதனாற் குறையுமல்ல. பாவத்தைவிட்டுத்
திரும்புதற்காசையுள்ள பாவிகளுக்கெல்லாமடை
க்கலமு மாதரவுமாதலே பரமநாயகியுடைய த
யையின்பெருமையாவதுபோல மெய்வழிவிட்டுப்
புண்ணியநெறியைப் பகைத்தபாவிகள் வாயாலி
கழப்படுவதே யவளுக்குயர்ந்த புகழ்ச்சியாகும்.
ஆகிலுமிதிலே தெளிவாய்நடக்கும்படிக்குத் திரு
ச்சபைதேவமாதாவுக்குச் செய்யுமாராதனை யே
தென்று முந்தி விளக்கக்கடவோம்.

௨௧. ஆகையாற் பாவத்தமிழ்ந்திக் கெட்ட
மனிதரையிரட்சிக்கும்படிக்குச் சர்வேசுரன்றமே
மனிதனாய்ப்பிறக்கக் கன்னிமைக் கிரைகெடாமற்ற
மக்குத்தாயாக - அர்ச்.- மரியாயென்பவளைத்தெ
ரிந்துகொண்டாரென்று மெவ்வுலகிற்கு மிராக்கி
னியாக ஸ்தாபித்தாரென்றுமறிந்து திருச்சபை
சர்வேசுரனுக்குப்பின்பு சகலமோக்ஷவாசிகளுக்
குஞ் சம்மனசுக்குமேலாக வவளை யெண்ணி
த் தேவாராதனை நீங்கி யுத்தமாராதனையாக
ப்பரிசுத்தகன்னியுமாய்த் தேவமாதாவுமாய் நிக
ரொன்றின்றி விளங்கின பரம நாயகியாகிய-

அர்ச்.- மரியாயென்பவளை வணங்கவுமவளை யிருண்டவக்கியானத்தொளியும் - பகைத்தபசாசின் போரில்வெற்றியும் - அடைந்ததுன்பத் தாதரவும்-வந்தநோய்க்காரோக்கியமும்- அழுவார்க்காறுதலும்-மெலிந்தார்க்குறுதியும்-கல்லார்க்குணர்ச்சியும்-எவர்க்குங் கிருபைதயாபமுள்ள தாயுமாகவெண்ணி மன்றாடவுந் தேவமாதா வாராதனையின் முறையாமே. நோயுள்ளகண் -ஒளிமிகுதியைப்பொறுக்கமாட்டாததுபோலே யிவ்வுத்தமவகை யாராதனையை மதிகெட்டபதிதர் பொறுமற் றன்றலைமிகுத்தவளாகக்கொள்ளவுவன்-மேற்றீராப்பழியை வைத்தபசாசினு லேவப்பட்டுச் சொன்னவணக்க மாகாதென்றுமக்கியானமென்றும் வெட்கமின்றி யுலகெங்கு நாற்றம்படர்ந்து வீசக் கக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

௫௰. ஆகையாற் பதிதர்சொன்னதை யாராய்ந்து வெளியாக்கக்கடவோம். அர்ச்.-லூக்காஸெழுதின சுவிசேஷத்து - ௰௧-ம். அதிகாரம் - ௨௭-ம். வசனந்துவக்கி நம்முடைய கர்த்தரானசேசுநாதர் விரிவாயருளிச்செய்த வுத்தமவுணர்ச்சிகளை மகிழ்ந்துகேட்டவொருத்தி மனதிற்பூரித்தவின்ப முள்ளடக்கமாட்டாமற் பேரொலியாகக் கூப்பிட்டுச் சுவாமியைநோக்கி யும்மைச்சுமந்தவுதரமு நீர் முலைப்பாலுண்ட கொங்கைகளும் பாக்கியம்பெற்றதுகளாமே யென்றாள். அதற்குச்சேசுநாதரிதிலேயுஞ் சர்வேசுரன் றிருவசனங்களைக்கேட் டொத்து நடந்தவர் பாக்கியம்பெற்றவரென்றார். ஆகையாற் றம்மைப்பெற்றதாயைப்புகழ்ந்தவார்த்தையை மறுத்துச்சேசுநாதர் தேவமாதாவாராதனை யாகாதென்று சொன்னாற்போலாச்சுதென்று பதிதர்சொல்லுகிறார்கள். ஆ

இலுமதிலேயு மிதுதாவில்லை யென்றபோது முன் சொன்னதைமறுத்தவகையோவல்ல.அதையொத்துக்கொண் டிரண்டிலும் பின் சொன்னததிகமென்ப தர்த்தமாகும். அப்படித்தானே சந்திரனொளியினுஞ் சூரியனொளி பெரிதென்று விதனுஞ் சந்திரனுக் கொளியில்லை யென்பதாமோ வில்லையே. ஆகையால் - நம்மைச் சுமந்தவுதரமு நாம் பாலுண்ட கொங்கையும் புகழப்படுவது நியாயந்தானே. ஆகிலுந் தேவவாக்கியங்களைக்கேட்டுவழுவாமல்-நடந்தவரை யதிலேயும் புகழ்வது நல்லதென்று சேசுநாதர்திருவுளம்பற்றினர்.

ருக. மீளவுமிந்த வார்த்தையைக் கொண்டு சேசுநாதர் தம்மையீன்ற தாயைப்பார்க்கத்தேவவசனங்களைக்கேட்டு நன்னெறிவழுவாத மற்றவறவோர்களை யுயர்த்தினென்று நினைக்கவும்வேண்டாம்-இதுவெளியாகும்படிக்கோருவமைசொல்லிக்காட்டுவோம். ஆயுதமின்றி நின்றவொருவன்பகைவர்தன்னை வெட்டவருவதைக் கண்டவளவிலருகேநின்றகோட்டையினுழையவோடிப்போகாமல்-ஐயோதம்பகைவர்கையிலகப்படாமற்பறவைகளாகாயத்திற் பறக்கும் விசையைப்பார்-அதுகளேபாக்கியமுள்ளதுகளென்றான். அதனைக்கேட்டு மதிவல்லோனொருவன்விசையோடாகாயத்திற்பறக்கும்பறவையினு நீயோடிக்கோட்டையினுழைந்துன்னுயிரைக்காத்தால்-நீயேபாக்கியமுள்ளவனென்றான் - என்றாலும்பறவைபறக்கும்விசையிலுமிவனோடு மோட்டத்தையுயர்த்தினனென்றெண்ணலாமோவில்லையே.அவன்சொன்னதற்கர்த்தமேதெனிற் பறவைபறக்கும்விசை யதிகந்தானேயாகிலு மதனுலுனக்காவதென்ன நீபறக்கக்கூடாமையிலதிலேயு முனக்குன்காலோட்ட

மே நல்லதென்பதாமே. அவ்வண்ணமே சேசுநாதர் முன்சொன்னதற் கர்த்தமேதெனில்-நம்மைப் பெற்றதாயடைந்த பாக்கியம்- நிகரொன்றில்லாத வுத்தம மதுதானே. ஆகிலும் வான்மேல்வாழுஞ் சம்மனசுகளுக்குமுதலா யெட்டாதபாக்கியமாகையில்- நீயதைப்புகழ்ந் தாசைப்படுவதென்ன. தேவதிருவாக்கியங்களைக்கேட்கவு மதின்படியே நடக்கவும் பசாசுசெய்யும் பகையிலகப்படாதபடிக்கு வேண்டியிருக்கையில்-முன்சொன்னதிலேயு மிதுவேயுனக்கு வேண்டியபாக்கியமென்பதே சேசுநாதர் முன்றிருவுளம்பற்றினதற்கர்த்தமாகும்.

௩௨. இதுவுமன்றி யத்திருவசனத்தைக் கொண்டு சேசுநாத ரெவர்க்குஞ்சொன்னவுணர்ச்சியாவது-ஆண்டவர் கட்டளையிட்ட நியாயத்தைக் கேளாமலு மவர்காட்டிய நெறியில்- நடவாமலுந் தம்மைப்பெற்ற பரிசுத்தகன்னியாகிய தேவமாதாவை வணங்கினாலு மதனாற்பலனொன்றில்லையென்று காட்டினார். இது வெளியாகும்படிக்கு- அர்ச்.- லூக்காவெழுதின சுவிசேஷத்திற்றானே உ௩-ம். அதிகாரம்-உ௮-ம். வசனத்திலெழுதப்பட்டதைச் சொல்லிக்காட்டுவோம். நம்முடைய கர்த்தராகிய சேசுநாதர் சிலுவையைச் சுமந்து கபாலமலைமேலேறுகிறபோது பத்தியுள்ள சில ஸ்திரீகளவர்மேலிரங்கிவிம்மிமிகவழுதிருந்தார்கள் அவர்களை நோக்கிச் சேசுநாதர் திருவுளம்பற்றினதாவது-எனக்கிரங்கியழவேண்டாமுங்களையுமுங்கள்- மக்களையும்பார்த்து நொந்தழக்கடவீர்களென்றார். ஆகையாற் சேசுநாதர் நம்மையிரட்சிக்கும்படியளவிறந்த தயைபொருந்திப்பாடுபட்டவகோர கஸ்தினாவுகளைத்தியானித்து ம

ணமிரங்கிக் கண்ணீர்விட்டழுவ தாகாதோ. மதி கெட்டவனுயினு மாகாதென்று சொல்லமாட்டா ன். ஆகையா லதற்கர்த்தமேதெனில் ஒருவன்ற ன்பாவங்களை நினைத்து மனஸ்தாபப்படாமலும் ம துசனை வெறுத்து நொந்தழாமலும் பாவத்துக் காகப் பாடுபட்டகர்த்தர்மே லிரங்கியழுதாற்பல னில்லாத விரக்கமாமென்ப தர்த்தமாகும். அவ் வண்ணமே முன்சொன்ன வுதாரணத்திலு மா ண்டவர் சொன்னபுத்திகளைக்கேளாதவனுங் கே ட்டுநடவாதவனு நம்முடைய தாயைப் பாக்கிய முள்ளவளென்று புகழ்ந்ததனுற் பலனொன்றில் லையென்ப தர்த்தமாகும்.

௱௱. இங்கே நாஞ்சுலபமாய்ச் சொன்னதை யோசித்துப்பார்க்கி லந்தஸ்திரியானவள்- தேவ மாதாவைவணங்கிச்சொன்னபுகழ்ச்சியைச்சேசு நாதருமொத்துக்கொண்டுநல்லதென்றுரொழிய வதனைமறுத்துத்தேவமாதாவைவணங்கவும்புகழ வும்வேண்டாமென்றுரொன்று மதிகெட்டவனுக்கு த்தோன்றுமல்லாதேநல்லறிவுடையோர் சொல் லவுங் கருதவுமாட்டார்கள். ஆகையாற்பகைவரா கியபதிதர்தேவமாதாவின்மேலெய்த-அம்புகளை த்திருப்பிமுறிந்துபோனவவர்கள்-மனம்புண்ணு கிவருந்தும்படிக்குநாமேபரமதேவதாயைஸ்து தித்து ஞானவுணர்விற்றெளிந்தவந்தஸ்திரீயோ டொருப்படத் திருப்புகழாகச் சொல்லக்கடவோ ம், மனிதனுகிய கடவுளைச் சுமந்த வுதரமேவாழ. கன்னிமலர்கொடாக் கனியைத் தந்த வுதரமேவா ழ. உயிர்க்கெலாமுணர்வினைத்தந்தவர்க்கமுதூா ட்டிய கொங்கைகளேவாழ, எங் கண்மகிழவருபி யானவனை யுருவாக்கினவளே வாழ. நம்மையிர ட்சிக்கச்சித்தின குருதியைத்தந்தவளே வாழ.

வானோர்க்கரசியே வாழ. ஈனோர்க்குறுதியே வாழ. வானுலகழகே வாழ. பூவுலகுயிரோ வாழ. தீயுலகதிர்வே வாழ. வேதம்விளக்கும் சுடரோ வாழ. உயிரைப்புரக்கு மருட்கடலே வாழ. நோய்தீரமிழ்ந்த மருஉரொளியே துயர்தீர் மகிழ்வே கதிக்கரையே புவித்துணையே கருணாகரியே யுயிரோ யமுதே யருளேவாழ. எங்கும்புகழத்தகுந்தாயே வாழ. எங்குஞ்சரியாய்ப் புகழக்கூடாத தாயே வாழ. பரமதேவதாயே வாழ. பதிதரஞ்சுந் திறத்தியே வாழ. பதிதர்பகைக்குஞ் செல்வியே வாழ. பதிதரைக்கெடுக்கு மரசியே வாழ வாழ.

௬௪. இவ்வண்ணமேபதிதர் முதற்படைவெட்கி முறிந்துபோனபின்பு மறுபடையாகச்சிலரும் வந்து - அர்ச்.- அருளப்பரெழுதின சுவிசேஷத்து - உ-ம். அதிகாரத் துவக்கத்திலுள்ள வர்த்தமானத்தை யாயுதமாகவேந்திக்கொண்டு தேவமாதாவைப்பகைத் தெதிர்ப்பார்களாகிலுந் தேவமாதா துணையைக்கொண்டு நாமேயவர்களெறிந்த வேலை யவர்கள்-மேற்றிருப்பித் தேவமாதாவாராதனை யொழிப்பதற்கவர்கள் சொன்னதைக்கொண்டே-அந்தவாராதனையின் முறையையொப்பித் ததனை விளைவிக்கக்கடவோம். ஆகையால்-அர்ச்.-அருளப்பரெழுதினவர்த்தமானமே தெனிற் கானாவென்னுமூரி லொருகலியாணத்துக்குச் சேசுநாதரு மவருடைய திவ்வியமாதாவுஞ் சீஷர்களும் வந்திருந்தார்கள். நடுவிருந்திலே முந்திரிகைப்பழத்திரசமில்லாததையறிந்ததயாபரியாகிய தேவமாதா தன் திருக்குமாரனை நோக்கி யிரசமில்லையென்றாள் - அதற்குச்சேசுநாதர் ஸ்திரீயே யுமக்கு நமக்குங் காரியமென்ன-நம்முடையகால மின்னம்வந்ததில்லையென்றார்-என்

ருளுமவர்மனதையறிந்தமாதா-ஏவற் செய்வோ
ரைப்பார்த்து- இவர் சொன்னபடி செய்கவென்
ருள். சேசுநாதருமங்கேயிருந்த வாறுசாடிகளி
ல் - நிறையத்தண்ணீரை யூற்றச்சொன்னபடியூ
ற்றினபின்பு - அதிலெடுத்துவார்ந்துக்குடித்து
டத்திலுத்தமவிரசமாகக்கண் டதிசயப்பட்டார்க
ளென்று - அர்ச்.- அருளப்ப ரெழுதிவைத்தார்.
ஆகையாற் சேசுநாதருமக்கு நமக்குங்காரியமில்
லையென்று மாதாவுக்குச் சொன்னபோதுமாதா
வையெண்ணுமலவள்-நமக்காகமன்றுட நாம்வே
ண்டிக்கொள்ளத் தேவையில்லை யென்றுற்போ
லாயிற்றென்று பதிதர்சொல்லுவார்கள். நாமோ
வெனிற் சேசுநாதர் தாம் புதுமைசெய்யுநேரமி
ன்னம் வாராதிருந்தாலுந் தேவமாதாவின் வா
ர்த்தையை மறுக்கமாட்டாமலுடனே யப்புதுமை
செய்தமையா லெல்லாருந் தேவமாதாவைவண
ங்கவுந்தமக்குவேண்டியவரங்களைத்தப்பாதடை
யும்படிக் கெல்லாருமவளை மன்றுடவும் படிப்பித்
தாரென்போம்-என்றுலு நியாயத்திற் கொத்திரு
க்குமென் றெப்பிப்பதெளிதே. அதெப்படியெனி
ல்-நம்மையிரட்சிக்க வவதரித்திங்கேபிறந்தசே
சுநாதர் பாடுபட்டிரட்சித்தது மெவர்க்கும்வழு
வாவொழுக்கநெறியைக்காட்டிப் போதித்தது ம
ல்லாதே தம்மைக்கடவுளென்றுந் தாம் போதித்த
வழிமெய்யானவேதமென்று மொப்பிக்க மட்டி
ல்லாத புதுமைகளைச்செய்தார். ஆகிலுந் தாம்பு
துமைசெய்யுமுன்னே தேவமாதாவைக்கொண்
டு செய்வித்தார். அதுவுமொழியத் தாமேசெய்
த முதற்புதுமைமாதாவைக்குறித்துச்செய்யத்தி
ருவுளமானர். அதெப்படியென்றல்-அர்ச்.- லூர்க்
காஸெழுதினசுவிசேஷமுதலதிகாரத்து-௩௧-ம்

வசனந்துவக்கி யாண்டவர் தேவ மாதாதி ருவயிற் றவதரித்தவுடனே தேவமாதா - எலி சபேத்தண்டைக்குப் போ யவள் கருப்பத்திலிரு ந்த ஸ்நாபக - அருளப்பர்புதுமையாகச் சென் மப்பாவந்தீர்ந்துதேர்ந்தவுணர்வு மடைந்துதா ய்வயிற்றிற் குதித்துக்கூடினவகையா லாண்டவ ரையுந் தேவமா தாவையும் வணங்கித்துதித்தா ர். அப்பொழு தெலிசபேத்துத் தேவமாதாவை ப்புகழ்ந்து ஸ்திரீசனங்களுக்குள்ளே யாசிர்வதி க்கப்பட்டவள் - நீரோ யென்றபின்பு நீரொன்னை மி னவினசத்தமே யென்காதில் விழுந்தவுடனே யென்வயிற்றுள்ளபிள்ளை மகிழ்ச்சிமிகுதியாற்கு தித்ததென்றுள். ஆகையாற் சேசுநாதர் தாம்பு துமைசெய்யுமுன்னே தம் மாதா புதுமைசெய்ய த்திருவுளமானர். பின்பு சொன்னகலியாணத்தி ற் ருமுதற்புதுமை செய்யும்போது தேவமாதா வை யுத்தேசித்துச் செய்தாரல்லோ.

௩௫. மீளவு மிதுவதிகமாய் வெளியாகும்படிக் கியோசிக்கவேண்டியதாவது புதுமையானதுசு பாவமுறையைக்கடந்தசெய்கையாகையாலதனை முடிக்க வளவிறந்த பலமேவேண்டிய தொழிய வதனைச் செய்யத்துணிவதற்கு மிகுந்ததயை யே வேண்டியிருக்கிறது-ஆகையிற் சொன்னக லியாணத்துச் சம்பவித்த புதுமைசெய்யச் சேசு நாதருக்களவிறந்த பலமிருந்தாலு மின்னந்தம துகாலம்வரவில்லையென்றதனு லதனைச்செய்யத் துணிவதற்குக் குறித்ததந்தயையினேரமில்லாதி ருந்ததாம். இல்லாதாயினுந் தேவமாதா தயை முந்தினதனுல் - அவள்-தயைக்கொண்டு துணிந் து தம் பலங்கொண்டுபுதுமையைமுடித்தார். ஆ கையா லருளப்பரிடத்திலான புதுமையைத் தன்

றிருக்குமாரன் பலத்தைக்கொண்டு தேவமாதா முடித்தாள். கலியாணத்திலான புதுமையைத் தேவமாதாவின் றயையைக்கொண்டு திருக்குமாரன் முடித்தார். இதெல்லாமாகையிற் சேசுநாதர் நடத்தின முறையினுல் நம்மைப் படிப்பித்தாவது- உயிருடலிரண்டும்பிழைக்க வேண்டின யாவையுந் தப்பாதடைவதற்காசையுடையீராகில்-நம்மைக்கன்னிகெடாம லீன்றதாயையண்டியவளைவேண்டிக்கொள்ளக்கடவீர்களாக.அவளுமுங்கள் வேண்டுதலைக்கேட்டிரங்கிஞளாகி லவ ளிரக்கத்தை மறுக்கமாட்டாமல்-தாமும்புதுமை வேண்டினும் புதுமையேசெய் துங்களை யிரட்சிப்போமென்றாற்போல வாக்குதென்று சலஞ்சாதியாமற் சொன்னதை யாராய்ந்த யாவர்க்குந் தோன்றுமென்பதற் கையமில்லை.

௩௬. இதுவேயுச்சிப்பகலினும் விளக்கமாகும்படிக் கோருவமையாலதனை வெளிப்படுத்துவோம். அதாவது-இராசாவானவ னொருவன்மேல்-மிகவுநட்புவைத்தமையா லவனையெவராலு மெங்கும்வணங்கப்பட்டு விளங்கச்செய்வதற் குபாயமென்னவென்று நெடுநா ளாராய்ந்த பின்பு கொலுவில்வந்த நேரமெல்லா மிராசாவவனையழைத்துக் காதிற்சிலசெய்திகளைச் சொல்லவு மவனைக்கொண்டு சிலர்க்குவரிசைசெய்யவு மவன்கேட்டமன்றாட்டை மறுக்கமாட்டாதருளவுந் துவக்கிஞன்-இதனைக்கண்டயாவரு மிராசாவவன்மேல்வைத்தநட்பறிந்து - அவனைவணங்கவுந் தமக்குவேண்டி யவனேயிராசாவை மன்றாடச்சொல்லவுஞ் செய்தார்கள், அவ்வண்ணமே சேசுநாதர் தாம் புதுமைசெய்யுமுன்னே தேவமாதாவைக்கொண்டு செய்வித்ததுந்தாமேசெய்தமுத

ற்புதுமை தேவமாதாவார்த்தையை மறுக்கமா ட்டாமற்செய்ததுங் கண்டமையாற் சேசுநாதர் நோக்கத்தையறிந்துதிருச்சபை தேவமாதாவை வணங்கவும்-நமக்காக வவளாண்டவரை வேண்டு ம்படிக்கு மன்றாடவுங் கற்பித்தமுறையே வேதத் திற்கொத்த முறையென்னத்தகுமே. இதிப்படியா கையிற் றேவமாதா விரசமில்லையென்பதற் குமு க்குநமக்குங் காரியமென்னவென்று சேசுநாதர் சொன்னதற் கர்த்தமேதெனிற் பிறர்செய்யுங் க லியாணத்திரசமில்லாதிருந்தாலு மதுநமக்குங் காரியமல்ல வுமக்குங்காரியமல்லவென்றுகாண்பி த்தார். காண்பித்தாலுமவர்களைப்பற்றி நமக்கதி லே காரியமில்லாதாயினு நீர்மன்றாடினதனுற்பு துமைசெய்வோமென்றாற்போற்செய்தார்.

௩௭. இதிலே பதிதர் சுவிசேஷத்தைத்தமிழா கத் திருப்பினவிடத்து உனக்கென்னுடனே காரி யமென்னவென் றெழுதிவைத்தார்கள். ஆகிலு மிது தப்பிதந்தானே. லத்தீன்பாஷையில் ( *mihi et tibi* ) மிக்கியேத்திபி யிருக்க விரண்டுங் குவ் வென்னு நான்காம்வேற்றுமை யாகையில்-நமக் கு முமக்குமென்றர்த்தமாகும். ஆகிலுமுனக்கென் னுடனே யென்று பதிதர் தமதக்கியானத்தை யூ ன்றத்தப்பிதமாய் வைத்தவசன மொத்துக்கொ ண்டாலும் - ஸ்திரீயே நம்மோடொத்ததா யும க்கிதிலே காரியமில்லை. ஆகிலு நீர்மன்றாடினதை மறுக்கமாட்டோமென்றாற்போல வாக்கிதென் க. மீளவுமத்தரவாயிலே சேசுநாதர் தாயேயெ ன்னுமல் - ஸ்திரீயே நமக்குமுமக்குங் காரியமெ ன்னவென்றதிலே வேறொரு திவ்வியசூழ்ச்சியுண் டென்றறியக்கடவீர்கள். அதேதெனிற் கண்ணு க்குத்தோன்றின மனுஷித்துவமன்றித் தமக்குத்

தேவத்துவ முண்டென்றெல்லாருமநுசரிக்கவேண்டியிருக்கையிற் புதிதாய்க்கூட்டினசிஷர்க்களுக்கதனை யொப்பிக்கச் சேசுநாதர்நீர் நமக்குத்தாயாகிந் தந்த மனுஷ சுபாவத்தைக்கொண் டிப்புதுமைசெய்யக் கூடாமையால் — நீரிதிலே நமக்குத் தாயல்லவென்றாற்போற் றாயேயென்னமல் ஸ்திரீயேயென்றார். பின்புமனுஷசுபாவத்தைத் தமக்குத்தந்த தாய்பேரிற் றாம்வைத்த பக்ஷத்தைக்காட்ட வவள்வார்த்தையை மறுக்கமாட்டாமற் சொன்னபடி தேவசுபாவத்தைக்கொண் டப்புதுமைசெய்தார். ஆகையாலிந்த வர்த்தமானத்தை நன்றாய்ப்பார்க்கிற் சேசுநாதர் பதிதர்சொன்னபடி தேவமாதாவார்த்தையைத் தள்ளவுமில்லை யவளுக்காராதனை விலக்கவுமில்லை யவள் வேண்டுதலை யுடனேகேட்டுச் செய்தபுதுமையாலவளையண்டி நாமெல்லோரு மன்றாடி வணங்க வேண்டுமென்று படிப்பித்தானென்பதற்குச் சந்தேகமில்லை.

## ரு-ம். அதிகாரம்.

### சொன்னவணக்கப்பழமை.

ருஅ. இற்றைவரைக்குஞ் சொன்ன யாவையுமாராய்ந்துபார்க்கில் — நாந்தேவமாதாவுக்கு மற்றமோக்ஷவாசிகளுக்குஞ் செய்யுமாராதனை வேதத்திற் கற்பிக்கப்படாதாயினும் வேதத்திற்கொத்ததா யெவர்க்குந் தோன்றப்படுமே. அதற்குப்பதிதர் நியாயத்ன்தக் காணுதபடிக்குக்கண்ணைமூடிக் கையாற்றடவினாற்போலச் சொன்னதற்குச் செவ்வேமறுமொழிசொல்லவறியாமலப்பா

லேதாண்டி யப்போஸ்தலர்மார் நாளிலேயுந் தி
ருச்சபை முதற்காலத்திலேயுமில்லாமற் கர்த்தர்
பிறந்த - ௲ - வருஷத்துக்குப்பிறகு புதிதாய்
முளைத்தவணக்க மிதாகையாலாகாதென்று சாதி
க்கிறார்கள். ஆகிலுங்கர்த்தர்பிறந்த - ௲௫௱௰௭ -
வருஷத்துக்குப்பிறகு லுத்தேர்மத முளைத்ததா
னாலு மதனைத் தாமெய்யென் றநுசரிப்பானேன்.

௫௬. ஆகிலு மிதிலே தெளிவாகும்படிக்குப் ப
திதர் சொன்னதை யறியக்கடவீர்கள். லுத்தேர்
சீஷர்களுங் கல்வீன்சீஷர்களும் பிதற்றினவப
த்தமேதெனில்-கர்த்தர்திருவவதாரஞ் செய்து
பிறந்த - ௲ - வருஷமட்டுந் திருச்சபைவழு
வாமுறையோடே விளங்கினபின்பு முழுதுங்கெ
ட்டழிந்து-ஆயிரம்வருஷமு மழிவாகக்கிடந்தது க
ர்த்தர்பிறந்த - ௲௫௱௰௭-ம். வருஷம் லுத்தேர்
சகலபாவத்தோடெழுப்பின துர்ச்சமயத்தைக்
கொண்டு திருச்சபை மீளவும் விளங்கத்துவக்கி
னதென்பார்கள். ஆகையா லந்தமுதல் - ௲ -வ
ருஷத்திலே திருச்சபையிலே வழங்கினதுமாத்தி
ரமே மெய்யென்று மாண்டவரருளிச்செய்தவே
தத்திற்கொத்ததென்றுஞ் சொல்லவேண்டுமொ
ழியப் பின்புபுதிதாய்வழங்கின முறையெல்லா ம
பத்தமென்று மக்கியானமென்றுமிக்காலத்துப் ப
திதரெல்லாருஞ்சொல்லுகிறார்கள். விலைமாதர்மு
கத்தோடிகழ்ச்சிக்கஞ்சாமற் பிதற்றி வெட்கமில்
லாமற்பதிதர்சொல்லுமிந்தத்தப்பறையின்மேல்
-மறுத்துநெருப்பிற்போட்ட கள்ளப்பொன் னழி
வதுபோலநாஞ்சொல்லத்தகுநியாயத்தாலவர்க
ள்-தப்பறையெல்லா மழிந்து சத்தியவேதமுறை
மைசெம்பொன்னாக விளங்கச்செய்வோம். இங்கே
யோவெனிற்பதிதர்சொன்னதைக்கொண்டேபதித

ணாக்குத்தி யெளிதாய்வெல்வதற்கவர்கள்பிதற்றி
னதப்பறைமெய்யாகவொத்துக்கொண்டதுபோ
லப்பேசி முதல் - ௫௱ - வருஷத்திலேதானே தி
ருச்சபையில்வழங்கின முறைமைமாத்திரம் வே
தத்திற்கொத்தமுறைமையென்றுமக்காலத்தி
லேதானே தேவமாதா வாராதனையுமோக்ஷவா
சிகள்வணக்கமும் வழங்கினதென்று நாமேயொ
ப்பித்தாலதனைப்பதிதருமொத்துக்கொண்டு பு
திதாய்முளைத்த முறையென்னுமற் பழையவேத
முறைமை யென்றெப்பித்தாற்போ லாகுமல்
லோ.

௪௰. ஆகையாற் சேசுநாதர் பிறந்த - ௫௱ -
வருஷத்துக்குள்ளாக விளங்கினவேதபாரகரிந்
தவிஷயத்திலே யெழுதிவைத்ததைச் சொல்லிக்
காட்டுவோம். நெஸ்தோரியுஸென்பவன் சொ
ன்னபலவபத்தங்களுக்குள்ளே சேசுநாதனை யீ
ன்றபரமதாயைச் சர்வேசுரனுடைய மாதாவெ
ன்று சொல்லக்கூடாதென்றான். அதனைமறுக்க
வேண்டுமென்றமையால் - அர்ச் - பாப்புசெலெ
ஸதீனென்பவருத்தாரத்தின்படியே யெபெசியெ
ன்னுநகரிடத்து - ௪௱௩௰௧-ம். ஆண்டில் - ஆனி
மீ - ௨௨ - ம். தேதியிற் பல வேதபாரகரோ
டே யிருநூறுமேற்றிராணியார்களுங்கூடி நெ
ஸதோரியுஸென்பவன் சொன்ன வபத்தங்களை
வேதத்திற்கேற்காததென்று சபித்துச் சேசுநா
தர்தாயைச் சர்வேசுரனுடையதாயென்றுந்தே
வமாதாவென்றுஞ் சொல்லக்கட்டளை யிட்டார்க
ள். மீளவும்-நெஸதோரியுஸென்பவன் சொன்
னதூஷணத்துக்கெதிராகத் தேவதாயை யுலக
மெல்லாம் விசேஷமாயெப்போதுந் துதிக்கும்ப
டிக்குத் திருவவதாரநாளிற் சம்மனசுவாயினாற்

றுவக்கின பிறியதத்தமந்திர முடித்துக்கட்டளை யிட்டார்கள். அதிலேபிறியதத்தத்தினாலேபூரண மரியாயேவாழ்க - * கர்த்தரும்முடனே பெண் சாதிகளுக்குள்ளே யாசிர்வதிக்கப்பட்டவள் - நீரே- என்கிறமட்டுங் கபிறியேலென்னுஞ் சம்மனசுசொன்னமங்களம் - மீளவும்பெண்சாதிகளுக்குள்ளே யாசிர்வதிக்கப்பட்டவளு நீரே - உம்முடைய திருவயிற்றின் கனியாகியசேசு - ஆசிர்வதிக்கப்பட்டவருமாமே யென்கிறமட்டும்- எலிசபேத்தம்மாள் சொன்னமங்களம் - அர்ச்.-மரியாயேசர்வேசுரனுடைய மாதாவே பாவிகளாயிருக்கிற வெங்களுக்காக விப்பொழுது மெங்கள்-மரணநேரத்திலும் வேண்டிக்கொள்ளு மென்று முன்சொன்ன திருச்சபை யன்று கட்டளையிட்ட மங்களமாக மந்திரமுடிந்ததாமே. ஆகையால் - தேவமாதாவுக்குத் தோத்திரமாகிய விந்தமந்திரத்தைத் தேவமாதாவைப்பகைத்தவிந்நாட்பதிதரு மறுத்தாலும் - ௬௱௬௰௩-ம். ஆண்டி லவர்கள்சொன்னபடி வழுவாதிருந்த திருச்சபை கட்டளையிட்டதென்று மப்போதுதானே தேவமாதாவை வணங்கினமுறையு மவளை நமக்காக வேண்டிக்கொள்ளச்சொல்லி மன்றுடின முறையும் வழங்கினதென்றுஞ் சொல்லியதனால் தேவமாதாவணக்கம்வழுவாததிருச்சபை முறைமையென்றுபதிதருஞ்சொல்லக்கடவார்கள்.

௩௩. மீளவுங் கர்த்தர்பிறந்த - ௪௱௩௰-ம்.வருஷித்து மரணத்தையடைந்த - அர்ச்.-அகுஸ்தீனுண்டாக்கின தியானப்புஸ்தகத்து - ௨௩-ம். அதிகாரத்தெழுதினதாவது: சகல-அர்ச்சியசிஷ்

* இதுவேதேவவாக்கியத்தி னர்த்தத்திருச் சரியென்கிறதற்குப் பச்சிமகாண்டம் - ௭-ம். இலம்பகமத்தாட்சி.

டவர்களே நீங்கள் பாக்கியமுடையீர்களே யழிவு
ள்ளவிவ்வுல கென்னும் பெருங்கடற்கடந்து நிலை
யுஞ்சுகமு மன்பும்வழங்கின மோக்ஷக் கரையிற்
சேரப் பேறுபெற்றடைந்தீர்களே நீங்களேயச்
சமின்றி யலைவின்றி யெக்காலத்துங் களிப்பவு ம
கிழவுஞ்செய்வீர்கள். ஆகையால்-நானிங்கேயுங்
களை யெல்லாரையுமன்றுடி யுங்களுக்கச்சமில்லா
மையி லஞ்சினவெங்களைப் பாதுகாக்கவு மழியா
தபேரின்ப பாக்கியமுங்களுக்குக்குறையமாட்டா
மையில்-நாங்களடைந்த பலதுன்பநிர்ப்பாக்கிய
ங்களுக்கிரங்கி யெங்களைக்காக்கவு முங்களைவேண்
டிக்கொள்ளுகிறேன். உங்களைத் தெரிந்தவருமா
யுங்களைமோக்ஷவாசிகளாகச் சேர்த்தினவருமா
யித் தம்மழகியபேரின்பத்தால்-நிரப்பினவருமா
யித் தந்நிலையினால்-நன்மையினிறுத்தினவருமா
யித் தந்தரிசனத்தினால் வாழ்வித்தவருமா யிரு
க்கிறநாதர் திருமுகத்தைப்பார்த்து நீங்களெங்
களுக்கிரங்க மன்றுடுவேன். பூவுலகாகியகடலின்
றுன்ப வலையினுள்ளலையுமெங்களை நினைக்கவுமெ
ங்களுக்குதவியாகவுஞ் செய்வீர்கள். இடைவிடா
மலு முடிவில்லாமலுந் துயரிலமிழ்ந்தின பாவிக
ளாயிருக்கிற வெங்களுக்காக வாண்டவரை வே
ண்டவு மன்றாடவுங் கடவீர்களென்றார். மீளவும
திலேதானே - ௬௰-ம். அதிகாரத் தெழுதினதா
வ துமாசில்லாக்கன்னியுமாய்அர்ச்.-தேவமாதா
வுமாய்-என்னாண்டவராகியசேசுகிறீஸ்துவையீ
ன்றதாயுமாயிருக்கிற-அர்ச். - மரியாயென்பவ
ளே யாண்டவருக்குத் தேவாலயமாக நின்றவ
ளாகி யவளையெங்களுக்கு வேண்டிமன்றாடத்த
யைபுரிந்தருளவும். அர்ச்.- மிக்கயேலே கபிரியே
லே - இரபயேலே மற்றச்சம்மனசுசபைகளே பி

தாக்களே தீர்க்கதரிசிகளே—அப்போஸ்தலரோ சு
விசேஷிகளோ வேதசாட்சிகளே துதிக்கிறவர்களே
குருக்களே சந்நியாசிகளே கன்னிகளே சகலமோ
க்ஷவாசிகளேயுங்களைத்தெரிந்து மோக்ஷத்திலே
பேரின்பதரிசனத்தாலுங்களைவாழ்விக்கும்—நாத
ர்திருமுகத்தைப்பார்த்தென்மேலிரங்கியாண்ட
வரையெனக்குவேண்டிக்கொள்ள வேண்டுமென்
று வேண்டிக்கொள்ளுகிறேனென்று — அர்ச்.—
அகுஸ்தீனு—எழுதிவைத்தார்.

௪௨. இவருக்குமுன்னே — ௪௱௨௰—ம். ஆண்டி
லிறந்த — அர்ச்.—எரோணிமுஸென்கிறவர் கன்
னி — எவுஸ்தோக்கியென்பவளுக் கெழுதின—௨௭
—ம். நிருபத்து — ௰௪—ம். அதிகாரத்தில்— முன்னி
றந்த பாவுல்வென்பவளை நோக்கிச் சொன்னதா
வது: பாவுலவென்பவளே வாழ வுன்னை வணங்
கின வடியோர்க்குள்ள தளர்ந்தமுப்பினை யுன்
வேண்டுதலினாற் காப்பாயாக. நீதளராமற்றெளிந்
துபிடித்தவிசுவாசமும் வழுவாமல்நடந்து செய்
த தருமங்களுமுன்னைச்சேசுகிறீஸ்துவோடே சே
ர்த்தினதாகையிலங்கே யாண்டவரைமுகமுகமா
ய்க்கண்டு நீகேட்டமன்றாட்டை யெளிதாயடை
வாயென்றார். மீளவு மிவருக்குமுன்னே — ௪௱௭
—ம். வருஷத்திலிறந்த — அர்ச்.— யுவான்கிரிசோ
ஸ்தொமூஸென்பவர் — அர்ச்.—சின்னப்பர் கொரி
ந்தியாருக்கெழுதின — ௨—ம். நிருபத்துக்குவியா
க்கியானம்பண்ணின புஸ்தகத்தில் — ௨௯—ம். பிர
சங்கத்து முடிவிலெழுதினதாவது சிலுவையில
றையுண்டவர்க் கடிமைகளாகிய—அர்ச்.—இராயப்
பர் சின்னப்பரிவர்கள்—திருமேனிவைத்தகல்லறை
சேவிக்கவருங் கூட்டத்திலரசர்வாழு மணிய
ரமனையினும் விளங்கினதல்லோ. பூஷணமணித்

து முடியைச்சூடினவர்களும் – நெடுவழிநடந்து சென்று கீழேவிழுந்து–இந்த வர்ச்சியசிஷ்டவர்களைத்தமக்குவேண்டி யாண்டவரை மன்றாடச்சொல்லிப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறார்கள். தொழிற்செய்துயிர்பிழைத்திருந்த – அர்ச்.–சின்னப்பரு மிராயப்பரு மிறந்தபின்பு தமக்குதவியாகும்படிக்குக் கிரீடஞ்சூடி யாள்பவர்கள்–முதலாய் மன்றாடுகிறார்களென்றார்.

௬௩. மீளவுமதற்குமுன்னே – ௲௪௱௩௰ – ம்.வருஷித்து – இறந்த – அர்ச்.– அம்புறோசியென்பவர் கைம்பெண் முறைமையென்னும் புஸ்தகத்தெழுதினதாவது – ஆண்டவர் நமக்குதவியாகக்கட்டளையிட்ட சம்மனசுகளை நமக்காகவேண்டும்படிக்கு நாமேவேண்டிக்கொள்ளக்கடவோம். நமக்குதவுவானொன்றைடமானமாக விங்கேதந்திரு மேனியை வைத்தவேதசாட்சிகளையு மன்றாடக்கடவோம். தாங்குறையேதாகிலுஞ் செய்திருந்தாலு மதுகளைத்தாங்கள் சித்தினவிரத்தத்தினற்கழுவினவராகையி லவர்களே நம்முடைய பாவங்களைத் தீர்ப்பதற்காண்டவரை மன்றாடவல்லவராயிருக்கிறார்கள். தம்மிரத்தத்தைச் சிந்திச்சர்வேசுரன்வேதத்திற்குச் சாட்சியாகவிருந்தவரிவர்கள்–தாமே. தமக்குத்தலைவராக நின்றவரிவர்கள்–தாமே. நாம்–நடக்குமுறைகளைநோக்கியறிந்தவ ரிவர்கள் – தாமே. ஆகையால்–நமக்குள்ள குறைபாடுகளைத் தீர்க்க மன்றாடினவர்களாக வவர்களை யெண்ணி யெக்காலமும் பிரார்த்தித்துக்கொள்ளக் கூசவுந் தேவையில்லை யென்றார்.

௬௪. மீளவுமதற்குமுன்னே – ௲௩௱௯௰௩–ம். ஆண்டிலிறந்த – அர்ச்.– கிறகோரியுநிசெனுஸவேதசாட்சியாகிய – அர்ச்.– தேயோதோரனுக்குத்

தோத்திரமாகச்செய்த பிரசங்கத் தவனைப்பார்த்தெழுதினதாவது–இந்நாள்வரைக்குங் குறையுங்கேடுமின்றி நாங்கள்வாழ்ந்திருப்பதுன்வேண்டுதலினு லெங்களுக்குவந்த சகாயமென்று தோத்திரம்பண்ணுகிறோம் – இனிவருங்காலத்துமழிவின்றி யெங்களைக்காப்பாயாகவென்று மிகவுமன்றடுகிறோமென்றார். ௲௪௰ – ம். வருஷத்துமரித்த – அர்ச்.– கிறகோரியுநசியஞ்செனோவெனில் அர்ச்.– சிப்பிரியானுக்குத் தோத்திரப் பிரசங்கமுடிவி லெழுதினதாவது –உயரத்தினின்றுநீயே யெங்களைப்பக்ஷமாய்நோக்கி யெங்கள்வார்த்தையுஞ் செய்கையும் வழுவாதபடிக்குநடத்துவாயாகவென்றார். மீளவும்– ௲எ அ–ம். ஆண்டிலிறந்த – அர்ச்.– எப்பிரோமென்பவர் வேதசாட்சிகளைப்புகழ்ந்து சொன்னபிரசங்கத்தெழுதினதாவது இரட்சித்தநாதருக்குவேண்டி மனம்பொருந்திக்கொடிய வுபாதிகளை யநுபவித்துப் பிராணனைத்தந்த தேவபத்தியளவாக வாண்டவரோடொருப்படப் புணரப்பட்டுவாழும் வேதசாட்சிகளே தேவபத்தியாகிய திருக்கதிர்வீசுங் கிறீஸ்துவினிஷ்டப்பிரசாதமெங்க ளிருதயத்துட்புகுந்து விளங்கும்படிக்குத் துயரு மீனமு நிறைந்தபாவிகளாகிய வெங்களுக்குவேண்டிநீங்களேயாண்டவரை மன்றுடுவதற்கிரங்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோமென்றார். அதற்குமுன்னை–௨௱௬௬–ம். ஆண்டிலிறந்த நெகித்தாரியெனபவர் – அர்ச்.– தேயோதோரொன்பவனைப்புகழ்ந்து சொன்னதாவது வேதசாட்சிகளினுள் விளங்கும் பெருஞ்சுடரோ மற்ற மோக்ஷவாசிகளினுள்–மாட்சியாலுயர்ந்த திருவொளியே யாண்டவனுடைய பிரசாதமே திருச்சபைக்குறுதிக்காவலே

யெங்கள் குறைபாடுகளேயுந் தளர்ந்தவிழிவுகளே யு மறவாதவராயிடைவிடாம லெங்களுக்குவேண் டி யாண்டவரைமன்ருடச் சலிக்கவேண்டா மெ ன்ருர். மீளவும் – உஙருசு-ம். வருஷித்திறந்த-ஒ ரிசெனெனன்பவர் புலம்பலென்னும் புஸ்தகத்திலெ ழுதினதாவது நானேகீழேதெண்டனுகவிழுந்து நான்செய்தபாவத்தின் மிகுதியாற் சர்வேசுரனே மன்ருடவஞ்சியிருக்க வெனக்குதவியாகச் சகல மோக்ஷவாசிகளே வேண்டிக்கொள்ளத் தொடங் குவேன். அர்ச்சியசிஷ்டவர்களே துன்பத்தழுந்தி ன வடியேனுக் காண்டவர் தயைசெய்யும்படிக் கு நீங்களேவேண்டிக்கொள்ள வேண்டுமென்று மிகவுமனம்வருந்திக் கண்ணீர்விட்டழு துங்களே வேண்டிக்கொள்ருகிறேனென்ருர்.

சரு. குறித்தவளவு விரிந்துபெருகுமென்றுங் கேட்டவர்சலித்துவருந்துவாரொன்று மஞ்சேனு யி னித்தொகைப்பட்டவுதாரணங்களே நூறு நூ ருகக்குவித்துக்காட்டுவ தெளிதாம். ஆகிலுஞ்சொ ன்னது சால்பென்றிதிலேயாலோசிக்கக் கடவதா வது நாமிற்றைவரைக்குஞ் சொன்னதெல்லாந்தி ருவவதாரமாகி முதல் – ருா – வருஷித்துக்குள் ளே வேதபாரகரொழுதினதாம். அ ர்களெல்லா ரு மோக்ஷவாசிகள்வணக்கம் வழங்கினதாகவெழு தினர்கள். ஆகையால்–மோக்ஷவாசிகளேத் துதித் து நமக்காகவாண்டவரை மன்ருடும்படிக் கவர்க ளேவேண்டிக்கொண்டு செய்யப்படும்வணக்கமுத லைஞ்ஞூறு வருஷித்துத் திருச்சபையில் வழங்கின தாம். ஆகிலுமுதலைஞ்ஞூறு வருஷித்துத் திருச்ச பையில்வழங்கினமுறையெல்லாம்நல்லதென்றுப் பேதகத்திற்கொத்ததென்றும்பதிதருஞ்சொல்லுகி ருர்கள். ஆகையாலக்காலத்து வழங்கினமோக்ஷ

பாசிகள்வணக்கம் - நல்லதென்றும் வேதத்திற் கொத்ததென்றும் பதிதருஞ் சொல்லக்கடவார்கள். சொல்லமாட்டார்களாயின்—அவர்களைமதிகெட்டவர்களென்று மக்கிரமக்கசடனென்றுஞ் சலஞ்சாதித்தவனென்றுந் தப்பறைக்கஞ்சாதவர்களென்றும் நியாயத்தை யுதைத்தவர்களென்றுந் தமக்குத்தாங் கண்ணைப் பிடுங்கின குருடனென்று மக்கியானிகளென்றும் வஞ்சகனென்றுஞ் சகலபாவத் தமிழ்ந்தினவனென்று முலகமெல்லாஞ் சொல்லக் கடவதாமல்லோ.

ஐந்தாமதிகார முற்றிற்று.

## ௬-ம். அதிகாரம்.

### சுரூபவணக்கவிளக்கம்.

௪௬. வானோர்க்கரசியாகி மனிதர்க்குறுதியாகிய பரிசுத்தகன்னியுமாய்த் தேவமாதாவுமாயிருக்கிற - அர்ச்.-மரியாயென்பவளையுமற்றமோக்ஷவாசிகளையுந் திருப்புகழாகத் துதித்து நமக்காக வாண்டவரை யவர்களேவேண்டிக்கொள்ள மன்றாடி யவர்களுக்கு நாஞ்செய்யப்படும் வணக்கமேயுத்தமமென்றும் வேதத்திற்கொத்ததென்றுத் திருச்சபையி லெப்போதும் வழங்கினதென்று மொப்பித்தாயிற்றல்லோ. இம்முகத் திழியடத்தோற்ற பதிதரப்பாலே தாண்டித் தேவமாதாவையு மற்றமோக்ஷவாசிகளையுஞ் சொன்னபடிவணங்குவது நல்லதாயினு மவர்களுருவங்களையுஞ் சேசுநாத ருருவத்தையுஞ் சிலுவைமுதலான துகளையு முண்டாக்கிவணங்குவ தக்கியானமென்பார்கள். அதற்கு மோயீசன் - ௨-ம். பு

ஸ்தகத்து-உ௰-ம். அதிகாரம்-௩-ம். வசனத்து-
ஆண்டவர் திருவுளம்பற்றினதாவது நம்மையல்
லாதே புறத்தேவர்களுனக்கில்லாதேபோவதா
க. விக்கிரகங்களையுமுருவங்களையுமுனக்குச்செய்
யாதிருப்பாயாகவென்றார். ஆகையால் விக்கிரக
ங்களையு முருவங்களையுமுண்டாக்கி யதுகளை வண
ங்குவது வேதத்திலாண்டவரால் விலக்கப்பட்ட
வக்கியானமாமேயென்று பதிதர் சொல்லுகிறார்
கள். ஆயினுமப்படியேயாண்டவர் முழுதுமுருவ
ங்களை விலக்கினுரென்று நாமுமொத்துக்கொண்
டாலு மிதனுலாவதென்ன. பழையவேதத்திலிது
விலக்கினதொழியச் சேசுநாதர்ஸ்தாபித்த திரு
ச்சபையிலும் விலக்கினதென்று சொல்லவேண்
டுமோவில்லையே. பழையவேதத்தின் மூன்றுங்க
ற்பனையாகச் சனிக்கிழமைத்திருநாளென்று வே
லைசெய்ய வாண்டவர்விலக்கியிருக்கச் சேசுநாத
ர்திருச்சபையி லிதுவிலக்கினதில்லையென்று நா
மும்பதிதருங்கூடச் சனிக்கிழமைத்திருநா ளாச
ரியாமல்-ஞாயிற்றுக்கிழமைக் கொண்டாடுகிறே
மல்லோ. பழையவேதத்திற் சனிக்கிழமைவேலை
செய்வதுபாவமாகி யிப்பொழுததுபாவமல்ல. அ
ப்படியே பழையவேதத்திற் சுரூபவணக்கம் பாவ
மாகி யிப்பொழுததுவும்பாவமல்ல. முன்சொன்
னது பதிதரு மொத்துக்கொண்டதின்மேலே பி
ன்சொன்னதுமொத்துக்கொள்ளாமலென்ன. அ
தற்கவர்க ளாண்டவர்பழையவேதத்தில் விலக்கி
ன சுரூபவணக்க மிப்பொழுதும் விலக்கினதல்ல
வென்று வேதத்திலெழுதினதெங்கேயென்றுகே
ட்கிறார்கள். ஆகிலுமாண்டவர் பழையவேதத்தி
லேவிலக்கின சனிக்கிழமைவேலை யிப்பொழுதும்
விலக்கினதல்லவென்று வேதத்தி லெழுதினதெ

ங்கேயென்று பதிதர்தாமே சொல்லக்கடவார்கள். எங்குமெழுதியிருக்கவில்லையென்று நிச்சயமாகையிற் சனிநாள்விட்டு ஞாயிற்றுக்கிழமைத்திருநாளாக நம்மோடேகூடப் பதிதருங்கொண்டாடுகிறபோது வேதத்திலெழுதியிராமலு மற்றத்திருச்சபையோடே யவர்களுஞ் சுரூபங்களைவணங்காமலென்ன. இதற்குப் பதிதர்சொல்லுந் தன்மையாவது பழையவேதத்திலாண்டவருலகமுண்டாக்கின சகாயத்தைநினைக்கும்படிக்கு ஞாயிறு துவக்கி யாறுநாளாய் வெள்ளிமட்டும் வானமுதலெல்லாவற்றையுமுண்டாக்கினபின்பு சனிக்கிழமை யவரிளைப்பாறினதுபோல மனிதருமிளைப்பாறியன்று திருநாளாகக்கொண்டாட நியாயமென்றும் பழையவேதத்திற் கற்பித்திருந்ததாம். இப்பொழுதுசேசுநாதர் நம்மையிரட்சித்த சகாயத்தைநினைக்கும்படிக்கு-அவர் நமக்காகப் பாடுபட்டுச்சிலுவையிலறையுண் டடக்கப்பட்ட மூன்றுநாள்-ஞாயிற்றுக்கிழமையிற் கல்லறைவிட் டெழுந்தருளினாரென்றும்-இஸ்பிரீத்துசாந்துவாகியசர்வேசுரன் ஞாயிற்றுக்கிழமைத் திருச்சபையிலெழுந்தருளினாரென்றும்பற்றி முன்கற்பித்திருந்த சனிநாள்விட்டு ஞாயிறு திருநாளாகக்கொண்டாட நியாயத்தின்படியே திருச்சபைகட்டளையிட்ட முறைமையென்று பதிதர் சொல்லவருகிறார்கள்-அவர்கள்சொன்னது நாமுஞ்சொல்லு நியாயந்தானே. ஆகிலுமப்படியே பழையவேதநாளிலே யரூபியாய்நின்ற சர்வேசுரனுஞ் சம்மனசுகளுமல்லாதே யுருவமுள்ளவொருவராயினு மப்போது மோக்ஷத்திலில்லாமையாலந்நாளிலே சுரூபவணக்கமாகாதென்று வேதத்தில் விலக்கப்பட்டதாமே. சேசுநாதர் திருவவதாரஞ்செய்து நம்

ணமையிரட்சித்தபின்பு-அரூபியாய் நின்றசர்வேசுர னுருவமாகிச்சர்வேசுரனுமனுஷனுமொன்றாகிய சேசுநாதரு மவளாயின்றதேவமாதாவு மட்டில் லாத வர்க்கியசிஷ்டவர்களுங் கண்டிப்புள்ளவர் களாகி மோக்ஷத்திலேவாழ்ந்திருக்கவவர்களை நாம்-நினைக்கவும் வணங்கவும் வேண்டிக்கொள்ளவு மவர்களைக்காட்டின வுருவங்களைச்செய்து முறை யோடேவணங்க நியாயத்தின்படியே திருச்சபை கட்டளையிட்ட முறைமையென்று சொல்லத்தகு மே.இந்நாளிலே ஞாயிறுதிருநாளாகவும்-உருவ ங்களைவணங்கவும் வேதத்தி லெழுதியிராமலுஞ் சேசுநாதர்-ஸ்தாபித்ததிருச்சபைகட்டளையிட்ட தனாற் சேசுநாதர்திருச்சபைக்குப்படிப்பித்த மு றையென் றெல்லாரும் விசுவசித் தநுசரிக்கக்கட வோம்.இதிலேபதிதர் நம்மோடொன்றினையொ த்துக்கொண்டபின்பு மற்றொன்றினை யொத்துக் கொள்ளமாட்டாதது சலஞ்சாதிந்தவாங்காரமல் லோ-அப்படியே லுத்தேர்முதலாய்ச் சந்தேக மில்லாமற்சொன்னான். தன்னையல்லாதேசிலபே ர்கள்-நாம்வணங்கும்-சேசுநாதர் சுரூபங்களுந் தேவமாதா மோக்ஷவாசிக ளுருவங்களுமிடித் து டைத்தழலிற் சுட்டதென்றறிந்து மிகவுமவர்களை க்கோபித்தசொதாழிய-கூ௫௨௫-ம். ஆண்டிலவர்க ளைப் பரலோகதிர்க்கதரிசிகளென்று நகைப்பாக ச்சொல்லி யவர்களுக்குவிரோதமாக வொருபுஸ் தகத்தையுண்டாக்கினான். அதை யிருவகுப்பாக ப்பிரித்து முதல்வகுப்பிலே யரூபியான சர்வேசு ரனுருவமுடையதென் றவருக்குவைத்த சுரூபங் களைமாத்திரம்பழையவேதத்திலேவிலக்கினதொ ழியக் கிறீஸ்துவின்சுரூபங்களுஞ் சிலுவையுருவமு ந் தேவமாதா மற்றமோக்ஷவாசிகள் வடிவுகளு

ம் விலக்கினதல்லவென்று மதுகளைவிலக்கினவர் யூதராகவேண்டுமொழியக் கிறீஸ்துவர்க ளல்லவென்றுஞ் சொல்லக்கடவோமென்று விரிவாகச் சொல்லியொப்பித்தான். இதோலுத்தேர் சாட்சியாகமுதலாயந்தவேதகற்பனையாற்பழைய வேதத்திலொழிய விப்போது நாம்வணங்கும்-சுரூபங்கள்விலக்கப்பட்டதல்ல.

௪௭. ஆயினுமுன்சொன்னவேதகற்பனையிலே யாண்டவர்முழுதுஞ் சுரூபங்களை விலக்கினவருமல்லவென்று நாமிங்கேயொப்பிப்போம். அதெப்படியென்று லிந்நாட்டிலென்னை யரசனல்லாதே வேறேயரசனைவணங்கவேண்டாமென் றிராசாகற்பித்தமையாற் றன்னையீன்ற பிதாவையும் படிப்பித்த வுபாத்தியையும்-அறநெறிநிறுத்தின குருவையுமற்றப்பெரியோரையும் வணங்கவிலக்கினானென்றால்-மதிகெட்டொருவன் சொல்லுந்தன்மை யாகுமல்லோ. ஆகையாற்சொன்னவேதவுதாரணத்தாற் சர்வேசுரன் விலக்கினதாவது நம்மையொழியப் பலதேவரைவணங்கவும்வேண்டாம் பலவிக்கிரகங்களையுமுருவங்களையுந் தேவர்களாகவைத்துவணங்கவும்வேண்டாமென்று விலக்கினாரொழிய முழுதுமுருவங்களை விலக்கினவரல்ல. இல்லாவிட்டா லந்தப்புஸ்தகத்திலேதானே-௨௫-ம். அதிகாரத்தெழுதப்பட்டபடி யாண்டவர்தாமேயுருவில்லாத சம்மனசுகளைக்காட்டின விருவுருவங்களைத் தூபதங்கத்தாலுண்டாக்கச்சொல்லிக் கோயிலிலே பூசைபண்ணுமிடத்துவேதமெழுதினவிருகல்லைவைத்தபேழையின்மேலே வைக்கச்சொல்லிக் கட்டளையிடுவானேன். உருவமெல்லாமக்கியானமாகி லந்தவக்கியானத்தைத் தாமேதமக்குப் பூசைவழங்

கினவிடத்து வைக்கச்சொல்லுவாரோ வில்லை
யே-ஆகையாலே தம்மையல்லாதே தேவராகவ
ணங்கத்தகு முருவங்களை விலக்கினதொழியக்
கோயிலிலேமுதலாய்ப் புறத்தேவராகவணங்கா
மல்லவத்தவுருவங்களைவிலக்கினவரல்ல. அப்படி
த்தானல்லோ-அர்ச்.- சின்னப்பர் திமோத்தேயு
வென்பவருக் கெழுதினமுதல்-திருபத்து முதல
திகாரம்-ய எ-ம், வசனத்திற்சர்வேசுரனொருவரு
க்கே சங்கையும்புகழுந் தகுமென்றார். என்றாலு
மற்றவர்க் கெவ்வகைச்சங்கையாயினுந் தகாதெ
ன்னலாமோ. தகாதெனிற் பிதாவையுமாதாவை
யுஞ் சங்கித்திருப்பாயாகவென்று நாலாங்கற்ப
னையிட்டதென்ன, எல்லாரையுஞ் சங்கிப்பீர்களா
கவென்று-அர்ச்.- இராயப்பர்-ஆ திருபத்து-உ-
ம். அதிகாரத்தில்-யஎ-ம். வசனத்தெழுதினதெ
ன்ன. ஆகையால்-அர்ச்.- சின்னப்பர்சொன்னத
ற் கர்த்தமேதெனில்-தேவசங்கையுந் தேவபுக
ழுஞ் சர்வேசுரனுக்கொழிய மற்றவொருவருக்கு
ந்தகாதென்ப தாகுமல்லாதே வேறெவ்வகை
ச்சங்கையாயினும் பிறர்க்குச் செய்யலாகாதென்
றவர் சொன்னதாகச்சொல்லவுங்கருதவுங்கூடா
து. அப்படியேதேவராகவுருவங்களை யாக்கவும்
வணங்கவும் வேண்டாமென்று சர்வேசுரன்வில
க்கினதொன்றுசொல்லவேண்டுமொழிய மற்றவெ
வ்வகையுருவங்களையுஞ் செய்யவேண்டாமென்று
மதுகளுக் கெவ்வகைவணக்கமு மிடவேண்டாமெ
ன்றும் விலக்கினதாகக்கொள்ளத் தேவையில்
லையே.

சஅ. இதெல்லாமிப்படியாகையிற் றிருச்சபை
யுருவங்களைச்செய்துவணங்கும்வகையையாண்ட
வர்விலக்கினவரல்லவென்றெண்பிப்போம். அதெ

ப்படியென்னில் - உருவங்களுக்குச்செய்த வண
க்க மதுகளைவிட்டப்பாலேநிற்கும்பொருளைச்சே
ராம லவ்வுருவங்களைச்சேர்த்ததாகி யக்கியான
ந்தானே. அவ்வுருவங்களை யடையாளமாகவைத்
துச் செய்தவணக்க மப்பாலேதாண்டிச்சேரும்
பொரு ளவ்வணக்கத்துரியதல்லவென்னிலதற்கு
ச்செய்யும் வணக்கமுமக்கியானந்தானே. ஆகை
யாலேதேவனல்லாதவனைத்தேவனுகவெண்ணி
யவனுருவத்தை வணங்கினு லக்கியானமென்ன
த்தகுமே. நாமோவெனிற் சேசுநாத ருருவை
நோக்கிச் செய்யும்வணக்க மதிலேதில்லாமலவ்வு
ருவடையாளமாத்திரமாகக் காட்டினநாதரை
ச்சேருதலினுலுஞ் சிலுவைக்குச் செய்த வணக்க
முஞ் சிலுவையில்-நில்லாமல்-நமக்குவேண்டிச்
சிலுவையி லறையுண்டிறந்த நாதரைச்சேருதலி
னுலுமுதல்வகை யக்கியானமில்லை. மீளவுஞ்சேசு
நாதர் மெய்யானதேவனுகையி லவ்வுருவங்களுக்
கு நாம்-செய்யுந்தேவவணக்க மவருக்குரியதா
கக்கொள்ள விரண்டாம்வகை யக்கியானமுமில்
லை. அப்படியேதேவமாதாவையுமற்ற மோக்ஷவா
சிகளையுங்குறித்து வைத்தவுருவங்களை வணங்கி
னபோது மதுகளை யடையாளமாகமாத்திர மெ
ண்ணுவதொழியத் தேவவணக்கஞ் செய்யாமற்
போனவதிகாரத்திற் சொன்னபடியே தேவமா
தாவுக்குரிய வுத்தமாராதனையு மற்றமோக்ஷவா
சிகளுக்குரிய வணக்கமுமாத்திரஞ்செய்தமையா
லிருவகையக்கியானமுமில்லை. இதுவின்னம் வெ
ளியாகும்படிக்கு நாம்-தற்கருணையை வணங்கு
முறையைப் பார்க்கக்கடவோம். அதெப்படியெ
ன்றுல்-திவ்வியநற்கருணையை நாமும்வணங்கும்
போது-அதுவேசேசுநாதரென் றுவணங்குகிறு

மல்லோ. அப்படியே சேசுநாதர்சுருபங்களையு மவர்தாமென்று வணங்கிறோமாகி லக்கியானந் தானே. நாமோவெனில்-நற்கருணை சேசுநாதருக் கடையாளமாத்திரமாகாம லவர்தாமங்கே யிருப்பவரொன்று நிச்சயமாகச் சொல்லுவதொழியச் சேசுநாதர்சுருபங்க ளவரல்லவாகி யவரைக்காட்டுமடையாளமாத்திரமென்று ஸ்திரமாயெண்ணிவைத்த சுருபங்களாற் சேசுநாதனை நினைத்து-அந்தச்சுருபங்களில்- தில்லாமலவரைவணங்குகிறோமல்லோ.இத்தன்மையா லூரியமுறையோர் மற்றச்சுருபங்களை வணங்கினதிறைற் றிருச்ச(...)கட்டளையிட்டமுறையில்-நாம்வைத்த சுருபங்களைக்குறித்துச் செய்யும்வணக்க மாண்டவரால் விலக்கப்பட்ட விக்கிரகவணக்கமல்ல. மீளவுமடையாளமாகவைத்த வுருவங்களை நாம்வணங்கும்போது மனிதர்கையாற் செய்யப்பட்டபொருளை வணங்குவோமென்றும் பொன்வெள்ளிசெம்புமரமென் றிதுகளை வணங்குவோமென்றுஞ் சொல்லவுங்கருதவுங்கூடாது.

சகூ. உருவங்களைச்செய்து வணங்கும்படிக்குத் திருச்சபையில்வழங்கின முறையினியாயமோவெனிற் செய்தவுருவங்களைக்கண் டனைவருமவ்வுருவங்க ளடையாளமாகக்காட்டின சேசுநாதனுந்தேவமாதாவு மற்றமோக்ஷவாசிகளு நன்னெறிவழுவாமற் செய்ததருமங்களை நினைத்து நாமுமொத்தநெறியிற் போகத்துணிவதற் குபாயமாக வழங்கினமுறைமையாகும். உருவங்களேஎழுத்துவாசனை யறியாதவரும் வாசிக்கத்தகு மொருபுஸ்தகமாமே. ஒருபார்வையினல்-முழுதும்வாசிக்கத்தகும் வேதநூலாமே. மீளவுமதிலேயொருபார்வையினற் பலவையு மொருப்பட வறிவ

தொழியக் காதாற்கேட்டுணர்தலினுங் கண்ணு
ற்கண்டறிவ துறுதியாமே. அப்படியல்லோ கண்
ணாற்கண்டதின்முன்னே காதாற்கேட்டது நில்
லாதென்பார்-அப்படியல்லோ-அவனவன் வாய்
மொழியாற் காதிற்குணர்த்தின தொழிலைத்தாம
தைச்செய்து கையாற்கண்ணுக்குக் காட்டுவார்.
அப்படியல்லோ பாடுபட்ட கர்த்தர்சுரூபத்தைக்
கண்டவளவிற் பரலோகத்தையும் பூலோகத்தை
யுமுளவாக்கின சுவாமியெம்மேலிரங்கி மனிதனா
ய்ப்பிறந் தெளியனாய்த்திரிந்து நம்மாலாற்று
த வெம்பாவவினைகளைத்தீர்ப்ப வதுகளைத்தம்மே
ற்போட்டுக்கொண்டு நம்மையிரட்சித்துப் பரம
கதிமோக்ஷவாசலைத்திறந்து நாமங்கேயென்றெ
ன்றைக்கும் வாழும்பொருட்டுத்தாமடிபட்டு நிந்
தைப்பட்டு முண்முடிசூடித் தாமேசுமந்த நெடு
ஞ்சிலுவையின்மேலே பேரிருப்பாணிகளினாலறை
யுண் டிரத்தமுஞ்சிந்தி யுயிருந்தந்துகொடியம
ரணத்தை மனம்பொருந்தியடைந்தாரென் றொ
ருபார்வையாகக் கண்டறிந்து நமக்குமனநொந்
துருகவு மவர்மேலிரங்கிவருந்தவும் பாவங்களை
யொழித்து வெறுப்பவுந் திறந்தமோக்ஷவிராச்
சியத்திற்செல்லத் துணியவுமுறுதியாகுமல்லோ.
அவ்வண்ணமே தேவமாதாவையு மற்றமோக்ஷ
வாசிகளையுங்குறித் தடையாளமாகவைத்தபல சு
ரூபங்களைக் கண்டவளவிற் கண்வழியுறுதியுணர்
ச்சியாகித் தெளிநினைவெழும்பி யவர்கள்கொண்
டபொறுமையா லெமது கோபமாறவு மவர்கள்கா
ட்டின தாழ்ச்சியா லெமதாங்காரந்தணியவு ம
வர்கள்-முடித்ததவத்தா லெமதுகாமமொழியவு
மவர்கள் - நடந்தவறத்தினொழுக்கத்தா லெமது
பாவந்தவிர்ந்து தேயவுமுதவுமல்லோ. அப்படி

யே-அர்ச்.-யுவான்குவால்பேர்த்தென்பவர் தன்றம்பியைக்கொன்ற பகையாளியைத்தனியேகண்டு-அவனைக்கொல்லக்கையையோங்கினவளவி லவன் விரித்தகையாற்காட்டின சிலுவையினுடையாளங்கண்டுதம்பாவத்தைத்தப்பொறுப்பச்சேசுநாதர்சிலுவையி லறையுண்டிறந்ததை நினைத்துத் தாமும்பகையைவிட்டுப் பகைவனைத் தம்பியாகக் கட்டிக்கொண்டார். அதன்பின்பு கோயிற்புகுந்து பாடுபட்ட கர்த்தர்சுரூபத்தைத் தெண்டனாக வணங்கும்போது நீநமக்குப்பிரியமாக நன்றாய்ச் செய்தாயென்றாற்போலச் சேசுநாதர்சுரூபந் தலைகுனிந்து தம்மையின்பமாக நோக்கக்கண்டார். கண்டமாத்திரத் துள்ளத்துருகி வேறுகியுலக செல்வங்களைவெறுத்துச்சந்நியாசம்பண்ணி-அர்ச்சியசிஷ்டவரானார். அப்படியே வேறொருவன்-நெடுநாளாசைவைத்த ஸ்திரீ யுடன்பட்டு நடுச்சாமத் தவளண்டைக்குப்போய்ப் பலநாளுட்பற்றியெரிந்தவாசையாற் பாவத்துக் கமையும்போது-அவள்-மார்பி லணிந்து தொங்கின பாடுபட்டகர்த்தர்சுரூபத்தைக்கண்டஞ்சி யென்னாண்டவர்பாவங்களையொழிப்பச் சிலுவையி லறையுண்டிறப்ப நானீசச்சுகத்தைவிரும்பிப் பாவமின்பமென்று முடிப்பவோவென்று தேறி யவளைத்தீண்டாமற்போய் நெடுநாளருந்தவமுடித்தான். இத்தொலைப்பட்ட வர்த்தமானங்க ளாயிரமுண்டாயினு மதுகளைவிட்டு-அக்கியானியாய்ப் பாவத்தமிழ்ந்தின வுணர்வினளாயுயிரு நாணமுமுடலும் விற்றுக்கொள்ளும்பாவத்தாற் பிழைத்தவளாய்வேசியொருத்தி தன்றொழில்-முடிப்பப்போகையிற் பெரிதோர்படத்திலெழுதப்பட்ட வொருஞானியாகிய போலேமோனென்பவன் றன்னை

ச்சினைந்துபார்த்த பாவனையாகக் கண்டவுடனே
பொருளாசையுங் காமத்தாசையுமாறி மனதிற்
குளிர்ந்துவெட்கி நினைத்ததின்மையை முடியா
மற்போனாள். இதெல்லாமப்படியாகையிற் சேசு
நாதனாயு மவர்திருமாதாவையு மற்ற-அர்ச்சிய
சிஷ்டவர்களையுங் காட்டின வடையாளச்சுரூபங்
களை வடிவோடுண்டாக்கி யெவரும்வாசிக்கத்தகு
ந் தேவநூலாகவைத்தமுறையி னுத்தமநியாய
மாமே யிதனுலெவர்க்குந் தோன்றுமென்பதற்
குச்சந்தேகமில்லை. இதனை லூத்தேர்முதலா
னோர் ரோமான்றிருச்சபையைத் தோஷஞ்செய்து
ப்த் தனிப்பூசைவிலக்க வெழுதினபுஸ்தகத்தில்-
கூருசு-ம். ஆண்டிற்றானே யுரோமான்றிருச்
சபையினின்று பிரிந்த பதினேழு வருஷமாகிச்
சொன்னதாவது-உரோமான்றிருச்சபைமெய்யா
னதிருச்சபையென்றுஞ் சத்தியத்தைத்தாங்கின
தூணதுவேயென்றுஞ் சொன்னபின்பு சர்வே
சுரனற்புதமாகவுரோமான்றிருச்சபையிற் சில
வேதமுறைகள் வழுவாதபடிக்குக் காத்துக்கொ
ண்டிருந்தாரொன் றதுகளையெண்ணி ஞானஸ்நா
ன முதற்பலவுஞ்சொன்னதின்மேற் சாகிறவர்க
ளுக்காறுதலுமுறுதியுமாகச் சிலுவையிலறையுண்
- கர்த்தர்சுரூபமு மதற்கேற்றடைவர்பாடுபட்டடைந்
தமரணத்தினினைவு முத்தமமுறையாக வுரோமா
ன்றிருச்சபையி லாண்டவர்தாமே காத்துநிறுத்
தினாரொன்றெழுதினான். இதனைப்பற்றி லூத்தேர்
செத்து மூன்றுவருஷமாகி-கூருசகூ-ம். ஆண்டி
லவன்வீற்றிருந்த விராசதானியாகிய வித்தெம்
பேற்க்நகரி லவன்சீஷர்க்களே லூத்தேரெழுதின
தெல்லாஞ்சேர்த் தொருப்பட வச்சிலே பதித்து
மூகத்திலே லூத்தேருமவனையாதரித்த சக்சோனி

யதுரையு மொருபெருஞ்சிலுவையிற் பாடுபட்டக
ர்த்தர்சுரூபத்தின்முன்னே கைகூப்பிமுழங்காலி
லிருக்க வெழுதிவைத்தார்கள். இந்தவகைச் சுரூ
பத்தை நெடுநாளைக்குப்பிறகு லுத்தேரானிகளி
லொருத்தனுக்குக்காட்டினபோது லுத்தேரானி
கள் செய்வித்ததென்றுகண்டு மிகவு மதிசயப்பட்
டபின்பு லுத்தேர்முதலாய்ச்சுரூபங்களைவணங்கி
னபாவனை யெழுதித்தந்து பிறகுசுரூபங்களைவண
ங்குவ தக்கியானமென்று லுத்தேரானிகள்-மன
துரையேய்க்கப்படிப்பிக்கிறார்களோ-இதிலே நம்
மையேய்த்தபடி மற்றமுறைகளிலேயு நம்மையே
ய்த்தவரொன் றஞ்சுவதுநியாயமல்லோ வென்று
லுத்தேர்மதத்தை வெறுத்துரோமான் றிருச்ச
பையுட்பட்டுத் தருமனுகநடந்தான்.

௫௯. பின்னையும் பதிதர்தாமே தம்முடையவி
ராசாவுருவையு மிறந்துபட்ட பெரியோருருவங்
களையு முளவாக்கி யதற்குரியவணக்கந்தோடேற்
றிக்கொண்டு வருகிறார்களேயிப்படிச்செய்துகொ
ண்டுவருகையிற் சர்வேசுரன்மொத்தமாய்ப்பொ
துவாய் முழுதாய்ச்சுரூபங்களையுமுருவங்களையும்
விலக்கினவரல்லவென்று தாமுஞ்சொல்லவேண்
டியிருக்குமே-ஆகையாற் பாவிகளாய்நடந்துநர
கிலென்றென்றைக்கும் வேகாநிற்கும் - சிலரைக்
காட்டினவுருவங்களைமுதலாய்ப்பதிதர்தாமேசெ
ய்வித்துப்பூச்சியத்துடனேவைத்திருக்கநாம்-சே
சுநாதரையுந்தேவமாதாவையு மோக்ஷத்தில்வாழு
மகாத்துமாக்களையுங்குறித்துச் சுரூபங்களை யு
ண்டாக்குதலேமாத்திர மாண்டவரால் விலக்கப்
பட்ட வக்கியானமென்று வெட்கமில்லாமற்சொ
ல்லுவதென்ன. பதிதர்தாந்தமக்குக்கண்ணைப்பி
டுங்கினதனுல் - மற்றவர்க்கு மொளிவிடியாதோ

வென்ன. உச்சிப்பகலினும்விளங்கின நியாயத்தை மற்றவர்க்குந் தாமேமறைப்பார்களோவென்ன. தாம்-செய்யுஞ் சுரூபவணக்கமுறையி லக்கியான மூண்டென்றுமதிகெட்டவனுஞ்சொல்லமாட்டா மற் சலஞ்சாதித்து வெட்கமில்லாமல் - நியாய மெல்லா மிதித்துதைத்தபாவிகளாகியபதிதர்மா த்திரங் கூசாமற்சொல்வார்கள். சொன்னாலுமவ ர்களுக்குள்ளவறிவீனமும்பகையகோரமுமாங்கா ரமுமிகுதியுந்தோன்றுமொழியத் திருச்சபையில் வழங்கின வுத்தமதேவமுறைக்கொரு குறைவரவ றியாதென்பது நிச்சயந்தானே.

ஆறுமதிகார முற்றிற்று.

## எ-ம். அதிகாரம்.

### சுரூபவணக்கப்பழமை.

ருக. சொல்லிக்காட்டினதன்மையோடு திருச் சபையில்வழங்கின வுத்தமமுறைமை வழுவாமல் வணங்கப்பட்ட சுரூபங்களால் - நமக்குவரு நன் மைகளை நாமிங்கே யொருங்குடன்கூட்டி விரிவா யுரைப்பது நமக்குக்கருத்துமல்ல வியலுங்கரும முமல்ல. சேசுநாதர்தேவமாதா மற்ற மோக்ஷ வாசிகளிவர்களைக் காட்டின சுரூபங்களைப் பத்தி யோடுபார்த்தோமானா லதுகளே யிருண்டவிட த்திலெறித்த பலபெருந்தீபங்களைப்போலப்பாவ த்திருள்-மண்டின பூவுலகி லொளியாய் விளங்கி னதாகவு மதுகளே தளர்ந்த வயதிலூன்றுகோ ற்போலப் பலமில்லாத நமக்குறுதியாயறத்திலே தளர்ந்தநடையைத்தாங்கினதாகவு மதுகளே க ண்ணொழிந்தவர்க்குக் கைதருங்கைகாட்டிபோ

லநல்லறிவில்லாத நம்மையுணர்த்தின தாகவு மது
துகளே நீந்துமவர்க்குவருந் தவிப்பாற்றுந் தெ
ப்பம்போல தடுவேறவழியில் - நாந்தவித்து நில்
லாதபடிக் குதவியாய்த் தேற்றினதாகவு மதுக
ளே நீர்ப்பெருக் காற்றின்றுறையைக்காட்ட நா
ட்டினவடையாளக் கோற்போல வான்கதிசேரு
ஞ்செவ்வழி மாறுமற்காட்டினதாகவுந்திருச்சபை
யில்வழங்கின சுரூபங்கள்-மனித ரெளிதாய்மோ
க்ஷக்கரை யேறுதற்குதவியெத்தனங்களுமறவழி
த்துணைகளு மாகுமென்றவனவன்றன்னிடத்திலே
யுங் கண்டுகொள்வா னல்லோ. எத்தனைமுறை
யவனவன் வணங்கும்-சுரூபங்களைக்கண்ட மாத்
திரத்துத்தான்பாவியாயிருந்தாலும் பத்திநம்பி
க்கைவிசுவாசம் பொறுமை தாழ்ச்சி தயை கொ
டையூக்கந் துணிவு மனஸ்தாபமற்றுண்டாகியசு
கிர்த புண்ணியங்களை விளைவிக்கு நினைவு மனதி
ற்கிளம்பக்கண்டு நினைத்தபாவங்களைவிட் டறஞ்
செய்ய வுறுதியாஞன். இதுவுமன்றிச் சுரூபவண
க்கத்தின லாண்டவர்செய்த புதுமைகளையெழுத
வேண்டுமாகி லெவ்வளவினலு மடங்காமலெக்க
லைவல்லவராலு முடிக்கக்கூடாமலெவர்க்குமெட்
டாத கருமமாமே. குருடர்க்குக்கண்ணு மூமைக
ட்குரையு முடவர்க்குக் காலுங்கையும் - நோயா
ளிகட் காரோக்கியமுஞ் செத்தவர்க் குயிருந்தந்
து பிடித்தபசாசுகளை யோட்டி வந்தகுறைகளை
நீக்கிக் கேட்டமன்றாட்டுகளையருளி வணங்கப்பட்
டசுரூபங்களைக்குறித் தூலகெங்கு மாண்டவரோ
யாமற் செய்துகொண்டுவருகிற புதுமைகளை நீங்
களே யறிவீர்களொழிய நாமே விரித்துச்சொல்
லத்தக்கதல்ல. மாற்றப்படாத தம்முத்திரையாகி
ய புதுமைகளா லாண்டவர் சுரூபவணக்கந் தா

மே கட்டளையிட்டமுறையென் றெப்பித்தபின்பு இன்ன மிதிலேசந்தேகப்படக் கணக்குண்டோ. ஆகிலும் பதிதர்க்கு வாயை முழுது மடைக்கவேண்டுமென்று சுரூபவணக்கப் பழமையை யிங்கேயெப்பிக்கக்கடவோம். கர்த்தர்பிறந்த - ௩௱ - வருஷமட்டுமிருந்த விராயர் சத்தியவேதத்தைப்பகைத்த கொடுமையாற் கலகக்கால யாகி யதன்பின்பு-ஆண்ட தைரியராயர்கொண்ட குஷ்டவியாதிதீரப் பலபலகுழந்தைகளைக்கொன்று -அவர்கள்குருதியிற் குளிக்கவேண்டுமென்றிருக்கையில் - அர்ச்.- இராயப்பருஞ் சின்னப்பருமிராயருக்குத்தோன்றி யொளித்திருந்த - அர்ச்.-சிலுவேஸ்திரிபாப்பென்பவரை யழைப்பித்து - அவர்கையால் - ஞானதீட்சைபெற்றால் வியாதியும் பாவமுந்திருமென்றதனு லவரையழைப்பித்துக்கண்டகாட்சியைச் சொன்னவளவில் - அர்ச்.- பாப்பு தம்மிடத்திருந்த - அர்ச்.-இராயப்பர் சின்னப்பர் சுரூபங்களைக்காட்டினமாத்திரத் திவர்களே வந்து தோன்றினர்களென்றிராயர் மகிழ்ந்து சொல்லி யதுகளைவணங்கிப்பெற்றஞானதீட்சையாலாரோக்கியமடைந்து தாமேயுரோமாபுரியிலே சேசுநாதர்சிலுவைக் கொரு கோயிலையும் - அர்ச்.- ஸ்தாபக - அருளப்பருக்கும் - அர்ச்.-இராயப்பருக்கும் - சின்னப்பருக்கும் வேறேமூன்று கோயில்களையுங் கட்டுவித்து - அவர்களுடையசுரூபங்களையங்கேபிரதிஷ்டைசெய்துவைத்தாரென்று பூர்வகாலத்திருந்தவர்களெழுதிவைத்தபடி யிந்நாளிலேயு மங்கேகண்டிருக்கிறோம். ஆகையாற் பதிதர்தாமே சொன்னபடி முதல்-௩௱ வருஷந் திருச்சபைவழுவாமல் - நடந்தகாலத்துஞ் சுரூபங்களைவைக்கவும் வணங்கவும் வழங்கி

ணமுறையாமே. மீளவும்-அர்ச்.-ஸ்நாபக-அருள ப்பருக்குத் தைரியராயர்கட்டுவித்த கோயிலை - அர்ச்.-பாப்புமந்திரிக்கும்போது சகலருங்காண வக்கோயிற் சுவரின்மேலே சேசுநாதர்சுரூபம் புதுமையாகத்தோன்றி யிந்நாள்-மட்டுமெங்கேகாணவும் வணங்கவும்படுமே. சுரூபவணக்க மக்கியானமாகி லாண்டவர்தாமே யக்கியானம்வளரும்படிக்குப் புதுமையாகச் சுரூபங்களைத் தோற்றுவிப்பானேன்.

ருஉ. ஆகிலும்க்காலத்துமாத்திரஞ்சுரூபவணக்கம் வழங்கினதல்ல - அப்போஸ்தலர்மார் நாளிலே துவக்கினதாக்கும். இந்தவிராச்சியத்தில் முந்திச் சத்தியவேதத்தைப் போதிக்கவந்த - அர்ச்.- தோமையார் கல்லிலேகொத்துவேலையாக்கிளம்பச்செய்த சிலுவையைவணங்கிக்கொண்டிருந்தாரென்று மச்சிலுவைதானே யின்னங்காஞ்சிபுரத்துக்கிழக்கிருக்கும் பெரியமலையி னுச்சிமேற் பெருவிளக்காகத்தோன்றிக் காணப்படுவதல்லோ. அச்சிலுவைதானே யெத்தனைமுறை யெல்லாருமறியப் புதுமையாய்த் தண்ணீர்வேர்வையாகவு மிரத்தவேர்வையாகவும் வேர்த்ததறிவோம் - மீளவுநாலுசுவிசேஷிங்களிலொன்றினை யெழுதின - அர்ச்.- லூக்காஸென்பவர் தங் கையாற் றேவமாதா சுரூபங்களைப் படமாகவெழுதினது முருவமாகச் செய்தது நாமே கண்டிருக்கிறதல்லாதே புதுமைகள் - மிகுதியா லெங்குஞ்சந்தேகமின்றி வழங்கின செய்தியல்லோ. மீளவும் - அர்ச்.- பெரியயாகப்பர் - இஸ்பாஞியவிராச்சியத்தி லுபதேசஞ்சொல்லிக்கொண்டு சரகோசவென்னு மாநகரிடத்திருக்கையி லுயிரோடிருந்த தேவமாதா - எருசலேம் பட்டணத்தினின்

று சம்மனசுகள்கையா லேந்தப்பட்டு நெடுநாட் பிரயாணம்பத்துநாழிகையின்முடித்திராத்தியா னத்திருந்த - அர்ச். - யாகப்பருக்குச் சூரியனொ ளியினுங் கதிர்பரப்பித் தோன்றி யிங்கேயெனக் கொருகோயிலை நீகட்டுவிக்க வாண்டவருக்குச் சித்தமாயிற்றென்று சொன்னபின் புலகில்வ ழங்காத மணியாற் சம்மனசுகள் செய்தலங்கரி த்த வொருசின்ன தூணு மதன்மேற்றன்சுரூபத் தையுஞ் சம்மனசுகளால் - ஸ்தாபிக்கச்செய்துத ந்தாளென்று பூர்வீகசாஸ்திரிக ளெழுதினூர்கள். அப்படியே - அர்ச். - யாகப்பரங்கேகட்டினகோ யிலுந் தேவமாதாதந்த தஞ்சுரூபமுமிந்நாள்வ ரைக்கும் வணங்கப்பட்டு மட்டில்லாத புதுமைக ளால் விளங்காநிற்கும். பதிதரிதெல்லாம் பொ ய்யென்பார்களோ நிந்தைக்கஞ்சாமற் பொய்யெ ன்றாலும் பூர்வகாலத்திருந்த சாஸ்திரிகளெழுதி ன செய்தியாகையா லிதெல்லாம் பொய்யாகிய காலத் துலகில் - மெய்யொன் றில்லை.

ருரு. ஆகிலுஞ் சேசுநாதர் பிறக்குமுன்னேமு தலாய்த் தேவமாதாசுரூப மாண்டவர்க்குப் பிரி யமாகவணங்கப்பட்டதென் றெப்பித்தாற் பதித ரொன்னசொல்லக்கடவார்கள் - ஆனா லக்காலத் தெழுதினவர்கள் சொன்னதைப்பார்க்கில் - எசி த்தார் பலவிடத்துத் தேவமாதா திவ்வியகுழந் தையோடு ஸ்தாபித்துவணங்கினதைவிட்டுக்கா லியவிராச்சியத்திற் சேசுநாதர் பிறக்குமுன்னே நூறுவருஷமாகச் சியராத்திரசென்னும் பட்ட ணத்துக்கோயிலைக்கட்டிக் கன்னிகெடாமற்பெறு வளென்றும் பெயரிட்டொரு வடிவுள்ளவுருவத் தையதிலேவைத்துவணங்கினூர்கள். அவர்களக்கி யானிகளாயினுந் தேவமாதா சுரூபத்துக்குச்செ

ய்தவணக்க மாண்டவர் தமக்குப் பிரியமென்று காட்ட — அச்சுரூபத்தைக்குறித்து மன்றாடினது ரையாயிருந்த மெலங்கரியாக்கனுக்குச் செத்தம கனையெழுப்பித்தந்தார். இதையும்பலபுதுமைக ளையுமறிந்து — அவர்களிராசாவாகிய பிறிஸ்கு வென்பவன் றன்முடியுஞ் செங்கோலு மச்சுரூப த்தின் பாதத்தில்வைத்துத் தேவமாதாவையந் நாட்டிற்கரசியாகக் கொண்டான். இத்தன்மைத் தாண்டவருக்குத் தோத்திரமாகவு மனிதரீடே ற்றத்துக்குதவியாகவு மெக்காலத்தும் வழங்கின சுரூபவணக்கத்தால் — நமக்குவருநன்மைவிலக்க மாட்டாத பசாசு சுரூபவணக்கம்விலக்கப்பிரயா சப்பட்டதென் றறியக்கடவீர்கள்.

௬௪. ஆகிலுமிந்நாட் பதிதரிந்தவக்கிரமமுடி க்கப் பசாசினாற் றெரிந்துகொண்ட முதலெத்த னங்களென்று தாந்தம்மைப்புகழத் தேவையில் லை. சொன்னமுறையிற் சுரூபவணக்க மெப்பொ ழுதுந் திருச்சபையில் வழங்கினதினால தன்மேற் பசாசுவைத்தபகையும் லுத்தேர்காலத் தெண் ணூறுவருஷத்துக்கு முன்னே துவக்கினதாம். அதெப்படியென்றாற் கர்த்தர்பிறந்த — ௬௱ — ம். வருஷத்துக்குப்பின்பு தைரிய ராயரிந்தச் சத்தி யவேதத்திலுட்பட்டதினாற் கிறீஸ்துவர்கள் — ம றைவின்றித்திரிந்து பசாசுக்குவைத்திருந்தபொ ய்யான தேவர்கள் விக்கிரகங்களைத்தகர்த்தெறி ந்ததனாற் பசாசின்பகையளவின்றி வளர்ந்து கி றீஸ்துவர்கள்வணங்கின சுரூபங்களைத் தானுந்த கர்த்துப் பழியைவாங்கவெடுத்த வுபாயமேதெனி ற் கிறீஸ்துவர்களெங்கும் பெருங்கோயில்களைக் க ட்டிப் பலசுரூபங்களுக்குள்ளே பாடுபட்டகர்த்த ர்சுரூபத்தை விசேஷமாயெங்கும் ஸ்தாபித்துவ

ணங்கிக்கொண்டுவருகையி லெவ்விடத்துஞ் சித
றிதின்றயூதர்கள்-தாமுன்சிலுவையி லறைந்தவ
ரைப்பரமநாதராக வணங்கக் கண்டதனால் - ம
னதிற்பகைகொண்டதொழிய வச்சுரூபத்தைக் க
ண்டயாவரும் யூதர்கள்செய்த வக்கிரமமிதுவோ
வென்று நிந்தித்ததனா லவர்கள் - மிகவும் வெட்
கி நொந்திருக்கையிற் பசாசினாலேவப்பட்டுமுன்
னெடுத்த மனுஷசுபாவத்திலே சேசுநாதரைப்ப
கைத்துக்கொன்ற யூதர்களவரைச் சுரூபத்திலே
பு நிந்தையாகப்பகைத்துச் சுரூபங்களைவைத்து
வணங்குவ தக்கியானமென்று சொல்லத்துவக்
கினார்கள். நெடுநாளவர்கள் பகையாற்பிதற்றின
வார்த்தையை யொருவரு மெண்ணாமல் - மறுத்
துக் கொண்டு வந்தபின்பு கர்த்தர்பிறந்த -
௭௱௰௬-ம். ஆண்டிலே கொன்ஸ்தண்டினெப்
பொலியி னிராயனாயாளாநின்று கிறீஸ்துவனாயி
னு நீதிமுறையில் வழுவிக்கொடுங்கோலனாகிப்பா
வம்விளைவிப்பதற் குரியனுமாயிருந்த மூன்றாமி
லேயோனென்பவன்கிட்ட யூதர்கள்போ யவனு
க்குச்சொன்ன வபத்தங்களாலுந் தந்ததிரவி
யங்களினாலு மவனையுடன்படச்செய்து மயக்குவி
த்தார்கள்.

௫௫. அப்படியேயவன் சுரூபங்களை வணங்க
வேண்டாமென்று விலக்கிவணங்கினவரைக்கொ
டுதாய்வருத்திக் கொல்லத்துவக்கினான். துவக்கி
னவக்கிரமத்தை முடித்துக்கொண்டு வருகையி
ல்-மோக்ஷவாசிகளையுஞ் சேசுநாதரையுஞ் சுரூ
பங்களில் வணங்கவேண்டாமென்று பகைத்தவி
ராயன் மிகவுமஞ்சி நொந்து மெலியும்படிக்குத்
தானாண்டிருந்த கொன்ஸ்தண்டினெப்பொலி
யென்னு நகரெல்லாம் வெகுவாய் நடுநடுங்கி ய

திலே மூன்றுபங்கு தகர்ந்துவிழுந்து பொடியா கக்கண்டான். கண்டவாக்கினையினாலுந் தான் மனநொந்து வருந்தினதொழிய வுயிர்பிழைக்கும்படிதிரும்பாமலு மாக்கினைக்கஞ்சின தொழிப் பாவத்துக்கஞ்சாமலு மச்சத்தால் வெருவிமயங்கி மதிகெட்டவனைப்போற் சிறிதுமாதங்க ளிருந்து பின்ன ரவலமாய்ச் செத்தான். அவன்பிறகு தொடர்ந்தமுறையோடு வந்த வைந்திராயரு மவனைப்பின்சென்று சுரூப வணக்கத்தை முழுதுமொழிப்ப மிகவும்பிரயாசப்பட் டந்த வணக்கத்தை விடாதவெல்லாரையு நிஷ்டூரமாயுபாதித்து மட்டில்லாதபேர்களைக் கொன்றாலுந் திருச்சபையசையாதபாறையாக நின்று சுரூபங்களைவணங்கினமுறைமை யாண்டவரால்வந்ததென் றெல்லாருமறிய வவரவர் மகிழ்ந்து சிந்தினகுருதியாலெழுதிப்பொருந்தி வலியப் பிராணனைத்தந்து சாட்சிசொன்னார்களொழிய-௱௨௰-வருஷமாக-ஆறிராயர் வல்லமையைக்கொண்டு முதிர்ந்தபகையாற் சுரூபவணக்கமறைந்ததல்ல. அதற்குள்ளாக - எ௱அ௰எ - ம். ஆண்டில் - நிசெநகரில் -௩௱௫௰ - மேற்றிராணியர் பலசாஸ்திரிகளோடேகூடி நெடுநாள்யோசித்தொருங்குட னனைவருமொருமொழியாய்க் கட்டளையிட்டதாவது - இராசபாதையினடந்து முன்னிருந்த வேதபாரகரெல்லாரு மெழுதிவைத்த சாஸ்திரத்திணங்கியிஸ்பிரீத்துசாந்துவிளக்குந் திருச்சபையி லெப்போதுந் தவறாமல் வழங்கினமுறையைக் காத்துக்கொண்டு கருத்தோடேயும் பூச்சியத்தோடேயுந் திருச்சுரூபங்களை யுரியமுறையோடு வணங்கக் கட்டளையிட்டோம். மீளவுமதுகளைக்கண்டவரதுகளாற் காட்டப்பட்டவரை நினைக்கவு மவர்களையு

யமுறையோடு வணங்கவு மச்சுரூபங்களைக் கோ
வில்களிலே பிரதிஷ்டைசெய்யவுங் கட்டளையிட்
டோம். அதேதெனனிற் சுரூபங்களுக்குச்செய்தவ
ணக்க மதுகளில்-நில்லாம லதுகளாற் காட்டப்ப
ட்ட மகாத்துமாக்களைச் சேருமென்றார்கள். என்
றவுடனேகூடியிருந்தவனைவருமொருமொழியா
ய்முழங்கிச் சொன்னதாவது - இப்படியே யெ
ல்லாரும் விசுவசிக்கிறோம் - இதுவேயெல்லாரு
மநுசரிக்கிறோம் - இதுவேயெல்லாரு மொப்ப
மிட்டுப் பொருந்தி யொத்துக் கொள்ளுகிறோ
ம். இதுவேயப்போஸ்தலர்மார்விசுவாசம்- இது
வேமுன்னிருந்த வேதபாரகர்விசுவாசம் - இது
வேமெய்யான திருச்சபைவிசுவாசம்- இதுவேயு
லகமெல்லாங் காத்தவிசுவாசம். ஆகையால் -மூ
ன்றாகி யொன்றாகிய சர்வேசுரனை யதியோக்கி
ய பத்தியாகவிசுவசித்துச் சுரூபவணக்கநல்லதெ
ன்றெத்துக்கொள்ளுகிறோம். இதனை யொத்துக்
கொள்ளாதவர்கள் சாபிக்கப்பட்டுத் திருச்சபை
க்குப் புறத்தர்க ளாகக்கடவார்கள். ஆகையால்
வேதாகமங்களி லக்கியானிகள் விக்கிரகங்களைவி
லக்கி யெழுதப்பட்டதைத் திருச்சபை வணங்கு
ம் - சுரூபங்களை விலக்கச் சொன்னவர்களுக்குச்
சாபம். திருச்சபைச்சுரூபங்களை யக்கியானிகளு
டைய விக்கிரகங்களென் றவர்களுக்குச்சாபம். தே
வராக மோக்ஷவாசிகள்சுரூபங்களைக் கிறிஸ்தவ
ர்கள் வணங்குகிறார்களென் றவர்களுக்குச் சாப
ம். திருச்சபைச்சுரூபங்களை வணங்காதவர்களுக்
குச் சாபமென்றார்கள்.

௫௬. அப்படியே வேற்றுமை யொன்றுமின்
றி - அளசுஶகூ -ம். ஆண்டில் - மீளவுங்கொன்
ஸ்தண்டிநெப்பொலியிற் கூடின-௩௱ அஶ௬ மே

த்திராணியருமொருப்படக்கட்டளையிட்டார்கள் ஆகையால்—நீதிமுறையொன்றும்பாராம லாரா ய்ந்தநியாயமொன்றுங்கேளாமலுருவினவாளைக் கொண்டநுசரியாதவர்களைக் கொடிதாய் வருத் திக்கொன்று பொதுவறவாளாநின்ற —ஆறிராய ர் வல்லமையிலூன்றிப் பரம்பின சுருபப்பகை- ளஉ௰—வருஷத்துக்குள்ளாக நீர்மேற்குமிழிபோ லவுமொளிமுன்னிரவிருள்போலவு மெய்யின்மு ன் பொய்ம்மொழிபோலவுமெலிந்தொழிந்து மு ழுதுமறைந்துசுருபங்களை வணங்கலாகாதென்ட வரொருவராயினு மில்லாதிருந்ததே.சுருபவண க்கமோவெனிற் றன்பமுகத்துஞ் சாவின் முகத் துங் குறையாமற் சுட்டபொன்சுடரும்போல நா ளுக்குநா ளதிகமானதொழிய வொருநாளாகிலு மில்லாததில்லை. ஆகையாலே நிலையின்மை பொ ய்யின்குணமாகி நிலைபெறுதல் குன்றாத மெய்யி ன்குணமாகக்கொள்ளச் சுருபங்களைப்பகைத்தமு றைமை நில்லாமையாற் பசாசினால் வழங்கின பொய்யென்றுதோன்றி யெத்தாலு மசைக்கப்ப டாது நின்றசுருபவணக்க மாண்டவரால் வழங் கினமெய்வேத முறையென்று சொல்லத்தகுஞ் சத்தியந்தானே.

௬௭. இப்படியே சேசுநாதர் ஸ்தாபித்த திரு ச்சபை துவக்கினகாலத்துத் துவக்கின சுருபவ ணக்க மிடைவிடாமலுங் குறைபடாமலுமிந்நாள் வரைக்கும்வழங்கி நடுவில்வந்தவிக்கினத் தகை யாமல் — மட்டில்லாதவிடத்தி லாண்டவர்செய்த புதுமைகளா லெக்காலத்திலு மொப்பிக்கப்பட்ட துமாய் மட்டில்லாதபேர்க ளெங்கு மகிழ்ந்துபி ராணனை வலியத்தந்து குருதியோடெழுதினசா ட்சியால் விளங்கப்பட்டதுமாய்க் கல்விகளினுந்

தர்ந்துபுண்ணியநெறியிலுந்தளராத-எ௱௲
மேற்றிராணியரு மிருமுறைகூடிநெடுநாள்யோ
சித்துத் தேர்ந்துதேறிநிச்சயமாக ஸ்தாபிக்கப்
பட்டதுமாயிருக்கிற முறைமையாகியும்- தூளா-
உ௰-ம். வருஷத்துக்குப்பிறகு முளைத்தபொய்ப்
புறச்சமயத்தார் தங்குருவாகிய பசாசினாலேவ
ப்பட்டு - அவ்வணக்கமக்கியானமென்றும் - அப்
புதுமைகள்-மாயமென்றும் - அச்சாட்சிபொய்
யென்றும்-அவ்வேதபாரகரெல்லாருந் தப்பறை
காரரென்று மெல்லாருங் குருடராகித் தாங்க
ள்-மாத்திரங் கண்ணுடையரென்றும் வெட்கமி
ல்லாமற் பிதற்றிச் சொல்லக்கூசாதேபோனார்க
ள். அவர்கள்பகையாற்பிதற்றினதைத்தாங்களே
மனதிலுட்கொள்ளாமற் றப்பிதமென் றறிந்து
சொல்லிக்கொண்டுவருகையி லவர்களோடொத்
தபகையு மாங்காரமுமதிகேடு முள்ளோர்களநு
சரிப்பார்களொழியப் புத்திமானொருவனயினுமு
டன்படமாட்டான். மதிகெட்டபதிதரோ நீங்களோ
கையாற்சூரியனை மறைப்பவர். நீங்களோ வூத்தை
யொழுகி நாறின வுங்கள்வாயாவியா லமிர்தக்க
டலைக் கலக்கி வற்றுவிப்பவர். நீங்களோ கண்கெ
ட்டவர்களாகையி லுச்சிப்பகலுமிருண்டதென்றெ
வர்க்கு மொப்பிப்பவர். நீங்களே யுங்களுக்கிருக
ண்பிடுங்கிச் சூரியனொளியைக் காணீர்களாகில்-
மற்றவுலகமெல்லா மதனைக்காணாதிருக்குமோ. உ
ங்களோடொத்த வக்கிரமத்து மற்றெவருந் தங்
கண்பிடுங்கவேண்டுமென் றுரைசெயிருக்குதோ. நா
லுமனிதர் குருடராகியமாத்திரத் ததனாற் சூரிய
னொளி சற்றுங்குன்றாததுபோல நீங்கள்சலஞ்சா
தித்துச் சுரூபவணக்க மக்கியானமென் றாலு மத
னாலவ்வணக்கஞ் சர்வேசுரனால் வந்தவுத்தமவே

தமுறையென்று குறையொன்றின்றி யுலகமுடிய
ந்தனையும் விளங்கிவழங்குமென்று சொல்லத்த
குஞ் சத்தியந்தானே.

ஏழாமதிகார முற்றிற்று.

# அ-ம். அதிகாரம்.

## திருச்சபைக்கற்பனை விளக்கம்.

௫அ. பெருஞ்சங்கிலியா லொருமுளையிற்கட்ட
ப்பட்ட வேங்கை சூழக்குதித்துச் சங்கிலியைக்க
டித்துப் போக்கிடமின்றிக்கெற்சித்ததுபோலப்ப
திதரு நாஞ்சொன்ன நியாயங்களினாற் கட்டப்ப
ட்டுச்சொல்லுமறுமொழியில்லாம லங்கங்கேதா
ண்டி யேழைச்சனங்களை மயக்குவிக்கும்படிக்கின்
னமுளறிக் கூப்பிடுஞ்சத்தங்கேட்கக்கடவோம்.
நாமென்னசொன்னாலுஞ்சுரூபங்களை வணங்குவ
தே யக்கியானமென்று மபத்தமென்றும் பதிதர்
சொல்லவருகிறார்கள். அதேதெனில் - மோயீச
னெழுதின - ௫-ம். ஆகமத்து - ௰௨-ம். அதிகா
ரம் - ௩௨-ம். வசனமாவது நான்கட்டளையிட்ட
தைமாத்திர மாண்டவருக்குச் செய்வாயாக வத
ற்கேதாகிலுங் குறைக்கவுமேற்றவும் வேண்டா
மென்றார். ஆகையாற் சுரூபங்களைவணங்க வேத
த்திற் கட்டளையில்லாதபோது நாம் வணங்கின
லாண்டவர் கட்டளையிட்டதின்மேற் செய்தமை
யா லவர்விலக்கினகாரியஞ் செய்தாற்போ லாக்
குதல்லோவென்று பதிதர் சொல்லவருகிறார்கள்
இதைக்கொண்டவர்கள் - திருச்சபைக் கற்பனை
யெல்லாந்தள்ளி யதுகளுக்குக் கீழ்ப்படிந்து நட
க்கிறதாம் - சர்வேசுரன் வழிவிட்டு மனிதர்காட்

டின வழியினடந்து தப்பிப்போகிறோமென்று நி
யாயத்தைச் சற்றும்பாராத பித்தரைப்போற் ப
திதர் பிதற்றிக்கொண்டு வருகிறார்கள். ஆகிலுமு
ந்திப் பதிதர் சொல்லிக்காட்டின வேதவுதாரண
ங்கொண்டிருக்கிற வர்த்தத்தைக் காட்டக்கட
வோம். நாமிங்கே முதலதிகாரத்திற்சொன்னப
டி லுத்தேர்சமய மெளிதாய்ப் பரம்ப வவன்குரு
வாகிய பசாசு லுத்தேருக்குச் சொன்ன வுபாய
மாவது வேதவசனங்களை முழுதும்வையாமற்கு
றைத்துவைத்தால் — முன்னும்பின்னுமெழுதின
தைவிட்டுப்பார்க்கி லதுகளுக்கர்த்தம்வேறாகி நீயு
ண்டுபண்ணின வபத்தங்களை யெளிதாய் வேதவு
தாரணங்களா லொப்பித் தொத்துக் கொள்ளச்
செய்வாயென்றதாம் பசாசு — அப்படியேலுத்
தேரு மவன்சிஷ்டர்களுஞ் செய்துகொண்டு வரு
கிறார்கள். இப்போதுமவர்களெடுத்துக்காட்டின
வுதாரணத்திலேயுஞ் செய்தமையால் — நாமதை
க்குறையாமல் வைத்தோமாகிற் பதிதர்க்கதுசற்
றுமுதவாமல் — மலையைப்போலே தோன்றினநி
யாயம் புகையாய்க் கரையக்காண்போம். ஆகை
யால்—மோயீசன் வாயிலாலாண்டவ ரக்காலத்து
த் தமக்குப்பலியிடுமுறையு மிடமுங்கற்பித்தபின்
பு சொன்னதாவது. ஆண்டவ ரக்கியானிகளைக்
கெடுத்துப் பெயர்த்தகற்றியவர்கள் — நாட்டில்-
குடியிருக்கும்போ தவர்கள்பாவனையாகவக்கியானி
முறைகளை யெடுக்கவும்வேண்டா மவர்கள் — தந்
தேவர்களை வணங்கினபடி நானுஞ்சர்வேசுரனை
வணங்குவே னென்னவும்வேண்டாம். ஆண்டவ
ருக்கருவருப்புள்ளதெல்லா மவர்கள்—தந்தேவர்
களுக்குச்செய்து தம்மக்களைமுதலாய்த் தேவப
லிகளாகக்கொன்று நெருப்பிற்சுட்டார்கள்—நீயப்

படிச்செய்யாமல் - நான்கட்டளேயிட்டதை மாத்திர மாண்டவருக்குச்செய்வாயாக- அதற்கேதாகிலுங் குறைக்கவு மேற்றவும் வேண்டாமென்றார் ஆகையாலக்கியானிகள்-முறைகளுமவர்கள்பூசை முறைகளும் விலக்கப்பட்டக்காலத் தாண்டவர் தமக்குப் பலியாகக்கற்பித்த வேதமுறைமை மாத்திர மொன்றுங்குறையாமலுங் கூட்டாமலுங் காக்கச்சொல்லிக் கற்பித்ததென்ப தர்த்தமாகுமல்லோ - இதனல் - மனிதர் கற்பனேக் கேட்க வேண்டாமென்று விலக்கினதாகக் கொள்ளலாமோ விலக்கினதாகக் கொண்டாற் பதிதர்தாமே தம் மிராசா கற்பனேமீறுமல் - நடப்பதென்ன தங்குருவாகிய லுத்தேர் விரத்தனு யிருப்பதுபாவமென்பதென்ன. கலியாணமெவர்க்கும்வேதத்திற் கட்டளேயிட்ட தெங்கே. அர்ச் - சின்னப்பர் கொரிந்தியாருக் கெழுதினமுதல் - திருபத்து -எ-ம். அதிகாரம்-௩அ-ம். வசனத்திற்கலியாணநல்லதாயினு மதிலேயும் விரத்தத்துவந் தாவிளேயென்றாரல்லோ.

ருக. மனிதர் கற்பித்ததைக் கேட்டுநடப்பதஞ்கியானமாகி லந்தவக்கியானத்தை யாண்டவர் நல்லதென்று புகழ்வாரோ. அப்படியாயினும் - எரேமியஸ் - ௩ரு-ம். அதிகாரத்து -யோனதபென்பவன் றன்கோத்திரத்திற் கட்டளேயிட்டபடி யவர்கள் - தலேமுறை தலேமுறையாய் முந்திரிகைப்பழத்திரசத்தைக் குடியாம லவனிட்டகற்பனேயின்படியே நடந்ததனு லாண்டவரவர்களேப் புகழ்ந்தாரல்லோ. மீளவுமப்போஸ்தலர்மார் தாமே யிரத்தத்தையு மிரத்தஞ்சிந்தாமற் கொன்றதையு முண்ணவேண்டாமென்று - அவர்கள் - முயற்சியாகமத்து - ௰ரு-ம். அதிகாரத்து உ௬-ம். வசனத்துக்கற்பித்ததென்ன - அதிலே

நானே - ௰௫-ம். அதிகாரம்- ௩க-ம். வசனத்து அப்போஸ்தலரு மற்றப்பெரியோர்களுமிட்ட கற்பனைகாக்க வேண்டுமென்று கற்பித்துத் திருச்சபைக்குறுதிசொல்லிச்சீரிய-சீலிசியவென்றிரு நாடுகளில் - அர்ச்.- சின்னப்பர் திரிந்தாரொன்றெழுதின தென்ன. அர்ச்.- சின்னப்பர்தாமே கொரிந்தியருக்கெழுதின - ௲. நிருபம்- எ-ம். அதிகாரம்-௰உ-ம். வசனத்துத் தன்கற்பனை வேறேசேசுநாதர் கற்பனை வேறாய்ப் பிரித்துச் சொல்வதென்ன. மனிதர் கற்பனைகேட்ப தக்கியானமாகில் வேதத்தி லப்போஸ்தலர்மார்தாமே யந்தவக்கியானத்தைப் படிப்பித்ததென்ன. கற்பித்ததென்ன. ஆகையாற் பெரியோர்கள் கற்பனைகளையுந் திருச்சபைத்தலைவர்மார்கற்பனைகளையுங் கேட்டுத் தலைமேல்வைத்து மீறாமல் - நடப்பதுவேதத்தில் விலக்கப்படாமற் பிரத்தியக்ஷமாய்ப்படிப்பித்தமுண்றமையாமல்லோ. மீளவு மோயீசன் - உ-ம். புஸ்தகம்-உ௰-ம். அதிகாரம்- ௮-ம்.வசனத்து மூன்றுங்கற்பனையாகத் திருநாளென்று சனிக்கிழமையை யாசரிக்கநினைப்பாயாகவென்றெழுதியிருக்கப் பதிதர்தாமே சனிக்கிழமையைத்திருநாளாகவாசரியாமல் - ஞாயிற்றுக்கிழமையையாசரிப்பானேன். அவர்களேதரங்கம்பாடியி லிச்சிற்பதித்த வுபதேசத்தின்குறிப்பிடமென்னும் புஸ்தகத்திலே யிந்தமூன்றுங்கற்பனைமாற்றித் திருநாளையாசரிக்கத்தக்கதாகநினைப்பாயாகவென்று வைப்பானேன். இந்தமாறுபாடுநியாயத்தின்படியே திருச்சபைக்கற்பனையால் வந்ததொழிய வேதத்தில்-ஞாயிற்றுக்கிழமையைக் கொண்டாடக்கட்டளையிட்டதில்லையே-அப்படியே ஞாயிற்றுக்கிழமையு மன்றிப் பதிதர்தாமேசிலதிருநாட்

களைக் கடனாகக்கொண்டாடுவானேன் - அந்தப்ப லதிருநாட்களுந் திருச்சபைக்கற்பித்த தொழிய வேதத்திலாண்டவர் கற்பித்ததில்லையே. ஆகையாற் றிருச்சபைக்கற்பனையின்படியே பதிதரு நடக்கிறார்கள். நடந்தாலுந் தங்களுக்காகாத மற்றத்திருச்சபை யுத்தமகற்பனைகளைத் தள்ளும்படிக்குத் திருச்சபைக்கற்பனை மீறாமல்-நடப்பதுமனிதர்வழியை யநுசரித்துச் சர்வேசுரன்வழியிற் றப்பிப்போகுமுறைமையென்று வெட்கமில்லாமற் சொல்வானேன்.

சா௰. இப்படியே திருச்சபைக் கற்பனை மனிதர்கற்பனையென் றெடுத்துக்கொண்டாலு மிற்றைவரைக்கு நாஞ்சொன்னதைப்பார்க்கி லந்தக்கற்பனை மீறாமல் - நடப்பதுவேதத்திற்கற்பித்தமுறைமையாமென்னத்தகுமே. ஆகிலுந்திருச்சபைக் கற்பனைகளை மனிதர்கற்பனை யாகாமற் சர்வேசுரன் கற்பனை யாகக்கொள்ள வேண்டுமென் றெப்பிக்கக்கடவோம். அதெப்படியென்றால்-அர்ச்.-லூக்காவெஸுதின சுவிசேஷத்து -௰-ம். அதிகாரம்-௰சா-ம். வசனத்து - அப்போஸ்தலர் மாருக்குச் சேசுநாதர் திருவுளம்பற்றினதாவது-உங்கள்வார்த்தையைக் கேட்பவனென்வார்த்தையைக்கேட்பவன்றானேயென்றார். அதனாலேயல்லோ-அர்ச்.-மத்தேயுவெஸுதின சுவிசேஷத்து - ௰அ-ம். அதிகாரம் - ௰எ-ம்.வசனத்துச் சேசுநாதர்தாமே திருச்சபை வார்த்தையைக்கேளாதவனுனக் கஞ்ஞானிகளினொருவனாகக்கடவானென்றார். ஆகையாற் றிருச்சபைகற்பித்ததெல்லா மாண்டவர்கற்பித்ததாகவுட்கொள்ளச் சேசுநாதர் கட்டளையிட்டார்.

சாக. இதெல்லாமிப்படியிருக்கையில்-நாந்திரு

ச்சபைகற்பித்தபடி கேட்கும்போது மனிதர்வ
ழியை யநுசரியாமற் சர்வேசுரன்கற்பனையின்ப
டியே நடக்கிறேமென்று சொல்லத்தகுமே-ஆ
கிலுந்தேவகற்பனைக்குந் திருச்சபைக்கற்பனைக்கு
மூன்றுவேற்றுமையுண்டென் றறியக்கடவீர்கள்
முதல்வேற்றுமையாவது-ஆண்டவர்தாமேகற்பி
த்ததுதேவகற்பனையாகி யாண்டவரேயல்லா லவ
ர்ஸ்தானத்திலிருக்கிற - அர்ச்.- பாப்புகற்பித்த
து திருச்சபைக்கற்பனை யென்னத்தகும்-அப்படி
யே யிராசாதாமே சிலகட்டளையிடுவ தல்லாதே
தாம்வைத்தசபையதா ரிராசா சொற்படிசிலது
களைக்கற்பிப்பார், கற்பித்தாலு மிதுவுமிராசாக
ட்டளையாகவெண்ணிக் கேட்கவேண்டியதனலித
னையு மீறினவனைத் தண்டிப்பாரொழிய நாமிட்
டகற்பனையல்லாதே சபையதார் கற்பனைகேட்
கவேண்டாமென் றிராசாசொல்லப்போகிறதில்
லையென்பது நிச்சயந்தானே. ஆதலாலிரண்டா
ம்வேற்றுமையாகத் தேவகற்பனை மீறி நடக்க-
அர்ச் -பாப்புமுதல் யெக்காலத்து முத்தாரங்
கொடுக்கக்கூடாமற் றிருச்சபைக்கற்பனைதாமிட்
டகற்பனையாகையி லோரோரிடத்தி லிதுகளைவிட்
டு நடக்க வவருத்தாரங் கொடுக்கலாமென்னத்த
கும். அப்படியேயிராசாகற்பனைமீற வுத்தாரங்
கொடுக்கமாட்டாத சபையதார் தாமிராசாபெய
ரைச்சொல்லி யிட்டகற்பனை சிலமுறைதாமு ம
ழிப்பவு மதற்குப்பிறர்க் குத்தாரங்கொடுக்கவும்வ
ல்லவனல்லோ. மூன்றாம்வேற்றுமையோ வெனி
லுயிரைத்தந்தாலுந் தரவேண்டுமொழியத் தே
வகற்பனைமீற வெவர்க்குமுத்தாரமில்லை. திருச்ச
பைக்கற்பனையாறு லொருவருக்குக் கனமானவவ
சரம் வந்தவளவிலே யக்கற்பனையின்படியேநட

க்கக்கடனில்லை. அப்படியே யிறந்தாலும் பொய்யைச் சொல்லக்கூடாமல் வியாதிவந்தவளவிலொருசந்தியா யிருக்கக்கடனில்லை. சொன்னவேறுபாடுகளன்றித் திருச்சபைக்கற்பனைகளையுமிகுந்தவவசரமில்லாதே மீறாமல்-நடக்கும்படிக் செவர்க்குங்கடனுண்டென்று சத்தியந்தானே. பதிதரோவெனிற் பாவவழியிலே தடையொன்றின்றி வழுவியோடும்படிக்குவிக்கினமாகமட்டிடுந்திருச்சபைக்கற்பனையுதறிப் பாகனையிழந்த மதயானைபோலவுங் கடிவாளங்கடிந்த குதிரைபோலவுஞ் சுக்கான்கழன்ற மரக்கலம்போலவு மொழுங்கொன்றின்றித் தவறிக்குதித் தலைந்து மோதித்தாந்தம்மோ டொவ்வாமற் பிதற்றி மதிகெட்ட பித்தரைப்போற் பேசவு நடக்கவுஞ் செய்வார்களென்று கண்டிருக்கிறோம்.

எட்டாமதிகார முற்றிற்று.

## ௯-ம். அதிகாரம்.

### திருச்சபை வழுவாமை.

௯௨. கதிர்களைத்தெளித்துத் திருந்தின நூற்படி வடிவோடெழுதப்பட்ட சித்திரம் பிழையென்றதனைத்தீர்த்தொப்புரவாக்க விருகண் குருடன்றுணிந்தாற்போல லுத்தேருங் கல்வீனுமவர்கள் சீஷர்க்களுந் திருச்சபை வழுவிக்கொண்டவழுக்கினைத் துடைத்துச் செப்பனிடவந்தோமென்று வெட்கமில்லாமற் சொல்லிவழுவாத திருச்சபைக்கற்பனைகேட்பது நல்லதாயினுந் திருச்சபை வழுவினபின்ன ரிட்டகட்டளை கேட்பதுபாவமென்பார்கள். அதெப்படியென்றாற் கர்த்தர்திருவவ

தாரம்பண்ணின - ௫௱-ம். வருஷமட்டுந் திருச்சபைவழுவாமல் - நடந்தபின்பு முழுதுங் கெட்டழிந் தாயிரம்வருஷங் கிடந்ததன்மேல் - லுத்தேர் வந்து விழுந்ததிருச்சபையைப்பழைய நிலையினிறுத்தி விளங்கச்செய்தேனென்றுஞ் சொன்ன - ௫௱ - வருஷத்துக்குப்பிறகுரோமாபுரிச்சபையுங்கெட்டு - அர்ச்.- பாப்புங் கள்ளனாகநின்றுவழுவினதனை லிட்டகற்பனை கேட்பதாகாதென்றுங் கன்னியாஸ்திரீகளைக் கற்பழித்தவனை யாண்டவர்க்குத் தந்தவார்த்தைப்பாடுகளை மிதித்தவனைப் பசாசைக் குருவாகக்கொண்டவனைச் சகலபாவங்களையூன்றின வுணர்வினனைய் மதிகெட்டலுத்தேரு மிவனோடொத்த வக்கிரமத்தழிந்த கல்வீனுஞ் சற்றுங்கூசாமற் பிதற்றிச்சொல்லத் துணிந்தார்களென்று நாம் - முன்சொன்ன தல்லோ. இந்தவக்கிரமமான தப்பறையிங்கேயுலையிற்போட்டுதிப்பொன்னாகக்கீழ்த்திசைப்பதிதர்காட்டினதைக் கெட்டசெம்பாக நாமேகாட்டியதனைமிதித்தெறிந்து திருச்சபைவழுவாமை யொப்பிக்கத்துணிந்தோம்.

௲௫. ஆகையாற் பதிதர்சொன்னது மெய்யென்று லாயிரம்வருஷந் திருச்சபையில்லாம லுலகமிருந்ததென்று சொல்லக்கடவோம். இப்படிச்சொன்னோமாகிற் றிருச்சபைக் குள்ளே யல்லாதே யீடேற்றமில்லாமையா லாயிரம்வருஷ முலகெங்கு மொருவருமோக்ஷக்கரை யேறவில்லையென்று சொல்லவுங்கடவோம். ஆகிலுமிந்த வக்கிரமத்தைமதிகெட்டவனுயினுமநுசரிக்கமாட்டான். அதனாலே திருச்சபை வழுவிக்கெட்டழிந்தில்லாதே போயிற்றென்று சொல்லவுமாட்டான். மீளவும் - அர்ச்.- மத்தேயுவெழுதின சுவிசேஷத்து

– ௰கூ–ம். அதிகாரம் – ௰அ–ம். வசனத்துச் சே
சுநாதர்திருவுளம்பற்றினதாவது–என்றிருச்சபை
க்கல்லின்மேலே ஸ்தாபித்துண்டாக்குவேன்.
ததை நரகங்கெடுத்துச் செயங்கொள்ள மாட்ட
தென்றார். ஆகையா லொருகாலத்துத் திருச்ச
பைகெட்டுப்போ யில்லாதாயினதனை நரகங்கெ
த்துச் செயங்கொண்டதாகச்சொல்லவேண்டி
ருக்கும். ஆராகிலு மிதனைச்சொல்லிச் சேசுநா
ர்திருவுளம்பற்றினவார்த்தைதப்பறையாயிற்
ன்று சொல்வானே. இதற்குப்பதிதர்சொன்ன
டி வழுவாத திருச்சபையிருக்கும்போது – சு
–ம். வருஷத்திருந்த – அர்ச்.– அகுஸ்தீனுப
சங் கேட்பவர்க்கு விசுவாசமந்திரத்தை விரித்
முதற்புஸ்தகத்து – கூ–ம். அதிகாரத்தெழுதி
தாவது–திருச்சபை மெய்ச்சபை பொதுச்சபை
துவே யிதுவெல்லாப்பதிதரோடு – யுத்தஞ்செ
துகொண்டுவரும் – யுத்தஞ்செய்தாலுந் தோ
கமாட்டாது. முந்திரிகைக்கொடியிற் பலனில்ல
ததுகள்வெட்டுண்டு பிரிந்தாற்போலப் பதித
ல்லாரு மிதிலே நின்று பிரிந்தார்கள். திருச்சபை
யோவெனிற் றன்வேரிலேநின்று நிலைகொண்
அதனை நரகஞ் செயங்கொள்ளாதென்றார். ஆகை
யால் – ௫௱ – வருஷத்துக்குப்பிறகு திருச்சபை
தன்வேரிலேநின்று பிரிந்துகெட்டதென்று ப
தர்வேசித்துணிவோடொழிய வெப்படிப்பிதற்
த்துணிந்தார்கள்.

கூச. மீளவும்–அர்ச்.–மத்தேயுவெழுதினசு
சேஷத்தின் – உ–ம். அதிகாரம் – ௰கூ–ம். வ
னத்துச் சீஷர்க்கனைநோக்கிச் சேசுநாதர் திரு
ளம்பற்றினதாவது – உலகிலெங்கும்போ யெ
லாரையும் போதிப்பீர்களாக வென்றபின்பு ந

மெந்நாளு முலகமுடியுந்தனையு முங்களோடிரு
ப்போமென்றார். இதற்கர்த்தமேதெனிற் சத்திய
வதத்தைப்போதிக்க வுலகெங்கு முங்களை யனு
ப்பினோம் - எங்கும்வணங்கப்பட்டபசாசு கொடி
யுங்களைப் பகைத்துக்கலகங்களைக் கிளப்பிக்கெ
க்கப் பிரயாசப்படுமாயினு நீங்கள் பயப்படா து
தியாகவிருங்கள்-நாமேயுங்களுக்கு முங்களைப்
ன்சென் றவர்களுக்கு முதவியாக விடைவிடாம
லகமுடியுமட்டுங் கூட நிற்போமென்ற தாயிற்
ல்லோ. ஆயினுமாயிரம் வருஷமாக வுலகிலெ
குந்திருச்சபை யில்லாதாயி னிந்தத்தேவவாக்
யந் தப்பறையாகாமல் - நிற்கும்வகையென்ன.
ந்நாளு மிடைவிடாமற் றிருச்சபைகெடாதபடி
தக்கூட நிற்போமென்ற சேசுநாத ராயிரத்தெ
நூறுவருஷத்திலே யாயிரம்வருஷமாகத் திரு
சபைகெடும்படி யதனைக்கைவிட்டதென்ன.

சாரு. அதற்குமுன்சொன்ன - அர்ச்.-அகுஸ்
னு தாவீதிராசன்பாடின - ௱௬-ம். சங்கீதத்தி
மேல்-உம். பிரசங்கத்துத் தோனத்திஸ்தொ
னும் பதிதர்சொன்ன வபத்தங்களை மறுத்துக்
காண்டுவருகையி லலங்காரவகையாற் றிருச்ச
பசேசுநாதரோடே பேசினாற்போலே கொண்
விட்டுத் தாமெழுதினதாவது- என்னைவிட்டுப்
ரிந்தவ ரொன்மேலே தூறினதென்ன. கெட்ட
ர்கள் - நானேகெட்டேனென்று சலஞ்சாதித்
ச் சொல்வதென்ன. நான்முன்னிருந்ததொழி
விப்போதில்லாதே போயினேனென்பார்களே
ான் வாழுநாளெத்தனையென் றெனக்கறிவிப்பீ
ாக. திருச்சபை முன்னிருந்த திப்போதில்லையெ
றுந் திருச்சபைகெட்டழிந்த தென்றுஞ் சொ
லுஞ்சிலருக்குவேண் டி யெந்நாள்-மட்டு நானி

ப்பூவுலகில் வழங்கியிருப்பேனென்று காட்டுவீரா
கவென்று திருச்சபைகேட்டதற்குச்சேசுநாத
றிவித்ததாவது - எந்நாளு முலகமுடியுந்தனே
யு நாமேயுங்களோடேகூட நிற்போமென்றெ
ன் றிதெல்லாம் - அர்ச்.- அகுஸ்தீனெழுதிவை
தார்.

கூகூ. இப்படியல்லோ - அர்ச்.- அகுஸதீனுகா
லத்துத் தோனத்திஸதனைப்போலவிக்காலத்
லுத்தேரானிகளுங் கல்வீனியானிகளுந் தாங்கெ
ட்டழிந்தவர்களாகி மாறுதசேசுநாதர் துணைய
முதவியுங்கொண் டெந்நாளுங் கெடப்படாத தி
ருச்சபை கெட்டழிந்ததென்று வெட்கமில்லாம
சொல்லுகிறுர்கள். சொன்னலும் பூரணசந்திர
னைப்பகைத்துநோக்கி நாய்கள்குலைத்தாலு ம
ற்குச்சந்திர னஞ்சாமலு மொளிகுறையாமலு
ருளில்விளங்கி நடப்பதுபோல வாயிரம் பதிதரு
ங்கூடித் திருச்சபைகெட்டதென்று குலைத்தாலு
ந் திருச்சபை யதனலொருகாலு முன்கெட்டது
வழுவினதுமில்லை. இனிமேற் கெடவு மயங்கவுஞ்
செய்யாமல் -நாடோறுமுலகமுடியுந்தனையுபெ
ன்மேலும் விளங்கிவளர்ந்து நிற்குமென்பது நிச்
சயந்தானே.

ஒன்பதாமதிகார முற்றிற்று.

# ய-ம். அதிகாரம்.

## உரோமான் றிருச்சபைவிளக்கம்.

கூஎ. இற்றைவரைக்குஞ்சொன்ன நியாயங்
ளைக்கொண்டொப்பித்தபடியொருநாளாகிலும்
ழுவாதுநின்ற திருச்சபையுரோமான் றிருச்ச

யென்று நாமிங்கேகாட்டக்கடவோம். உரோமா
ன்றிருச்சபை யென்னும்போ துரோமாபுரியில்-
மாத்திர மிருக்குந் திருச்சபையென்பவோ வல்ல.
-ரோமாபுரியிற் சேசுநாதர் ஸ்தானத் திருந்து
திருச்சபைத்தலைவராக - அர்ச்.- இராயப்பர்து
பக்கியிந்நாள்-மட்டுந்தொடர்ந்துவந்த-அர்ச்.-
பாப்புகளுக்குக் கீழ்ப்படிந்து பூவுலகெங்கும்பர
ம்பி நிற்குந்திருச்சபைதானே யுரோமான்றிருச்
சபையென்று கொள்ளக்கடவோம். இப்படிப்ப
ட்ட வுரோமான்றிருச்சபை மெய்யான திருச்ச
பையென்றும் பொதுவாய்நிற்குந் திருச்சபையெ
ன்று மொப்பிப்போம். அதெப்படியென்று லிற்
றைவரைக்குஞ் சொன்னபடி மெய்யானபொது
த்திருச்சபை யுலகமுடியுமட்டுமொருகாலும்வழு
வாமல் - நிற்குந் திருச்சபையல்லோ. எப்போ
து மெங்கும்வழுவாமல் - நின்றசபை யுரோமா
ன்றிருச்சபையொழிய வேறொருசபையுமில்லை. ஆ
கையா லுரோமான்றிருச்சபைமாத்திர மெய்யா
னதிருச்சபையென்றும் பொதுவாய்நிற்குந் திரு
ச்சபையென்றுஞ்சொல்லக்கடவோம. உரோமா
ன்றிருச்சபையொழிய வேறொருசபை வழுவாமல்
நின்றதென்று லப்படிப்பட்ட சபையைப் பதிதர்
தாமே காட்டக்கடவார்கள். தஞ்சபை வழுவா
தெப்போது நின்றதென்பார்களோ. ஆகிலுந்த
ஞ்சபை தாங்களுஞ்சொல்லும்படியே யிருநூறு
வருஷத்துக்குமுன்னேமாத்திரம் லுத்தேர்தலைவ
னாகத் துவக்கினசபையாகையி லெப்போதும் வ
ழுவாதுநின்ற சபையென்று சொல்லமாட்டார்
கள். உரோமான்றிருச்சபையோவெனில்வழுவா
துநின்றதெப்படியென்று கேட்பீர்களாகிற் சே
சுநாதருண்டுபண்ணின திருச்சபைக்கெல்லாம்-

அர்ச்.- இராயப்பரைத் தலைவராக ஸ்தாபித்த
ர். அவர் தமதிராசாங்க முரோமாபுரியில்வை
த்துத் தாமேயதிலே வேதசாட்சியாகப் பாடுபட்
டார். அவருக்குப்பிறகு விடாததொடர்ச்சியா யி
ந்நாள்வரைக்கும் - அர்ச்.- பாப்புக ளொருவ
க்கொருவர் பின்சென்று திருச்சபைக்கெல்லாந்
தலைவராக நின்றார்கள். அவர்களுக்குள்ளே வரு
வினவராரொன்றுமெக்காலத்து வழுவினொன்று
மெந்தத்தப்பறைத்திருச்சபைக்குப்படிப்பித்து வ
ழுவியதனைக் கெடுத்தாரொன்றும் பதிதர்தாமே
காட்டக்கடவார்கள். காட்டமாட்டாதே போனா
ல் -அர்ச்.- பாப்புகளோடே திருச்சபையும் விசு
வாசத்தில்வழுவிக்கெட்டதென்பானேன்.

௩௮. இதற்குப்பதிதர்சொல்லுமறுமொழியா
வது - அர்ச். பாப்புக்களு மவர்களோடே திருச்
சபையு மொருவருமறியாமல் - நாள் வட்டத்தி
லே வழுவிக்கெட்ட தாகி யந்தக்கே டாயிரம்வரு
ஷமாக வொருவருங் கண்டுபிடியாமற் கடைசியி
லே லுத்தேர தனைக்கண்டுபிடித் தெல்லாருக்கு
மறிவித்து வழுவின திருச்சபையைப்பழைய நிலை
யி னிறுத்தினானென்றார்கள். ஆகிலு மாயிரம்வரு
ஷமாக வுலகமெங்குங் கண்ணுடையவனொருவனு
மில்லாமற் காணாதகேடு லுத்தேர் மாத்திரம் -
அர்ச்.- பாப்புமேல்வைத்த பகையாகியவிளக்கெ
றிப்பக்கண்டு தீர்த்தானல்லோ. நல்லது தானே
அந்தக்குறையெல்லாந் துடைத்துநிறுத்தின தி
ருச்சபைக்குத் தலைவராக யாரை லுத்தேர்வைத்
தான். அர்ச்.- இராயப்பர் ஸ்தானத்திலொருவ
ர் வேண்டியிருக்கையி லவரெங்கே. நாங்கீழ்ப்ப
டிந்து வணங்கும் - அர்ச்.- பாப்பொழிய வே
றொரு சபையிலாயினும் பொதுத்தலைவ னொருவ
னுண்டென்று காட்டமாட்டார்கள்.

௬௯. இதற்குப்பதித ரிராசநீதிக்கஞ்சிக் கிண
ற்றிற்குதித்துவிழும் பெருங்கள்ளனைப்போலவுஞ்
சூரியவொளிக்குப்பயந்து மெலிந்தோடிப் பொந்
துதனி லொளித்துக் கூவப்பயப்படுங் கோட்டா
ன்போலவுஞ் சொன்னதற்கஞ்சி மறுமொழியில்
லாமையா லதிலேயும் பெரிதோ ரபத்தத்தைச்
சொல்லிப் பிதற்றுவதாவது. சேசுநாதரொழிய
த் திருச்சபைக்குத் தலைவரொருவருமில்லை யொ
ருவருந்தேவையில்லை யென்பார்களாயினுஞ் சே
சுநாதரிங்கே திரியுங்காலத் திது மெய்யாயினுந்
தாமோக்ஷத்தி லேறினபின்பு காணப்பட்ட திரு
ச்சபையினுற் காணப்படாத தலைவராக வகன்ற
தனுலவரையல்லாதே காணப்படுந் தலைவர் தே
வையில்லையென்பவன் மதிகெட்டவன்றானே. நா
லுபேருள்ளவீடும் - நாலுவீடுள்ளவூரும் - நாலூ
ருள்ளநாடு மொரு தலையின்றி யொழுங்கோடே
நடக்கவு முறையோடே நிற்கவு மாட்டாமையி லு
லகமெங்கும் பரம்பின திருச்சபைக்கு மாத்திரங்
காணப்பட்ட வொரு தலை தேவையில்லையோ.
சேசுநாதர் தாமே தந்திருச்சபைக்குத் தம்மிட
மாகக் காணப்பட்ட தலைவேண்டுமென் றிராயப்
பரைநோக்கி யென்னுடுகளை மேய்ப்பாயாகவென்
று - அவரைத் தம்மந்தையாடுகளுக்குமுந்தினவி
டையனுகவுந் தந்திருச்சபைக்கு முந்தின தலைவ
ராகவுங் கட்டளையிட்டாரல்லோ. இராயப்பரிறந்
துபோனபின்பு திருச்சபைக்குக் காணப்பட்ட ம
று தலைவேண்டாமென்பார்களோ-ஆகிலுநாளுக்
கு நாள் - திருச்சபைவளர்ந்தமையால் - நாளுக்
கு நாளதிகமாய்க் காணப்பட்ட தலைவர் வேண்டி
யதென்றெல்லாருஞ் சொல்லக்கடவோம். அப்ப
டிப் பதிதர் தாமே முதல் -௫௱-வருஷமாகத்திரு

ச்சபை யவர்கள்சொன்னபடி வழுவாது நின்ற
போ திடைவிடாம லிராயப்பரைத் தொடர்ந்து
வந்து - அவரிராசாங்கத்திருந்தாண்ட - அர்ச். -
பாப்புக ளவருத்தியோகத்தையு முடையராகிக்
காணப்பட்ட திருச்சபைக்குக் காணப்படுந் தலை
வராக நின்றார்களென்று சொல்லவேண்டியிருக்
கும்.

எ௰. அப்படியே - சாஙகக - ம். ஆண்டில் - எ
பெசியென்னு நகரிடத்துக்கூடின திருச்சபைக்
கு - அர்ச். - பாப்புவினாலே தம்மிடமாகவனுப்பப்
பட்டவர்களுக்குள்ளே யொருவர் பிலிப்பென்பவ
ரெல்லாருமறியச் சொன்னதாவது. அப்போஸ்
தலர்மாருக்கு முதல்வனும் பொதுத்திருச்சபைக்
கஸ்திவாரமுந் தலையுமாகிய - அர்ச். - இராயப்ப
ர் தம்மைத் தொடர்ந்துவந்த அர்ச். - பாப்புக ளி
டத்தி லின்னமாளவு மிங்கேசந்தேகங்களைத் தீர்
ப்பவு மினியுமெப்போது மாளத்தக்கதாகவுமொ
ருவர்க்குஞ்சந்தேகமற வெல்லாருக்கு மெக்கால
த்து நிற்பது நிச்சயந்தானே. அப்படியே - அர்ச். -
இராயப்பரைத்தொடர்ந் திப்பொழு திருக்கும் -
அர்ச். - பாப்பு செலெஸ்தீனென்பவ ரெங்களை
யிந்தத் திருச்சபைக்கூட்டத்திற் கனுப்பினரொன்
றார். அதற்குக் கூடியிருந்த திருச்சபையெல்லா
மொருமொழியாகச் செலெஸ்தீனுகிய - அர்ச். - பா
ப்பை மிகவும்புகழ்ந்துதோத்திரஞ்செய்தார்கள்.
இதிலேயிறந்த - அர்ச். - இராயப்பரின்னம் - அர்ச்.
பாப்புக ளிடத்தி லாண்டு நிற்பா ரென்பதற்கர்த்
தமேதெனிற் சேசுநாத ரவருக்குமுன் றந்த தலை
மையு முத்தியோகமும் வல்லமையுமாறமல் - மற்
ற - அர்ச். - பாப்புகளிடத்தி லிப்பொழு துண்
டென்று மினியெப்போதுமிருக்குமென்று மதற்

கர்த்தமாமே. ஆகையால் - அர்ச்.- இராயப்பர் திருச்சபைத்தலைவராக நின்றொன்று மவரைத் தொடர்ந்துவந்த மற்ற - அர்ச்.- பாப்புக்களவரைப்போல வாண்டு தலைவர்களாக நின்றார்களென்றுமெப்போது நிற்பார்களென்றும்பதிதர்சொன்னபடி திருச்சபை வழுவாதநாளி லெல்லாருக்கு நிச்சயமாயிருந்ததே. ஆகையால் - முதற்றலையாகிய சேசுநாதரொழியத் திருச்சபையில் - ருா - வருஷமட்டுங் காணப்பட்டதலையும் பூவுலகிலிருந்ததென்று பதிதர்தாமே சொல்லவேண்டியிருக்கையி லதன்பிறகிப்படிப்பட்ட காணப்படுந்தலை திருச்சபைக்குத் தேவையில்லை யென்பதென்ன.

எக. இதிலே பதிதர்சொல்லுந்தன்மையாவது அர்ச்.- சின்னப்ப ருரோமாபுரியார்க் கெழுதின நிருபத்து - ௰உ-ம். அதிகாரம் - ரு-ம். வசனத்தெழுதினதாவது. நாமொருங்குடன் கூடிக்கிறீஸ்துவினிடத்திலோருடலாகி நமக்குள்ளே பலவுறுப்புகளுமாக நிற்கிறோமென்றார். ஆகையாற் சேசுநாதர் திருச்சபையென்னு முடலுக்குத் தலையொழிய மற்றவர்கள்- அர்ச்.- இராயப்பரும்- பாப்புகளுமுதலாய் வேற்றுமையின்றித்தலையாயிராம லுறுப்புகளாக நிற்பார்களென்பது நிச்சயமாமேயென்று பதிதர் சொல்லுகிறார்கள். ஆகிலு மந்தவசனத்தைச்சொன்னவுடனே-அர்ச். சின்னப்பரெழுதினதாவது-இதிலே நாமடையும் வரப்பிரசாதங்களால் வேற்றுமையுண்டாமென்று தீர்க்கதரிசன மாதிக்கந் தயை பத்தி மற்ற வரப்பிரசாதங்களைச்சொல்லிக்கொண்டுவருகிறார். ஆகையா லதிலே-அர்ச் - சின்னப்பர் திருச்சபையில் வருந்தேவவரப்பிரசாதங்க ளெல்லாஞ்

சேசுநாதராகிய தலையினின்றுவருவதொழியவே றொருவராலும் வரவறியாமலிந்தவகையாற் சேசுநாதர்மாத்திரந் திருச்சபைத்தலையென்று மற்றவர்கள் - அர்ச்.- இராயப்பரும்-அர்ச்.- பாப்புகளுமுதலாய்ச் சேசுநாதரால் வரப்பிரசாதங்களையடையுமுறுப்புகளென்றுஞ் சொல்லிக்காட்டினார். இதுநாமுஞ் சொல்லுந்தன்மையல்லோ. தேவவரப்பிரசாதங்கள் - நமக்கு-அர்ச்.- இராயப்பராலேயாகிலு மற்ற-அர்ச்.- பாப்புக்களாலேயாகிலும்வராதென்றுமிந்தவகையால்-அர்ச். இராயப்பரும்-மற்ற- அர்ச்.- பாப்புகளுந் திருச்சபைத்தலைவரல்லவென்று மெல்லாரும் வேற்றுமையின்றிச் சேசுநாதர்தரும்வரங்களா லிரட்சிக்கப்படு முறுப்புக்களென்றும் வலியநாமுஞ்சொல்லுகிறோமே. இந்தத்தலைமை சேசுநாதருக்கு மாத்திரமாகி யவர்ஸ்தானத்திருந்து காணப்பட்டமுறையோடே நம்மைப்படிப்பித்தலு நடத்தலும்- அர்ச்.- இராயப்பருக்குமற்ற - அர்ச்.- பாப்புகளுக்கும் - சேசுநாதர் தந்த தலைமையென்று சொல்லத்தகும்.

எஉ. ஆகிலுமிதுமிகவுந் தெளியும்படிக்கு நாமறியவேண்டியதாவது. திருச்சபைத்தலைவர்செய்யத்தகு மிருதொழிலுண்டாம். முதலாவது ஞானத்திருச்சபை யாகையி லதிலேயுட்பட்ட யாவருக்கும் விசுவாசமுதலான ஞான வரப்பிரசாதங்களைக்கொடுப்பவராக வேண்டும். இந்தமுதற்றொழிலைச் சேசுநாதரொப்போது மிப்போதுந் தாமொருவர்செய்து தாமொருவரோ திருச்சபைத்தலைவரென்னப்படுவார். இரண்டாவது காணப்பட்ட திருச்சபையாகையி லதிலேயுட்பட்டயாவர்க்கும் விசுவசிக்கத்தகுஞ் சத்தியங்களையுஞ் செய்யத

தகுமுறைகளையு மறுக்கத்தகுந் தப்பிதங்களையுங் கண்ணுக்குக்காட்டலுங் காதிற்குச்சொல்லலுந் திருச்சபைத்தலைவர்க் கிரண்டாந்தொழிலாகும். இந்தத்தொழிலைச் சேசுநாதருயிரோடே யிங்கேதிரியும்போது தாமொருவர்செய்தார். மோக்ஷத்திலவர்போ யெங்கண்ணுக்ககன்றபின்பு தாமொருவர் செய்யாமல் - அர்ச்.- இராயப்பரையு மிவரைத் தொடர்ந்துவந்த மற்ற-அர்ச் - பாப்புக்களையுங்கொண்டு செய்யக்காணப்பட்ட திருச்சபைக்குக் காணப்படுந்தலைவராக வவர்களைவைத்துநடத்திக்கொண்டுவருகிறார். அப்படியே யிராசாதன்னுட்டைவிட்டு நெடுநாளகன்றிருந்தால்-தன்னிடத்திராசாவாக வாளும்படிக்கொருவனை வைப்பானல்லோ. ஆகிலுமிதனு லந்நாட்டி லிரண்டிராசாக்க ளாளுவார்களென்று சொல்லத் தகுமோ-இல்லையே. இராசாவொருவன் றனிருக்கும்போது தானேயாளுவானென்றுந் தா னகன்றபோது தான் றன்னிடத்துவைத்தமனிதனைக்கொண்டாளுவானென்றுஞ் சொல்லத்தகு மல்லோ. அவ்வண்ணமே சேசுநாதர்தாமிங்கிருக்கும்போது திருச்சபைத்தலைவராகத் தாமே யாண்டாரென்று மிப்பொழு தகன்றபின்பு தம்மிடமாகவைத்த திருச்சபைத் தலைவராகிய - அர்ச்.-பாப்பைக்கொண்டு தாமே யாண்டுகொண்டிருப்பவ ரென்றுஞ் சொல்லவேண்டிய முறைமைதானே. இதெல்லாமிப்படியிருக்கையி லுரோமான் றிருச்சபைமாத்திர மிந்நாள்வரைக்கும் வழுவாம னின்றதனுலுமதிலேமாத்திரம் வழுவாத முறையோடே திருச்சபைத்தலைவ ரிடைவிடாமற் றொடர்ந்து வந்ததனுலு முரோமான் றிருச்சபைமாத்திர மெய்யான சேசுநாதர் திருச்சபையென்று சொல்லத்தகுஞ்சத்தியந்தானே.

எ௬. ஆகையா லுரோமான் றிருச்சபை கத்தோலிக்கென்னப்படும். அதெப்படியென்றாற் கிறேக்பாஷை மொழியாகிய கத்தோலிக்கென்பதும் பொதுவாய்நிற்குமென்பது மொக்கும்.பொதுவாய்நிற்குந் திருச்சபை யென்பதற் கர்த்தமோவெனி லெக்குலத்தாரு மெவ்விடத்தாரு மெங்குமெப்போது மோக்ஷக்கரை யேறுதற்குரிய வழியிதுவென்று மதற்குவேண்டியவழியிதுவென்றுமிந்தத்திருச்சபையி லீடேற்றமுண்டல்லாதேயதன்புறத்தீடேற்ற மில்லையென்று மர்த்தமாகும். உரோமான்றிருச்சபை யிவ்வகைக்குணத்தை யுடையதென் றெப்பிக்கும் வழியோவெனிற் பதிதர்தாமே மெய்யான திருச்சபைக்கப்பாலேகரையேற்றமில்லையென்பார்கள். உரோமான்றிருச்சபைமாத்திர மெய்யான திருச்சபையென் றிப்போதொப்பித்தோமே. ஆகையா லுரோமான்றிருச்சபைக்கப்பாலே கரையேற்ற மில்லை. ஆகையாலுரோமான்றிருச்சபைமாத்திரஞ் சொன்ன குணத்தையுடையதாகிப்பொதுவாய்நிற்குந்திருச்சபையென்னத்தகும்.பதிதர்தாந் தம்மோடொவ்வாமற் பலவிபரீதங்களைச்சொல்லியிதிலேபிதற்றினதாவது.எந்தச்சமயத்திலேயாகிலும்-ஞானஸ்நானம்பெற்றுவிசுவாசத்தோ டிருந்தாற் கரையேறலாமென்றார்களாகிலுமெல்லாத்தையுமளவிறந்தஞானத்துடனேதெளிவாயறிந்தசர்வேசுரனிடத்துக்கள்ளக்காசுசெல்லு மென்றாற்போ லவரிடத்துப்பொய்யானவிசுவாசஞ்செல்லுமென்று நினைப்பார்களோ.மெய்யான விசுவாசமோவெனிலொன்றாயிருக்குமெய்யானதிருச்சபையிலொழியவதன்புறத்திருக்க மாட்டாதல்லோ. அதேதெனில் விபரீதமாய்நிற்கும் புறச்சமயங்களி லொன்றினைப்பற்

றீ யிவர்களாமென்ப வவர்களல்லவென்றதனலா
ண்டவ ராமுமல்லவுமொன்றினைப்பற்றிச் சொல்
லமாட்டாமையா லிரண்டிலொன் றவர் திருவுள
ம்பற்றினதல்ல. ஆகையாலவர் சொல்லாததைச்
சொன்னாரென்று நாம்விசுவசித்தாற்பொய்யான
விசுவாசமல்லோ. இப்படியிருக்கையில்-மெய்யா
ன் திருச்சபையில்லாதே மெய்யானவிசுவாச மில்
ல. விபரீதஞ் சொல்லமாட்டாதது-ஆண்டவ ரு
ண்டாக்கின மெய்யான திருச்சபையொன்றுமா
த்திரமே. ஆகையால்-மெய்யான திருச்சபையொ
ன்றிலேமாத்திர மெய்யான விசுவாசமுண்டென்
று சொல்லக்கடவோம். பதிதரோ வெனில்-மெ
ய்யான விசுவாசமின்றிக் கரையேற்றமில்லையென்
றொத்துக்கொள்ளுகிறார்கள். ஆகையால் - மெய்
யானதிருச்சபை யொன்றிலேமாத்திரங்கரையே
ற்றமுண்டென்று சொல்லவுங்கடவார்கள். மீள
வுமவனவன் றன்பாவங்களையாண்டவர்பொறுத்
தாரென்றுந் தான்கரையேறுவா னென்றுந் த
த்தளியாமல் விசுவசித்தாற் கரையேறுவானென்
று சொன்னபதிதர்தாமே யப்படிவிசுவசிக்க மா
ட்டார்களென்று மதனாற் கரையேற மாட்டார்க
ளென்று மெளிதாயொப்பிப்போம். அதெப்படி
யென்றால் வேதத்தி லெழுதினதை யொழிய வே
றொன்றும் விசுவசிக்க லாகாதென்று பதிதர்தா
மே சொல்லுகிறார்கள். இவற்கவற்காண்டவர்பா
வங்களைப் பொறுத்தாரென்று வேதத்திலெழுதப்
பட்டதல்லவே. ஆகையாற் றன்பாவம்பொறுக்க
ப்பட்டதென்று மதனாற் றான் கரையேறுவானெ
ன்றும் விசுவசிக்க லாகாதென்னவுங்கடவார்கள்.
இதனைத்தாங்கள் விசுவசிக்க மாட்டாமையாற் க
ரையேறவு மாட்டார்கள்.

எச. ஆகிலுமவர்கள் விசுவாசமென்னும்போது சர்வேசுரனருளிச்செய்ததை யுட்கொண்டநுசரிக்கும் விசுவாசமல்லகரையேறுவேனென்றஞ்சாத நம்பிக்கையென்று நினைக்கிறார்கள். அப்படி யொருவனெத்தனைபாவியாய் நடந்தாலுஞ் சேசுநாதர்பலத்தினாற் கரையேறுவேனென் றவன்றளராமல்-நம்பினமாத்திரத்துத் தப்பாது கரையேறுவானென்பார்கள். ஆகிலு மதிகெட்டவனம்பிக்கை யிதுதானல்லோ. இதோருவமையால் வெளியாகும்படிக்கு வடக்கிருக்கு நாட்டிராசாங்கமடைந்து முடியைச்சூடவரச்சொல்லி யழைக்கப்பட்ட வொருவன்கீழ்த்திசை நோக்கிப் போகையி லிதுவழியல்லவென்றார்க்கு - இதுவழியல்லதாயினு மந்நாட்டிற்சேருவேனென்று முடியைச்சூடுவேனென்றுஞ் சற்றுந் தளராமல் - நம்பியிருக்கிறேன். இந்த நம்பிக்கையால் வடக்குப்போகாமலும் வடநாட்டுரிற்சென் றிராசாங்க மடைவேனென்ற லவனையெல்லாரு மதிகெட்டவனென்று நகைப்பார்களொழியவவன்சொன்னதையொருவனாயினு மொத்துக்கொள்ளமாட்டான். அப்படியே மோக்ஷவிராச்சியத்திற்சேர்ந்துமுடியைச் சூடும்படிக்குத் தேவகற்பனை வழியாகையி லவ்வழிவிட்டுப் பாவமாகிய பெரும்பாதையிற் போகிறவன் சேருவேனென்றுங் கரையேறுவே னென்றுஞ் சற்றுமஞ்சாமல் - நம்பினாலுங் கரையேறுவானோ-இல்லையே. எப்படியுங் கரையேறுவானென்று மதிகெட்டவனொழிய வநுசரிப்பாருமில்லை. அர்ச்.-மத்தேயுஸெழுதினசுவிசேஷத்து - ௰கூ-ம். அதிகாரம் - ௰சா-ம். வசனத்தொருவன் சேசுநாதனையண்டிச் சுவாமீ யென்னத்தைச்செய்து நித்தியசீவனை யடைவேனென்றான். அ

றற்குச்சேசுநாதர் நித்தியசிவனை யடையவேண் மொகில தனையடைவாயென்று சந்தேகப்படா ல் - நம்புவாயாகவென்றுரோ - இல்லையே. அ டையவேண்டுமாறுற் றேவகற்பனைமீறுமற் காப் பாயாகவென்றுரல்லோ - அப்படியே - அர்ச்.- பாகப்பபொழுதின நிருபத்து - உ-ம். அதிகாரம் யிசு-ம். வசனத்துச் சொன்னதாவது தம்பிமா ா விசுவாசத்தைக்கொண்டிருக்கிறேனென் றெ நவனல்லொழுக்கமில்லானுகிற் பலனென்ன. அ வனைவிசுவாச மீடேற்றலாமோவென்றுர். மீளவு வர் தாமங்கேதானே - உயி-ம். வசனத்து நல் லொழுக்கமில்லாத விசுவாச முயிரில்லாத பிண ம்மயென்றுர். ஆகையால் விசுவாசமுள்ளவன் க ரையேறுவானென்று பலவிடத்து வேதத்திலெ ழுதப்பட்டது மெய்தானுயினுமதற்கர்த்தமேதெ னில் விசுவாசஞ் சகலபுண்ணியங்களுக்குமோக்ஷ பிராச்சியத்துக்கும் வாசலாகி யாண்டவர் திருவு ளம்பற்றினதை விசுவசியாதவன் கரையேறமாட் டான். ஆகிலும் விசுவசித்தாலு நம்பினுலுந் தே வகற்பனையின்படியே நடவாதவனுங் கரையேற மாட்டானென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படி யே காமாதுரர் கள்ளர் - உலோபிகள் விசுவாச மில்லாமற் பசாசாராதனை செய்தவர்களோடே மோக்ஷவிராச்சியத்தை யடையார்க ளென்று அர்ச்.-சின்னப்பர்சொன்னதுமல்லாதேயித்தொ கைப்பட்ட வசனங்கள் வேதத்திலெங்குமெழுத ப்பட்டதனுற் புண்ணியநடக்கையில்லாதவிசுவா சமு நம்பிக்கையு மீடேற்றத்துக்குப் போதுமெ ன்று சொல்லவுங்கருதவுங் கூடாது. ஆகையாற் சேசுநாதருண்டாக்கின மெய்யான திருச்சபை யொன்றிலேமாத்திரஞ் சேசுநாதர் பாடுபட்டப

லன்களுண்டாகி யதிலேமாத்திர மெய்யானவிசு
வாசமு மெய்யானபுண்ணியமு மெய்யான கரை
யேற்றமு முண்டாம். ஆகையால் - முன்னெப்பி
த்தபடி யுரோமான் றிருச்சபைமாத்திரமே சேச
நாதரா லுண்டாக்கப்பட்ட மெய்யான திருச்சபை
யாகையி லதிலேமாத்திர மப்படிப்பட்ட விசுவாச
மும் புண்ணியமு மீடேற்றமுமுண்டாகி யதனுட்
படாம லொருவரு மோக்ஷக்கரை யேறமாட்டாப
லெவர்க்கும் பொதுவாய் நிற்குந் திருச்சபை ய
ரோமான் றிருச்சபைதானே.

எரு. ஆகையால்- ஞானஸ்நானம்பெற்றலு மு
ரோமான்றிருச்சபைக்கப்பாலே நின்ற யாவருப்
பொதுச்சபையுணர்ச்சிகளைவிட்டுவிசேஷவபத்த
விதிகளை யநுசரித்தவராகையில் வடமொழியாற்
பதிதரென்றுந் தமிழ்மொழியாற் புறச் சமயத்
தாரென்றுந் தங்கள்சமயத்தையுண்டுபண்ணின
வனைப்பற்றி லுத்தேரானிகளென்றுங் கல்வீனி
யானிகளென்றுஞ் சொல்லக்கடவார்கள். தரங்க
ம்பாடிப் பதிதரோவெனிற் றங்களைச் சுவிசேஷி
களென்பார்களாமாகிலும் பூர்வகாலத் துரோமா
புரிப்படைத்தலைவர் சங்கரித்த நாட்டின் பெயர்
தங்களுக் கெடுத்துக் கொண்டு - ஆப்பிரிக்கா
நாட்டைக் கெடுத்தவன் - ஆபிரிக்கா னெ
ன்றுஞ் செருமானியவிராச்சியத்தைக் கெடுத்தவ
ன் செருமானிக்கென்றும் - ஆசியா சீர்மையைக்
கெடுத்தவன் - ஆசியாதிக்கென்றும் பெயராகக்
கொண்டார்கள். இத்தன்மையா லந்தப் பதிதரு
ஞ் சுவிசேஷத்தைக் கெடுத்தார்களென்ற வடை
யாளமாகச் சுவிசேஷிகளென்றும் பெயர்வேண்
டுமாகிற் செல்லுமொழிய லுத்தேர்சொன்ன வப
த்தங்களை யநுசரித்தவராகையி லுத்தேரானிக

ளென்றும் லுத்தேர்மதக்காரரென்றுஞ் சொல்ல படுவார்கள். இல்லாவிட்டால் - லுத்தேர் தப்ப றக்காரனென்றும் லுத்தேர்மத மீடேற்ற மில் ாதுதென்றுந் தாங்களுமறுத்து வெறுக்கக் கட ார்கள்.

௰-ம். அதிகார முற்றிற்று.

## ௰௧-ம். அதிகாரம்.

### உத்தரிக்கிறஸ்தல விளக்கம்.

எசூ. கத்தோலிக்குரோமான் திருச்சபைவழு னதென் றெப்பிக்க வதிலே வழங்கிவரும் பலவி கசியங்களு நடந்துவரும் பலமுறைகளு மபத்த மன்று பதிதர் நிந்தையாகச் சொல்லிக்காட்டப் ரயாசப்படுகிறார்கள். அதுகளிற் சொன்னபலவு மாழிய முதலாவதுத்தரிக்கிற ஸ்தலந்தானே. துவேதப் புஸ்தகங்களி லறிவிக்கப்படாமல்-ம ிதனாயேய்க்க வுண்டுபண்ணின வீண்கதையெ ாறு கல்வீனியானிகளும்லுத்தேரானிகளுஞ்சொ லிக்கொண்டு வருகிறார்கள். ஆகிலுமிதிலே நா தெளிவோடே நடக்கும்படிக்குக் கத்தோலிக்கு ராமான்திருச்சபை படிப்பிக்குந்தன்மையா லு தரிக்கிறஸ்தலமேதென்று முந்திக்காட்டக் கட வாம். ஆகையா லிதிலே வேதபாரகர் பொதுப் -ச்சொல்லுந் தன்மையாவது. பூமியின்கீழே ா லுபாதாளங்களுண்டாம் - எல்லாத்துக்குங்கீ ழ முடியாதநரகம் - இதன்மே லுத்தரிக்கிற ஸ் லம்-இதன்மேல் - ஞானஸ்நானம்பெறுமற்செ தவறிவில்லாத குழந்தைகள் கிடக்கும் ஸ்தலம் தன்மேல் - அபராகாமடியென்னும் பிதாக்கள்

ஸ்தலமென்னு நம்முடையகர்த்தராகிய சேசுநா
தர் நமக்குவேண்டிப் பாடுபட்டு மோக்ஷ வாசலை
த் திறக்குமட்டு மோக்ஷத்தை யடையப்பேறுபெ
ற்ற மகாத்துமாக்கள் கஸ்தியொன்றின்றிமோக்ஷ
தரிசனமுமின்றி யிரட்சிக்குங்கர்த்தர் வருவாரெ
ன்று நம்பிக்காத்துக்கொண்டிருந்த ஸ்தலம். இ
திலே சேசுநாதர் மரணத்தையடைந்த வுடனே
யிறங்கி யந்தப்பிதாக்களுக்குப் பேரின்ப தரிசன
த்தைத் தந்து—அவர்களை மோக்ஷ விராச்சியத்து
க்குக் கூட்டிக்கொண்டுபோனதினு லிப்பொழு த
ங்கே யொருவருமில்லை. அதன்கீழிருக்குங் குழ
தைகளோவெனில் வேறொரு வருத்தமன்றித்தே
வதரிசனமில்லாமையா லென்றென்றைக்கு மன
ல் வருந்திக்களையேற்றமின்றிக் கிடப்பார்கள். ந
கத்துப் புதைக்கப்பட்ட பாவிகளோவெனி லெ
காலமு மோக்ஷதரிசன மடையாமல் வேறேநன்
மையு மாறுதலுமில்லாம லக்கினிமுதற் றுன்ப
களெல்லா மொருங்குடன் கலந்துமிகுந்து கூடி
பசாசுஞ்சூழ்ந்து—அங்கேவிழுந்தநாள் — துவக்
னவுபாதி யெந்நாளு முடியாமலு மோயாமலு
குறையாமலுஞ் சினத்தோடவ்வுயிர்களை வருத்த
வர்களும் வேகாமல்வெந்து சாகாமற்செத்து மு
யாதகாலத் துபாதிக்கப்படுவார்களென்று சத்
யந்தானே.

எஎ. உத்தரிக்கிறஸ்தலத்திலோவெனிற் பே
ன்பதேவதரிசன மில்லாமையால் வரும் வருத்த
ல்லாதே யக்கினிமுதற் பலவுபாதிகளுண்டாம். இ
திலேயுபாதிக்கப்படுவ தாரெனின் மெய்யானகட
வுளை வணங்காத வக்கியானிகளு மல்ல. சேசுநா
தர்ஸ்தாபித்த மெய்யான திருச்சபையினின்றுபி
ந்த பதிதருமல்ல, சாவானபாவத்தோடே செத்

கிறீஸ்துவருமல்ல. இவர்களெல்லாருந்தேவ-இஷ்டப்பிரசாதமின்றி யாண்டவருக்குத் துரோகிகளாய்ச் செத்ததனாற்பசாசுகளோடென்றென்றைக்கு)நரகத்தி லுபாதிக்கப்படுவார்களென்று நம்மோ டிந்நாட்பதிதருஞ் சொல்லுகிறார்கள். ஆகையா லிந்தவிஷயத்திலே முந்தியறிய வேண்டினதாவது - இஷ்டப்பிரசாதத்தோடே செத்தவர்களுக்குள்ளே நரகத்திற்போவாரில்லை. சாவானபாவத்தாலொழிய வற்பகுற்றங்களா லிஷ்டப்பிரசாதம் போக்கடிப்பாருமில்லை. ஆகையாற்சாவானபாவங்களின்றி யற்பகுற்றங்களோடே செத்த கிறீஸ்துவர்களுக்குள்ளே நரகத்திற் போவாரில்லை. ஆயினு மற்பகுற்றத்தோடுமுதலாய் மோக்ஷந்திற்சேரப்படாதென்று - அர்ச். அருளப்பர்கண்டகாட்சியில்- உக-ம். அதிகாரம் - உஎ-ம். வசனத்தெழுதிவைத்தார். ஆகையாற் சாவானபாவமின்றி யற்பகுற்றங்களோடே செத்தவர்கள் - மோக்ஷத்துக்குச் சேருமுன்னே யந்தவற்பகுற்றங்களுக் குத்தரித்துச் சுத்தராகக் கடவார்கள். இதுவே நாஞ்சொல்லு முத்தரிக்கிறஸ்தலம். மீளவு நாமனம்பொருந்திச்செய்த சாவானபாவத்தால் - நமக்கிரண்டுகேடுண்டாம். பாவதோஷமுமபராதக்கடனும்பாவதோஷத்தாலிஷ்டப்பிரசாதத்தைப் போக்கடித்துச் சுவாமித் துரோகிகளாவோம். அபராதக்கடனாலோவெனி லந்தத்தோஷந்தீராதேபோனால்-நரகத்திலென்றென்றைக்கும்வேகநம்மேற் கடனுண்டாம். ஆண்டவர் நம்முடையபாவத்தைப்பொறுத்திஷ்டப்பிர சாதத்தைத்தந்துசொன்னதோஷம்போனாலு நித்தியவபராதக்கடனேயநித்தியமாகி நாமேவருந்தியதனையுத்தரிக்கக்கடவோம். ஆகையால்-ஞானஸ்நானத்துக்

குப்பிறகுசெய்தபாவத்தால்-மனநொந்து கர்த்த
ர்கட்டளையிட்டபச்சாத்தாபத்தோடு திரும்பினவ
னுக்காண்டவர் தமதிஷ்டப்பிரசாதத்தைத்தந்து
சொன்னதோஷமு நித்திய வபராதக்கடனுந் தீரு
மென்பது நிச்சயந்தானே. ஆகிலு ஞானஸ்நானத்
திலேபாவதோஷமு மபராதக்கடனு மெல்லாமுழு
தும்பொறுக்கப்படுவதல்லாதே யதற்குப்பிறகுசெ
ய்தபாவத்தினின்று திரும்பினவெல்லாருக்கு மெ
ப்போது நித்தியவபராதக் கடனில்லாதபடிக்குமு
ழுதுமதையோ ரோரிடத்திலொழிய வாண்டவர்
பொறுக்கவுமில்லை. அப்படியே - அரச ரிரண்டா
மாகமத்து - ௰௨-ம்.- அதிகாரம் ௰௩-ம். வசன
த்திற் பரதாரத்தைத்தீண்டித் தாவீதரசன்செய்
தபாவத்தினு லாண்டவர்க்கேற்க மனநொந்தழு
து திரும்பினவளவில் - நத்தானென்னுந் தீர்க்கத
ரிசிசொன்னதாவது சர்வேசுரனு முன்பாவத்தை
ப்பொறுந்தார். ஆயினு மக்கியானிகள்-தேவநா
மத்தைத்தூஷணிக்கக் காரணமானு யென்றதனு
லந்தப்பாவந்தா லுனக்குப் பிறந்தபிள்ளை சாகு
மென்ருர். இதோ பாவதோஷத்தை யாண்டவர்
பொறுத்தபின்பும் வந்தவாக்கினை. அப்படியே
மோயீசனெழுதின-௪-ம். ஆகமத்து-௰௨-ம். அதி
காரத்தி லவர்கூடப்பிறந்த மரியவென்பவளாண்
டவர்மேலே முறைப்பட்டதனு லெங்கும் வெண்கு
ஷ்ட வியாதியைக்கொண்டு மூடிக்கொள்ள மோ
யீசன்வேண்டுதலினு லாண்டவரிரங்கியவள்பாவ
த்தைப்பொறுத்தாலு மதன்பிறகு மேழுநாளட
ராதமாய் வியாதிதீராமற் கிடந்தாளல்லோ. அ
ப்படியே பாவம் பொறுக்கப்பட்டிருந்தாலு மின்
னமபராத முத்தரிக்கக் கடனிற்குமென்றதனுல்
அர்ச்.- மத்தேயுஸ் சுவிசேஷித்து - ௯-ம். அதிகா

ரம் - ௮-ம். வசனத்திலும் - அர்ச்.- லூக்காஸ்சு
விசேஷித்து - ௯-ம். அதிகாரம் - ௮-ம். வசனத்
திலும் - நாஞ்செய்யுந் தவமானது நல்லகனிகளை
ப்பழுத்துத்தரவேண்டுமென்றெழுதினதல்லோ.
இதற்கர்த்தமேதெனிற் பச்சாத்தாபமென்னுந்து
வத்தாற் பாவதோஷந்தீர்ந்தாலு மந்தப் பச்சா
த்தாபத்தின் பலனாக மரணபரியந்தந் தவத்தைவி
டாமற் பாவத்தி னபராதக்கடனை யுத்தரிப்பதற்
கேற்ற தருமங்களைச் செய்யக்கடவோமென்று கர்
த்தர திலேநமக்குப் படிப்பித்தார். அப்படியே யி
வ்வுலகரசர்முதலாய்க்கர்த்தத்துரோகத்தைச்செ
ய்தவனுக் கோரோரிடத்தைப்பொறுத்துத் தலை
பாக்கினைப்பொறுத்தாலும் வேறாக்கினை யபராத
மாயிடுவாரல்லோ. அப்படியே-அரசர்-௨-ம், ஆக
மத்து - ௯-ம். அதிகாரம் - ௰௯-ம். வசனத்தில்-
அப்னனொன்பவனோடே தாவீதரசன் சினேகத்
தைச்செய்தாலு மீக்கோ லென்பவனைக் கூட்டிக்
கொண்டு வந்தாலொழிய வென் முகத்தில் விழிக்
கவேண்டாமென்றார். மீளவு மதிலேதானே - ௰௪
ம்- அதிகாரம் - ௨௪-ம். வசனத்தில் - அப்சலோ
னென்னுந் தன்மகன்செய்த குற்றத்தைத் தாவீ
திராசன் பொறுத்ததற்கடையாளமாக வவன்றன்
வீட்டில் வந்திருக்க வுத்தாரஞ்செய்தாலு மபரா
தமா யென்முகத்தைக் காணவேண்டாமென்றார்.
இத்தொகைப்பட்ட பலவும்வேதத்திலெழுதப்பட்
டமையா லாண்டவர் பாவதோஷத்தைத் தீர்த்து
த் தமதிஷ்டப்பிரசாதத்தைத் தந்தாலும்பொது
முறையா லநித்தியவபராதக்கடன் முழுதுந்தீரா
மற்பாவிகள்மேலே கிடக்குமென்பது நிச்சயந்தா
னே.

௭௮. ஆகிலு மின்ன நாமும் பாவங்களுக்காக வு
த்தரிக்கக்கடவதோர் கடனமக் குண்டானாற் செசு

நாதர் பூரணமாயுத்தரித்துப் பாடுபட்டடைந்த வளவில்லாத பலன்களுக் கீனமாகுமென்றுபதிதர் ஞானிகளைப்போற்சொல்லி வேசிகளைப்போல் வெட்கமில்லாம லுரோமான் றிருச்சபையார் மேலே யில்லாதபொய்யெல்லா மிந்தவிஷயத்திலே சுக்கிக்கொண்டுவருகிறார்கள். அப்படியே தரங்கம்பாடியில் ௲௭௱௨௰௬-ம். வருஷத்திலே லூசித்தான் பாஷையி லச்சுப்பதித்துத் தந்த நமக்கு மவர்களுக்குமுள்ள வித்தியாசமென்னும் புஸ்தகத்தி னெட்டாம்வித்தியாசத்தி லவர்கள் சொன்ன பொய்களாவது. சேசுநாதர் சென்மப்பாவத்துக்காக மாத்திரமரித்தா ரென்றும்-அவரடைந்த மரணத்தினு லெம்பாவதோஷத்துக் குத்தரித்த தொழியப் பாவத்தினால்வரு மபராதக்கடனுக் குத்தரியாததினு லதற்கு நாமுத்தரிக்கக்கடவோமென்று நாஞ் சொன்னதாக வெழுதிவைத்தார்கள். ஆகிலு மிந்தவிரண்டபத்தங்களு முரோமான் றிருச்சபையாருக்குள்ளே யொருவராலாகிலுமெக்காலத்திலாகிலுஞ்சொல்லப்பட்டதல்ல. இதிலேயுரோமான் திருச்சபை யெப்போதுமிப்போதும் படிப்பித்த சத்தியத்தை யிங்கே சொல்லிக்காட்டுவோம். அதேதெனிற் சேசுநாதரொருவரோமனிதரனைவருஞ்செய்த வெல்லாப்பாவங்களுக்காக வுத்தரிக்க வல்லவ ரென்று மப்படியே சிலுவையி லறையுண்டடைந்த மரணத்தினாற் சென்மப்பாவத்துக்காகவுஞ் சகல கர்மப்பாவங்களுக்காகவும் பாவதோஷமு மபராதக்கடனுந் தீரவேண்டின முறையின்மேலு மளவில்லாத வுத்தமமேனாயா லுத்தரித்தாரென்று முரோமான்றிருச்சபை விசுவசிக்குஞ் சத்தியந்தானே. ஆகிலுந்தாமடைந்த பலனை நமக்குத்தரத்திருவுளமாகி யதற்களவும்வகையு மவர் தஞ்சித்தத்தி

ன்படியே ஸ்தாபிக்க வல்லவரல்லோ. ஆகையா லொன்றிற் றுமடைந்தபலன்கள் பூரணதனித்து யைமுறையால்-நமக்குதவச்சித்தமாகிப்பாவதோ ஷமும் பராதக்கடனு முழுதும்பொறுக்க வல்லவ ர்தாமே. ஒன்றிற்றயையோடேகூடினநீதிமுறை யாற் பாவதோஷந்தீர்ந்து நித்தியவபராதக்கட ன் முழுதுந்தீராமல் மாற்றியநித்திய வபராதக்க டனைப் பொறுக்கவல்லவர்தாமே. முதல்வகை ய ளவில்லாத தயைக்குரியதாகையில் ஞானஸ்நான த்திலந்த வுத்தமவகையால் மனிதர்பாவங்களைப் பொறுக்கிறுர். ஆதலால் ஞானஸ்நானத்துக்குமு ந்திச்செய்த பாவங்களுக்காக வுத்தரிக்கும்படிக் க ற்பக்கடனுகிலுந்மக்கு நிற்கிறதில்லையென்றேம். ஆ கிலுமிந்தச்சகாய நன்றியறியமாட்டாமல் ஞான ஸ்நானம்பெற்றபின்பு செய்தபாவம் பச்சாத்தா பத்தாற் பொறுக்கும்போது தயையோடேகூடி னநீதிமுறையாற் பாவதோஷமு நித்தியவபராத க்கடனும் பொறுப்பதொழிய நாமுஞ்சிலநாட் சி லதவங்களைச்செய்து சிலதுன்பங்களை யநுபவித் துத்தரிக்கத்தகு மநித்தியவபராதக்கடனிற்குமெ ன்றேம். இதுவுஞ்சேசுநாதர் பாடுபட்டடைந்த பலன்களுக்கீனமல்ல. சென்மப்பாவத்துக்காக மு ழுதும் பூரணமாய்ச் சேசுநாத ருத்தரித்தா ரல் லோ. அப்படியாகிலுஞ் சென்மப்பாவத்தால்வந் த மரணக்கடன்றீர்ந்ததோ வில்லையே. அந்தக்க டன் றீராமையா லதற்காக வுத்தரித்தாண்டவ ர டைந்த பலன்களுக் கீனமோவென்ன. ஆகையா ற்சேசுநாதர்செய்த வுத்தரிப்புப்போதாததனு லி ந்தக்கடனிற்கு மென்று லவருக்கீன ந்தார்னே. இது நாஞ்சொல்லுந் தன்மையல்ல. தாமடைந்த பல னை யவ்வளவுமாத்திர நமக்குக்கொடுக்கச் சித்த

மாகிக் கட்டளையிட்டதனால் நிற்குங்கட னென்
றுசொல்லுகிறோம். இதுவு நியாயத்தின்படியே க
ட்டளையிட்டதுதானே. தயையோடேகூடத் தம
துநீதிவிளங்கவும் பாவத்தினகோரந் தோன்றவு
மாக்கினைக்கஞ்சி நாம்பாவங்களையதிகமாய்வெறுக்
கவும்அர்ச்.-சின்னப்பர்-அ-ம். அதிகாரம்-௰எ-ம்.
வசனத்திலுரோமாபுரியாருக் கெழுதினற் போ
லேகிறீஸ்துவோடே மோக்ஷத்தில்வாழ வவரோ
டிங்கே கஸ்திப்பட்டுப் பொறுமைகாட்டவு முழு
து ம்பராதக்கடனைப் பொறமல் நித்திய வபராத
மநித்தியமாகத்திருவுளமானார். மீளவும் பிறகுநிற்
குங்கடனை யுத்தரிக்க நாஞ்செய்யுந் தருமமெல்
லா மவர்பாடுபட்டடைந்த பலனு லுதவுமொழிய
வதில்லாமலுத்தரிக்க நமக்கொருவல்லமையு மில்
லையென்று விசுவசிக்கக்கடவோம். இத்தன்மையா
ல் நிற்குமபராதக்கடனென்றிவ்வுலகிற் சாகுமு
ன்னே தவத்தாலுந் தருமங்களினலுந் தீரவேண்
டியது, ஒன்றிலிங்கே முழுதுந் தீராமற் செத்தா
லுத்தரிக்கிறஸ்தலத்திற் றீரவேண்டியதென்று
சொல்லக்கடவோம். இந்தக்கட னெவ்வொருத்த
னுக்கு வெவ்வேறாகையி லொவ்வொருத்த னுத்த
ரிக்கிறஸ்தலத்தி லனுபவிக்கும்வேதனை யகோரமு
நாளளவும் வெவ்வேறாகுமென்று சொல்லுவோம்.

எகூ. பின்னையுஞ் சலொமோனெழுதின உ-ம்.
ஆகமத்து -கூ-ம். அதிகாரம்-ரு-ம்.- வசனத்திற்
செத்தவர்கள்-நவமா யொருபலனு மடையார்க
ளென்றார். அப்படியேவேதத்திலே பலவிடத்துச்
சொன்னபடி யிந்தக்காலமாத்திரம் பலனையடை
யுங்காலமாகையி லுத்தரிக்கிறஸ்தலத்திற் கிடக்கு
மாத்துமங்களெல்லா மிஷ்டப்பிரசாதமுதலானவ
ரங்களாலும் விசுவாசம் பத்தி முதலான புண்ணி

ங்களாலு மாண்டவர்க்குகந்ததுக ளாயினுந் ந
க்குவேதனை குறைக்கவும் பலனையதிகமா யடைய
ும் வல்லமையில்லை. அங்கேகிடக்குமளவும் பலனை
விளைவிக்கும் புண்ணியமு மாக்கினைவிளைவிக்கும்
ாவமும் வரவறியாது. நாமோவென்னிற் பூசை
ிசபதான்முதலிய தருமங்களா லந்தவாத்துமங்
ளுக்குள்ள வேதனை குறையும்படிக்குச் செய்யவ
ிலமையுங் கடனுநமக்குண்டாமே. அர்ச்.- அகு
ல்தினென்பவர்-அர்ச்.- சின்னப்ப ரெழுதின தின்
மல் வியாக்கியானஞ்செய்த -௯௰௨-ம். பிரசங்
த்திலே சொன்னதாவது திருச்சபை வேண்டுத
ிலுலேயுந் திவ்வியபூசையினுலேயுந் தந்தபிச்சை
ிலுலேயுஞ் செத்தவர்களுக் குதவியாமென்பத
குச் சந்தேகமில்லையென்றார். அப்படியே - அப்
பாஸ்தலர்நாளிலே யிருந்த-அர்ச்.- சாந்தப்பர்
லகற்பனை ஸ்தாபித்த-அ-ம்.புஸ்தகம்-சஎ-ம்.அ
காரத்திற் செத்தவர்களுக்குவேண்டி யந்நாளி
ல பொதுவாய்வழங்கிச் சொல்லப்பட்டிருந்த
நடிதோர் மந்திரத்தை யெழுதிவைத்தார். அப்
பாஸ்தலர் நாளிலிருந்த - அர்ச்.- தியோனிசியு
ஸென்பவர்- எக்கிளேசியாஸ்திக்க வியேரற்கிய
வென்னும் புஸ்தகத்து - எ-ம்.அதிகாரம்-௬-ம்.பி
விலே செத்தவன்செய்திருந்த பாவங்களையாண்
வர் பொறுத்து மோக்ஷதரிசனத்தையவனுக்கு
கொடுக்கும்படி யவனுக்காக மேற்றிராணியார்
வண்டிக்கொள்ளும் வகை சொல்லிக்கொண்டுவ
கிறார். அப்படியே கர்த்தர் திருவவதாரத்தின்பி
ாபு-௩௰-ம். ஆண்டிலிருந்த தெற்துலியானென்
வர் சேவித்தவர்மூடியென்னும் புஸ்தகத்திற்செ
தவர்களுக்காக வேண்டுவது - அப்போஸ்தலர்
ார் சொல்ல வந்தமுறையென்றெழுதிவைத்தா

ர். அப்படியே-அப்போஸ்தலர்நாள் - முதற்கொண்டிந்நாள்வரைக்குந் திருச்சபையிலிருந்த வேதபாரகரெல்லாருஞ் சொல்லிக்கொண்டு வந்தார்கள். ஆகையாற் றிருச்சபையினின்று செத்தவர்களுக்கிரங்கி யவர்களுபாதிகுறையத் திவசமுதலாயின தருமங்களை நடத்திக்கொண்டுவருவது நமக்குநியாயமுங்கடனுமாமே. ஆகிலுந் தரங்கம்பாடியிலிருக்கும் லுத்தேரானிகள்-மோக்ஷ நரகமென்றிரண்டொழிய வுத்தரிக்கிறஸ்தல மில்லையென்று சொல்லிக்கொண்டுவருகையில் - நடுநாட்டிலேயனிதனைவிட்டுத் தம்மதத்திலே செத்தவர்களுக்கு மோக்ஷ விளக் கெடுப்பானேன். மோக்ஷவாசிகளுக் குதவிவேண்டுமோ. நரகவாசிகளுக் குதவியாகுமோ. இதற் கவர்கள்லெளகீகத்தைப்பற்றிச்செய்வோமென்றார்களாமாகிலும் பதிதரொழியலெளகீகத்தைப்பற்றித் தாமநுசரிக்கும் வேதசத்தியங்களை மறுத்து நடப்பவருண்டோ.

அ௰. இற்றைவரைக்குங் கத்தோலிக் குரோமான் றிருச்சபை படிப்பித்ததன்மையா லுத்தரிக்கிறஸ்தலமு மதற்கடுத்தடைவையும் வெளிப்படுத்தினோம். இப்பொழுதிங்கே யிப்படிப்பட்ட ஸ்தலமுண்டென் றெப்பிக்கக்கடவோம். இதிலேமுன்சொன்ன நியாயங்களினாலுத்தரிக்கிற ஸ்தல முண்டென்று தெளிவாய்க் கண்ணுடைய யாவருங் காண்பாராயினும் விசுவசிக்கத்தகுஞ் சத்திய மிதுவென்றுகாட்டவதனைவேதவுதாரணங்களினாலொப்பிப்போம், மக்கபெயிரண்டாமாகமத்து-௰௨-ம். அதிகாரத்தில்-யூதஸென்பவர் தம்படையிலேசெத்தவர்களுக்கு வேண்டிப்பூசைசெய்ய - எருசலேம்பட்டத்தி லிருந்தகோயிலுக்கு வெகுபணங்களையனுப்பினானென்று சொன்னபின்பு- ௪௩-ம். வசனத்தே

ழுதினதாவது – ஆகையாற் செத்தவர்களுடைய பாவக்கடன்தீர வவர்களுக்காக வேண்டிக்கொள்ளுவதே யுத்தம நினைவுதானே பலனுள்ள நினைவுதானே யென்றெழுதியிருக்கக்கண்டோம். ஆகையாற்செத்தவர்களுக்குந் தீரத்தகும் பாவக்கடனுண்டென்று மதனைத்தீர்க்க நம்மா லுதவியாகுமென்று மதனால்-முன்சொன்னபடி யுத்தரிக்கிறஸ்தமுண்டென்றும் வேத வுதாரணத்தாற் சொல்லக்கடவோம். பின்னையும் – அர்ச். – மத்தேயுஸெழுதினசுவிசேஷத்து–ஙஉ–ம். அதிகாரம்–ஈஉ–ம். வசனத்திலே சேசுநாதர் திருவுளம்பற்றினதாவது இஸ்பிரீத்துசாந்துவைத் தூஷணித்த பாவமிந்நாளிலேயுஞ் செத்தபின்பு வருநாளிலேயும் பொறுக்கப்படாத பாவமென்றார். ஆகையா லிந்தப்பாவஞ் செத்தபிற்பாடும் பொறுக்கப்படாதென்றுற் செத்தபிற்பாடும் பொறுக்கத்தகும் பாவமுமுண்டென்பதாகுமல்லோ. அப்படியே யொருவன்வைத்திருந்த மணியின்மேலே தனக் கிருக்கும்பிரியத்தைக் காட்ட விதையென் பிதாவுக்குங் கொடேனென்றுலென் பிதா கேட்ட யாவையுங் கொடுக்கவிருக்கிற நானிந்தமணியை யவருக்குங் கொடேனென்றபோ ததன்மே லெனக்கிருக்கும் பிரியத்தை யறியக்கடவீர்களென்றுற்போ லாயிறல்லோ. அத்தன்மையாற்சேசுநாதரும் – இஸ்பிரீத்துசாந்துவைத் தூஷித்த பாவத்தினகோரத்தைக்காட்ட விந்நாளிலேயுஞ் செத்த பின்பும் பொறுக்கப்படும் பாவங்களிருந்தாலு மிதுமாத்திரமெப்போதும் பொறுக்கப்படாதென்றார். ஆகையால் வேத நியாயங்களினுற் செத்தவர்களுக்குஞ் சிலபாவங்கள் பொறுக்கப்படு மிடமுண்டாம. உண்டானலதுவே நாஞ்சொல்லு முத்தரிக்கிறஸ்தலந்தானே.

அக. மீளவும் - அர்ச்.- சின்னப்பர் கொரிந்தியாருக்கெழுதின ௧௱நிருபத்து-௩-ம். அதிகாரம் -௰-ம். வசனந்துவக்கி யெழுதினதாவது. சர்வேசுரனெனக்குத்தந்த வரப்பிரசாதங்களினு லறிந்த சிற்பாசாரிய னடியஸ்திவார மிட்டேனல்லோ. நானிட்டவஸ்திவாரஞ் சேசுகிறீஸ்துதானே - இந்தவஸ்திவாரமொழிய வெவராலும் வேறேயிடவும்படாது, ஆகையால் - மற்றவரிந்த வஸ்திவாரத்தின்மேலே வேலைநடத்திக்கொண்டுவருவது சரிதானே. ஆகிலுந்தானடத்தினவேலையேதென் றவனவன் பார்க்கக்கடவான். இந்த வஸ்திவாரத்தின்மேலே பொன்வெள்ளி நவமணிகளென்றிவைகொண்டுவேலையேற்றினுலு மரம்வைக்கோல் செத்தையென்றிவைகொண்டு வேலை யேற்றினுலுந்தானே யினிவெளியாம். அதேதெனன்று லிதெல்லாத்தையும் மக்கினியால் விளங்கு மாண்டவருடைய நாள்வெளியர்க்குமே- அன்றுதானே யவனவன் செய்த வினையெப்படிக்கொத்ததென் றக்கினிதானே சோதித்துக்காட்டுமே - அன்று- யாதாமொருத்தன்வேலை யழியாதிருந்தா லவனேபலனடைவான். வேறேயா தாமொருத்தன்வேலைவெந்தழிந்தாற்சேதப்படுவானுயினு மந்தவேலைசெய்தவன்-நெருப்பிலேநடந்தவனைக்கரையேறுவானென்று-அர்ச்.-சின்னப்பரிவையெல்லாந்திருவுளம்பற்றினர். அர்ச்.-சின்னப்பரெழுதினதிலே சிலதுகளெவர்க்குங் கண்டுபிடிப்பதற்கரிதாமென்று-அர்ச். இராயப்ப ரெழுதினு ரல்லோ. அதுகளிலிப்போது சொன்ன வசனமிகவு மரியதென்று-அர்ச்.- அகுஸ்தீனெழுதிவைத்தார். ஆகிலும் - வேத பாரகரெல்லாருமிதிலே சொன்னதை யாராய்ந் தந்த வசனத்துக்குரிய வர்த்தத்தைக்காட்டப் பிரயாச

ப்படுவோம். ஆகையாற் கொரிந்தியருக் குறுதிப்
படும்படிக் குணர்ச்சிகளைச்சொல்ல - அர்ச்.- சின்
னப்பர் காட்டினவுவமையாவது முன்போட்டிருந்
த நல்லஸ்திவாரத்தின்மே லொருவ னவமணிக
ளாற் பொன்னாலும் வெள்ளியாலு மிசைபடச்சேர்
த்திச் சூழச்சுவர்களை யேற்றி மேலே யதுகளாலு
ம வடிவாக மூடித் தானுள்ளேவாழ்ந்திருக்க வே
றொருவ னப்படிப்பட்ட நல் லஸ்திவாரத்தின்மே
லே மரங்களாற்சுவர்களை யேற்றி வைக்கோலால்
மூடித் தானுள்ளே யிருக்கச்செய்தேயிருவகைவீ
ட்டிலொருவன் - நெருப்பை வைத்தால் - முன்
சொல்லப்பட்டவன் வீடழியாமலுந் தான் வருந்
தாமலும் வீற்றிருப்பானல்லோ. மரத்தாற்செய்ய
ப்பட்ட வீடோவெனில் வெந்தழிந்துமுழுதுஞ்சே
தமாய்ப்போகிறதுந்தவிர வதிலேயிருந்தவன்சா
காதபடிக்குச் சூழப்பற்றினநெருப்பிலேபாய்ந்து
நெருப்பினைமிதித்தோடி யங்கங்கே வெந்துபோ
ய் வருந்தினபின்பு பிழைப்பானொழியமற்றப்படிய
ல்லவென்று - அர்ச்.- சின்னப்பருவமையாக மனி
தருக்குச்சம்பவிக்குந் தன்மைகாட்டினார். ஆகிலு
மிதிலேயவர் சொன்னபடி யஸ்திவாரஞ்சேசுநா
தர்தாமே யவர் திருவுளம்பற்றினவேதந்தானே.
அஸ்திவார மிட்டவரோவெனில் - அப்போஸ்தல
ர மவர்கள்வழியாகச்சத்தியவேதத்தைப் போதிக்
குங் குருக்களு மிப்படியிவர்கள்சொன்ன வுபதே
சத்தினால் விசுவாசத்தோடே சத்தியத்தை யுட்
கொண்டு ஞானஸ்நானம்பெற்றயாவருந் தங்களி
டத்துச் சகலபுண்ணியங்களுக் கஸ்திவாரமாகச்
சேசுகிறீஸ்து நிற்பது நிச்சயந்தானே. அதன்மே
ற கந்தவஸ்திவாரத்தின்மேல் வீட்டைக்கட்டுகிற
வ ராரெனில் - அக்கியானிகளுமல்லபதிதருமல்ல.

அவர்கள் கிறீஸ்துவை யநுசரியாததிஞலு மிவர்கள் கிறீஸ்துவின் மெய்யானவேதத்தினின்று பிரிந்ததிஞலு மந்தவஸ்திவாரத்தை விட்டு நிலைகொள்ளாதமணல் - மேலே வேலைசெய்தவர்களென்னப்படுவார்கள். ஆகையாலக்கியானிகளும் பதிதரும் பொறுமைகாட்டிஞலுந் தானங் கொடுத்தாலுந் தவஞ்செய்தாலும் பலனென்றின்றியவையெல்லாமானவஸ்திவாரமில்லாமையாற் றனேயழிந்துவிழும் பொய்யானதருமங்களாகுமென்று வேதவுதாரணங்களா லறிவோம்.

ஆகையாற் சேசுநாதர் ஸ்தாபித்த மெய்யான திருச்சபை யுட்பட்டிருந்தவர் மாத்திர மந்தவஸ்திவாரத்தின்மேலே வீட்டை யேற்றினவரென்று சொல்லத்தகுமே. இவர்களுக்குள்ளேயும்விசுவாசம் - நம்பிக்கை பத்தி பொறை தவந் தான மற்றச்சுகிர்த நல்லறங்களை விடாமல் - நன்னெறி நடந்துகொண்டவரெல்லாரும் பொன் பணிவெள்ளிகொண் டழியாத வரமணைக் கட்டினவராக்கும். நெருப்பு முகத்தி லழியுமரவீட்டைக்கட்டி வைக்கோலால் - மூடினவராரெனில் - அவர்கள் கடைசியிலே நெருப்புவழியாகப்போய் வருந்திக் கரையேறிப் பிழைப்பார்களென்று - அர்ச்.- சின்னப்பர் சொன்னதஞற் காமங்கோப மாங்கார மற்றச்சாவான பாவங்களோடே செத்தவர்களல்லவென்று சொல்லக்கடவோம். அதேதெனற் சாவானபாவத்தைக்கொண்டு செத்தவன் முடியாதநரகத்தில் விழுந்தெந்நாளுங் கரையேற மாட்டானென்றிந்நாட்பதிதரு நம்மோடே சொல்லுகிருர்கள். ஆகையாற்சேசுகிறீஸ்துவாகியவஸ்திவாரத்தின்மேலே மரத்தாலும் வைக்கோலாலும் வீட்டை யேற்றினவராரெனிற் சத்தியவேதத்

தையநுசரித்துச் சாவானபாவங்களுக்கிடங்கொ
டாமற் செவ்வழியி லிடறியடிக்கடி யற்பப்பாவங்
களைக் கட்டிக்கொண்டுவருகிறவனொன்று சொல்ல
க்கடவோம். ஆகிலுமிதுஞான வீடாகையி லந்த
பஸ்திவாரத்தின்மே லவனவன்செய்தவேலை யிப்
போது கண்ணுற்காணப்படாமற் பூவுலகிற்செய்த
பற்ப தீவினையெல்லாஞ் சுட்டழிக்கு நெருப்பினுல்
விளங்கும். அதெப்படியெனிற் றனித்தீர்வைநாளி
லே யவனவன் செய்த தீவினையு நல்வினையுங்கர்த்
தர் நீதியக்கினியாற் சோதித்தாராய்ந் தோரத்
தகுற்றக் கலப்பின்றிப் பொன்னுமணியுமாகநின்
ற நல்வினைசெய்தவர்கள் பலனையடைய மரமும்
வைக்கோலுமாக வெந்தழியு மற்பதீவினை செய்த
வர்களந்தவினையாலொரு பிரயோசனமு மடை
யாம லதுகள்-முழுதும்வெந்தழிந்தது காண்பா
ர்கள். தாங்களோவெனிற் சாவானபாவமின்றியி
ஷ்டப்பிரசாதத்தோடே செத்ததனுற் கரையே
றுவார்கள். ஆயினு முன்னே நெருப்பிலே நடந்
துபோனுற்போல வுத்தரிக்கிறஸ்தலத்தி லநேக
நாள்வருந்தினபின்பு கரையேறுவார்க ளொழிய
மற்றப்படியல்ல. இதுவே அர்ச்.-சின்னப்பர் திரு
வுளம்பற்றினதற்குரிய வர்த்தமாமே. ஆகையாலி
ந்நாட்பதிதர் வேண்டாமென்றாலுஞ் சாவானபா
வங்களொழியத் தேவ - இஷ்டப்பிரசாதத்தைப்
போக்கடியாத வற்பபாவங்களுண்டென்று மந்த
ப்பாவங்களோடே செத்தவனுத்தரிக்கிற ஸ்தல
த்திலேகிடந்து நெருப்பினுற்சுத்தமாகி மோக்ஷக்
கரையேறுவானென்றும் வேதத்திலே சொல்ல
ப்பட்டது நிச்சயந்தானே. இப்படியே- அர்ச்.-
தெயொபிலும் - எரோணிமுசும் - அகுஸ்தினும்-
தேயோதொரேத்துமன்றி முதல்-௫௱- வருஷத்

திலே பதிதர் சொன்னபடி திருச்சபை வழவா திருக்கையில் வழங்கினவநேக வேதபாரக ரிந்த- அர்ச்.- சின்னப்பர்வசனத்துக் கர்த்தஞ்சொல்லி யுத்தரிக்கிறஸ்தல முண்டென்று ஸ்தாபித்தார் கள்.

அஉ. இதுவளவின்றி விரியுமென்றஞ்சி யுத்த ரிக்கிறஸ்தல முண்டென் றெப்பிப்பதற்குள்ள வி த்தொகைப்பட்ட பற்பலவேதவுதாரணங்களையெ டுத்துக்காட்டாமற் சொன்னதுபோதுமென் றிரு க்கிறேம். இதுவுந்தவிர வேதத்திலிதற் குதார ணங்க ளில்லாதாயினு முன்சொன்னபடியப்போ ஸ்தலர்நாளி லிருந்தவர்கள்-துவக்கி யிந்நாள்வ ரைக்கும் வழங்கின வேதபாரகரெல்லாருஞ்செத் தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுவது திருச்ச பைமுறைமையென்றெழுதி யதனை மறுத்தவரொ ருவருமில்லாமையா லப்போஸ்தலர் படிப்பனை யாற்றுவக்கித் திருச்சபையில்வழங்கின முறையி தென்று சொல்லக்கடவோம். ஆயினுமுத்தரிக்கி றஸ்தலமில்லாதாயின் செத்தவர்களுக்காகச் செ ய்தவேண்டுத லபத்தமாமே. ஆகையாற் செத்த வர்களுக்காக வேண்டுவது -அப்போஸ்தலர் படி ப்பனையால்வந்த திருச்சபைமுறையாகக் கொள் ள வுத்தரிக்கிறஸ்தல முண்டென் றப்போஸ்தல ர்படிப்பித்த விசுவாசமாமே. இந்தமுறையின் ப ழமை யுச்சிப்பகலினும் விளங்கினதனாற் கண்மூ டினபதிதரு மதனைக்கண்டு மறுக்க மாட்டாதே போனார்கள். அப்படியே பதிதனாகிய பெதுருமா ர்தீரென்பவன் முன்சொன்ன - அர்ச்.- சின்னப் பரதிகாரத்துக்கு வியாக்கியானஞ்செய்த புஸ்த கத்தி லெழுதினதாவது. திருச்சபை யெப்போது ஞ் செத்தவர்களுக்காகவேண்டிக்கொண்டமுறை

யை யெங்களுக்குச் சொல்லிவருகிறார்கள் - இது
மைய்தானே யென்றான். கல்வீனேவெனிற் கற்ப
னகளின் - ௯-ம். காண்டம் - ௫-ம். அதிகாரம்-
)-ம். பிரிவிலே சொன்னதாவது - இதற்கு முன்
னே - ௲௩௱- வருஷிந்துவக்கிச் செத்தவர்களுக்
5 வேண்டிப் பிரார்த்தித்துக் கொள்ளுவது நட
ந்தமுறைதானே. ஆகிலு முன்னிருந்த வெல்லா
5 மிடறித் தப்பிதமாய் நடந்தது சொல்லுகிறே
னென்றான். அப்படியே யப்போஸ்தலர் நாள்-மு
ற்கொண்டு சகல நூலினுந்தேர்ந்து சகலவறத்
லும் விளங்கித் தவத்தில்வழுவாமலிருந்த வேத
ாரகரெல்லாரு மொருவரு மறுத்துச் சொல்லா
லொருமொழியாய்த் தெளிந்து நிச்சயமாகச்
சான்னது தப்பிதமாகிக் கல்வீன் லுத்தேரோ
வொருவன் றன்னேடொவ்வாமற் சொன்னது
ாத்திரஞ் சத்தியவேதமாமோ. மீளவுஞ் சர்த்த
திருவவதாரஞ்செய்த - ௲௩௱௫-ம். ஆண்டிலி
ந்த - அயெரியென்பவன்மாத்திரஞ் செத்தவர்
ளுக்காகச் செய்தவேண்டுதல் பலனில்லாததெ
ாறான். ஆகிலு முடனே யவனைப்பதிதனென் றக்
ாலத்திருந்த வேதபாரகர் கண்டித்துத் தள்ளி
ர்கள். அப்படியே லுத்தேருக்குப்பிரியமான சி
ஷ்ஞகிய பிலிப்புமேலந்தோ னென்பவன் - அப்
பாலோசிய வென்னும் புஸ்தகத்திலே-௰௨-ம்.
ரிவிலெழுதிவைத்ததாவது. செத்தவர்களுக்கா
ச் செய்தவேண்டுதல் பலனில்லாததென்று -
யெரியென்பவன் சொன்னதாக - எப்பிப்பா
ரியென்பவர்சொல்லி யவனைக்கண்டிக்கிறார். நா
களுமிதிலே யயெரியென்பவனேடேகூடினதல்
வென்றான். ஆகையாலுத்தேரானிகளுஞ் செத்
வர்களுக்காகவேண்டுவது நல்லதென்று மற்

தவேண்டுதல் செத்தவர்களுக் குதவியாகுமென்னும்-அயெரிமீயாடே கூடாதபடிக்குச் சொல்லக்கடவார்கள். அதன்பின் புத்தரிக்கிறஸ்தலமில்லையென்று வெட்கமில்லாமற்சொல்லுவானேன். ஆகிலுமின்றுசொன்னதை நாளைமறுத்து விபரீதமாய்ச்சொல்லுவதெப்போதும் பதிதர்களுக்குள்ளமுறைதானே. லுத்தேரென்பவனெவ்வாதவிபரீதங்களைக்கூசாமற்சொல்லுகிறதிலே மாத்திரமெப்போதுந் தன்னோடொத்தவனாகிக்காற்றுமுகத்திலாடின கொடியைப்போலவுங் கள்ளுண்டவெறியாற் பிதற்றின பித்தனைப்போலவும்பொங்கினவலையோடு தளம்பிச்சுழலாநிற்குஞ்சுக்கானில்லாத படவுபோலவுந் தன்னினைவிலொரு நிலைகாணமவிநிலேயுஞ்சொன்ன விபரீதங்கள் -மெத்தவுண்டாம். முந்திமுந்தி லிப்பிசிக் தர்க்கத்திலே லுத்தேர்சொன்னதாவது - உத்தரிக்கிறஸ்தல முறுதியாய் விசுவசிக்கிறவனுமாயது வுண்டென்று நன்றாயறிந்தவனுமா யிருக்கிற நான் வேதத்திலே யிதற்கேற்ற வுதாரணங்களுண்டென்றெளிதா யொத்துக்கொள்ளுகிறே னென்றான். அதன்பிறகு விபரீதமாய்ச்சொல்லி யுத்தரிக்கிறஸ்தலமுண்டென்று வேதவுதாரணங்களினலொப்பிக்கப்படாதென்றான். உ-வது. அங்கே சிடக்கு மாத்துமங்களினிக் கரையேறுவதென் றறியார்களென்றான். ௩-வது - அங்கே யிருக்குந்தனையுந் தங்கள் பலன் வளரவுங் குறையவுஞ் செய்யவல்லதுகளென்றான். ௪-வது - ஓயாமலங்கேயந்த வாத்துமங்கள் சாவானபாவங்களைச் செய்துகொண்டு வருவதென்றான். ௫ - வது - திருச்சபைவேண்டுதலினலே தம் வேதனைகுறைந்து சீக்கிரமாய்மோக்ஷத்திற் சேரு மாத்துமங்களுக்கு

மோக்ஷபாக்கியமுங் குறையுமென்றான். இதெல்
லாம் விபரீதமாய்ச்சொன்ன தப்பிதங்களாயினு
முத்தரிக்கிறஸ்தலமுண்டென்றுமுந்தி நிச்சயித்
தல்லோ. இதெல்லாஞ் சொல்லுதற் கிடமுண்
டாகும்படியே யுத்தரிக்கிறஸ்தலமுண்டென் று
ரோமான்றிருச்சபைவிட்டுப் பிரிந்தபின்பும் லு
த்தேர்நெடுநாள் - நிச்சயமாய்ச் சொன்னதின்
மேலே யுரோமான்றிருச்சபைக்கு விரோதமாக
மோக்ஷமு நரகமு மல்லாம லுத்தரிக்கிறஸ்தல
மொன்றில்லையென்று தனிப்பூசை விலக்கும்புஸ்
தகத்தி லெழுதிச்சலஞ்சாதித்து வெட்கமல்லாம
ல் ஸ்தாபித்தான். அப்படியே யிந்நாட் பதிதரெ
ல்லாரு மிந்தத் தேவ சத்தியத்தை மறுத்து லு
த்தேரோடொத்ததா யுத்தரிக்கிற ஸ்தல மில்லை
யென்கிறார்கள். இதற்குச்சொல்லு நியாயமேதெ
னில் - அர்ச்.- மத்தேயுஸெழுதின சுவிசேஷத்தி
ன்-௨௰௫-ம்.அதிகாரம்- ௪௬-ம்.வசனத்திற்சேசு
நாதர் திருவுளம்பற்றினதாவது. பாவிகள்-முடி
யாதவாக்கினை யநுபவிக்கப்போய்நல்லவர்கள்-
நித்திய சீவியத்தை யடைவார்களென்றார். அப்
படிப் பற்பல விடத்து வேதத்தி லெழுதப்பட்ட
மையால்-மோக்ஷமு நரகமுமொழியச்செத்தவர்
கள் சேரும் வேறிடமில்லை யென்பார்கள். ஆகிலு
மதிலே சேசுநாதர் நடுத்தீர்க்கிறகாலத்து வர்த்
தமானத்தைச்சொல்லிக்கொண்டுவந்ததனா லவ
ர் திருவுளம்பற்றின வாக்கியத்தினால் - நடுத்தீர்
வைக்குப்பிறகு மோக்ஷமுநரகமுமொழிய வுத்த
ரிக்கிறஸ்தலமில்லையென்றுசொல்லத்தகும் -இது
வேநாமுஞ்சொல்லுந்தன்மைதானே. ஆகிலு ந
டுத்தீர்வைக்குமுன்னே யுத்தரிக்கிற ஸ்தல முண்
டென்று வேதவுதாரணங்களா லொப்பித்தோ

மல்லோ. மீளவும் பதிதர்சொல்லுநியாயமாவ
அர்ச்.- லூக்காஸ்சுவிசேஷத்தின் - உ௩-ம். அ
திகாரம்- ௪௩-ம்.வசனத்து நல்ல கள்ளனுக்குச்
சேசுநாதர் திருவுளம்பற்றினதாவது - இன்று
நம்மோடே மோக்ஷத்தி லிருப்பாயென்றார். மர
ணபரியந்தம்பாவியாய் நடந்தகள்ளன் சாகும்
போதுமாத்திரந் திரும்பி யுத்தரிக்கும்படிக் கப
ராதக்கட னவனுக்கில்லாதபோது - எவருத்தரி
க்கிறஸ்தலத்திற் கிடக்கக்கடவாரென்றார்கள். ஆ
கிலுமப்போஸ்தலர் முதலாய்ச் சேசுநாதனைக்
கைவிட்டபோ தந்தக்கள்ள னவரையறிந்த விசு
வாசமு மெல்லாருங்கேட்க வவரைத் துதித்த து
ணிவுந் தன்பாவங்களுக்காகப்பட்ட வுத்தம மன
ஸ்தாபமிகுதியுங் கடினமரணத்தையநுபவித்த
பொறுமையுந் தாழ்ச்சியு மற்றப் புண்ணியங்
களொருங்குடனந்த நல்லகள்ளனிடத்தி லிருந்
த வுத்தமமேரையாற் சேசுநாதரவன்பாவதோ
ஷிங்களைப் பொறுத்தொழிய வபராதக் கடனை
முழுதும்பொறுத் தன்றுதானே யவனுக்கு மோ
க்ஷத்தைத்தந்தார். ஆகிலுமெல்லாப்பாவிகருக்
கு மிப்படியாகும்படிக் கெல்லாரிடத்திலுமிப்படி
ப்பட்ட புண்ணியங்களு மந்தப் புண்ணியங்களி
ருந்த மேலான தன்மையு மெப்போதுங்கிடைக்
குமோவென்ன. இதுவுந்தவிர முன்- நான்சொ
ன்னபடி பொதுமுறையா லாண்டவ ரென்பாவ
தோஷித்தைப் பொறுக்கும்பொழுதி லபராதக்க
டனை முழுதுமெப்போதும்பொறுப்பவரல்ல. ஆ
கிலும் விசேஷதயையாலேயோரிடத்துத்தமத
ளவில்லாத நீதிஞானத்தின்படியேயொருத்தனு
க்கபராதக்கடனெல்லா மொருமித்துப் பொறுத்
தாலுமென்ன. ஆண்டவ ரொருமுறை யொருவர்

க்கிரங்கிச் செய்தவிசேஷ சகாயமெவர்க்குஞ்செய்யத்தகுமுறையென்னலாமோ. ஒருமுறையற்புதமாய்ச்சம்பவித்ததெப்போது முறையோ டாகுமென்றொருமுறை யொரு கழுதை பேசினதைக்கண்டால் - மற்றக்கழுதைகளும் பேசுமென்று பதிதர் நினைப்பார்களாக்கும். அப்படியானால் மோயீசனெழுதின - ச-ம். ஆகமத்து-உ௰உ-ம். அதிகாரம்-உ௰அ-ம். வசனத்தி லொரு கழுதை வாய்திறந்துபேசிப் பலாகாமென்பவற் குணர்ச்சிகளைச்சொல்லி யவன்சாகாதபடிக் கவனுயிரைக்காத்ததென்று வாசித்ததனாற் பதிதரெல்லாருந் தங்களுக்கொருகழுதையைத் தேடித் தங்களுக்கதுவேமந்திரியாகவுந் தம்முயிர்க்காவலாகவும் வைத்துக்கொள்ளக்கடவார்கள். இற்றைவரைக்கும் - சுலபமாயிங்கே நாஞ் சொல்லிக்காட்டின் நியாயங்களைச்சலஞ்சாதியாமலாராய்ந்துபார்க்கி லுத்தரிக்கிறஸ்தலமுரோமான்றிருச்சபைசொன்னபடியுண்டென்பது வேதத்திலூன்றிச் சந்தேகமற விளங்கி விசுவசிக்கத்தகுஞ் சத்தியமென்று நல்லறிவுடைய யாவருமெளிதாய்க் கண்டுசொல்லக்கடவார்கள். ஆகிலு மின்ன முத்தரிக்கிறஸ்தலமில்லையென் றியாதாமொருத்தன்சாதித்தா லவனுக்கு நரகமேயொழிய வுத்தரிக்கிறஸ்தலமில்லையென்பது நிச்சயந்தானே.

பதினோராமதிகார முற்றிற்று.

# ௰௨-ம். அதிகாரம்.

## தேவத்திரவிய - அநுமானங்கள் பொதுவிளக்கம்.

அ௬. நமக்குவேண்டிக்கர்த்தர்பாடுபட்டடைந்த பலன்களை நமக்குக்கொண்டுவிடு மெத்தனங்களாகச் சேசுநாதர்தாமே கட்டளையிட்ட தேவத்திரவிய - அநுமானங்களுக்கடுத்த விஷயத்திலே பதிதரெல்லாரும் பலதப்பிதங்களைச்சொல்லி யுரோமான்றிருச்சபை படிப்பிக்கு மிராசவழியை விட்டகன்றபின்பு தாங்களிடறிக்கெட்டதென்று தோன்றுதபடிக் குரோமான்றிருச்சபை வழுவினதென்று சொல்லக்கூசாதேபோனார்கள். அப்படியே பித்துமிஞ்சிக்கிடந்தவ னமிர் தமுங்கசக்குமென்பான். அப்படியே நிறையக்கள்ளுண்டவன் வீடாடுமென்பான். ஆகையா லிதிலே நாமும்பதிதருஞ் சொல்லுந் தன்மையைக் காட்டித் தீ முகத்திற் பொன்னுஞ் செம்பும் வேறுபடத் தோன்றினதுபோல வேதவுதாரண முகத்தில்-நாஞ்சொல்லுஞ்சத்தியமுமவர்கள்பிதற்று மபத்தமுந்தானே கண்ணுடையவர்க்கெல்லாந் தோன்றவெளியாக்கித் தருவோம். ஆகிலுமுந்தித்தேவத்திரவிய - அநுமானமேதென்று காட்டக்கடவோம். பஞ்சேந்திரியங்களாற்காணப்பட்ட பொருளாகிச் சர்வேசுரன் ஸ்தாபித்த கட்டளையினு விஷ்டப்பிரசாதத்தைக்காட்டவும் பயக்கவும் வல்லதுதேவத்திரவிய-அநுமானந்தானே. இதிப்படியாகக்கொள்ளத் தேவத்திரவிய அநுமானங்களெல்லா மாண்டவர்ஸ்தாபித்ததன்மையா விஷ்டப்பிரசாதத்தைப் புறத்தடையாளமாகக் காட்டவு மெத்தன காரணமாக வுள்ளேபயக்கவு ம

ருக்குரிய சுபாவமென்று சொல்லக்கடவோ. ஆதலா லப்போஸ்தலர்மேலே காண்பித்த க்கினிநாக்குக்க ளவர்களிடத்திலன்று புதிதா வந்த-இஷ்டப்பிரசாதத்தை யடையாளமாகக் ட்டினதொழியத் தானே யந்த விஷ்டப்பிர ாதத்தைப்பயத்த தல்லவென்றதனாலே யதுக - தேவத்திரவிய - அநுமானமென்றுசொல்ல கூடாது. மீளவு நல்லகள்ளனுக் காண்டவர் சி வையின்மேலே பாவங்களைப்பொறுத்துத் தம ஷ்டப்பிரசாதத்தைத்தந்தது சரிதானே. ஆகி ஞானஸ்நானத்திலும் பச்சாத்தாபத்திலுமாகி ப்போலே தந்தவிஷ்டப்பிரசாதத்தைக் காட் வடையாளம் புறத்திலில்லாததனாலதுவுந் தே த்திரவிய அநுமானமல்ல. ஆகையாற்றரங்கம் டியார் வேதசாஸ்திரமென்னும்புஸ்தகத்திலே நுமானமென்னுஞ் சொல் விட்டு - அதுகளை ானத்திரவியமென்ற தபத்தந்தானே. அதுக ாற் பயக்கப்பட்ட விஷ்டப்பிரசாதமே ஞானத் ரவியமென்னலாமொழிய வதனை யடையாள ாகக்காட்டிக் காரணமாகப்பயக்கு ஞானச் சட குகளைத் தேவத்திரவிய - அநுமானங்க ளென் க்கடவோம்.

அச. இதுவுந்தவிரப் புறத்துத் தோன்றின ாருளுயிரிடத்தி விஷ்டப்பிரசாதத்தைத் தா ன யுண்டாக்கத்தனக்கு வல்லமையுமில்லை பந் வல்லமை யதற்குப்படைப்புண்ட வொருவரா ம் வரக்கூடவுமில்லை. அப்படியேஞானஸ்நான் தி லொருவன்றலைமேல் விட்டதண்ணீ ரவன் ாவங்களைத் துடைத் தாத்துமத்தைக் கழுவத் ானே சுபாவமாய்வல்லதுமல்ல - அதற்கந்தவ லமைகொடுக்க மனிதருஞ்சம்மனசுகளும் வல்ல

வரல்ல. ஆதலாற் சர்வேசுரன் ஸ்தாபித்தகட்ட
ளையினால்-தேவத்திரவிய-அநுமானங்களிலிஷ்டப்
பிரசாதத்தை யெங்களிடத்திலேபயக்க வல்லதெ
ன்றோம். இந்த நியாயத்தைப்பற்றி யதுகளெல்
லா மப்போஸ்தலராலும் வேறொருவராலும் ஸ்
தாபிக்கப்படாமற் சேசுநாதராலேதானே யுண்
டாக்கப்பட்டதென்பது சத்தியமாமே. இந்தச்
சத்தியத்தைமறுத்தவன் - திறிதேந்தென்னு ந
கரிற்கூடின திருச்சபையாற் சாபிக்கப்பட்டவ
ன்றானே. ஆகையால் - மனிதர்தாமே நமக்குத்
தேவத்திரவிய - அநுமானங்களைக் கொடுப்பவ
ராயினு மதுகளெல்லா மாண்டவர்செய்கையாக
வொழிய மனிதர்செய்கையாகத் தம்பலனைத்தர
வுமில்லை. ஆகையாலதுகளைக்கொடுக்கிறவன் பா
வியானாலு மதனாற்றனக்குக்கேடாகுமல்லாதே ய
துகளைப்பெற்றவனுக் கிதனாற் குறையொன்றில்
லை. மீளவுமந்தநியாயத்தைப்பற்றி யொவ்வொரு
தேவத்திரவிய அநுமானத்தைக் கொடுக்கச் சே
சுநாதர்குறித்த வகை மனிதரொழிய வேறொருவ
னந்தச்சடங்கெல்லாஞ்செய்தாலு மந்த வார்த்
தையெல்லா முச்சரித்தாலுந் தான் பாவத்தைக்
கட்டிக்கொள்ளுவதல்லாதே தேவத்திரவிய - அ
நுமானமதனாலாவதில்லை. அப்படிக் குருக்களன்
றி யாராகிலுமப்பத்தைக் கையிலேந்தி யாசை
யோ டிதுவென் சரீரமென் றுயிரமுறை சொன்
னாலு மது நற்கருணையாகமாட்டாது. குறிக்கப்பட்
டமனிதர் முதலாய்ச்சேசுநாதர்ஸ்தாபித்தபொ
ருளுங் கட்டளையிட்டவார்த்தையுநினைத்த கருத்
து மில்லாதேசெய்தால்-தேவத்திரவியஅநுமா
னமாகவுமாட்டாது. அப்படியே தண்ணீரிடமாக
க்கள்ளைக்கொண்டொருவனைக்கழுவினாலுந் தண்

ணீரைக்கொண்டு கழுவிக்கற்பித்தவார்த்தையி லொன்றிரண்டுவிட்டாலுந் தண்ணீரைக்கொண்டு கழுவிச்சொல்லவேண்டியதைச்சொல்லிச்சேசுநாதர்கட்டளையிட்ட தேவத்திரவிய அநுமானத்தைத் திருச்சபைசெய்யுமுறையோடு தானுஞ்செய்யக்கருத்தில்லாமல் விளையாட்டுக்காகிலுஞ்சரவழக்குப் போக்குவதற்காகிலு மொருவனைக் கழுவினாலது ஞானஸ்நானமல்ல. இதெல்லாத்துக்கு நியாயமேதெனில்—தேவத்திரவிய — அநுமானங்களுக்கெல்லாஞ் சேசுநாதர் ஸ்தாபித்த கட்டளையினாலே மாத்திரம் பலனைக்கொடுக்க வல்லமையுண்டாகும். ஆகையா லவர்கட்டளையிட்ட பொருளாகிலும் வார்த்தையாகிலுங் கருத்தாகிலு மில்லாதாயினதுகளுக் கந்த வல்லமையு மில்லை. அதுகளும் வீண்சடங்குகளாகித் தேவத்திரவிய — அநுமானமென்னும்பெயரும் பலனுமதுகளுக் கிருக்கமாட்டாது.

அ௫. பின்னையுந் தேவத்திரவிய — அநுமானங்களைப் பெறப்போகிற யாவரு மதன்பலனை யடைய வறிவுள்ளவராகி லவர்களிடத்திலே விசுவாசமும் பச்சாத்தாபமும் வேண்டியதுதானே. ஆகிலுமந்தவிசுவாசமும் பச்சாத்தாபமு மவர்களிடத்திலேயிஷ்டப்பிரசாதத்துக்காயத்தஞ் செய்தொழிய வதனைப்பயக்குங்காரணமல்ல. அப்படியேயொளிபடாதபொருளை குறையில்லாத கண்ணாலுங் காணப்படாதல்லோ. ஆயினுங் கண்ணையொழிய வொளிதான் பார்வைக்குக்காரணமென்றுசொல்வாரில்லை. இதனா லொளியான்து பொருளைக்கண்டதென்று சொல்லாமற்கண்ணேயொளிபட்ட பொருளைக்கண்டதென்பாரிதிலேயுமுரியமுறையோடு சொல்லும்படிக்குப்பார்வைக்

குக்கண்ணெத்தனகாரண மாகையிற்பொருளை
கண்கண்டதென்னுமல் - மனிதன்கண்ணு வெ
ளிபட்ட பொருளைக்கண்டானென்பது நியாய ம
லோ. அப்படியே ஞானவொளியாகிய விசுவா
முதலிய வாயத்தமில்லாதவனிடத்திலே தேவ
திரவிய - அநுமானங்க ளிஷ்டப்பிரசாதத்தை
பயக்கமாட்டாதாயினு மந்தவிஷ்டப் பிரசாத
துக் கவன்விசுவாசங் காரணமென்று சொல்ல
படாமல் - ஒன்றில்விசுவாசத்தா லாயத்தப் பட்
டவனுக்குத் தேவத்திரவிய - அநுமானங்க ள
ஷ்டப்பிரசாதத்தைப் பயத்ததென்போம். ஒ
றி லிதிலேயு முரியமுறையோடே சர்வேசுரனெ
த்தனகாரணமாகத் தேவத்திரவிய - அநுமான
ங்களைக்கொண் டாயத்தப்பட்டவனுக் கிஷ்டப்
ரசாதத்தை யுண்டாக்கித் தந்தானென்று செ
ல்லக்கடவோம்.

அ௬. இந்தச்சத்தியத்தோ டொவ்வாமற் ப
திதர் பலவபத்தங்களைப் பிதற்றினார்கள். லுத்தே
ரு மவன்பிரியசீஷனாகிய மேலந்தோனுங் கல்வ
னும் பலருந் துவக்கத்திலே நினைத்த வபத்த
த்தைத் தாங்களே மறைவில்லாமற் சொல்லித்தே
வத்திரவிய-அநுமானங்க ளிஷ்டப்பிர சாதத்த
க்குச் சற்றுந் தாமே காரணமாகாம லாண்ட
ர் நமக்குத்தந்த வார்த்தைப்பாடுகளுக் கடையா
ளமாக மாத்திர நிற்குமென்றும் விசுவாசமொன்
றே மனிதரிடத்தி லிஷ்டப்பிரசாதத்தைப் பய
கிறதென்று மெழுதி வைத்தார்கள். லுத்தேர்
௲௫௱௨௰ - ம். ஆண்டிற் பபிலோனடிமைத்
னமென்னும் புஸ்தகத்தில் - ஞானஸ்நான வ
காரத்தெழுதினதாவது. விசுவாசமொழிய ஞ
னஸ்நான மொருவருக்கு மிஷ்டப்பிரசாதத்தை

க் கொடுக்கவுமில்லை பிரயோசனமாகவு மில்லை
யென்றான். மேலந்தோன் - ௲௫௱௯௰-ம். ஆ
ண்டிலே தந்த - அப்போலோசியென்னும் புஸ்
தகத்தின் - ௰௯-ம். பிரிவிலே தேவத்திரவிய-அ
நுமானங்களாண்டவர் தந்த வார்த்தைப்பாடு
களைக் காட்டுஞ் சித்திரங்களென்றான். கல்வீன்க
பனைகளின் - ௪-ம். காண்டத்து - ௰௪-ம். அதி
காரம் - ௰௭-ம். பிரிவி லெழுதினதாவது. தேவ
த்திரவிய - அநுமானங்க ளிஷ்டப்பிரசாதத்தை
த்தந்து நம்மையாண்டவருக் குகந்தவர்க ளாக்
குஞ் சடங்கல்ல. ஆண்டவர் தம்மேலேவைத்த
மையை யடையாளமாகக் காட்டலே மாத்திர
துகளால் வரும் பலனென்றான். இந்தவபத்தத்
த யிப்படி வெளியாகச்சொன்னபின் புரோமா
திருச்சபையார் சொன்ன நியாயங்களை மறுக்
மாட்டாமையாற், பதிதர்க்குள்ள முறையோடு
வஷிமாறி யடிபட்ட கள்ளன் றன்றிருட்டை ம
றக்கும் போக்குத்தேடினதுபோல வவர்களு
ன் வெளியாகச்சொன்ன வபத்தத்தைவெட்க
தின லுள்ளேயடக்கிப் புறத்துத்தோன்றா மூ
தில் - நாமே சொன்னபடி தாங்களுஞ் சொ
லத்துவக்கினார்கள். அப்படியே முன்காட்டின
ன்மையால் - ஞானஸ்நான மொருவருக்கு மு
வாதென்ற லுத்தேர் - ௰௫ வருஷத்துக்குப்பி
கு - ௲௫௱௯௫-ம். ஆண்டிலே தந்த ஞானஸ்
ான முதற்பிரசங்கத்திலே யவன் றன்சொன்ன
ாவது நமக்குதவும்படிக்குச் சரீரத்துக்கடுத்த ந
ன்மைகளைக் கொடாமல் - நமக்குநித்திய இஷ்ட
ப்பிரசாதத்தை நித்திய தூய்மையை நித்திய
வியத்தைத் தரும்படிக்குஞானஸ்நானம்ஸ்தா
க்கப்பட்டதென்றான். கல்வீன் றனுந் திறிதே

ந்தென்றுநகரிற் கூடினதிருச்சபை கற்பித்ததற்கு விரோதமாயெழுதின புஸ்தகத்தி லேழாநாட் கூட்டத்திற் செய்த -ரு-ம். கற்பனை விஷயத்தி லவன்சொன்ன த்தாவது தேவத்திரவிய-அநுமானங்கள் - நமக்குவரத்தகு மிஷ்டப்பிரசாதத்தி னுத்தனகாரணங்களென் றெப்போது நினைக்கக்கடவோ மென்றான். மற்றப்பதிதரு மப்படித்தானே பிறகு சொல்லிக்கொண்டுவந்தார்கள். இதிலேநாஞ்சொல்லுஞ் சத்தியத்துக் கொவ்வாத தொன்றுமில்லையென்று தோன்றுமல்லோ. ஆகிலும்-ஆட்டுத்தோல் - போர்த்தவோநாயும் புறத்திலாடென்று தோன்றுமே ஆகையாற்போர்த்தவேஷத்தைநீக்கி யுள்ளேபார்க்கில்ஓநாய்தானே தன்னுருவாகத்தோன்றக் காண்போம். இதுதெளிவாகும்படிக் கிந்நாட் பதிதர் சொல்லுந் தன்மை யறியக்கடவீர்கள். விசுவாசமொழிய நமக்குப்பலனுகவொன்றுமில்லாமலவனவன்செய்யுஞ் செபதபதானதருமமற்றப்புண்ணியங்களா லுந்தமவகையோடேசெய்தாலு மிஷ்டப்பிரசாதம்வளரவு மோக்ஷபலனை யடையவுங்கூடாதென்று மிஷ்டப்பிரசாதத்துக்கு மோக்ஷபலனுக்கும் விசுவாசமேமாத்திரங் காரணமாகுமென்றுஞ்சொல்லியிதுவே தங்கள் சமயங்களுக் கஸ்திவாரசத்தியமாக விந்நாட் பதிதரொல்லாரும்ஸ்தாபித்தார்கள். ஆகையால்-தேவத்திரவிய-அநுமானங்க ளிஷ்டப்பிரசாதத்தி னுத்தனகாரணங்களாகுமென் றவர்களுஞ் சொன்னாலுஞ் சொன்னவஸ்திவாரத்தைவிடாதபடிக் கதற்குச்சொல்லு மர்த்தத்தைப் பார்க்குமிடத்தி லவர்கள்-துவக்கத்திலே வெளியாகச்சொல்லியிருந்த வபத்தத்தைமீளவுங் கக்கிக்கொண்டு வரு

றார்கள். அதாவது தேவத்திரவிய-அநுமானங்க
ள்-தாமே யிஷ்டப்பிரசாதத்துக்குக் காரணமா
காமலதற்கொன்றுந்தாமேசெய்யாமல் விசுவா
சத்தைமாத்திர மனதிலேவிளைவிக்குஞ் சடங்கு
களாகியதுகளால்விளைந்த விசுவாசமொன்றேயி
ஷ்டப்பிரசாதத்தைப் பயக்குமென்பார்கள். எப்
படியோவெனில் - ஞானப்பிரசங்கங்களின் வழி
யால் விசுவாசத்தைக்கிளப்பி விளைவிப்பதுபோ
லத் தேவத்திரவிய-அநுமானங்கள் கண்ணின்
வழியால் விசுவாசத்தையெழுப்பிவிளக்கி யந்த
விசுவாசத்தால்-மாத்திர மிஷ்டப்பிரசாதத்தை
யடைவோமென்பார்கள். ஆகையாலே யொருவ
ன்றிரும்பி யிஷ்டப்பிரசாதத்தையடைய ஞான
ப்பிரசங்கங் காரணமாயிற்றென் றொருவகையா
ற் சொல்லப்படுமாப்போலே தேவத்திரவிய-அ
நுமானங்களு மந்தவகையால்-மாத்திர மிஷ்ட
ப்பிரசாதத்துக்குக் காரணமென்று சொல்லத்த
கும். இதுமெய்யானால் விசுவாசத்துக்குமுந்தியு
பதேசஞ்சொல்லச் சேசுநாதர் கட்டளையிட்டா
ப்போலே விசுவாசத்துக்குமுந்தி ஞானஸ்நான
முங் கொடுக்கக்கட்டளையிடாமலென்ன. அர்ச்.-
மாற்குச்சுவிசேஷத்தின்-௰௬-ம். அதிகாரம்-௰௫
ம். வசனத்திற்சேசுநாதரப்போஸ்தலர்மாருக்கு
த் திருவுளம்பற்றினதாவது-உலகமெங்கும்போ
யெல்லாருக்கு முபதேசஞ்சொல்லி விசுவசித்து
ஞானஸ்நானம்பெற்றவன் கரையேறுவானென்
பார். ஆகிலும் பதிதர்சொன்னது மெய்யானாலுப
தேசத்தையு ஞானஸ்நானத்தையுங்கூட்டி நீங்
களுபதேசஞ்சொல்லஞானஸ்நானங்கொடுக்கவி
சுவசிக்கிறவன் கரையேறுவா னென்பாரல்லோ.
யிப்படியே யாரோக்கியத்துக்கு மருந்துகாரண

மாகையிலாரோக்கியத்தையடைந்துமருந்துகுடித்தானென்றுமல் - மருந்துகுடித் தாரோக்கியமடைந்தா னென்னக்கடவோம். தேவத்திரவிய-அநுமானங்களும் விசுவாசத்துக்குக் காரணமாகமாத்திர முதவுமானால் விசுவசித்து ஞானஸ்நானம்பெற்றவனென்றுமல்-ஞானஸ்நானம்பெற்று விசுவசித்தவனென்பது நியாயமல்லோ. பலவுங் கண்வழியாக விசுவாசத்தை யெழுப்பினாலல்-மாத்திரந் தேவத்திரவிய-அநுமானங்களுதவுமென்றாற் சுரூபவணக்கமாகாதென்று பதிதர் விலக்குவானேன். கண்வழியாக விசுவாச முள்ளேயெழும்பும்படிக்குத் தேவத்திரவிய-அநுமானங்களைப்பார்க்கக்கண்டபாடுபட்ட கர்த்தர்சுரூபந் தாவிலையல்லோ. இதுவுந்தவிரக்குழந்தைகளுக்குந்தந்த ஞானஸ்நானஞ் சென்மப்பாவத்தைத்துடைத் திஷ்டப்பிரசாதத்தைக் கொடுப்பதுபதிதருக்கு நிச்சயந்தானே - ஆகிலு மவர்களிடத்தில் விசுவாசமில்லையே. ஆகையாலிஷ்டப்பிரசாதத்துக் காண்டவர் ஸ்தாபித்தகட்டளையாலே ஞானஸ்நானச்சடங்கு காரணமாகுமெழிய விசுவாசமதற்குக்காரணமல்லவென்றுசொல்லக்கடவோம். இதற்குப் போக்கிடமில்லாமல் லுத்தேர் முதற்கொண்டு பல லுத்தேரானிகள் சொல்லுமபத்தமாவது-ஒருநாட் குழந்தைமுதலாய் ஞானஸ்நானம்பெறும் க்ஷணத்திலேமாத்திர மறிவுஞானமும்விசுவாசமு முடையதாகி விசுவாசத்தா லிஷ்டப்பிரசாதத்தை யடைந்தவுடனே யிரவலாகவந்தஞானமும்விசுவாசமும்பேயொன்றுமறியாமற் கிடக்குமென்றார்கள். மற்றப்பதிதருஞ் சிரித்துநகைப்ப விந்தப் பரமவிரகசியத்தை யெந்தச்சுவிசேஷத்திலே லுத்தேர்கண்டெடுத்தானோ தானேசொல்லக்கடவான்.

௮௭. ஆகையாலிதிலேவேதசத்தியமாகவநுசரி
க்கத்தருந் தன்மையாவது-அறிவுள்ளவர்களுக்கு
ள்ளே விசுவாசமில்லாதவனுக்குத் தேவத்திரவி
ய-அநுமானங்களாலே நன்மையொன்றில்லை. ஆ
கிலும்விசுவாசமுள்ளவனுக்குச் சேசுநாதர்ஸ்தா
பித்தமுறையாற்கொடுத்த தேவத்திரவிய-அநு
மானங்களேமாத்திர மிஷ்டப்பிரசாதத்தைப்பய
க்கு மெத்தனகாரணமாமே. அந்தவிசுவாசமா
பத்தமுறையால் வேண்டியதொழியக் காரணவ
கையா லிதிலேயொன்றுஞ் செய்கிறதில்லையென்
றுவேதசத்தியமாக வநுசரிக்கக்கடவோம். இந்
தச்சத்தியத்தை யொப்பிக்கச்சொன்னதல்லாதி
ன்னம் பலவேதவுதாரணங்களைச்சொல்லிக்காட்
டுவோம். முதலாவது-அர்ச்.-அருளப்பர் சுவிசே
ஷத்தின்-௩-ம். அதிகாரம்-௫-ம். வசனத்திற் சே
சுநாதர் திருவுளம்பற்றினதாவது-தண்ணீராலு
மிஸ்பிரீத்து சாந்துவினாலுந் திரும்பப்பிறவாத
வன்சர்வேசுரனிராச்சியத்துக்குள்ளாகமாட்டா
னென்றார். இதிலேயவர் விசுவாசமென்னும்பெய
ரினையாமற் கரையேறுதற்குப் பேறுபெற ஞா
னஸ்நானம் வேண்டியதென்றார், கரையேறவே
ண்டின இஷ்டப்பிரசாதம் விசுவாசத்தினால்-மா
த்திரம் பதிதர்சொன்னாற்போலேவருவது மெய்
யானாலிந்தவகையாலும் விசுவாசமுண்டானாற்
போதுமென்று ஞானஸ்நானம்பெறுமளுங் கே
ட்டவுபதேசத்தினாலெழும்பின விசுவாசத்தோ
மாத்திரங் கரையேறுவோமென்னக்கடவோம்.
சேசுநாதரோவெனில்-ஞானஸ்நானமில்லாமற்க
ரையேற்றமில்லையென்றார். அப்படியே-அர்ச்.-
சின்னப்பர் தீத்து தன்பவருக்கெழுதின நிருபத்தி
ன்-௩-ம். அதிகாரம்-௫-ம். வசனத்திற் கர்த்தர்தி

ருவுளம்பற்றினதற்கர்த்தஞ்சொன்றாற்போலஞா
னஸ்நானமேமறுபிறப்பென்றுமதுவேயிஸ்பிரீத்
துசாந்துவினால்வரும்புதுவியல்பென்றுஞ்சொல்
லியதைக்கொண்டாண்டவர் நம்மையீடேற்றினா
ரென்றார். உ-வது. அப்போஸ்தலர்முயற்சியாகம
த்தின் உ-ம். அதிகாரம்-௩௮-ம்.வசனத்தில்-அப்
போஸ்தலர்சொன்ன வுபதேசத்தை விசுவாசத்
தாலுட்கொண்டு கரையேறவாசையாலதற்குச்
செய்யவேண்டியதேதென்று கேட்டவர்க்கு-
அர்ச்.-இராயப்பர்சொன்னதாவது பச்சாத்தா
பத்துடையராகிச்சேசுகிறீஸ்துக்கட்டளையிட்டமு
றைபாலுங்கள் பாவங்கள் பொறுக்கப்படும்படி
கொவ்வொருவன்ஞானஸ்நானம்பெறக்கடவனெ
ன்றார். இதோ-அர்ச்.-இராயப்பரவர்களிடத்தி
ற்கண்ட விசுவாசத்தோடே வேண்டினபச்சாத்
தாபத்தையுங்கூட்டியிதுகளாலாயத்தப்பட்ட
பின்பு பாவப்பொறுத்தலாகவு மிஷ்டப்பிரசாத
த்தையடையவுமீளவும் விசுவாசந்தேடாமல்-ஞா
னஸ்நானச் சடங்குமாத்திரம் வேண்டியதென்
றார். ௩-வது. அப்போஸ்தலர் முயற்சியாகமத்தி
ல்-௰௯-ம். அதிகாரம்-௫-ம்.வசனத்து-அர்ச்.
ஸ்நாபகவருளப்பர் கொடுத்த ஞானஸ்நானமா
த்திரம்பெற்ற சிலபேர்களை யெபெசியென்னுநக
ரில்-அர்ச்.- சின்னப்பர்கண்டு சேசுநாதர்கட்ட
ளையிட்ட ஞானஸ்நானம்பெறச்செய்தார். ஆகை
யால்-அர்ச்.-அருளப்பர்ஞானஸ்நானவகைகரை
யேறத்துக்குப் போதாதென்று சொல்லக்கட
வோம். ஆகிலுமதிலேசொன்னபடி- அர்ச்.- அரு
ளப்பர் தண்ணீராக்கொண்டுகழுவுவார். ஆண்
டவர் தந்தவார்த்தைப்பாடுகளைக்காட்டுவார். ?
னக்குப்பிறகிரட்சிக்கவருஞ் சேசுநாதரைவிசு

சிக்கும்படிக்கு ஞானஸ்நானங் கொடுத்துக்கொண்டுவருவார். இப்படியாகிலு மவர் ஞானஸ்நான மீடேற்றத்துக்குப்போதாதே. ஆகையாலவர்ஞானஸ்நானவகையா லாண்டவர் தந்தவார்த்தைப்பாடுகளுக்கு விசுவாச முண்டாயினு மந்த விசுவாச நம்மைக் கரையேற்றுதற்குப் போதாதேபோயிற்றல்லோ. ஆகையாற்சேசுநாதர் கட்டளையிட்ட ஞானஸ்நானத்துக்கு விசுவாசம்வேண்டியிருந்தாலும் – அதுவாயத்தவகையால் வேண்டியதொழிய நம்மைக்கரையேற்று மெத்தன காரணமல்லவென்று சொல்லக்கடவோம். ௪-வது. மீளவுமப்போஸ்தலர்முயற்சியாகமத்து-௨௰௨-ம். அதிகாரம்-௰௬-ம். வசனத்திலே மிகுந்த விசுவாசம் பத்திபச்சாத்தாபத்தோ டழுதுகொண்டிருந்த சவுலென்னும்-அர்ச்.- சின்னப்பருக்கு-அனனியஸென்பவர் சொன்னதாவது - எழுந்திருந்து ஞானஸ்நானம்பெற்றுச் சுவாமிநாமத்தைச்சொல்லி யுன்பாவங்களைக்கழுவித் துடைப்பாயாகவென்றார். இதோபரலோகத்தினின்றெழுந்தருளின சேசுநாதர் தந்தகாட்சியால்-அர்ச்.-சின்னப்பரிடத்தி லுத்தமமேனையோடிருந்த விசுவாசத்தினாற் பாவப்பொறுத்தலாகாமல தற்கு ஞானஸ்நானம்பெறவேண்டியிருந்தது. சேசுநாதர் தாமேவந்து-அர்ச்.-சின்னப்பருக்கு வருத்துவித்த விசுவாசத்தின்மேலு ஞானஸ்நானங் கொடுக்கும் விசுவாசமதிகமென்று சொல்லக்கூடுமோவில்லையே. ஆகையா லந்தக்காட்சிக்குப்பிறகுபாவம்போகஞானஸ்நானம்வேண்டினதாகில்விசுவாசம் வருத்துவிப்பதற்குவேண்டியதல்லவென்றும்-ஞானஸ்நானத்திற் பாவங்களைப்போக்கி விஷிடப்பிரசாதத்தைக்கொடுக்குங் காரண

மே விசுவாசமல்லவென்றுஞ் சொல்லக்கடவோம்.குறித்தவளவுவிரிந்ததென்று வேறேபலவுதாரணங்களை விட்டுச்சொன்னதைச் சலஞ்சாதியாமலாராய்ந்துபார்க்கில்-ஞானஸ்நானத்தினாலே நமக்குவரு மிஷ்டப்பிரசாதத்துக் காயத்தமாக விசுவாச மறிவுள்ளவர்களிடத்தில் வேண்டினுமதற்கு விசுவாசங் காரணமாகாமற் சேசுநாதர் ஸ்தாபித்துக்கட்டளையிட்டமுறையா லந்தச் சடங்கு தானேயிஷ்டப்பிரசாதத்துக் கெத்தனகாரணமென்று சொல்லுவது நியாயமாமே. அப்படியே மற்றத்தேவத்திரவிய - அநுமானங்களிலேயும் யோசிக்கக்கடவோம். மீளவுந்தேவத்திரவிய - அநுமானங்களிலே விசுவாசங்காரணமாகாமல் வேறேகாரணத்தாலே நமக்கு மோக்ஷபலனு மிஷ்டப்பிரசாதமு முண்டாகுமென்று வேதவுதாரணங்களால் - நிச்சயமாகையில்விசுவாசமொழிய மோக்ஷத்தையடையும் பேறுகொடுக்கவல்லதொன்றுமில்லையென்று பதிதர்ஸ்தாபித்தவபத்தமான வஸ்திவாரமுள்ளுடைந்திடிந்துமேலேற்றிவைத்த கோபுரமுந்தகர்ந்து நிந்தைப்படவிழுந்ததுதானே. ஆகையாற் சாவானபாவமில்லாத கிறீஸ்துவன்செய்யுஞ் செபதபதானமற்றப்புண்ணியங்கள்-மோக்ஷத்தையடையப்பலனாதிகமாவதற்குக் காரணமென்று வேண்டினகாலத்திந்த நியாயங்களைக்கொண்டு பதிதருக்கொப்பிப்பதெளிதாமே.

௮௮ பதிதர்சொல்லு மபத்தத்தை யொப்பிக்கக்கொண்டுவிடும் வேதவுதாரணங்க ளேதெனில்-அர்ச்.-சின்னப்ப ருரோமாபுரியாருக் கெழுதின நிருபத்தின்-௩-ம். அதிகாரம்-௨௮-ம். வசனத்திற்சொன்னதாவது வேதத்திற் கட்டளையிட்ட

தைச்செய்யாமல் விசுவாசத்தைக்கொண்டு மனிதருக் கிஷ்டப்பிரசாதமாகுமென்று நினைக்கிறோமென்றார். ஆகிலுமிந்தி யதிலே பழையவேதத்துக்கும் புதிதாய்ச்சேசுநாதர்ஸ்தாபித்தவேதத்துக்கும் வேற்றுமைகாட்டிப் பழையவேதத்திற் கட்டளையிட்டதைச்செய்ததினலாக்கும்-நமக்கிஷ்டப்பிரசாதம் வரவறியாதென்றார். மீளவும்பழையவேதகற்பனை யெல்லாத்தையுங் குறித்து-அதிலேயுங் கற்பித்திருந்தபத்துக்கற்பனைகளின்படியேமுதலாய்நடந்ததற்பலனில்லையென்றரோவில்லையே. பழையவேதத்திற் கற்பித்திருந்த விருத்தசேதனமுதலிய சடங்குகளாலிப்போதுபலனென்றில்லையென்றார். அப்படியே கொரிந்தியாருக்கெழுதின-௧-ம் நிருபத்து-௭-ம். அதிகாரம்-௰௯-ம். வசனத்தில் விருத்தசேதனம்வீண்-தானே, தேவகற்பனையின்படி நடப்பதேகருமமென்றார். இதிலேதேவகற்பனையென்னும்பெயராற் பத்துக்கற்பனைகளைக்குறித்தார். அப்படியேகலாசியாருக்கெழுதின-௨-ம். அதிகாரம்-௨௧-ம். வசனத்தில் விருத்தசேதனமுதலிய பழையசடங்குகளைக்குறித்துப் பழையவேதமுறைமைகளாலிஷ்டப்பிரசாதமாகுமென்றால் வீணாய்க்கிறீஸ்து மரணத்தையடைந்தாரென்றுசொல்லக்கூடவோமென்றவர்தாமேசொன்னார். இதிலேதேவத்திரவிய - அநுமானங்களை முத்தம வகையோடே செய்ததருமங்களை மிஷ்டப்பிரசாதத்துக்குக்காரணமல்லவென்று-அர்ச்.-சின்னப்பர் சொன்னதாகச் சொல்லக்கூடுமோவென்ன. மீளவும்-அர்ச்.- மாற்குச் சுவிசேஷத்தின்-௰௬-ம். அதிகாரம்-௰௬-ம். வசனத்தில் விசுவசித்துஞானஸ்நானம்பெற்றவன் கரையேறுவானென்று சேசுநாத

ர்சொன்னவுடனே விசுவசியாதவன்-நரகத்திற் றள்ளப்படுவானென்றார். ஞானஸ்நானம்பெறாதவனென்னாமல் விசுவசியாதவன் கரையேறானென்றபோதேகரையேறுகிறதற்கு விசுவாசமொழிய ஞானஸ்நானங்காரணமல்லவென்று சொல்லக்கடவோமென்று பதிதர்சொல்லுகிறார்கள். ஆகிலு மொளியில்லாமலொன்றுங்காணப்படாதென்றதனாற் பார்வைக்கொளிதானே காரணமென்றுசொல்வாருண்டோ. அப்படியே விசுவசியாதவன் கரையேறானென்றதனாற் கரையேறுகிறதற்குவிசுவாசங்காரணமென்று சொல்லக்கூடாது. இதிலே சேசுநாதர்சொன்னவசனத்திற்கு நியாயமேதெனி லறிவுள்ளவர்களுக்குள்ளே விசுவாசத்தினா லாயத்தப்படாதவனு ஞானஸ்நானம்பெற்றமாத்திரத்திற் கரையேறுவானென்று நினையாதபடிக்கு ஞானஸ்நானம்பெறாதவனென்னாமல்விசுவசியாதவன்ஞானஸ்நானம்பெற்றாலும்பெறாமற்போனாலுங் கரையேறானென்று தோன்றும்படிக் கந்தவசனத்தைச்சொன்னார். ஆதலாலறிவுள்ளவர்களுக்கு ஞானஸ்நானந் தன்பலனைக்கொடுக்கும்படிக்கு-ஆயத்தவகையாலே மாத்திரம் விசுவாசம்வேண்டியதென்று நாமுன்சொன்னபடி யிந்தவுதாரணத்தா லொப்பிக்கப்பட்டது நிச்சயந்தானே. அப்படியே வேறேபலவேதவுதாரணங்களாற் கரையேறவிசுவாசம் வேண்டியதென்றாலு மதுவாயத்தவகையால் வேண்டியதென்று சொல்லவேண்டுமொழியக்காரணவகையால்வேண்டியதாகச்சொல்லப்படாதென்றுநாமுன்சொல்லித்தந்த வேதவுதாரணங்களாலொப்பிக்கப்பட்டதல்லோ.

பன்னிரண்டாமதிகாரமுற்றிற்று.

# ௰௩-ம். அதிகாரம்.

## தேவத்திரவிய-அநுமானங்கள்-தனிவிளக்கம்.

௮௬. இற்றைவரைக்குந் தேவத்திரவிய-அநுமானங்களேதென்றும் அதுகளினால்-நமக்குவரும் பலனேதென்றுங் காட்டினபின்பு தேவத்திரவிய-அநுமானங்களெத்தனையென்று சொல்லக்கடவோம். இதிலே முந்தியறியவேண்டினதாவது. லுத்தேர் திருச்சபையிலக்ஷணமென்னும் புஸ்தகத்தின்கடைசியிலேயுமவன்பிரியசிஷ்னுகிய மேலந்தோன்-அப்போலோசியவென்னும் புஸ்தகத்தின்-எ-ம். பிரிவிலேயுங்கல்வீன் கற்பனைகளின்-௪-ம்.காண்டம்-௰௯ அதிகாரம்-௬-ம். பிரிவுதுவக்கி மூன்றுபிரிவுகளிலேயு மற்றப்பதிதரெல்லாரு மெய்யான திருச்சபை யிலக்ஷணங்களைச் சொல்லும்போது தேவத்திரவிய-அநுமானங்களின் விஷயத்தி லொத்தமுறையோ டோருணர்வாக நிற்பது மெய்யானதிருச்சபைக்குப் பிரதானவிலக்ஷணமென்று ஸ்தாபித்தார்கள். ஆகிலும் லுத்தேர் முதற்கொண்டு தேவத்திரவிய - அநுமானங்களின் விஷயத்தி லொருநிலை கொள்ளமாட்டாம லந்தத்தேவத்திரவிய-அநுமானங்க ளெத்தனையென்றுமுதலாய் நிச்சயமாகச் சொல்லமாட்டாதேபோனார்கள். ஆகையா லவர்கள்-தாமசொன்னவிலக்ஷணத்தினு லவர்கள்சபைமெய்யானதிருச்சபை யல்லவென்று தாங்களேசொல்லக்கடவார்கள். அப்படியே லுத்தேர்-௲௫௱௨௰-ம். ஆண்டிலேதந்த பபிலோனடிமைத்தன

மென்னும்புஸ்தகத்தின் றுவக்கத்தி லெழுதின தாவது.வேதத்திலெழுதப்பட்டதன்மையாலொ ருதேவத்திரவிய-அநுமானமாத்திர முண்டென் றான்.பிறகேழுந்தள்ளிப்பின்புமூன்றுமாத்திரம்-ஞானஸ்நானம்-நற்கருணை பச்சாத்தாப மொ த்துக்கொள்ளச்சொன்னான். அந்தப்புஸ்தகத்தி னடுவிலேதா னேழுதேவத்திரவிய-அநுமான மி ருக்கிறதில்லையென்று வேத வுதாரணங்களால்-மாத்திர மேழுமொப்பிக்கப்படாதென்றான். அதி லேதானே கடைசியிலுரியமுறையோடு பேசவே ண்டுமாகில்-ஞானஸ்நானம் - நற்கருணை யென் றிவ்விரண்டுமாத்திரந் தேவத்திரவிய-அநுமா ன மென்னப்படுமென்றான். இப்படி லுத்தே ரொ ருவனொருபுஸ்தகத்தி லிந்தவொருவிஷயத்தி ல த்தனை விபரீதங்களை யெழுதிவைத்தான். அவன் பிரியசிஷ்னாகிய மேலந்தோனேனெனில் - முந்தி லுத்தேரோடேஞானஸ்நானம்-நற்கருணையென் றிரண்டுமாத்திர முண்டென்றான். பிறகவனோ டே பச்சாத்தாபத்தைக்கூட்டி யப்போலோசிய வென்னும் புஸ்தகத்தின்-௰௩-ம்.பிரிவிலே மூன் றுண்டென்றான். ௲௫௱௩௰-ம். ஆண்டிலேதந்த கிரந்தத்திலோவெனி லம்மூன்றுக்குங் குருத்து வங்கூட்ட வெனக்குமிகவுஞ் சம்மதிதானேயெ ன்றான்.மீளவும்-௲௫௱௮-ம்.வருஷத்தி லச்சுப்ப தித்த வவன்புஸ்தகத்திலே விவாகத்தையுங்கூ ட்டினான். கடைசியிலே லுத்தேர்செத்த விரண் டுவருஷத்துக்குப்பிறகு-௲௫௱௪௮-ம்.ஆண்டிலே லிப்சேஞ்சியகூட்டத் தவனுமிருந் துகொண்டுகூ டினபதிதரெல்லாரு மேழுதேவத்திரவிய - அநு மானங்களுண்டென்று ஸ்தாபித்தார்கள். அப்ப டியேமற்ற லுத்தேரானிகளெல்லாருங்காட்டுவழி

சாய்ந்த மாடுகளைப்போல வொருமுசுமாய்ப்பே
காமற் றிரிந்து தாங்கள்சொன்ன வடையாள
தைக்கொண்டு தாங்கள்-மெய்யானதிருச்சபை
கூட்டமல்லவென்று காட்டினீர்கள். தரங்கபா
டிப்பதிதர்முதலாய் நற்கருணையாயத்தமென்
ம் புஸ்தகத்திலே பச்சாத்தாபத்தைக்கூட்டி
ற்போலேபேசி வேதசாஸ்திரமென்னுங் கிரந்
த்திலே ஞானஸ்நானம்-நற்கருணையென் றிர
டு தேவத்திரவிய-அநுமானமாத்திரமுன்
ன்றெழுதிவைத்தார்கள், உரோமான் றிரு
பையோவெனிற்சேசுநாதரால்ஸ்தாபிக்கப்ப
தாகையி லிதிலேயும் வேறுபடாம லெப்பே
மேழுதேவத்திரவிய-அநுமானங்களுண்டெ
று மிகாமலுங் குறையாமலு மெல்லாவாயி
ருமொழியா யெல்லாக்காலத் தொரு நிலையா
சொல்லிக்கொண்டுவந்ததறிவோம். ஏழு தே
த்திரவிய அநுமானங்க ளேதெனில் - ஞான
நான முறுதிப்பூசுதல் நற்கருணை பச்சாத்தா
அவஸ்தைப்பூசுதல் குருத்துவம் - மெய்வி
மென் றிவையேழுமென்க. ஆகிலு மேழென்
கணக்குந் தேவத்திரவிய - அநுமானமென்
பெயரும் வேதாகமங்களி லெழுதப்பட்டதி
கேயென்று பதிதர் கேட்கவுந் தேவையில்லை
மதையொப்பிக்கவுந் தேவையில்லை வேதத்
ரண்டுமூன்றென்றுங் கணக்கில்லாமலுந் தே
திரவியஅநுமானமென் னும்பெயர் விவாகத்
கொழிய வொன்றிற்குமில்லாமலும் பதிதர்
மேயிரண்டுமூன்றுதேவத்திரவிய அநுமான
களுண்டென்று வேதவுதாரணங்களா லெ
பிக்குந் தன்மையால் - நாமுமொவ்வொன்று
ராய்த் தேழு முண்டென் றெருப்பிக்கக்கடவே

மூ

௯௰. இதிலே நாமும் பதிதரு மொருப்படச்
-ால்லுந்தன்மையாவது ஒருவேதச்சடங்கினை
தேவத்திரவிய - அநுமானமென்று சொல்லு
படிக்குமூன்றுகுணங்களதற்கு வேண்டியதா
௧-வது. புறத்துக்காணப்படு மடையாளமு
டங்குமாகவேண்டும். ௨-வது. அதினாலே ந
இஷ்டப்பிரசாதம் வருவது நிச்சயமாகவேண்
. ௩-வது. அதற்கதனை ஸ்தாபித்தவாண்டவ
ட்டளையுண்டாகவேண்டும். இந்த மூன்று
ணங்களை யுடைய தெல்லாத்துக்குந் தேவத்தி
ய - அநுமானமென்னும் பெயர்செல்லுமொ
வதிலொன்றில்லாதாயி னந்தப்பெயர் செ
ாதென்னக்கடவோம். இதிப்படியாகையில் -
ஞ்சொன்னவேழுசடங்குகளுக் கெல்லாமம்மு
ண முண்டென்று மதுகளுக்குமாத்திர முண்
ன்றும் வேதவுதாரணங்களினு லொப்பித்தா
நாஞ்சொன்னவேழுதேவத்திரவிய - அநு
ஙகளுண்டென்று மதுகளல்லாதே வேறில்
யன்று மொப்பித்தாற்போலாகுமல்லோ. ஆ
பால் - ௧-வது. ஞானஸ்நானம் - இதனை -
ச.-சின்னப்பரொபெசியாருக்கெழுதின-௫-ம்.
காரம் - ௨௰௬-ம். வசனத்துத் தண்ணீரா
வுதலென்றார். இதோபுறச்சடங்கு பின்னையு
யர்ச்.-மாற்கு சுவிசேஷத்தின் -௰௬-ம். அதி
ம்-௰௬-ம். வசனத்திற் சேசுநாதர்தாமே
வசித்து ஞானஸ்நானம்பெற்றவன் கரையே
ானென்றார். இதோவிதனால்வரு மிஷ்டப்பிர
த்தினிச்சயம். மீளவு மவர்தாமே - அர்ச்.-
ளப்பர் சுவிசேஷத்தின் - ௩-ம். அதிகாரம்-
வசனத்திலே தண்ணீராலுமிஸ்பிரீத்துசா
வினாலுந் திரும்பிப்பிறவாதவன் கரையேறு

னன்றார். அர்ச்.-மத்தேயுஸ் சுவிசேஷத்தின்-௰௮-ம். அதிகாரம்-௰௯-ம்.வசனத்திலெங்கு போயெல்லாருக்கு முபதேசஞ்சொல்லி ஞானஸ்நானங் கொடுங்களென்றார். இதோ ஸ்தாபித் கட்டளை. இம்மூன்றுகுணங்களுண்டமையால் ஞானஸ்நானந் தேவத்திரவிய-அநுமானமென்பதற்குப்பதிதருக்குஞ்சந்தேகமில்லை.

௯௯. இரண்டாவது - உறுதிப்பூசுதல் - அப்போஸ்தலர்முயற்சியாகமத்தின்-௮-ம். அதிகாரம்-௰௪-ம். வசனத்திற்சமரியபட்டணத்துப்பலர் ஞானஸ்நானம் பெற்றசெய்தி யப்போஸ்தலரறிந்து - எருசலேமிலிருந்து-அர்ச்.- இராயப்பரும்-அருளப்பரு நெடுவழிநடந்துபோயவர்கள்-மேலேகைவைத்து- இஸ்பிரீத்துசாந்துவையடைந்தார்களென் றெழுதியிருக்கிறதொழியவுமக்கடி யப்போஸ்தலர் ஞானஸ்நானம்பெற்றவர்கள்-மேலேகைவைத்து - இஸ்பிரீத்துசாந்து தவிராமலெழுந்தருளிவந்ததென்றந்தவாகமத்தின் பலவிடத்தெழுதியிருக்கிறதல்லோ. இதிலேதலைமேல்வைத்தகை புறச்சடங்காமே. இஸ்பிரீத்துசாந்துதப்பாமலெழுந்தருளினதினாலதிலேவரும் இஷ்டப்பிரசாதத்தி னிச்சயமாமே. உள்ளே யிஷ்டப்பிரசாதத்தைப் பயக்கும்வல்லமை புறத்துச்செய்யப்பட்ட தோர்சடங்குக் காண்டவர்கட்டளையினால் வருமொழிய வொருவராலும்வரவறியாதென்று பதிதருஞ்சொன்னதினாலிதிலேயாண்டவர்ஸ்தாபித்த கட்டளைவெளியாமே. மீளவுமப்போஸ்தலர் கைவைக்க - இஸ்பிரீத்துசாந்துவருமென்றாண்டவர்ஸ்தாபியாதிருந்தா லெல்லாருக்கு மிஸ்பிரீத்துசாந்துவரவடிக்கடி யப்போஸ்தலர் தலைமேற்கைவைக்கிறதுசர்வேசுரனை வீணு

யைச் சோதித்ததாகையிற்பாவமாமே. இதற் கப்
போஸ்தலர்சம்மதிக்கப்போகிறதில்லை. ஆகையா
லிதற்குச் சேசுநாதரப்போஸ்தலருக்குக் கட்ட
ளைசெய்தது நிச்சயந்தானே. இந்தன்மைத் திதி
லேயுஞ்சொன்ன மூன்றுகுணங்களைக்கண்டவை
யா லுறுதிப்பூசுதலுந் தேவத்திரவிய-அநுமான
மென்பதுநியாயந்தானே மீளவுஞ் சமரியபட்ட
ணத்தாருக்குவேறொருவன்ஞானஸ்நானங்கொ
டுத்திருக்க வலனு மிந்தச்சடங்கினைக் கூடச்செ
ய்யாம லதற்குமாத்திர மிரண்டப்போஸ்தலர்
நேரவே நடந்துபோய்ச் செய்ததனாலிந்தத் தே
வத்திரவிய - அநுமானத்தை மேற்றிராணியா
ரொழிய வேறொருவருங் கொடுக்கப்படாதென்று
திருச்சபையிலெப்போது நடந்த முறைமைதா
னே. ஆகிலு நாமெண்ணெய்கொண்டு பூசினமு
றைமையிதிலே காணாததனாற் சந்தேகப்படவுந்
தேவையில்லை. அர்ச்.-சின்னப்பர் கொரிந்தியா
ருக்கெழுதின விரண்டா நிருபத்தின்-௧ அதிகார
ம்-௨௰௧-ம். வசனத்திந்தமுறைமைத் தெளிவா
கவைத்தார். கிறீஸ்துவின்பிரகாந்தரமாக வெங்
களையுங்களோடேகூட வுறுதிப்படுத்தினவர் சர்
வேசுரன்றாமே. நம்மெல்லாரையும் பூசினவரவ
ர்தாமே. நம்மிடத்திலே தம்முத்திரைப்பதித்தவ
ரவர்தாமே. நம்முயிரிடத்தி லிஸ்பிரீத்துசாந்து
வி னடைமானத்தைத்தந்தவ ரவர்தாமேயென்
றார். இதோவுறுதிப்பூசுதலென்னும்பெயருமெ
ண்ணெய்பூசினசடங்கும் வருமிஸ்பிரீத்துசாந்து
வி னிஷ்டப்பிரசாதமு மினிநாஞ் சொல்லிக்காட்
டப்போகிறபடிக்கிந்தத்தேவத்திரவிய-அநுமா
னத்தினால்-நமக்குப்பதிக்கப்பட்டதேவமுத்திரை
யாக வாத்துமத்தெழுதப்படுமக்ஷரமு மிவையெ

லாமொருப்படத் திருச்சபைசெய்யு முறையோ டதிலே வெளியாய்வேதசத்தியமாகக் காட்டப் பட்டதாமே. இதெல்லாமிப்படியாகையில் வேத த்திலெழுதப்பட்டதெல்லா முள்ளபடி யர்த்தத் தத் திருகாமற்கொள்ளவேண்டுமென்று சொல் லிக்கொண்டுவரும் பதித ரிந்தத்தேவத்திரவிய- அநுமானத்தைமறுத்துத்தாங்களோத்துக்கொ ளாமலென்ன. மீளவு மப்போஸ்தலர்காலத்தி ருந்த-அர்ச்.- திமொனிசியுஸென்பவர் துவக்கி டாமல்வந்தவேதபாரகரெல்லாருந் தெர்துலி யானும்-சிப்பிறியானும்-எரோணிமுசம்-அகுஸ் தீனு மற்றவருமெண்ணெட்கொண்டுபூசி மேலே கைவைத்து மேற்றிராணியாரிந்தத் தேவத்திர விய-அநுமானத்தைக்கொடுக்குமுறையெப்போ துந் திருச்சபையில்-நடந்தமுறையாக வெழுதி வைத்தார்கள்.

௬௨. மூன்றாவது நற்கருணை. அர்ச்.-மத்தேயுஸ் சுவிசேஷத்தின்-உ௰௬-ம். அதிகாரம்-உ௰ ௬-ம். வசனந்துவக்கிச் சேசுநாதரப்பத்தையும் பாத்திரத்தையுங் கையிலேந்தித் தோத்திரஞ் செய்துசிறிதுவார்த்தைசொல்லித் திவ்வியநற்க ருணையுண்டாக்கினமுறை யெழுதினதாமே. இதோ தாசெய்யவேண்டினசடங்கு. பின்னையும்-அர்ச்.- அருளப்பர் சுவிசேஷத்தின்-௬-ம். அதிகாரம்-௫௰உ-ம். வசனத்திலிந்தவப்பத்தையுண்டவன்-நித்தியசீவியத்தையடைவானென்றுசேசுநா தர் திருவுளம்பற்றினார். இதோவரு மிஷ்டப்பிர சாதத்தி னிச்சயம்-மீளவு மிற்றனே-௫௰௪-ம். வசனத்திலே நம்முடைய மாம்ஸத்தையு மிரத்த த்தையுமுண்ணாதவன் சீவனில்லாதவனென்றார். இதோஸ்தாபிதகட்டளை. ஆகையால்-நம்மக

டேபதிதருஞ் சந்தேகமின்றி நற்கருணைத் தேவ
த்திரவிய-அநுமானமென் றெத்துக்கொள்வார்
கள்.

௬௫. நாலாவது-பச்சாத்தாபம்-அர்ச்.- அருள
ப்பர்சுவிசேஷத்தின்-உ௰-ம். அதிகாரம்-உ௰௧-ம்.
வசனத்திற் சேசுநாதரப்போஸ்தலருக்குத் தி
ருவுளம் பற்றினதாவது பிதா நம்மையனுப்பின
படி நாமு முங்களை யனுப்புகிறே மென்றபின்பு
இதற்கர்த்தஞ்சொல்லுந்தன்மையால்-நீங்களெ
வர்கள்பாவங்களைப் பொறுத்தீர்களோ வவர்க்கு
ப்பொறுக்கப்படும். எவர்க்குப் பொறுக்கமாட்டீ
ர்களோ பொறுதேயிருக்குமென்றார். இதிலேதீர்
வையிடுமுறையாகையிற் புறச்சடங்குண்டாமே.
பாவங்கள் பொறுக்கப்படுமென்றதனு லிஷ்டப்பி
ரசாதத்தி னிச்சயமாமே. பிதா நம்மையனுப்பி
னாற்போலே நாமுமுங்களையனுப்புகிறேமென்ற
து பிதாவின்கட்டளையினாற் பாவங்களைப்பொறு
க்கநாம்வந்தபடி நீங்களுமெங்கட்டளையினாற் பா
வங்களைப் பொறுக்கப்போங்களென்றதாகையி
திலே தேவகட்டளையாமே. ஆகையாற் சொன்ன
முக்குணங்க ளிதற்குமுண்டாகி யிதுவுந்தேவத்
திரவிய-அநுமானமென்று சொல்லக்கடவோம்.
ஆகிலு மின்னஞ்சேசுநாதர்திருவுளம்பற்றினவா
ர்த்தைக்கர்த்தம்வெளியாகும்படிக்கறியவேண்டி
யதாவது சேசுநாதர்தாம்பாடுபட் டடைந்தபல
னினாலேயுந் தமக்குள்ள தேவவல்லமையினாலே
யுமனிதர்பாவங்களையெல்லாம்பொறுக்கும்படிக்
குத் தம்பிதாவாகிய சர்வேசுரனா லனுப்பப்பட்
டாரென்றது நிச்சயந்தானே. அப்படியே யவர்
பாடுபட்டுப்பாவங்களெல்லாம்பொறுக்கப்படும்ப
டிக்கு வேண்டினதின்மேலு முத்தமயேனையால

ரவில்லாத பலன்களையடைந்தார். ஆகிலு மப்ப
-த் தாமடைந்தபல னுலகமெங்கு நாடோறுமு
கமுடியுந்தனையு மதற்குப்பாத்திரமா யிருக்கு
பேர்களுக்குமாத்திரந் தேவத்திரவிய-அநுமா
ரங்களை யெத்தன காரணங்களாகக் கொண்டு
காடுக்கவேண்டுமென் று ஸ்தாபித்தார். ஆகை
ால்-மோக்ஷத்துக் கெழுந் தருளிப்போக நாட்
ட்டினபோது தமதிடமாகவுலகெங்கு மப்போ
லதலரு மவர்கள்வழியாகவருங் குருக்களும்போ
த் தேவத்திரவிய- அநுமானங்களைக்கொண்டு
ாமடைந்தபலனை மனிதருக்குதவியாகச் செல
ழித்துப் பாவங்களைப்பொறுக்க வுத்தியோகத்
தக்கொடுத்தார். ஆதலாற்றம்மைப் பிதாபாவ
களைப்பொறுக்க வனுப்பினதுபோலே தாமுமவ
களை யனுப்பினதாகச்சொன்னார். பாவங்களைப்
பாறுக்கவுண்டாக்கின தேவத்திரவிய-அநுமா
ாங்க ளிரண்டுண்டாம். ஞானஸ்நானம் பச்சா
தாபம். இதுகளிலே ஞானஸ்நானமுந்தினதா
கயின் முழுத்தயைவகையாற் கொடுக்கச்சித்த
ாகி யிதிலேபாவதோஷமு மபராதக்கடனுமுழு
தும்பொறுப்பதல்லாதே யிந்தத் தேவத்திரவிய
அநுமானத்தைக்கொடுக்க வெல்லாருக்கு முத்
தாரங்கொடுத்தார்.இந்தநன் றியறியாதவர்கள்
நானஸ்நானம் பெற்றபின்பு செய்தபாவங்களை
தயையோடேகூடின நீதிவகையாற் பொறுக்க
பச்சாத்தாபத்தைஸ்தாபித்தார். இதனு லப்
பாஸ்தலருக்குச்சொல்லியவனவன்செய்தபாவ
களை நன்றுப்விசாரித்துப் பொறுக்கத்தகுவதை
பொறுக்கவும் பொறுக்கத்தகாததைப் பொறு
ருக்கவு மவர்களுக் குத்தியோகங்கொடுத்தார்.
அப்படியே பச்சாத்தாபந் தீர்வைவகையாலுண்

டாக்கப்பட்ட தேவத்திரவிய - அநுமானமாகக் கொள்ள விதிலேபாவதோஷத்தைப் பொறுத்து நித்திய பராதக்கடனை முழுதும்பொறுமல்நித்திய பராதக்கடனுகவின்னநிற்கச்சிந்தமானுர். இதுவுந்தவிர விந்தத்தீர்வையிடவெல்லாருக்கு முத்தாரங்கொடாமலிதற்கப்போஸ்தலனையு மவர்களோடே - சகலகுருக்களையும்ஸ்தாபித்தார். அப்படியே அர்.-சின்னப்பர் கொரிந்தியாருக்கெழுதின-உ-ம. நிருபம்-ரு-ம். அதிகாரம்-ய அ-ம். வசனத் திந்த தேவத்திரவிய-அநுமானத்தைக் குறித்துச் சொன்னதாவது-மறுவுறவாக்குமுத்தியோகத்தை யெங்களுக்காண்டவர் தந்தாரென்றார். எல்லாருக்குந்தந்தாரென்றுமெல்ங்களுக்குத் தந்தாரென்றதனுற் குருக்களுக்கொழியவிதிலே பாவங்களைப்பொறுக்கும்வல்லமை யொருவருக்குமில்லையென்று சொல்லக்கடவோம். இதிலேனுத்தேதெப்போதுந் தன்னேடொத்தவனுப் மதிகெட்டபித்தனைப்போற்பேசியாணும்பெண்ணுமெல்லாரும் பாவசங்கீர்த்தனங்கேட்டுப் பாவங்களைப்பொறுக்க வல்லவரென்றதும் போதாமல்-௲௫௱௪௰-ம். ஆண்டிலச்சிலேபதித்த தனிப்பூசைவிலக்கச்செய்த புஸ்தகத்திலேபசாசுமுதலாய்மனிதரூபமாகத்தோன்றி யிந்தத் தேவத்திரவிய-அநுமானத்தை முடித்துப் பாவங்களைப்பொறுக்கவல்லதென்றான். மற்றப்படி யிந்தத்தேவத்திரவிய-அநுமானத்தைக் கொடுக்கு முத்தியோகத்தை-அர்ச்.- சின்னப்பர் மறுவுறவாக்குமுத்தியோகமென்றதேதெனி லாண்டவர்க்காகாமற் பழம்பகையாகிய சென்மப்பாவத்தோடே பிறந்த யாவரு ஞானஸ்நானம்பெற்றமாத்திரத் தாண்டவரோடுறவாகி யவருக்குப்பிள்ளைகளாவது நிச்

யந்தானே. அதன்பின்பு செய்தசாவானபாவ
தா லந்தவுறவுபோக்கினவன் மறுபடியாண்ட
ருறவடையப்பச்சாத்தாபமென்னுந்தேவத்திர
ய-அநுமான முண்டாக்கப்பட்டதனு லதிலே
ரவங்களைப்பொறுத்து மறுவுறவினைக் கட்டுவிக்
முத்தியோக மறுவுறவாக்கு முத்தியோகமென்
ர். மீளவுஞ் சேசுநாதராண்டவராயிருக்கவெல்
ாத்தையு மறிந்தவராயிருக்க நமக்குத்தரும்ப
ன் ருமடைந்தபலனுயிருக்கத் தஞ்சித்தத்தின்
டியே பாவசங்கிர்த்தனமில்லாமலும்பாவங்களை
பொறுக்க வல்லவர்தாமே.அப்படி மதலேனம்
ாளுக்கும் - நல்லாள்ள னுக்கும்பலருக்கும்பொ
வத்தாரொன் றறிவோம்.குருக்களோவெனிற்சே
நாதர் பலன்களைக்கொண்டு பொறுத்ததினலே
மவர்வைத்தமனிதராகமாத்திர மந்தவல்லமை
டைந்ததினலேயுஞ் சேசுநாதர் கட்டளையிட்ட
டி பாவங்களைப்பொறுக்கலாமொழிய வவர்க
டளைமீறிச்செய்தா லவர்களுக்குக் குற்றமாவத
லாதே நமக்குப் பாவப்பொறுத்தலாகாதில்லை.
சசுநாதர் கட்டளையிட்டவகையாவெனில்-தீர்
வையிடு முறையாகக்கொள்ள-வவர்கள்-தப்பாத
ர்வையிடும்படிக்கு நன்று யவனவன்செய்தபா
ங்களையறிந்தாராய வேண்டியதல்லோ. பலபா
ங்களுக் காவெனிற் புறச்சாட்சி யில்லாமையா
வனவன் றன்பாவங்களையொளியாமற் குருக்க
ருக்குச்சொல்லியல்லோ வறிவிக்கக்கடவான். இ
லாதாயின் குருக்களிந்தப்பாவம் பொறுக்கலா
-அதுபொறுக்கலாகாதென்று தீர்வையிடுவதற்
டமில்லை. ஆகையாலிதிலே சேசுநாதர்பாவசங்
ர்த்தனத்தைக் கட்டளையிட்டாரென்று சொல்
க்கடவோம். இந்தக்கட்டளையின்படி - அர்ச்.-

லூக்காவென்பவ ரப்போஸ்தலர் முயற்சியாகம
த்தின்-ம௯-ம்.அதிகாரம்-மஅ-ம்.வசனத்தெ
தினதாவது-அநேக கிறீஸ்துவர்கள்வந்து தாங்
கள் செய்ததைச்சொல்லிப் பாவசங்கீர்த்தனஞ்
செய்துகொண்டு வந்தார்களென்றார். மீளவும்
அர்ச்.- அருளப்பர்-௲ நிருபத்தின்-௲ அதிகார
ம்-௯-ம்.வசனத்திற் சொன்னதாவது நாமேபா
வசங்கீர்த்தனஞ்செய்தா லாண்டவர் தாந்தந்த
வார்த்தைப்பாடுகளைச் செலுத்து நீதிபரனாகக்
கொள்ள நம்முடையபாவங்களைப் பொறுப்பாரெ
ன்றார்.கடைசியிலே தீர்வையிடுமுறையா விந்தத்
தேவத்திரவிய-அநுமானமுண்டாக்கப்பட்டமை
யா விதிலேயாண்டவர்வைத்த மனிதராகநின்ற
குருக்கள் கேட்டபாவங்களுக்குத்தக்கதா யோர
பராதத்தைக் கட்டளையிட்டுத் தீர்வையிடவு மிட்
டவபராதத்தை நாமேதீர்க்கவுங்கடன்றானே.அ
பராதமில்லாவிட்டாற் சகாய நன்றிசெய்தார்க
ளென்னலாமொழியத் தீர்வையிட்டார்களென்று
சொல்லக்கூடாதே. இப்படிச்செய்த பாவங்களை
த்தீர்க்குமருந்தாகவுமினிச்செய்யாதபடிக்குக்கா
க்கும்வேலியாகவு மாண்டவர்கட்டளையிட்ட பாவ
சங்கீர்த்தனம் லுத்தேர்முதற்கொண் டிந்நாட்
பதிதர்முழுது மறுக்கமாட்டாம லுண்டென்று
சொன்னபின்பு முன்போட்டிருந்த வணையறுத்
தோடு மாறுபோலத்தடையொன்றின்றிப் பெரு
கின பாவவெள்ளத்திலே தாங்கள்-முழுகும்படிக்
குப் பாவசங்கீர்த்தனமென்றும்பெயரிருக்க வந்த
பாவத்துக்குச்செய்யுந் தடையு நமக்குத்தரும்பல
லனு மில்லாதாகப் பலவபத்தங்களை நியமித்தார்
கள். அதாவது-இந்தத் தேவத்திரவிய-அநுமா
னத்தி லாண்டவர்கட்டளையிட்டமுறை தீர்வையி

முறையல்லவென்று மிதிலே குருக்கள்பாவங்க
ளைப்பொறுப்பவரல்லவென்று மாண்டவர் முன்
னவனவனுக்குத் தந்தபாவப்பொறுத்தலை யிவ
கள்-நமக்கறிவிப்பவர்மாத்திரமென்று மினிநன்
னறியில்-நாமேயிடறுதொழுகவுறுதிசொல்பவ
ரென்றுஞ்சொல்லி யதனாலவனவன்செய்த பாவ
தைக் குருக்களறியவுந்தேவையில்லை மற்றவர்
ளவர்களுக்குச் சொல்லவுந்தேவையில்லை யெ
பார்கள். அப்படியேதரங்கம்பாடியி லச்சுப்ப
த்த நற்கருணையாயத்தமென்னும் புஸ்தகத்தி
லபலவிடத்தெழுதினதாகக்கண்டோம். ஆகிலு
குருக்க ளிதிலேபாவங்களைப்பொறுப்பவ ரல்ல
ராகி முன்னாண்டவர் பொறுத்ததை யறிவிப்ப
ர்மாத்திரமானாற் குருக்கள் பாவத்தைப்பொ
த்தோமென்று சொல்லுமுன்னே யந்தப்பாவ
பொறுக்கப்பட்டிருந்ததென்று சொல்லத்தகு
ம. இப்படியாகில்-நீங்கள்பொறுத்தபாவம்பொ
க்கப்பட்டிருந்ததென்னாமல்பொறுக்கப்படுமெ
று சேசுநாதர்முன்சொல்லிக்காட்டின வுதார
த்திலேசொல்லுவானேன். பொறுக்கப்படுமெ
றதினாலப்போதுதானேகுருக்கள் பாவங்களை
பொறுத் திட்டதீர்வையாண்டவ ரேற்றுக்கொ
டு தாமும்பொறுக்கிறாரென்று சொல்லக்கட
வாம். மீளவுந்தீர்வையிட வுத்தியோகத்தை யி
லேகுருக்களுக்குக் கொடாதேபோனாற் பாவங்
ளைப்பொறுக்கவும் பொறாதிருக்கவுந் தந்தவுத்தி
யாகமாவதென்ன. இதுவுந்தவிர நீங்கள்பாவ
களைப்பொறுத்தாற் பொறுக்கப்படுமென்றுதெ
வாகச் சேசுநாதர்திருவுளம்பற்றின வசனமுள்
வர்த்தத்தின்படியே கொள்ளாமற் பொறுப்ப
தன்றிசொல் லறிவிப்பதென்றதாகக் கொள்ளு

வானேன். வேதத்திலெழுதப்பட்டதெல்லாந்தே
வவாக்கியங்களாகையி லோரக்ஷரங் குறைக்க
மேற்றவுந் திருகவுமாற்றவு நினைப்பதே தோவ
மென்று மதுகளை மூகத்திற்றேன் றின வர்த்த
தோடே தலைபணிந்தொத்துக்கொள்ளக்கடவே
மென்றும் பரயஞானிகளைப்போலே சொல்லி
கொண்டுதிரிகிறவரிந்தப்பதிதர் தானேயல்லோ
ஆகிலும் பொறுத்தலென் றறிவித்தலென்பது
பொறுத்தலென்னுஞ்சொற்கு மூகத்திற்றேன்று
மர்த்தமோவென்ன தானே தனக்கிருகண்கள
பபிடுங்கினாலுந் தடவியாயினுங் காணப்படு மி
தவபத்தத்தைப் பதிதர்மாத்திரங் காணுமதெல்
ன. அவர்களதைக்காணுததற்குள்ள நியாயம்-ந
மேசொல்லிக்காட்டுவோம். திருச்சபையிற் சே
நாதர்ஸ்தாபித்த முறைகளுக்குள்ளே நிறைவே
ற்றுதற்கரியமுறையிதுவேகுறையின்றி நிறைவே
ற்றினுற் பாவங்கள்வராதபடிக்கெல்லாத்திலுமி
வுமுதவினமுறையிதுவே. ஆகையாலுயிரைக்கொ
ன்று பொருளைப்பறிக்குங் கள்ளனுக் கிராசநீ
பொருந்தாததுபோலவும் பாயுங்குதிரைக்குக்
டிவாளம் பொருந்தாதது போலவு மதத்தைப்
பொழியும்யானைக்கதனைத் தூணிற்கட்டினசங்
லியுநெறியில்-திருந்தினவுக்குசமும் பொருந்தா
ததுபோலவு மகன்றவழியைத் தேடிச் சகலபா
ங்களுக் கொருதடையில்லாதபடிக்குத் திருச்
சபையினின்றுபிரிந்த பதிதர்க்கெல்லாம்பாவசங்
கீர்த்தனம்பொருந்தாமல்தனையெல்லாரும்பகை
த்துமறுத்தது நியாயந்தானே. மற்றப்படிபா
ங்களைவிட்டு நன்னெறியொழுக வாசையுள்ளய
வரு மதற்கிதுவேயுத்தமவழியென் றுவலோடே
தேடுவார்கள். அப்படியே நூறொடுபெறப்பட்ட

ர்த்தார் லுத்தேர்மயக்கத்தி லகப்பட்டுப் பாவ
ங்கீர்த்தனமுறையை விட்டவுடனே யங்கேமு
ராணுத வக்கிரமக்காமவகையுந் தீராதபகைப
கோபமு மாருதநிந்தைகளவு கொலைமற்றப்பா
ங் களு மொருங்குடன்றிரண்டுகூடி வெள்ளமா
யந்து மூடினதைக்கண்டு தாமேதம்மைப்பொ
க்கமாட்டாமல்-நெடுநாள் வருந்தினபின்பு லு
தேர் திறந்தவழியால்வந்து மூடினகேடுகள்வி
குமுபாயங்கள் தெடிதாய்த்தேடினபின்பு பா
சங்கீர்த்தனமொன்றே மீளவும் ஸ்தாபித்து
துவேயணையாக வைத்தால் வந்தகேடுகள் வி
கிப்போய்ப் பழையபடி மெய் தயை தானங்க
பு நிறைநீதி நட்புத் தவ மாட்சி மற்றப்புண்
ணியங்களெல்லா மீண்டும்வழங்குமென்று நிச்ச
த்துந் தங்களையக்காலத்தாண்ட விராயனுகிய
வந்தாங் சாற்லென்பவ ரண்டையில்ஸ்தானுப
களைவிட்டுத் தங்களுக்குவந்த கேடுகளு மக்கி
டங்களும் விரிவாகச்சொல்லி யதற்கவ நிரங்கிக்
ட்டளையிட்டுப் பாவசங்கீர்த்தனமுறையை மீள
ம் ஸ்தாபிக்கச்செய்யும்படி மன்றாடினர்கள்.

௯௪. அஞ்சாவது - அவஸ்தைப்பூசுதல் -
ர்ச்.- யாகப்பரெழுதின நிருபத்து - ரு-ம். அ
காரம் - ௰௪-ம். வசனமாவது வியாதியாயொ
நவன் கிடந்தபோது குருக்களை யழைப்பித்து-
அவர்களும்வந்து கர்த்தர்நாமத்தினு லவனையெ
ண்ணெய்கொண்டுபூசி யவனுக்காக வேண்டிக்
கொள்ளக் கடவார்களென்றார். இதோசடங்கு.
அப்போது விசுவாசத்தோடே செய்தவேண்டு
தலவனையீடேற்றி யாண்டவ ரவன் றுயர்களை
பாற்றிப் பாவங்களிற்கிடந்தா லதுகளவனுக்கு
ப் பொறுக்கப்படுமென்றார். இதோ விஷ்டப்பிர

௰௪

சாதத்தி னிச்சயம். ஸ்தாபித்த தேவகட்டளை யி
திலேவெளியாக வில்லாதாயினும் வேண்டிக்
கொண்டெண்ணெய்பூசின சடங்குசெய்த மாத்
திரத்தி லெப்போதுந் தப்பாமற் பாவப் பொறு
த்தலுண்டாகுமென்று திடமாய் - அர்ச். - யாக
ப்பரெழுதினதிரு ௨ தற்குத் தேவகட்டளை யிருந்
ததென்று கண்டுகொள்ளக் கடவோம் - மீளவு
மிவ்வகைப் பூசுத விஷ்டப்பிரசாதத்தைத் தருப்
படிக்குக் கர்த்தர்ஸ்தாபித்ததனல்லோவப்படி
யாகுமென்று விசுவசித்து வேண்டிக்கொள்ளச்
சொன்னர். ஆகையா லிதிலேயு மம் முக்குணங்
களைக்கண்டமையாலிதுவுந்தேவத்திரவிய-அநு
மானங்களி லொன்றென்றுசொல்லக்கடவோம்

௬௫. ஆறவது - குருத்துவம். இதிலே புறச்
சடங்கு தலைமேற்கைவிரித்தல் - அப்படியே ய
ப்போஸ்தலர் முயற்சியாகமத்தின் - ௬-ம். அதி
காரந்து - ௬-ம். வசனத்திலும் - ௰௩-ம். அதி
காரம்- ௩-ம். வசனத்திலும்- அர்ச். - சின்னப்பர்
திமோத்தேயுக்கெழுதின -௴. திருபத்து- ச-ம்
அதிகாரம்- ௰ச-ம். வசனத்திலும்- ௫-ம். அதி
காரம் - உஉ - ம். வசனத்திலு மவர்க்கெழுதின
விரண்டா திருபத்தின் - ௴. அதிகாரத்து -
௬-ம். வசனத்திலு மெப்போதுந் தலைமேற்கை
விரித்தசடங்கோடே குருத்துவந் தந்ததென்
று கண்டோம். ஆகையாற்கிரேக்பாஷையிற் கு
ருத்துவங் கீரொத்தொனியவென்றுசொல்லப்ப
ட்டதாம். கீரொத்தொனியவென்பதுகைப்புறந்
கையென்றவாறு. இரண்டாவது இதிலேயிஷ்ட
ப்பிரசாதத்தி னிச்சயமுண்டாம். அப்படியே தி
மோத்தேயுக்கெழுதின -௴ திருபத்தில்-ச-ம். அ
திகாரம்-௰ச-ம். வசனத்தில் அர்ச். - சின்னப்பர்

சொன்னதாவது: ஆண்டவனெனக்குத்தந்தகா
ட்சியின்படியே நான் உன்னைமேற்றிராணியா
க்க) வுன்றலைமேற்கைவிரித்தசடங்கோ டுனக்
கு வந்த விஷேடப்பிரசாதத்தை யெண்ணாதேதவி
க்கவேண்டாமென்றார். மீளவு மவருக்கு மூதி
ரவிரண்டாநிருபத்தின்-௧-அதிகாரம்-௬-ம்.வ
சனத்திற்சொன்னதாவது: நானுன் றலைமேற்
கைவிரித்தசடங்கோடுனக்குவந்தருக்கு விஷேட
ப்பிரசாதத்தை யெழுப்பிடக்கவுறுதிசொல்லு
கிறேனென்றார். மூன்றாவது-இதற்குஸ்தாபித்த
 தவகட்டளையுமுண்டாம். அப்போஸ்தலர் நடப
ட்சியாகமத்தின்-௧௩-ம்.அதிகாரம்-௨-ம். வசன
த்திற் சவுலு பார்னபாவென்றிருவரையுநாந்தெ
ரிந்துகொண்டவுத்தியோகத்துக்கு மற்றவர்களி
ற் பிரிப்பீர்களாகவென்றுண்டவர்கட்டளை யிட்
டபடி மற்றவப்போஸ்தல ரொருசத்தியாயிருந்
து வேண்டிக்கொண்டு-அவர்களிருவர்தலைமே
ற் கைவைத்தனுப்பினார்களென் றெழுதியிருக்கிற
தாழிய-அர்ச்.-சின்னப்பரொபெசியாருக் கெழு
தின திருபத்தின்-௪-ம்.அதிகாரம்-௰௧-ம்.வசனத்
தி லாக்கனைமேய்ப்பவருமையால்-மற்றவர்களை
நன்னெறியில்-நடத்து முத்தியோகமுள்ள மே
ற்றிராணியர்முதற் குருக்களெல்லாரையுங் குறி
த் திப்படிப்பட்ட வுத்தியோகத்தை யிவர்களுக்
காண்டவர் தாமேதந்தாரென்றார். ஆகையால்
வேண்டியமுக்குணமு மிதிலேயுமுண்டாகையா
லிதுவந்தேவத்திரவிய-அநுமானமென்று சொ
ல்லக்கடவோம். இப்படியே கல்வீன்றானுங் கற்ப
னைகளின்-௪-ம்.காண்டம்.௰௯-ம்.அதிகாரம்-௩௧
ம். பிரிவிலேகுருத்துவந்தேவத்திரவிய-அநுமா
னமாக வொத்துக்கொண்டான். அவன் சிஷி

ரோவெனி லொருநிலைநிற்கமாட்டாமற் குருவை யைவிட் டிந்தச்சத்தியத்தை மறுத்துக்கொண் டு திரிகிறார்கள்.

௬௫. ஏழாவது—மெய்விவாகம்.. அர்ச் —சின்ன ப்ப ரெபெசியாருக்கெழுதின நிருபத்தின்—ரு—ம் அதிகாரம்—௩௨—ம். வசனத்திற்சொன்னதாவது ஸ்திரீ பூமானிருவரு மோருடலாகக்கடவார்கள் இதுபரமரகசியத் தடைமானமே. அதெப்படி யென்றாற் கிறீஸ்துவையுந் திருச்சபையையும் ப ற்றி யிதுபரமரகசிய மென்றேனென்றார். இதற் குரியவர்த்தத்தைச் சொல்லிக்காட்டுவோம். ஸ் திரீ பூமானிருவரு மொருவராகச்செய்யும் புணா ச்சி மிருகத்திடத்திலுங்காணப்பட்டமையாற் பர மரகசியமென்னப்படாதல்லோ. ஆகையா லிதி லேபரமரகசியமேதெனிலிருவரொருவராகச்செ ய்யும் விவாகக்கட்டு மரணபரியந்த மவிழ்க்கப்ப டாமற் பிள்ளைகளில்லாதாயினும் வியாதியுள்ள தாயினு மனக்குறைவந்ததாயினு மெப்படியா யினுமிருவர் தம்முட் பிரியமாட்டாதபடிக்குச் சேசுநாதர் ஸ்தாபித்தவிவாகவகையே பரமரகசிய ந்தானெ. இதனையிப்படிஸ்தாபித்ததற்குக்குறி த்த நியாயமேதெனிற் கிறீஸ்துவுக்குந் திருச்ச பைக்கு மவிழ்க்கப்படாம லுள்ளஞானக்கட்டுமு றையைக்காட்டும்படிக்குச் சொன்னமுறையாக விவாகத்தைஸ்தாபித்தார். ஆகையாற் கிறிஸ்து வுக்கொருதிருச்சபையுந் திருச்சபைக்கொருகிறி ஸ்துவுமாத்திரமுள்ளபடி யானுக் கொருபெண் ணும்பெண்ணுக்கோராணுமாத்திரமிருக்கவும்— அர்ச்.—மத்தேயுஸ்சுவிசேஷத்தின்—௨அ—ம். அதி காரம்.௨௰—ம். வசனத்திற்சொன்னபடி யுலகமு டியுந்தனையுஞ் சேசுநாதர் தன்கற்புடையாள

ய திருச்சபையைக்கைவிடாமலும் பிரியாமலுங்
ரப்பாரென்றதுபோல ஸ்திரீபூமா னிருவரு மர
ரபரியந்தம் பிரியாமலன்போடொன்று யிருக்க
ங் கட்டளையிட்டார். ஆகையாலிப்போது திருச்
பையிலுள்ள விவாகமுறைமை கிறிஸ்துவுக்குந்
ருச்சபைக்குமுள்ள ஞானக்கட்டுமுறையைக்கா
டு மடையாளமாகஸ்தாபிக்கப்பட்டதாமே. ஆ
லாற் கிறிஸ்துவர்கள்விவாகமேபரமரகசியத்த
டமானமென்று-அர்ச்.-சின்னப்ப ரெழுதினை
தார். இல்லாவிட்டால் விவாகப்புணர்ச்சிகிறிஸ்
வையுந்திருச்சபையையுங்குறித்துப்பரமரகசி
மென்னப்படுமென்றுதாமேயெழுதுவானேன்.
ப்படி யத்தவதிகாரத்திலே தானே திருச்சபை
குக் கிறிஸ்துவே தலையாவதுபோல ஸ்திரீயான
ளுக்குத் தன்பத்தாதலையர்மென்றார். திருச்ச
பமேலே சேசுநாதரன்புவைத்தபடி பூமானு
தன் துணைவியைச் சிநேகிக்கச்சொன்னார். சே
நாதரைத் திருச்சபைவணங்கி யவர்க்குக் கீழ்ப்
டிந்ததுபோல ஸ்திரீயுந் தன்பத்தாவுக்கு வண
கஞ்செய்து கீழ்ப்படியக்கற்பித்தார். இத்தாகா
னப்படுமனிதர் விவாகங்காணப்படாததாய கிறீ
ஸ்துவுக்குந் திருச்சபைக்குமுள்ள ஞானப்புண
ச்சியைக் காட்டுமடையாளமாமே. தேவத்திர
ிய-அநுமானமாவதற்கு வேண்டின விந்தமு
நற்குணமல்லாதே யிஷ்டப்பிரசாதத்தி னிச்ச
பமு மிதிலேதானேகாணப்படும். அதெப்படியெ
ிறு லாண்டவர் மனுஷாவதாரஞ்செய்தபோது
தாமெடுத்தசுபாவ மெய்யான மனுஷசுபாவமா
கையி லந்தச்சுபாவத்தினொருமையால்-மற்ற ம
ிதரோட சேசுநாதர் புணரப்பட்டாரொன்று
சொல்லலாம். ஆகிலும்மனுஷசுபாவப் புணர்ச்சி

பொதுமுறையாகி யவ்வகையா லக்கியானிகளோ
டேயு மவர்புணரப்பட்டதாகையி லிதொழியத்
திருச்சபையை யொருகற்புடையாளாகக்கொண்
டு தாமித்தோடேவிசேஷமாய்க் கொரிந்தியா
ருக்கெழுதின-உ-ம். நிருபத்தின்-ஙக-ம். அதிகா
ரம்-உ-ம். வசனத்தில்-அர்ச்.- சின்னப்பர்சொ
ன்னபடி புணரப்பட்டிருக்கிறதென்று சொல்ல
க்கடவோம். இது சேசுநாதர்திருச்சபைமேலே
வைத்தவிசேஷபட்சத்தினாலேயும் - அதுக்கெற்ப
நாளுங்கொடுத்துக்கொண்டுவரு மிஷ்டப்பிரசா
தமுதற் பலவரங்களினாலேயுமாகு ஞானப்புண
ர்ச்சிதானே. ஆகையால் ஸ்திரீபுமானிருவருக்கு
ள்ள வக்கியானிகளுக்கும் பொதுவாகியபுணர்ச்
சியெர்ழியத் திருச்சபையோடே சேசுநாதருக்
குள்ள ஞானவிசேஷப்புணர்ச்சியைக்காட்ட வி
வர்களுக்குள்ளே தேவபட்சத்தாலு மிஷ்டப்பிர
சாதத்தாலும் வருஞானப்புணர்ச்சி யுண்டாக
வேண்டியதல்லோ. ஆகையால்-அர்ச்.-சின்னப்
பர்சொன்னபடி திருச்சபையோடே கிறீஸ்து
வின் ஞானப்புணர்ச்சியைக்காட்டு மடையாள
மாகக் கிறீஸ்துவர்விவாகம்ஸ்தாபிக்கப்பட்டமை
யா லதற்குவேண்டின தேவபட்சமு மிஷ்டப்பிர
சாதமு மிதிலேவருவது நிச்சயமாமே. இப்படி
யேபுறத்தடையாளமுமுள்ளத்திஷ்டப்பிரசாதநிச்
சயமு மிதிலேயுண்டென் றெப்பித்தாச்சுதே. பி
ளவு மிதனைஸ்தாபித்ததேவகட்டளையு முண்டெ
ன்று காட்டக்கடவோம். அதெப்படியென்று நீ
லகம்வர்த்திக்க விவாகமாண்டவரால் ஸ்தாபிக்
கப்பட்டதென் றிந்நாளிலே சந்தேகப்படுவார
ல்லே. ஆகி ழ்மக்களைப்பெறுதற்கு வேண்டினசுபா
வக்கட்டல்லாதே கிறீஸ்துவர்கள் விவாக மிஷ்ட

பிரசாதத்தைத்தருஞ் சடங்காகித் திருச்சபை
யாடே சேசுநாதருக்குள்ள ஞானப்புணர்ச்சி
யைக்காட்டுமடையாளமாக வாண்டவரால்ஸ்தா
பிக்கப்பட்டதென்றும் - இதனை விதுமெய்யான
தேவத்திரவிய-அநுமானமென்று மிந்நாட்பதி
லொத்துக்கொள்ளார்கள். ஆகிலுமிற்றைறவரை
குஞ் சொன்னநியாயங்களினாற் கிறீஸ்துவர்கள்
விவாக மந்தஞானப்புணர்ச்சியைக்காட்டு மடை
யாளமென்று மதனால்விசேஷ-இஷ்டப்பிரசாத
வருமென்றும் வேதவுத்தாரணத்தா லொப்பித்
தல்லோ. ஆனலொருதேவரகசியத்தைக்காட்
டும் புறச்சடங்குதப்பாம லிஷ்டப்பிரசாதத்துக்
குக் காரணமாகஸ்தாபிக்கப்படவே நாண்டவரா
லொழிய வேறொருவராலு மாகுந்தன்மையல்ல
வென்று நம்மோடேபதிதருஞ் சொல்லுகிறார்க
ள். ஆகையாற்கிறீஸ்துவர்கள்விவாக மிஷ்டப்பிர
சாதத்தைத்தந்து கிறீஸ்துவின் ஞானப்புணர்
ச்சியைக்காட்டு மடையாளச்சடங்காகக்கொள்ள
வாண்டவரா லதற்கு ஸ்தாபிக்கப்பட்டதென்று
சொல்லவுங்கடவார்கள். ஆகையால்-அர்ச்.-மத்
தயுஸ் சுவிசேஷத்தின்-௧௯-ம். அதிகாரம்-
-ம். வசனத்திற்சேசுநாதர்விவாகத்தைப்பற்றி
யாண்டவர் கட்டினதைமனிதன்பிரியாதிருப்பா
னாகவென்று திருவுளம்பற்றினவசனஞ் சுபாவப்
பியாதுமுறையாற்செய்த விவாகத்தைப்பற்றிச்
சொன்னதொழியவிசேஷமாய்மரணபரியந்தம்
பிரிக்கப்படாதகட்டுள்ளகிறீஸ்துவர்கள் விவாக
-ஆண்டவராற் சொன்னமுறையோடேஸ்தா
பிக்கப்பட்டதென் றவர் திருவுளம்பற்றினதாகக்
கொள்ளக்கடவோம் ஆகையால்விவாகமுந் தே
வத்திரவிய - அநுமானமென்பது சத்தியந்தா

னே. விவாகமுறையில்வெட்கமில்லாத லுத்தேர் சொன்னதைநமக்குள்ள நாணத்தைப்பாராம லிங்கேயெழுதக்கடவோம். லுத்தேர் போதித்த தெல்லாமொருப்படவவன்சிஷிக்களச்சுப்பதித் தார்கள் அதிலே-ரு-ம். புஸ்தகத்தில்-ளஉ௲-ம். ஏட்டி லெழுதியிருக்கிறதாவது-லுத்தேர் வாச மாயிருந்த வித்தெம்பேற்க்நகரிலெல்லாருக்கும் பொதுவாய்-௲ருளஉ௰உ-ம். ஆண்டில்விவாகவி ஷயத்திலே செய்தபிரசங்கத்திற் சொன்னவார் த்தையாவது ஸ்திரீயானவள்-தன்பத்தாவுக் கிட ங்கொடாளாயி னப்போது நீயாட்டேனென்றால் வேறொருத்திசம்மதித்து வருவாளென்று புருஷ னவளுக்குச் சொல்லக்கடவான். அப்படியேகொ ண்டபெண்சாதி மாட்டேனென்றி லிருக்கிறவெ ள்ளாட்டியைச் சேர்ப்பீர்களாகவென்றான். அப் படியே வேசிகள்கூத்தாடினவிடத்தி லிதனைச் சொல்லக்கேட்டாலு நல்லோர்கூசிச் செவிகளை யடைக்கச்செய்யு மபத்தமிதாகித் திருச்சபை யைநிறுத்தவந்த புதுவப்போஸ்தலனாகிய லுத் தேர்வெட்கமில்லாமல் வேதமுறையாக ஞானப் பிரசங்கத்திலே சொல்லக்கூசாதேபோனான். ப ளவும்-அர்ச்.-மத்தேயுஸ்-ரு-ம். அதிகாரம்-௩ உ-ம். வசனத்திலும்-௰௯-ம். அதிகாரம்-௯-ம் வசனத்திலும்-அர்ச்.- மாற்கு-௰-ம். அதிகாரம் ௰௧-ம். வசனத்திலும்-அர்ச்.-லூக்காஸ்-௰௬-ம் அதிகாரம்-௰அ-ம். வசனத்திலும்-அர்ச்.-சின்ன ப்பர் கொரிந்தியருக்கெழுதின-௲ நிருபத்தின் எ-ம். அதிகாரம்-௰-ம். வசனத்திலு மரணபரி ந்தம்விவாகக்கட் டவிழ்க்கப்படாதென்று வே சத்தியமாக வெழுதியிருக்கப் பழையவேதத் லேல்முதலாய்ப்பிறர்க்குள்ளாகித் தன்ஸ்திரீயா

ள்-தனக்குத்துரோகம்பண்ணினகாரணத்தினு
லாழிய வவளைமறுத்து வேறேகொள்ளப்படா
தன்றிருக்க - ஓரிரண்டு முறைதன்புருஷனுக்கி
ங்கொடாத பெண்சாதியைமறுக்கத்தேருத்
ாரந்தந்தான் - ஆகிற்முதற்றாரத்தைக் கைவி
டாலொழிய வேறேகொள்ளப்படாதென் றந்
ப்பிரசங்கத்திலே - ௲௫௱௨௨-ம். ஆண்டிற்
சான்னான். அதன்பின்பு-௲௫௱௩௯-ம்.ஆண்
லே -௰எ- வருஷங்நடந்ததாகையிலவன் றன்
ானமும்வளர்ந்து தானுந்தெளிந்துதேறி லங்
ருவென்பவனுக் கிரண்டு பெண்சாதிகளைக்கூட
படைக்க வுத்தாரஞ்செய்தான். இவையெல்லா
மய்யென்றறிந்து மின்னந்தாங்க ளநுசரிக்கு
சமயத்துக்கு லுத்தேசனைத் தலைவனுகவைப்பத
குச் சிலர்கூசாதிருப்பதுகண்டு நமக்கதிசயந்
ானே.

௯எ. இற்றைவரைக்குஞ் சொல்லிக்காட்டின
வதவுதாரணங்களினுல் - நாமுன்சொன்னவே
தேவத்திரவிய-அநுமானங்களுண்டென் றெ
பித்ததல்லோ. இந்தவேழுமொழியப் புறத்த
டயாளமாகியுள த்திஷ்டப்பிரசாதத்தைத் தரு
படிக் காண்டவரால் ஸ்தாபிக்கப்பட்டவேறு
சடங் குண்டென்று வேத வுதாரணங்களினு
லாப்பிப்பாரில்லை.ஆகையாலந்தவேழுமாத்திர
ண்டென்று சொல்லக்கடவோம்.ஆகிலுமேழு
தவத்திரவிய - அநுமானங்களைச் சேசுநாதர்
தாபித்ததன்மையாலிதிலே குறையவுமேறவு
தன்சித்தத்தின்படியே ஸ்தாபிக்கவல்லவர்தா
ம.ஆயினு மிகாமலுங்குறையாமலு மிந்தவேழு
ண்டாக்கின காரணமேதென்றால் - உண்டாக்
னவர்திருவுளமே காரணமொழிய வேறில்லாதி

ருந்தாலுமவர்நீதிஞானத்தையறிந்து தூதிக்க
முங்குருடனொனினும்விசுவாசமே கண்காட்டிய
கக்கொண்டுபோயிதிலேபுகுந்து தடவியாயி
மிந்தவேழுதேவத்திரவிய – அநுமானங்களை ய
ர்ஸ்தாபித்ததற் கொண்ட நியாயங்களைக் காண்
போம். அப்படியேபாவத்திற்பிறந்த நாமெல்லா
ரு மறுபடி ஞானத்திற்பிறப்ப ஞானஸ்நானமு
ம்–பிறந்தபின்பு துவளாம லுறுதிபெறத்திருவெ
ண்ணெய்பூசிக் கொள்ளக்கப்படு முறுதிப்பூசுதலு
ஞானத்தில் – நம்மைவளர்விக்குந்தேவபோசன
மாகநற்கருணையும்–பின்பு–யாதொரு வியாதியை
க்கொண்டாலுந் திவ்வியமருந்தாகப் பச்சா
தாபமும்–சேவித்தபவ்வியயடையுநாளாகிய ம
ணநேரத்தில் – மனங்குழையாமற்பகைவராகி
பசாசுகளை வெல்வதற்குறுதிபெற அவஸ்தைப்பூ
சுதலும்–நன்னெறியில்–நம்மைநிறுத்தி நடத்து
ந்தலைவராகமேற்றிராணியர்முதற் பலவரிசை
கிரமக்குருக்களை ஸ்தாபிக்குங் குருத்துவமும்–
வுலகின்வாழ்வுகளி லிடறுமலறத்தோ டில்வா
க்கைக் கூட்டிவர்த்திக்க விவாகமும் – இவ்வய
வையுந்தயாபரனுனகர்க்கருண்டாக்கியிதுகள
ற் பொதுவிலெல்லாருக்குந் தனியேயெவர்க்கு
வேண்டின வுதவிசகாயங்களெல்லா முண்டா
மென்றுசொன்ன வேழுதேவத்திரவிய–அநும
னங்களை மிகாமலுங்குறையாமலும் ஸ்தாபித்த
தொன்றியோசிக்கக்கடவோம்.

௬௮. சொன்ன வேழுதேவத்திரவிய – அநு
மானங்களில் – ஞானஸ்நானமுறுதிப்பூசுதல் கு
ருத்துவமிம்மூன்றுமாத்துமத்தி லழிக்கப்படா
தேவமுத்திரையாக வொருஞானவக்ஷிரத்தை
பதித்துவைக்குமென்பது திருச்சபை படிப்பிக்

சத்தியந்தானே. இந்தமூன்று தேவத்திரவி
-அநுமானங்களந்தவசுஷிரமிட்டதிறலேயுமி
-வசுஷிரமெந்நாளு மழியாததிறலேயு மிவை
ன்றினையு மொருமுறையொழிய மீளவும்வாங்
படாதென்று நம்மோடேபதிதருஞ் சொல்
றார்கள். தேவமுத்திரையாகியவிந்தவசுஷிரத்
தப்பற்றி-அர்ச்.- சின்னப்ப ரெபேசியாருக்கெ
தின நிருபத்தின் ௧அதிகாரம்-௰௩-ம். வசன
திற் சேசுநாதர்பேரிலே விசுவாசத்தைக்கொ
டுவார்த்தைப்பாடுங்களுக்குத்தந்தபடியிஸ்பி
ந்துசாந்துவினாலே முத்திரைப்பெற் றிருக்கிறீ
ளென்றார். அதிலேதானே-ச-ம். அதிகாரம்-
௰-ம். வசனத்தி லிஸ்பிரீத்துசாந்துவினால்-மு
திரைப்பெற்றிருக்கிறீர்களென்றார். மீளவு மவர்
ாரிந்தியாருக்கெழுதின - உ-ம். நிருபத்தின்-
அதிகாரம்-௨க-ம். வசனத்தில்-நம்மையுறுதி
த்தினவரும் பூசினவரு நமக்குந் தம்முத்தி
யிட்டவரு முயிரிடத்தி லிஸ்பிரீத்துசாந்துவி
டமானத்தைத் தந்தவருஞ் சர்வேசுரன்
னேயென்றார். இம் மூவிடத்திலேயுந் தாங்க
ாடியார்முத்திரைப்பெற்றிருக்கிறீர்களென்றா
ல் - திடப்படுத்தப்பட்டிருக்கிறீர்களென்று தி
ப்பிறார்கள். ஆதிலு மந்தமுத்திரையால்-நாந்
டப்பட்டது நிச்சயந்தானே. வேதத் தெழுத
ப்பட்டசொல்லோவெனில்-முத்திரையுமடையா
ூமசுஷிரமுமென்று தமிழாகத்திருப்பலர்மோ
பத்தி-மென்று சொல்லப்படாது. அவர்களோ
வனி லிந்தத்தேவமுத்திரையில்லையென்றதனு
தாங்களே வேதவசனங்களுக் கொத்ததாய்ச்
ால்லித் தப்பிதங்களை மறுக்கமாட்டாமல்வே
மே தங்களோடொப்பவதனைமாற்றிமுத்திரை

யென்னுஞ்சொல்லைத்திடமென்றுவைத்தார்கள் ஆகிலு மிம்மூன்று தேவத்திரவிய-அநுமானங்களாத்துமத்திலழியாதவக்ஷரத்தைப்பதியாதயினொருமுறையொழிய மீளவும் வாங்கப்படாதற்குக்காரணம் பதிதரேசொல்லக்கடவார்கள் பின்னையுமிந்தவக்ஷரங்களாலாகும்பலனேதென்றால் - ஞானஸ்நானத்தால்வருமக்ஷரமற்றைத் தேவத்திரவிய-அநுமானங்களுக்கு நம்மைபாத்திரமாகச்செய்யவும் - உறுதிப்பூசுதலினாவருமக்ஷரம்-நிந்தைக்குமாக்கினைக்குமஞ்சாமவேண்டியவிடத்துப் பிடித்தவேதத்தின் சாட்சியாகநிற்க மனவூக்கத்தைக்கொடுக்கவும் - குருவத்தால்வருமக்ஷரம்பிறர்க்கு மற்றத்தேவதிரவிய-அநுமானங்களைக்கொடுக்கவல்லமைபக்கவு முதற்பலனாமே. உ-வது. கிறீஸ்துவினால்வமக்ஷரமாகையிலவரழியாதசாயலுயிரிடத்திதோற்றுவிக்கும். ௩-வது. கிறீஸ்துவின்சாயலைக்கொள்ள மற்றவர்களுக்குள்ளே நம்மைவேறுபடத்தோன்றச்செய்யும். இந்தவக்ஷரங்களுமழியாதவாத்துமத்தோடெக்காலத்து மழியாமல் மோக்ஷத்திலு நரகத்திலுந் தோன்றிநிற்கும். மோக்ஷத்திலே தேவநகையாக வொளிபெறத்தோன்றிவிளங்கும்-நரகத்திலோவெனில்நன்றியறியாத பாவிகளிடத்தில்வெட்கமுமனவருத்தமும் விளைவிக்குமாக்கினையாக வெவராலுந்தெளிவாய்க்காணப்படுமே. தேவத்திரவிய-அநுமானங்கள் விஷயத்திலேமாத்திரம் பதிதர் பிற்றின வபத்தங்களைச்சொல்லி யொவ்வொன்யுமறுக்கவேண்டுமாகிற் பலபெருங்கிரந்தங்களடங்குந் தன்மையல்லவென்றதனாலிதிலே சொல்லும்வேதத்திலூன்றியசத்தியங்களு

அவர்கள் சாதித்தசலத்திலொன்றிக் கக்குந்தப்
பறைகளுமெவராலுங் காணப்படும்படிச் சொல்
லிக்காட்டினதுபோதுமென்றிருக்கிறோம். இவ்வி
டிதற்கருணைக்கடுத்த சில விசேஷங்களைமாத்திர
ம் வருமதிகாரத்திற் சொல்லிக்காட்டுவோம். ம
றப்படித்தேவபொன்மலையின் சுனையாகச்சேசு
நாதர்தாமேநமக்குவேண்டிச்சிந்தின திவ்வியவி
த்தமே யெழுதேவத்திரவிய- அநுமானங்கள்
வழியா லேழாறுகப்பிரிந்தோடி யிஷ்டப்பிரசா
தமுதற் பலவரங்களை யொளிமங்காத மணிகளா
க்கொழித்து வயல்கடோறுஞ் சோலைகடோறு
ங்குளிர்படப் பாய்ந்து விசுவாசமுதற் பலசுகிர்
தபுண்ணியங்களைப் பலன்களாகவிளைவித்துத் தி
ருச்சபையைத் தேவபூங்காவனமாகச் சிறப்போ
டலங்கரித்துக் கொண்டுவருவது நிச்சயந்தா
னே. பதிதரோவெனி லிந்தப்பூங்காவனமாகிய
திருச்சபையை விட்டகன்றுபோய்ச் சுடும்பாலை
நிலத்திற்கிடந்து காமகோப பகைபழியாங்கார
ந் சுடச்சுடநெஞ்சில் வெந்துவருந்துமளவிலே
ங்கள் - மனத்தைக்குளிர்ப்பிக்கு மொன்றுமில்
லாமையாற் பெரியோர்சொல்வதைக் கண்டுபொ
றுக்கமாட்டாத சிறியோரைப்போல வுரோமா
ன் திருச்சபையிற் சகலநன்மைவிளைவிக்கு மே
ழாறுவுள்ள வேழுதேவத்திரவிய - அநுமான
ங்களிற் சிலதுகளில்லையென்று வற்றுவிக்கவுஞ்
சிலதுகளுண்டென்றாலுந் தங்கள்வாய்நஞ்சினைக்
கலந்து - அதுகளைக்கெடுக்கவும் பிரயாசப்படு
வார்கள். ஆகிலும்-அர்ச். - மத்தேயுஸ்சுவிசே
ஷத்தின்-௰௬-ம். அதிகாரம் - ௰அ-ம், வசனத்
தெழுதினபடியே சேசுநாதர்மாறுமற்செய்யுமு
தவியைக்கொண்டுபசாசினால்வெல்லப்படாத தி

ருச்சபைமேலே யாண்டவர் வைத்ததயைமாற வுஞ் செய்யுஞ்சகாயங்கள் குறையவும் விளைவிக் கு நன்மைமெலியவும் பாவிகளாலாகுந்தன்மை யோ. வச்சிரத்தைதக்கடித்தபல் லுதிருமொழிய வச்சி மென்றுங் குன்றுதொளிருமென்பது நிச் சயந்தானே.

பதின்மூன்றுமதிகாரம் முற்றிற்று.

# ௰௪-ம். அதிகாரம்.

## தேவநற்கருணை விளக்கம்.

வங்கள் பொறுக்கப்படவுஞ் சகலவரங்கள்கொடு

க்கப்படவும் போதுமென்றும் வேண்டினதின்பே லுமளவில்லாதபலன்களென்று நிச்சயமாகப்படி ப்பிக்குஞ் சத்தியமாமே. ஆகையால்-அர்ச்.-சின் னப்பர்சொன்னபடியே சேசுநாதரொழிய வே றெருகிறீஸ்து நமக்காகப் பாடுபடவரவுந் தே வையில்லை. இந்தக்கிறீஸ்துத்தானே மீளவுமிங் கேவந்துதிரும்பப்பாடுபடவுந்தேவையில்லை. ஆகி லுமிது மெய்யென்றாலு மநுஷனம் பலர்பாவப் பொறுத்தலடையாமல்-நரகத்துக்குவிழுவது நி ச்சயமாகக்கொள்ளச்சேசுநாதரடைந்தபலன்க ளளவில்லாதாயினு மவர்கட்டளையிட்ட வழியா லந்தப்பலன்கள் - நமக்குவந்தாலொழிய வதுக ளாலே நமக்குப்பிரயோசனமில்லையென்று சொ ல்லவுங்கடவோம். அதெப்படியென்றாற் பெருங் கடலொப்பவாழமுங் கரையுங்காணும லகன்ற தொருபூந்தடாகத்திலே பாய்ந்த தீம்புனற்குளி ர்ந்ததண்ணீர் நிறைந்திருக்கக் கரையிலொழுங் குபடவைத்திருந்த பலபெருமடைகளைத் திறவா மலதி னருகுள்ளவயலிலே தண்ணீர்பாயவு மதி லேயிட்டபயிர் விளையவுமாட்டாதே. ஆகையால் வயலிலுள்ளசெந்நெல்விளையத்திறந்தமடைகள் வழியால் வயலிலேதண்ணீர் பாயவேண்டுமென் றாற் குளத்திலுள்ள தண்ணீர் போதாதென்று சொன்னதாகக் கொள்வா ருண்டோ -அத்தன் மையே நம்முடையகர்த்தர் பாடுபட்டிரத்தமெ ல்லாஞ்சிந்திச் சிலுவையிலடைந்தபலன்கள்கரை காணாத கருணைக்கடலா யெல்லாப்பாவங்களைத் தீர்க்க வெல்லாநன்மைகளை விளைவிக்க வளவும்பி ரமாணமுமின்றி வல்லதுதானே. ஆகிலுமவர்கூ ட்டினபலன்களை நமக்குச்செல்லக் கொண்டுவி டுந் திவ்வியமடைகளாக வேழு தேவத்திரவிய

நுமானங்க ளல்லாதே தற்கருணைப்பூசைமுதன துகளை ஸ்தாபித்தாரென்றதனால்-நாமந்தடைகளைத் திறந்தார்போலத் தேவத்திரவியநுமானங்களையும் பூசையையுங்கொண்டு பாவபொறுத்தலு நன்மைப்பெறுதலு மடையவேடுமென்றுற் சேசுநாதர் சிலுவையில்-தமக்க-ந்த பலன்கள் போதாதென்று நாஞ்சொனதாக நினைப்பாருண்டோ. ஆகையால்-நா-சிலுவைப் பூசைக்குக்குறையாகவொன்றுஞ்சால்லாம லந்தப்பூசைக்குத் தோத்திரமாகநாசொன்ன நியாயத்தைப்பார்க்கிற் சிலுவைப் பூச யொன்றல்லாதே வேதத்திலே வேறொரு பூச முன்னிருந்ததுமில்லை யினியிருக்கப்போகிறமில்லையென்று சொல்லலாம். அதெப்படியென்றாற் பழையவேதத்தின் பூசைகளு நாஞ்செய்யுந்திவ்வியபூசையு மெய்யானபூசைகளாயினுஞ் சிலுவைப்பூசைக்கு வேறுபடாம லொருமுகத்தைக்காட்டும் பலகண்ணாடிகளாகநின்று சிலுவைப்பூசையைக்காட்டின நினைவடையாளங்களென்று சொல்லக்கடவோம். இதுவுந்தவிர மற்றப்பூசகளால்வந்த நன்மைகளு நாஞ்செய்யுந்தேவபூசையால்வருநன்மைகளுஞ் சேசுநாதர் சிலுவைப்பூசையாலடைந்த நன்மைகளொழிய வேறில்லை. ஆகையாலிப்போது சொன்னபடிச் சிலுவைப்பூசைநிறைந்த பூந்தடாகமாகநிற்க வதிலே கூடினபலன்களாகிய தண்ணீரைச் செந்நெல்விளையவிடும் பலமடைகளாக முன்னிருந்த பலவகைப்பூசைகளு நாஞ்செய்யும்பூசையுங்கொள்ளக்கடவோம். ஆகையாற்சிலுவைப்பூசையொன்றே யெல்லாப்பூசைகளாற் காட்டப்பட்டபூசையென்று மெல்லாப்பூசைகளில்-நமக்குப் பலன்களைத்தரும் காரணப்பூசையென்றுஞ் சொல்வது

நியாயமாமே. இருகண்மூடின பதிதரோவென்
லிந்த நியாயங்களைக் கண்டுபிடிக்கமாட்டாதவர்
ளைப்போலே நம்மையெல்லாரையுங் குருடரென்
றெண்ணிச் சேசுநாதர் சிலுவைப்பூசையாலடை
ந்த வளவில்லாதபலன்கள்-நம்மைக்கரையேற்
ப்போதாதென்று நாம்படிப்பிக்கிறதாகச் சொ
ல்லுவார்கள். ஆகிலுமுரோமான் றிருச்சபையே
லே விரோதமாகி யேழைச்சனங்களை யேய்க்
ப்பதிதர்தங்கள்வாயா லிந்தவபத்தத்தைச் செ
ல்லுவதொழிய நாமந்தத்தப்பறைசொல்லாமற்
டிப்பிக்குஞ்சத்தியத்தைத்தங்கள்-மனமே யறி
மென்பதற்குச் சந்தேகமில்லை.

௩௰௫. இந்தநியாயங்களை நன்றாய்க் கண்ட
ந்தல்லோ லுத்தேர் துவக்கத்திலே நற்கருணை
ப்பூசைவிலக்கலாகாதென் றிருந்தான். அவன்
ன்றனிப்பூசைவிலக்கும் புஸ்தகத்திலெழுதின
வது. அப்போஸ்தலர் துவக்கி யிந்நாள்வரைக்
யிருந்த வேதபாரகரெல்லாருஞ் சந்தேகத்து
கிடங்கொடாமல்-நற்கருணைப்பூசை யுண்டென்
று தெளிவாய்ச்சொல்லி யிதுவே திருச்சபையோ
டே துவக்கின முறையாகக்கொள்ள நானதை
றுக்கவோ. நானொருவன் கண்ணுடையனாகி
ற்றவரெல்லாருங் குருடர்தானோவென் றஞ்சி
கூசிநிற்கத் தன்சிநேகிதனாகிய பசாசெப்பே
தும்போலே மனுஷ-உருபமாய் வந்துதோன்
ப்பூசைவிலக்கவேண்டுமென்றுசொல்லத்தானெ
ழுதினபடிப் பசாசுவார்த்தை யொருகாலுமறு
கமாட்டாத லுத்தேர்நற்கருணைப்பூசையி னிச்
யத்தை யறிந்தவனாகக்கொள்ளாவித்தரவாயிலே
பசாசுசொன்னதற்குச் சம்மதியாமல்-நெடுநே
ங் கொடியதோர் தர்க்கஞ்செய்தபின்பு கடை

லே பசாசுசொன்ன நியாயங்களுக் கிணங்கே
யினும் பசாசுகூப்பிட்ட விடிமுழக்கத்தாலுங்
ட்டின வெருவிடுமுருவத்தாலு மென்னைவெ
ட்டிமயக்குவித்ததனாற் கட்டாயமாயிணங்கிந
ருணைப்பூசையை விலக்கத் துணிந்தேனென்
தானே சொன்னபுஸ்தகத்திலெழுதிவைத்தா
. அப்படியேபிராணசினேகிதனாகிய பசாசுவா
ந்தைமறுக்கமாட்டாமற்கேட்க லூத்தேர் தன
நத்தானே கண்ணைப்பிடுங்கினாற்போலே தா
கண்டறிந்த நியாயங்களைமறுக்கவுந் தன்னு
துமத்தைக் கெடுக்கவுங்கூசாதேபோனான். இ
னல்-துருசாஉ-ம். ஆண்டிலேலூத்தேருண்டா
கின வொருபுதுமந்திரத்திலே தனக்குத்தோ
திரமாகவாண்டவனைப்பார்த்துச்சொன்னதா
து-சுவாமீ நானொருகாலும் பசாசுக்குவிரோ
ஞ்செய்யவுமில்லை யதுக்கு மனநோகச்செய்ய
மில்லையென்றான். இதுவுந்தவிர வெட்போது
னிதனைக்கெடுத்துப் பசாசுக்குச் சந்தோஷம்
ளைவிக்கப் பிரயாசப்பட்டேனென்று லூத்தேர்
ட்டிச்சொன்னாலும் பொய்யுமல்லவாகியவனு
க்கேற்ற தோத்திரமாகுமல்லோ. இதெல்லா மி
லேவாசிக்கும்போது லூத்தேர்தானே யிதனை
யபூதுவானோவென்று சந்தேகப்படுவா ருண்
ாமே. ஆகிலுமிதிலேயு மிந்தப்புஸ்தகத்தின் ம
றவிடங்களிலேயும் லூத்தேர்சொன்னதாகநா
வைத்ததெல்லாமுரோமான்றிருச்சபையாரொ
தின கிரந்தங்களிலேமாத்திரம் வாசிக்கத்தகு
விசேஷங்களல்ல. லூத்தேர்வாசமாயிருந்து த
ர சமயத்தைப் போதிக்கத் தெரிந்தவித்தேம
பற்க் நகரிடத்திலே லூத்தோனிகள்-தானே
த்தேதொழுதினதெல்லாங் கூட்டி யச்சப்பதி

த்த புஸ்தகங்களிலேதானே நாஞ்சொன்ன
ல்லாங் காணப்படுவது நிச்சயந்தானே. சொ
னபடியே தன்குருவாகியபசாசுசொன்ன
டியவுபதேசத்தால்- மயங்கினலுத்தேர் நற்க
ணைப் பூசைவிலக்கத்துணிந்தாலு மின்னந் து
மனதிலொளிபடவிளங்கித் தோன்றினதியாய
களை முழுதும்விலக்கமாட்டாமலும் பசாசுசொ
ன்னதை மறுக்கமாட்டாமலு நற்கருணைப்பூசை
யை விலக்கிறலும் விலக்கினதென்று காண்பிய
ம லேழைச்சனங்களையேய்க்க லுத்தேருமவன்
கைப்பதிதருந் துவக்கத்திலே பூசையென்னு
பெயரு மதற்குக்குறித்த வஸ்திரவகையும்பு
துச்செய்பக்கற்பித்தஞானச்சடங்குகள்-முன
யு மெவருங்கேட்பச்சொல்லப்பட்ட மந்திரசொ
ழுங்கு மிவையெல்லாத்தையு முரோமான்றிரு
சபைசெய்துகொண்டுவந்த தன்மையால்விடா
ம லவர்களுஞ் செய்துகொண்டுவந்தார்கள். அ
படியே தாங்கள்-நற்கருணைப்பூசையை மறு
துவிட்டார்களென்று தங்கள்-மேலே யநியா
மாய் நாஞ்சொன்னதாகமுறைப்பட்டு-அப்பே
லோசியவென்னும் புஸ்தகத்தின் -௯உ-ம். பி
விலெழுதிவைத்தார்கள். ஆகிலுந் திருச்சபை
ற்கருணை யுண்டாகுமுன்னு முண்டாகியபின்னு
மந்தப்பூசையை யுயிர்வாழு மெல்லாமனிதரு
கு முத்தரிக்கிறஸ்தலத்தாத்துமாக்களுக்கு நன்
மையாகப் பிதாவுக்குப் படைத்தொப்பிக்கும்ப
க்குக் குருக்கள்சொல்லக் கட்டளையிட்டமந்தி
ங்களெல்லாத்தையு மவர்கள்-தள்ளிப் படை
தலென்று மொப்பித்தலென்று மிந்தச்சொற்
ளை மிகவும்வெறுத்துக்கூடவதிலே நற்கருணைவா
ங்கினவர்களுக்கொழியப் பூசையொருவருக்கு

ாதென்று சொன்னார்கள். இதோ சேசுநாத
ந்தையாடுகளை யெய்த்துவிழுங்க வாட்டுத்
ோலைப்போர்த்தவோராய் தன்னுருவத்தை த
ட்டி யிதிலேபூசையென்னும்பெயர் பலனில்
த வெறும்பெயராகவைத்து மெய்யாகவே ந
நணை தேவத்திரவிய-அநுமானமாவதொழி
மெய்யானபூசையாவதில்லையென்று தாங்களா
ான்னது பிரசித்தமாமே. அப்படியேமுகத்தி
த்தத் தோன்றுதபடிக்கதனைமறைத்துக்கோ
பூசின வங்கப்பானையாக லுத்தேரென்பவன்
ாதுப்பூசைநல்லதென்று தனிப்பூசை யாகா
ன்றான். பொதுப்பூசையென்னுஞ் சொல்லா
பொதுவிலெல்லாருக்கு நன்மையாகச்செய்ய
ட்டபூசையென்று சொன்னால்-லுத்தேர்சொ
னது நியாயந்தானே. குருக்களெல்லாரும்
ாதுமனிதராகவும் பொதுத் திருச்சபைக்கிட
கவும் பொதுவிலெல்லாருக்கு நன்மையாகவு
தனியேபூசைசெய்தாலு மெல்லாருங்காணச்
ய்தாலு மநுதினம்பூசைசெய்வார்களென்ப
ரோமான்றிருச்சபை படிப்பிக்குந் தன்மை
னே. ஆகையால் - நாஞ்செய்யும் பூசையெல்
ம் பொதுப்பூசையொழியத் தனிப்பூசையொ
றில்லையே. ஆகிலும்-லுத்தேர் நினைத்தவர்த்
திருவல்ல. அவனேபூசையென்னும்பெயரையு
வர்த்தத்தோடே கொள்ளாய திலேபிதா
க்குத் தேவபலியாகச் சேசுநாதர்படைக்கப்ப
பதில்லையென்று நற்கருணைவாங்குவதே பூசை
யென்றதலால் - மற்றச்சனங்கள்கூட நற்
நணைவாங்கின பூசை பொதுப்பூசையென்றும் பூ
சசெய்யுங் குருவானவர்மாத்திர நற்கருணைவா
ங்கினபூசை தனிப்பூசையென்றுந் தானேயித்த

வகைத் தனிப்பூசை யாகாதென்றான். ஆகையா
ல்- நற்கருணைத்தேவத்திரவிய- அநுமானமா
வாங்குவதுமாத்திரமேபூசையென்றுமொழிய வே
றேவகைப் பூசையெல்லாம் வெறுத்தானல்லோ
ஆகிலு மனிதருக்குக்கொடுக்கப்படுநன்மை மெ
யானபூசையென்று சொல்வாரில்லை. ஆண்டவ
க்குப் பலியைப்படைப்பதே மெய்யான பூசையெ
ன்று சொல்லவேண்டியது. ஆதலால்- மேலி
டபொய்க்கோலமாக மனிதரையேய்க்க நற்க
ருணைப் பொதுப்பூசையாக ஸ்தாபித்தாற்போ
லுத்தேர்பேசிமெய்யாகவே யதுதேவத்திரவி
அநுமானமாவதொழியப் பூசையல்லவென்று
தாபிக்க நினைத்தானல்லோ. நாம்படிப்பிக்கு
தன்மையோவெனிற் பூசைகண்டயாவருங் கூ
நற்கருணைவாங்கினால்- நல்லதென் றவர்களைத்
ருச்சபைவிலக்கவுமில்லை. ஆனால் வேறொருவரு
வாங்காதாயினுந் தேவநற்கருணை யுண்டாகி
போது யாவர்க்கும் பொதுப்பலனாகத் தேவப
யாகிய சேசுநாதர்பிதாவுக்குப் படைக்கப்படுவ
ொன்றதனால் துவே மெய்யானபூசையென்றுசொ
ல்லக்கடவோம். லுத்தேரோவெனி லிப்படிச்
றிதுநாள்- மறைவாகப்பூசையை விலக்கினபின்
தன் குருவாகிய பசாசுதனக்குப்படிப்பித்த வு
தேசத்தை மறைவில்லாமற் சொல்லத்துணிந்
நற்கருணை கர்த்தர்கட்டளையிட்ட விராப்போ
னமாவதொழியத் தேவபூசையல்லவென்று த
ன்வெளியாகச்சொல்லத் துவக்கினான். அப்ப
லுத்தேர்சொல்லிக்கொண்டு படிப்பித்தாலுமின்
னமுரோமான் திருச்சபைமுறையின்படியே தே
வநற்கருணை யுண்டாயினவுடனே குருக்கள் தலை
யெடுத்துக்காட்டவும்- அடித்தமணியினோசை
யோ டனைவருந் தந்நெஞ்சடித்துக்காட்டின

கருணையை வணங்கவுஞ்செய்தான். ஆகிலும் மி
று தேவப்பிரியைப் பிதாவுக்கொப்புக்கொடுக்குந்
டங்காகி மெய்யான பூசைக்கேற்றதொழிய வி
ாப்போசனத்துக்குரிய தல்லவென்றகையில
னைவைக்கக் காரணமென்னவென்று லுத்தேர்
ஷிாக்களவனைக்கேட்டார்கள்- அதற்குலுத்தே
தனக்கேற்ற விரண்டு நியாயங்களைச்சொன்னு
ர். அதாவது- தமக்கிதொவ்வாதமுறையாமெ
றிலு மென்பகையாளி கார்லோஸ்தாதென்பவ
ர ந்தமுறைமையைவிலக்கிறுனென்று நானவற்குவி
ாாதமாகவும் பசாசெனக்கெல்லாத்தையும் ப
ப்பித்ததென்று தோன்றதபடிக்கு மந்தமு
றையை நிறுத்திவைத்திருக்கிறேனென்றுன். இ
படியிந்தவுத்தமமுறையை யக்கிரமமான கார
ங்களைப்பற்றி- உ௫௫-வருஷமாகலுத்தேர் த
ர்சயயத்திலேவைத்துக்கொண்டபின்பு- தூ௲
௫௱-ம்.ஆண்டில்- தன்னுரைசொன்னபடிக்கே
க வேதமுறையாய் நிறுத்தினதைத்தானேயா
ாதென்று முழுதும்விலக்கினேன், இதெல்லாம்
லுத்தேர்பிரியசீஷனுந் தோழனுமாகிய மேலந்
தானுடைய மருமகன்றனே யெழுதிவைத்தா
ர். ஆகையால்-தன்குருவாகிய பசாசின்சிநேக
மும்- அர்ச்.- பாப்புமேல்வைத்தபகையுந் தன்
ாயாதரித்ததுரையின் சலிகையு மிவைமூன்று
தன்விசுவாசத்தின் காரணமாகவுந் தன்சமய
த்தின் மாதிரிகையாகவுமெண்ணி நியாயத்தை
யான்றும்பாராமற் பிதற்றி லுத்தேரென்பவ
ா திருச்சபையில்- மெய்யானபூசையொன்றில்
லயென்று சொல்லக்கூசாதேபோனுன். அப்
பாதப்போஸ்தலரு மற்றவேதபாரகருஞ் சந்
தேகத்துக்கிடம்விடாமற் பூசை யுண்டென்று
தெளிவாய்ச் சொன்னதையுந் திருச்சபைதவக்

இன நாள்-முதற்கொண்டு நற்கருணையைப்பூசையாகப் பிதாவுக்கொப்பித்துக்கொண்டுவந்த முறையையுமவன்சொன்னதற் கெதிராகக்காட்டினவிடத்திற் சொல்லுமறுமொழியில்லாமற் பபிலோனடிமைத்தனமென்னும் புஸ்தகத்தின்-ரு.- அதிகாரத்தில்- மதிகெட்டபித்தனைப்போலே யெழுதினதாவது- எதிர்த்துக்காட்டின வுதாரணங்களுக்குச் சொல்லுமான மறுவுத்தரமில்லாதாகில்- நற்கருணைப்பூசையுண்டென்றுத்துக்கொள்ளுவதைப்பார்க்க வெல்லா வுதாரணங்கள் பொய்யென்றுமறுப்பதே நல்லதென்றான். மீளவுந் தனிப்பூசைவிலக்கும் புஸ்தகத்திற் சொன்னதாவது பாப்புக்குக்கீழ்ப்படிந்தவர்கள்- நமக்கெதிராகத்திருச்சபைமுறையும் வேதபாரகருதாரணங்களுஞ் சொல்லிக்காட்டினாலிதெல்லாநமக்குத்தடையுமல்ல- இதிலே மனிதர்செய்ததுஞ்சொன்னதுஞ் சற்றுமிது நாமேமதிக்கப்போகிறதில்லை. தீர்க்கதரிசிகள்- முதலாயவர்களோடேயப்போஸ்தலருஞ் சில தப்பிதஞ்செய்ததறிவோமே. ஆகையாற் கிறீஸ்துவின்வார்த்தையாகத் திருச்சபைக்கு மப்போஸ்தலருக்குஞ் சம்மனசுகளுக்குமுதலாய்த் தீர்வையிடுபவர் நாமேயென்று லுத்தேதர்தேவதூஷணத்துக் கஞ்சாத துணிவோ டுலகங்கூசக் கூசாதே கக்கிச் சொன்னான். ஆகிலு மிதிலே சேசுநாதருக்குங் கூடத் தீர்வை தானேயிடுவானென்று சொல்லாதிருந்ததுதிசயந்தானே. இப்படிச் சத்தியத்தையுந் திருச்சபைகாட்டின நியாயத்தையும் விட்டுப்பிரிந்தவர்கள் கண்கெட்டுடறிவிழந் துருண்டெல்லாவக்கிரமத்தின் பாதாளத்தில்மிழ்ந்திக்கிடப்பார்களல்லோ.

பதினைந்தாமதிகாரம்முற்றிற்று.

# ௰௪-ம். அதிகாரம்.

## தேவவாக்கியவிளக்கம்.

௱௰௪. இற்றைவரைக்குஞ்சொன்ன வேதசத்தியங்களெல்லாத்தையு மொப்பித்துக் காட்டத் தேவவாக்கியமே திருவிளக்காகக்கொண்டோமல்லோ. ஆகையா லிப்போது தேவவாக்கியத்துக்கடுத்த சிலநூல்களைச் சொல்லிக்காட்டக்கடவோம். இதிலே பதிதர்சொல்லுமுதலபத்தமாவது- எழுதப்பட்ட தேவவாக்கியமொழிய வெழுதாததேவவாக்கிய மொன்றில்லையென்றுந் தேவவாக்கியமாக வெழுதினதைமாத்திரம் விசுவசிக்கவுஞ் செய்யவுங்கடவோமொழிய வெழுதப்படாமற் பாரம்பரமாய்த் தேவவாக்கியமாகவந்ததேவ விரகசியங்களை விசுவசிக்கவுமப்படி வந்ததேவகற்பனைகளைச் செலுத்தவுமொண்ணாதென்று மிந்நாட்பதிதரெல்லாருஞ் சொல்வார்கள். ஆகிலு மிந்தவபத்தத்தைப் பலநியாயங்களாற்காட்டி மறுப்பதெளிதே. அதுகளின்முதலாவது- மோயீசனுக்குமுந்தி யெழுதப்பட்டதேவவாக்கிய மொன்றில்லையென்றும்- அவருக்குமுந்தி யிரண்டாயிரம் வருஷத்தின் மேலும் விசுவாசமுள்ள மகாத்துமாக்கள்- தேவகற்பனையின்படியே நடந்தார்களென்றும் பதிதருஞ்சொல்லுஞ்சத்தியமல்லோ. ஆகையா லெழுதப்படாமல்வந்த தேவவிரகசியங்களை விசுவசிக்கவுந் தேவகற்பனைகளைச் செலுத்தவு மொண்ணாதென்று பதிதர்சொன்னதுபொய்யாமே. ௨-வது. சேசுநாதர்தாமே யப்போஸ்தலருக்குபதேசத்தையெழுதிக்கொடுக்கவுமில்லை- அவர்களெழுதச்சொல்லிக்கட்டளையிடவுமில்லை. அ

ப்படியுபதேசத்தை எழுதக் கட்டளையிடாமல் வாயினாலெல்லாருக்குஞ்சொல்லக் கட்டளையிட்டாரல்லோ. ஆகையாலவர் தந்திருச்சபைக்கல்லிவிவரமாகவெழுதின தேவவாக்கியத்தை ஸ்தாபியாமலெழுதாததேவவாக்கியமேஸ்தாபித்தார். அப்படியப்போஸ்தலர்- உடனே யெங்குமுபதேசத்தைச்சொல்லப் போனதொழிய வெழுதப்பட்ட நாலுசுவிசேஷங்களு நிருபங்கள் -மற்றவாகமங்களுந்திருச்சபை துவக்கின நெடுநாளைக்குப்பிறகுமாத்திர மெழுதப்பட்டதென்றறிவோம். இதெல்லாமெழுதப்படுமுன்னே பரம்பின திருச்சபை சேசுநாதர் புதிதாய்ப்படிப்பித்த தேவவிரகசியங்களையுமிட்டசுவிசேஷகற்பனைகளையுமெழுதாததேவவாக்கியமாகிய வப்போஸ்தலர் சொன்னவுபதேசத்தாலேமாத்திர மறிந் தெழுதாமற்படிப்பித்ததை விசுவசியாதிருந்ததுமில்லை யெழுதாமற் கற்பித்ததைச் செலுத்தாதிருந்ததுமில்லை. ரூ-வது.- தேவவாக்கியமாகவெழுதப்பட்ட புஸ்தகங்களுண்டென்று நாமறியும்படிக்குவழியென்ன. அந்தப்புஸ்தகங்களிலிது தேவவாக்கியமென்றெழுதியிருந்தாலுமிந்தவசனந்தானே தேவவாக்கியமென்றுமுந்தியறிந்தாலொழிய வதனைக்கொண்டு புஸ்தகமெல்லாந் தேவவாக்கியமென்று கொள்ளக்கூடாதல்லோ. அப்படியே மகமது- எழுதின- அல்கொரானிலேதானே யிது தேவவாக்கியமென்று பலவிடத்தெழுதியிருக்கக் கண்டாலுமது தேவவாக்கியப் புஸ்தகமாகக்கொள்ளமாட்டோமே. மீளவுந் தேவவாக்கியமாகவெழுதப்பட்ட புஸ்தகங்களுண்டென்றறிந்தாலுமதுக ளின்னபுஸ்தகங்களென்று நாமறியும்படிக்குவழியென்ன. அர்ச்.- தோமையார்சுவிசேஷமெ

ன்றும்- அர்ச்.- அந்திரோயசுவிசேஷமென்றுஞ்
சிலர்கையிலேவழங்கினதறிவோமல்லோ. அப்ப
டியாகிலு மிரண்டப்போஸ்தலர் பெயர்கொண்
டிருந்தவிந்த விரண்டுசுவிசேஷங்களைப் பொய்
யென்றுமறுத்து- அப்போஸ்தலராயிராத- அர்
ச்.- லூக்காஸ் சுவிசேஷமும்- அர்ச்.- மாற்குச் சு
விசேஷமுந் தேவவாக்கியமாக நாமும்பதிதரு
மொத்துக்கொண்டோமே. அதுகளைத்தள்ளி யி
துகளைக்கைக்கொள்ள நியாயமென்ன. இதுவுந்
தவிரத்தேவவாக்கியமாக வின்னொழுதினபுஸ்
தக மின்னதென்றறிந்தாலு மெங்கையிலுள்ளபு
ஸ்தகமவனெழுதினதுதானோவல்லவோவென்று
மதிலேவேறொருவராற் பொய்கலந்ததுண்டோ
வில்லையோவென்று நாமறியும்படிக்குவழியென்
ன. இவையெல்லாத்தையு நிச்சயமாயறியேனாகி
லெழுதப்பட்டதேவவாக்கிய மின்னதென்று ந
ன்றாயறியவு மதனைவிசுவாசமாகக்கொள்ளவுங்
கூடாதல்லோ. இதற்கு நிச்சயமாகும்படிக்கு
க்கலப்பில்லாத வேதாகமங்களின்னதென்றுண்
டவர்தாமே திருவுளம்பற்றிக் காட்டவேண்டும்.
ஆகிலும்- ஆண்டவர்தாமே யொவ்வொருத்தனு
க் கறிவிப்பாரென்று சொல்லவுங் கூடாதாகை
யாலெழுதப்படாமற் பரம்பரமாய்வழங்கின தே
வவாக்கியமே யெழுதப்பட்டதேவவாக்கிய மின்
னதென்றுகாட்ட வுண்டென்று சொல்லக்கட
வோம். இந்தநியாயத்தை மறுக்கமாட்டாமற்
பிரதானலுத்தோராணிகளாகிய பிறெஞ்சியுங்கெ
ம்நீசியுமெழுதின வேதாகமங்க ளின்னதென்ற
றியும்படிக்குமாத்திர மெழுதாமற் பரம்பரமா
ய்த் திருச்சபையில்வழங்கின தேவவாக்கிய மு
ண்டென்றுசொல்லவுமதனை யநுசரிக்கவும்வே

ண்டியது தானென்றார்கள். இதிப்படியாகக் கொள்ள வெழுதப்பட்டதேவவாக்கியமொழிய வநுசரிக்கத்தகுந் தேவவாக்கியமில்லையென்று பதிதர்சொன்னது பொய்யாமே. ஆகையாலெழுதப்படாமற் சேசுநாதரு மப்போஸ்தலரும் படிப்பித்ததாகத் தலைமுறை மாறுமற்றிருச்சபையில் வழங்கின தேவவாக்கியமு முட்கொள்ளக்கடவோமென்றுபதிதருஞ்சொல்லக்கடவார்கள்.

௱௰௫. நாலாவது- இயல்வேதம் வரிவேதம்- அருள்வேதமென் றிம்மூவகையா யிந்நாள்வரைக்கும் வழங்கின சத்தியவேதத்திலெங்குமிரத்தத்தையு மிரத்தஞ்சிந்தாமற் கொன்றபொருளையுமுண்பதுபாவமென்றுவிலக்கினதல்லோ. அப்படியாகிலு மதனைவிலக்கினகற்பனை யிப்போதுமறுக்கப்பட்டதென்பதற் கெழுதினதேவவாக்கியமில்லாதாயினும் பதிதர்முதலாயிப்போததுபாவமல்லவென் றதை யுண்ணலாமென்பார்களல்லோ. மீளவுஞ்சனிக்கிழமையாசரிக்க மூன்றுங்கற்பனையாக வெழுதப்பட்டதல்லோ. அப்படியாகிலும்பதிதர்முதலாய்ச் சனிநாளாசரியாமலாதிவாரங்கொண்டாடுவார்கள். இப்படிநாட்களைமாறுதற்குத்தாரம் வேதத்திலெழுதப்பட்டதெங்கே. பின்னையுநம்மோடேபதிதருமநுசரித்துச் சொல்லும் விசுவாசமந்திரம் வேதத்திலெழுதினதெங்கே. இப்படியே குழந்தைகளுக்குமுதலாய் ஞானஸ்நானங்கொடுக்கவேண்டுமென்றுமெவரு ஞானஸ்நானங் கொடுக்கலாமென்றும் பெண்பிள்ளைகளுக்குந் தேவநற்கருணைக்கொடுக்கவேண்டுமென்றுமிவையெல்லாம் வேதத்திலெழுதப்பட்டதெங்கே- எங்குமெழுதாதாயினும் பதிதரு மிவையெல்லாத்தையு மநுசரிப்பானேன்.

இவையெல்லாஞ் செய்யவேண்டியதென்று பதி தருஞ்சொல்லும்போதிவையெல்லாம் ஆண்டவர்படிப்பித்ததுங் கற்பித்ததுமாக வேண்டுமல்லோ. எழுதினதேவவாக்கியத்தாற் கற்பியாதிருக்கக்கொள்ள வதனைக்கற்பித்ததேவவாக்கியமெழுதப்படாமற் பரம்பரமாய்த் தலைமுறைதலைமுறையாக வழங்கினதென்று மப்படிப்பரம்பரமாயெழுதப்படாமல் வழங்கினதேவவாக்கியத்தை நாஞ்சொன்னபடியுட்கொண்டு விசுவசிப்பது நியாயமென்றும் பதிதருஞ்சொல்லக்கடவார்கள். ரு-வது. மோயீசனெழுதின-ரு-ம். ஆகமத்தின்-௩உ-ம். அதிகாரம்-எ-ம். வசனத்தி லாண்டவர் வேதகாரியங்களிற் சந்தேகப்படுகிறவர்களெழுதினவேதத்தையாராயப்போங்களென்று சொல்லாமலுன்பிதாவைக்கேட்டா லவனேமறுமொழி சொல்வான். உன்பெரியோரைக்கேட்டாலவர்களேசொல்வார்களென்றார். அர்ச்.- சின்னப்பரோவெனில்- தெசலோனியாருக்கெழுதின விரண்டாநிருபத்தின்-உ-ம் அதிகாரம்-௰ரு-ம். வசனத்திற் சொன்னதாவது தம்பிமாரேயுறுதியாயிருந்து நானுங்களுக்குச்சொன்ன வார்த்தையினாலு மெழுதினநிருபங்களினாலும் படிப்பித்துத்தந்ததை நிறைவேற்றிக் காப்பீர்களாகவென்றார். இதோவெழுதப்பட்ட தேவவாக்கியமு மெழுதாத தேவவாக்கியமும் வேறுபடவைத் திரண்டையும் வேற்றுமையின்றி யநுசரிக்கச்சொல்லி வேதத்திலேகற்பித்தது நிச்சயமாமே.௬-வது.எழுதப்பட்ட தேவவாக்கியமொழியத்திருச்சபையிலநுசரிக்கத்தகும்வேறெழுதாத தேவவாக்கியமில்லையென்றுபதிதர்வேதசத்தியமாகச்சொல்லுகிறார்களல்லோ. ஆகிலுமவர்கள்சொல்லுமிந்த வசனந்தானேவேதத்திலெழுதப்பட்டதெங்கே.

எங்குமெழுதப்படாமலுந் தாங்களதைத் தேவ
வாக்கியமாக விசுவசித்தபோது தாங்களேயெழு
தாத தேவவாக்கியத்தை விசுவசிக்கிறார்களல்
லோ. இதன்பிற கெழுதாததேவவாக்கியம் விசுவ
சிக்கலாகாதென்று தாங்களேசொல்லுவானேன்
இவையெல்லாமிப்படியாகக்கொள்ளத் திருச்ச
பை பொதுவிலேயெல்லாரும்விசுவசிக்கப்படிப்ப
க்குஞ் சத்தியங்களு மெல்லாருநிறைவேற்றக்கட
மிக்குந்தருமங்களும் வேதாகமங்களி லெழுதப்ப
ட்டதல்லவென்றுற் சேசுநாதரு மப்போஸ்தலரு
ஞ் சொல்லவந்த படிப்பனையுங் கற்பனையுமதுவெ
ன்றுசொல்லக்கடவோம். அதிலே நாள்வட்டத்
திலே தப்பிதங்கள் கலந்ததென்று சந்தேகப்ப
டவுந்தேவையில்லை. அதேதெனில்- திருச்சபை
தேவவிரகசியமாகப் பொய்யையுந் தேவகற்பனை
யாகப் பாவத்தையும் படிப்பித்தாற் றிருச்சபை
வழுவிக்கெட்டதென்று மனிதர்களையேறுதற்
டமில்லாதேபோமென்று நிச்சயமாமே. ஆகிலு
ஞ் சேசுநாதர்- அர்ச். - மத்தேயுவெழுதின சுவி
சேஷத்தின் - ௰௬ - ம். அதிகாரம்- ௰அ - ம். வசனத்
திற்றிருவுளம்பற்றினபடி யெக்காலத்தும் பசாசி
னாற் கெடுக்கப்படாத திருச்சபை வழுவித் தப்பி
தங்களைப் படிப்பிக்கப் போகிறதுமில்லை, அளவி
ல்லாததயையு நீதியுமுள்ளசர்வேசுரன் மனித
களையேறுதற்கு விக்கினமாகநிற்குமந்தத்தப்பி
தங்கள்- திருச்சபையில் வரவொட்டவுமில்லை. ஆ
கையால்- தேவவிரகசியமாகவுந் தேவகற்பனை
யாகவுந் திருச்சபைபடிப்பித்ததெல்லாம் வேதத்
திலெழுதப்படாதாயினும்- அப்போஸ்தலர்கள்
துவக்கித் தலைமுறைதலைமுறையாகப் பாரம்பரி
மாய்க் கலப்பின்றிவழங்கினதேவவாக்கியமாக
ட்கொள்ளவு மநுசரிக்கவுங் கடவோமல்லோ.

ளயிசு. அப்படியெழுதப்படாமற் பரம்பர
மாய்வழங்கின தேவவாக்கியங்களை யநுசரிக்கத்
தேவையில்லையென்பது வேதத்திலில்லாதவசன
மே. அதுவுந்தவிர வதுகளையநுசரிக்கவேண்
டுமென்று முன்சொன்னபடி - ஆர்ச் - சின்னப்
ர் தெசலோனிக்கேயருக்கு-உ-ம். நிருபத்து-உ-ம்.
அதிகாரம்-௰ரு-ம். வசனத்தில் வேதமாகவெ
ழுதிறதில்லை. இப்படியாகியும்பதிதர் சலஞ்சா
த்தெழுதாததை யநுசரிக்கமாட்டாமல்- நாஞ்
சால்லுவதற்கெல்லாம் வேதத்திலெழுதின
தாகக் காட்டுங்களென்றும்-எழுதாததைச்செய்
யாமென்றுஞ் சொல்லுகிறார்கள். அப்படிக் கள்ளக்கு
வாகியத்தைத்தேர்ந்த சிஷரானபதிதர் இதிலேபரமா
த்தகுருவின் சிஷேரயரானார்கள். அதெப்படியெ
ன்று அந்நாட்டில் வழங்குங் கதையின்படியே
யாருகண்குருவுக்கொருகால்-நொண்டியுங் கா
யமின்றிக் காதுமின்றித் தவ-உருபமாய்வந்தீனு
தார்குதிரைமேலே பரமார்த்தகுரு வழிப்போ
கையிற் கீழேதொங்கினமரக்கொம்புபட்டுத் தலை
பாகு பிறகேவிழுந்ததாம். அதனைச் சிஷர்க
ளெடுத்தார்களென் றெண்ணிச் சற்றப்பால்-ந
டந்தபின் னதெங்கேயென்று குருகேட்டான்
. அதற்கவர்கள்-தலைப்பாகங்கேவிழுந்து கிட
க்குமென்றதற் கவன்கோபித்து விழுந்ததெல்லா
மெடுக்கத் தேவையில்லையோவென்றான். அதைக்
கேட்ட சிஷரோடிப்போய்விழுந்தபாகைவயையே
டுத்துக்கொண்டுவருகையில் ஞராத்திரி பசும்
பயிரில்-மேய்ந்தகுதிரை கழிந் தவிடாதின்ற லத்
தையுந் தலைப்பாகிலேதந்தியெடுத்துக் குருவின்கை
யில் வைத்தார்கள். அதற்கவன்மிகவுஞ்சினந்தந
க்கு விழுந்ததெல்லாமெடுக்கக்கற்பித்ததல்லோ

வென்றார்கள். அப்போதவனெடுக்கத்தகுவதுவெடுக்கத்தகாததுமுண்டென்றமையாலெடுக்கத்தகுவதைமாத்திரம் வேறுபட வெழுதச்சொன்னார்கள். அவனுமெழுதினான். அப்புறம்போகையில் வழுக்குநிலத்திற் றளர்ந்தநடையோடெநாண்டிச்குழை தவறிவிழுந்துமருங்கிலிருந்தகாழ்ந்தகுழியிற் பரமார்த்தகுருவுந் தலைகீழ் கால்மேலாகவிழுந்துகோவென்றலறியென்னையெடுக்க வோடிவாருங்களென்று கூப்பிடச் சீஷர்வற்றெழுதித்தந்த வோலையையெடுத்தொருவன்வாசிக்கத் தலைப்பாகுவிழுந்தா லெடுக்கவும்-சோமன் வேஷ்டிவிழுந்தா லெடுக்கவும்-சட்டையு முள்ளுடையும்விழுந்தா லெடுக்கவுமென் றவன்வாசித்தபடியொன்றொன்று மெல்லாத்தையுமெடுத்துவைக்க நிருவாணமாய்க்கிடந்தகுரு தன்னையுமெடுக்கச்சொல்லி யெத்தனைசினந்தாலு மும்மையெடுக்கச்சொல்லி யெழுதினதெங்கேகாட்டுமென்று மெழுதினபடிச்செய்வோமொழியவெழுதாததை யொருகாலுஞ் செய்யச்சம்மதியோமென்றுஞ் சீஷர்சாதித்ததனாற் றப்பும்வழி வேறொன்றின்றி யந்தக்குரு வோலையு மெழுத்தாணியும்வாங்கிக்கொண்டு கிடந்தவிடத்திலே தானும்விழுந்தா லெடுக்கக்கடவீர்களென்றெழுதினான். எழுதினதென்று சீஷர்கண்டபின்னர் குருவையுமெடுத்துக்கொண்டார்கள். இந்தக்கதைபதிதர்டத்தில்-மெய்யாகநடக்குந்தன்மையல்லோ.

௱௰௭. இதுவுந்தவிர வெழுதப்பட்டவேதாகமங்களை யவனவன் றன்மனதின்படியே மனுபாஷையாகத்திருப்பவுந் திருப்பினதை யவனவன் வாசிக்கவுமதற்கர்த்தஞ்சொல்லவு நல்லதென்று பதிதபத்தமாய்ச் சொல்லுகிறார்கள். உரோமா

திருச்சபையோவெனில் வேதாகமங்கள்-நாம்
சுவசிக்க வேண்டியதன்மைக்கு நடக்கவேண்டி
றைக்கு மதுவேமாத்திரையாகக்கொள்ளமா
திரைகெட்டா லதிலுான்றின விசுவாசமுந்தரு
நடக்கையுங் கெடுமென்றதனு லந்தவேதமாத்
ரை கெடாமற் பொய்க்கலப்பில்லாதபடிக்குத்
ன் னுத்தாரமில்லாம லொருவரு மநுபாஷையி
தைத்திருப்பவும் வாசிக்கவு மர்த்தஞ்சொல்லவு
விலக்கினதாமே. அதற்கு நியாயமேதெனில்
தாகமங்கள்-தேவவாக்கியமாகக்கொள்ள -எ
க்கு முயிர்தருமமிர்தமாமே. ஆகிலும்பசுவின்
லமிர்தமெனினுஞ் சுரங்காய்ந்தவர்க்கு விஷ
மல்லோ. அப்படியே-அர்ச்.-இராயப்பர்-உம்.
பத்திரின்-௩-ம். அதிகாரம்-௰௬-ம். வசனத்தி
சான்னபடி வேதாகமங்களிற் கண்டுபிடிப்ப
கரிய ... இருக்குண்டுபி
ாமற் றங்களுக்குக்கேடாகமாற்றிக்
களென்பது நிச்சயந்தானே. மீளவுங்கடலி
ள்ளமுத்தும் பவளமு நீர்மேல்-மிதவாமையா
முழுகிக்குளிக்கவேண்டியிருக்கக்கொள்ளவத்
ாழிலறிந்தவனொழிய மற்றவர்களு மதுகளை
சைப்பட்டுமுழுகினுலந்தமணிகளைக் கைக்கொ
ாமலதிலேதானே யமிழ்ந்திச் சாதலேநிச்ச
. அப்படியே யமிர்தக்கடலாகியவேதாகமங்க
க்குள்ளேமுழுகி யறியாதவனுந்தானே யது
நக் கர்த்தஞ்சொல்லி யதிலேமுத்தும்பவளமு
கவுள்ள தேவவிரகசியங்களைத்தானே யெடுக்
துணிந்தா லதுகளைக்கண்டுபிடியாம லபத்த
களை நினைத்துத் தன்னுத்துமத்தைத் தானே
டுப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. இதை
றித்து திருச்சபைதன்பிள்ளைகள்-மேலே மிகு

ந்ததயாபமுள்ளதாயாகித்தானேவேதக்கடலில்
முழுகித் தேவவிரகசியங்களாகிய திருமணிகளை
யெடுத்து நமக்குக்கையிலேதந்தாற்போல வே
தத்திலேமறைந்திருக்கிற சத்தியங்களை நமக்கு
வெளியாகக் காட்டுமல்லோ. பதிதரோவெனில்
எல்லாருமந்தக்கடலில்-முழுகச்சொல்லிச்சன்
பாஷையில் வேதாகமங்களைத் திருப்பவும்வாசி
கவுஞ்செய்யவும் பிரயாசப்படுகிறார்கள். அத
யின் பேழைச்சனங்களுக்கதனைக்காட்டி யவ
ளுள்ளவர்த்தத்தைக் கண்டுபிடியாததனு லவ
களுக்குத் தாங்களேயபத்தமாய் வெளிப்படுத்
த் தம்பொய்யானசமயங்களை யெளிதாய்ப் ப
பிக்கொண்டுவருகிறார்கள். அப்படி லுத்தேர்
னே துவக்கத்திலே தன்மதமெளிதாய்ப் பரப்
ம்படிக்குச் சேசுநாதர்வந்தபின் பெழுதப்பட்
வேதாகமுங்கி... ...வையா
ப்போலே-தூஷணி-பொய்யுந் தப்பிதங்களுங்
ந்து விஷத்தையினியபாலோ டேட்டினாற்போ
சிறந்த வலங்காரச்சொல்லாலெழுதி யச்சிடு
விக்கச்செய்தான். இந்தவழியால்வெகு சனங்க
ள்கெட்டுப்போய்த் தன்னோடே சேர்ந்தசெ
யுங்கண்டு சந்தோஷிப்பட்டுமீளவும்- ஆங்கிலி
தீவுந்தனக் குள்ளாகவேண்டுமென்று பலதந்
ரங்களைச் செய்துகொண்டுவருகையி லதற்கந்
த்தீவிராசாவிடங்கொடாமையால்-நெடுநாள்-
த்தேரொடுத்த தந்திரமெல்லாம் வீணாய்ப்போ
தைக்கண்டு நினைத்த வுபாயமேதெனில் -தரு
உசா-ம். ஆண்டிலே கொலோனியமாநகரிலச்
ப்பதிக்குந் தொழிலாளியொருவன் கள்ளுண்
வெறியிலே யினி யிராசா வேண்டாமென்றுவு

கொஞ்சநாளிலே யாங்கிலியதீவெங்கும் லூத்தே
ர்மதம் ஸ்தாபிக்கப்படுமென்றான். இதைக்கேட்
ட கொக்கிலேயென்பவனவனைத் தன்வீட்டிலழை
த்துப் பட்சத்தைக்காட்டி நீசொன்னதற் கர்த்த
மென்னவென்று கேட்கவேயத்தொழிலாளி சொ
ன்னதாவது- ஆங்கிலியநாட்டாரிருவர் லூத்தே
ர் தந்திரத்துக்குள்ளாகியவன்முன் செருமானிய
பாஷையாகத் திருப்பினவேதாகமங்களிவர்களா
ங்கிலிய பாஷையாகத்தந்து மூவாயிரம்பிரிவுக
ளிரகசியமா யச்சிலே பதித்துக்கொண்டு வரு
வாம். இதுகளாங்கிலியதீவிற்சென்றபின்பு லூத்
தேர்மதமு நுழைவதரிதோவென்றான். விசாரிக்
கும்போது சொன்னதுமெய்யாகி யாங்கிலியவி
ராசாவுக்கிந்தச் செய்தியை யறிவித்ததின்மேலவ
வன் றன்சீர்மையிலந்தப்புஸ்தகங்கள் - நுழை
யாதபடிக்குக்காவல்வைத்தான். இதோ தரங்க
ம்பாடியார் வேதாகமங்களைத் தமிழாகத்திருப்பி
னதிலே நினைத்தகருத்தும்பலனுமிதுவே. அப்ப
டியேயிவர்களுந்தங்குருவாகிய லூத்தேர்காட்டி
னவழியே பின்சென்று சேசுநாதரமிர்தவசன
மாகத் தங்கள்-மதத்தின் விஷத்தை யுங்களுக்
கூட்டவேண்டுமென்று சத்தியவேதத்தைக் கெ
டுத்துத் தங்கள்-தப்பறைக்கேற்ற சிறிதுகளைக்
கூட்டி யதற்காகாத சிறிதுகளைக்குறைத்துமாற்
றியதனைத் தமிழாகத்தந்தார்கள். அப்படியே-
பூர்ச். - இராயப்பரோமுநின-உ-ம். திருபத்தின்.
ல் அதிகாரம்- ௰-ம். வசனத்திற்சொன்னதாவ
து தம்பிமாரே- ஆண்டவருங்களை யக்கியானத்
தினின்றழைத்துத் தெரிந்துகொண்ட சகாயமு
ங்கள்-தருமநடக்கைகளைக்கொண்டு நிலைகொள்
ளும்படிக்குச் செய்யப் பிரயாசப்படுவீர்களாக

வென்றார். தரங்கம்பாடியாரோவெனில் விசுவா
சத்தாலொழிய மற்றத் தருமநடக்கைகளாற் க
ரையேற்றத்துக் கொருபலனும்வரவறியாதென்
றவர்கள்சொல்லு ம: த்தத்துக்காகதென்று -
அதிலே தருமநடக்கைகளைக் கொண்டென்கி
சொல் லெழுதாதிருந்தார்கள். மீளவும்-அர்ச்.-
சின்னப்ப ரெபிரேயாருக்கெழுதின நிருபத்தின்-
௰௩-ம். அதிகாரம்-௪-ம். வசனத்திலெல்லாத்திலு
ம் விவாகஞ் சங்கிக்கக்கடவதென்றார். அதற்கா
த்தமேதெனில் விவாகஞ்செய்தவர்களெல்லாரு
மதுதேவத்திரவிய - அநுமானமென்றறிந்து ச
ங்கிக்கத்தகுங் கட்டாகவெண்ணியதனை யவிழ்
மலுமதற்கு விரோதஞ்செய்யாமலுஞ் சமுசார
வகையிலொழுங்குமரியாதைவிடாமலுந் தங்க
ளுக்குள்ளே பட்சமாயொன்றுபட்டுச் செய்கி
றிலேயும் பேசுகிறதிலேயு முன்னும்புறமுமெல்
லாத்திலுந்தாங்கள்கொண்டவிவாகத்தைச் சங்
கிக்கக்கடவார்களென்றார். இதனால்-அர்ச்.-சின்
னப்பரிந்த வசனஞ்சொன்னவுடனே விவாகத்
தைச் சங்கியாமற் கொண்டதாரத்தையொழிய
மற்றொருத்தியைத் தீண்டினவனை யாண்டவர் த
ண்டித் தாக்கினையிடுவாரென்று கூட்டியெழுதி
னார். தரங்கம்பாடியாரோவெனிற் குருக்களுஞ்
சந்நியாசிகளும் விவாகஞ்செய்வது நல்லதென்
றுத்தேரோடே தாங்கள்சொல்லுமபத்தத்து
க்கிந்தவசனமுதவும்படிக்கதனைமாற்றியெல்லா
த்திலு மென்றைமற்சகலபேர்களிடத்திலே சரு
சாரத்துவஞ் சங்கைப்படத்தக்க தென்றார்க
ள். ஆகையாற்குருக்களிடத்திலேயுஞ் சந்நியாசி
களிடத்திலேயும்விவாகநல்லதென்பார்கள். ஆய
னுஞ் சகலபேர்களிடத்திலேயும் விவாகநல்

தன்றாற்பெற்றமகனைத்தகப்பன்கொண்டாலும்-
ண்ணன் கூடப்பிறந்த தங்கைச்சியைக்கொண்
ாலுஞ் சங்கிக்கத்தகும் விவாகமதுவென்பார்க
ளா. அப்படியே-அர்ச்.-சின்னப்பர் -ரு நிருப
தின்-௯-ம். அதிகாரம்-டு-ம். வசனத்திறகொரி
தியாருக்கெழுதினதாவது மற்றவப்போஸ்தல
ாருங்கர்த்தருடைய தம்பிமாருஞ் செப்பஸெ
பவருஞ்செய்கிறுப்போலே நாங்களுமொருபெ
ாபிள்ளையைத் தங்கைச்சியாகக் கூட்டிக்கொ
ாடுபோகக் கூடாதோவென்றார். அதற்கர்த்த
மதெனில் - நாங்களு மற்றவப்போஸ்தலரைப்
ாலேயெங்களைத் தங்கைச்சியாக விசாரிக்க
வாருத்தியைக்கூட்டிக் கொண்டுதிரியவு மதற்
கல்லா மூங்கள்கையிலே செலவுவாங்கவுநியாய
ண்டாமே. ஆகிலுங் கிறீஸ்துவின் சுவிசேஷத்
தத்தடையின்றிப்போதிக்க வுங்களுக்குச்செல
கொண்டுவிடாதபடிக் கிப்படிச் செய்யாதிருந்
தாமென்று அர்ச்.-சின்னப்பர்சொன்னதற்கர்
தமாக-அவர் தாமதிலேயெழுதின-யஉ-ம். வச
ாந்தையாராய்ந்துபார்த்தயாவர்க்குந் தோன்
றுமல்லோ. பதிதரோவெனிலப்போஸ்தலர்முத
லாய்ப் பெண்சாதியைவைத்திருந்தார்களென்று
காட்டி மற்றக்குருக்களுஞ் சந்நியாசிகளும்விவா
கஞ்செய்வது நல்லதென்றொப்பிக்க-அந்த- அர்
ச்.- சின்னப்பர்வசனத்துக்குப்பெண்சாதியென்
னுஞ் சொல்லைக்கூட்டி யதைத்தமிழாகத் திரு
ப்பினதன்மையாவது மற்றவப்போஸ்தலர்மார்க
ளைப்போலேயும்- ஆண்டவருடைய சகோதரங்
களைப்போலேயுங் கேப்பஸென்கிறவரைப்போ
லேயுங் கூடப் பிறந்தவளாயிருக்கிற வொருத்
தியைப் பெண்சாதியாக வங்கங்கேகூட்டிக்கொ

ண்டுபோகவு மெங்களுக்குவல்லமையுண்டாயி க்குதல்லோவென்று தரங்கம்பாடியா ரொழு வைத்தார்கள். ஆகையாற்கூடப்பிறந்த தங்ங ச்சியைப் பெண்சாதியாகவைப்பது மிருக வின திலொழிய வக்கியானத்தி லமிழ்ந்தின நாட் லு நடவாத வக்கிரமமேயானாலு மப்போஸ்தல க்கேற்ற வுத்தமமுறையாமென்று தரங்கம்பா யார் ஞானத்துக்குத்தோன்றினதல்லோ. மீள ஞ் சேசுநாதருக்குச்சகோதரங்க ளுண்டென் போதேயவளையல்லாதேதேவமாதா பெற்றப பிள்ளைகளுண்டென்றும்- ஆகையாலவள் கன் மாறுததாயல்லவென்றுஞ்சொல்லக்கடவார்கள் ஆகிலுந்தாங்களு நம்மோடேதேவமாதாவைப் பிசுத்த கன்னியாஸ்திரீயென்று விசுவசிக்கிற களல்லோ. எண்ணப்படாமலித்தொகைப்பட்ட வக்கிரமங்களைக் கலந்தெழுதின புஸ்தகங்கள்வே தமென்றுகொள்ளுவது நியாயமோ. வேதத்தை க்கெடுத்துத் தமிழையழித்துத் தரங்கம்பாடியா ரொழுதின புஸ்தகங்களைவைத்துக்கொண்டு-ஒரு நீசப்பறையன் வேதமெல்லாந் தன்னகையிலகப்ப ட்டதென்று மகிழ்ந்துசொன்னானும். இவனை முழுமதிகெட்டவனாகிக் கர்த்தர் திருவுளம்பற்றி னபடியே குருடனுக்குக் குருடன்கைதந்தபோ திருவருங் குழியில் விழுவார்களென்றதும்பா லத் தானுமோசமாயக்கெடுவது நிச்சயந்தா னே.

௱௰அ. ஆகையால்-முன்சொன்னபடி யெல் லாரு ன்தின்படியே சன்மபாஷியாக வேதத் தைத் திருப்பவும் வாசிக்கவு நியாயத்தின்படியே திருச்சபை விலக்கினதென்று சொல்லக்கடவோ ம். பின்னையு மிந்தநியாயத்தைக்கொண்டு சில

பரிந்[illegible] -மேலேமுறைப்பட்டத
கு [illegible] வெளியாகுமல்லோ. அ
தப்ப[illegible]த்திசையினின்று தமிழா
வே[illegible]ப்பட்ட தாசச்சண்டு நாங்க
ந்நாள்வ[illegible] ள்ளசில துகளை மா
திரம்[illegible] யற்றதெல்லாமெங்களுக்குவைத்
துக்கொண்[illegible] திருட்டாக வொளித்தோமென்று
றா றுகிறா[illegible]. ஆ[illegible]ம்பலவகைக்கறியுமன்ன மு
னிதாயு[illegible] தாயானவள்பிள்ளைக்குமுலைப்பா
-மாத்திரங்[illegible]டுப்பது திருட்டென்றால்- நாங்
ள்செய்ததுந் திருட்டுத்தானே. குழந்தை கெட்
டப்போசன முண்ணவுமுண்டாற்சமிக்கவுமாட்
டாமையால தற்கு[illegible]மென்று- அதனைத்தா
யுண்டு தன[illegible]ழிலாலினியவமிர்தமா
க்கிய தனைக்குழந்தைக்குப்பாலாகவூட்டினாற்பிள்
ளைக்குவஞ்சனை செய்யாமலன்புகாட்டினாளென்
றுசொல்லவேண்டியதல்லோ. அவ்வண்ணமே
நீங்களும் வேதத்தி[illegible]ன ங்குழந்தைகளாகையி
ல்வேதவசனங்களு[illegible]ள்ள வர்த்தமானங்
களுமுள்ளபடி யுங்[illegible]க்குக் கெட்டிப்போசன
மாகத்தந்தா லதுகளைக்கண்டுபிடியாமற் சமியா
தவுணவுபோல வுங்களுக்குக்கேடாகுமென்று நா
ங்களதனையாராய்த் தினியவமிர்தமாக்கிப்பலமு
றையோ டன்புபொருத்தியுங்களுக்குச் சொல்ல
வும் பலஞானப் பு[illegible]தகங்களிலெழுதிக் காட்ட
வுஞ் செய்தோம். செய்தாலுமிதுவன்பொழியவ
ஞ்சனையென்றுந் திருட்டென்றுஞ் சொல்வா
ருண்டோ. அப்படித்தான்- அர்ச்.-சின்னப்பர்
கொரிந்தியருக்கெழுதின முதல்.-நிருபத்து-௩-ம்.
அதிகாரம்- ௨-ம். வசனத்துத் தம்பிரசைகளுக்
கெழுதினதாவது - உங்களுக்குக்கெட்டியுணவு

கொடாமற் பாலையூட்டினேன். அதேதெனில் ற்றைவராக்கு நீங்கள்கெட்டியுணவு கொள்ளக் கூடாம லிப்பொழுதுமதற்குவல்லவரல்லவென் றார். மீளவு நாலெழுத்துக்கூட்டி வாசிக்கமாட் டாதவற்கு நன்னூல் காரிகை பொருளலங்கார முதலானதுகளைக் கையிற்கொடுத்தா லவனுக் குதவியோ- அவ்வுவாத்திக்குணர்வோ- அதுகளை க்கையிற்கொடாமலும் வாசியாமலுமிருந்தா லது வஞ்சனை யென்பவோ - அததிருட்டென்ப வோ. நம்முடையகர்த்தராகிய சேசுநாதர்தா மே-அர்ச்.-அருளப்பர்சுவிசேஷத்து-௰௬-ம். அதிகாரம்-௰உ-ம். வசனத்து-அப்போஸ்தலர்மா ருக்குத் திருவுளம்பற்றினதாவது- இன்னமுங்க ளுக்குரைக்கப் பலசெய்திகளெனக்குண்டாயினு நீங்களிப்பொழுததுகளைத் தாங்கமாட்டீர்களெ ன்றார். அதுகளைக்கண்டுபிடிக்கத் திறமில்லாதவ ர்க்கத் திறத்தைக் கொடுக்க வல்லவராயிருந்த சேசுநாதர்முதலா யப்போஸ்தலர்மார்க் கெல் லாத்தையுஞ்சொல்லாம லவர்கள் வல்லமைக்கு த்தக்கதாய் மாத்திரஞ் சொல்லிக்காட்டினபின் பு நாங்களுஞ் சேசுநாதர் செய்தாப்போலேயு ம்- அர்ச்.-சின்னப்பர் செய்தாப்போலேயு மெ ல்லாத்தையு முங்களுக்குடனே வெளிப்படுத் தாமையால் - நாங்கள்-திருடரொன்று முங்களை யேய்த்தவர்களென்றும் வேதத்தையொளித்தவ ர்களென்றுஞ் சொல்லநியாயமுண்டோ. மோ ட்சக்கரை யேறுதற் கறியவேண்டிய விரகசிய ங்களையுஞ் செய்யவேண்டிய புண்ணியங்களையும் விலக்கவேண்டிய பாவங்களையுமிம்மூன்றுவகை யுணர்ச்சிகளை யறிவியாம லொளித்திருந்தா லிது குறைதானே. மோட்சக்கரையேறுதற்குவேண்

பதை யொளியாதுபடிப்பித்துக்காட்டிமற்றவ
தமானங்களை யுங்களுக்குடனேகாட்டாதிருப்
நல்லறிவில்லாதபாலன்கையிலே கூர்ந்த
னையுள்ள கத்தியைக்கொடுக்கமாட்டாததோ
றுளைப் போலே யுங்களுக்குக் கேடுவராதப
க்கு நாங்கள்- நடத்தினபட்சத்தின்முறைதா
ல்லோ.

௰௯. மீளவுந்தரங்கம்பாடியார் தமது
ரபெயரைத் தமிழாகச்செவ்வே யெழுதமா
டாதவராகித் தேவபுஸ்தகத்தைத் தமிழு
யாகத் திருப்பிரேமென் றெளிலிமணி
யச் சேற்றிற் புதைத்தாற்போலவுமினியவமுதி
ல் நஞ்சினைக்கலந்தாற்போலவும் வடிவுள்ளசி
திரத்தின்மேற் கரியமையைச்சிதறிமாசுபடுத்
தாற்போலவும் வேதவுண்மைமறையவு மதன்
வை மாறியுயிரைக்கெடுக்கவு மதன்வடிவற்று
சு கொள்ளவுந் தமிழையறியாதவர்கள் - நம
ருசெவிகசந்துதோதாகக் கொடியமொழிகளா
ழுதித்தந்த புஸ்தகங்க வேதமென்னப்படு
தா. இந்நாள்வரைக்குமிந்நாட்டுத்தமிழாக
-மொழிசிலதுகளொழியத் தென்மொழித்தமி
வழங்கினதென்றறிவோம். இப்போது தர
ம்பாடியார் தந்தபுஸ்தகங்களை வாசித்தவள
கீழ்மொழித்தமிழு மூன்றும்வகையாகவெவ
நகைத்திகழும்படிக்குமுளைத்ததுகண்டோம்.
டுலேயவர்கள்பாஷையறியாமையால் வைத்த
வருங் கண்டுபிடிக்கமாட்டாத வசனங்களையி
க நாங்காட்டவேண்டுமாகில் விரிவாகுமெ
றது லொன்றிரண்டுமாத்திரஞ் சொல்லிக்
ட்டுவோம். அப்படியே -அர்ச். - சின்னப்பர்
ரிந்தியாருக்கெழுதின ௲ திருபத்து-௭-ம். அ

திகாரம்-ரு-ம். வசனத்தைப் பகிர்கிருப்பின
கையாவது. புருஷனானவன்- தன் ஸ்திரீயான
ளுக்குச் செய்யவேண்டிய பிறவுபகாரத்தை
செய்யக்கடவானென்றார்கள். ஆகிறந் தன்ஸ்
ரீக்குச் செய்யும்பிறவுபகாரமாவது தானே
ன்ஸ்திரீயாகையைப்பிறனைக்கொண்டாற்று
க்கவோ. ஆறு பிருவவர்களிடத்து நடக்குமுறை
யோவென்று தாங்களேசொல்லுவார்கள். வே
தத்திலு மனிதர்நாட்டிலு நடவாதமுறைதானே
யாகையால் வேதத்திலெழுதினதைச் செல்வே
தமிழாக்கிப் புருஷன்தன்ஸ்திரீக்குச் சமுசார
கடனைச் செலுத்தக்கடவானெனல்வேண்டும்.
ன்றாலு மிருவெவர்க்கும் பொருந்துங் கற்பனை
ல்லோ. மீளவும்- அர்ச்.- மத்தேயு வெழுதின
விசேஷித்து -ஙஅ-ம். அதிகாரம் - ௰எ-ம். வ
னத்தை யவர்கள்சொன்னவகையாவது- திரு
சபையினுடைய புத்திகளையுங்கேளாதிருந்தா
க்கியானியைப்போலவும்- ஆயக்காரனைப்போல
வு மவனெண்ணு முனக்கிருக்கட்டுமென்று செ
டிதாயவர்கள்- தமிழாக்கினவசனத்துக் கர்த்
மென்ன. அப்படிப்பட்டவனை நீ பிறர்க்குக்கொ
டாமல்- மடியிலேவைத்துக்கொள்ளவோ- உ
க்கிருக்கட்டுமென்றார்கள். வேதத்தி லுள்ளப
யேதெனில்- திருச்சபைசொன்னதையுங்கேளா
ஞயி னக்கியானியைப்போலவு நீசனைப் போல
வு முனக்கவ னாகக்கடவானென்று சொல்
க்கடவோம். மீளவும்- அர்ச்.- சின்னப்
ருரோமாபுரியாருக்கெழுதின நிருபத்து-௯-
அதிகாரம்- உஉ-ம். வசனத்தை யவர்கள்-த
ழாக்கின தெப்படியென்றால் - சர்வேசுரன்கோ
பாக்கினியைக் காட்டித் தம்முடைய வல்லமை

ய விளங்கப்பண்ணவேணுமென் றிருந்தபோ
கேட்டுக்காயத்தப்பட்டிருந்த கோபாக்கினியி
டைய நவபாண்டங்களை மகாபொறுமையோ
– யுத்தரிச்சாரென்றார்கள். இதிலேகுயவன்த
த நவபாண்டங்களை யாண்டவரவனுக்குத்தரி
தாரென்று நினைத்தார்களோ தெரியாது. இ
தமிழ்மொழியாகத் தமிழ்வசனமாகாம விதற்
ள்ள வர்த்தத்தைக் கண்டுபிடித்துச் சொல்
த்தக்கவருண்டோ. சொன்னவசனக்கொடுமை
றியும்படிக்கு– அவ்வசனத்தை வேதத்துள்ளப
யே தமிழாக்கிக்காட்டுவோம். ஆண்டவருட
ன பாவிகளைத்தண்டியாமற் சிலநாள் பொறு
துக்கொண்டிருந்தாலுநம்பாமற் பின்னுக்கதிக
ன வாக்கினையிடுவாரென்றஞ்சும்படிக்கு–அர்
.–சின்னப்பர்சொன்னதாவது –சர்வேசுரன்ற
கோபத்தையுந்திறத்தையுங் காட்டச்சித்தமா
க் கோபத்துக்கு மாக்கினைக்கு முரியபாத்திரங்
ளை யுடனேகெடாமற் பொறுத்துக்கொண்டிரு
தாரென்று– அர்ச்.–சின்னப்பரெழுதிவைத்தா
மீளவும்– அர்ச்.– சின்னப்பர் திமோத்தேயு
ஸென்பவருக்கெழுதின– ௧ நிருபத்து–ரு–ம். அதி
ரம்–௩–ம். வசனத்துத்திருச்சபையைப்பராம
க்க வைக்கத்தக்கவனெப்படிப்பட்டவனாக வே
டுமென்று காட்டிச்சொன்னதைப் பதிதர் த
ழாக்கின தெப்படியென்றாலப்படிக்கொத்தவ
வாய்க்கொழுப்பாயிருந்து தூஷிணக்காரரு
டய நடுத்தீர்வையிலகப்படாதபடிக்குப்புதிதா
நாட்டப்பட்டவனா யிருக்கவொண்ணாதென்றார்
ள். இதிலேவாய்க்கொழுப்பாவது? தூஷிணக்கா
ராவது? புதிதாகநாட்டப்பட்டவனாவது?வேத
திலெழுதப்பட்டதேதெனிற் பசாசு தன்னையெ

ண்ணினவாங்காரநினைவோடொப்பத்திருச்சபை யைப் பராமரிக்கத்தக்கவனு மாங்காரத்தெழும் பித் தன்னையெண்ணுதபடிக் கவன்புதுக்கிறீஸ் துவனுகவேண்டாமென்று- அர்ச்.- சின்னப்ப ரெழுதினர். அப்படியே யிவர் தாங் கொரிந்தி யாருக் கெழுதின- ஙூ நிருபத்து ரூ-ம். அதிகார ம்- உ-ம். வசனத்து நீங்க ளின்ன மாம்ஸத்தா ரா யிருக்கிறீர்களென் றவர்கள்- நிருப்பின தெ ன்ன. மாம்ஸ மில்லாத மனிதருண்டோ. மாம்ஸத்தை யுடையவர்களாதல் பாவமோ. உடலாசையிற் ருழ்ந்த வுணர்வின ராயிருக் கிறீர்களென்றது- அர்ச்.- சின்னப்பர் வசனத்தி ற் கர்த்தமாகும். அப்படியே பற்பலவிடத்து- அ ர்ச்.- சின்னப்பர் சர்வசனங்களுக்கெழுதின நிரு பங்களிற் பட்சமாயவர்களைத் தம்பிமாரேயென் றுபோதெல்லாந் தமிழ்ச்சொல்லுரிமையறியாத பதிதர் கூடப்பிறந்தவர்களே யென்றுவைத்தார் கள். ஆகிலுங் கூடப்பிறந்தாரென்பதற்கெல்லா ரும்- அர்ச்.- சின்னப்பருடைய தகப்பனுக்குப் பி றந்தவர்களோ. இதிலேயுமபத்தமாய்- அர்ச்.- ம த்தேயுவெழுதின சுவிசேஷித்து- ரு-ம். அதிகார ம்- ௰அ-ம். வசனத்தி லவர்களெழுதினதாவது- இரண்டு சகோதரங்களாகிற பேதுருவென்கிற நாமத்தைக்கொண்டிருக்கிற சிமோனையும்- அவ ருடைய தமையனுகிற- அந்திரேயவென்கிறவனை யு மென்றுவைத்தபிற்பாடு- அவர்கள்- தானே- அர்ச்.- லூக்காவெழுதினசுவிசேஷத்தின்- ரு-ம் அதிகாரம்- ௰ரு-ம். வசனத்திலப்போஸ்தலர்மா ரை யெண்ணினவிடத்து- அவர்களாரென்றுற்பே துருவென்கிற நாமத்தைக்கொண்டிருக்கிற சி மோனு மவருடைய தம்பியாகிற- அந்திரேயுமெ

ன்றார்கள். ஒருவன்றானே யொருவனுக்குத்தமையனுந் தம்பியுமாகக்கண்டதெங்கே. பித்தருஞ்சொல்லாத விப்படிப்பட்டவிபரீதங்கள் குன்றாதசத்தியவேத வசனங்களென்பார்களோ. மீளவும்- அர்ச்.- இராயப்பர்-௨ஆ நிருபத்து-உ-ம்.அதிகாரம்- உ-ம்.வசனத்துப்புத்திக்கடுத்தகலப்பில்லாதபாலே யாசைப்பட்டு- இத்தாலே வத்தியுங்கோவென்றார்கள். ளகரப்படாமலும்- ரகரவொற்றில்லாமலும் வத்தியுங்கோவென்றது நீசர்சொல்லுங் கீழ்மொழித்தமிழாவதன்றிப் பாலல்வளருவாருண்டென்றறிவோமொழியப் பாலல்வர்த்திப்பாருண்டென்றுகேட்பாருண்டோ.இவ்வண்ணமேயெண்ணப்படாதவசனங்களை யெடுத்துக்காட்டலாமெனினு முங்கள்காதுகளை யுரித்துக்கொடுந்தீ யூட்டினாற்போல வாகுமென்றுமற்றதெல்லாத்தையும்விட்டுக்காட்டினவசனங்களேபோதுமென்றிருக்கிறோம்.

௱௨௰. இந்தக்கொடியகீழ்மொழித் தமிழ்வசனங்களை வாசிக்கும்போது தரங்கம்பாடியார் சற்றுங்கூசாமல் வேதசாஸ்திரமென்னும் புஸ்தகத்தின்முகத்தி லெழுதினவசனத்தைச் சிரிப்புஞ்சினமுமின்றி நினைப்பாரில்லை. அங்கேயவர்களெழுதினவசனமாவது நாங்களிந்தத்தேசத்தில்வந்துதமிழ்ப்படிச்சு- இந்தத்தேசத்தாரெழுதினதமிழ்ச்சுவடிகள்புஸ்தகங்களெல்லாம்வாசித்து-ஆராய்ந்துபார்த்து- அதுகள் பலபல்விதமாயிருக்கிறதென்றுகண்டோமென்றார்கள். ஆகையா லவர்கள்-அகத்தியந் தொல்காப்பியநன்னூலிருபொருள்காரிகையலங்காரமற்றவிலக்கணங்களு முட்சமயம்புறச்சமயம் பதினெண்புராணங்கள் ஸ்தலபுராணங்கள்-அறுபத்துநாலுகலைக்கி

யானந்தத்துவங்கள்-தொண்ணூற்றாறு-ஈரடிப்
பயனே நாலடிப்பயனே சிந்தாமணி சிலப்பதிகா
ரம் பாரதம்-இராமாயணமற்றவிலக்கியங்களு
வையெல்லாமொன்றும்விடாமற் கீழ்மொழித்தப
ழராகிய தரங்கம்பாடியார் தாங்களே வாசித்
தாராய்ந்து பார்த்தார்களென்றாற்போலே யா
ச்சுதல்லோ. ஆகிலுமிருகத்திராசாவாகச் சிங்
வேஷித்தைப்போர்த்துக்கொண்ட வேசரிபே
வாய்திறந்த மாத்திரத்தில் -மறைவின்றிவேசரி
யாகத்தோன்றிக்கூடினமற்றமிருகங்க ளதனை ந
கைத்ததுபோல- அவர்களெழுதின கீழ்மொழிப்
புஸ்தகங்களைக்கண்ட யாவருமதிலேயுள்ள வழு
வினசொற்கொடுமையு மாறினவசனக் கடோர
முங் கண்டவுடனே சொல்வாருமின்றி யிந்தவ
ராச்சியத்துப்பெரியோரொழுதினதொன்றாகிலுந்
தரங்கம்பாடியார் கண்டதுமில்லையென்று நிச்ச
யமாய்க்கொள்வார்க ளல்லோ. இந்நாட்டிலே
முன்னோர்களெழுதினதெல்லாஞ் செந்தமிழாக
வெழுதப்பட்டதனா லவர்க ளதிலொருவரிவாசிக்
கவுமொருசொற்கண்டுபிடிக்கவு மாட்டார்களெ
ன்று நாமேகூசாமற்சொல்வோம். அதேதென்
ல்-நாமே தரங்கம்பாடியார்காரியமாக நம்முடை
யவுபதேசிக்கனுப்பினபத்திரமவர்கள் கையிற்செ
ன்றுசெந்தமிழ்ச்சொல்லாலெழுதப்பட்டதாகக்
கொள்ள த்தாங்களுந்தங்கள் சாஸ்திரிகளுமொரு
ங்குடன்கூடிமூன்று நாள்வருந்தியதனை வாசிக்க
வுமாட்டாமற் கைவிட்டார்களென் றறிவோமே.
ஆகையா லிரண்டுசொற்கூட்டி வாசிக்கத்துவக்
குங் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற் படிக்குமா
த்திருகுடி முதலாய்த் தரங்கம்பாடியா ரர்த்தத்தை
க் கண்டுபிடியாமல்- நாக்கிடறின்றிச்சொற்றன

ர்வின்றி வாசிக்கவல்லவராகி லதிசயந்தானே.
இவையெல்லா மிப்படியாகக்கொள்ளப் பொய்க்
கஞ்சாமலு திறையொன்றில்லாமலுந் தமிழெல்
லாம்வாசித்தோமென்று மனிதரையேய்க்க நி
னைத்தவர்கள்-தேவவாக்கியத்தைத் தங்கள் வர்
பாலுரைக்கவுந் தமிழாகவெழுதவும் வல்லவர்க
ளென்பவோ. அவர்கள் கொடிய சொற்களைவழு
வின முறையாற்கூட்டிப் பித்தனுக மதத்தைக்க
க்கிறுற்போல வெழுதினபுஸ்தகங்கள் வேதாக
மங்களென்பவோ. அவர்களோடொத்த நினைவு
டையாரொழிய வொருவருமிதைச்சொல்லவுங் க
ருதவுமாட்டார்கள்.

௱உக. ஆகையாலெவர்க்கும் பொதுவுணர்வா
க- அர்ச்.-சின்னப்பர் கலாசியாருக்கு-௲ அதிகா
ரம்-௬-ம். வசனந்துவக்கி யெழுதினதை நாமுங்
களுக்குச்சொல்லி யிந்தவதிகாரத்தைமுடிப்போ
ம். அதாவது கிறீஸ்துவின் சிநேகத்தையடையவு
ங்களையழைத்தவரை விட்டுவேறேசுவிசேஷத்தை
யநுசரிக்க வந்தனே சீக்கிரமாய்த் திரும்பினீர்க
ளென் றெனக்கதிசயந்தானே. இந்தவேறேசுவி
சேஷமேதெனிற் சிலருங்களைமயக்குவிக்கவுங் கி
றீஸ்துவின் சுவிசேஷத்தைக்கெடுக்கவுஞ் சொன்
னவசனங்களொழிய வேறொன்றுமல்ல. ஆகை
யால்-நாங்கள்-முன் னுங்களுக்குச்சொன்ன வுப
தேசமொழிய நாங்களாயினும் வானத்திறங்கிவ
ந்த சம்மனசாயினும் விபரீதமாய் வேறொன்றி
னைப் படிப்பித்தாற் சபிக்கப்படுவதாகவென்று-
அர்ச்.-சின்னப்பரெழுதிவைத்தார். இதுதானே
நீங்கள் கரையேறுதற்குங்களுக் கெழுதப்பட்ட
தாகவெண்ணிப் பதிதர்கீழ்மொழித்தமிழா யச்
சிலேபதித்துத்தந்தசுவிசேஷமும்பற்பலவேறே

பிரபந்தங்களு முயிரைக்கொல்லு நஞ்சென்றது களைவெறுத்துக்காணவுங் கேட்கவும்வேண்டாம்.

பதினாறுமதிகாரமுற்றிற்று.

## யஎ-ம். அதிகாரம்.

### வேதமுத்திரையாகிய புதுமைவிளக்கம்.

௱உஉ. ஆண்டவ ரருளிச்செய்த வேதமொன்றொழிய மனிதரு மெங்கு மெக்காலத்தும் பற்பல சமயங்களையுண்டுபண்ணி யதுகளைவேதமென்று சொல்லிக்கொண்டுவருகையால்-மற்றயாவருமயங்கி யாண்டவர் தந்த மெய்யானவேதமின்னதென்று பலவற்றுள்ளே தெரிந்துகொள்வதரிதேயாகி மெய்யானவேதமொன்றிலேயுள்ள வீடேற்றமுமடைவதரிதாம். இதனையறிந்தகடவுள்-தாந்தந்த வேதத்திற்கிட்ட வொருவராலு மாற்றப்படாதமுத்திரையாக வதனையெவர்க்குமொப்பிக்க வெங்கு மெக்காலத்தும் புதுமைகளைச்செய்தருளினார். அதெப்படியென்றாற் புதுமையானது படைப்புண்டவல்லமையெல்லாங் கடந்தசெய்கையாகையி லாண்டவருக்குள்ள வளவில்லாதவல்லமையிறு லாகவேண்டியிருக்கும். ஆகையா லாண்டவர்தாமே பொய்சொல்லமாட்டாமலும் பிறர்சொன்னபொய் யொத்துக்கொண்டொப்பிக்கமாட்டாமலு மொரு வேதத்தையொப்பிக்க வவரொரு புதுமையைமாத்திர மொருமுறைமாத்திரஞ் செய்தாரென்று கண்டோமாகி லந்தவேதமே யவரருளிச்செய்தவேதமென்று மெய்யான

வதமென்னுங் கரையேறவெவர்க்கும் வேண்டி
ர்வேதமென்று நிச்சயிக்கக்கடவோம். ஆகை
ா லிற்றைவரைக்குஞ்சொன்னதெல்லாம்பாரா
லும்- உரோமான்றிருச்சபையநுசரிக்கும்வே
த்தி லொருமெய்யானபுதுமைமாத்திர முண்
-ன்றெப்பித்தாலுரோமான்றிருச்சபை யநு
ரிக்கும்வேதமாத்திரமெவருங்கரையேறவேண்
யதாகிப் பொதுவாய்நிற்கு மெய்யானவேத
மன்று சந்தேகமறச் சொல்லக்கடவோம்.

௱உ௫. இந்தநியாயத்தையறிந்த பதிதருந்
ங்களுண்டுபண்ணின பொய்யான சமயங்க
மெய்யானபுதுமைகளா லாண்டவரொப்பிக்க
ட்டாமையாற் பொய்யையொப்பிக்கப் பொய்
ானபுதுமைகளைக்காட்டப் பிரயாசப்பட்டார்க
. ஆகிலுந்தம்முத்திரை மாறவொட்டாத சர்
வசுர னந்தப்புதுமைகளின் றப்பறையைக்கா
டி யவர்கள்சமயமுந் தப்பறையாகத்தோற்று
த்தார். அப்படியேலுத்தேர் பசாசுக்குந்தன
திருந்த பழக்கமுஞ்சிநேகமுநம்பித் தன்மத
தையநுசரித்திருந்த வொருத்தியைப்பிடித்த
சாசை யோட்டுவேனென்று ஸ்திரமாய்ச்சொ
பித் தானுமவளுஞ்சிலபேர்களு மோரறையிலி
ந்து பசாசையோட்டத்துவக்கி நான்சொல்
ஞ்சமய மெய்யானவேதமென் றெப்பிக்க வுட
னபோவாயாக வென்று பசாசையதட்டிலுத்
தர்சொன்னான், மற்றவர்மயங்காதபடிக்கு-ஆ
டவரோவலாற் பசாசந்தவறையைத் திறக்கப்
ாதபடிக் கடைத்துலுத்தேரென்பவனைப் பிடி
துதைத் தடித்துக்கொல்லவிருக்கையி லவன்ப
யிலறி யடைக்கப்பட்டகதவையொடித்துப்
யர்த்துப்பிடுங்கியோடிப்போய் வெட்கியொ

வித்துப் போனான. இதெல்லாத்தையுங்கூட நி
ன்ற ஸ்தாபிலனென்னுமொருவ னெழுதிவைத்
தான்.

௱உச. பின்னையும்- லுத்தேர் மதத்திற்பிரி
த-அனபத்திஸதனென்பவர்களி லொருவன்- தா
ன்சொன்னதற்குச்சாட்சியாக நாளைப்பரலோக
த்திருந்து-இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசு
ன்வந்துதோன்றுமென்றான். அதற்குமறுநாள
ந்தப் புதுமையைக்காண வெகுகூட்டங் கூடின
பின்பு மோட்சத்தினின்று- இஸ்பிரீத்துசாந்து
வாகியசர்வேசுரன்வராமல்- நரகத்தினின்றொ
ரு பசாசு வெருவிடு மவலட்சண வுருவத்தோ
தோன்றியவன்றலைமயிரைப்பிடித்து-அவனையா
காயத்திற்றூக்கினபின்புவிட்டு-அவன் றண்ண
ரில்விழுந் தமிழ்ந்திச்செத்தந்தப்பசாசோடே
நரகத்திற்புதைக்கப்பட்டான்.

௱உரு. மீளவும்- கூ௲௫௱௩௰௩-ம். ஆண்டில்
ஒஸதனூரிலிருந்து கல்வீனிருந்தசெநேவபட்
ணத்திற்குவந்த பிறுலேயென்பவனுமவன்ஸ்தி
யுந் தம்வனுமைக்காதரவு கல்வீன்கிட்டக்கேட்
வந்தார்கள். கல்வீனோவெனில்-தான்சொன்ன
ப்பறைகளுக்கு முத்திரையிட்டு-அதுகளையொப்
க்க நல்லசமயமிதுவென்று புருஷன்பெண்டா
டியென் றிருவரையு மந்தரங்கமாய்ழைப்பித்து
சிலபணங்களையுங்கொடுத்துப் புருஷன் செத்த
னைப்போலேகிடந்து பெண்டாட்டி தலைவிரித்
தூதலறி யவனையெழுப்பத் தன்னையழைக்கவே
டிவரச்சொல்லித் தானும்வந்தெழுந்திருவென்
மாத்திரத்துப்புருஷனெழுந்திருக்கவுந் தான்செ
த்தவனை யெழுப்பினபுதுமையாகக்காட்டவுந்
ந்திரஞ்செய்தான். அப்படியே செத்தபிணமா

புருஷன்கிடக்க-ஐயோ விறந்துபட்டானென்
விம்மியலறி யவன் ஸ்திரீகல்வீனையழைக்க
வாடி யவனுமனதிரங்கினாற்போலத் துயரங்
ட்டிச்சம்மதித்துண்டுபண்ணினதன்மதஞ்சே
தாத ரருளிச்செய்த வேதமேயென்று சந்தே
மறவெல்லாரும்றிய வெகுசனங்களைக் கூட்டிக்
காண்டுபோய்க் கிடந்தவனை யெழுந்திருக்கச்
சான்னான். உடனேயெழுந்திராமையா லதி
லயுமுரத்துக்கூப்பிட்டலறி மீளவும்வன்மையா
னன்று கண்டு தானவனைக்கையைப்பிடித்திழு
தசைத்துக்குலுக்கி மிகமிகவெழுந்திருவென்று
னந்துகூப்பிட - அவன்செத்தானென்று கண்
பெண்டாட்டி முன்பொய்யாகக்காட்டின வழு
கமாற்றிக் கோவென்றலறித் தனக்குமுன் கல்
ன் பணங்களைத்தந்து பண்ணினதந்திரமெல்
ாங்காட்டிச் செத்தவனையெழுப்பவந்தவனுயி
ராடிருந்தவனைக் கொன்றானென் றெல்லாருங்
கட்க வவளேசொல்லிக் கீழேவிழுந்து மோதிப்
ரண்டழத் தன்னையுங்கொல்வார்களென்றஞ்
் கல்வீன் றன்னோடொத்த சிலரைக் கூட்டி
வட்கியோடிப்போ யொளித்தானென் றவன்ச
த்திரத்திலே தானே யெழுதப்பட்டதென் றறி
வாம். இவ்வண்ணமே தம்பொய்யானசமையங்
ளை யொப்பிக்கப் பதிதர்செய்யத்துணிந்த புது
ம தம்முடைய சத்தியவேதத்தைக் காட்டுவத
குதவினதொழிய வவர்களுக்குவெட்கமுங்கேடு
விளைவித்ததென்று சத்தியந்தானே.

௱உ௬. உரோமான் றிருச்சபையநுசரிக்கும்
வேதத்தைக்காட்ட - ஆண்டவராற் செய்யப்ப
ட புதுமைகளோ வெனி லோரெண்ணிக்கையு
ளடங்காமையால் வேறொருபுதுமையோடொ

ழியவதுகளை யொருவருமெண்ணவுமெழுதவு
ட்டார்கள். ஆகிலுஞ் சத்தியவிராச்சியங்களிலே
ம்பவித்த புதுமைகளுட்சிலதுகளை நாமிங்கே
ழுதிவைத்தாலுங் கண்ணுக்ககன்றவிடத்துச்
ய்தியாகையிலதுகளைப்பதிதர்நாழுண்டுபண்
ணகதைகளென்பார்களல்லாதே தாங்களுந்
நாட்டிலே தங்கள் சமயத்தையொப்பிக்கப்ப
மை சம்பவித்ததென்றுவெட்கமில்லாமலும்
ய்க்கஞ்சாமலுஞ் சொல்வார்கள். ஆகையால
ளைவிட்டிந்த விராச்சியத்திலேதானே - அர்ச்
சவேரியார் செத்தவர்களையெழுப்பிப் பிறவிக்
ருடருக்குக்கண்ணைத் தந்து மூடவருக்குக் கா
க்கையும் வழங்கச்செய்து தீராதநோய்களை
தீர்த்துத் தாமிந்தவேதத்தை யுபதேசிக்கு
போது செய்தபுதுமைகளையு மித்நாள்வரைச்
மவர் வேண்டுதலினு லாண்டவர் செய்து
ண்டுவருகிற புதுமைகளையு நீங்களேயறிவீ
ளொழியநாமிங்கேசொல்லவேண்டியதல்லவே
அத்தனை புதுமைகளுக்குள்ளே யொருமெய்
னபுதுமையிராதோ. ஒன்றுமாத்திரமெய்யா
லத்தாலொப்பிக்கப்பட்டவுரோமான்றிருச்ச
யநுசரிக்கும் வேதமேயாண்டவ ரருளிச்செய்
மெய்யானவேதமென்பதற் கற்பசந்தேகமாகி
ம்படவுத்தேவையில்லையே. ஆகிலுமிப்பொழு
துகளுங் கண்ணுற்காணப்படாமையா லிதுக
யும்விட்டுச் சந்தேகப்பட்ட யாவரும்வேண்
மாகிலிப்பொழுதுங் காணத்தகுஞ் சிலபுதுமை
ளைமாத்திரஞ் சொல்லிக்காட்டுவோம்.

# வேதசாட்சி யருளாநந்தசுவாமியால் விளங்கினபுதுமைகள்.

௨௨௭. நம்முடைய சத்தியவேதத்தை யொ
க்க வுலகமெங்கு மதற்காக வலியப்பிராண
ந்தந்து கோடாகோடிபேர்கள் சாட்சிசொ
யிருக்க நீங்க ளந்தச் சாட்சிகளைத் தேடி
றநாட்டிற்குப்போகாம லிங்கேதானே யதற்
சாட்சியைச்சொல்லி யுங்களுக் கொப்பிக்கும்
ருட்டாக- ஆண்டவர்- அருளானந்த சுவா
யத் தெரிந்துகொண்டார். சொன்ன- அரு
னந்தசுவாமி நெடுநாளிந்த விராச்சியங்க
ங்குங் காரணக்குருவாய்த்திரிந்து - ஆறுத
கியு மவியாதவிசுவாசமுஞ் சலியாததயையு
லியாத தவமு முடையாத பொறுமையுமற்று
ாகியசுகிர்த புண்ணியங்களுமவர்க்குவிடாத
ணகளாகநின்றுரோமான்றிருச்சபைப்பரமச
யவேதத்தைப் போதித்தபின்பு- அதுவேமெ
ாணவேதமென்று மதுவேயொழிய வீடேற்ற
லையென்றுந் தானேசாட்சியாகநின்று சிந்தி
ரத்தத்தினு லுங்களுக்கு மாறுதவெழுத்தா
ழுதிவைக்க- ௲௬௱௯௰௩-ம். ஆண்டில்-மா
சி- ௪௨ புதன்கிழமை மறவன்சீமையிலுள்
ஓரியூரிலேமனம்பொருந்திமகிழ்ந்த மனதோ
ர்ந்த துணிவோ டானந்தவாசையோ டுயி
வலியத்தரச் சம்மதித்துக் கொடியவர்களுக்
சாத தலையைநீட்டித்தந்து வேதசாட்சியா
ல்லோ. அப்படியே- அருளானந்தசுவாமியு
ரமான்றிருச்சபைவேதமாத்திரம் பொதுவா
ற்கு மெய்யானவேதமென்று நீங்களறியத
ணிரத்தத்தினு லெழுதிவைத்தநாள்-துவக்கி
ந்தநாள்மட்டு மவரெழுதினது மெய்யென்று

சந்தேகமற வெவரு நிச்சயிக்கும்படிக்கு- ஆன
டவர்தாமே மாற்றப்படாத தேவமுத்திரையி
டாற்போல வவரைக்குறித்து மட்டில்லாதபு
மைகளை விடாமற்செய்துகொண் டுவருகிறர். ஆ
கையாற் சொன்னயாவும்போதாம லின்ன
ரோமான்றிருச்சபை சேசுநாதருண்டாக்கின
ருச்சபையென்று மெவர்க்குங் கரையேறவேண்
டியதாகிப் பொதுவாய்நிற்குந் திருச்சபையெ
னுஞ் சந்தேகப்படுவாருண்டானல்-மறவன்சீ
க்குப்போய் விசாரிக்கும்போது- அருளாநந்த
வாமி வேண்டுதலினலாகிய புதுமைகளைக் கா
தலுரைக் காண்பதரிதேயாகிச் சலஞ்சாதியா
வனுற்றனேதெளிந்து மோட்சக்கரையேற
த்தனைபுதுமைகளா லொப்பிக்கப்பட்டவுரோம
ன் றிருச்சபையி லுட்பட்டுநடக்கவேண்டினெ
ன்று நிச்சயம்பண்ணித்தானு நடக்கக்கடவான்

ஙஉஅ. ஆராகிலுமித்தன்மையா லங்கேபே
கத்துணித்தாற் கிடங்கூர்பாமணி வயலென்
மூரிலே மறவ- இராயப்பனைக் காண்பான். அ
ஞெருவருமறியாத பிணியைக்கொண்டு தலைநீ
கலாக வுடலிலெங்குமொருவகைக் கொப்புளம்
றப்பட்டு நாவற்பழங்களைப்போல வெங்குந்தெ
ங்கி யாடாதிற்க மிளகுபோலவும் பாக்குப்போ
வு மெலுமிச்சங்காய்போலவும் விளங்காய்போ
வும் பற்பலபருமத்துத்தோன்றினதாம். அதுக
ற்சிலகொப்புளங்களைக் கீறினவிடத்துத்திரளா
ரத்தமுஞ் சாமையரிசிபோலவும் புறப்பட்டத
ம். அப்படியேநெடுநாளவனைப்பார்த்த யாவ
க்கு மச்சந்தருமுருவத்தோடொரு மருந்துத
யில்லாமல் வருந்திநாணித்திரிந்தபின்புவேதசா
ட்சியாக- அருளானந்தசுவாமி வெட்டுண்டவி

த்திற்போயவர் வேண்டுதலினு லாண்டவரா
ராக்கியந் தரச்சொல்லி யாசையோடேமன்று
யங்கேகிடந்த மண்ணைக்கரைத் துடலெங்கும்
சிக்கொண்டான். பூசினபின்னையாறு நாளிலே
சான்னகொப்புளமெல்லாமுழுதுமறைந்தோர
டயாள மின்றி யிந்நாள்வரைக்கு நன்றுயிருக்கி
ன்.

ஈஉசு. மீளவுமப்பாலேபோய்மணக்குடிகுறு
டை யென்னுமூரிற்சென் றங்கேமறவ - அருள
பனைக்காண்பான் . இவனுக்கெப்போது நன்
யிருந்த விடதுகை - சுஎ௱உ௰- ம். ஆண்டி
-தோள்- மட்டுஞ்செத்துக்கிடந்தாற்போலச்
வனில்லாமற் றுவண்டுசதையில்லாமல் வற்றி
சைவில்லாமற் கிடந்து தோலுமெலும்புமாய்
சுருங்கிக்கருகி நோவதற்கொழிய வொருதொ
ற்காயினு முயிரில்லாமல்வழங்காதிருக்கவதனை
ல துகைக்கொண்டெடுக்கவுந்திருப்பவும்வைக்க
ும்வேண்டியிருந்ததாம். கண்டவர்யாவருமவற்
ரங்கினதொழியவுதவுமொருமருந்தாயினுமறி
து கொடுப்பாரில்லை. கடைசியிலே மனிதராலா
ா தவுதவி வேதசாட்சி-அருளாநந்தசுவாமியா
ாகுமென்று நிறைந்த நம்பிக்கையோடவர்பா
பட்ட விடத்துப்போ யழுதுவேண்டிக்கொண்
-பின்ன ரங்கேகிடந்தமண்ணைத்தானுங்கரைத்
ு நொந்தகையிற்பூசினமாத்திரத்துடனேநோ
நீங்கிச் சதைவளர்த்திரத்தமோடி நரம்புகள்
லத்து நோகாதவலதுகைத்தோளுக் கிடதுகை
த்தோ வொருவேற்றுமையின்றி நிற்கவுமசைய
நீளவுமுடங்கவும்பாரமெடுக்கவுந் தொழிலைச்
செய்யவும் வழங்கினதாம். இந்நாள்வரைக்கு
மொருமெலிவின்றிப் பயிரிடுந்தொழிலைச் செய்
துகொண்டிருக்கிறன்.

௱௯௰. இன்ன மப்புறம்போய் வெட்டிவயலெ
ன்னு மூரிலேமறவ- இராயனுக்குஞ் சாந்தாய
க்கும் பிறந்துபிறவிச்சப்பாணியு மூமையுமாய்
கிடந்த- அருளாயியென்பவளைக் காண்பான். இ
வளேழுவயதுமட்டு மொருசொல்லுச்சரியாமலு
மிடைமட்டு மிருகால்வழங்காமலு மிருந்து-அ
ளைத் தூக்கிவைத்தாலுங் காலை நிறுத்தி நிற்க
மதுகளை யசைக்கவுமாட்டாம லிருகால்களிலே
ஞ் சதையின்றிக்கிள்ளினாலுநோவின்றி யுணர்வ
ன்றிப் பிறந்தநாள்-முதலேழுவயதாந்தனையு
கிடந்தாள். ௲௭௨௧-ம்.ஆண்டில்-அருளாந
தசுவாமி வேண்டுதலினா லாண்டவரனுதினமு
செய்யும் புதுமைகளைக்கேட்டு- அவள்-தகப்ப
மத்தையுஞ் சின்னாயியும் பலருங்கூடிப் பிள்ளை
யை யெடுத்துக்கொண்டு-அவர்பாடுபட்டநாள
கிய புதன்கிழமை யவர்வேதசாட்சியாய்ப் பா
பட்டவிடத்துப்போ யொருசந்திபிடித்து -௫௰
பெயருக்குப் பிச்சையும்- ௩௰ - பெயருக் கசல
முந்தந்து - அப்படி மூன்றுபுதன்கிழமையு
ஞ்செய்வோமென்று வேண்டிக்கொண்டு சப்பாண
ப் பிள்ளையை யவர்தலை வெட்டுண்ட ஸ்தலத்
ன்மேலேவைத்துக் காலைப்பற்றிச்சூழப்பிரதக்
ணமாயிழுந்துத் தளராத விசுவாசத்தோடே
வேண்டிக்கொண்ட வுடனே யந்நாள் - மட்
மொருசொல்லாகிலு முச்சரியாதபிள்ளை மழலை
சொல்லாய்ப்பேசிப் பசிக்குதென்று கஞ்சிதா
சொல்லிக் காலையூன்றியதன்மேலேநின்று தா
டியுமங்கேதானே நடந்ததொழிய மறுபுதன்
ழமைவருமுன்னே வற்றினகால்களிலுந்தொடை
களிலுஞ் சதையும்வளர்ந் துயிருமோடிக் குறை
யொன்றின்றி நடக்கவுங்குதிக்கவும்விளையாடவு

சய்தாள்.மறுபடிக்காலிலொரு நோவுமெலிவுமி
றி யின்ன நன்றாயிருக்கிறாள்.

ாகூக. இதிலேயுமதிசயமாய் வேறேசப்பாணி டந்தபுதுமையை யறிவதற்குக் கிழக்குப் போ மறவன்சீமையோடேசேர்ந்து கடலோரத்தி க்குந் திருப்பாற்குடியென்னுமூரிலெல்லாருஞ் சால்ல வறியப்படும் புதுமையாவது பரவராகி லுயிசந்தோணி யென்பவனு மரியசலோமை யன்பவளுமாகிய ஸ்திரீ பூமானு மூன்றுவயது ட்டும் வற்றித்துவண்டவிருகால்- சப்பாணியா க் கிடந்த வொருபிள்ளையைப் பாட்டியார்வீட் -லேவிட்டு மறுபடிப் பிள்ளைபெற மாட்டாமற் ாகவிருந்ததாய்- அருளாநந்தசுவாமி வேண் தலினு லொரு குறைவின்றித் தந்தவேறொருபி ள்ளையை யெடுத்துக்கொண் டிருவரும்-தூளஉஉ- ம். ஆண்டிலேயவர்பாடுபட்டவிடத்துக்குப்போ யவர்தந்த பிள்ளையையங்கேவைத்துத் தோத்தி ரஞ்செய்து கொண்டுவருகையில் வீட்டிலேவை ந்தசப்பாணிப்பிள்ளையை நினைத்து- அவனுக்கு ஆரோக்கியந் தரவேண்டுமென்று மிகவுமாசை யோடே வேண்டிக்கொண்டார்கள். அதன்பிற கவர்கள்- மறுநாளுருக்குச்சென்றவுடனே முத ல்-நாள்- சப்பாணிப் பிள்ளைக்காகத்தாங்கள்வே ண்டிக்கொண்டவந்நேரத்திலே தானேயவனுமு தவியின்றித் தானேயெழுந்திருந்துகால்-மேல்- நின்று தன்வயதுள்ள மற்றப்பிள்ளைகளைப் போ லேயோடவும் விளையாடவுஞ் செய்தானென்றும ற்றவர்சொல்லவுங் கேட்டார்கள். தாங்களுமகிழ் ந்ததிசயப்படக் கண்ணாலேகண்டார்கள்.

ாகூஉ. மீளவுநடுச்சீமையிலிருக்குஞ் சருகணி யென்னுமூரிலே குலத்திலிடையன்றெழிலிலுவா

த்தியென்னும்- ஆதியப்பனுக்கு மவன்ஸ்திரி-ஆ
ணந்தாயிக்கும்பிறந்த பூவாயி- ௲௭௨௨-ம். ஆ
ண்டிற் பதினைந்து வயதுள்ளவளா யிருந்தாற்
போலே மயங்கிவிழுந்துசெத்தாற்போலேகிடந்
துபின்பு- எழுந்திருந் திருவிழிபுறப்பட விருகண்
வீங்கிப் பார்வையுங்கெட்டு-அகன்றபொருளொ
ன்றையுங் காணாமலடுத்தபொருளைப்புகைபடர்ந்
தாற்போலத் தெளிவறக்கண்டு-இரவிற்சுடர் வி
ளக்கெறித்தாலுமொன்றையுங்காணாமற்பகலினு
மருகேயாள்- முன்போனாலொழிய வழியைக்கண்
டு செவ்வேபோகமாட்டாம லிருந்தாள். வந்தம
யக்கமுங் குருடுந்தானேகரைந்து நீங்குமோவெ
ன்றிரண்டுமாதமும் பார்த்துக்கொண்டிருந்தவி
டத்தி லதுநாளுக்குநாளதிகமதிகமாகிமருந்தொ
ன்றுந்தேடாமல்- மிகுந்தநம்பிக்கையோடே ய
ருளாநந்தசுவாமி பாடுபட்ட ஸ்தலத்தைச் சே
விக்கப்போனாள். அங்கே முழங்காலிலேநின்று-
அவரையாண்டவர் பலத்தினாலேதன்குறையைத்
துடைத்திரட்சிக்க வேண்டுமென்றுறுதிவிசுவா
சத்தோடே வேண்டிக்கொண்டவுடனேசூழவெ
ல்லாமு மிராவிருளினு மிருண்டுதோன்றி மயங்கி
விழுந்தாள். இப்படி மூர்ச்சையின்றிச் செத்த
வளைப்போலே யொன்றரைநாழிகையாகக் கிடந்
ததைக்கண்டு மற்றவரெல்லாருஞ் செத்தாளெ
ன்றழுதிருக்க வங்கேநின்ற சிலபிராமணர் கண்
ணைத்தேடிவந்தவளைக் கொல்லுவ துங்கள்சுவா
மிசெய்யும் புதுமையோ வென்று நகைத்துச்
சொல்லிக்கொண்டிருக்கத் தூங்கினவள் விழித்
தெழுந்தாற்போலே பூவாயி தானேயெழுந்து
சூழயாவையுங் குறையொன்றின்றித் தெளிவா
ய்க்கண்டு புதுமைபுதுமையென்றுகளிகூர்ந் தவ

ரசொல்ல—அந்தப்பிராமணரு மற்றயாவரு மிக
மதிசயப்பட்டுப் புதுமையிதுவேயென்று மிது
ஸென்பவருக்கெழுதினது. - நிருபத்து-௬-ம்.
திகாரத்து-உ-ம். வசனத்திற் பூவுலகில்வண
ன் றன்னைக்கொண்ட நாதனை வணங்கியவனு
கூழியஞ் செய்யப்படிப்பிக்கக்கடவாய் - இதற்
விரோதமா யெதாகிலும்படிப்பிக்கவந்தவன்
சுநாதர்திருவுளம்பற்றினவுத்தமவசனங்களு
நந்தயையிற்றெளிந்தஞானத்துக்குங் கீழ்ப்ப
யாதவண வனேயாங்காரியவனே யொன்றுமறி
ாதமடையனவனேயென்று-அர்ச். -சின்னப்ப
ரூதிவைத்தார். ஆகையாலெந்தவகைச்சங்கை
மூழியமுஞ் சர்வேசுரனுக்கொழியமற்றவர்களு
குச் செய்யலாகாதென்பது வேதத்துக்கொவ்
ாத தப்பிதமாகி யாங்காரத்தாலுமறியாதமட
மயாலுஞ்சொன்னதப்பறையாமே. அல்லது தே
வணக்கமுந் தேவாராதனைக்கடுத்தவூழியமுஞ்
ர்வேசுரனுக்குமாத்திரஞ் செய்யக்கடவோமெ
றுதரங்கம் பாடியாரிதிலே நினைத்தார்களாகி
துமெய்யாமே. ஆயினுமிந்த மெய்ம்மறுத்து-
ரோமான் திருச்சபை மோட்சவாசிகளை வணங்
கென்றவர்கள்சொன்ன துமுழுப்பொய்யாமே.
ாமே மோட்ச வாசிகளைத்தேவராக வெண்ண
மில்லைத் தேவாராதனையாக வணங்கவுமில்லை.
ர்வேசுரனுக் குகந்தவர்களாகையி லவர்க்கு
துதாமவருடைய சிநேகிதனாச்சங்கித்துநம
தவேண்டிய வரங்களையவர்கள் கொடுக்கக்கே

ளாமற் சர்வேசுரன்றமேயந்த வரங்களை நமக்குத்தரும்படிக் கவர்கள்மன்றாடக் கேட்கிறோமல்லோ. ஆகையாலெப்படியாயினுமிதிலேயுந் தரங்கம்பாடியார் பொய்சொன்னதுகண்டோம். இதற்குவிவரமாய்வேதவிளக்கத்தின் மூன்றுமதிகாரத்தில்—நாஞ்சொன்னதை வாசிக்கக்கடவீர்கள்.

நான்காம்பேதகமறுத்தல்—முற்றிற்று.

# ரு-ம். பேதகமறுத்தல்.

ஐந்தாம்பேதகமாகத்தரங்கம் பாடியாரெழுதினதாவது: "சறுவேசுரன் றிருவிஸம்பத்தினபூ "ருவத்துபதேசம் போதிவிக்கிறதாவது: சறு "வேசுரனுக்குப் பண்ணவேண்டின தேவவா "ராதனைக்குமழியங்களுக்குந் தேவவேதபொ "ஸ்தகத்திலேபெலப்படிவஸ்திவாரம்த்தாட்சி "யுண்டாயிருக்க வேணுமென்று சறுவேசுரன "திலே பரிபூரணமாக வெளிப்படுத்தியிருக்கிற "தம்முடைய பரிசுத்தமானசித்தத்தின்படியே "இஸ்பரீத்துவிலே யு முண்மையிலேயுந் தம் "மை வணங்கவேணுமென் றருக்கிறர். யொய "ன்னசு—ச—ம். அதி—உச—கவி. ஊழிய மனுஷ "ருக்குத் தோன்றினபிரகாரமாகவானுலு மனு "ஷருடைய படிப்பினை பழக்கங்களின்படியே "யானுலுந் தம்மை வணங்கவேண்டாமென்றி "ருக்கிறொன்றுபோதிவிக்கும்படியே சறுவே "சுரன் தீர்க்கத்தெரிசியாகிற எசெக்கியெலெ "ன்கிறவரைக்கொண் — உ௰ — அதிகாரம். "௰அ—கவியிலே வெளிப்பொருளாகக் கற்பிக்கி

றதாவது: நீங்களுங்கள்பிதாக்களினுடைய வ
ழிப்பாடுகளின்படியே நடக்காமலு மவர்களு
டைய நீதிஞாயங்களைக் கைக்கொள்ளாமலு ம
வர்களுடைய விக்கிறக தேவர்களைக்கொண் டு
ங்களை யவசுத்தமாக்காமலுமிருங்கோ. நாமு
ங்களுடைய சறுவேசுரனுகிற கற்தராயிருக்
கிறோம். நீங்கள் நம்முடையவழிப்பாடுகளின்ப
டியேநடத்துநம்முடையநீதிஞாயங்களைக்கைக்
கொண் டதுகளைச்செய்யுங்கோவென்று திரு
விளம்பத்தினர். அந்தப்படிதானேயெங்களு
டைய கற்தராயிருக்கிற யேசுக்கிறீஸ்து வான
வர் எங்களைப்படிப்பித்து - மத். சுவி-௰ரு-ம்.-
அதி. கூ- கவியிலேயாலுலவர்கள் மனுஷிரு
டையகற்பினைகளாகிற படிப்பினைகளைப் படிப்
பிச்சுக்கொண்டு வருகிறபடியினலேபிறையோ
சனமில்லாமல் நமக்கூழியஞ்செய்கிறார்க ளெ
ன்று திருவிளம்பத்தினர். இதுக்கெதுகையா
கமனுஷிராலேகட்டப்பட்டபுதுசானவுபதேச
ம்போதி க்கிறதாவது: தேவவாராதனையிலே
யு ழியத்திலேயுந் திருச்சபையினுடையமு
றமைகளையுஞ்சடங்குகளையுங் கட்டளைகளையுங்
கைக்கொள்ள வேண்டினதாயிருக்குதென்றுங்
கனேனிக்கொநீதிபொஸ்தகம் பாப்புகளிட்டக
ட்டளைக க்குச் சுவிசேஷத்துக்குத்தானேயு
ண்டாயிருக்கிறநிறையையும்பெலத்தையுநட
க்க ண்ணுகுதென்றுஞ் சகலசமையங்களி
லேயிர் தக் ட்ட ளகளைக்கைக்கொள்ளவேணு
மென்றும்போதிவிக்குமதேதென்றல்-நாலா
வதுலெயோவென்ற பாப்புவானவர்சொன்ன
தாவது: பாப்புகளுடையகட்டளைகளுக்கு முற
மைகளுக்குங்கூட கீழ்ப்படித்துநடந்தாலொழி

" யசுவிசேஷத்தை நன்றாய்க்கைக்கொள்ளக்கூ
" டாதென்றுசொன்னார்,, என்றார்கள்.

இதிலேழுந்தித் தரங்கம்பாடியார் சொன்ன தாவதுமனுஷருக்குத் தோன்றினபடியாகிலு மனுஷர் படிப்பித்தபடி யென்கிலும்பற்றிக்கீழ்ப்படிந்து நடப்பது சர்வேசுரனுக்குப்பொருந்தாதென்று மவரதைவிலக்கிறுரென்று மெழுதினார்கள். ஆகிலுமிதுபொதுவசனமாகச்சொன்னபோது பொய்யாமே. பெரியோரிட்ட நல்லகற்பனைகேட்டு- அவர்கள்காட்டினநல்வழிபற்றி நடப்பது சர்வேசுரன் விலக்காமற் றமக்குப்பொருந்தின முறையென்று வேதத்திற்காட்டினார். அப்படியே-எரோமியஸ்-௩௱௫-ம். அதிகாரத்தில்-யொனதபென்பவன் றன்கோத்திரத்துக்கிட்ட கற்பனையவர்கள்- மீறாமல்-நெடுநாள்-நடந்தநிலைவர்களையாண்டவர் தாமே மிகவுந்தோத்திரஞ்செய்தாரென்று கண்டோமல்லோ. அப்படி முன்னுங்காட்டினதன்மையாலப்போஸ்தலரு மற்றப்பெரியோர்களு மிட்டகற்பனை மீறாமல்- நடக்கச்சொல்லி- அர்ச்.-சின்னப்பர் கற்பித்துக்கொண்டு திரிந்தாரல்லோ. ஆகையாற்றரங்கம்பாடியாரெழுதின வசனம்பொதுவாய்ச் சொன்னபோது வேதத்துக்கொவ்வாத பொய்யாமே. அதற்கவர்களெடுத்துக் காட்டின- எசெக்கியெலின் வசனமோவெனிலந்தப்பொதுவசனத்தையொப்பிக்கச்சற்றாகிலு முதவவுமாட்டாது. அதெப்படியென்றாலந்தவெசெக்கியெலிரண்டாமதிகாரத்திலே தானே யெழுதப்பட்டதாவது- ... தேசத்தைவிட்டுயூதர்கள்வனத்துவழிவரும்போதாண்டவரிட்டகற்பனைமீறி யுண்டாக்கப்பட்டவஸ்துக்களைத் தேவரென்றெண்ணி யதுகளுக்குப்பூசையு

திருநாளுங் கொண்டாடியபத்தமானமுறைக
ஸ்தாபி தார்களென்றெழுதினபின்பு சர்வே
ரனவர்கள்- மக்களுக்குக்கற்பித்ததாவது- உங்
ள்பிதாக்கள் ஸ்தாபித்தகற்பனையின்படியே ந
க்கவு மவர்களபத்தமாயெண்ணின முறைகளை
காக்கவு மவர்கள்வணங்கின பொய்யான தேவ
களைவணங்கி யசுத்தராகவும் வேண்டாமென்று
. இதுவேநியாயமல்லோ. நம்முடையபிதாக்க
ராயினும் பெரியோர்களாயினுஞ் சம்மனசுகளா
யினும்- ஆண்டவருக்கேற்காத வபத்தங்களைப்ப
டப்பித்தாற் கேட்கத்தேவையில்லை. ஆகையாலு
ராமான்றிருச்சபையுமிதிலே- அர்ச்.-பாப்புக்க
ளுங்கட்டளையிட்ட முறைகளு மாசாரங்களுநாம
நுசரிப்பது சர்வேசுரனால்விலக்கப்பட்டதென்று
தரங்கம்பாடியாரிதிலேயெழுதினபோதேயத்த
முறைகளுமாசாரங்களு மாண்டவருக்கேற்காத
முறைகளாகுமென் றவர்களே யொப்பிக்கக்கட
வார்கள். இப்படியொப்பிக்கமாட்டாதேபோனா
ர்களாகிலிதுவு மவர்களிதிலேசொன்னவிரண்டா
ம்பொய்யாமே. இதற்கு மூன்றும்பேதகமறுத்த
லிற் சொன்னதைக்காணக்கடவீர்கள்.

ஐந்தாம்பேதகமறுத்தல்-முற்றிற்று.

## ௬-ம். பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார் சொன்னதாவது:
“ சறுவேசுரன் திருவிளம்பத்தினபூருவத் துப
“ தேச மெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: சு
“ ரூபங்களை ஸ்தாபிச்சுக்கொண்டு பூசைபண்ணி

" யாராதனைசெய்து வணங்கிறதென்கிறது
" றுவேசுரனுக்கு மகாவருவருப்பான காரியம
" யிருக்குதென்று போதிவிக்கும்,, என்றார்கள்
இதைப்பலவேதவுதாரணங்களைக்கொண் டெ
ப்பிக்கப்பிரயாசப்பட்டபின்னவர்கள்- மீளவு
சொன்னதாவது: " இதுநிமித்தமாக கிறீஸ்து
" ர்களுடைய தேவாலயங்களிலேசுரூபங்களை
" ராதனைசெய்யத்தக்கதாகப் பரிச்சேதமாக
" தாபிக்கவொண்ணுதென்றுமெங்களுடைய
" தரேசுக்கிறீஸ்துவானவ ரொருத்தர் மாத்தி
" ந்தேவாலயங்களிலே விசுவாசமுள்ளவர்க
" டைய கண்களுக்குமுன்பாகவெழுதப்பட்
" கவராயிருக்கிறாரென்றுமித்தையுமையாயிரு
" கிறசுரூபங்களினாலேயல்லவானாலோ விசே
" மாகவவருடைய- அற் - சுவிசேஷத்தை வா
" விசேஷமாகவு மிடைவிடாமலும் பிறசங்கம்
" ண்ணுகிறதினாலே செய்யவேணுமென்றுச
" வேசுரன் திருவிளம்பத்தின ருவத்துபதேச
" போதிவிக்கும்.கலாச்சிய - ௩ - அதி - க - க
" இதுக்கெதுவாக யாகமனுஷிராலேகட்டப்பட
" புதுசானவுபதேசம் போதிவிக்கிறதாவது:
" ருபங்களைஸ்தாபிச்சு ஆராதனையாசாரம்ப
" ணிவணங்கிறதென்கிறது சறுவேசுரனுக்கு
" த்தப்பிறியமுமாய்த்திருச்சபைக்குமெத்தத்
" வையுமாய்ப் பிறைம்பாசனமுமாயிருக்கிற
" ன்றுஞ்சுரூபங்கள்லோகத்தாருக்குமோட்
" குமல்லாமற் படிச்செடுத்தவர்களுக்கும் கு
" க்கள்கூட்டத்துக்குமுதலாய்ப் பொஸ்தகங்
" ள்பாவனையாயிருக்குதென்று மிதுக்கெதுவ
" போதிவிக்கிறவன் சாபிக்கப்பட்டவனு யிரு
" பானென்று மனுஷிராலேகட்டப்பட்டபுதுச
" னவுபதேசம் போதிவிக்கும்,, என்றார்கள்.

இதிலேசுரூபவணக்கத்தை யொழிக்கத்தரங்க பாடியார் பிரயாசப்பட்டதினுல் வேதவிளக்க த்திலுள்ள வாறுமதிகாரமு மேழாமதிகாரமுமா யிருந்து பார்க்கி லிதற்குவிரிவாக மறுவுத்தர ங் காணப்படுமே. ஆனுலிங்கேயு மேதாகிலுஞ் சொல்லி யவர்களிதிலே யெழுதினபொய்களைக் காட்டக்கடவோம். ஆகையாலிதிலே தரங்கம்பா டியாரெடுத்துக்காட்டினவேதவுதாரணங்களிற் சர்வேசுரனெந்தவகையுருவ சுரூபங்களைச்செப் பந்தபடிக்கு விலக்கினுரென்றூர்களாகி லிதுவேத த்துக் கொவ்வாத தப்பறையாமே. அதேதெனி ல் விக்கிரகங்களையு முருவங்களையு முனக்குச்செ ய்யாதிருப்பாயாகவென்றுசர்வேசுரன் கட்டளை யிட்ட மோயிச னிரண்டா மாகமத்திலே தா னே – உ௰௫-ம். அதிகாரத்திலாண்டவர்தாமேச ம்மனசுக்களுடைய சுரூபங்களிரண்டையுந் தூ ய தங்கத்தா லுண்டாக்கவுந் தமக்குத்தேவபூசை நடங்கினவிடத்திலே ஸ்தாபிக்கவும் விக்கிரகங்க ளை விலக்கின வேதகற்பனையெழுதப்பட்டகற்பல கைவைத்திருந்த பேழையின்மேலந்தச் சம்மன சுக்களுருபங்களைப் பிரதிஷ்டைசெய்யவுங் கட்ட ளையிட்டாரல்லோ. இப்படியாகையிலெவ்வகை யுருவசுரூபங்களைச் செய்வதுசர்வேசுரன் விலக் கினவக்கியானமாகிலந்த வக்கியானம் வழங்குப் படிக்குக் கோயிலிலேதானேதேவ பூசைமுகத்தி லேதானே வேதகற்பனைவைத்தபேழையின்மீதி லேதானே யவர்தாமேயந்தச் சுரூபங்களைஸ்தா பிக்கக் கற்பிப்பாரோ– இல்லையே. அவர்கற்பித்த தாக வேதத்தி லெழுதப்பட்டபோதே யெல்லா வகையுருவங்களைச் சர்வேசுரன் விலக்காமலிரு க்கிலதரங்கம்பாடியார் சொன்னது வேதத்துக் கொவ்வாத பொய்யாமே.

பின்னையும் யூதர்கால திலேவிக்கிரகங்களுமு மூதும்- ஆண்டவர் விலக்கியிருந்தாலுஞ் சேசு நாதருண்டாக்கின திருச்சபையிலேயும் விலக்கி றொன்பது தரங்கம்பாடியார் திலேசொன்னவி ரண்டாம் பொய்யாமே. இவர்களிதைச்சொல்லு ம்போது தங்களப்போஸ்தலனுங் குருவுத்தலை மாகிய லுத்தேர் பொய்யைப்படிப்பித்தானென் று சொல்லவுங்கடவார்கள். அதெப்படியென்று ல்- நாம்வணங்கும்-சேசுநாதர்சுரூபங்களுந்தே வமாதா மோட்சவாசிகளுருவங்களும் வணங்கப் படாதென்றதுகளைச்சிலபேரிடித்துடைத்துத் தீ யிற்கட்ட செய்தியைலுத்தேர் கேட்டுமிகவுமவர் களைக்கோபித்ததுந் தவிர - ௲௫௱௨௰௫-ம். ஆ ண்டிலவர்களைப்பரியாசமாகப் பரலோகதீர்க்கத ரிசிகளென்று சொல்லியவர்களுக்கு விரோதமா க வொருபுஸ்தகத்தையெழுதினுன். அதையிருவ குப்பாகப்பிரித்து முதல்வகுப்பிலே யருபியான சர்வேசுரனுருவ முடையவனென்றவருக்குவைத் தசுரூபங்களை மாத்திரம் பழையவேதத்திலேவி லக்கின தொழியக் கிறீஸ்துவின் சுரூபங்களுஞ் சிலுவையுருவமுந் தேவமாதாமற்றமோட்சவா சிகள் வடிவுகளும் விலக்கப்பட்டதல்லவென் றெ ழுதிப் பின்பு- இதுகளுமதிலேவிலக்கப்பட்டதெ ன்றுசொல்பவரொல்லாரும்யூதர்களாகவேண்டு மொழியக் கிறீஸ்துவர்களல்லவென்றுசொல்லக் கடவோமென்றான். இதோலுத்தேர்தானே நாம் வணங்குஞ்சுரூபங்களை வேதத்தில் விலக்கப்பட் டதல்லவென்று விரிவாகவெழுதிவைத்தான். ஆ கையாலிப்போது தரங்கம்பாடியார் சொன்ன தைப் பார்க்குமிடத்திலே தங்கள்குருபொய்சொ ன்னுனென் றெத்துக்கொள்ளக்கடவார்கள். இல் லாவிட்டா லவர்களே தங்கள்குருவின்சாட்சியா

ப் பொய்சொன்னார்களென்றுமவர்களேகிறீஸ்
வின் கூ... மல்லவென்றுமவர்களேயூதர்களெ
னப்ப...ர்களென்றும்வெளியாச்சுதல்லோ.
இதெல்லாமிப்படியாகக்கொள்ளச் சர்வேசுர
விக்கிரகங்களைச் செய்யாதபடிக்கு வேதத்தி
லவிலக்கின விடமெங்கு மவர்விலக்கின தேதெ
ல்- தேவனல்லாதவனைத் தேவனாகவெண்ணி
வனுருவத்தைச்செய்து தேவாராதனையாகவ
ணங்கவும் வைத்தவுருவங்களடையாளமாகக்கா
டும்பொருள்- மெய்யானதேவனையினு மவனை
பாராமலந்தச்சுரூபங்களிலேநிற்குமாராதனை
யாடதுகளை வணங்கவும் வேண்டாமென்றுவில
க்கினார். அப்படியேயுரோமான் - திருச்சபையுந்
தவனல்லாதவனைத் தேவனாகவுருவங்களை வைத்
து வணங்கவுமில்லை யுருவங்களுக்குச் செய்யும்வ
ணக்கமதுகளிலே நிற்கவுமில்லை. சேசுநாதரைக்
காட்டுஞ் சுரூபத்தை வணங்கினாலதையடையா
ளமாக மாத்திரங்கொண்டு மெய்யானசர்வேசு
ரனாகிய சேசுநாதரை நினைத்துத் தேவாராதனை
யவருக்கேசெய்வோம். தேவமாதாவையு மற்ற
மோட்சவாசிகளையுங்காட்டுஞ் சுரூபங்களை வண
ங்கினாலதுகளை யடையாளமாகமாத்திரம்வைத்து
க்கொண்டு தேவமாதாவுக்குரிய நமஸ்காரமு மற்
ற மோட்சவாசிகளுக்குரிய வணக்கமு மவர்களுக்
குச் செய்வோமொழிய வவர்க...த்தேவாராத
னையாக வணங்கவில்லையென்பது நிச்சயந்தா
னே. இந்தவுத்தமமுறைமையோமென்றால்வௌவா
லுக்கொளி பொருந்தாததுபோல நியாயத்தைப்
பொறுக்கமாட்டாதபடிதருக்கு மாத்...மோத்
திரமல்-நீதி நியாயமற்...த்தயாவர்க்கு நல்லதெ
ன்றுதோன்றுமல்லோ.

# எ-ம். பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியா ரெழுதினதாவது
“ சறுவேசுரன் திருவிளம்பத்தின பூருவத்து
“ தேச மெங்களுக்குப் போதிவிக்கிறதாவது
“ அற். - வர்கள்கிறீஸ்துவினுடையமாத்திரிகை
“ பார்த்து நடந்தாப்போலே விசுவாசமுள்ள
“ றீஸ்துவர்கள-அற்.-வர்களுடைய விசுவாச
“ த்தையும் பயபத்தியையும் புண்ணியங்களையு
“ ல்ல வுபதேசத்தையுங் கண்டுபிடித்துப் பின்
“ செல்ல வேணுமேயல்லாம லவர்களைப்பார்
“ து மன்றுடுகிறதினாலு மவர்கள்பேரிலேதன்
“ னுடைய நம்பிக்கையை வைக்கிறதினாலுமது
“ பரிச்சேத மாகவேண்டா மென்று போதி
“ விக்கும், அதுக்கு மூன்றுமுகாந்திரங்களுண்
“ டு.முதலாவது-ஒருத்தனைப்பார்த்துமன்றா
“ கிறதென்கிறதுசறுவேசுரனொருவருக்குமாத்
“ திரஞ் செய்யப்படத்தக்க சங்கையா யிருக்கு
“ து.இந்தப்படிக்குசறுவேசுரன்தானேதீர்க்க
“ த்தெரிசியாகிற ஏசையசு வென்கிறவரைக்கொ
“ ண்டு-சுஉ அ-அதி-ய௧- கவி- திருவிளம்பத்து
“ கிறதாவது: நாம் நம்முடையசங்கையை வே
“ றொருத்தனுக்குக்குடுக்கப்போகிறதில்லையென்
“ று திருவிளம்பத்துகிறார்.இரண்டாவது அற்.
“ வர்கள்தானே யவர்கள் லோகத்திலே யின்னம்
“ மிருந்தபோது இப்படிக்கொத்த சங்கையை
“ யெடுத்துக்கொள்ளமாட்டோ மென்றார்கள்
“ அப்போஸ்தலர் நடபடி-ய-அதி-உயசு- கவி
“ யசு- அதி- யசு- யரு-கவி யென்கிறதுமல்லாம
“ ல்- சம்மனசுக்கள்தானே முதலாயதைத்தள்
“ ளிப்போட்டார்களென்று யுவான சு- அதி-

௰௩- அதி-௰-கவியிலே- உ௰உ-அதி.௩- கவியிலேவாசிக்கிறோம். மூன்றாவது- அற். - வர்களெங்களுடைய காரியங்களி லொன்றுமறியார்களவர்களெங்களை முதலா யறியவில்லையிப்படி தீர்க்கத்தெரிசியாகிற ஏசையசு- ௬௰௩ - அதி-௰௬-கவி - வெளிப்பொருளாகச் சொல்லுகிறதாது: அபிராமென்கிறவ னெங்களையறியானென்கிறதுந்தவிர இசறய லென்கிறவருக்கு எங்களுடைய காரியங்கள்தெரியாது ஆனால் கர்த்தராயிருக்கிறதேவரீ ரெங்களுடைய பிதாவுமா யெங்களை ரெட்சிக்கிறவருமா யிருக்கிறீ ரென்றுசொல்லுகிறா ராகையினாலே பழைய தெஸ்தமேந்தின் காலத்திலே யிசறயெலித்தார் சறுவேசுர னொருத்தருக்குமாத்திர மல்லாமல்-பின்னொருத்தனுக்குப் பெலியிட்டாலப்போ வவர்களெப்படி யதினாலேவிக்கிறகவாராதனைக்காறருமாய்ச் சர்வேசுரனுடையவேதகற்பனைகளை மீறுகிற பாவிகளுமாய்ப்போனார்களெப்படியோ வந்தப்படிக்கு இக்காலத்திலே யற்சியசிஷ்டவர்களைப் பார்த்தாலுஞ் சம்மனசுக்களைப்பார்த்தாலு மன்றுமிற பேர்களெல்லாரு மப்படிக்கொத்தவர்களாயிருக்கிறார்க ளதேதென்று விவர்கள திணாலே கிறீஸ்துவானவர் தீர்க்கமாகவுந் தெளிவாகவும் போதிவிச்ச வுபதேசத்துக்கு விரோதமாகச் செய்கிறார்கள்.,, இதெல்லாந் தரங்கம்பாயார்சொன்னபின்பு பலவேத வுதாரணங்களை குறித்ததல்லாதே யதுகளையெடுத்துக் காட்டி ற் றங்களுக்குதவாதென்று விரித்துச்சொல் ாம லேழைச்சனங்களையேய்க்கப் பலவிலக்கங் ளைப் பெருங்குப்பையாகக் குவித்துவைத்தார்

கள். அதன்பின் பவர்களெழுதினதாவது: "இ
" துக்கெதுகையாக மனுஷிராலேகட்டப்பட்ட
" துவுபதேசம் போதிவிக்கிறதாவது: அற்.-வ
" ர்கள் சறுவேசுரனுடைய சினேகிதருமாய்
" தோழருமா யிருக்கக்கொள்ளக் கிறீஸ்துவ
" னவர்கள்- அற்.-வர்களையுஞ் சம்மனசுக்களை
" யும்பார்த்து மன்றாடவேணுமென்று மிவர்
" ள் சறுவேசுரனண்டையிலே மன்றாடுகிறமன்
" றாட்டை நம்பி யிவர்களுடையசகாயத்தை யி
" படி யடையவேணுமென்று மற்சியசிஷ்டவ
" கள் பாவிகளுக்காக வேண்டிக்கொண்டு மன்
" றாடுகிற தில்லையென்றும்- அற்.-வர்களைப்பா
" த்துமன்றாடுகிறதென்கிறது விக்கிறகவாரா
" னைக்கடுத்த பாவமுமாய்ச் சறுவேசுரனுடை
" யதிருவசனத்துக்கு விரோதமுமா யிருக்கி
" தென்கிறது மிது தப்பறையுமாய்ப் பொல்ல
" த நினைவுமாயிருக்குதென்று மிப்படிநினைக்
" றவனு மிப்படிபோதிவிக்கிறவனுஞ் சாபிக்க
" ப்பட்டவனு யிருப்பானென்று மனுஷிராலேக
" ட்டப்பட்ட புதுசானவுபதேசம் போதிவிக்
" ம்,, என்றார்கள்.

இதிலே முந்தமுந்த மோட்சவாசிகளை வேண்
டிக்கொள்ள லாகாதென்று திருச்சபைபூருவ-உ
பதேசமாகப் படிப்பித்ததென்று தரங்கம்பா
யாரெழுதினார்கள். ஆகிலுமிது தாங்களிதிலேசெ
ன்ன முதற்பொய்யென்றறிய நாம்வேதவிள
கத்தி னைந்தாமதிகாரத்தில் விரிவாகச்சொ
ன்னதை வாசிக்கக்கடவீர்கள். அதிலேகர்த்தர்பி
ந்தபிற்பாடுமுதலைஞ்ஞூறு வருஷத்துக்குள்வே
பதிதருஞ் சொன்னபடித் திருச்சபை வழுவா
ருக்கையில் வழங்கின பற்பலவேதபாரகரொழு

த்த வசனங்களை யெடுத்துக்காட்டித்திருச்ச
த் துவக்கத்திலே மோட்சவாசிகளை வணங்கி
றநிகிறமுறை வழங்கினதாகவொப்பித்தோ
லோ. ஆகையாற்பூர்வதிருச்சபைமோட்சவா
ளை வேண்டிக்கொள்ள லாகாதென்றுபடிப்பி
தென்பது தரங்கம்பாடியார் சொன்னபொ
ாமே. பின்னையு மோட்சவாசிகள்பேரிலேந
க்கைப் பரிச்சேதமாய் வைக்கவேண்டாமெ
பது பழையதிருச்சபைப்படிப்பனையென்று த
கம்பாடியா ரெழுதின திரண்டாம்பொய்யா
. அதேதெனனில்- முன்சொன்னவதிகாரத்தி
தாம்விரிவாக வேதவிளக்கத்தி லெழுதினப
ர்கர்த்தர் பிறந்த உ௱௯௰௪-ம். வருஷத்தி
யிறந்த - ஔிசெனென்பவர் புலம்பலென்
ம்புஸ்தகத்தி லெழுதினதாவது- எனக்குது
ாகச் சகலமோட்சவாசிகளை வேண்டிக்கொ
ரத் தொடங்குவேனென்றார். அக்காலத்திலி
ந்த நெசித்தாரிவேதசாட்சியாகிய-அர்ச். -
யொதோரென்பவரை நோக்கியெழுதினதா
து- எங்கள்குறைப்பாடுகளையுந் தளர்ந்தவிழி
ளையுமறவாதவரா யிடைவிடாம லெங்களுக்
வேண்டி யாண்டவரைமன்றாடச் சலிக்கவேண்
மென்றார். மீளவும்- ௲௫௰௬-ம் ஆண்டிலி
ந்த-அர்ச். - கிறகோரியுநிசேனுஸ் முன்சொ
ன வேதசாட்சிக்குத்தோத்திரப்பிரசங்கமா
வெழுதினதாவது- இந்நாள்வரைக்குங் குறை
ங்கே மின்றிநாங்கள்வாழ்ந்திருந்ததேயுமது
வேண்டுதலினு லெங்களுக்கு வந்தசகாயமென்
ம்மைத் தோத்திரம்பண்ணுகிறோ மினிவருங்
லத்து மழிவின்றியெங்களைக் காப்பீராகவென்
பிகவுமன்றாடுகிறோ மென்றார். இதையு மித்

தொகைப்பட்ட பலவகையும் பார்க்கும்போது திருச்சபை துவக்கத்திலே தானே வழங்கினவே தபாரகர்முதலாய் மோட்சவாசிகளால்- நமக்கு தவிவருமென்று முழுமனதோடே நம்பியிருந்தார்களல்லோ. ஆகையால் பூருவதிருச்சபைமோட்சவாசிகளைப் பரிச்சேதமாய் நம்பவேண்டாமென்று படிப்பித்ததென்பது தரங்கம்பாடியாரதிலே சொன்னவிரண்டாம்பொய்யாமே.

இதுவுந்தவிரமோட்சவாசிகளைவேண்டிக்கொள்ளலாகாதென் றெப்பிக்கத் தரங்கம்பாடியார் மூன்று நியாயங்களைக் காட்டப்பிரயாசப்பட்டு வேறேயெழு தப்பறை சொன்னார்கள். அதுகளின்முதலாவது- ஒருவனை மன்றாடுகிறதென்கிற சங்கை சர்வேசுரனுக்குமாத்திரஞ்செய்யத்தகுஞ் சங்கையாமே யென்றார்கள். இதுபொய்யாவதொழிய மதிகெட்டவனு நினைக்கமாட்டாதவபத்தமான தப்பிதமாமல்லோ. தரங்கம்பாடியார் சொன்னது மெய்யானாலிந்தப் பூலோகத்திலொருவனொருவனை யநுதினம்பலமுகாந்தரமாக மன்றாடுகிறபோதெல்லா மிவனவனைத் தெய்வசங்கையாகவணங்கினானென்று சொல்லக்கடவோமல்லோ. நாமொருவனை மன்றாடுகிறபோதவனிதிலே நமக்குப்பெரியவனென்று சங்கிக்கிறதுநிச்சயந்தானே. ஆகிலுமிதனா லவனெமக்குத்தேவனாகவணங்கினேமென்று நினைப்பாருண்டோ. தரங்கம்பாடியாரிதற்குச்சொல்லுமிரண்டாநியாயமாவதுசொன்னசங்கையிந்தப்பூலோகத்திலேயும்- அர்ச். -வர்கள்- தமக்குச்செய்யவொட்டாதேபோனார்களென் றெழுதிவைத்தார்கள். ஆகிலு முன்சொன்ன சங்கைமன்றாடுகிறதினால் வருஞ்சங்கையல்லோ. ஆகையால்- அர்ச். - வர்களி

தப்பூலோகத்திலே தம்மைப்புறத்தியார் மன்று
லாகாதென்று விலக்கிஞர்களென்றற்போலே
ாச்சுதல்லோ. ஆயினுத்தம்மை மன்றுடவொ
டாமல் விலக்கிஞர்களாகில்- தாங்கள்- தாமே
றத்தியாரைமன்றுவானேன். அப்படியே- அர்
. - சின்னப்பர் சுவிசேஷமாய்த் தாமெழுதின
ிருபங்களிலே யடிக்கடி சனங்களைமன்றடிஞர்.
அப்படியே பிலிப்பெஞ்சியருக்கெழுதின நிருபம்-
- ம். அதிகாரத்தினிரண்டாம் வசனத்திலுமு
ராமாபுரியாருக்கெழுதின நிருபத்தின்பதினே
தாமதிகார முப்பதாம்வசனத்திலுங் காணப்ப
மே. பின்னையுமோட்சவாசிகளை நமக்காகவே
ண்டிக்கொள்ள நாமேமன்றுடுகிறப்போலே- அ
ச். - சின்னப்பர்தாமே கொலோசெஞ்சியாரு
க்கெழுதின நிருபத்தின்- ௪-ம். அதிகாரத்தில்-
-ம். வசனத்திலுந்தெசலோனியாருக்கெழுதி
ன - முதல்-நிருபத்தின்-ரு-ம். அதிகாரத்தின்-
ுரு-ம்.வசனத்திலும்-உ-ம். நிருபத்தின்- ௩-ம்.
அதிகார முதல்வசனத்திலு நமக்காகவேண்டிக்
கொள்ளுங்களென்றுமன்றடியெழுதிஞரல்லோ
ஆகையால்- மன்றுடுகிறசங்கை யாகாதென்று
மகாத்துமாக்களிந்தப் பூலோகத்திலே விலக்கிஞ
ர்களென்பது தரங்கம்பாடியார் சொன்னபொய்
யாமே.

மீளவு மிப்பூலோகத்திலே-அர்ச்.-வர்கள்- த
ங்களை மன்றுடவொட்டாதிருந்தார்களென்றெ
ண்பிக்க- அப்போஸ்தலர் முயற்சியாகமத்தின்-
-ம். அதி- உ௰௬-ம். வசனத்தைத்தரங்கம்பா
டியார் குறித்தார்கள். ஆகிலுமிதிலே கொற்னே
லியென்பவன்- அர்ச். - இராயப்பரைக்கண்டவு
டனே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிஞ

னென்றுமறைத்கண்ட-அர்ச்.- இராயப்பரவனை க்கைதூக்கி நானுமனுஷனல்லோவென்றுசென் று மெழுதியிருக்கத் தம்மையாராதனை பண்ண வேண்டாமென்று- அர்ச். - இராயப்பர்விலக்கி னுரொழிய வதிலேயவ னிவனை மன்றாடவுமில்லை யவர்தம்மை மன்றாடவேண்டாமென்று சொல்ல வுமில்லை. இதுவுந்தவிர வதற்குத்தானேயந்த வாசகத்தின்-௰௪-ம். அதிகாரம்-௰௫-ம். வசன த்தையுந் தரங்கம்பாடியார் குறித்தார்கள். ஆ கிலுமிதிலே- அர்ச்.-சின்னப்பரும் பார்னபாவெ ன்றவரும்பிறவிச்சப்பாணிக்காரோக்கியந் தந் து காட்டினபுதுமையா லிவர்களைத்தேவர்களெ ன்று நினைத்துவெகுசனங்கள்கூடி யவர்கள் வணங்கின பிரதான தேவனுக்குப் பூசிக்கிறவ னும்வந் திவர்களுக்குப் பூசையாகப் பலிகொடு க்க வேண்டுமென்றிருந்தான். அதைக்கண்டு- அர்ச். - சின்னப்பரும் பார்னபாவென்றவரு மிகுந்த துக்கத்தைக் காட்டிக்கூப்பிட்டுங்களை ப்போலே நாங்களு மனுஷரல்லோவென் றந்த வக்கிரமமான பூசையைவிலக்கினார்கள். அப்படி யேதரங்கம்பாடியார் தமிழாகத்திருப்பின புஸ் தகத்திலேமுதலாயெழுதியிருக்கிறதல்லோ இதி ப்படியிருக்கக்கொள்ள- அர்ச் .-வர்கள் முதலா யிப்பூலோகத்தி லிருக்கும்போது தம்மை மன்றா டவொட்டார்களென் றெப்பிக்கத் தமக்குத்தே வாராதனையுந் தேவபூசையுஞ்செய்யவொட்டா த வத்தாட்சியைக்கொண்டுவிடவோ. மன்றாடு கிறசங்கையும் பூசையாகப் பலியைக்கொடுக்கிற சங்கையு மொன்றென்பார்களோ. இதுவே வெ ட்கமெல்லாங் காலாலேமிதித்து மற்றேழைச்ச னங்களை யேய்த்துக்கெடுக்கச் சொன்னவிரண்டு

பாய்யல்லோ. அப்படியேயன்றுடப்படுகிற ச
கைச் சம்மனசுகள்முதலாய்த் தங்களுக்குச்செ
யவொட்டாமற்தபோனர்களென்பதும் பொய்
ாமே. ரோயிசன்முதலாகமத்தின்-௬ய அ-ம். அ
ஐ- ௰௬-ம். வசனத்தில்யாக்கோபென்பவர் த
ர் பேரப்பிள்ளைகளைக்குறித்துச் சொன்னதாவ
து சகலதின்மைகளிலென்னைக்காத்த சம்மனசா
னவரித்தப்பிள்ளைகளை யாசீர்வதிக்கக் கடவதெ
ன்றார்.

இதோ வவர்களைவேண்டி யாக்கோபென்பவ
ர் சம்மனசானவரைமன்றாடினனென்று வேதத்
திலெழுதப்பட்டதாமே. ஆகையால்- தரங்கம்
பாடியார்சொன்னது வேதத்துக்கு விரோதமா
னபொய்யாமே. மீளவு மிந்தப்பொய் யொப்பிக்
க வவர்கள்குறித்த விரண்டு வேதவுதாரணங்க
ளிதை யொப்பிக்குமென்பதும் பொய்யாமே. அ
தெப்படியென்றால்- அர்ச்.-அருளப்பர்காட்சியா
கமத்திலே தரங்கம்பாடியார் குறித்த-௰௯-ம்.
அதிகாரம் -௰-ம். வசனத்திலும்-உஉ-ம். அதி-
௯-ம். வசனத்திலுந் தம்மை-அர்ச்.- அருளப்ப
ர் வணங்காதபடிக்குச் சம்மனசுவிலக்கினதொ
ழியத் தம்மைமன்றாடவேண்டாமென்று விலக்கி
னதில்லையே. மீளவுமதிலேயந்தச்சம்மனசு தம
க்குவணக்கஞ்செய்யவிலக்கினதினால்- நாஞ்சம்ம
னசுகளை வணங்கலாகாதென்று தரங்கம்பாடியா
ர் நினைக்கவுந்தேவையில்லை. அதேதெனனில்- அ
ர்ச்.-அருளப்பர்சம்மனசுகளை வணங்கத் துணிந்
தது நிச்சயமாகக்கொள்ள வந்தப்படியே நாமு
ஞ்சம்மனசுக்களை வணங்கினலப்போஸ்தலர்காட்
டின வழியையல்லோபின்சென்று நடக்கிறோம்.
பதிதரோவெனிலப்போஸ்தலரைப்பார்க்கத்தே

ளிந்த ஞானிகளாயப்போஸ்தலர்செய்யத்துணி
ந்ததை வேதத்தில்விலக்கினவக்கியானமென்பா
ர்களோ. சம்மனசுமுதலா யந்தவணக்க மாகா
தென்று விலக்கிறைரோவல்ல. ஆகாதென்றுவில
க்கிறைராகில்-௰கூ-ம். அதிகாரத்திலந்த வணக்க
மாகாதென்று- அர்ச். - அருளப்பரறிந்தபின்பு
திரும்பவும்-௨௰௨-ம். அதிகாரத்தி லெழுதப்பட்
டபடியே சம்மனசைவணங்கத் துணிவாரோ.
ஆகையாற் சம்மனசானவர் தம்மைவணங்கவே
ண்டாமென்றபோதே யந்தவணக்கமாகாதென்
றறிஞலதைவிலக்காமலதற்கு வேறேகாரணமு
ண்டென்று சொல்லக்கடவோம். அதேதெனிற்
சுதனுகிய சர்வேசுரன்மனுஷாவதாரஞ்செய்யா
முன்னே வேதத்திலெழுதினபடியே- அபிராமும்
லோத்து மற்றப்பலருஞ் சம்மனசுகளை வணங்கி
னவிடத்திலே சம்மனசுகளவர்களை விலக்கினதி
ல்லையே. ஆனுற்சம்மனசுகள்-தாமே யாண்டவ
ரவதரித்தெடுத்த மனுஷசுபாவத்தை வணங்க
த் துவக்கினபின்போவென்றுல்- மனுஷருக்குள்
ளே மகாத்துமாக்கள்விசேஷமாய்த் தங்களைவ
ணங்காதபடிக்குத் தாழ்ச்சிக் கடையாளமாகவு
ஞ் சேசுநாதரெடுத்த மனுஷசுபாவத்துக்குச் ச
ங்கையாகவுஞ் சம்மனசுகள் விலக்கினதறிவோ
ம். ஆகையால்-நாமேசம்மனசுகளை வணங்கவே
ண்டுமென்பதுவேதத்துக்கொத்தமுறையாகும்.
அவர்களுந் தம்மைவணங்கவேண்டாமென்பது
தாழ்ச்சிக்கொத்த முறையாமே. அப்படியே-அ
ர்ச்.- ஓாக்காஸ்சுவிசேஷத்தின்-௪-ம். அதிகார
ம்-௪௧-ம்.வசனத்தி லெழுதினதன்மையால்-சே
சுநாதர் துரத்தினபசாசுகள் - நீரே சர்வேசுர
னுடைய குமாரனென்றுபுகழ்ந்தவிடத்திலேசே

நாத ரதுகளைக்கண்டித்துப் பேசாதபடிக் கட
கிறாரல்லோ. ஆகிலுஞ் சேசுநாதர் தம்மைத்
தாத்திரஞ்செய்யாதபடிக்குப் பசாசுகளையடக்
னதிறல்-நாமுஞ் சேசுநாதரைத்தோத்திரஞ்
சய்யலாகாதென்று நினைப்பாருண்டோ. மீள
ம்-அர்ச்.-லூக்காஸ்சுவிசேஷத்தின்-உ௩-ம்.அ
-உஅ-ம்.வசனத்தி லெழுதினபடியே சேசுநா
ர் சிலுவையைச்சுமந்துபோகையி லவரைப்பா
த் திரங்கின சிலஸ்திரீகளழுகிறதைக்கண் டவ
ானக்கிரங்கி யழவேண்டாமென்றார். ஆகையா
-நம்மையிரட்சிக்கச் சேசுநாதர் பட்டபாடுக
ா நினைத்திரங்கியழுவ தாகாதென்று நினைப்பா
ண்டோ. அப்படியே சம்மனசானவர் தம்மை
ணங்காதபடிக்கு-அர்ச்.-அருளப்பரைவிலக்கி
திறல்-நாமுஞ் சம்மனசுகளை வணங்கலாகா
தன்று சலஞ்சாதித்தபதிதரொழியச் சொல்
ருண்டாகுமோ.

கடைசியில் - மோட்சவாசிகளைமன்றாடலாகா
தன்றெப்பிக்கத் தரங்கம்பாடியார்சொல்லுமூ
ாறு நியாயமாவது மோட்சவாசிகள்-நம்மை ய
யவுமில்லை. நமக்கடுத்தது களி லொன்று மவர்
ளுக்குத் தெரியவுமில்லையென்றார்கள். ஆகிலு
து மோக்ஷவாசிகளுக்குத் தூஷணமாகவும்வே
த்துக்கு விரோதமாகவுந் தரங்கம்பாடியார்
சான்ன பொய்யல்லோ. தோபியனாகமத்தின்
உ-ம்.அதிகாரம்-௰உ-ம். வசனத்தில் - இரப
ய லென்கிறசம்மனசு தோபியனைப்பார்த்துச்
சான்னதாவது நீகண்ணீரைவிட்டழுது வே
ண்டினவளவில் - நானே யுன்வேண்டுதலை யா
ண்டவருக் கொப்புக்கொடுத்தே னென்றாரே.
தாபியனை யறியாமலு மவன்விட்டகண்ணீரை

க்காணுமலு மவன்செய்தவேண்டுதலைக் கேள
மலு மிதெல்லாஞ் சம்மனசானவர்செய்தாரே
வென்ன. அப்படியே-அர்ச்.-அருளப்பர் காட்
யாகமத்து-ரு-ம். அதிகாரம்-அ-ம். வசனத்தி
ம்-அ-ம். அதி-௱-ம். வசனத்தி ம்- ஆண்டவ
சமுகத்தில்-உச-மூத்தோரு மொரு சம்மனச
விழுந்து பொற்பாத்திரங்களிற் பூம்புகைகாட்
னபாவனையாக மோட்சத்திருந்த தாங்களே
வுலகிருந்த நல்லோர்செய்த வேண்டுதலைக்கா
டி மன்றாடினதாகவெழுதியிருக்க வவர்களுமந்
நல்லோரை யறியாமலு மிவர்கள்செய்தவே
டுதலைக்கேளாமலு மதைப்பூம்புகையாக வா
டவருக்குக்காட்டி மன்றாடினார்களோ வென்
அப்படியே மக்கபெய மிரண்டா மாகமத்தில்
௰ரு-ம். அதிகாரம்-௰உ-ம். வசனந்துவக்கி
ழுதப்பட்டபடியே மரணத்தை முன்னடைந்
எரேமியவென்பவ ரிசறுயேல் சனங்களுக்காக
ம்-எருசலேமென்கிற திருநகருக்காகவும் வே
டிக்கொண் டிருந்தாரென்று மவர்களுக்குவ
வாபத்தறிந்து சர்வேசுரனை மன்றாடி யற்புத
யடைந்த வெற்றிவாளை யூதவென்கிற தளகர்
தனுக்குச் சத்துருக்களைவெல்லச்சொல்லிக்கொ
டுத்தாரென்று மறிவோமே. இதெல்லாமொ
றுமறியாமற் செய்ததாகச் சொல்லுவோமே
வென்ன. ஆகையால்-மோட்சவாசிகள் - நம்ம
யறியவுமில்லை நாஞ்செய்தவேண்டுதலைக் கே
கவுமில்லையென்பது வேதத்துக்கொவ்வாத செ
ய்யாமல்லோ. இதற்குவேதவிளக்கத்தின்-உ
ம். -உ௱௭-ம். பிரிவிலேநாஞ் சொன்னதை
காணக்கடவீர்கள். இப்போதொருபக்கத்தே
டிலே தரங்கம்பாடியார் சொன்ன வொன்ப

பாய்களை யொப்பித்ததுபோதுமென் றிருக்கி
றோம்.

ஏழாம் பேதகமறுத்தல்- முற்றிற்று.

# அ-ம். பேதகமறுத்தல்.

எட்டாம்பேதகமென்று தரங்கம்பாடியார்பூ
வவேதசத்தியமாகச் சேசுநாதரொருவரேது
ணையுமின்றிக் குறையுமின்றிநம்மையெல்லாரை
யுமிரட்சித்தவரொன்றுசொன்னபின்பு நாமிதை
மறுத்தாற்போலப் படிப்பித்ததாக வவர்களெ
ழுதினதாவது: " இதுக்கெதுகையாகமனுஷிரா
' லேகட்டப்பட்ட புதுவுபதேசம் போதிவிக்கி
' றதாவது: எங்களுடையநாதர் - ஏசுக்கிறீஸ்
' துநாதர் பண்ணின மீண்டிரட்சித்துதல் கு
' றையற்றதா யிருக்கவில்லையென்று போதிவிக்
' கு மதேதென்றால்-கிறீஸ்துவானவர் சென்ம
' ப்பாவத்துக்காகமாத்திர மரித்தாரென்றுந்த
' ம்முடைய மரணத்தினாலே குற்றத்துக்காக
' மாத்திர மீடு பண்ணினாரென்று மாக்கினை
' யோவென்றால் - மனுஷன்-தானே யாக்கினை
' ப்பட்டுச் சறுவேசுரனுடைய நீதிக்கு - இது
' க்காக வீடுபண்ண நீதியுள்ள சறுவேசுரன்
' வேணுமென் றிருக்கிறாரென்றும் புண்ணிய
' க் கிறிகைகளைச் செய்கிறதுந் தபசுபண்ணிச்
' சரீரத்தை யொறுத்தாலுங் கோவிற்பண
' மவதாரங் குடுத்தாகிலு மீடுபண்ணுகிறதும்
' பூசைகளும் - இந்நல்சென்சியாக்கடுதாசிகளு
' முத்தரிக்கிறஸ்தலத்திலே யாக்கினை வாதைப்
' படுகிறது மிதுகளெல்லாம் பாவங்களைப் பரிக்

" கிரகம்பண்ணித் தன்னைச் சுத்தம்பண்ணுகிற
" துக் கானவகையோடே கூட்டாயிருக்கிற வ
" கைகளா யிருக்குதென்றும் புதுசான வுபதே
" சம்போதிவிக்கும்,, என்றார்கள்.

இதிலேசேசுநாதர் நம்மைக்குறையற விரட்சித்தவரல்லவென்றுஞ் சென்மப்பாவத்துக்காக மாத்திர மரித்தாரென்றுந் தாமடைந்தமரணத்தினாற் பாவத்தினால்வரு மாக்கினைக்கடன்தீராமற் பாவதோஷத்தைமாத்திரந் தீர்த்துத்தரித்தாரென்று முரோமான்றிருச்சபை படிப்பித்ததாகத் தரங்கம்பாடியா ரெழுதக்கூசாதேபோனார்கள். இந்த மூன்றக்கிரமமானபொய்களை மறுக்க வுரோமான்றிருச்சபையுட்பட்ட கிழவிகள்-முதலாய்ப்போதுமல்லோ. அப்படிப்பட்டவர்களை முதலாய்க்கேட்டா லிந்த விஷயத்திலே சொல்லப்போகிற தன்மையாவது சேசுநாதரொருவரே மனுஷரனைவருஞ் செய்த வெல்லாப்பாவங்களுக்காக வுத்தரிக்க வல்லவனென்றும்-அப்படியே சிலுவையிலறையுண்டடைந்த மரணத்தினாற் சென்மப்பாவத்துக்காகவுஞ் சகலகருமப்பாவங்களுக்காகவும் பாவதோஷமொழியப் பாவத்தால்வரத்தகு மாக்கினைக்கடன்றீரவும் வேண்டினமுறையின்மேலு மளவில்லாதவுத்தமமோயா யுத்தரித்தானென்றும்-அதனாலவரொருவரே நம்மையிரட்சித்தவனென்றுங் குறையற மிஞ்சின வுத்தமமுறையோ டிரட்சித்தவனென்றுங்கிழவிகள் - முதலாய்ச்சொல்வார்களல்லோ. இதிப்படியாகக்கொள்ளத் தரங்கம்பாடியார் சற்றுங்கூசாம லந்தவடத்தங்களை யுரோமான்சபையார் படிப்பிக்கிறார்களென்றெழுதினார்களே. நாமிதிலேபடிப்பிக்குஞ் சத்தியமேதென்று வே

நவிளக்கத்தின்-எஅ-ம். பிரிவிலேயும்-ாயஉ-ம். பிரிவிலேயுங்காணக்கடவீர்கள்.

எட்டாம்பேதகமறுத்தல் முற்றிற்று.

---

## ௯-ம். பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார் சொன்ன தேவெதவில்: "சறுவேசுரன் - திருவிளம்பத்தின பூருவ 'த்துபதேச மெங்களுக்குப் போதிவிக்கிறதா 'வது: எங்கள் தாதர் - ஏசுக்கிறீஸ்துவானவ 'ரொருத்தர்மாத்திரஞ் சறுவேசுரனுக்கு மனு 'ஷருக்கு மொன்றான நடுவருமாய்த் தம்முடை 'ய வனுதியானபிதாவினண்டையிலே யவரொ 'ருத்தர்மாத்திர மெங்களுக்காகப் பரிஞ்சுபேசு 'கிறவருமாய் மன்றாடுகிறவருமா யிருக்கிறாரெ 'ன்று மிதின்முகாந்திரமாக வேறொருத்தரா "லு மெங்களுக்குக் கிடைக்கமாட்டாதென்று "நாங்களும் வேறொருத்தரைப் பரிச்சேதமாக "த்தேடவேண்டாமென்றும் போதிவிக்கும்." இந்தக் கொடியவசனங்களைத் தரங்கம்பாடியார் சொல்லிச்சொன்னதற்குப் பலமுகாந்தரங்களைக்காட்டினபின்ன ரெழுதினதாவது: "இதுக் "கெதுகையாக மனுஷராலேகட்டப்பட்ட புது "வுபதேசம் போதிவிக்கிறதாவது: எங்களுடை "ய நாதர்-ஏசுக்கிறீஸ்துவானவரொருத்தர்மா "த்திரஞ் சர்வேசுரனுக்கு மனுஷருக்கும் - ஏக "னுயிருக்கப்பட்ட நடுவராயிராம லவரல்லாம "லவரோடேகூட பரமண்டலத்திலே யாண்டு "க்கொள்ளுகிறவராயிருக்கிற - அர்.-வர்களுமி

" ப்படிக்கொத்த நடுவரா யிருக்கிறார்களென்கி
" றதுந்தவிர தேவமாதாவாகிற - அற்.-கன்னி
" மரியாளும் பாவிகளுக்குஞ் சகலமான மனு
" ஷிசாதிக்கு முன்னிற்கிறவளுமாய் மன்றாடுகி
" றவளுமாய்ப் பரிஞ்சுபேசுகிறவளுமா யிருக்கி
" றாளென்று மனுஷிருடையபுதுவுபதேசம்போ
" திவிக்கும்,,என்றார்கள்.

இதற்கு வேதவிளக்கத்தின்-உசு-ம்.பிரிவிலெ ழுதப்பட்டதைக் காண்பீர்களாக. ஆகிலு மிதி லே தரங்கம்பாடியா ரேழைச்சனங்களையேய்க் க மறைவாகச்சொன்னதப்பறைகள் வெளியாகு ம்படிக் கறியவேண்டியதாவது மனுஷிர்செய்த பாவமெல்லாஞ் சர்வேசுரன்சந்நிதியிலவர்கள்- மேலேசுமத்தின பலகடனுமே. அதனு லல்லோ பரமண்டல மந்திரத்தி லெங்கள் பாவங்களைப் பொறுமென்பதற் கெங்கள்கடன்களை யெங்களு க்குப்பொறுமென்றுகேட்கச் சேசுநாதர்தாமே படிப்பித்தார். இதிப்படியாகையி லிருவருக் குண்டாகிய கடன்வியாச்சியத்தைத்தீர்க்கமற்றொ ருவ னடுவேநின்று மூன்றுவகையி லந்தவியாச் சியத்தைத்தீர்த் துறவுண்டாக்கு மத்தியஸ்தனு வான். அதுகளின் முதலாவது-இருவரி லவனுக் கிவன் கடன்கொடுக்கவேண்டுமென்றுங் கொடு க்கவேண்டியகட னிம்மாத்திரமென்றுஞ்சொல் வது மத்தியஸ்தன் வியாச்சியத்தைத்தீர்க்கு மு தல்வகையாமே. இந்தவகையாலாண்டவ னெல் லாத்தையுமறிந்த நீதிபரனுகக்கொள்ள வவருக் கு நமக்கும் வேறொருமத்தியஸ்தன்- தேவையில் லையே. இரண்டாவது-அவனுக்கிவ னிவ்வளவா கக் கடன்றரவேண்டுமென்று நிச்சயமாகி யிவ ன்கடனை யுத்தரிப்பதற் கொன்றுமில்லாதவனு

கக்கொள்ள மற்றொருவனிரங்கி யிவனுக்குவே ண்டித் தன்கைப்பொருளைக்கொடுத்துச் சுமந்த கடனைத்தீர்ப்பது மத்தியஸ்தன்வியாச்சியத்தைத்தீர்க்கு மிரண்டாம்வகையாமே. இந்த வகையால்- மெய்யானசர்வேசுரனு மனுஷனுமாகிய சேசுநாதரொழிய வளவறுக்கப்படாத பாவக்கடனைத்தீர்த்து நமக்கும்-ஆண்டவருக்கு மத்தியஸ்தனாக நிற்பவல்லவ ரொருவருமில்லை. அப்படியே- அர்ச்.-சின்னப்பர் திமோத்தேயு ஸென்பவருக்கெழுதின -முதல்- நிருபத்தினிரண்டாமதிகாரத் தைந்தாம்வசனத்திற் சொன்னதாவது சர்வேசுரனொருவரே. சர்வேசுரனுக்கு மனுஷருக்கு மத்தியஸ்த னொருவரே யெல்லாரையுமீட்கத்தாமே தம்மைத்தந்த மனுஷனை சேசுகிறீஸ்துத்தானென்றார். அப்படியேபட்டபாவக்கடனை யுத்தரிக்கமாட்டாம லடிமையாய்க்கிடந்த நம்மையெல்லாரையுமீட்டிரட்சிக்கத் திவ்வியதன்னிரத்தத்தை விலையாகச் சேசுநாதர் தந்து நமக்குவேண்டித் தாமேதம்மைச் சிலுவைமரத்துக்கொப்புக்கொடுத்தமத்தியஸ்தனவரொருவரேயென் றுரோமான் றிருச்சபை படிப்பிக்குஞ்சத்தியமாமே. ஆகையா லிந்தவிரண்டாம் வகையாற் சேசுநாதரொழிய மற்றமோட்சவாசிகளு மவருடையதேவதாயு நமக்குமத்தியஸ்தராக நிற்கிறார்களென்று நாஞ்சொன்னதுங் கருதினதுமில்லை. சொன்னோமென்று தரங்கம்பாடியா ரிதிலேயெழுதினது குழந்தைகள்-முதலாய் நகைக்கத்தகும் பொய்யாமே. மூன்றாவது- அவற்கிவ னுத்தரிக்கமாட்டாமற் பட்டகடனையவன் றயையாகப் பொறுக்க மன்றாடினவனுமிருவருக்கு மத்தியஸ்தனாக நிற்பானென்பார்கள். இந்த

மூன்றும்வகையால்-நமக்குஞ்சர்வேசுரனுக்கு மத்தியஸ்தனாகச் சேசுநாதர்நிற்பதொழியச் சேசுநாதரடைந்த பாடுகளைக்குறித்து நமக்காண்டவ ரிரங்கமென்றுடி மோட்சவாசிகளுமிங்கேநம் மோடேகூடத் திரிகிறவர்களு மத்தியஸ்த ராகலாமென்று சொல்லத்தகுமே. அப்படியேமோயீசன்-தாமெழுதின வைந்தாமாகமத்தி னைந்தாமதிகாரத் தைந்தாம்வசனத்திலே சர்வேசுரனுக்கும் யூதர்களுக்குநடுவாய்நின்ற மத்தியஸ்தனொன்றுனேயென்று தெளிவாகச் சொன்னார். அப்படியே-அர்ச்.-சின்னப்பர் கலாசியத்தாருக்கெழுதின-ஈ-ம். அதிகாரம்-ய கூ-ம். வசனத்தில்-மோயீசனை நடுவாய்நின்ற மத்தியஸ்தனென்றுராகையா லிந்த வகையோடே சேசுநாதரொருவரேமாத்திர நமக்கு மத்தியஸ்தனென்றுதரங்கம்பாடியார்சொன்ன திரண்டாம்பொய்யாமே.

ஆகிலு முன்சொன்ன விரண்டாம்வகையாற் சேசுநாதர் நமக்குமத்தியஸ்தனாகிநாங்கொண்டிருந்த பாவக்கடனெல்லாங் குறையற வுத்தரித்தபின்பு மீளவுமந்தக்கடனை யாண்டவர்பொறுக்க மன்றாடும்படிக்கு வேறேமத்தியஸ்தர்வேண்டுமோவேண்டுமென்றால்-நாமேபட்டகடனைத்தீர்த்து நம்மைமீட்கச் சேசுநாதர் தந்தமதியாதவிலையாகிய தமது திவ்வியவிரத்தம்போதாதென்று சொல்லவும்வேண்டுமல்லோ - இதுகனவபத்தமாகையில் வேறேமத்தியஸ்தனைத்தேடலுமபத்தமாமே யென் றிதிலேசொல்வார்களாக்கும். ஆகிலுநமதுபாவக்கடனைக் குறையறத் தீர்த்தபிற்பாடு சேசுநாதர் தாமேபிதாவின் வலதுபாரிசத்திலேயிருந் துரோமாபுரியாருக்கெட்டா

திகாரம்-௬௪-ம்.வசனத்தில்-அர்ச்.-சின்னப்ப
ரெழுதினபடியே நமக்கு வேண்டி மன்றுடுவா
னென். இனி யாதொருத்தன் பாவத்தைச்செய்
தாற் பிதாவினிடத்தில்-நமக்குவேண்டி மன்றாடு
றவராகச்சேசுநாதரே நிற்கிறாரென்று-அர்ச்.-
அருளப்பர் முதல்-நிருபத் திரண்டாமதிகாரமு
தல்வசனத் தெழுதுவானேன்.சேசுநாதரிங்கே
பாடுபட் டடைந்தபலன்கள்போதாதென்றேவி
போது மோட்சத்திலு நமக்காகமன்றாடிக்கொ
ண் டிருக்கிறார். மீளவும்-அர்ச்.-சின்னப்பருரோ
மாபுரியாருக் கெழுதின-௰௫-ம். அதிகாரம்-௩௰-
ம்.வசனத்தி லாண்டவரிடத்திலே நீங்களெனக்
காகவேண்டிக்கொண் டெனக்குதவவேண்டுமெ
ன்றெழுதுவானேன்.அப்படியே மோட்சக்கரை
பேறும்படிக் கொருவனொருவனுக்காக வேண்டி
க்கொள்ளுங்களென்று-அர்ச்.- யாகப்பர்-௫-ம்.
அதிகாரம்-௰௬-ம்.வசனத்திலெழுதுவானேன்.
சேசுநாதரால் - நமக்குவந்தபலன்கள்போதா
தென்றே வொருவனொருவனுக்காக வேண்டிக்
கொண்டு நாங்கரையேறவேண்டுமென்றார்கள்,
இதெல்லாம் வெளியாகும்படிக் கறியவேண்டி
யதாவது நம்மைமீட்கச் சேசுநாதர்தந்த விலை
நாங்கரையேறவவர்நமக்கடைந்த பலன்களு
போதுமேயொழியவேண்டியதின்மேலு மள
வொன்றின்றி மிஞ்சினதுதானே. ஆகிலுஞ்சேசு
நாதர் தனித்தயைமுறையாற் பாடுபட்டடைந்
தபலன்கள் -தயையோடேகூடின நீதிமுறையா
ற்பாத்திரமாயிருக்கிறவர்களுக்குமாத்திர முத
வவேண்டுமென்று சித்தமானார். நாமோவென்
றறிவடைந்தபின்ன ரந்தப்பலன்களுதவியை
யடையப் பாத்திரமாவதற்குச் சர்வேசுரனைத்

தாசையு நமது மனத்துணிவும் வேண்டியதா
மே. இதனாலல்லோ சகலருங்கரையேறவேண்டி
யதின்மேலுஞ் சேசுநாதரெல்லாருக்கும் பலன்
களை யடைந்திருந்தாலு மெல்லாருங் கரையேறு
ம வின்னமறுதின மெண்ணப்படாதபேர்கள்-ந
ரகத்திலே விழுகிறார்களாகையால்-நாமுமிப்படி
விழாதபடிக் காண்டவர்நமக்கு விசேஷவொத்
தாசைசெய்யவு மவருதவியைக்கொண்டு நாமு
மனதிலே துணியவுஞ் சர்வேசுரனிரங்கிச் செய்
யவேண்டுமென்று சேசுநாதர் நமக்குவேண்டி
யெந்நேரமும் பிதாவைமன்றாடுகிறாரென்று மிப்
பூவுலகி லொருவனொருவனுக்காக மன்றாடவேண்
டுமென்றும் வேதத்திலெழுதப்பட்டதாமே. ஆ
கிலுஞ்சேசுநாதர் நமக்கடைந்த வளவில்லாத
பலன்களுக்கு நாம்பாத்திரமாகச் சேசுநாதருமி
ங்கேயிருக்கிறபேர்களுங் குறையொன்றின்றிச்ச
ர்வேசுரனை வேண்டிக்கொள்ளலா மென்றது
போல வதற்குத்தானே மோட்சத்தில் வாழும்
பேர்களும்வேண்டிக்கொள்ளலாமென்றாற் குறை
யென்ன. மேலானதேவமத்தியஸ்தனாகிய சேசு
நாதருக்குக் குறைசெய்யாமற் பூவுலகில் - நமக்
காக வேண்டிக்கொள்ளச்சொல்லி வேறேமத்தி
யஸ்தரைத் தேடலாமென்று பதிதருஞ்சொல்லு
வதற்குத்தானே வானுலகில்வாழு மோட்சவா
சிகளைமத்தியஸ்தராகத்தேடலாகாதென்றுசொ
ல்வதென்ன. இதுவேயுச்சிப்பகலு மிருண்டதெ
ன்றுசொல்லத் தான்-தனக்கொருவ னிருகண்ட்
டுங்கின தன்மையாமல்லோ.

ஒன்பதாம்பேதகமறுத்தல்-முற்றிற்று.

# ௰-ம். பேதகமறுத்தல்.

பத்தாம்பேதகமாகத் தரங்கம்பாடியார்கொள் மொழித் தமிழாகவெழுதினதாவது:" சறுவேசுரன் திருவிளம்பத்தின பூருவத்துபதேசமெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: எங்களையிரட்சித்தவராகிற - ஏசுக்கிறீஸ்துவானவர் தம்முடைய வனுதியானபிதாவாகிற சறுவேசுரனுக்குஞ் சகலமானமனுஷருக்குஞ் சரியாய்க்குறையற்ற நிறைஞ்சபிறகாரமாகச்சமாதானம்பண்ணிக்கொண்டாரொன்றுமிந்தச்சமாதானம்பண்ணுதலைத் தாந்தானுகிறவந்த வொன்றான் பழுதற்றபெலியினாலே முகிச்சுக்கொண்டார். இந்தப்பெலியை யேதொரு பாவத்தைப்பரிக்கிறகம் நிவர்த்திபண்ணத்தக்கதாக வவரொருதரங் கசப்பானதுவுமாய்ப் பகரமானதுவுமாயிருக்கிற சிலுவையின்மரத்திலே பெலியிட்டு- இந்தப்பிரகாரமாகவவர்களுக்கு ஊழிகாலநிற்கிற- இரட்சித்துதலை வரப்பண்ணிக்கொண்டாரானதுகொண்டு- இப்போபாவங்களுக்காக வேறேபெலியானாலுங் காணிக்கையென்கிலு மிருக்கவுமில்லை யினித்தேவையாயிருக்கவுமில்லை. எபிறேயருக்குநிருப-௯- அதி- ௰௨-௨௫-௨௬-கவியெபிறேயருக்கு-௰-அதி- ௰௨- ௰௮- கவியிதுக்கெதுகையாக மனுஷருடைய புதுவுபதேசம்போதிவிக்கிறதாவது: மிசாவென்கிறபூசையுயிரோடேயிருக்கிறபேர்களுக்குமரித்தவர்களுக்கும் பாவப்பொறுத்தலைப்பலிக்கப்பண்ணுகிற சமாதானபெலியாயிருக்குதென்று போதிவிக்கும்,, என்றார்கள்.

இதிலே தரங்கம்பாடியார் சொன்னதாவது: நம்முடைய பரமகர்த்தராகிய சேசுநாதர்கபா

லமலேமேலொருமுறை தம்மைத்திவ்வியபலியாக்
த்தந்து முடித்தசிலுவைப்பூசைபாற் குறையறச்
சகலபாவங்கள்பொறுக்கப்படவுஞ் சகலமனுஷர்
மேற்களையேறவும்பலனையடைந்து குறைவையா
மல்- நம்மையிரட்சித்தாரொன்றார்கள். இதுசுவி
ருதசத்தியந்தானே. இதுவேசத்தியமாகக்கொ
ள்ள வினிவேறொருகிறீஸ்துவந்து நமக்காகப்பா
டுபடவுந்தேவையில்லை. இந்தக்கிறீஸ்துத்தானே
மறுபடிவந்து பாடுபடவுந்தேவையில்லை. இது
வே அர்ச். - சின்னப்ப ரொபிரோயருக்கெழுதின-
கூ-ம். -ம-ம். - அதிகாரத்திலே சொன்னதற்கர்
தமாகும். இந்தச்சத்தியத்தைச் சொன்னபின்
தரங்கம்பாடியாரிதிலே யெழுதிவைத்ததாவது
இதற்குவிரோதமாக வுரோமான்சபையாரின்
நற்கருணைப்பூசை சீவியர்களுக்குமரித்தவர்களு
க்கும் பிரயோசனமாகவுண்டென்று சொல்லுவா
ர்கள். இப்படியவர்களிதிலே யெழுதினதைக்கண்
டோம். ஆகிலுமுன்சொல்லப்பட்டசத்தியத்து
குவிரோதமாக நற்கருணைப்பூசை யுண்டென்று
சொன்னோமாகில்- நம்மைக்குறையற விரட்சி
க்கும்படிக்குச் சிலுவைப்பூசைபோதாம லின்ன
ந்தக் குறைதீர நற்கருணைப்பூசைவேண்டியத
கப் படிப்பிக்கிறோமென்று சொல்லவேண்டுமல்
லோ. இல்லாவிட்டால்- நாஞ் சொன்னத
தச்சத்தியத்துக்கெப்படிவிரோதமாகும். இதே
வுரோமான் றிருச்சபைமேலே யேழைச்சனங்
களுக் கருவருப்புண்டாகத்தரங்கம்பாடியார்வெ
ட்கமில்லாமற்சொல்லு மக்கிரமமான பொய்
ளே. சிலுவைப்பூசைபோதாததினால்- நற்கருணை
ப்பூசை வேண்டியதென் றுரோமான்றிருச்சபை
யாரி லொருவன்மாத்திர மெழுதினதாக வவர்

ா காட்டக்கடவார்கள். காட்டமாட்டாதே
பாறு லக்கிரமமாய்த் தாங்களே பொய்சொ
னர்களென்று கீழே தலைகுனிந்து நாணியுலக
மெல்லாமறிய வொத்துக்கொள்ளக்கடவரர்கள்.
ற்கருணைப்பூசை மெய்யான பூசையென்றுஞ்சீ
யர்களுக்கு மரித்தவர்களுக்கு முதவும்பூசையெ
று முலகமுடியுமட்டு முடியாதநுதினஞ்செய்
த்தகும் பூசையென்றுமுரோயான்றிருச்சபை
டப்பிக்கிறதுள்ளதுதானே. ஆகிலுமுன்சொன்
சத்தியத்துக்குஞ் சிலுவைப்பூசைக்கும்விரோத
்க நற்கருணைப் பூசையுண்டென்று நாஞ்சொ
லுகிறோமென்கிறது பொய்தானே. இதிலேயு
ரோமான்றிருச்சபைபடிப்பிக்குஞ் சத்தியமேதெ
றறிய நாந்தந்த வேதவிளக்கத்திலுள்ளபூசை
ளக்கமென்னும்-௰௫-ம். அதிகாரமுழுதும் வி
சேஷமாயதிலே- ௱௰௨-ம்.பிரிவுங்காணக்கடவீ
ர்கள். குறைவையாமற் சேசுநாதர்முடித்த சிலு
வைப்பூசைக்கு நித்தநினைவுண்டாகவுதன்றியறி
த தோத்திரமாகவு மவர்தாங்சட்டளையிட்டப
யே யவர்தாந்தேவகுருவுந்தேவபலியுமாகிய
தின நற்கருணைப்பூசை யுரோமான்றிருச் ச
பயில் வழங்குமுத்தமமுறைமையாமே. சகலந
ைமயினூற்றுக்களாகச்சேசுநாதர்சிலுவைப்பூ
சயில்- திறந்ததந்திருக்காயங்களோயாமல்-
ந்தொழுகும்பலன்களை நமக்குக் கொண்டுவிடு
காலாகவும் போனபேதகத்திலேசொன்னதன்
மயா லந்தப்பலன்களுக்கு நாமேபாத்திர மா
தற்குப் பிதாவாகியசர்வேசுரனை விசேஷிவொ
தாசை செய்யச்சொல்லி யவருக்குமிகவும்பிரி
பலியாகவு நற்கருணைப்பூசையனுதினம்வழங்
முத்தமமுறைமையாமே, நிறைந்ததடாகங்கொ

ண்டதண்ணீர் வயலிற்பாயத் திறந்ததைக வ
தற்கு விரோதமென்பாருண்டோ. உசசிப்பகல
னுந் தெளிந்தவிந்தநியாயங்களைக்கண்டுபிடியா
தவனே குருடனாகவுங் கண்டுபிடித்தாலுமதுகளை
ப்பொறுக்கமாட்டாமல்-மறுத்தவனே யொளி
கைத்த வௌவாலாகவும் வேண்டியதல்லோ.

பத்தாம்பேதகமறுத்தல்- முற்றிற்று.

## ௰க-ம். பேதகமறுத்தல்

இதிலே தாங்கம்பாடியா ரெழுதினதாவது
" சறுவேசுரன்வெளிப்படுத்தின பூருவத்துபதே
" சமெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: வே
" கற்பினைகள் பிறமாணத்தின்படியே செய்கி
" புண்ணியக் கிறிகைகளதிலே கூட்டாயிரா
" ல்- எசுக்கிறீஸ்துவின் பேரிலே யுண்டாயி
" க்கிற விசுவாசத்தினாலேமாத்திர நாங்கள்நீ
" விளங்கப்பண்ணப்பட்டுச் சறுவேசுரனுடை
" நடுத்தீர்வையிலே யெங்களுடையபாவங்களெ
" ல்லாநீங்கிப்போகுதென்றுபோதிவிக்கும்-ே
" ம்- ௯- அதி - உ௲ - உ அ-கவி -கலாச்சிய-உ
" அதி- ௬௬- கவி- அப்படியே இஸ்பரீத்துசா
" துவானவர்சகலவிசுவாசமுள்ளபேர்களுடை
" பிதாவாகிற அபிறுமென்கிறவர்பேரிலே சா
" சி குடுத்துச்சொல்லுகிறதாவது அபிறுமென்
" றவர்சறுவேசுரனுக்குவிசுவாசமாயிருந்தா
" அதுவவருக்குநீதியாகலபிச்சுதென்றுசொ
" னார். மோசேசு-௧- பொஸ்தகம்-௰௫-அதி-௬
" கவி. றோம்-௪- அதி-௯ - கவியிடத்திலே அ

போஸ்தலனென்கிற - அற். - பவுலென்கிறவர் தீர்க்கதரிசிகள்கூடச் சொல்லுகிறதேதென்றறிவிக்க அவருக்காக வெழுதப்பட்டிருக்கிறதென்கிறதல்லாமல் விசுவாசமானது - எங்களுக்கு நீதியாகப் பலிக்கும்படிக்கு எங்களுக்காகவுமெழுதப்பட்டதென்றுரேம் - ச - அதி - உ௩ - உச - கவியிலேசொல்லுகிறார்பின்னையுமிந்தவப்போஸ்தலன் தானேகலாச்சிய - நிரு - உ - அதி - உக - கவியிலேசொல்லுகிறதாவது: 'வேதத்திறுடையகிரியைகளினாலே நீதியுண்டானால்கிறீஸ்துவானவர் விருதாவிலேமரித்தாரென்று 'சொல்லுகிறார். இதுக்கெதுகையாக மனுஷருடையபுதுவுபதேசம் போதிவிக்கிறதாவது: ச 'றுவேசுரன் நடுச்சொல்லுகிறவாசனத்தின்மு 'ன்யாகமனுஷன் நீதிவிளங்கப்பண்ணுகிறதுக் 'கு விசுவாசமல்லாமல் கிறிகைகளுங்கூட வுத 'வியாயிருக்குமென்று புதுவுபதேசம் போ 'திவிக்குமென்றார்கள்.,,

இதிலே வேதகற்பனையின்படியே செய்யப்பட்ட புண்ணியகிரிகைகளில்லாமல் விசுவாசத்தால் - மாத்திரமேயாண்டவர்சமுகத்திலெங்கள்பாவங்கள் - நீங்கியவருக்கு நல்லவராவோமென்று தரங்கம்பாடியார் வேதப்படிப்பனையாகவெழுதினார்கள். ஆகிலுமிதிற்கெதிராக - அர்ச். - யாகப்பர் - உ - ம். அதி - உ௰ச - ம். வசனத்திலெழுதினதாவது விசுவாசத்தினால் - மாத்திரமல்ல நல்வினைகளினாலேயு மனுஷினுனவனுண்டவருக்குகந்தவனாவானென்றறியக்கடவீர்களென்கிறார். தரங்கம்பாடியார் சொன்னதற்கு நேரிட்டெதிர்த்தவேதவசனமிதுவேயல்லோ. பின்னையுமவர் தாமதிலே - ௰ச - ம்.வசனமாக வெழுதினதாவது

விசுவாசத்தைக் கொண்டிருக்கிறேனென்றொருவன்- நல்லொழுக்கமில்லாதவனாகிலவனுக்குவரும் பலனென்னவப்போதவனை விசுவாச மீடேற்றலாமோவென்றார். அப்படியே புண்ணியவொழுக்கமில்லாத விசுவாசமனுஷனை யீடேற்றமாட்டாதென்று- அர்ச்.- யாகப்பர்வேதவாக்கியமாகச் சொல்லியிருக்கத் தரங்கம்பாடியார்புண்ணிய நடக்கையில்லாத விசுவாசமேமாத்திரமனுஷனை யீடேற்றுமென்றார்கள். இதற்குமேலெதிர்படவேதத்துக் கொவ்வாத பொய்யுமுண்டோ. பின்னையும்- அர்ச்.- யாகப்பர்தாமே யத்தவதிகாரத்திருபதாம்வசனத்தெழுதினதாவது நல்லொழுக்கமில்லாத விசுவாசமுயிரில்லாத பிணமென்றார். இதற்கர்த்தமேதெனி லுயிரில்லாதபிணங்கிடந்துநாறியெவர்க்கு மருவருப்பாகுமொழிய வோரடிநடக்கவு மோர்வினைசெய்யவுமாட்டாததுபோலப்புண்ணியவொழுக்கத்தோடிசையாத விசுவாசமுமிஷ்டப்பிரசாதமாகிய வுயிரில்லாமற்கிடந்து பாவமாகிய துர்க்கந்தநாறியாண்டவருக்கருவருப்பாகுமொழிய வத்தால்- நல்லதொன்றுகவுமாட்டாதென்றதற்கர்த்தமாகும். தரங்கம்பாடியாரோவெனில் வேதகற்பனை யொழுக்கமில்லாத விசுவாசத்தினாலாண்டவருக்குநாம்- நல்லவராகி யெல்லா நன்மை யடைவோமென்றார்கள். இதுவும்வேதத்துக்கு நேரொதிர்பட்டபொய்யல்லோ. அர்ச்.-யாகப்பரிப்படியெழுதினாரோவில்லையோவென்று சந்தேகப்படவுந் தேவையில்லை. தரங்கம்பாடியார்தாமே தமிழாகத்திருப்பினசுவிசேஷப்புஸ்தகத்தில்-௬௱௨௰௩-ம்.ஏட்டில்-௰௪-ம்.வசனமு மறுவேட்டிலே- ௨௰-ம்.வசனமும்-௨௬-ம்.வசனமுங் கொடியமொழியாலே

பழுதப்பட்டதாகக் காணப்படுமே. ஆகிலும்-
ர்ச்.- சின்னப்பருரோமாபுரியாருக் கெழுதி
-ஙு-ம். அதி- உ அ-ம்.வசனத்திற் சொன்னத
கொப்ப நாங்களுஞ் சொன்னோமென்று தார
கம்பாடியா ரெழுதினர்கள். இதுவுமிவர்கள்
சான்ன மற்றொருபொய்யாமே.அதிலே யவர்
ள் சொன்னதன்மையால் வேதகற்பனையின்ப
டியே செய்யப்படும் புண்ணியக் கிரியைகளின்
ி விசுவாசத்தினல்-மாத்திர மிஷ்டப்பிரசாத
மங் கரையேற்றமுமாகுமென்று- அர்ச்.- சின்ன
பர் சொன்னரோ- இல்லையே. பலமுறைகளை
கற்பித்து மோயீசனைக்கொண்டு சர்வேசுரன்-
ந்தபழைய வேதத்துக்கும் விசுவாசத்தினல்வ
ங்கும். சேசுநாதர் தந்த- அருள்வேதத்துக்கு
ள்ளவேற்றுமை யந்தவதிகாரத்தில்- அர்ச்.-சி
ரனப்பர் காட்டியதிலு மிதுநல்லதென்று சொ
னபின்பு சேசுநாதர்வந்தபிறகு பழையவேத
திற் கற்பிக்கப்பட்டிருந்தமுறைகளின லிப்போ
நமக்கேேற்ற மாகாமற் சேசுநாதர் தந்த
விசுவாசத்தினல் வழங்கின- அருள்வேதமு
றகளின லிஷ்டப்பிரசாத மடைந்து சுவா
க்கு நல்லவ ராவோமென்றார். இதனலல்
லா வவர்தாமறுவசனத்திற் சர்வேசுரன்யூ
தருக்குமாத்திரம்- ஆண்டவரோ மற்றச்சனங்க
ளுக்கு மாண்டவரல்லவோ- அவர்களுக்கு முந்தி
ஆண்டவ ரவர்தாமேயென்றார். இதற்கர்த்த
மதெனி லிப்போது- யூதவேதத்திலுட்படா
மலு மந்தவேதமுறைகளை யநுசரியாமலுஞ்சே
சுநாதர் காட்டினவிசுவாச வழியால்- நட
த்தோமாகிற் சர்வேசுரன்யூதரை யிரட்சித்ததி
லையு மதிகமாய்நம்மை யாண்டிரட்சித்துக்கரை

யேற்றுவாரென்பதர்த்தமகும். அக்காலத்திற் சேசுநாதர்வேதத் லுட்பட்டயூதர்களக்கியான த்தினின்றுவந்தஞானஸ்நானம்பெற்றவர்களுந் தங்களைப்போலே மோயீசன்வேதத்திலுட்பட்டு விருத்தர்சேதனஞ்செய்து பழையமுறைகளெல் லா மநுசரிக்கவேண்டுமென்று சாதித்தார்கள். அர்ச்.-சின்னப்பரோவெனிலந்தமுறைகளையநு சரிக்கத் தேவையில்லையென் றெப்பிக்கப்பலவிட த்திற் பிரயாசப்பட்டார். அப்படியிதிலேமோயீ சன்வேதத்திற்கற்பித்திருந்த விருத்தச்சேதன முதற் பலமுறைகளை யிப்போதநுசரிக்கத்தே வையில்லையென் றெழுதினுரொழியப் பத்துவே தகற்பனையின்படியே செய்யப்படும்புண்ணியங் களிப்போது கரையேற வேண்டியதல்லவென் றெழுதவுநினைக்கவுமில்லையே. இதிலே-அர்ச்.-சி ன்னப்பர் மறைவாகச்சொன்னதற்கர்த்தஞ்சொ ன்றற்போலத்தாமேவெளியாகக்கொரிந்தியாரு க்கு முதல்நிருபத்து- ௭-ம். அதிகாரம்- ௰௯-ம். வசனத் தெழுதினதாவது விருத்தச்சேதனம்வீ ண்- தானே. வேதகற்பனையநுசரித்தாலே கரு மமென்றார். அப்படியேகலாசியாருக் கெழுதின விரண்டாமதிகாரத்து- ௨௧-ம். வசனத்தில்விரு த்தச்சேதனமுதலியசடங்குகளைக்குறித்தவர்தா மேசொன்னதாவது-அந்தப்பழையவேதமுறை களால்- தமக்கிஷ்டப்பிரசாத மாகுமென்றால்வீ ணுப்க்கிறீஸ்துமரணத்தையடைந்ததாகச்சொ ல்லவேண்டுமென்றார். இவையெல்லா மாராய்ந் துபார்க்கிற்பழையவேதத்தில்வழங்கினவிருத்த ச்சேதனம்பூசைகள்ஸ்நானமுறைகள்- முதலிய சடங்குகளிப்போது வேண்டியதுமல்ல-இப்போ ததுகளால்- நமக்கொருபலன்வருவதுமல்லவெ

ன்று-அர்ச் -சிஷ்டப்பர்படிப்பித்தாரொழியப்
புண்ணியங்களைச் செய்யாமற் செத்தபிணமாய்
க்கிடக்கும்விசுவாசத்தார்களையேயவோமென்
று பதிதர் அபர்த்தமாகச் சொல்லுந் தப்பறைக்
கொப்ப வவரெழுதினதாகச் சொல்லவுங்கருதவு
ங் கூடாதல்லோ. இதற்குவேதவிளக்கத்தில்-
௭௯-ம்.பிரிவிலேயும் - ௭௰௪-ம். பிரிவிலேயுஞ்
சொன்னதைக்காணக்கடவீர்கள்.

பதினோராம்பேதகமறுத்தல்-முற்றிற்று.

# ௰௨-ம். பேதகமறுத்தல்.

இதிலே" சறுவேசுரன் வெளிப்படுத்தினபூரு
"வத்தூபதேசமெங்களுக்குப் போதிவிக்கிறது:
" விசுவாசமானது சந்தேகத்தோடே கூடின
"காரியமாயிருக்கவுமில்லை யிருக்கத்தேவையுமி
"ல்லையானாலோ கிறீஸ்துவினுடைய- இரத்த
" த்தினாலே யிப்போ தானே யுண்டாயிருக்கி
" றதுவுமா யினிமே லின்னம் வரப்போறது
" வுமாயிருக்கிற- இரட்சித்துதலைக் கொண்
" டு ஐயமில்லாமற் கெட்டியான நிற்செயம்
" விசுவாசத்துக்குண்டாயிருக்கிற தென்கிறது
" ந்தவிர வுண்டாயிருக்கவேணுமென்றும்போ
" திவிக்கும்,, என்று தரங்கம்பாடியார்சொல்
லிப் பலவையும்வைத்தபின் னெழுதினதாவது.
" இதுக்கெதுகையாகமனுஷீருடையபுதுவுபதே
" சம் போதிவிக்கிறதாவது: அவனவன் - தன் - த
" ன்பேரிலே யெடுத்துப்போட்டுக்கொள்ளுகிற
" நீதிவிளங்கப்பண்ணுதல்- மெத்தவய்யமுமா

" ய்ச்சந்தேகமுமா யிருக்குதென்று மவனவ
" னுடைய வீடேற்றமிதுஞ் சந்தேகமாயிருக்
" குதென்றும்போதிவிக்கும். இந்தப்பிறகாரமா
" கவெல்லாரு மவனவன் தன்னுடையசொந்த
" மானவீடேற்றத்தின்பேரிலே யெப்போதுஞ்
" சந்தேகப்படவேண்டியதா யிருக்குது. இது
" வல்லாமற் சறுவேசுரனுடைய தயவின்பேரி
" லேயும் வரப்பிறசாதத்தின்பேரிலேயு மொத்
" தாசையின் பேரிலேயுஞ் சந்தேகப்படாமலிரு
" க்கிறதென்கிறது மகாபெரியவாங்காரப் பெரு
" மையாயிருக்குதென்றும்- நீதிவிளங்கப்பண்
" ணுகிறவிசுவாசம் புண்ணியஞ் சினேகிதந்த
" ர்மக்கிறிகை யில்லாமலிருக்கலாமென்றுமநேக
" ம்விசை யிப்படியிருக்குமென்று மனுஷருடை
" ய புதுவுபதேசம்போதிவிக்கும் ,,என்றார்கள்.
முந்தித் தரங்கம்பாடியாரிதிலேயாண்டவரரு
ளிச்செய்தசத்தியங்களையனுசரிக்கும்விசுவாசமு
மவர்தாந்தந்தவாக்குத்தத்தங்களை நம்புநம்பிக்
கையுமொன்றுபடக்கலந்தார்கள். நாமோவென்
னில் வேறுபடவிரண்டையும் பிரித்துரோமான்
றிருச்சபையிதிலே படிப்பிக்குஞ் சத்தியங்களைச்
சொல்லிக்காட்டுவோம். அந்தச் சத்தியங்களைக்
காட்டின தன்மையாலிதிலே தரங்கம்பாடியா
ரெழுதின தப்பறைகளும்வெளியாமே. ஆகையா
ற்சர்வேசுர னளவில்லா தஞான முடையாராகை
யி லெல்லாத்தையுமுள்ளபடியே யறிவாரென்று
மவரளவில்லாத நீதியுடையராகையி லெல்லாத்
தையு மறிந்தபடியே யறிவிப்பாரென்றுங்குன்
றுதசத்தியமாகக்கொள்ள விவ்விரண்டசையாத
வச்சிரத்தூண்கள்- மேலேவிசுவாசமே தளரா
துநின்றுசர்வேசுரனறிவித்த தெல்லாஞ்சற்றுஞ்

ந்தேகப்படாமலுஞ் சற்றுந்தத்தளியாமலு மு
கொள்ளக்கடவோம். எவ்வளவாகிலுஞ்சந்தே
த்துக்கிடங்கொடுத்தோமாகிலொன்றிலாண்ட
ர்ஞானத்துக்குவிரோதமா யவரெல்லாத்தை
மறிந்தவரல்லவென்றும்- ஒன்றில்-நீதிக்குவி
ராதமாயெல்லாத்தையுமறிந்தபடி யறிவித்த
ரல்லவென்றுஞ்சந்தேகமாமே. ஆகையாலெ
காலத்துமெப்படியும்- ஆண்டவரறிவித்த சத்
யங்களையநுசரிக்கும்விசுவாசந்தளராமனிற்க
வண்டியது நிச்சயந்தானே. நம்பிக்கையோ
வனில்- மோட்சபாக்கியமுதற்கொண்டெல்லா
ன்மை மனுஷிருக்குத்தருவோமென்று சர்வே
ரன் வாக்குத்தத்தங்களைத் தந்தாரென்று
துகளைச்செலுத்த வவரளவில்லாதவல்லமையு
ளவில்லாததயையு முடையவரென்றுஞ் சற்
மஞ்சாமல் - நிச்சயிக்கும் விசுவாசத்தின்
மேலூன்றிநிற்கும்புண்ணியமே தேவநம்பி
கைதானே. ஆண்டவர் வல்லமையாகிலுந்
யையாகிலு நம்மைக்கரையேற்றப் போதும்
பாதாதோவென்று சந்தேகப்பட்டால்விசுவா
மு நம்பிக்கையுங்கெட்டுத் தேவதூஷணமாக
க்கிரமமானபாவமாமே. ஆகிலும்- அர்ச். -அ
நஸ்தீனெழுதினபடியே நம்மையல்லாமற்றுமா
நம்மைப்படைத்தசுவாமிநம்மையல்லாமல்-ந
மைக்கரையேற்றார். அதேதெனிலாண்டவர்பு
த்துணையுதவிதேடாமல்- நம்மைப்படைத்தா
ராயினு நம்மைக்கரையேற்றத்தாமிட்டகற்பனை
ின்படி நாஞ்செய்யத்தகும்புண்ணியங்களை து
ணயாக வேண்டுமென்றுதிருவுளமானார். அதே
படியென்றாற் சர்வேசுரன்- நமக்குமோட்சந்
தருவோமென்று முற்றுவசனமாகச் சொல்லாம

லோருடன்படிக்கைக்கூட்டிமனுஷிரறிவடைந்
பின்புவேதகற்பனையின்படியே நடந்தாலேய
ர்களுக்குமோட்சந்தைத்தருவோமென்றுற்பே
ல- அர்ச்.- மத்தேயுஸ்சுவிசேஷத்தின்-௰கூ-
அதி-௰எ-ம்.வசனமாக நித்தியசீவியமாகிறமோ
ட்சத்திற் புகவேண்டுமாகில் வேதகற்பனைமீறா
த் காப்பாயாகவென்றார். மீளவுமங்கே தானே
உ௰ச-ம். அதி-௰கூ-ம்.வசனத்தில்-மரணபரிய
தம்புண்ணியத்திலேநிலைகொண்டவனேகரையே
றுவானென்று ராகையாலாண்டவர் நமக்குவ
ர்த்தைப்பாடுதந்தபடிக் கரையேறவேண்டுமா
லவருதவியினலெம்மிடத்திலேகற்பனையொழுக்
மூமரணபரியந்த நிலைமையும்வேண்டியதல்லே
தாமோவென்னி லிப்போது கற்பனைக்கேற்கா
வொருபாவமின் றிச்சுவாமிக்குப்பிரியமாகநடக்
றோமோவவருக்குவிரோதமாகநடக்கிறோமோ
ச்சயமாகவறியமாட்டோமே. அப்படியேசலே
மோ னெழுதினவிரண்டாமாகமத்தொன்பதா
திகாரமுதல்வசனமாகவாண்டவர்சந்நிதியி ல
ணவன்சினேகத்துக்கோபனைக்கோதான்பிராப்
யாயிருப்பதறிவாரில்லையென றெழுதியிருக்கும
லோ. மீளவுமிப்போ தாண்டவருக்குகந்தவ
னேனென்று ந்தாலு மினிமரணபரியந்தம் வ
வாமற் புண்ணியநெறியிலே நிற்பேனென்றெ
வருமறியார். இன்று நெறியினிற்கிறேனென்
ருக்கிறவன்விழாதபடிக்கெச்சரிக்கையாயிருக்க
கடவானென்று- அர்ச்.- சின்னப்பர் கொரிந்
யாருக்குமுதல்நிருபத்தின்-௰-ம். அதி-௰உ-ம்,வ
சனத்திலெழுதினார். ஆகையாலாண்டவர் தமது
யைப்பற்றி நம்மைமக்கரையேற்றச்சித்தமாயிருக்
கிறொன்றுமவர்வல்லமையைப்பற்றியதற்குவே

ாய்ய வுதவியைச்செய்வாரென்றுஞ் சற்றுஞ்
ந்தேகப் படாமல் விசுவசித்து த்தத்தளியாமல்-
ம்பிறமதற்குத் துணையாய்வேண்டிய நம்மு
டயவொழுக்கமு நிலைமையு நம்மாற்பழுதறவா
மோவில்லையோ வென்று நிச்சயமில்லாமை
ால்-நாமெப்போதுந்தாழ்ச்சியுள்ளபயத்தோ
ருக்கக்கடவோம்- அப்படியே- அர்ச்.- சின்ன
பர் பிலிப்பேஞ்சியருக் கெழுதின- உ-ம். அதி-
உ-ம்.வசனத்திற் பயநடுக்கத்தோடேகளையே
ப்பிரயாசப் படுவீர்களென்றார். இவையெல்
ாம் வேதத்திலொன்றி யுரோமான்றிருச்சபை
திலே படிப்பிக்குஞ்சத்தியங்களென்றறியக்கட
ர்கள். ஆகையால்- தானேகளையேறுவேனெ
று நிச்சயமாக விசுவசிக்கிறேனென்பதுதேவ
ிசுவாசமல்ல. பதிதர்பசாசினாலேயக்கப்பட்டுக்
காண்டவாங்காரந்தானே. மெய்யானநம்பிக்
கைக் கஸ்திவாரமாய்நிற்குந் தேவவிசுவாசமே
தனிலெவர்க்குந் தப்பாத வாண்டவருதவியி
ல்- மரணபரியந்தம் புண்ணியத்திலேநடந்த
ர்களுக்கு மோட்சபாக்கியத்தைக் கொடுப்போ
மன் றவர்திருவுளம் பற்றினாரென்றுமப்படியே
காடுப்பாரென்றுந் திட்டமாய் விசுவசிக்கிறே
னன்பது சகலநன்மைவிளைவிக்கும் விசுவாசமி
வே. மெய்யானநம்பிக்கைக் கஸ்திவாரமிது
வ. ஆகையால்- நம்முடைய வீடேற்றத்திலைய
ன்றி திச்சயமாகநிற்கவேண்டுமென்பது தா
கம்பாடியாரிதிலே வேதத்துக்கெதிர்படச்சொ
ானபொய்தானே. மீளவுமவனவன்களையேற்ற
திட்டமில்லாத கருமமென்று படிப்பிக்கிறதும
ுஷிராற் கட்டப்பட்ட புதுவுபதேசமென்பது
பாய்தானே. பின்னையுநாங்களையேறச்சர்வே

சுர னுதவிசெய்வாரோ வில்லையோவென்றெந் நேரமுஞ் சந்தேகப்படவேண்டுமென்று நாம்ப டிப்பித்தோமென்பது பொய்தானே. கடைசியி லே நம்மையாண்டவருக்குகந்தவர்களாக்கிநீதி விளங்கப்பண்ணு மெய்யானவிசுவாசம்புண்ணி யநடக்கையில்லாதிருக்குமென்று நாம்படிப்பித் தோமென்பது பொய்தானே. இந்நாலுபொய்யு மிதிலேமுன் சொன்னதையாராய்ந்து பார்க்கி லெவர்க்குந் தெளிவாய்த்தோன்றுமல்லோ.

பனிரண்டாம்பேதகமறுத்தல் - முற்றிற்று.

## ൰௩-ம். பேதகமறுத்தல்.

தரங்கம்பாடியாரிதிலே யெழுதினதாவது:
" சறுவேசுரன் வெளிப்படுத்தின பூருவத்துப
" தேசமெங்களுக்குப்போதிவிக்கிறதாவது: எங்
" களுடைய நல்லகிறிகைகளெப்போதுந் திருத்
" தமில்லாததுமாய்பாவங்களினாலேகறைபட்ட
" துவுமாயிருக்கிறபடியினாலே சறுவேசுரனுக்
" குமுன்பாக வியாதொன்றுக்குச் சுதந்தரமு
" மாயிருக்க வில்லையென்று மதுகளுக்குச்செல்
" லுஞ் சுதந்தரமுமா யிருக்கக்கூடாதென்றும்
" போதிவிக்குமிந்தப்படிக்குத்தீர்க்கத்தெரிசியா
" கிறஇசையசென்கிறவர் - ௬௰௪-ம். அதி-௬-ம்.
" கவியிலே சொல்லுகிறதாவது: நாங்களெல்லா
" ருமசுத்தமுள்ளவனைப்போலே யிருக்கிறோமெ
" ன்கிறதுந்தவிரவெங்களுடைய நீதிகளெல்லா
" ங் கறைபட்டவஸ்திரங்களைப்போலே யிருக்கி
" றதென்றார். எங்களுடையநாதர் கிறீஸ்துவா
" னவரும் லூக்கா- சுவி- ௰எ- அதி- ௰- கவியி

லேதிருவிளம்பத்துகிறார். இதுக்கெதுகையாக மனுஷருடைய புதுவுபதேசம் போதிவிக்கிற தாவது: எங்களுடைய நல்லகிறிகைகளினாலே சறுவேசுரனுடைய கிருபையையு நித்தியசிவனையுந்தொட்டு நமக்குச்செல்லுஞ் சுதந்தரமு முண்டாயிருக்கலாமென்றுமெய்யாகவேயுண்டாயிருக்குதென்று மிதுவல்லாமல்- நாங்கள் தனக்குப்பொக்கிமேலதிகமாயிருக்கிறதுவுமாய் மிஞ்சின மீதாரியுமாயிருக்கிறகிறிகைகளைப் பண்ணலாமென்றும் போதிவிக்கும். இதுக் கற்தமேதென்றால்- சறுவேசுரன்- தம்முடையபரிசுத்தமான வேதப்பிறமாணத்திலேயெங்களுக்குக்கற்பிச்சதைப் பார்க்கநல்லதுவுமாய துகளைச்செய்கிறவருடைய கடனிலேயு மதிலிரட்டியுமாயிருக்கிற கிறிகைகள்தானே யிதுவல்லாமலப்படிக்கொத்த கிறிகைகள்பிறத்தியாளையுமிரட்சிக்கிறதற் குதவியுமாய்ப் பெலனுள்ளதுவுமாயிருக்குமென்று மனுஷருடையபுதுவுபதேசம் போதிவிக்குமென்றார்கள்.,,

இதிலே நாஞ்செய்யுங்கருமமெல்லாமெப்போம் பாவமுள்ளதாமென்று தரங்கம்பாடியார் சொன்னது வேதத்துக்குவிரோதமானபொய்யாம். அர்ச். - இராயப்ப ரிரண்டாநிருபத்தின்முதிகாரம்-௰-ம்.வசனத்தில்- நல்வினைகளைச் செய்ச்சொன்னபின்ன ரதுகளைச்செய்தா லொருக்காலும் பாவஞ்செய்யா திருப்பீர்களென்றார். அர். - அருளப்பர்முதல்-நிருபத்தின்-௩-ம். ௯-ம். வசனமாகச்சேசுநாதரைச் சேர்ந்திருக்கிறவன்பாவஞ்செய்யானென்றார். இதோதரங்கம்பாடியார்சொன்னபொய்யை மறுக்கவேதசத்தியமாகப்பாவமில்லாதகிரியைகளை யாண்டவரு

தவியினால்-மனுஷர்செய்யலாமென்று வேதத்தி
லெழுதப்பட்டதாமே.மீளவுநாஞ்செய்யுங்கரும
மெல்லாம்- ஆண்டவர்சந்நிதியிற்பலனொன்றில்
லாததாயிருக்குமென்று தரங்கம்பாடியார்மெ
த்தமாய்ப் பொதுவசனமாகச்சொன்னதுவேத
த்துக் கெதிர்பட்டபொய்தானே. அதெப்படியெ
ன்றால்-அர்ச்.-மத்தேயுஸ்-சுவிசேஷத்து-௬-ம்
அதி-௰அ-ம்.வசனத்திலொருசந்தியாயிருந்தத
ற்குப் பிதாவாகியசர்வேசுரன்பலனைக் கொடுப்
பாரொன்றுசேசுநாதர்திருவுளம்பற்றினாரல்லோ
அவனவன் செய்தவிருவினைக் களாகவாண்ட
வர்சம்பாவனைகொடுப்பாரொன்றுரோமாபுரியா
ருக்கு-உ-ம்.அதி-௬-ம்.வசனத்தில்- அர்ச். -
ன்னப்பருங்கண்டகாட்சியாகமத்தின்-௰உ-ம்
அதி- ௰உ-ம். வசனத்தில்- அர்ச். - அருளப்ப
மெழுதிவைத்தார்கள். அப்படியே பொருத்தி
வையிலிராசாவாகிய சேசுநாதர் நல்லவர்களுக்
குவைத்திருக்கு மோட்சவிராச்சியத்திலென்றெ
ன்றைக்கும்வாழ வவர்களையழைக்கும்போது தா
மேயவனவன் றந்தபிச்சை செய்ததருமங்களைச்
சொல்லிக்காட்டி யதுகளினிமித்தமாக மோட்
சவிராச்சியத்தைக் கைக்கொள்ள வாருங்களெ
ன்றழைப்பாரொன்று- அர்ச். - மத்தேயுஸ்-சுவி
சேஷத்தின்- உ௰ரு-ம். அதி- ௩௰௪-ம். வசனத்
துவக்கிச் சேசுநாதர் திருவுளம்பற்றினதாக வெ
ழுதினதைக் கண்டோம். இவையுமித்தொகைப்
பட்ட மட்டில்லாத வசனங்களும்வேதத்திலெழு
தியிருக்க வேதவாக்கியங்களை மறுத்தாலொழிய
நாஞ்செய்யுங்கருமமெல்லாம் பலனொன்றில்லா
ததென்றுபொதுவசனமாகச் சொல்லவுங்கருத
வுங்கூடாதே. உரோமான்றிருச்சபையிலேட

டப்பிக்கும் வேதசத்தியமேதெனில்- நம்முடை
பசுபாவப் பலத்தைக்கொண்டு மோட்சத்துக்
கேற்ற நல்லதொன்றுஞ்செய்யமாட்டோமென்
றும்- ஆண்டவருதவியைக்கொண்டுதருமங்களை
நாமேசெய்தாலுமதுகள்- தஞ்சுபாவப்பலத்தினு
ல்- மோட்சமடையப் பலனொன்றில்லாததென்
றுஞ்சொல்லி யிந்தவர்த்தத்தோடு இசையவெஸ்
ர்பவரும்- அர்ச். -லூக்காவென்பவருந் தரங்க
ம்பாடியார்குறித்தவிடத்திலெழுதினதைக் கொ
ள்ளவேண்டியதென்றும் படிப்பிக்குமாகிலும் -
ஆண்டவருதவியினுற் சுகிர்தபுண்ணியங்களை நா
மே செய்யலாமென்றுமதுகள் சேசுநாதர்பாடுபட்
டடைந்தபலன்களாற் பலனுள்ளதுகளாகுமெ
ன்று முரோமான் றிருச்சபைபடிப்பிக்குஞ் சத்
தியமாமே. ஆகையால்- நாஞ்செய்த நல்வினை
களாலிஷ்டப்பிரசாதத்துக்குமோட்சபாக்கியத்
துக்கும் பேறுபெறுவோமென்று நாம்படிப்பித்
ததாகத்தரங்கம்பாடியாரிதிலேசொன்னபோது
நாஞ்செய்த நல்வினைக்குள்ளசுபாவப்பலத்தை
ப்பற்றி யதைச்சொன்னோமென்றார்களாகில்-நா
நினையாதவபத்த பிதாகையிலிதுவுமவர்கள்சொ
ன்னபொய்தானே. அல்லதுசுவாமி யுதவியாற்
செய்தநல்வினை சேசுநாதரிரத்தத்தின் பலத்தி
னுலந்தப்பேறுபெற்றதாகச் சொன்னோமென்று
ர்களாகி லதுமெய்தானே. ஆகிலுமிதுவேதத்து
க்கெதிராக மனுஷராற்கட்டப்பட்ட போதகமெ
ன் றவர்களெழுதினது முன்னெடுத்துக்காட்டின
வேதவுதாரணங்களைப் பார்க்கிற் பொய்யென்று
ந் தான்றுமல்லோ.

கடைசியி லிந்தப்பிரிவின்முடிவிலே தரங்கம்
பாடியார் கொடுத்தமிழாக வெழுதினதாவது:

" நாங்கள் தனக்குப்பொக்கி மேலதிகமாயிருக்
" கிறதுவுமாய் மிஞ்சின மீதாரியுமாயிருக்கிற கி
" ரிகைகளைப் பண்ணலாமென்று போதிவிக்கு
" ம். இதுக்கர்த்தமேதென்றால்- சறுவேசுரன்
" தம்முடைய பரிசுத்தமானவேதப்பிரமாணத்
" திலேயெங்களுக்குக் கற்பிச்சதைப்பார்க்க நல்
" லதுவுமாயதுகளைச் செய்கிறவருடைய கட
" னிலையுமதிபிரட்டியுமாயிருக்கிற கிரிகைகள்
" தானே இதுவல்லாம லிப்படிக்கொத்த கிரி
" கைகள் பிறத்தியாளையு மிரட்சிக்கிறதற்குதவி
" யுமாய் பெலனுள்ளதுவுமாயிருக்கு மென்று
" மனுஷிருடைய புதுவுபதேசம் போதிவிக்கு
" ம்,, என்றிங்கிலேயெழுதினார்கள். இதுவே தா
ங்கம்பாடிபாலொழுதின செந்தமிழாமே. ஆகிலு
மிந்தக் கீழ்மொழிக்கொடியவசனங்களையு மதற்
கவர்கள் வைத்தவர்த்தத்தையுந் தொல்காப்பி
யனுருங் கண்டுபிடிப்பாரோ வென்ன. ஆனாலவ
ர்கள் குளறிச்சொன்னதிலே நினைத்ததை வெ
ளிப்பொருளாகத்தருவோம். அதாவதுவேதத்தி
ற்சிலதுகளை யெவர்க்குஞ் செய்யக்கடனாகச்சர்
வேசுரன்கற்பித்த தொழியச்சிலதுகளை நல்லதெ
ன்று காட்டினாலு மொருவற்குங் கட்டளையாகக்
கற்பித்தவரல்ல. அப்படியே- அர்ச். - மத்தே
யுஸ்- சுவிசேஷத்தின்- ௰௯-ம். அதி-௰எ-ம். வ
சனமாகப் பத்துக்கற்பனைமீறாமல்- நடப்பது
ரையேறச் செய்யத்தகுங்கருமமென்றபின்
சேசுநாதர்தாமே- உ௰க-ம். வசனமாகவிதிலே
யுமுத்தமமேனையாய் நடக்கவேண்டுமாகி லுன
க்குள்ளதெல்லாம்விற்றிரப்போர்க் கீவாயாக
வென்றார். இதுவேயுத்தமமென்றாலுங் கடனாகச்
செய்யக்கற்பித்தவரல்லவே. ஆகையாலெல்லாத்

தையும்வில்லாமலுமிரப்போர்க்கீயாமலும்பத்து
க்கற்பனை மீறாமல்-நடந்தோமாகிற்கரையேறலா
மென்போமாகிலுஞ் சேசுநாதர்காட்டின வுத்த
மமேரையைப் பின்செல்லவெல்லாத்தையும்விற்
றுப்பிச்சையாக வருத்தாற்கரை யேறச்செய்ய
வேண்டினதின்மேலுமுத்தமமேரையாய்நடந்த
தென்றுசொல்வோம். அப்படியேதன்றாரமல்லா
த பரதாரத்தைத் தீண்டாதிருப்பதற்குக்கற்ப
னையுண்டாமொழிய வொருதாரத்தையுங் கொ
ள்ளாமற் கன்னிகழியாதிருப்பது கற்பிக்கப்பட்ட
தல்லவென்று- அர்ச். - சின்னப்பர் கொரிந்தி
யாருக்கு முதல்-திருபத்தில் - எ - ம். அதி -
-ரு-ம்.வசனத்திலெழுதினாராகிலு மதிலேதா
னை- ௩௰அ- வசனமாக விவாகஞ்செய்வதி
லேயுங் கன்னியழியாதிருப்பதுத்தம மென்றார்.
ஆகையால் விரத்தனாயிருப்பவன் கற்பித்ததின்
மேலு முத்தமமேரையாய்நடப்பவனென்றுவே
தநியாயங்களின் படியே சொல்லக்கடவோம்.
இவையும் பலவுமிப்படியாகக்கொள்ள நாங்கரை
யேறக் கடனைச்செய்யவேண்டியதின் மேலும
தற்கு வேதத்திற் கற்பித்ததின்மேலு முத்தமந
ல்வினை யாண்டவருதவியாற் செய்யலாமென்
று வேதத்தில்வழங்கின சத்தியமாமே.ஆகையா
ல் வேதத்துக்கெதிராக மனுஷிருபதேசமிதுவெ
ன்று தரங்கம்பாடியார் சொன்னதுவேதத்துக்
கெதிர்பட்ட பொய்யாமே.

பின்னையுமிப்படிப்பட்ட கிரிகைகள்புறத்தியா
ரையு மிரட்சிக்கவுதவியும் பலனுமுள்ளதென்று
நாஞ்சொன்னதாக வவர்களெழுதினது முழுத்
தப்பறைதானே. அதேதெனனிலுரோமான் திருச்
சபைப் படிப்பினையாக நமக்குள்ளொருவனாகிலு

ஞ் சேசுநாதர் புண்ணியங்களொழிய மற்றொரு வன்செய்த நல்வினை புறத்தியாரை யிரட்சிக்க வல்லதென் றெழுதினதை யொப்பிக்க மாட்டார்கள். நாஞ்சொல்லுந் தன்மையேதெனிலாண் டவர்க்குகந்தவனாயிருந் தொருவன் பழுதறச் செய்யு நல்வினையால்- மூன்றுபலன்களுண்டாம் மோட்சமடையச் சுதந்தரப்பலனும்- ஆண் டவர்சந்நிதியில்வரங்களையடைய மன்றாட்டுப்ப லனும் பாவத்தால்வந்த வபராதக்கடனைத்தீர்க் கவுத்தரிப்புப்பலனு மிம்மூன்று நல்வினைகளால் வரு நன்மைகளாமே. இதிலேமுதற்பலன்- நல் வினைசெய்தவனுக்கொழியப் பிறர்க்குப் போ கவறியாது. மற்றிரண்டும் பிறர்க்குமுதவியாக வாண்டவர் சித்தத்தின்படியே செல்லக்கொ டுக்கலாமென்று நாமேபடிப்பிக்கிறோம். அப்ப டியே மக்கபே- உ-ம், ஆகமம்- ௰உ- ம். அதி- சயகூ-ம். வசனம் யூதமஸென்பவர் செத்தவர்களு க்கு வேண்டிமன்றாடவு மவர்கள்பாவக்கடனைத் தீர்க்கவும் வெகுதிரவியங்களைத் தந்து பூசைகளை நடத்தினதினால்- தோத்திரஞ்சொல்லி யிருக்கிற தைக்கண்டோம். ஆகையால்-நாமிதிலேபடிப்பி க்குஞ்சத்தியம்வேதத்திலொன்றினதொழியவேத த்துக்கெதிராக மனுஷருண்டுபண்ணினபுதுவுப தேசமென்பது தரங்கம்பாடியா ரிதிலேசொன் ன வேறாம்பொய்யாமே.

பதின்மூன்றும் பேதகமறுத்தல் முற்றிற்று.

## ௰௪-ம். பேதகமறுத்தல்.

" இதிலேசறுவேசுரன் வெளிப்படுத்தின பு
" வத்துபதேசமெங்களுக்குப் போதிவிக்கிறத

வது: எங்களுடைய நாதரேசுக்கிறீஸ்துவொ ருத்தர்மாத்திரந் தம்மாலேசிநேகிக்கப்பட்ட பிறியமான- அற்- திருச்சபையினுடையதலை யுமாய்மணவாளனுமாயிருக்கிறாரென்றுமவ ர்தம்முடைய இஸ்பரீத்துவைக்கொண்டுந் தி ருவசனத்தைக் கொண்டுந்திருச்சபையையா ண்டுக்கொண்டு போதிவிக்கிறாரென்றுந் திரு ச்சபைதனதுண்மையுள்ள நிதானமானமண வாளனுமாய்த் தலையுமாயிடையருமாயிருக்கி ற- ஏசுக்கிறீஸ்துவினுடைய சத்தத்தைக்கே ட்டுக்கீட் படிஞ்சு நடக்க வேணுமென்றும் போதிவிக்கும்,, என்று தரங்கம்பாடியார் சால்லிச்சேசுநாதர் கற்பித்ததைக் கேட்கக் —வோமென்றெப்பித்தபின்ன ரெழுதினதா து: " இதுக்கெதுகையாக மனுஷருடைய புதுவுபதேசம் போதிவிக்கிறதாவது: கிறீஸ் துவல்லாமல்- பாப்புவென்கிறவருந் திருச் சபையினுடைய மணவாளனுமாய்த் தலையு மாய்க் கிறீஸ்துவுக்கு வதில்க்காறருமாய் விக் காரியிருப்பிடத்திலேபூலோகத்திலிருக்கிறாரெ ன்றும் பாப்புபரதீசனுடையவு நரகத்தினு டையவுந் திறவுகோல்களைக் கொண்டிருக்கிறா ரென்றுமிதைக்கொண்டு- இரட்சிக்கிறதற்கு ஞ்சாபிக்கிறதற்கும் வல்லமையவருக்குண்டா யிருக்குதென்று மிந்தமுகாந்திரத்துக் காக வெல்லாரு மவருடைய கட்டளைகேட்டுக் கீட் படிஞ்சு நடக்கவேணுமென்று மெவனாகிலுமவ ருடைய கட்டளைக்கெதிரியாகவு மாமென்கா மற் கீட்படிஞ்சிராவிட்டா லவன்பதிதனென் று மனுஷருடைய புதுவுபதேசம்போதிவி கும்,, என்றார்கள்.

திருச்சபைத் தலைவராய்ச் சேசுநாதர் நிற்பது நிச்சயந்தானே. சேசுநாதரல்லாதேயவர் ஸ்தானத்தில் காணப்பட்ட திருச்சபைக்குக் காணப்படுந்தலைவராக- அர்ச். -இராயப்பரைத் தொட்டு மற்ற- அர்ச். -பாப்புகள் ஸ்தாபிக்கப்பட்டார்களென்றுபதற்கு நியாயமுமுறையு மெப்படிக்கொத்ததென்னும் வேதவிளக்கத்தின் - ௬௰௯-ம் பிரிவிலேயும்-எ௰-ம். பிரிவிலேயும்விரிவாய்ச் சொல்லிக் காட்டினோம். இதிலே தரங்கம்பாடியார்சொன்ன பொய்களை மாத்திரங்காட்டுவதுகருத்து. ஆகையால்-முந்தமுந்தச்சேசுநாதரல்லாதே- அர்ச்.- பாப்புத்திருச்சபைக்கொருமணவாளனென்று நாஞ்சொன்னதாகத் தரங்கம்பாடியாரெழுதினதுபொய்தானே. பொய்யல்லவென்றார்களாகில் ரோமான்திருச்சபையாரிலொருவன் றிருச்சபைப் படிப்பனையாக விதையெழுதினதென் றவர்கள்காட்டக் கடவார்கள். இரண்டாவது மோட்சத் திறவுகோலு நரகத்திறவுகோலும் - அர்ச். - பாப்புவைத்திருக்கிறாரென் றுரோமான்சபையா ரெழுதினதாகவிதிலே தரங்கம்பாடியார் சொன்னார்கள். ஆனாலிதையுமவர்களே யொப்பிக்கக் கடவார்கள். ஒப்பியாதபோதே தாங்களே யிந்தப்பொய்யுஞ் சொன்னார்களென் றொத்துக்கொள்ளக்கடவார்கள். சேசுநாதர்- அர்ச். - மத்தேயுஸ்-சுவிசேஷத்தின்- ௰௬-ம்- அதி- ௰௯-ம். வசனத்தில்-அர்ச்.- இராயப்பருக்குச் சொன்னபடியே மோட்சவிராச்சியத்தைத் திறக்கவு மடைக்கவுங் கோற்களை - அர்ச்.- பாப்புக்கள் கொண்டிருக்கிறார்களென்று நாமேயொப்பிக்கிறதுள்ளதுதானே. ஆகிலுமதுவேதத்திலூன்றின சத்தியமாவதொழிய

வதத்துக்கு விரோதமென்பது தாங்களிதிலே சொன்ன மூன்றும்பொய்யாமே. நரகத்திறவு கோலோவெனில்- நட்சத்திரம்போலே மே ரின்றுவிலங்கினவனுய்த் தவறிக்கிழே விழுந்த வனுக்கே கொடுக்கப்பட்டதென்று-அர்ச். - அருளப்பர் காட்சியின்- ௯- ம். அதிகாரத்துவக்க த்தி லெழுதினதல்லோ. அவனுரென்னில்- நா ஸ்திமதுத்தேரினத்திய‍ யென் ருெருபத்திரமாக வெழுதின புஸ்தகத்தி லொப்பித்தாரந் போலே நரகத்திறவுகோ ளுள்ளவன் லுத்தேர்தானென் று சொன்னுலு நியாயத்துக்கொத்திருக்குமல் லோ. மீளவும்- அர்ச் - பாப்பு நம்மையிரட்சிக் கவல்லவனொன்று தாஞ்சொன்னதாக விதிலேத ரங்கம்பாடியா ரெழுதினது நாலாம்பொய்யா மே. நம்மையிரட்சிக்கவல்லவரு மெய்யாகவேநம் மையிரட்சித்தவருஞ் சேசுநாதரொருவரேயொ ழிய வேறொருவருமில்லையென்று நாம்படிப்பிக் குஞ்சத்தியமாமே. ஆகையாற்சேசுநாதர்- அர் ச். - இராயப்பரைத் தொட்டுமற்ற- அர்ச். -பா ப்புகளுக்குத்தந்ததிருச்சபைத்தலைமைமூன்றுவ மையாகக் காட்டினுர். அர்ச். - மத்தேயுஸ் சு விசேஷத்தின்- ௰௬-ம். அதி- ௰அ-ம்.வசனத்தி ல்- அர்ச்.-இராயப்பரைநோக்கிநீயேயிராயன்- இந்த- இராயன்மேலென்திருச்சபை ஸ்தாபி க்க விருக்கிறேனென்றுர். ஆகையால்- அர்ச். - இராயப்பரைத் திருச்சபைக்கஸ்திவாரமாகஸ்தா பிக்கச்சித்தமானுர்.கொரிந்தியாருக்குமுதல்நிரு பத்தின் -௩-ம். அதி-௰௧ ம்.வசனத்தில்-அர்ச்.- சின்னப்பரெழுதின படியே திருச்சபைக்குத்தே வமுதல்ஸ்திவாரஞ் சேசுநாதர்தாமே. அவரிட மாக வவர்காணுதேபோலகையிற் காணப்பட்டதி

ருச்சபைக்குக்காணப்படுமஸ்திவாரமாக வவரால் ஸ்தாபிக்கப்பட்டவர்- அர்ச். - இராயப்பர்தாமே. மேலேற்றின கோபுரத்துக் கஸ்திவாரமே யாதிமுதலானாற்போலே திருச்சபைக்கெல்லாஞ் சேசுநாதர் ஸ்தானத்தி லாதிக்கம் - அர்ச். - இராயப்பருக்குத் தாமே. மீளவும்-அர்ச்.-மத்தேயுஸ் சுவிசேஷத்தின்-௰௬-ம். அதி- ௰௯- ம். வசனமாகத் திருச்சபையாகிற பரலோகத்துக்கடுத்த விராச்சியத்தின் றிறவுகோல்களை- அர்ச். - இராயப்பரை நோக்கி யுனக்கே தருவோமென்றார். அதேதெனில்ராசா கோட்டைவிட்டுப் போகையி லவன் றன்ஸ்தானத்தில் வைத்தவனுக்கே கோட்டைத்திறவுகோல்களைக்கொடுத்துக்கோட்டைக்குத்தலை வனாக வவனை ஸ்தாபிக்குமாப்போலே சேசுநாதருங் காணப்பட்ட திருச்சபையினின்று பரலோகத்துக்குப்போகையிலந்தத்திருச்சபையைத்தம்மிடமாகவாளும்படிக்கு-அர்ச்.-இராயப்பரை ஸ்தாபிக்கவேண்டுமென்றதனு லுவமையாக-அர்ச். - இராயப்பருக்குமோட்சவிராச்சியத்தின் றிறவுகோல்களைத்தருவோமென்றார். ஆனால்- அர்ச். - அருளப்பர்கண்ட காட்சியாகமத்தின்-௩-ம். அதி- எ-ம். வசனத்திலெழுதப்பட்டபடியே திறக்கவும் பூட்டவுஞ் சுபாவச்சுதந்தரமாயந்தத்திறவுகோல்களைவைத்திருக்கிறவர்சேசுநாதர்தாமே யாகையா லந்தத்திறவுகோல்- அர்ச். - இராயப்பருக்குத் தந்தபோது சேசுநாதர் ஸ்தானத்தில்- அர்ச். -இராயப்பர் திருச்சபைத்தலைவனாக ஸ்தாபிக்கப்பட்டாரென்பது நிச்சயந்தானே. கடைசியிற் குறித்ததலைமையைக்கொடுக்கச் சித்தமாகிச் சேசுநாதர் பரலோகத்துக்கெழுந்தருள நாள்வந்து-அர்ச். - அருளப்பர்

விசேஷத்தின்- உ௰௧-ம். அதி- ௰எ-ம். வசன
ந்திலவரோ- அர்ச். - இராயப்பரை நோக்கி யெ
ன்னுடுகளை மேய்ப்பாயாகவென்றார். அதேதெ
னில்- அர்ச். -அருளப்பர்சுவிசேஷத்தின்-௰-ம்.
அதி- ௰௪-ம். வசனந் தொட்டுச்சொன்னபடிச்
சேசுநாதர் தாமிடையனாகவுந் தந்திருச்சபை
யொருமந்தையாகவுந் திருச்சபையிற் சேர்ந்த
யாவரும் ஆடுகளாகவு முவமையாகச்சொல்லியி
ருக்கத் தமதுஸ்தானத்தில் - அர்ச்.- இராயப்ப
ரைத் திருச்சபைத்தலைவனாக ஸ்தாபிக்கவேண்
டு மென்றுதாம் பூலோகத்தை விட்டுப்போகை
யி லம்மந்தையு மவ்வாடுகளும்- அர்ச். -இராய
ப்பர்கையி லொப்புக்கொடுத்து நீயென்னிடமா
ய் நல்லவிடையனாகநின் றென்னுடுகளை மேய்ப்
பாயாக வென்றுப்போலாயிற்று. இதிப்படியாக
க்கொள்ள வெல்லாவப்போஸ்தலருக்குப்பொது
ப்படச்சேசுநாதர்தந்தவல்லமையவர்களிடமாக
வந்த மற்றக்குருக்களுக்குந்தந்தரவொன்று பதித
ருநம்மோடே சொல்வார்களல்லோ. அப்படியே
மற்ற வப்போஸ்தலருக்குள்ளே வேறுபட-அர்
ச். - இராயப்பருக்கு விசேஷமாய்ச் சேசுநாத
ர் தந்தவுத்தியோகமும் வல்லமையு மற்றக்குருக்
களுக்குள்ளே விடாததொடர்போடு- அர்ச். -
இராயப்பரைத் தொட்டுவந்த- அர்ச்.- பாப்புக்
களுக்குத் தந்தாரொன்று மதனுல்வர்களே திருச்
சபையி லோரஸ்திவாரமாகவுங்கோட்டைவாச
ற்றிறவுகோலுள்ளவராயிராசாஸ்தானத்தாள்ப
வராகவுஞ் சேசுநாதராடுகளை நடத்தி மேய்க்கு
ங் கோவலராகவுந் திருச்சபைத்தலைவராக நின்
றார்களென்று முலோகமுடியுமட்டுநிற்பார்களெ
ன்றும் வேதத்திலூன்றின சத்தியமாகப் பதித

ரு நம்மோடே சொல்லவுங்கூடவார்கள். அப்படி யே யிந்தவஸ்திவாரத்தினின்று பிரிந்த மதில் களாகவு மிந்தக்கோட்டைவாசலினின்று பிரிந்த பிரஷ்டராகவு மிந்தக்கோவலர்வார்த்தைகேளா மலிந்தமந்தையினின்று பிரிந்தவாடுகளாகவும்- அர்ச்.-பாப்புகள் வார்த்தைகேளாமற் சாதித்த யாவரும் பிரிந்தமையால்-திருச்சபையினின்று புறத்திப்பட்டவர்களென்கிறபெயரோ யவர்களுக் குச் செல்லுமல்லோ. ஆகிலும்புறத்திப்பட்டவர் களென்பது பதிதனென்கிறதற்கர்த்தமாமே. ஆ கையால்-அர்ச். - பாப்புக்கள் வார்த்தைகேட்க மாட்டாமற்சாதித்தயாவரும் பதிதரென்னப்படு வது காட்டினபடியே வேதத்திலூன்றின சத்தி யமாவதொழியவேதத்துக்குவிரோதமாய் மனு ஷிருண்டுபண்ணின வுபதேசமென்று தரங்கம் பாடியா ரெழுதினது தாங்க ளிதிலேசொன்ன வைந்தாம்பொய்யாமே.

பதினான்காம் பேதகமறுத்தல்-முற்றிற்று.

## ௰௫-ம். பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார் பூருவ வேதசத்திய மாக வேதத்திலெழுதப்பட்ட தெல்லாத்தையும் வேறென்றுங் கூட்டாம லெல்லாரு மறியும்பா ஷையிற் சனங்களுக்குக்குருக்கள்படிப்பிக்கக்கட னுண்டென்றுசொன்னபின் னெழுதினதாவது:
"இதுவென்னவறியலாமென்றால்-கிறீஸ்துவி
"னுடையநிதானமான ஆழியக்காறருமாய்த் த
"ங்களுக்கொப்புக்கொடுக்கப்பட்ட மந்தைகளு
"டைய நல்லவுண்மையுள்ள விடையருமா யிரு

க்கவேணுமென் றிருக்கிறபேர்கள் தங்களுக்குத் தோற்றின தங்களுடைய சுபநினைவுகளையாகுலுமனுஷர்கள்கட்டின வேறே யாதொருகற்பினையாகுலுஞ் சறுவேசுரனுடைய செனங்களுக்குப்போதிவிக்கவேண்டாமாகுலோ சறுவேசுரனவர்களுக்குக்கற்பிச்ச சகலகாரியங்களை மாத்திரம் போதிவிக்கவேணுமென்று மிதுகளிலெந்த மூகாந்திரத்துக்காகவாகுலுந் திருச்சபையாருக் கொன்றுமறைத்துச் சொல்லாமலிருக்கவேண்டாமென் றிதிலுலே யறியலாம். மத்தேயு சுவிசேஷம் - ௰ - அதி- ௨௭-கவி-யுவானி-சுவி- ௰௫-அதி-௰௫- கவி- அப்போஸ்தலர்நடபடி -௨௰-அதி-௨௭-கவி.

"இதுக்கெதுகையாகமனுஷிருடையபுதுவுபதேசம் பொதிவிக்கிறதாவனு: திருச்சபையிலே குருப்பட்டமாயிருக்கிறபேர்கள் பெலியிட்டுமீசாவென்கிறபூசைசொல்லி லத்தீன்பாஷையிலே பாட்டுகளைப்பாடிச்செபம்பண்ணவேணுமென்றும் ரோமான்சபையினுடைய சடங்குகளைக் கைக்கொள்ளவேணுமென்றும் பாப்புமார்களுங் கொஞ்சிலியர்களு மெத்தக்கட்டளைகளை யிட்டார்களதுகளெல்லாஞ் செனங்களுக்குப்போதிவிச்சு - அதுகள் தேவவேதபொஸ்தகத்துக் கொத்திராவிட்டாலு மதுகளைவேண்டியகருத்தோடே யெப்பேச்சும்பேசாமற் கைக்கொள்ளத்தக்கதாக விவர்கள்செனங்களுக்குக் கற்பிக்கவேணுமென்று மனுஷிருடைய புதுவுபதேசம்போதிவிக்கும் ,, என்றார்கள்.

இந்தப்பேதகத்திலே தரங்கம்பாடியார் யோசிக்கும்வகைபார்க்கும்போது வெறிகொண்டவ

னிருட்டறையிலரும்பொருள் - தேடினற்போல்த் திக்குங்கெட்டு மதியுங்கெட்டுத் தடவித்தடுமாறினவன் கையைக்கண்டயாவருஞ் சிரித்து நகைப்பார்கள். அதேதெனிற் சனங்களுக்குஞானபோசனமாகக்குருக்கள்வேதவாக்கியங்களையெல்லாரு மறியும்பாஷையிற்சொல்லிப்பிரசங்கிக்க வேண்டுமென்ற பின்பு - இதற்குவிரோதமாக வுரோமான் றிருச்சபைக்குருக்களெல்லாரு மறியும்பாஷைவிட்டு லத்தீன்பாஷையிற் பூசையுஞ்செபமும் பண்ணுவார்களென்று தரங்கம்பாடியாரெழுதினர்கள். ஆகிலுமெல்லாருக்குந் தெரியப்பிரசங்கஞ்செய்யவேண்டியதற்குச் சனங்களுக்குத் தெரியாமற் குருக்கள்பூசையுஞ் செபமுஞ் செய்வது விரோதமென்பவோ. தமிழரோடே தமிழ்ப்பேசவேண்டியதுக்குவடுகரோடேவடுகு பேசினல் விரோதமோவென்ன. சனங்களோடே பேசி நல்லுணர்ச்சிகளைச்சொல்லி யெல்லாரு மறியும்பாஷையிற் பிரசங்கஞ் செய்து மறுபடி யாண்டவரோடே விண்ணப்பஞ்செய்து பூசையிலேயுஞ் செபத்திலேயும்- ஆண்டவரறிந்த பாஷைபேசினற்குறையென்ன. எல்லாரையும்படிப்பிக்கப்பிரசங்கஞ்செய்கிறதினலதையெல்லாருமறியும்பாஷையிற் செய்யவேண்டியதென்பது நியாயந்தானே. ஆனற்பூசையுஞ்செபமும்- ஆண்டவரைத் துதித்து வணங்கவு மெல்லாருக்கும் வேண்டிமன்றாடவுங் குருக்கள் செய்தலவர்களறிந்தபாஷையிற் செய்தாற் போதாதோவென்ன. ஆகையாற்குருக்களறிந்தலத்தீன்பாஷையிற் பூசையுஞ் செபமுஞ்செய்யவுரோமான்றிருச்சபை கட்டளையிட்டமுறையே வேதத்துக்கு விரோத கற்பனையென்பது தரங்கம்பாடி

பாரிதிலேசொன்ன முதற்பொய்யாமே. மீளவு
ம் - ஆண்டவருக்கேற்றகுருக்கள்- தங்களுக்குத்
தோன்றினசுயநினைவுகளைச்சனங்களுக்குப்போ
திக்கலாகாதென்றுதரங்கம்பாடியாரிதிலேசொ
ன்னார்களல்லோ. ஆகையாற் கொரிந்தியாருக்
குமுதல்- நிருபத்தேழாமதிகாரம்பன்னிரண்டா
ம்வசனத்தில்- அர்ச். -சின்னப்பர்தாமேயிதுஆ
ண்டவர்வார்த்தையல்ல வென்வார்த்தையாக
நானே சொல்லுகிறேனென்றபோதே தமக்குத்
தோன்றின சுயநினைவுகளைச் சனங்களுக்குப்
போதித்துக் கர்த்தருக்கேற்காதவராய்நடந்தா
ரென்று சொல்லவுங்கடவார்கள். இல்லாவிட்டா
லிதிலே தாங்கள்சொன்ன விரண்டாம்பொய்யி
துதானே. இதுவுந்தவிரவாண்டவர்க்கேற்றவூழி
யஞ்செய்பவன் சனங்களுக் காண்டவர்கற்பித்த
தொழிய மனுஷர்கற்பித்ததைப் படிப்பிக்கலா
காதென்று மிதிலேசொன்னார்களே. ஆகையால
ப்போஸ்தலர் முயற்சியாகமத்தின்- ௫ரு-ம்.
அதி- ௨௯௧- ம். வசனத்திற்சொன்னபடியே- அ
ர்ச். - சின்னப்பர்தாமே யப்போஸ்தலருமற்ற
ப் பெரியோர்களுங்கற்பித்ததையெல்லாருஞ்செ
ய்யச் சொல்லித் திரிந்தபோதிலவ ராண்டவ
ருக் கேற்காதவூழியஞ்செய்தாரென்று தரங்கம்
பாடியார் சொல்லவுங்கடவார்கள். இது சொல்ல
மாட்டார்களாகில்- முன்சொன்னவசனம் பொ
ய்யென் றொத்துக்கொள்ளக்கடவார்கள். பின்னை
யும்- அர்ச். - சின்னப்பர்செய்தபடியே முதல
ப்போஸ்தலராகிய- அர்ச் . - இராயப்பனார்த்
தொடர்ந்துவந்த திருச்சபை யிற்பெரியோருமா
ய்த் திருச்சபைக்குத்தலைவருமாயிருக்கும்- அர்
ச். -பாப்புக்கள்- திருச்சபைக்குக்கட்டளையிட்ட

தெல்லா மெல்லாருநிறைவேற்ற நாமேபடிப்பி க்கிறதுள்ளதுதானே. ஆகிலுமொப்பித்தபடியி து வேதத்தில்வழங்கினமுறையே யொழியவதற் குவிரோதமாக மனுஷிருண்டுபண்ணின வுபதே சமென்பது தரங்கம்பாடியாரொப்பியாம விதி லேசொன்ன நாலாம்பொய்யாமே.

இதுவுந்தவிர வாண்டவர் கற்பித்ததெல்லா மொன்றொளியாமலு மொன்றேற்றமலுந் தன்சு யநினை வொன்றுட்கலவாமலுஞ் சொல்லவேண் டியதென்றொப்பிக்க வவர்கள்குறித்தவேதவுதா ரணங்களைப் பார்க்கிலிதிலே சொன்ன வைந்தா ம்பொய் யிதுதானென் றுகாண்போம். அதெப்ப டியென்றால்- அர்ச். - மத்தேயுஸ் சுவிசேஷம்- ௰-ம். அதி- உ௰எ- ம். வசனத்திற் சேசுநாதர் சொன்னதாவது தானிருளிலுங்களுக் கறிவித்த தை வெளிப்படச்சொல்லுங்களென்றார். அர்ச்.- அருளப்பர் சுவிசேஷம்- ௰௫-ம். அதி- ௰௫-ம். வசனத்திலோவெனிலென்பிதாவிடத்தில்-நான் கேட்டதெல்லாத்தையு முங்களுக்கறிவித்தேனெ ன்றார். அப்போஸ்தலர் நடபடி- உ௰-ம். அதி- உ௰எ-ம். வசனமோவெனிலவர்களே- உ௰௪-ம். வசனமாகத்திருப்பினபடி யொன்றுமறைக்காம ற்சர்வேசுரனுடைய சித்தமெல்லா முங்களுக்கு வெளிப்படுத்தினேனென் று-அர்ச்.- சின்னப்பர் சொன்னார். ஆகிலுமிந்த வுதாரணங்களிலேயா ண்டவர் கற்பித்ததெல்லா மறிவிக்கவேண்டுமெ ல்லாதே சுயநினைவாகவும்பெரியோர்கற்பனையா கவு மொன்றுங்கூட்டிச் சொல்லவேண்டாமென் று சர்வேசுரன்கற்பித்ததாக வொருவார்த்தை யாகிலுமுண்டோ. இல்லாதபோதப்படிக் கற்பி த்தாரென்றொப்பிக்கிறதற்கிந்தவுதாரணங்களை

யேழைச்சனங்களையேய்க்கக் குறித்துவைப்பா னேன்.

கடைசியில் நாணமழியத் தெருவில் விடப்பட்ட வேசிகள் வெட்கத்துக்கஞ்சாத முகத்தோடேச லேச்சொன்றாற்போலத் தரங்கம்பாடியாரிதி லேசொன்னவாறும்பொய்யாவது- அர்ச்.-பா ப்புக்கள் கற்பித்ததெல்லாந் தேவவேதப்புஸ்த கத்துக் கொத்திராவிட்டாலு மதுகளைப்பேசாம ற்கைக்கொள்ளச் சனங்களுக்குக் கற்பிக்கவேண் டுமென் றுரோமான்சபையார் படிப்பித்ததாக வெழுதக் கூசாதேபோனார்கள். பொய்யைச் சொல்லத் தங்களுக்குவெட்கமில்லாதாயின் ம ற்றயாவர்க்கு மெய்யையாராய்ந்தறியச்சற்றுமு ணர்வில்லையென்று நினைத்தார்களோ. அந்தவ க்கிரமமான வபத்தத்தை நாஞ்சொன்னதில்லை. தாமேசொன்னதென்று கெட்டியாய்த் தாங்க ளாப்பியா திருக்குந்தனையுந் தாங்களேயக்கி ரமமான தப்பறைக்காரரென்று லோகத்திலெங் குஞ் சொல்லப்படுவார்கள்.

பதினைந்தாம்பேதகமறுத்தல்- முற்றிற்று.

# ௰௬-ம். பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார் குளறிச்சொன்ன தாவது:“சறுவேசுரன் திருவிளம்பத்தினபூருவ “த்துபதேசம்ளங்களுக்குப்போதிவிக்கிறதாவ “து: கோவிலிலேதெரியப்பட்டிராமல் மறுபா “வைகளைப் பழக்கிவிக்கிறதற் குத்தாரமில்லை “யென்றும்படிச்செடுக்காதசெனங்கள துகளை

"க்கேட்டதிருலேயவர்களுக்குப்பிறையோசன
"மில்லையென்றும்போதிவிக்கும். அதுகளினுலே
"நாங்கள் சருவேசுரனைத் தோஸ்திரம்பண்
"ணிப்புகழுகிறோ மென்றுசொன்னாலுஞ் சரி
"யாளுலோகோவிலிலேபோதிவிச்சுப்பிராத்தி
"ச்சுக்கொண்டு மந்திரங்களைச்சொல்லிப்பாட்
"டுபாடுகிற பேர்களிலிரு மெல்லாருக்கும்நல்ல
"புத்தியும் பயபத்தியுமாறுதலுமுண்டாகும்ப
"டிக்கு-அத்தையாவருக்குந்தெரிஞ்சதாயிருக்
"கிறபொதுப் பாஷையிலே செய்யவேணும்.
"ஞூரி- க-நிரு-௰ச-அதி-கூ-௰சா-எ-௰அ-கவி.
"பின்னையந்தவதிகாரத்திலே முழுதும். இதுக்
"கெதுகையாக மனுஷருடைய புதுவுபதேசம்
"போதிவிக்கிறதாவது: கோவிலிலே நடக்கிற
"தேவாராதனையிலேயு மற்றுண்டான சகல
"தேவாராதனை வகைகளிலேயும் லத்தீன்பா
"ஷைநடக்கவேணுமென்று தேவவேதபொல்லி
"தகத்தைத் தேசதேசவழக்கமான பாஷையி
"லேசபைக்குமுன்பாகத்திறந்தசொல்லாகவா
"சித்தாலும் பாடியாலு மிருந்தா லதுபி
"றையோசன மில்லாததாயிருக்குமென்கிறது
"ந்தவிர வஞ்சகஞ்சனங்களுக்கு மய்யங்கோ
"ளாறுகளுக்கு மிடமாயிருக்குமென்று மனுஷ
"ருடையபுதுவுபதேசம் போதிவிக்கும்,, என்
றூர்கள்.

முந்தவிதிலேதரங்கம்பாடி யாரொழுதினதாவ
து கோயிலிலே தெரியப்பட்டிராமல்- மறுபா
ஷைகளைப்பழக்குவிக்கிறதுக் குத்தாரமில்லையெ
ன்று சர்வேசுரனருளிச்செய்தவேதம்படிப்பிக்கு
மென்றூர்கள். ஆகையாற்கோயிலிலே குருக்கள்
செய்யுஞ் செபமுமுடிக்கும்பூசையும் வாசிக்கும்

வேதப் புஸ்தகமுமெல்லாரு மறிந்தபாஷையா ருக்க வேண்டுமென்று சர்வேசுரன்கற் த்ததாக வெழுதினதாச்சுதல்லோ. ஆகிலும் வேதப்புத்தகத்திலே- எஸ்திறுஸென்பவருடை யிரண்டாமாகமத் தெட்டாமதிகாரத்தெட்ட வசனந்துவக்கி யெழுதினபடியே -எஸ்திறு ஸென்கிற குருவானவர் சனங்களிலதேகரறியா பாஷையாக வேதப்புஸ்தகத்தைவாசித்ததிறு வர்கள் கண்டுபிடியார்களென் றவரதற்கர்த்த சொல்ல வேதவாக்கியங்களையெல்லாருங்கண் பிடித்து மிகவுஞ்சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியா ழுது கொண்டிருந்தார்களென் றெழுதியிருக் வப்போதந்தக் குருவானவரபத்தத்தைச்செய் ஒன்று வேததூஷணமாகச் சொல்லாதப க்குத் தாங்களேசொன்னது பொய்யாமென் வேதசத்தியமாகத் தரங்கம்பாடியார்சொ லக்கடவார்களல்லோ. இரண்டாவது- பூசைமு லியசெபங்களைச் சனங்களறியாதபாஷையிற் ருக்கள் செய்தாலதினர்த்தத்தைச் சனங்களறி யாததனாலவர்களுக்குப்பிரயோசனமில்லையெ று சர்வேசுரனருளிச்செய்த வுபதேசமதைவி க்கினதென்றார்கள். ஆகிலுமோயீசன் -ங-ம். ஆகமத்தின்- ௰சா-ம் அதிகாரம்- ௰எ- ம். வச த்தி லெழுதினபடியே முதற்குருவானவருட் கோயிலிலே புகுந்து தனக்குந் தன்வீட்டுக்கு ற்றச் சகலபேர்களுக்கும் வேண்டிக்கொள்ள போகிறபோது கூட-வங்கே யொருவருமிராம மவனைக்காணுமலு மவருச்சரிக்கும் வார்த் தகேளாமலு மெல்லாரும்புறத்திற்க வாண் வர்தாமே கட்டளையிட்டாரல்லோ. அப்படி யே-அர்ச். லூக்காஸ் சுவிசேஷ முதலதிகாரம்-

௰-ம். வசனத்திற் சக்கரியவெஸென்பவர் தூபப்பூ
சைசெய்திருக்கையி லிந்தக்கட்டளையின்படி யெ
ல்லாரும் புறத்துநின்றார்களென் றெழுதியிருக்
கிறதல்லோ. அப்போது சனங்களே குருக்கள்
சொன்னதற் கர்த்தங்கண்டுபிடியா திருந்ததல்
லாதே சொன்னவார்த்தைகேட்கவுங் குருக்களை
முதலாய்க்காணவுமாட்டாதிருந்தார்களல்லோ.
ஆகையாற் சனங்களுக்குப்பிரயோசனமில்லாத
பூசையுஞ் செபமுஞ்செய்யச்சொல்லி யாண்டவ
ர்கட்டளையிட்டாரென்று சொல்வார்களோவெ
ன்ன. இதைத்தேவதூஷணமாகச் சொல்லாத
படிக்குத் தாங்களே யிந்தப்பொய்யெழுதினார்
களென்று தரங்கம்பாடியார் வேதசத்தியமாக
ச் சொல்லக்கடவார்களல்லோ. மூன்றுவது. கோ
யிலிலே செய்யப்படும்பூசை தேவாராதனை யெ
ல்லாம் லத்தீன்பாஷையிற் செய்யவேண்டுமெ
ன் றுரோமான்திருச்சபை படிப்பிக்கிறது சரி
யே. ஆகிலு மிதுசர்வேசுரன் வேதத்துக்கு வி
ரோதமாய் மனுஷர் புதிதாயுண்டுபண்ணினவுப
தேசமென்று தரங்கம்பாடியாரெழுதினது பொ
ய்தானே. அதேதெனிற் பெல்லார்மீனென்பவ
ர் வேததர்க்க முதற்காண்டத்தின்-தேவவாக்கி
யத்திரண்டாம்புஸ்தகம் -௰௫-ம். அதிகாரத்தில்
விரிவாயெழுதி யொப்பித்ததைப்பார்க்கில்- அப்
போஸ்தலர்நாள்-துவக்கித் திருச்சபை யெங்கு
ங்குருக்கள் பூசையுஞ்செபமுங் கோயிலிலேசெய்
யும்போ தெப்போதுங் கிரேக்பாஷையும் லத்
தீன்பாஷையு மதுகளைப்போதுவே யெல்லாருமறி
யாதிருந்த விராச்சியங்களிலேமுதலாய் வழ
ங்கினதென்று தெரியவருமே. அதுகளையும்விட்
டு லுத்தேருமவன்வகைப்பதிதருமுதலாய்த் து

பக்கத்திலே திருச்சபைப் பழையமுறைவிடாம
ற் பூசையை லத்தீன்பாஷையிற் செய்கிறோமென்
று தாங்களே யப்பொஸ்தோலிகவென்னும்புஸ்த
கத்தின்-௰௨-ம். பிரிவிலெழுதிவைத்தார்கள். ஆ
கையாற் பூசையுமற்றத் தேவாராதனைகளுங்
கோயிலிலே லத்தீன்பாஷையிற் குருக்களாற்செ
ய்யப்படுமுறை புதிதாய்மனுஷிரால்வந்த முறை
யென்பது பொய்யாமே.

இந்தப்பொய்களெல்லா மொப்பிக்கத் தரங்
கம்பாடியாரிதிலே - அர்ச்.- சின்னப்பர்கொரி
ந்தியாருக் கெழுதினமுதல்-நிருபத்தின்-௰௪-ம்.
அதிகாரம் பார்க்கச்சொல்லி யதிலேயெங்கு மவ
ரெல்லாருமறியும்பாஷையாற் கோயிலிலே தே
வாராதனைசெய்யவேண்டுமென்று கட்டளையிட்
டாரென்றார்கள். ஆகிலுமிதுவே நாலாம்பொய்
யாமே. அதேதெனனிலந்தவதிகாரத்தில்- அர்ச்.-
சின்னப்பர்சொன்னது தேவாராதனைசெபம் பூ
சைகுறியாமற் கிறிஸ்துவர்களக்காலத்திற்கோயி
லிலேகூடித் தேவாராதனை முடிந்தபின்பு தங்
களுக்குள்ளே புண்ணியகருமங்களுக்கடுத்த நி
யாயங்களைப்பேசிக்கொண்டு நடத்தமுறையைப்
பற்றிச்சொன்னார். அதனால்- அர்ச்.-சின்னப்ப
ரந்தவதிகாரத்தின்-௩-ம். வசனத்திலே தீர்க்க
தரிசியாக நியாயத்தைச்சொல்லுகிறவர் புண்
ணியம்வளரவும் படிப்பனையாகவும் - ஆறுதல்
செய்யவு மனுஷிரோடல்லோ பேசுகிறாரென்றா
ர். அதனாலெல்வருமறியும்பாஷையாகப் பேசவே
ண்டுமென்றார். தேவாராதனைபூசை செபமோ
தெவனி லாண்டவரோடே தாம்பேசுகிற முறை
யேயொழிய மனுஷிரோடே பேசுகிறவகையல்
ல, அப்படி - ௨௩-ம். வசனத்தி லிருவர்மூவர்

பேசிக்கொண்டிருக்க மற்றவர்கேட்டதை மதித்துச்சொல்வார்களென்றார். அப்படியே-௩௰-ம். வசனத்தில் - மற்றொருவனுக்ாண்டவர் நல்லதொன்றையறிவித்தால் - முன்பேசிக்கொண்டிருந்தவன் பேசாதிருக்கவென்றார். அப்படியே-௩௪-ம். வசனத்திற்கோயிலிலே பெண்பிள்ளைகள்-மௌனமாயிருக்கக்கடவா ரவர்கள்பேச வுத்தாரமில்லையென்றார். இதுகளுமவரிதிலேயெழுதின வீத்தொகைப்பட்ட பலவும்பார்க்கி லந்தவதிகாரத்திலே சொன்னதெல்லாந் தேவாராதனை பூசைசெபம்பற்றிச்சொல்லாம லவர்கள் - தங்களிலே யப்போதுசெய்துகொண்டுவந்த ஞானசல்லாபங்களைப்பற்றிச் சொன்னதாக வேண்டுமல்லோ. ஆகிலும்-௰௪-ம். வசனத்தில்-மாத்திரஞ்செபத்தைப்பற்றி யெல்லாரு மறியும்பாஷைபேசவேண்டுமென் றெழுதினதாகத் தோன்றுமே. ஆனாலிதிலேயுந் தேவாராதனையாகப்பொதுவாய்க் கட்டளையிட்ட பூசைசெபமும்பற்றிச் சொன்னதல்ல. அவனவன்றன் பத்திக்குத்தக்கதா யாண்டவருக்குத்தோத்திரமாகச்சொன்ன ஞானப்பாட்டுக்கீதங்களைக்கு ி த்துமற்றொருவரு மறியாதபாஷையா லதுகளைச்செய்து பாடிவேண்டிக்கொண்டா லெல்லாருங் கேட்கச்செய்ததனாற்பலனென்ன-அப்படிப்பட்டகீதங்களை யுண்டாக்கவறியாதவருமற்றவர்கள் செய்ததைக்கேட்டுக்கண்டுபிடித்தானாலு மனதினா லொருப்பட்டாண்டவரை யவர்களுங்கூட வேண்டிக்கொண்டு பிரயோசனப்படவேண்டுமென்றார். அப்படியே நீங்களுங்கோயிலிலே பாடிக்கொண்டுவருஞ் சங்கீதப்பாட்டுக்களை மறுபாஷையாகச்சொல்லாம லுங்கள்-தமிழ்மொழியாகச் சொல்வீர்க

ால்லோ. மற்றப்படிக்குருக்கள் -தேவாராதனே
பாகச்செய்யும்பூசையு முடியுஞ்செபமும் வாசிக்
கும்வேதப்புஸ்தகமு மெல்லாரு மறியும்பாஷை
பா லாகவேண்டுமென்று - அர்ச்.- சின்னப்பர்
சொன்னதாகத் தரங்கம்பாடியாரொப்பிக்கக்க
டவார்கள். கடைசியிற் சன்மப்பாஷையாகத் த
ன் னுத்தாரமில்லாமல் வேதப்புஸ்தகத்தைத் தி
நப்பவும் வாசிக்கவு முரோமான் றிருச்சபை வி
லக்கின துள்ள துதானே. ஆகிலு மிதற்குதியா
பமும் வகையு மிதிலேயிரண்டாம்பேதகமறுத்த
லோதெழுதினதைக் காணக்கடவீர்கள்.

பதினாறும்பேதகமறுத்தல்-முற்றிற்று.

# ௰எ-ம். பேதகமறுத்தல்.

இதிலே சேசுநாதருண்டாக்கின தேவத்திர
விய-அநுமானங்கள்-தமக்குப் பலன்றரும்படி
க்கதுகளை விசுவாசத்தோடே கைக்கொள்ளவே
ண்டுமென்று தரங்கம்பாடியார் சொன்னபின்
பதுக்கெடுத்துக்காட்டின வுவமையாவது: " வி
" சுவாசத்தோடே கலந்துபோகாத திருவசன
" மத்தைக் கேழ்க்கிறவர்களுக் கொன்றுக்கும்
" பிறையோசன மில்லாததா யிருந்ததுவு மல்
" லாம லவர்களைச் சாபிக்கப்பட்டவர்களாய்த்
" தானே யெப்படிவிட்டுவைக்குமோ வப்படிக்
" கு-அற்.- சக்கிறமேந்துகள் விசுவாசத்தோ
" டே வாங்கிக் கொள்ளப் படாதேபோனாற்
" சொன்ன பிறகாரமாகத்தானே பலிக்குமோ
" ழிய மற்றப்படியல்ல ,, என்றார்கள். இதிலே

யும் பலவுதாரணங்களைக்குறித்து வீணாய்க்குவித்
தபிற்பாடெழுதினதாவது: " இதுக்கெதுவை
" யாக மனுஷிருடைய புதுவுபதேசம் போதிவி
". க்கிறதாவது: புதுதெஸ்தமேந்தினுடைய ச
" க்கிறமேத்துகள் சும்மாவதுகளைவாங்கிற இ
" கையினாலே யெக்சொப்பெரே யொப்பேரா
" த்தொ-அந்தந்தப்பிரசாதங்களைக் கொடுக்கு
" மென்று போதிவிக்கிறது. இதுக்கர்த்தமே
" தென்றால்-இந்தசக்கிறமேந்துகளை வாங்கி
" பேர்களிடத்திலே பத்தி விசுவாசத்தினுடைய
" வொருகுணமடையாளமானாலு மில்லாமலிரு
" ந்தாலுஞ் சக்கிறமேந்துகளைப் பிறம்பாகவா
" ங்கிற கிறிகையினுடைய பெலத்தினாலேதானே
" யந்தவரப்பிறசாதங்களைப் பலிக்கப்பண்ணு
" மென்று மனுஷிருடைய புதுவுபதேசம் போ
திவிக்கும்,, என்று தரங்கம்பாடியார் கொடியத
பிழாய்க் குளறி யெழுதினார்கள்.

இந்தப்பேதகத்தைமறுக்கவு முரோமான்திரு
ச்சபை யிந்தவிஷயத்திலே படிப்பிக்குஞ்சத்திய
த்தையறியவும் வேதவிளக்கத்தின்-௰௨-ம். அதி
காரமெல்லாம் வாசிக்கக்கடவீர்கள். அங்கேசொ
ல்லப்பட்டநியாயங்களைப்பார்க்கும்போ திதிலே
தரங்கம்பாடியா ரெழுதினபொய்யும் வெளியா
கும். அதேதெனிற் சொல்லப்பட்ட தேவவாக்கி
ய வுபதேசம்போலே தேவதிரவிய - அநுமா
ணங்களும் பலன்றருமென்பது பொய்யாமே. தா
ஞ்சொல்லுமுபதேச முளே நுழையவிடாமல்-
மறுத்தவனுக் கந்தவுபதேசத்தாற் பலனென்றி
ல்லை. குழந்தைகளுக்குத் தந்த ஞானஸ்நான
மோவென்று லந்தக்குழந்தைகளறிவில்லாமை
யா லழுதுதலைசாய்த் துதைத்து வேண்டாமெ

ளுற்போலே கிடந்தாலு மதுகளுக்கு ஞானஸ்னானம்பலித் திஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்குமென்று தரங்கம்பாடியாருஞ் சொல்லுவார்களல்லோ. மீளவுமறிவுடையவர்களிடத்தில் - தவவிசுவாசபத்தி யாயத்தவகையால் வேண்டியதென் மதில்லாமல்-தேவத்திரவிய - அநுமானங்க பலன்கொடாதென்று முரோமான் திருச்சப படிப்பிக்குஞ் சத்தியமாகக்கொள்ளத் தேவத்திரவிய-அநுமானங்களை வாங்கினவனிடத்திலொரு புண்ணியக் கிரியையுந் தேவையில்லையென்று நாம்படிப்பித்தோமென்பது - முழுப்பொய்யாமே. தேவத்திரவிய - அநுமானங்கள் ங்கள் வினைப்பயத்தா லெத்தன காரணமாக ஷ்டப்பிரசாதத்தைத் தருவது மெய்தானே. ாமதற்குச்செய்யும் வினையாகிறதவவிசுவாசம றதெல்லா மதற்காயத்தமொழியக் காரணமல் . இதற்கெல்லா முன்சொன்ன வதிகாரத்தை ாசித்தா லுள்ள நியாயங்களைத் தெளிவாய்த் தரியவருமே.

பதினேழாம் பேதகமறுத்தல்-முற்றிற்று.

---

# ௰அ-ம். பேதகமறுத்தல்.

---

இதிலே சேசுநாதர் தேவநற்கருணையுண்டா னபோது கூடநின்ற பன்னிருசீஷர்க்குக் கல்லாந் தேவ-அப்பத்தை தந்ததல்லாதே ற்கருணைப் பாத்திரத்தை நந்தருளியிதிலெ லாருங் குடியுங்களென்று திருவுளம்பற்றினதா த் தரங்கம்பாடியா ரெழுதினதின்பு சொன்ன ாவது:“ இதுக்கெதுகையாக மனுஷராலேகட்

" டப்பட்ட புதுவுபதேசம் போதிவிக்கிறதாவ
" து: பீடத்தினுடைய சக்கிறமேந்தாகிற கர்த்
" தருடைய ராப்போசனங் குருப்பட்டமுள்ள
" வர்களுக்குமாத்திர மப்பத்துக்குள்ளேயு முந்
" திரிகைப்பழ ரசத்துக்குள்ளேயுங் கொடுக்க
" ப்பட வேணுமல்லாமற் குருப்பட்டமில்லாத
" வர்களுக்கு மற்றத்திருச்சபையாருக்கு மப்ப
" த்துக்குள்ளே மாத்திரங் கொடுக்கப்படவே
" ணுமென்று போதிவிக்கும்" என்றார்கள்.

இந்தப்பேதகவிஷயத்தையுங் கண்டுபிடிப்ப வேதவிளக்கத்தில்-௱௩-ம். பிரிவு துவக்கி-௮௪-ம். அதிகாரமுடியுமட்டு மாராய்த்துபார்க்கக் கடவீர்கள். இதிலேயுந் தரங்கம்பாடியார்சொன்ன பொய்ம்மாத்திரம்வெளியாம்படிக் கறியவேண்டியதாவது: சேசுநாத ரப்போஸ்தலருக் கெல்லா நற்கருணையப்பத்தையல்லாதே பாத்திரத்தையுந்தந் தெல்லாருங் குடியுங்களென்றதனாற் குருக்களொழிய மற்றச்சனங்களும் பாத்திரத்தைக்கொள்ளச்சொன்னொன்று தரங்கம்பாடியாரெழுதினது - இதிலுள்ளமுதற்பொய்யாமே. அத்தரவாயிலேதானே நாஞ்செய்தபடியே செய்யுங்களென் றப்போஸ்தலரைக்குருக்களாகஸ்தாபித்து நற்கருணையுண்டாக்கக் கட்டளையிட்டாரல்லோ. அதனாலெல்லோரையு நற்கருணையுண்டாக்கக்கட்டளைசெய்தாரென்று நினைப்பாருண்டோ. மீளவுங் குருக்களல்லாதபேர்களுக்கு நற்கருணையப்பத்தைத்தந்தாற் போதுமென்று படிப்பிக்கிறது மனிதர் புதிதாய்க்கட்டினவுபதேசமென்பது பொய்தானே. அப்போஸ்தலர் நாளிலேமுதலாய்ப் பலமுறைநற்கருணைப்பாத்திரத்தை மற்றச்சனங்கள் கொள்ளாமற்

ரேவ-அப்பத்தைமாத்திரங்கொண்டு நடந்தமு
றையிதென்று சொல்லக்கடவோம். அப்படியே
யப்போஸ்தலர் முயற்சியாகமத்தின்-௨-ம். அதி
காரம் - ௪௰௨-ம். வசனத்திலந்நாட்கிறீஸ்துவ
ர்களைத் தோத்திரஞ்சொல்லி - அர்ச்.- லூக்கா
ஸெழுதினதாவது - அந்நாட்கிறீஸ்துவர்களப்
போஸ்தலருபதேசத்தைக் கேட்பவு மொருங்கு
டன்கூடி யப்பத்தைப்பிட் டுண்ணவுஞ் செபஞ்
செய்து வேண்டிக்கொள்ளவுமோயாமற் கால
க்ஷேபஞ்செய்துகொண்டு வந்தார்களென்றார்.
இதோ பாத்திரத்தைச்சொல்லாம லப்பத்தை
மாத்திரஞ் சொன்னதினா லந்நாளிலேமுதலாய்
மற்றச்சனங்கள் சிலமுறைநற்கருணைப் பாத்திர
த்தைக் கூடக்கொண்டாலுந் தப்பாம லநுதின
மிந்தத்தேவ-அப்பத்தைப் பாத்திரமில்லாமலு
ங் கொண்டார்களென்று சொல்லக்கடவோம்.
இதற்குவேதவிளக்கத்தில்-௱௬-ம். பிரிவுவாசிக்க
க்கடவீர்கள்.

பதினெட்டாம்பேதகமறுத்தல்-முற்றிற்று.

# ௰௯-ம். பேதகமறுத்தல்.

விவாகம்-நல்லதென்பது வேதசத்தியமாகவு
ந் தகாதென்பது பசாசுபடிப்பனையாகவு மிதி
லதரங்கம்பாடியார் சொன்னபின்பு வைத்தவ
சனமாவது: "இதுக்கெதிரையாக மனுஷிருடை
'ய புதுவுபதேசம் போதிவிக்கிறதாவது: விவா
'கமானது மாங்கிஷித்துக்கடுத்த மாற்றமாயி
'ருக்குமென்று மிதின் முகாந்திரமாக ஞானிக
'ளாயிருக்கப்பட்டபேர்களெல்லாருமதைத்தவில

“ க்கிவைக்கவேணுமென்றும் போதிவிக்கிறது.
“ பின்னையுமிந்தக்கட்டளை பெலப்பிடியாகப்பி
“ டித்துச் சொல்லுகிறதாவது: சருவேசுரன்க
“ ற்பித்தபிரகாரமாக வாசாரவொழுங்கின்ப
“ டியே விவாகமுடித்துக்கொள்ளுகிறதை விட
“ வொருபிறெலாமேதாவாகிலும்ஞானியாயிருக்கி
“ றவனென்கிறம் ரகசியப்பொருட்டாக வானு
“ ம்வெளிப்பொருட்டாகவானுலுங் கள்ளமா
“ ர்க்கங்களிலேயுமசுத்தத்திலேயுந்திரிஞ்சாலிது
“ வொருமட்டாகலா மென்றுஞ்சொல்லும். இ
“ ந்தப்படிக்குப் பெல்லற்மீனென்கிறவர் சொ
“ ல்லுகிறதாவது: ஞானியாயிருக்கிறவன்கலியா
“ ணம்பண்ணுகிறதென்கிறதுசோரதோஷத்
“ திலேயுங் கெட்டதாயிருக்குதென்றார். அதுக்
“ கவர்சொல்லுகிறமுகாந்திரமேதென்றால்விவா
“ கம்பண்ணுகிறவன் தானேற்றுக்கொண்டநே
“ த்திக்கடனை நிறைவேற்றுகிறதுக்குத் தன்னை
“ த்தான் சாமாற்தியமல்லவனுக்கிறா னிப்படி
“ யே வேசித்தனம்பண்ணுகிறவன்செய்கிறதில்
“ லையென்கிறமுகாந்திரத்தைச்சொல்லுகிறார்,,
என்றார்கள். இதிலே விவாகநல்லதென்றும் வி
வாகமாகாதென்றும் பசாசேவலால்வந்தவுணர்
ச்சியென்றுந் தரங்கம்பாடியார்சொன்னபின்பு
நாமதற்குவிரோதமாகப்படிப்பிக்கிறோமென்றா
ர்கள். இதுவே வெட்கமில்லாமற்சொன்னபொ
ய்யல்லோ. அவர்களேவிவாகத்தேவத்திரவிய-
அநுமானமல்லவென்று சாதித்திருக்க நாமே
யெழுதேவத்திரவிய-அநுமானங்களில் விவாக
மொன்றென்று சொல்லுகிறோமல்லோ. மீளவு
ஞானிகளெல்லாரும்விவாகஞ்செய்ய வொண்ணா
தென்று படிப்பிக்கிறோமென்பதுபொய்தானல்

லோ. நாமே யெண்ணப்படாதபேர்கள் விவாக
ஞ்செய் தில்லறத்தோடே ஞானமடைந் துத்தம
ரானார்களென் றவர்களை யர்ச்சியசிஷ்டர்களாக
வணங்குகிறோமே. அதன்பிறகு ஞானிகள் விவாக
த்தோடிருக்கலாகாதென்று படிப்பிக்கிறோமென்
பது வெட்கமில்லாமற் சொன்னபொய்யல்லோ.
ஆகிலும் விவாகத்தோடில்லற நலலதாயினும்
விரத்தத்துவத்தோடு துறவறமதிலேயு நல்ல
தென்று நாம்படிப்பிக்கிறோம். ஆகிலு மிதுமனு
ஷீர்புதிதாய்க்கட்டின வுபதேசமென்பது பொ
ய்தானே. வேதசத்தியமாக- அர்ச். - சின்ன
ப்பர் தாமே கொரிந்தியாருக்கு - ௧ - நிருபம் -
௭-ம். அதி- ௩௮ - ம். வசனத்தில் விவாகஞ்செ
ய்வது நல்லதாயினுமதைச் செய்யாதிருப்பதுமி
கவுமதன் மேலு நல்லதென்றார். இதனைப்பற்றி
யாண்டவர்சமுகத் தூழியஞ்செய்யத்தெரிந்து
கொள்ளப்பட்ட சந்நியாசிகளுங் குருக்களும்வி
வாகத்திலேயு முத்தமவிரதமாக விரத்தராயிரு
க்கத் திருச்சபைகட்டளையிட்டதுதானே. நீ வி
வாகஞ்செய்யவேண்டாமென்று நாமேவிலக்கி
னதல்ல. ஆகிலும் விவாகஞ்செய்யவேண்டுமாகி
ற் குருவுமாகவேண்டாம். குருக்களிலொருவன்
ஸ்தாபிக்கப்பட வாசையாயிருந்தால் - மரண
பரியந்தம்விவாகமின்றி விரத்தனாயிருப்பேனெ
ன் றாண்டவருக்கு வார்த்தைப்பாடு கொடுக்கக்
கடவானென்று திருச்சபை கட்டளையிட்டதிலேற்
குறையென்ன. பெண்ணாசையா லுள்ளேபற்றிய
தீயை யவிக்கமாட்டாதெரிந்து விரகநோயால்
வெந்து நொந்திருப்பாயாகிற் குருவாகு மாசை
யை விட்டுவிவாகஞ்செய்வது நல்லதுதானே. உ
ன்கைப்பொருளையெனக்குத்தரக்கட்டாயஞ்செ

ய்யேன். ஆயினுநீபணத்தராம லென்னுடைமை யுனக்குத்தரவுமாட்டேனென்றாற்போல நீதியின் படியே விரத்தனுக வொருவர்க்குங் கட்டாயஞ் செய்யவில்லை யாயினுஞ் சந்நியாசத்தாலுங் குருத்துவத்தாலும் வருஞ்சங்கையு நன்மையும் விரத்தனுகவார்த்தைப்பாடில்லாம லொருவற்குந் திருச்சபை தரவுமாட்டாதே.அப்படியேவிவாகத் திலும் விரத்தனுவ துத்தமமென்று வேதசத்தியமாகவறிந்துமனமேபொருந்திப் புறக்கட்டாய மில்லாமல்- மரணபரியந்தம் பெண்ணுசை வெறுத்து விரத்தனுய் நிற்பேனென் றெல்லாருமறிய வாண்டவருக்குவார்த்தைப்பாடுதந்தபின் புவிவாகமவனுக்காகாதென்பது வேதசத்தியமாகுமொழியமனுஷிராற்கட்டப்பட்ட வுபதேசமென்பதுபொய்தானே. அதேனெனில் வேதமாகச் சலோமோனெழுதின-உ-ம். புஸ்தகம். ரு-ம். அதி- ௩-ம். வசனத்தி லாண்டவரருளிச் செய்ததாவது தந்தவார்த்தைப்பாடெல்லாஞ் செலுத்தக்கடவாய். செலுத்தாயாகில் வார்த்தைப்பாடு கொடாதிருப்பது மிகவுநல்லதென்றார்.ஆகையால் விரத்தனுகத் தந்தவார்த்தைப்பாடு செலுத்தாமற் செய்தவிவாகமாகாதென்பது மனுஷருபதேசமென்னுமற் சர்வேசுரனிட்ட கற்பனையென்பது சத்தியந்தானே. கடைசியிலேபதிதர்க்கெல்லா மொருபுலியாகக்கல்வித்துறையெல்லாங்கடந்து நாலோ டறச்செல்வமுங் கூட்டியெங்குமொளிப்பெயர்பெற்ற பெல்லார்மீனென்பவனைத்தரங்கம்பாடியார் நகைத்தாற்போலவவரெழுதிவைத்த வசனத்தையிதிலே நிந்திப்பாகக் காட்டினூர்கள். அதாவதுமரணபரியந்தம் விரத்தனுக நிற்பேனென்றுண்டவருக்குவார்த்தைப்பா

ந்தவ ஞேரோரிடத்தில் ஸ்திரீபோகத்தில்வி ழைந்து செய்யும்பாவத்திலேயு மவனந்தவா ர்த்தைப்பாடு தந்தபின்பு விவாகஞ்செய்தா ல துவேயதிகபலத்தவக்கிரமமாகுமென்று சொன் ன சாஸ்திரியானவ ரெழுதிவைத்தார். அதற்கவ சொன்ன நியாயமேதெனி லோரோரிடத்துச் சற்றிலேவிழுவதைப்பார்க்கவதிலேபடுத்துப்பு ண்டுசுகமாய்க்கிடப்பதேயதிக வக்கிரமமாவது பாலவோரோரிடத்துப் பரஸ்திரீபோகத்தில்வி ழைந்து தாஞண்டவருக்குத்தந்த வார்த்தைப்பா மீறிச்செய்தபாவத்தைப்பார்க்க மரணபரியந் மந்தவார்த்தைப்பாடு செலுத்தாதிருப்பேனெ று தனக்காகாத விவாகத்தைச்செய்யத்துணி து மிகவுங்களவக்கிரமமென்றார். இதுவே நகை கத்தகு மக்கிரம நியாயமென்று தரங்கம்பாடி ாருக்குத்தோன்றி யிதிலே நிந்தித்தார்கள். ஆ கயா லோரோரிடத்துப்பறைச்சேரியிற்பிராம னன் புகுவதைப்பார்க்கத் தானதிலேவீடுகட்டி குடியாய்க்கிடப்பது நல்லதென்பார்கள். அப்ப டியே கண்ட நியாயத்தை மறுத்துச் சலஞ்சாதி தயாவரு மதிகெட்டெல்லோரு நகைப்பப்பித றுவார்களல்லோ. மற்றப்படி- அர்ச். - அகு தீனுங்கைமைச் செல்வமென்னும் புஸ்தகத்தி - ௯௩ - ம். அதிகாரத்தில் விரத்தஞகாண் டவருக்கு வார்த்தைப்பாடுதந்தபின்புவிவாகஞ் செய்தாற் பரதாரத்தைத் தீண்டிச் செய்யப் படுந் துரோகத்தைப் பார்க்க வதுவே யக்கி மபாதகமாகு மென்றெழுதிவைத்தார். ஆகை ாலிது தரங்கம்பாடியாரிதிலே சொன்னதா ரம்பொய் தானே.

த்தொன்பதாம்பேதகமறுத்தல் முற்றிற்று.

## உயம். பேதகமறுத்தல்.

தரங்கம்பாடியாரிதிலே சொல்லுந் தன்மை யாவது: " சறுவேசுரன் திருவிளம்பத்தின பூர் " வத்துபதேச மெங்களுக்குப் போதிவிக்கிற " தாவது: எதாகிலும்வாயின்வழியா யுள்ளேபு " குகிறது மனுஷினை யசுத்தம்பண்ணு கிறதில் " லையென்றும் - மத்தேயு - ௰ரு - அதி - ௰க - கவி. " சகலபோசனவகைகளும் பதார்த்தங்களுஞ்சுத் " தமான சிஷ்டிப்படைப்புகளா யிருக்குமென் " றும்விசுவாசமுள்ளவர்க ளத்தனை வித்தியாச " ம்பண்ணமலு மொன்றுக்குமய்யப்பட்டுச் சந் " தேகப்படாமலுஞ் சுத்தமானதுவுமாய் நல்ல " துவுமாயிருக்கிற மனதோடே ஸ்தோத்திர " ம்பண்ணி வாங்கி யனுபவிக்கலா மென்றும் " லூக் - ௰ - அதி - எ - கவி. கொருந்தியாருக்கு " க - திரு - ௰ - அதி - உ௰ரு - உ௰சு - உ௰எ - கவி. " தீமோ - க - திரு - ச - அதி. ௩ - ச - கவி. தீத்து - க - " அதி - ௰ச - ௰ரு - கவி. இதுக்கெதுகையாக இருக் " கிறத்தைப் படிப்பிக்கிறதென்கிறது துன்மன " சுக்களுடைய வுபதேசமாச்சுதென்றும் பூரு " வத்துபதேசம் போதிவிக்கிறது. இதுக்கெது " கையாக மனுஷிருடைய புதுவுபதேசம் போ " திவிக்கிறதாவது: சகலவகையான போச " னங்களை வித்தியாசம்பண்ணம லெண்ணெ " ண்ணைக்கு மென்னேரம் பார்த்தாலும்பொசி " க்கிறதென்கிறதுக்குக் கிறீஸ்துவர்களுக் குத் " தாரமில்லையென்று மிப்படிசெய்கிறது சாவு " க்கிடமான பாவமாயிருக்குதென்றுஞ் சொ " ல்லுகிறது. இதுகள்விலக்கியிருக்கிற நேரங்க

" ளோவென்றொருசந்தி நாற்பதுநாட்கள்
" சதுர்க்கால நாட்களும் வெள்ளிசனி சிறிது
" அற்.- வர்களுடைய வெஸ்வாக திருநாட்களு
" மிதுகளப்படிக்கொத்த நேரங்களென்று ம
" னுஷிருடைய புதுவுபதேசம்போதிவிக்குது,,
என்றார்கள்.

வாயிற்புகுந்த பொருளா லாத்துமத்துக்கழு க்காகா தென்றும் பாவமின்றி யுண்ணப்படாத பொருளில்லையென்றும் வேதசத்தியமாக விதி லே தரங்கம்பாடியார் சொன்னதின்பிறகு வெ ள்ளிசனிதபசுகாலமுதற்பலநாளுமாம்ஸத்தையு ண்ணலாகாதென்றுவிலக்கி யதுண்டாற் பாவ மாகுமென்று நாமேபடிப்பிக்கிறது சொன்ன வேதசத்தியத்துக்கு விரோதமாகு மென்றார்க ள். ஆகிலும்- அப்போஸ்தலர் முயற்சியாகமத்தி ன்- ௰ரு-ம். அதி-உ௰அ-ம்.வசனந் துவக்கிப் பொய்யான தேவர்களுக்குப் படைக்கப்பட்ட பொருளையு மிரத்தஞ்சிந்தாமற் கொல்லப்பட்ட பொருளையுந்தின்னலாகாதென்றுவிலக்கித்தின் று லதுபாவமாகுமென்று- இஸ்பிரீத்துசாந்துவி ணேவலா லப்போஸ்தலர் கட்டளையிட்டார்கள ல்லோ. அந்தக்கட்டளைமீறிவிலக்கினபொருட்களை யுண்டா லதுபாவமாகுமல்லோ. ஆசையாற்பா வமின்றி யோரோரிடத்துண்ணப்படாத பொ ருளுண்டென்று நிச்சயமாகி யவர்களிதிலே சொன்னது பொய்யாச்சுதல்லோ, இதற்கவர்க ள்சொல்லத்தகுமறுவுத்தரமாவது-அந்தப்பொ ருட்களைத் தின்றதினாற் பாவமில்லை யதுகளை வி லக்கினகற்பனை மீற்னதினாற்பாவமாகுமென்பா ர்கள். அப்படியே நாமு மாம்ஸத்தையுண்பது பாவமென்னுமலதை விலக்கினநாளிலே யுண்ப

துமாத்திரம் பாவமென்போம். ஆகையால்- நாம்படிப்பிக்கு முறையேவேதசத்தியத்துக் கொவ்வாத தப்பிதமென் றவர்கள்சொன்னபோது பொய்யே சொன்னார்களல்லோ. மீளவுமிதனை மறுத்துத் தரங்கம்பாடியார் சொல்லுந் தன்மையாவது பாவமில்லாம லுண்ணத்தகும்பொருளைச் சிலநாளுண்ணாதபடிக் குரோமான் சபைவிலக்குவானேன். விலக்கினாலு மதன்படியேநடந்து கொள்வது சர்வேசுரனுக்குப் பிரியமாகுமோ வென்பார்கள். ஆனாலும்- எரோமியஸ்- ஆகமத்தின்- ௩ரு-ம். அதிகாரத்திலெழுதினபடியேபாவமில்லாமற் குடிக்கத்தகு முந்திரிகைப்பழத்தின்ரசத்தைக் குடியாதபடிக்கு- யோனதபென்பவன் விலக்குவானேன். அவன்விலக்கினபடியே யதைக்குடியாமலிருந்தவர்களை யாண்டவர் தாமே யதிலெழுதினபடித் தோத்திரம்பண்ணுவானேன். தமக்குப்பிரியமாகாமலோ வவர்களைத்தோத்திரம்பண்ணினார். ஆகையாற் சரீரத்தையடக்கவுந் தவத்தைச்செய்யவுஞ் சிறிதுநாளாகிலும் பலபண்டங்களை யுண்ணாதிருக்கத் திருச்சபை கட்டளையிட்டது முத்தம முறைமைதானே. கட்டளையிட்டபடி நாஞ்செய்வதும் வேதத்தில் ஸ்துதிக்கப்பட்ட முறைமைதானே.

இருபதாம்பேதகமறுத்தல் - முற்றிற்று.

## உக-ம். பேதகமறுத்தல்

இதிலேதரங்கம்பாடியார்பொய்சொல்லாதிருத்தலுந்தந்தவார்த்தைப்பாட்டைச்செலுத்தலுமிட்டவாணைமீறாதிருத்தலுமெவர்க்குங்கடனுண்

டென்று நியாயத்தின்படியே சொன்னபிற்பா
டெழுதினதாவது: “ இதுக்கெதுகையாக மனு
‘ ஷீருடைய புதுவுபதேசம் போதிவிக்கிறதாவ
‘ து: பதிதர்களுக்காணையை யானாலுமவர்களுக்
“ கு ஞாயத்தையானாலும் பார்க்கத் தேவையில்
“ லையென்றும் ரோமான்சபையார்க்குப் பிறை
“ யோசனமுண்டாகத் தன்னுடையவாணையை
“ யும் வாற்றைதப்பாட்டையு மீறுகிறதற்குத்தா
“ ர மிருக்குதென்றும் பாப்புவென்கிறவர் குடி
“ யானவர்கள் தங்கள்பிறபுமார்களுக்காணையிட்
“ டுக்கொடுத்தவாணையை யபத்தம்பண்ணக்கு
“ டியானவர்களைக்குற்றமில்லாமற்காற்கலாமெ
“ ன்றும் பின்னையவர் மற்றச்சகல நேற்றிக்க
“ டன்களையுமாணைகளையு மபத்தம் பண்ணலா
“ மென்றும்போதிவிக்கிறது. இந்தப்படிக்குக்
“ கொன்ஸ்தாஞ்சிய பட்டணத்திலே கூடிவந்
“ த கொஞ்சிலியொவென்று சொல்லப்பட்ட ச
“ ங்கத்தார்தீர்த்துப் போட்டு ராயருடையபட்
“ டோலைக்கு மெங்குநடத்தையா யிருக்கிறவிசு
“ வாசத்துக்கும் விரோதமாக வவர்கள் யுவா
“ னுசென்பவருக்குவருத்திவிச்ச மரணத்திலே
“ யத்தையொப்பிவிச்சார்கள் ,, என்றுந்தரங்
கம்பாடியாரிருபத்தோராம் பேதகமாகவெழுதி
வைத்தார்கள். பதிதருக்குத்தந்த வார்த்தைப்
பாட்டைச் செலுத்தத்தேவையில்லையென்று நா
ம்படிப்பித்ததாகத் தரங்கம்பாடியா ரிதிலே
சொன்னார்கள். சொன்னதையு மொப்பிக்கத் த
ந்த நம்பிக்கைமீறி யோவானுஸென்கிற பதித
னையுரோமான்சபையார்கொன்றசெய்தியையெ
ழுதினார்கள். ஆகிலு மிதிலே யவர்கள்சொன்னது
மதையொப்பிக்கக் கொண்டுவிட்ட வத்தாட்சியு
மிவ்விரண்டு மிரண்டுபொய்தானே. பதிதர்க்கு

த்தந்த வார்த்தைப்பாடு செலுத்தத்தேவையில்
லையென்கிற வபத்தத்தைத் திருச்சபைபடிப்ப
ணையாகவுரோமான்சபையாரிலொருவனாகிலுமெ
ழுதினதென்று காட்டமாட்டார்களல்லோ. லுத்
தேர்சொன்ன தப்பிதங்களை மறுக்கத் திறிதேந்
தென்னு நகரிற் கூடினவுரோமான் திருச்சபை
௲௫௫௧-ம்.வருஷம்-௴௬௯-ம்.கூட்டத்திலேயுமறு
வருஷம்-௴௫-ம்.கூட்டத்திலேயும்-௲௫௱௨-ம்.
வருஷம்-௴௮-ம். கூட்டத்திலேயுஞ் சகலபதிதரு
க்கு நம்பிக்கைக் கட்டளையிட்டபின்பு தந்தநம்பி
க்கையாராகிலுமீறி விரோதஞ்செய்யாதபடிக்கு
விலக்கி யதைமீறின யாவரும்வஞ்சகர்க் கேற்ற
வாக்கினைக்குள்ளாகக் கடவார்களென்று கட்ட
ளையிட்டதாமே. இதிப்படியாகையிற் பதிதர்க்கு
த்தந்த வார்த்தைப்பாடுசெலுத்தத் தேவையில்
லையென்றுரோமான்றிருச்சபை படிப்பித்ததாக
வெட்கமில்லாம லெப்படி தரங்கம்பாடியாரெழு
தத்துணிந்தார்கள். யோவானூஸென்பவனைக்
கொன்றசெய்தியோவெனி லுரோமாபுரியிராய
னவனுக்கு நம்பிக்கைதந்துதிருச்சபைக்கூட்டத்
துக் கழைத்ததுள்ளதுதானே. பிற்பாடதிலேய
வனைச் சுட்டுக்கொன்ற துள்ளதுதானே. ஆகி
லுமவனுக்குத் தந்தநம்பிக்கை யிப்படியு மீறுதி
ருந்ததுள்ளதுதானே. † அதெப்படியென்று லி

---

† யோனூஸ் அநேககலாபகொலைமுதலிய பாதகங்களு
க்குக் காரணமான வொருபுதுமதத்தை யுண்டாக்கியிரு
ந்தாலுந் தன்போதனையிலொருபழுதில்லையென்று சாதிப்
பான். ஆகையாலதைப் பரிசோதிக்குஞ்சங்கத்துக் கிராய
னவனையழைப்பித்து வழியிலவனுக்குத் தடையொன்றில்
லையென்கிறதற்குமாத்திர நம்பிக்கை யோலைகொடுத்து
அவன்தன்போதனைக்கு நடத்தைக்குஞ் சரியானநியாயங்
கொடாவிட்டா லாக்கினைதப்பாதென் றவனுக்கறிவித்தி
ருந்தானென்று மில்னரென்கிற சாஸ்திரி யத்தாட்சியோ
டெழுதினூர்.

ரயனவனுக்கு நம்பிக்கை கொடுக்கும்போது நீ
ந்தோடிப்போனு லுனக்காக்கினையிடுவோமெ
ன்றார். அந்தப்பதிதனும் வந்தவிடத்திலே முன்
தான்சொன்ன வபத்தங்களை யந்தத்திருச்சபை
கொப்பிக்கக்கூடாதென்றுகண்டொருநாளோ
டித்தோடிப்போனான். ஓடினவனைப்பிடித் தாக்
கினையிட்டார்கள். அப்படியே யக்காலத்துச்செ
திகளை யெழுதினசிலபதிதர்முதலா யெழுதிவை
த்தார்கள். இதிப்படியாகையி லிதிலே யுரோமா
ச்சபையார் தந்தநம்பிக்கைமீறினதென்பவோ
யாவானுமேஸ்கிறபதிதன் றந்தவார்த்தைப்
பாடு மீறினதென்பவோ. இவனே தான்சொன்
னதைச் செலுத்தாமற் றனக்குக்கட்டளையிட்ட
தமீறிச் செய்தநுரோகத்துக் கேற்றவாக்கினை
யடைந்தானென்பது நியாயமல்லோ.

இருபத்தோராம்பேதகமறுத்தல்-முற்றிற்று.

## உஉ-ம். பேதகமறுத்தல்.

தரங்கம்பாடியா ரிதிலே யெழுதினதாவது
சறுவேசுரன் திருவிளம்பத்தின பூர்வத்துப
'தேச மெங்களுக்குப் போதிவிக்கிற தாவது:
'ஒவ்வொருவாற்றும மல்லது வொவ்வொரும
னுஷ மேற்பட்டவர்களாயிருக்கிற துரைத்தன
முள்ளவர்களுக்கு மிராசாக்களுக்குஞ் சனங்க
ளுடைய பிறபுமார்களுக்குங் கீழ்ப்படிஞ்சிருக்
'கவேணுமென்று போதிவிக்கிறது. றோம்-௰௩
அதி-௧-கவி. இதுக்கெதுகையாக மனுஷீருடை
'ய புதுவுபதேசம் போதிவிக்கிறதாவது; செ
'ங்கோலென்றும் லோகப்பட்டமென்றுஞ்சொ
'ல்லப்படுகிற லோகதுரைத்தன முள்ளவர்க

“ ளுக்கு ஞானிகளாயிருக்கிறபேர்கள் கீட்பட்ட
“ வர்களாயிருக்கவில்லை. ஆனாலோ ஞானிகளா
“ யிருக்கிறவர்களுமா யிராதவர்களுமா யிருக்கி
“ றபேர்களெல்லாரும் பாப்பென்கிறவர்களுக்
“ குக் கீட்படிந்திருக்கவேணுமென்று போதிவி
“ க்கிறது: இவர் தம்மைத்தானே சூரியனுக்கொ
“ ப்பனையிட்டுச் சந்திரனுக்கு எம்பரதோரென்
“: கிறாயனையொப்புக்கொடுக்கிறா ரிதின்முகா
“ ந்திரமாக விராசாக்களு மெம்பரதோர்மார்க
“ ளுங்கீட்படியுதலுக்கும்பணிசெய்யுதலுக்கு ம
“ டையாளமாகவவருக்குப் பாதமுத்தி செய்கி
றார்கள் “ என்று தரங்கம்பாடியா ரெழுதினார்க
ள்.

இதிலே தரங்கம்பாடியா ரெழுதினதாவது-எவரும்-ஆளும்பிரபுக்களுக்குக் கீழ்ப்படிந்திருப்பது வேதப்படிப்பினையென்றார்கள். இதுசத்தியந்தானே. ஆகிலு மிதற்கு விபரீதமாய்க்குருக்களுஞ் சந்நியாசிகளும் லௌகீகவிராசாக்களுக்குக் கீழ்ப்படியத்தேவையில்லையென்று நாம்படிப்பிக்கிறோமென்பது பொய்யாமே. எல்லாருக்கும்பொதுவா யிராசாவிட்டநீதியுள்ளகற்பனை மீறாதேநடப்பது சந்நியாசிகளுக்குப் பொதுக்கடனென்று படிப்பித்தோமொழிய வேறுபட வுரோமான்திருச்சபையாரிலொருவன் படிப்பித்ததாகத் தரங்கம்பாடியார்காட்டமாட்டார்கள். ஆகிலுங்குருக்கள் - மேலேயுமற்றச் சந்நியாசிகள்-மேலேயுங் குற்றமுண்டென்று லௌகீகவிராசாக்களிடத்திலே வழக்குப்பேசவு மவர்கள்-மேலேகுற்றஞ்சுமந்ததென்றவர்களை யிராசாக்கள் தண்டிக்கவுங்கூடாதென்று நாமே படிப்பிக்கிறதுள்ளதுதானே. இது- அர்ச்.- பாப்புக்கள் ஸ்

தாபித்தகட்டளையினாலேயு மற்றவிராசாக்களு ள்ளநியாயத்தைக்கண்டு வலியஸ்தாபித்த மரியாதையினாலேயும் வந்தமுறைமையொழிய வேதவிஷயத்தி லெலவருக்குமேலாய் நிற்குங்குருக்களை தஞ்சிஷ்ரிடத்திலேவழக்குப்பேசவுந்தஞ்சிஷ்ராலேதண்டிக்கப்படவு நியாயமல்லவென்று கண்ணுடையயாவர்க்குந்தோன்றுமல்லோ. ஆகிலுமிந்தநியாயமுள்ளமுறைவேதத்துக்குவிரோதமாகமனுஷராற் ஸ்தாபிக்கப்பட்டதென்றுதரங்கம்பாடியார் சொன்னதுபொய்தானே. அப்போஸ்தலர் நாளிற்றுவக்கின முறையிதொழிய விதற்குவிபரீதமாய்ப் பூருவத்திருச்சபையிலே நடந்ததாகத் தரங்கம்பாடியா ரொப்பிக்கமாட்டார்கள்.

இருபத்திரண்டாம் பேதகமறுத்தல்முற்றிற்று.

## உங-ம். பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார்சொல்லுந்தன்மையாவது: "சறுவேசுரன்திருவிளம்பத்தினபூருவத் "துபதேச மெங்களுக்குப் போதிவிக்கிறதாவ "து: அந்திக்கிறீஸ்துவானவன் சறுவேசுரன் "பாவனையாய்ச் சறுவேசுரனுடைய தேவாலே "யத்திலேயிடம்பெற்றுப் போயுருக்கார்ந்திரு "ந்து சறுவேசுரனுக்கடுத்ததைத் தனக்குத் "தானேயெடுத்துப்போட்டுக் கொள்ளுவானெ "ன்றும்-தெசலோ-உ-திரு-உ-அதி-௪-கவியே "ழுமலைகளின்மேலே நிற்கிறதுவுமாய்ப் பூமியி "லுடையவிராசாக்களின்பேரிலேயிராச்சியபா

"சம்பண்ணுகிறதுவுமாயிருக்கிற மகாபெரியப
"ட்டண மவனிருக்கிற விராசதானிப்பட்டண
"முமாயிருக்குமென்றும் போதிவிக்கிறது.யுவா
"ணிசு-அறி-பொஸ்தகம்-௱எ-அதி-௧-ல அ-கவி.
"பட்டணம்ரோமாபுரிதானே. இதுக்கெதுகை
"யாக மனுஷிருடைய புதுவுபதேசம்போதிவிக்
"கிறதாவது: அந்திக்கிறீஸ்துவானவன் யூதர்க
"ளுடையசாதியிலே தானென்கிறவனுடைய
"கோத்திரத்திலேயிருந்துவரவேணுமென்றும
"வனுடைய விராச்சியத்தினிராசதானிப்பட்ட
"ணமல்ல தவனிருக்கிறதானம்- எருசலெமெ
"ன்கிறபட்டணத்திலே யிருக்குமென்றும் "
"போதிவிக்கிறது. இதெல்லாந் தரங்கம்பாடி
யாரெழுதின கொடுமொழிவசனம்.

சேசுகிறீஸ்துதந்த சத்தியவேதத்தை மறுத்துநீக்கவுங் கிறீஸ்துவின் றிருநாமம் - நிந்தித்தொழிப்பவுமவருக்கெதிர்பகையாக- அந்திக்கிறீஸ்துவென்னப்பட்ட வொருபெரும்பாவி யுலோகத்திலேபிறந்து புண்ணியத்தைப் பகைத்தாருவானென்று வேதவுதாரணங்களிறு லறிந்திருக்கிறோம். இந்நாட்பதிதரோடே தரங்கம்பாடியாருஞ்சொன்ன -அந்திக்கிறீஸ்து- அர்ச்.-பாப்புத்தானேயென்று காட்ட வப்படிக்கொத்த பாவி யுரோமாபுரியிலே யாருவானென் றிதிலேயெழுதினார்கள். எழுதினதுமன்றி யிதுவே வேதசத்தியமென்றார்கள். ஆகிலுமிதுவேயக்கிரமமான பொய்யென்னக்கடவோம். ஒரிடத்கிலாகிலும் வேதவுதாரணங்களிலே யந்திக்கிறீஸ்துவந்தாளுமிட மின்னதென்று வெளியாய்க்குறிக்கப்பட்டதல்ல. ஆகையா லிவ்விடமவ்விடமென்பது வேதசத்தியமுமல்ல. தரங்கம்பாடியாரோ

வனிற் சொன்னதையொப்பிக்க-அர்ச்.-அருள
பர்கண்ட காட்சியாகமத்தின்-௧௭-ம். அதிகா
த்தைக்கொண்டுவிட்டார்கள். அதிலேசிவந்த
ட்டாடையுடுத்து விரியொளி மணியணியணிந்
து மானமாட்சியு நாணமுமிழந்து பலவழிக்கா
த்தழுந்தி யேழுமலைமேலாண்டிருந்த வொரு
வேசையைக்கண்டார். கண்டவேசையே யேழு
மலையுள்ளவுரோமாபுரியாளும்-அர்ச்.-பாப்புக்க
ளயென் றெத்துக்கொள்ளவேண்டுமென்று ப
தர்சாதிக்கிறார்கள். ஆகிலுமதிலேதானே யந்
த வேசைமற்றவுலோகத்தரசரை யாளும்பட்ட
ணமென்று-௧௮-ம். வசனத்திலெழுதியிருக்கவு
ம் பலமகாத்துமாக்களையுஞ் சேசுநாதர்வேதசா
ட்சிகளையுங்கொன்று சிந்தினவிரத்தத்தா லந்த
வேசை நிறைந்திருப்பாளென் றுறும்வசனத்தி
லெழுதியிருக்கவு மிதெல்லாம்-அர்ச்.- பாப்புக்க
ளிப்போதாளாநிற்கு முரோமாபுரிக்குச் செல்
லாதல்லோ. அதிலே- அர்ச்.- அருளப்பர்சொ
ன்னவேசை யுரோமாபுரியென்று சொல்லவே
ண்டுமாகில் - தெரோன்முதற்கொண்டு பலவக்
கியானிகளான - இராஜர் சேசுநாதர்சத்தியவே
தத்தைப்பகைத்து மட்டில்லாத மகாத்துமாக்க
ள வேதத்துக்காகக்கொன்று தெருவெல்லாஞ்சி
ந்தினவிரத்தமோடக் கொடுங்கோல் கோணியா
ளாநின்ற வக்கியான வுரோமாபுரியைக் குறித்
தாரொழியச் சத்தியவேத வுரோமாபுரியைக்கா
ட்டினவரல்லவென்று பற்பலவேதபாரகர் சொ
ன்னபடியே சொன்னால் - நியாயத்துக்கொத்தி
ருக்குமல்லோ மற்றப்படி பலவுவமையாலெழுதி
னதைத்த விஷேயமேகூசாமல் வேதசத்தியமெ
ன்பாருண்டோ. இப்படிப்பலவுவமையால் - ம

றைந்த விரகசியத்தைதவேதபாரக ரொருங்குட ன்கூடி யெடுத்துக்காட்டி யந்தவேசை யுவமை யாற்குறிக்கப்பட்டது ரோமாபுரிதானென்று மு ரோமாபுரியிலாளும் பாப்புக்க ளென்றுமெழுதி வைத்திருந்ததாகி லப்போதனதச் சத்தியமாக வொத்துக்கொள்ளுவது நியாயமாமே. ஆகிலு ம்- அர்ச். - அருளப்பர் சொன்னவேசை சத்தி யவேத வுரோமாபுரிதானென்று மதிலேயாளா நிற்கும்- அர்ச். - பாப்புக்களென்றும் பூருவத் திலுள்ள வேதபாரகரிலொருவரிருவராயினு மெ ழுதின தாகத்தாங்கம்பாடியார் காட்டக்கடவா ர்கள். அப்படியேகாட்டக்கூடாதாகி லிதுவேபூ ருவதிருச்சபை படிப்பித்த வேதசத்தியமென் றெப்படிவெட்கமில்லாமலெழுதக்கூசாதேபோ னார்கள். நாமோவெனிற் சொன்னவந்திக் கிறி ஸ்து- எருசலேமென்கிற பட்டணத்தி லாளு வானென்றது சரியேயென்றாலும் பலவேதபா ரகரிப்படியெழுதினதொழிய- அர்ச். - அருளப் பர்கண்டகாட்சியாகமத்தின்-௰௧-ம். அதி-அ-ம். வசனத்திற் சொன்னவந்திக்கிறீஸ்து கொன்ற வேதசாட்சிகளுடைய சரீரங்க ளவர்களுடைய கர்த்தர் சிலுவையிலறையுண்ட பட்டணத்தின் தெருக்களிலே கிடக்குமென்றதைப்பற்றி யந்தி க்கிறீஸ்து- ஆளாநிற்கும்பட்டணமேயெருசலே மென்றோம். ஆகிலுமிதுவும் வெளிப்பொருளாக வேதத்திலெழுதப் படாததினாலு மிதற்குத்தி ருச்சபை விவரப்படிப்பனையில்லாததினாலுமிது நியாயத்துக் கொத்திருக்குமென்பதொழியவிது வே வேதசத்தியமென்று ரோமான்றிருச்சபை யாரிலொருவரும் படிப்பித்ததல்ல. ஆகையாலி துவே நம்முடைய திருச்சபை வேதப்படிப்பனை

யென்று தாங்கம்பாடியாரிதிலே யெழுதினது பொய்யென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படியே சொன்னவந்திக்கிறீஸ்து- யூதர்வகையிற்பிறப்பானென்றும் யூதர்களுக்குள்ளே தானொன்றவனுடைய கோத்திரத்திற் பிறப்பானென்றும் வேதசத்தியமாகச் சொன்னோமென்றது பொய்தானே. வேதத்திலூன்றிய நியாயமாக மாத்திரமதுதோன்றுமென்று நாமேபடிப்பிக்கிறோம்.

கடைசியாகப் பதிதரிதிலே யோசிக்கும் வகையாவது - அர்ச். - சின்னப்பர் தெசலோனியபட்டணத்தாருக்கெழுதின-உ-ம். நிருப-உ-ம். அதி-௪-ம். வசனத்திற் சொன்ன-அந்திக்கிறீஸ்து சர்வேசுரனுடைய கோயிலிலே வீற்றிருந்தாளுவானென்றார். ஆனாற்சர்வேசுரனுடையமெய்யான ஞானக்கோயிலேதெனிற் சேசுநாதர்ஸ்தாபித்த திருச்சபைதானல்லோ. ஆகையாற் சேசுநாதர் திருச்சபையில் வீற்றிருந்தாளாநிற்கும் பாப்புகளே யந்திக்கிறீஸ்துவென்று சொல்லக்கடவோமென்று லுத்தேருக்குப் பிரதான சிஷனாகிய மேலந்தோன்முதற்கொண் டிந்நாட்பதிதர் யோசித்தெழுதிவைத்தார்கள். இதெல்லாம் பொய்யாயினும் பகைவொழிந்தவாயுதத்தைத்திருப்பி யவர்களை நாமேகுத்தியூடுருவிச் சங்கரிக்கும்படிக்குச் சொன்னதெல்லா மெய்யென்றெடுத்துக்கொண்டு நாமேசொல்லுந் தன்மையாவது பதிதர்சொன்னபடிச் சேசுநாதர் ஸ்தாபித்தமெய்யான திருச்சபையென்கிற கோயிலிலொருதலைவனாக - அந்திக்கிறீஸ்து - ஆளாநிற்பானல்லோ. ஆனால்சொன்ன வந்திக்கிறீஸ்து அர்ச். - பாப்புக்களொழிய வேறில்லையென்று பதிதர்தாமேசொன்னார்களாகையால் - அர்ச். - பா

ப்புக்கள்-தலைவராயாளாநிற்குந் திருச்சபைசே சுநாதர்ஸ்தாபித்த மெய்யான திருச்சபையென் று சொல்லவுங்கடவார்கள். ஆகிலும் பதிதருஞ் சொன்னபடிச்சேசுநாதர் திருச்சபை யொன்று ய்நிற்குமொழிய வேறுபடப் பலவாகாதென்ப து நிச்சயமாமே. ஆகையால்-அர்ச்.- பாப்புக்க ளாரு ம்ரோமான் திருச்சபையை விட்டுப்பிரிந் த லு தேரானிகளுங் கல்வினியாணிகளு மற்ற வகைப்பதிதரெல்லாருஞ் சேசுநாதர்ஸ்தாபித்த மெய்யான திருச்சபைக்குப் புறத்திப்பட்டவர்க ளென்று சொல்லவேண்டியதல்லோ. ஆனால் மெய்யானதிருச்சபையிலொழியப் புறத்தியிலேக ரையேற்றமில்லையே யாகையால்-லுத்தேரானிக ள்-முதற்கொண்டு பதிதர்க்கெல்லாங் கரையேற் றமில்லையென்று தாங்களே சொல்லக்கடவார்க ள். இதெல்லா மிப்படியாகையிற் பதிதர்சொன் ன நியாயத்தின்படியே தங்களுக்கு நரகமேகதி யொழியவேறில்லை வேறேகதியை நம்பவேண்டு மாகிற் சொன்னதை மறுத்துவிடவும் வேண்டு மென்பது நிச்சயந்தானே.

அர்ச்.- பாப்புத்தானே யந்திக்கிறீஸ்துவென் று பதிதர்சொன்னவபத்தத்தைக்கொண் டிதெ ல்லாஞ் சொன்னோமல்லோ. ஆகிலுமுள்ளபடிச் சொல்லவேண்டுமானால் வேதசத்தியங்களைமறு த்தா லொழிய வரத்தகும்- அந்திக்கிறீஸ்து அர்ச்.- பாப்புக்களென்று சொல்லப்படாதென் றெளிதா யொப்பிப்போம். தரங்கம்பாடியார் குறித்த தெசலோனியாருக் கிரண்டா நிருபத் தி ரண்டாமதிகார நாலாம்வசனத்திலே அர்ச்.-சி ன்னப்பரந்திக்கிறீஸ்துவைக்குறித் தெழுதினதா வது தெய்வமென்னப்படுவதும்-அல்லதுவணங்

கப்படுவதுமாகிய வெல்லாத்தையு மவன்பகைத்
ததிலேயுந் தன்னையுயர்த்தினதிறற் றன்னைத்
தேவனாகக்காட்டித் தேவாலயத்தி லிருந்துகொ
ள்வானென்றார். அப்படியே தீர்க்கதரிசியாகிற
தனியேலென்பவர் -௰௩-ம் அதி. ௬௰௭-ம். வச
னத்தி லந்திக்கிறீஸ்துவைக்குறித்துச் சொன்ன
தாவது- அவனேதன்பிதாக்கள்வணங்கின தேவ
னையுமெண்ணான் மற்றத்தேவர்களையுங் கைக்
கொள்ளான். எல்லாத்தையும்பகைத்தெழுந்தெ
திர்ப்பானென்றார். அர்ச்.- அருளப்பர் -௧- திரு
பத்திரண்டாமதிகாரம் -௨௰௨-ம். வசனத்திற்
சொன்னதாவதுபொய்யனொனிற் சேசுவைக்கி
றீஸ்துவல்லவென்பவனொழிய வேறல்ல.இவனே
பிதாவையுஞ் சுதனையுமறுத்தவனாயவர்க ளில்
லையென்னும்-அந்திக்கிறீஸ்துதானே யென்றார்.
ஆகையா- லந்திக்கிறீஸ்துவி னியல்பேதென்னி
லொன்றாயிருக்கு மெய்யான தேவனையும் பலவா
யிருக்கும் பொய்யான தேவர்களையும்வணங்கா
மற் பகைப்பதுமன்றியே தன்னையொழிய வே
றொருதேவனுங்கிறீஸ்துவுமில்லையென்று தானொ
ருவனெவராலும் வணங்கப்படும்படிக்கவனே தே
வாலயத்திலே தன்கொலுவைத்து வீற்றிருந்தா
ளாதிற்பது சொன்னவந்திக்கிறீஸ்துவி னியல்
பாமென்பது வேதசத்தியமாமே. இதிப்படியா
கையில் - அர்ச்.- பாப்புக்களித்தாள்வளைக்குங்
கிறீஸ்துவை மறுக்கவுமில்லைத் தங்களைக்கிறீஸ்
துவென்று சொல்லவுமில்லை. அப்படியே யவர்க
ள் பொய்யான தேவர்களை மறுத்துப்பகைப்ப
தொழியப் பிதாச்சுத னிஸ்பிரீத்துசாந்துவென்
னு மூவாட்களாகிய வொருமெய்யான சர்வேசு
ரனை மறுக்கவுமில்லைத் தங்களை வணங்கத்தரு

சர்வேசுரனென்னவுமில்லை. திறித்துவ - ஏகசர்வேசுரனையு நம்மையிரட்சிக்க மனிதனுகியசேசுகிறீஸ்துவையுந் தாங்களே யுத்தமமுறையா யவர்ச்சிப்பதொழிய வுலகமெங்கு மிப்படிப்பட்ட தேவாராதனை வழங்கும்படிக் கெந்நேரமும்பிரயாசப்படுவார்களென்று கண்டிருக்கிறோம். ஆதலால் வேதசத்தியங்களை மறுத்தாலொழிய அர்ச்.- பாப்புக்களைவேதத்திற் சொல்லப்பட்ட வந்திக்கிறீஸ்துவென்று சொல்லவுங் கருதவுங் கூடாதல்லோ. ஆகையாலிப்பதவிப்பூருவ முனைகூரத்திட்டிறைபோல விதிலேசொன்ன தெல்லாத்தையு மூவிலேவேலாக மூவ்வசனங்களி லடக்கித்தருவோம். அதாவது - அந்திக்கிறீஸ்துவானவன் றன்னையல்லாதே வேறேகிறீஸ்துவுந் தேவனுமில்லையென்பான் - இதுவே வேதசத்தியம். அர்ச்.- பாப்புக்களோவெனில் - மெய்யானகிறீஸ்துவுந் தேவனு முண்டென்று வணங்குவதல்லாதே தங்களைக் கிறீஸ்துவென்றுந் தேவனென்று மொருகாலுஞ் சொன்னதில்லை - இதுவே கண்ணோக்கண்ட சத்தியம். ஆகையால் - அர்ச்.- பாப்புக்க ளந்திக்கிறீஸ்து வல்லவென்று சொல்லக்கடவோம். இதுவேபகலொளியொப்பத் தெளிந்து மறுக்கப்படாத சத்தியமாமே.

இருபத்துமூன்றும்பேதகமறுத்தல்.

முற்றிற்று.

## ௨௪-ம் பேதகமறுத்தல்.

இதிலே "சருவேசுரன்றிருவிளம்பத்தினபூர்வத்
" துபதேசமெங்களுக்குப்போதிக்கிறதாவது:

‘ இந்தலோகத்தைவிட்டுப்பிறிஞ்சு போறவர்க
‘ ளுக்குரெண்டுவழியல்லாமல்-இதிலுமதிலுமதி
‘ கமாயிருக்கிறதில்லை யிதுகளேதென்றால்-முத
‘ லாவதுமோட்சத்துக்குப்போறவழியிது மர
‘ ணத்தைவிட்டுக்கடந்து நித்தியசீவனத்துக்கு
‘ ப்போ யுள்ப்படுகிறவர்களுக் குண்டாயிருக்கு
‘ ம். இரண்டாவது - நரகத்துக்குப்போறவழி
‘ யிது பொல்லாதவர்களுக்கும் விசுவாசமில்
‘ லாதவர்களுக்கு முண்டாயிருக்குது ,, என்
று தரங்கம்பாடியார்சொல்லி யிதற்குப் பலவு
காரணங்களையுங் குறித்தபிற்பாடு சொல்லுந்
நன்மையாவது: ‘‘ இதுக்கெதுவாயாக மனுஷ
‘ ருடையபுதுவுபதேசம் போதிவிக்கிறதாவது:
‘ மரணத்தையடைந்து பிரிந்துபோனவாற்று
‘ மங்களுக்கு அனேகம்ஸ்தலங்கள் குறிச்சிருக்கி
‘ றதென்றுபோதிவிக்கிறது. இதுகளேதென்று
‘ ல் மோட்சம், நரகம், பழையதெஸ்தமேந்தி
‘ லேயிருந்த- அற். - பிதாப்பிதாக்களின் ஆற்
‘ றுமங்களுடையவறை, ஞானஸ்நானம்பெருமற்
‘ செற்றுப்போனசிறுபிள்ளைகளினுடையவாற்று
‘ மங்களிருக்கிறவிருட்டறை, உத்தரிக்கிறஸ்த
‘ லம், பின்னையுத்தரிக்கிறஸ்தலமண்டையிலேய
‘ திலுஞ் சத்தேசலக்கறணையுமாய்நெளிதமுமா
‘ யிருக்கிறவேறொருஸ்தலமென்றுசொல்லுவது ,,
இதெல்லாந் தரங்கம்பாடியாரெழுதி யிதையொ
ப்பிக்கப் பெல்லார்மினென்பவருத்தரிக்கிறஸ்தல
த்தி னிரண்டாம்வகுப்பு - எ-ம். அதிகாரத்திற்
சொன்னதைவாசிக்கச்சொன்னார்கள்.

இற்றைவரைக்கு மெழுதினதைப்பார்க்கி லிதி
லே தரங்கம்பாடியார் தேவபாதாமுதற்கொண்
டெல்லா மோட்சவாசிகளைப்பகைத்து தாமே ய

வர்களை வணங்கலாகாதென்றும் வேண்டிக்கொள்ளலாகாதென்று மவர்களே செவிடராயெங்கள்-மன்றாட்டைக் கேளார்களென்றுமவர்களே குருடராயெங்க ளிடையூறுகளைக் காணார்களென்றுந் தூஷித் திழிவுறக்கக்கினதுந்தவிரப் பூவுலகிலுள்ள நல்லதெல்லா நிந்தித்துப்பகைத்தார்களல்லோ. திருச்சபைக் கிங்கே தலையுமில்லைப் பூசையுமில்லையென்றுந் திருச்சபையிட்ட கற்பனை கேட்கலாகாதென்று மொருசந்தி தவமில்லாமல் வெள்ளி சனி தபசு நாள்வேறுபடக் காக்கலாகாதென்றும் பாவமொழியப் புண்ணியமில்லையென்றுஞ் செய்த தருமவினைகளாற்பலனொன்றில்லையென்றுந் தேவத்திரவிய- அனுமானங்களிஷ்டப்பிரசாதத்தைத்தரவறியாதென்றுஞ் சேசுநாதர்ஸ்தானத்திற் பிரதானகுருவாய் நிற்கும்- அர்ச்.- பாப்புமுதற்கொண்டுமேற்றக்குருக்களையுஞ் சந்நியாசிகளையு மிகழ்ச்சியாகச்சொல்லிநீசராகநிந்தித்துவிரத்தத்துவமாகாதென்று மித்தொகைப்பட்ட வபத்தங்களைச்சொல்லக் கூசாதேபோனார்கள். இப்படியே சத்தியவேத மிருள இராசநீதியொழியத்தவத்தின் மாட்சிமடங்கத்தருமவொழுக்கம்வழுவத்தரங்கம்பாடியார்வானுலகத்தையும்பூவுலகத்தையும் பகைத்தபின்பு பாதாளத்திலுநுழைந்துபோயங்கே பசாசுபகைக்குத் தப்பின- ஆத்துமங்க ளிவர்கள்பகைக்குத்தப்பாதபடிக்கிந்தக் கடைசிபேதகத்திலே தரங்கம்பாடியா ரதுகளைப் பகைக்கத் துணிந்தார்கள். அதெப்படியென்றாற் செத்ததாய்தகப்பன் முதலான பேர்களுக்குதவியாக நாமேதிவசஞ் செய்யாதபடிக் கவர்கள் செத்தபின்பு நின்றபாவக்கடனையுயிர்நொந் துத்தரிக்கும் ஸ்தலமொன்றில்லையெ

றிதிலே சொல்லவந்தார்கள். தீயோர்க்குநரக நல்லோர்க்கு மோட்சமுமொழியச் செத்தவ ள் சேரும் வேறிடமில்லையென்று சொல்லிய ற்குப்பல வேதவுதாரணங்களைக் குறித்துக்கா டினார்கள். ஆகிலுதமக்குக் கடைசிக்கதியாகநர மோட்சமொழிய வேறிடமில்லையென்பதுள்ள தானே. அப்படியேசேசுநாதர் கடைசிநடுத்தீ வை வர்த்தமானத்தைச் சொல்லிக்காட்டின பு- அர்ச். - மத்தேயுஸ் சுவிசேஷத்தின் ம்-ம். அதி-சம்-ம்.வசனத்திற்பாவிகள்- தி திய வாக்கினையநுபவிக்க நரகத்திலேவிழுந்து ல்லோரெல்லோரு நித்தியசீவியத்தோடேவாழ மாட்சத்திற் சேருவார்களென்றார். ஆகையால தப் பொதுத்தீர்வை முடிந்தபின்ன ருத்தரிக்கி ஸ்தல மில்லாதேபோமென்பதுள்ளது தானே ஙிலு மந்தத்தீர்வைமுடியாமுன்னே நிற்குங் யாயிராமற் றங்கிக்கடனைச் செலுத்து மிடமா வுந் தேவசன்னதிக்கொவ்வாத வழுக்குத்தீர்த் தாப்புறவாக்கு மிடமாகவுஞ் சாவானபாவ மின் ச் செத்தவர்களிற்பலரோ- அர்ச். - சின்னப்ப கொரிந்தியாருக்கு- ழு. - திருபத்தின் - ங-ம். தி- மரு-ம்வசனத்திற் சொன்னபடியேதீயில் ந்தவர்களாகவங்கேசிறிது நாளிருந்தற்பபாவ தினழுக்குத்தீர்த்து நின்றகடனை யுத்தரிக்கும்ப க்கு வேதனைஸ்தல மொன்றில்லையென்றுவேத திலெழுதப்பட்ட தென்பதுபொய்தானே. வேத ளக்கத்தின்- மக-ம். அதிகாரத்தில் விரிவாகநா மழுதிவைத்த நியாயங்களையாராய்ந்து பார்க்கி த்தரிக்கிறஸ்தல முண்டென்று விசுவசிக்கத்தகு வேதசத்தியமாகத் தோன்றுமல்லோ. மீளவு மாட்சவாசிகள் வாழுமிடமு முன்னேபிதாக்களி

ருத்தவிடமுமிப்போது ஞானஸ்நானமின்றிச்சா
கும் குழந்தைகள் இடக்குமிடமுஞ் சாபிக்கப்பட்
டபாவிகளென் றென்றைக்கும் வேகாநிற்குமிட
மும் பாவக்கடனைமுழுதுந்திராம லிஷ்டப்பிரசா
தத்தோடே செத்தவர்களந்தக்கடனை யுத்தரிக்கு
மிடமுமென் றிவையெல்லா மன்றியே மற்றோரி
டமுண்டென்று நாமே படிப்பித்ததாகத் தரங்
கம்பாடியாரிதிலே சொல்லியதற்குப் பெல்லார்
மீனென்பவரை யுத்தரிக்கிற ஸ்தலத் திரண்டா
ம்வகுப்பு-அ-ம். அதிகாரத்திற்பார்க்கச்சொன்னா
ர்கள். ஆகிலுமதிலே யவர்சொன்னதேதெனிற் சி
லபேர்கள் வேறிடமுண்டென் றெழுதினதுசரி
யே. ஆனாலவர்கள் சொன்னவிடவகையிருக்குமாகி
லதுவே யுத்தரிக்கிறஸ்தலத்தின் சேர்க்கையாகு
மொழிய வேறிடமென்று சொல்லக்கூடாதென்றா
ர். இப்படியாகையில்வேதசத்தியமாக அந்தவே
றிடமுண்டென்று பெல்லார்மீன் படிப்பித்தாரெ
ன்று தரங்கம்பாடியா ரெழுதினது பகைவெறி
யோடே கண்ணைமூடிப் பித்தராகச்சொன்னவக்
கிரமத்தப்பறை யிதுவேயல்லோ.

இருபத்துநாலாம் பேதகமறுத்தல்
முற்றிற்று.

---

## பேதகமறுத்தலின்
## கடைப்புணர்ச்சி.

---

தஞ்சபைக்குமுரோமான்சபைக்கும் பேதகமி
ன்னதென்று காட்டத் தரங்கம்பாடியா ரெழுதி

தந்தவையாராய்ந் ததிலேசொல்லப்பட்டபொ
களை மறுத்துக் கொண்டு வந்தது சரிதானல்
லோ. பொய்யைமறுத்தபின்பு நாமேயுண்மை
யைஸ்தாபிக்கவவர்களுக்கு நமக்குமுள்ளமெய்யா
ர வேற்றுமைகளையிங்கேசொல்லிக்காட்டுவது நி
ாயமாமே. ஆகிலுமிதுகுறித்த வளவின்மேலும்
ிரிந்த தென்றும் புத்திமயங்கி யவர்க ளோடே
சேர்ந்த சிலரோசந்தேகமறத்தெளிந்து விட்டச
தியவேதத்தை மீண்டுங் கைக்கொள்ளவுமற்ற
ாவருமினியவர்களோடேசேராமற் டாதபடி
குமிங்கேயெவர்க்குந்தானே தோன்றுநியாய
மும் வேற்றுமையும் போதுமென் றிருக்கிறோம்.
அமேதெனிற் சேசுநாதர் சத்திய சுரூபியாகக்
கொள்ள வவர்தந்தவேதத்துக்கு மவர்ஸ்தாபி
ந்ததிருச்சபைக்குங் குன்றுதவடையாளமேதெ
னிற்பொய்க்கலப்பில்லாத சத்தியந்தானே. ஆ
திதாய்தகப்பனை யேய்க்கப் பொய்யைச்சொல்லி
நம்மைக்கெடுத்தபசாசோவென்னிலின்னம்பொ
யைக்கொண்டுலகெல்லாங்கெடுக்கப் பிரயாசப்
படுமென்றதனாற் பசாசேவலினால்- மனுஷிருண்
டுபண்ணின மதங்களிற் பொய்க்கலப்பில்லாத
தொன்றில்லை. இதிப்படி யாகையில்- லுசித்தா
ன் பாஷையாற் றரங்கம்பாடியார் பதின்மூன்
றடாக வச்சுப்பதித்தவிந்தப் பேதகச்சுவடி
யொன்றிலே யெழுபத்தெட்டுப் பொய்யுண்டெ
ன்றுநாமேயிங்கே மறுக்கப்படாத நியாயங்
களா லொப்பித்தோமல்லோ. இதைக்கண்டுதர
ங்கம்பாடியார்சபை சொல்லிக்காட்டும் வழிசே
சுநாதர்தந்த சத்தியவேதமோ பசாசினால்வ
ந்த பொய்ம்மதமோவென்று மவர்கள்சபை
சேசுநாதர் திருச்சபையோ யார்சபையோவெ

ன்று மவனவன்- தானேகண்டு கொள்ளக்கட வான். தரங்கம்பாடியாரிருளை நாடித்தாங்களச் சுப்பதித்த புஸ்தகங்கள்- முதலாயெங்கள்கையி லேசேராதபடிக்குமிகவுமஞ்சிப் பத்திரஞ்சொல் லிக்கொண்டு வருகிறார்கள். நாமோவெனிற் பக லொளிக்கஞ்சாததினால் வலியவிந்தப்பேதகமறு த்த லவர்களுக்கனுப்பினோம். அவர்களுமிதனை நன்றாயாராய்ந்து தங்கள்- மேலே சுமத்தின எ௰அ- பொய்களைமறுத்துப் பொய்யல்லவென் றுகாட்டக்கடவார்கள். தங்களைச்சேர்ந்தபறைய ரோடே சாமர்த்தியம்பேசி நாமிங்கே யெழுதி ன தெல்லாந் தப்பறையென்று மூரோமாபுரிச் சந்நியாசிகள் பொய்சொல்ல வஞ்சார்களென் றும் வாயாற் சொல்லக்கூசாதிருப்பார்களென் று நன்றாயறிந்திருக்கிறோம். ஆனாலிருட்டறையுள் ளிருந்தித்தத்துணிவோடித்தனை சொன்னதின் பிறகு-அதற்குப்பாதியாயினும் வெளியாயெழுதி நமக்கனுப்பினாலே சாமர்த்தியம். அதன்பிறகுள் நாமெல்லாருக்குமொக்க மறுவுத்தரமெழுதா தி ருந்தோமாகி லவர்கள்சொன்னது மெய்யாகவு ட்கொள்ளக்கடவீர்கள். அப்ப , யேயவர்களுநா மிங்கேயெழுதினதை மறுக்கியாவர்க்குமொப்பி ப்பதொன்றே. தாங்கள் பதின்மூவேட்டிலேயெ ழுபத்தெட்டுப் பொய்சொன்னதுமெய்யென்று த்துக்கொள்வதொன்றே- இவ்விரண்டிலொன் றுதப்பாது. ஆகையாலிதற்கு மறுமொழியொ ன்றுமெழுதாமல் வாயினாலங்கே யென்னசொ ன்ளு லு மனதிலேவெட்கி நாஞ்சுமத்தின பொய் யெல்லா முள்ளதுதானென்றொத்துக்கொண்டா ர்களென்பது நிச்சயமாமே இதிப்படியாகக்கொ ள்ள வேதகாரியத்திலே பதின்மூவேடெழுதி மு

டயாமுன்னே சகட்டிலே யேடொன்றுக் காறு
பொய்யாக வெழுபத்தெட்டுப்பொய்களை யெழு
தக்கூசாதவர்களை யினிமேல்- தம்பியவர்களுங்க
ருக்குச்சத்தியத்தைக்காட்டவு மோட்சத்துக் கு
ங்களைக் கூட்டிக்கொண்டுபோகவும்வல்லவொன்
று நினைப்பீர்களோவென்ன. கடைசியிலேலுத்
தேர் சொன்னதைக்கொண்டு லுத்தேர் சீஷரா
ய தரங்கம்பாடியாருக்குத் தீர்வையிடும்படிக்
குச் சந்நியாசிகள்கொடுக்கும் வார்த்தைப்பாடு
களின் விஷயத்திலே லுத்தேருண்டாக்கினபுத்த
கத்திலெழுதின தாவது- ஒருவனொன்றிலே மாத்
திர மொருபொய்சொன்னானே சந்தேகமறவவ
னிடத்திற் சர்வேசுரனில்லை யிதுவுந்தவிரச்சொ
ன்னமற்றதிலேயுமவனை தம்பத்தேவையில்லையெ
ன்றான். இந்தநியாயத்தைச்சொன்ன லுத்தேர்
தன் சீஷாக்களிப்போதொருசின்னசுவடியி லெ
ழுபத்தெட்டுப் பொய்சொன்னதையறிந்தாலெ
ன்ன செய்வானென் றெழுதவுந் தேவையில்லை.

பேதகமறுத்தல்

முற்றிற்று.

# பொருளட்டவணை.

# லுத்தேரினத்தியல்பு.

இஃது
மிகுந்த கீர்த்திப் பெயர் பெற்ற
மெய்ம்மறைப்போதக
## வீரமாமுனிவர்
என்னுஞ் சேசுசபைக்குருவாகிய விராஜரிஷி
தைரியநாதசுவாமியாரவர்களால்
அருளிச்செய்யப்பட்டு
புதுவையிலெழுந்தருளியிருக்கும்
மகா கனம்பொருந்திய- ஆண்டவராகிய
## கிளெமெனசுபொனாந்
## துரிசிப்பா னென்னும்
நாமதேயங்கொண்டிருக்கிற
மேற்றிராணியாரவர்களநுமதியில்
வெளிப்பட்ட பிரகாரம்
உரோமாபுரியினின்றுவந்த
உத்தாரத்தின்படியே



௲அ௱௬௰அ
புதுவையிற் சன்மனசிராக்கினிமாதா கோவிலைச்சேர்ந்த
அச்சுக்கூடத்தில் ௬-வது. பதிப்பிக்கப்பட்டது.

# இத்தேரிலத்தியல்பு

## பதிதர் புத்தகத் தகுதி.

க. புறநிலைக்காப்பியனூர் குளுந்தமிழ்ச்சாத்தனுக்கெல்லா நன்மையிற் சிறப்புண்டாகவும். கேசரியன்கையிற் றன் வரவிட்டவோலை வந்து மேலிட்ட பொறையைநீக்கி நானதைவாசியாமுன்னே கேசரியன்சொல்லத் தான்முன்பட்ட சஞ்சலக்கவலையறிந்தேன். அவன்சொன்ன செய்தியை மீண்டு மீண்டு வினவிக்கேட்ப நானு நின்றயாவருந் தான்முன் வருந்தினதற்கு மும்மடங்காகமகிழ்ந்து நகைத்தோம். தான்வரவிட்டகேசரியன் சொன்னதேதெனிலைந்துநான்முன் றூன் புலவர் பலருஞ்சூழ்ந்து நறும்பூஞ் சண்பகச்சோலை நிழலினின்று ழத்தோருரைத்த பயன்களை நெடுநாட்பிடித்தமுறையோ டாராய்ந்திருக்கக் கிழ்த்திசையினின் றொரு கீழ்மகன்வந்து மேற்கதிதருந் தமிழ்ப்பயனிதென் றொருபுத்தகத்தைத் தந்தானும். அதன்புறத்தரியவடிவோடெழுதிய பொற்பொறிச்சிறப்பு மச்சுப்பதித்தவக்கரவொழுங்குங் கவிகவியாயதைவகுத்ததன்மையுந் தானேகண்டு புறத்திக்கோலமிருக்கவுட்பயனெவ்வளவாகு மென்றெண்ணிப் பூரித்தமகிழ்ச்சி மனமுட்கொள்ளாதங்கே பூமலர்கொய்து பிரிந்த தோழனையழைத் திதோ வான்மேற்றிசையினின்று வந்த தேவதமிழ்ப்பயனிதுவெனக்களித்துக்கூறி வாசிக்கத்தொடங்கினன். ஒருவரிமுடியாமுன்னே பார்த்தகண்ணும்வேக வுச்சு

ரித்தநாவுந் துவர்ப்பக்கேட்டகாதுங் கைப்பமிக வும் வருந்துதற்காரணமாகத் தொடரெழுத்தி யைந்தவகையு மெழுத்துவழுவி யெடுத்த நீசச் சொல்லுங் கிழிழித் திடறியசொல்லைக் கூட்டின வசனமு மிவையெல்லாந் தளர்ந்துமயங்கிச்செ ந்தமிழ் கெடுக்கவுங் கேட்பார் காதிரண்டையும் பிளந்துரித்துக் கொடுந்தீயூட்டிவருத்தவுங்கொ டியர்நினைத்த மற்றோர்பாவைநீயதென்று பொ ங்கிய வெகுளியோடதைத் தானெறிந்துவந்த தைக் கொணர்ந்த சிறியசிந்தையானைச் சினந் தடித்தையெனத்துரத்தி மிகவும் வருந்தாநின்ற தாம். தீம்புனற் பொய்கையின் மலர்ந்த குறும துத்தாமரைப்பள்ளியிற் றூங்கினவன்னந் தீயெ ரிவனத்திற் சேர்ந்துவருந்தினாற்போலத் தேன் பொழி குளுந்தமிழினிநிலாய்ந்த தானுங்கீழ்த்தி சைக்குடியாங் கீழ்மகன்றந்த கீழ்மொழிச்சுடுந் தமிழ் கண்டவளவின் மனஞ்சுட வருந்தினபடி யையு மினியதேனையுண்பார் கைக்கும்வேம்பை யுட்கொண்டால் வருந்தியதனைக்கக்கினாற்போலி த் தானுமக்கொடுஞ்சொற்றமி ழெறிந்த சினத் தையுநினைத்த பொழுதெலா நாங்களே சிரிப்ப டக்கமாட்டாதன்று கூடநின்றோ மில்லையென் றுசையின்மாத்திரம் வருந்தாநிற்போம்.

## புறக்கோலமுள்ளழிவு.

உ. ஆகிலுந்தான்புறக்கோலத்தளவைக்கொ ண் டேட்பயனை மதித்து மயங்கினதென்ன. உண் ணிறையில்லாமாதரல்லோ வாசனைகமழப்பூசிய ணிகலன் சுமக்கத்தாங்கி மதுமலர் நெருங்கச்சு

உக் கற்புமடந்தையர் நாணத்தம்முடன்கினுங்கிப் பேருநிற்பார். காஞ்சிரப்பழத்தின் புறத்தழகெண்ணி யதனையுண்பாருண்டோ. தன்ன ஒகின் மரப்பாவை யொளிபெறத் தங்கமேற்பூசி யலங்கரிப்பாருண்டொழிய விரியொளித் தூயமணிப்பாவைமே லேதேனும் பூசுவாருண்டோ. ஆயினும் பொற்பொறிப்பூசின கொடுமொழித்தமிழை வாசித்து நன்மையிற் றுன்மயங்கிநினைத்தபழுதளவாக வருந்தினதுஞ் சரிதானல்லேலா.

## லுத்தேரானிகளார்.

௫. இத்தன்மைத்துக் கேசரியன் சொன்னகாதையைக்கேட்டு மகிழ்ந்தபின்பு தன்னோலையை வாசித் ததிலே முன்னவனுரைத்தவைதானுமெழுதினதன்மேல்வைத்த வசனமாவது- அக்கொடுமொழித்தமி ழெழுதின கொடியராரோவென்று விசாரித்தவளவிற் றரங்கம்பாடியி லிருக்கும் லுத்தேரானிகளென்றார்கள். ஆயினும் லுத்தேரானிகள் யாவரென்று மெப்பிறப்பவரோவென்று மடியேற்கறிவிப்பத் திருவுளமிரங்கியெழுதக் கற்பித்தருளவு மென்று தானெழுதினதல்லோ. அப்படியே லுத்தேருண்டுபண்ணின சமயத்தாராகிய லுத்தேரானிக ளெப்பிறப்பினத்தாரென்று மெவ்வகை யியல்பாரென்றுந் தான் கேட்டபடிக் கெழுதவேணுமினு முள்ளதை நானே சொன்னால் மவ்வினத்தியல்பின் கொடுமையைக்கேட்டவர் நான்சொன்னதெல்லாம் பகையாற்கண்டகனுவென் றுட்கொள்ளாரென்றஞ்சி

நாளுகவொன்றுஞ்சொல்லாமற்பொய்யாநிறை மொழிவாயனுகிச் சத்தியவேதத்திலுள்ள நாற் சுவிசேஷங்களி லொன்றினை யெழுதின-அர்ச்.- அருளப்பரருளித்தந்ததை மாத்திர மெழுதித்த ருவோம்.

# ஏழுகாளம்.

ச. ஆகையாற் சொன்ன- அர்ச். - அருளப்ப ர்கண்ட காட்சியாகமத்தின் ஞானமேதிருவிளக் காகக்கொண்டு முன்னுயதைக் கண்டாற்போ லப் பின்னுவதைக்கண்டெழுதின பலவற்றுள் ளேவாறுமொழு மேழுகாளங்களை யூதினதன் மைத்துலகமெங்கு மேழுவகைத் துரிதக்கேடுக டொடர்ந்தமுறையால் வருவதென்று விரிவா யெழுதித்தந்தார். அவற்றுள் முதனுற்காளங் கள் முழங்கிக்காட்டின தின்மையே யப்போஸ் தலர்நாட்டுவக்கி யுலகங்கெடவந்துதித்த பிர தான பதிதர்வகைநான்குமென்று லுத்தேரானி கள்முதலா யொத்துக்கொள்வார்கள். அந்நா ல்வகைப்பதிதராமெனில் - எபியோனித்தர் கி னேஸ்றிக்கர் சமோசத்தேனியரோ டரியானிக ள் பெலசியானிகளென் றிந்நால்வகைப் பதிதர். முத னுற்காளமுழக்கத்தாற் காட்டப்பட்டார்க ள். இதுவுமன்றியேயாறுங்காள மந்திக்கிறீஸ்து வலாபத்தையு மேழாங்காள முலகமுடிவையுங் காட்டினதென்று சந்தேகப்படுவாரில்லை. ஐந் தாங்காள மிடியெனமுழங்கி யுலகிற்காட்டின கேடோவென்னின் முன்சொன்னநால்வகைப்ப திதருக்குப் பின்னரு மந்திக்கிறீஸ்துவுக்குமுன்

னருமிந்நாட்குரிய வைந்தாமாக்கினையாகவுமந்
கிறிஸ்துவென்னும்பெரும்பாவிக்குரியவழிசெ
ய்பவராகவு மிதற்குமுன்னிருநாறுவருஷமாகமு
ளைத்த பதிதராகிய லுத்தேரானிகளால்வந்தொ
ழியாத சேடென்று தானறியக்கடவான். அர்
ச். - அருளப்பருணாத்தவைதந்து நானதற்குரி
ய பயன்விரித்துணாக்கி லுச்சிப்பகலினுந் தெளி
வாய் லுத்தேரியாரோயென்றும் லுத்தேரானிக
ளைப்பிறப் பெவ்வியல்பென்றுந்தானே வெளியா
ம். ஆகையாலற்புதக்காட்சியாலொன்பதாமதிகா
ரத்தைத்தாங்காளமுழக்க தோடுகண்டதைஅ
ர்ச். - அருளப்பரொழுதித்தந்த தன்மையாவது.

---

# வேதவாக்கியம்.

## அகவல்.

ரு. மீத்திசைநின்றுகீழ் வீழ்ந்த வொளிமீன்
றீத்திசைவாயிற் றிறக்குங்கோல்வாங்கி
யத்திசைத்திறந்துளி யாதவன் முகமுத
லெத்திசை வெளியெலா மிருட்படப்புகையெ
ழீஇ
யெழீஇயின புகையினின் றெண்ணறமுளைத்
துக்
குழீஇயின பதங்கங் குழாங்கொடு மொய்ப்
பன
மானிடர் முகத்தொடு மாதர்குழலொடுங்
கானிடைவளரரிக் கடையெயிற் றுருவுறீஇத்
தேளுடைநஞ்சிற் றீயனகணையொடு
வாளுடைமுனையின் வாய்ப்பன வாலுறீஇக்

கரும்பொற்சுரிகை கடியமார்பணிய
வரும்பொற்சுடிகை யணியொடுதோன்றிக்
காய்மாபகைமுதிர் கடும்படைமுகத்துப்
பாய்மாப்பரப்பெனப் பகைத்துநிற்பன
போர்முகத்துயிர்கெடப் புகைந்தெதிர்திரித
ருந்
தேர்முகத்தொலியொடு சிறகர்புடைப்பன
வெப்படைசிதைத்தோன் வெந்திசையரச
னிப்படைமிசையாங் கிறைவனென் றெழுமெ
னத்
தந்நுதலணியெனத் தற்பரன்குறியிலார்
துன்னுதலொழியச் சூழ்பசும்புன்முதற்
றீண்டாதெனப்பணி செய்தஇறையோன்
றுண்டாநீதித் தகுதியிதுவென.

# அர்ச். - அருளப்பர் காட்சி.

கா. வேதமாக- அர்ச். - அருளப்பர்கண்டவரி யகாட்சியைத் தாந்தாமேயெழுதின தன்மையி துவே. ஆகையால் வான்மேல்விளங்கின மீன்கீ ழ்விழுந்ததாகவும் விழுந்தமீ னரகக்குழிவாய்தி றக்குங்கோலேவாங்கி யதனைத்திறந்தவளவிற்பு கையெழுந்திரவியுமாகாயமு மிருட்படமண்டின தாகவு மண்டினபுகையினின் றெண்ணிறந்தகு ழாங்கொடு விட்டிற்பறவை மொய்த்ததாகவும் விட்டிலாகமொய்த்தபறவையதிசயத்துடனே வ டிவுமாறி யாண்முகத்தையும்பெண் கூந்தலையுங் கொடிய சிங்கப்பல்லையுமம்பு வாண் முனையைப்

பாலக் கூர்ந்தநச்சுத்தேட் கொடுக்குவாலையு
டைய வருக்கொடுதோன்றித் தலைமேற்பொன்
முடிபுனைந்து மார்பிலிருப்புக்கவச மணிந்துவெ
போர் யுத்தத்துக் காயத்தப்பட்ட புரவிப்பரப்
ப்போலப் பகையிற்பொங்கிநின்றுகொடும்போ
க்களத்திலோடுந்தேர்ப்படைவிடுமொலியொப்
முழக்கமெழ விருசிறகைப்புடைத்ததாகவுமித்
தாகைவிட்டிற் படைமேலரசனைச் சங்கரித்
தானெனப்படு நரகரசனின்றதாகவு மாண்ட
பர்குறியை றுதலணியாக வில்லாதாரையன்றி
ப் பசும்புன்முதலாயொன்று மவ்விட்டிற்படைக
உண்டாததற்கே பரமநீதிக்கடவுள் கற்பித்ததா
வும்- அர்ச். - அருளப்ப ரன்றுகண்டெழுதின
வதிசயக்காட்சி வெளியாம்படிக்கு நானதனைவி
ரித்துச் சொல்லத்தகும்பயன்றருதியைக் கேட்
கக்கடவான்.

# விழுந்தமீன்.

எ. மீத்திசைநின்றுகீழ் வீழ்ந்தவொளிமீன்- என்பது- ஆசையென்னு மாசுள்ளபூவுலகின்மே லெழுந்து வானத்திலங்கிய மீனைப்போல வொளிபெற்றவனு யிடறிக்கீழே யிழிவுறவிழுந்தவன் லுத்தேர்தானல்லோ. இவனேவாலிபத்தாசைப் பகையைவென்று துறவறம்பற்றி வால்சந்நியாசியுமாய்க் குருவுமாயெவர்க்கு மொருவிளக்காகப்பலநாள்விளங்காநின்றான். எல்லாவற்றையுந் துறந்து பூவுலகன்றுற்போல வுணர்விலுயர்ந்து ஞானவயத்தால் வான்மேனின்று தவநிறை தானந்தயை பொறையூக்க மற்றறமெல்லா மிவ

னிடத்தொருநற்கதிரெனத் தோன்றித் தானொ
ரு மீனெனவிளங்கினபின்பு தவங்கெடப்போகமு
நிறையறவஞ்சமுந்தானமழியவுலோபமுந்தயை
விடப்பகையும்பொறைபடவாங்காரமு மூக்கமடி
யத்தியவாசையு மூளத்திற்புகவே நெடுநாட்டுற
வோன் புதுமணவாளனாகப் பிடித்தவிரதமேன்
மையிற் கீழேவிழுந்து தாழ்ந்தவுணர்வினோடற
த்தால்விளைத்த சுகத்தினு மிருகவினத்திற்கும்
பொதுவாகிய சிற்றின்பமேநல்லதெனவுணவு
ங்குடிக்கவுங் காமபோகத்தமிழ்ந்தவுஞ் செய்த
வன் லுத்தேர்தானல்லோ. எளியனாய்ப்பிறந்து
தரித்திரனாய்த்திரிந் தவமானனாயிறந்து நம்மை
யளித்தசேசு நாதனைப்பற்றிப் பொருளுமணமு
மக்களும் வேண்டாதாக வெறுத்தபின்பு பொரு
ளையுமணத்தையுமக்களையும் வேண்டுவதாகப்ப
ற்றிச் சேசுநாதனைவெறுத்தவனாய்க் கைவிட்ட
வன் லுத்தேர்தானல்லோ.

## நரகத்திறவுகோல்.

அ. அப்படியே வான்வீட்டைத்திறக்கவுமடை
க்கவுந் திறவுகோற்சேசுநாதர்கையில்– அர்ச். –
இராயப்பரைத்தொட்டு மற் றர்ச்சியசிஷ்டபாப்
புக்கள் வாங்கியிருக்க விவர்களுக் கோயாவெளி
ப்பகைசெய்ய முனைத்தலுத்தேர் நரகத்தின்றிற
வுகோல் வாங்கிக்கொண்டதாக– அர்ச்.– அருளா
ப்பர்சொல்லக் கீழ்வீழ்ந்தவொளிமீன் றீத்திசை
வாயிற்றிறக்குங்கோல் வாங்கிற்றென்றார். கர்த்
தர் தன்பிரதான வப்போஸ்தலனாகிய– அர்ச். –
இராயப்பருக்கு மோட்சத்தின் றிறவுகோலைத்த

த்தபடியே பசாசுத்தன்பிரதான வப்போஸ்தலனாகிய லூத்தேருக்கு நரகத்தின் திறவுகோலைத்தந்தது நியாயந்தானே.

## கூ. மீளவும்

அத்திசைத்திறந்துளி யாதவன்முகமுத
லெத்திசைவெளியெலா மிருட்படப் புகையெ
ழீஇ—

## என்பது.

வாங்கின திறவுகோலைக்கொண்டு லூத்தேர்நரகத்திசையின்வாயிலைத்திறந்தான். திறந்தவளவிற்செஞ்சுடர்முகமு மாகாயவடிவு மிருண்டுமறைதற்காரணமாக நரகக்குழியினின்றடர்ந்தபுகையெழுமண்டி யெழுந்ததாமே. அப்படித்தானல்லோ லூத்தேர்முன்னேயாமுன்னே சேசுநாதர்திருச்சபை வழங்கினவுலகமெங்கு ஞானத்திருளறத்தெளிந்து வேதத்தயர்வறத்தேறி யெங்குமொருமுக மொருநிலை யொருநூலாக விபரீதமின்றி மயக்கமின்றியெல்லாப்பாஷைக்கொருபொருளாயெல்லா வாய்க்கொருமொழியா யெல்லாநெஞ்சத் தொருசுடரா யெல்லாவுயிர்க்கொருபலனுய் விளங்கினதன்றே. லூத்தேரிடறிவிழுந்து போதித்தபுதுப்பொய்ம்மதத்தாலே நரகவாயிலைத்திறந்தவுடனேயிருட்புகைமண்டிஞானச்செஞ்சுடராகிய சேசுநாதரும் பரவினவொளி யாகாயமாகிய வெழுதப்பட்ட வேதமும் புகைபட்டிருண்டாற் போலத் திருச்சபைவேறுபட லூத்தேர்முதலவன்மதத்தா ரெல்லாருங் கண்கெட்டுத்தடவின தன்மையாலொன்றிலு நிலைகொள்ளாமலொருவன் சொன்னதை நாளைமறுத்துத் தங்களோடொவ்வாமல் விபரீதப்பட்டுத் தங்கள்விசுவாச

த்திருந் தாங்களேயையங்கொண் டிருட்டறையூ டரும்பொருளைத் தேடினதன்மையிற் றடவித் தவறி நகைபட விழிபடப் பிதற்றினவபத்தங்களை யறியாரில்லையே. தேவப்பிரியாகிய சேசுநாதர் மண்டினபுகையா லிருட்படச்செய்ய வேண்டு மென்றாற்போலவல்லோ சேசுநாதனைச் சகல பாவிகளினும் பாவியென்று மவனையொழியப் பாவியில்லையென்று மவனைக்கள்ளனென்றுங் கர்த்தத்துரோகியென்றுந்தேவதூஷணனென்றும் வேதத்தைக்கெடுத்தவனென்று மவனைப்பசாசென்றுந் தீயெரிநரகவாய்ப் புகையாக லுத்தேர்க்கி- அர்ச். - சின்னப்பர் கலாசியத்தாருக்கெழுதின நிருபத்திற்குத் தான்செய்த வியாக்கியானத்திலேயு ஞானஸ்நானமுதற் பிரசங்கத்திலேயு மெழுதக்கூசாதேபோனான். வேதாகமங்களிலே லுத்தேர்மதத்தாலே மண்டினபுகையோவென்னிற் கர்த்தர் தேவநற்கருணை முன்னுளவாக்கினவிடத்தி லிது வென்சரீரமென்றவசனமையமொன்றின்றி முன்னெவர்க்குந் தெளிந்ததாயிருக்கப் பதிதர்க்கிப்போது மண்டிருளடைந்ததாகி யிவ்வொருவசனத்துக் கிருநூறு விபரீத வர்த்தங்களைப்பதித ரெழுதினதாக வொருவன் சேர்த்திக் காட்டினனல்லோ. இப்படித்தானு மற்றத்தேவவாக்கியங்களு மாசடைந்திவர்களுக் கிருண்டதாமே.

## விட்டிற்பறவை.

### ௧. பின்னையும் -

எழீஇயினபுகையினின் றெண்ணறமுளைத்துக்
குழீஇயினபதங்கங்குழாங்கொடுமொய்ப்பன-

என்பது.

லுத்தேர்திறந்த நரகச்சூழியினின் றெழுந்து ண்டின விருட்புகைப்பிறப்பா யெண்ணிறந்த -ர்ந்து மொய்த்த பதங்கமாகியவிட்டிற்பறவை களாவதேதெனிற் சொன்ன லுத்தேர் தன்வாய் திறந்து போதித்தவிருள்சேர் மதத்திலுட்படமு ளாத்தலுத்தேரானிகளென்பது நிச்சயந்தானே. இவர்கள் புகைப்பிறப்பெனினும் விட்டிற்பறவை யென்று நானேசொன்னேனாகிற் கேட்டயாவரு மென்னை நகைப்பாரல்லோ. ஆயினும்வேதமா க-அர்ச்.- அருளப்பனெழுதினதொழியவிட்டிலின த்தியல்பாராய்ந்து பார்க்கிலெவரும்லுத்தேரின த்தியல்பதுவேயென்றிவ்வுவமையுரியதென்பார். அதேனெனில் விட்டிற்பறவை யுடலெல்லாமுழுவ யிறுகையிற் செவ்வேநடக்கவு மேலேபறக்கவுமா ட்டாமற் சிறகைவிரித்தெழுந் தோரோரிடத்துப் பறக்கத்தொடங்கினாலு முடனேவயிற்றுப்பாரத் தாற் கீழேவிழுவதைக் காண்போம். அன்னபடி- யே லுத்தேரானிகளும் பெருவயிறென்றினையு டையராலுற்போலத் தம்வயிறென்றைப்பேணி வெள்ளிசனிதவநாளொன்றின்றி வேண்டுவதெ ல்லா நிறையவுண்ணவுங் குடிக்கவுமாசைக்கள விலெல்லாவயின்மோகிக்கவுந்தவந் துறவொ ழுக்கமெல்லா மாகாதென்று பகைத்து வேதகற் பனைவழியினடக்கவு ஞானத்தெழுந்து பறக்கவு மாட்டார்கள். சிறகைவிரித் தோரிடத்திற் பறக்க த்துணிந்தாற்போல மேலெழுந் துயர்ந்த ஞா னமுறைகளைச்சொல்ல விவர்களுந் துணிவதுசரி யே. ஆயினும்விட்டில்களைப்போலத்தம்வயிற்று சைகீழிழுக்க வுடனே விழவுஞ்செய்வார்கள். அ ப்படித் தரங்கம்பாடியிலிருக்கும் லுத்தேரானி

களக்கியான மொழியவுஞ் சத்தியம்பரம்பவுமா சைகாட்டி வெகுபொருணர்ந்து தருமநடக்கையென்றுஞ் சத்தியவேதமென்று மோட்சவழிநிலையென்றுங் கலப்பில்லாத சுவிசேஷமென்றுமித்தொகைப்பலவையு மச்சுப்பதித்து வலியவெவர்க்குந் தருவதுகண்டு பரமஞானிகளாகவுணர்விலெழுந்துமேலேபறப்பதென்போம். ஆறுவிட்டிற்பறவையாலகையிலுடனே கீழேமுக்கழியவிழுவதுங்காண்போம். சொன்னபுத்தகங்களிற்றானே தவமொருசந்தியாகாதென்று நல்வினையொன்றையுஞ்செய்யக்கூடாதென்றுந் தருமங்களால்விளைவதோர்பயனில்லையென்றுந் துறவறம் பாவமேயென்றுங் கூடப்பிறந்தாளைமனைவியாக வைப்பது தருமமா கிரிகையென்றுமித்தொகைப்பட்டவக்கிரமநீசவபத்தங்களைவேதமாகப்படிப்பிக்கக்கண்டுபறக்கத்துணிந்தவிட்டில்-தன்வாய்சேற்றிற்புதைபடவிழுந்ததன்மையதுவேயெனத்தகுமல்லோ.

# அரசின்மை.

௪௧. மீளவுங் கூட்டங்கூட்டமாய்ச் சேரினுமோரர சோர்தலையின்றி யாசைகாட்டும்வழியே திரிவது விட்டிற்கியல்பதாமே. அப்படியேசாதுரியாகமத்தில் வேதமாகச்சலோமோனெழுதினதறிவோம். இத்தன்மைத்து லுத்தேரானிகள்சபையு மெவ்வளவாகப் பெருகிக்கூடினுந் தஞ்சபைக்கோரர சோர்தலையிருக்கலாகாதென்று மற்றொருவன் கற்பனைகேளா தவனவனுணர்ந்தபடி மறைமுறைகளையநுசரிப்பது நல்லதென்பார்

ள். ஆகையாற் சேசுநாதர்- அர்ச். - இராயப்
ரைத் தொட்டு மற்ற- அர்ச். - பாப்புக்களைத்
ருச்சபைத் தலைவராகவைத்த நீதிமுறையைம
வத்து நாமத்தலைமையைவணங்கி- அர்ச். - பா
புக்களுக்கு இழ்ப்படிந் தொழுகுந் தன்மை
யல்லாவக்கிரமங்களி லக்கிரமமென்று சொல்ல
கூசார்கள். முப்பெயருள்ள வீடு மூவ்வீடுள்ள
ரு மூவ்வூருள்ள நாடு மொருதலையின்றியொழு
கோடு நிற்ப வறியாதாகையில் விட்டிற்பறவை
ம் லுத்தேரினத்தின்சபையுமொழியத்தலையொ
றின்றிக் கூட்டமாய்நிற்பதொன்றில்லை. ஆகை
லிவையெல்லா முணர்ந்துபார்க்கில் விட்டில்
முழம் லுத்தேரினமு மியல்பொன் றுள்ளதாகி
அர்ச். - அருளப்பர் புகைப்பிறப்பாக மொய்த்த
விட்டிற்களை யென்றபோதே லுத்தேரினத்தை
க் குறித்தாரென்பது நியாயமாமே.

# ஆண் முகம்.

௯௨. ஆயினும்- அர்ச். - அருளப்பர்கண்டவி
ட்டில் காட்டினவுருவுந் தரித்தவணிகளுங்கொ
ண்ட வியல்பு மதிசயமாகையி லவையெலாம்
விரிவாயெழுதினர். அவரேயெழுதினபடிக்கு நா
மூஞ் சொல்லித்தருவோம்.

ஆகையால்,

மானிடர்முகத்தொடு மாதர்குழலொடுங்
கானிடைவளரரிக் கடையெயிற்றுருவுறீஇத்
தேனுடைநஞ்சிற் றியனகணையொடு
வாளுடைமுனையின் வாய்ப்பனவாலுறீஇ

என்பது.

உருவின்றோற்றம்- ஆண்முகவடிவும் பெண்மயிரழகுங்காட்டிக் கொடியசிங்கப்பல்லுந்தேள்வாலொப்ப தஞ்சுள்ளதாகியம்புவாண்முனையோடொப்பக் கூர்ந்தகொடுக்கு வாலுமுடையதவ்விட்டில்களென்றார், அதிலேயந்தவற்புதவிட்டில்களுக் குணர்வாண்மையிற்சிறந்த மனுமுகவுருவும் விடாதுநறுநெய்பூசி நீங்காதொளிமணிசேர் திமங்கா மதுமலர்சூடி யொழுங்கிட வகுத்துவனப்புறவளைத்துப் புடைப்பெழச்சொருகிச்சேர்த்த மடநீதையர் கூந்தலுமாவ தேதென்றறியவிவண்டோமாகிற் றரங்கம்பாடியிலிருக்குஞ் ஞத்தேராளிகள் செய்யுந்தன்மையைப்பார்க்கவும். தானிப்போது கண்டவவர்கள் புத்தகவனப்பப்பார்க்கி லொழுங்குறவச்சுப் பதித்தவடிவுமொருப்படநெருங்கியே கள்சேர்ந்தசீர்மையுமொளிபெறப் புறத்துப் பொற்பொறி வகுத்த கோலமுமிப்போதுநான் வனைந்துரைத்த மங்கையர்கூந்தலின் வனப்போடொத்ததல்லோ. நிறைகெடவறிவினை மயக்குவிக்கு மம்மயிரழகினைப்போலச் சொன்னபுத்தகவடிவுந் தன்னையல்லோமயக்குவித்ததாமே. அப்படியவர்க ளொருவனைக்கண்டமுகத்தின் மனிதனைப்போல ஞானத்தைப்பேசி மாதனைப்போல வன்பினைக்காட்டிக் கலப்பில்லாத சுவிசேஷமார்க்க மீதென்றும் பரகதிசேர் பெரும்பாதையீதென்றும் பொய்யானதேவனை மறுத்து மெய்யோர்கடவுளியற்கைகாட்டு ஞானமீதென்றுந் தாங்களே தருமமேனியர் பிரகாசமேனியரென்றுஞ் சொல்லி வந்தயாவர்க்கு மன்புமிகமலர்முகத்தோ டின்பவுந் குடிக்கவும் வேண்டுவநீந்து பணங்களையுமி

றைத்துச்செய்வார்கள். இதோவாண்முகமு மாதர்கூந்தலுங்கண்டோம்.

## பெண்கூந்தல்.

௱௫. ஆறாற் பெண்ணோடாத்ததோர் வடிவவ் விட்டில்கள்கொண்டதாக- அர்ச். - அருளப்பரெழுதிக்காட்ட வேண்டுமென் றிருக்கையிற் பெருகிநீளுங் களிக்கண்ணாயினு நடுங்கித்துவளுஞ்சிற்றிடையாயினுந் திருந்திக்குவியுஞ் சீறடியாயினுமற்றொன்றாயினுஞ் சொல்லாமற் பெண்ணழகுறுப்புக்களின் மயிரழகொன்றே யவ்விட்டில்களுக்குண்டென்றெழுதின தென்ன. அதற்குக் காரணமேதெனின் மற்றழகில்லாமையாலுண்டென்றுகாட்டப்படாமற் படர்ந்தபாதஞ்சருங்கவும் பெருகின றுசுப்புச்சிறுகவுந் திரண்டசிறுகண்ணீளவுஞ் செய்யக்கூடாதிருக்க மயிரழகொன்றேயில்லாதாயினு முண்டென்று பொய்யாகக்காட்டி யிடிமயிர்சொருகி யதன்குறைமறைத்துப் பெருகத்தோன்றும்பொருட்டுமிக்கழகாசைமடந்தைய ரளகஞ்சேர்த்தித் திரிவார்களாகையாற் பெண்ணழகெல்லாத்திலு மயிரழகேபிறரையேய்ப்பதற்குரியபொய்யழகாகையிலிதுவே லுத்தேரானிகளுலகமேய்க்க முகத்திற்காட்டும் பொய்யன்பினிமையும் பொய்ச்சிறப்பழகுமுவமிக்க வுரியதென்று- அர்ச். - அருளப்பர்மற்றெல்லாம்விட்டு மாதர்கூந்தல்மாத்திரமுடையதவ்விட்டில்களென்றார். இதற்கத்தாட்சியாகத் தன்சினேகிதனாகிய சங்கிரோசி யவால்தார்

சொன்னது போதாதோவென்ன அதேதெனில்- அவன்றரங்கம்பாடிக்குப் போனவிடத்திலவர்கள் வீடுவாசல்களைக்காட்டியெங்களைச் சமுசாரிகளென்பார்சிலரோ யதுபொய்யாகி நாங்கள் வாலசந்நியாசவிரத்தராகையி லிதோவிங்கே பெண்ணுருவமுதலாயில்லது பாராயென்றுர்கள். ஆகிலுஞ் சிறிதுநாட்போய்ப் பழஞ்சந்நியாசி புதுமாப்பிள்ளையாக வெவருமறிய மணப்பறைமுழங்கி யந்தப் பரமசந்நியாசிகளி லொருவனிருகட்ட முத்தபெண்ணைக்கைப்பற்றி மணவறையிற் சந்நியாசமெல்லா மமிழ்ந்திக் கரைந்த தறிவோமே.

## தேட்கொடுக்கு

௯௪. அப்படியே யவர்கள்காட்டினஞானமுமன்பும் பொய்யென்றறியமறுபடியவர்கள்பேசினவுடனே யுயிரைக்கொல்ல நஞ்சொத்தவபத்தங்களைச் சொல்லக்கேட்போம். ஆதலாலாண்முகம் பெண்மயிருடைய விட்டிலேதேட்கொடுக்கொப்பக் கூர்ந்தநச்சுவாலுடையதென்றார். பரமஞானிகளைப்போலத் தருமங்களைச் செய்யச்சொன்னபின்னர் தருமங்களாலாயபய னென்னென்றுகேட்கில் வாலைமடக்கிக்கொடுக்குக்காட்டித் தருமங்களின்மே லாசையவிக்கவதுகளால் வரும் பயனொன்றில்லை யென்பார்கள். செய்தபாவங்களுக்காகநொந் தழச்சொன்னபின்ன ரப்பாவதோஷந்தீரச் செய்வதேதென்று கேட்கிற்சகல பாவங்களுக் காண்டவர்பாடுபட் டுத்தரித்தபின் பதற்கு நாமுத்தரிக்கவேண்டுமென்பது தோஷி

மென்பார்கள். பெரியோரைச் சங்கிப்பதுநல்ல
தென்றபின்ன ரிராசாதிராசனுகிய பரமகர்த்த
ரையின்றதேவதாயை வணங்கலாமோவென்று
கேட்கில தாகாதென்று மற்றஸ்திரீகளோடொ
த்ததா யவளையுமெண்ணி வணங்கலாகாதென்
பார்கள். எவர்க்கு நன்மைசெய்யச்சொன்னபி
ன்ன ரிறந்ததாய்தகப்பனுக்குதவுந் திவசமாகச்
செய்யவேண்டிவதேதென்றுகேட்கிற் செத்த
வர்களை நினைக்கவும்வேண்டாமென்பார்கள். தா
ங்களச்சடிப்பித்த புத்தகங்களை வேண்டாதவர்க்
கு மன்புகாட்டிவலியத்தந்தபின்னர்விட்டவவ்வ
லையிலகப்படாமலவர்கண்மதத்துட்பட மாட்டா
தவன் வாங்கினதெல்லாமுத்தரிக்கச்சொல்லி ய
வனைக்காவல்செய்து நிந்தையாயுபாதிப்பார்கள்.
வஞ்சகசர்ப்பனையாகாதென்று போதித்தபின்ன
ர் பொய்ச்சாட்சிகளைக்கொண்டுவிட்டுப்பிறரைக்
கெடுக்க வஞ்சனைசெய்தவனை யறிந்துபிரியத்து
டனேயவனைத் தங்கண்மதத்துக்கேற்ற வுபதே
சியாகவைப்பார்கள். இப்படிலுத்தேரானிகண்
ஞானமுமன்புங்காட்டினபின்னருயிர்க்கேடாகந
ஞ்சுமிழ்ந் தச்சிரமவைபத்தங்களைக்கக்கவுங் காட்ட
வுஞ் செய்வார்கள். இதோ மனுமுகமூ மாதர்கூ
ந்தலுங் கண்டபின்பு தேள் வான்மடக்கி நஞ்சு
ட்புகுப்பக் கொட்டுங் கொடுக்குங் கண்டோம்.

## சிங்கப்பல்லு.

௰௫. கண்டவிற் கொடியசிங்கப்பல்லேதென்
னி லெவ்வாயு மெண்ணமற் கொண்டபகைக்கள
வாக லுத்தேரானிக ளெவர்க்கு மிழிவுறப்பழி
மொழிதூறுங் கொடுமையாமே. லுத்தேரானிக

ளல்லோ சிங்கப்பல்லைக்காட்டி மோட்சவாசிகண
ம்மிடையூறுகளைக்காணாத குருடனொன்று மவர்க
ளைவணங்கி நாஞ்செய்யும் வேண்டுதலைக்கேளா
த செவிடனொன்றுமப்போஸ்தலருந் தீர்க்கதரிசி
களுந் தப்பிதங்களைச் செய்தார்களென்றும்வா
ஞேர்களெல்லாரு மிவ்விடத்துச்செய்தி யொன்
றுமறியார்களென்றும் வான்மேல் வாழ்ந்தாள்ப
வளை முதலாய்க் கொடியசினத்திற்கடிக்கச் சிங்
கப்பல்லை நீட்டினபின்ன ரிப்பூவுலகின்மன்னவர்
யாவருந் தம்முடிமேலேற்றியபாதத்தைவணங்
கிக்கீழ்ப்படிந்திருக்கச் சேசுநாதருக்கிடமாய்க்
காணப்பட்ட திருச்சபைக்கெல்லாங் காணப்படு
வதோர்தலைவராகவாளாநிற்கும் - அர்ச். - பா
ப்பவர்களைச் சேசுநாதர்க் கெதிர்பகையாகிய
வந்திக்கிறீஸ்துவென்று முலகமேய்க்கும் பெ
ரிதோர் கள்ளனென்றுஞ் சுவிசேஷத்தைக் கெ
டுத்தவனென்று மிவர்கள் சொல்வதல்லாதே யு
ரோமான்சபையிலுள்ள சந்நியாசிகளைக் கள்ள
ஞானிகளென்றுங் கல்வித்துறையெலாங்கடந்த
கேள்விப்புலமையிற்றேர்ந்தவேதபாரகளைவேச
ரிக்கூட்டமென்று முரோமான் றிருச்சபைநிறை
கெட்டழிந்துதன்பத்தாவைவிட்டு நாணமழிந்த
வேசியானதென்று மதுவேசேசுநாதர் பாடுபட்
டடைந்த பலன்கள் போதாதாகவு மெல்லாப்பா
வங்களுக் கவர்பாடுபட்டவரல்லராகவும் படிப்பி
க்குமென்றும் பொய்க்கஞ்சாமற் சொல்லவருவா
ர்கள். இவையுமித்தொகைப்பலவுமிவர்களாலெழு
தப்பட்டிருக்க வுரோமான்றிருச்சபை நிந்தைப்ப
டவிப்பழிமொழியெல்லாந் தூறினலுத்தேரானி
களுயிர்கொன் றுடலைத்தின்று தசைகடுங்கியூத்
தையொழுகிநாறுங்கொடிய சிங்கப்பல்லையுடை
யதொன்பது நியாயமல்லோ.

௯௬. பின்னையும் -
கரும்பொற்சுரிகை கடியமார்பணிய
வரும்பொற்சுடிகை யணியொடுதோன்
என்பது.

சொன்னபடி யவ்விட்டிலுருவைக்காட்டின பின்பவை தரித்த வணிகளைச்சொல்லி யிருப்புக்கவசமார்பினிலணிந்து பொன்முடி சூடாநின்றனவென்றார். இவற்று ளிருப்புக்கவசமாவதேதெனி லுச்சிப்பகலினுந் தெளிவாயொப்பித்தநியாயங்களுக்கசையாத நெஞ்சின்சலந்தானே. கண்ணாற் கண்ட நியாயத்தைமறுத்துச் சலஞ்சாதிப்பது பதிதர்க்கெல்லாம் பொதுவியல்பாயினும் லுத்தேரானிகள் விசேஷமாயறியாமற்கெட்டோமென்று நினைவிற்றேறினும் பிடித்தசலத்தைவிடுவதிகழ்ச்சியென்றுங்காரத்தாற்கேட்டுத்தாங்களே தங்களுக்குப் பொய்யைச்சொல்லித் தான்றனக்கொருவ னிருகண்பிடுங்கினாற்போலே யெழும்பின வறிவொளி யாசைப்புகையா லிருட்படமூடி யிருப்புநெஞ்சின் கடோரத் தறிந்து நரகில்விழத் துணிவார்கள். லுத்தேர்தானேயிப்பூவுலகினு லுநான் வாழ்வதற்கொழியத் தன்மத மேற்கதியடைவதற்காகாதென்று முரோமான் திருச்சபையொன்றிலேமெய்க்கரையேற்ற முண்டென்று மெழுதினதறிவோம்.

## பொன்முடி

௯௭. அப்படிக் கண்டவபத்தங்களை மறுக்க

வொட்டாத வாங்காரமே பிடித்துவிடாத சலத்துக் கவர்களிடத்திற் காரணமாகையிற் சலத்துக் கடையாளமாக விருப்புக்கவச மார்பிலணிந்தவிட்டிலாங்காரத்துக் கடையாளமாகப் பொன்முடி தலைமேற்கொண்டதாக- அர்ச். - அருளப்பர்கண்டார். ஆயினும் லுத்தேராங்காரத்தையுங் கெம்பீரத்தையு மளக்குங்கோலிங்குண்டோ. செயோத்சியென்னுந் துரைக்கவனெழுதினபுத்தகத்தை லுத்தேரானிகளச்சுப்பதித்துத் தந்தபடியே வைத்திருக்கிறோம். அதிலேயவன் சொன்னதாவது-அப்போஸ்தலர் தாண்முதற்கொண் டிந்நாள்வரைக்கும் வேதபாரகராயினுமற்றைக்கல்விப்புலமையோராயினு மொருவருமென்னைப்போலவுத்தமமுறையாய்த் தெளிந்தமுகமாய்த்தேறினநூலா யெவர்க்குமா றுதலாக நியாயங்களை வெளிப்படுத்தினவரில்லையே. எவர்க்குமேனின்றுவ்வாக் கல்வியிற் சிறந்த வகுஸ்தீன்-அம்புரோசியென்றிவ்விருவர் முதலாயெனக்கு நிகரல்லவென்று நிச்சயமாகவறிவேனென்றான். மீளவும் - எருசலேமழிவென்னும் பிரசங்கத்தி லவனெழுதினதாவது- அப்போஸ்தலர் நாளின்முதலாயிப்போது நான்வெளிப்படுத்தின தெளிவோடு சுவிசேஷம் வழங்கினதல்லவென் ன் - இதுள்ளதுதானே. கூடப்பிறந்த தங்கைச்சியைப்பெண்டாட்டியாகவைப்பதப்போஸ்தலர் நாண்முறையென்ற பரமவிரகசியமே யக்காலே வழங்காமவிப்போது லுத்தேரோடின போதகத்தாலுண்டானதல்லோ. கடைசியிற்பொங்கின வாங்காரங் கரைபுரண்டோடி லுத்தேர்கெம்பீரத்துணிவெவ்வளவேறினதென்னிற் பத்தாஞ் சிங்கராயனென்னும் - அர்ச். - பாப்பு நிருபத்தைலுத்தே

ர் மருக்கத் துணிந்தவிடத்திற் சேற்றிலூர்ந்த புழுவாய்க்கிடந்தவவன் சேசுநாதர் ஸ்தானத்தாளாநின்ற-அர்ச். - பாப்பவர்களைச்சபிக்கக்கூசாதேதபோறான். இந்தவாங்காரத்தா லல்லோ லூத்தேரானிகளெல்லாருந் தங்களைத் தீர்க்கதரிசிகளென்றுஞ் சுவிசேஷிகளென்றும் விழுந்த திருச்சபையை நெறியினிறுத்தின வேதியரென்று மவிந்ததிருவிளக்காகிய மெய்விசுவாசத்தைத்தூண்டிக்கொளுத்தின பாரகரென்றுமித்தொகைப் பெருமையில்வீங்கின நாமங்களாயிரத்தங்களுக்கெடுத்துக்கொண்டு தாங்களே தங்களுக்காங்காரமாய்ப்பொன்முடிதலைமேற் புனைவதுகண்டோம்.

# பரிப்படை.

௫௮. 'இவ்வாறுருவு மணியுங்காட்டினபின்னரவ்விட்டி லியல்பினைக்காட்ட- அர்ச். - அருளப்பர் முந்திச்சொன்னதாவது:

காய்மாபகைமுதிர் கடும்படைமுகத்துப்
பாய்மாப்பரப்பெனப் பகைத்துநிற்பன-
என்பது.

பொங்கியபகையாற் போர்பொரவிரும்பி நின்றகுதிரைப் பெரும்படைபோலச் சொன்னவிட்டில்க ணின்றனவென்றார். அதேதெனில் - எந்நேரமும் லூத்தேரானிகள் பகைக்கும் படைக்குமாயத்தப்பட்டுநிற்குந் தன்மையிதாமே. திரி தேத்தென்னு நகரிற்கூடின திருச்சபை லூத்தேரையுமழைத்து வேறுபட வவனவமாய்ச்சொன்

ணதை யாராய்ந் திடையிற்கலந்த பொய்யைக் காட்ட வவனைவரச்சொல்லியனுப்பின நம்பிக் கையோலைக் கவன்மறுவுத்தரமாவது - இருபதி னாயிரங்காலாளு மையாயிரங்குதிரையு மென் னைச் சூழ்ந்துவரக் கூடினபின்பு நான் கூட்ட த்துக்குவருவேன். அன்னபடி நான்சொல்லுநி யாயமேசெல்லவுஞ் செய்வேனென்றான். இதோ லுத்தேர் மதமே பெரும்படைகொண்டு போர்மு கத்தோதத்தகு மதமாகையிற் போர்பொரவா யத்தப்பட்ட குதிரைப்பரப்புப்போலவன் லுத் தேரானிகளை- அர்ச். - அருளப்பர்கண்டார். அ ப்படி லுத்தேர் நாளிலே லுத்தேரானிக டிரண் டு மொய்த்தவிட்டில்களாகவொருங்குடன் கூடி த் தங்களையாளாநின்ற விராயரையுமெண்ணும ற் பெரும்படையாக யுத்தஞ்செய்யமண்டிவந்த விடத்தி லவர்கள்பாவமே யவர்களுக்குவிலகப்ப டாத பகைவினைசெய்ய விராயர்படையால்வெ ட்டுண் டொருபகலெல்லையிலிருபதினாயிர ருயிர் பட்டிறந்தார்கள். அப்படிநமது நாளிலே தாங் கம்பாடி லுத்தேரானிகடேவகோயிற் பெயரைச் சாட்டி நாட்டினுழைந்து கோட்டைவளைத்துப் பீரங்கிகளையேற்றி யுத்தத்துக்காயத்தப்பட்ட கு திரைப்படையோ டொப்பநின்றார்கள். அதைய றிந்திராசா படை விட்டகற்றினதறிவோம். உ ரோமான் சபையாரிங்கே நெடுநாட்டிருந்துபல நூறுயிரஞ் சனங்களைச் சத்தியவேதத்திற் சேர் த்தபடியே லுத்தேர்மதத்தார் நாலுநாளுள்ளு ழைந் திருந்து கூட்டஞ்சேர்க்கி லரசுசெங்கோ லசைந்து போகவு நாட்டுச்செல்வமறக்கெட்ட ழியவும் பகையும்போரும் விளையாதிருக்குமோ:

# தேரொலி.

௫௬. இருவுமன்றியே—

பார்முகத்துயிர்கெடப் புகைந்தெதிர்கிரிதருந்
தர்முகத்தொலியொடு சிறகர்புடைப்பன—

என்பது.

புரவிப்படையொப்ப யுத்தத்துக்கு நின்றவிட்டில் வெம்போர்க்களத்திற் பெருந்தேர்ப்படைகள் விசைபடத் திரிகையிலெழுந்தவோசைபாகச் சிறகுகளைப்புடைத்தடிப்ப— அர்ச். — அருளப்பர்கண்டார். பறவைகள் சிறகைப்புடைப்பது மனக்களிப்பாலாயிற் கண்டவிட்டிற் பறவைகள் விரியிறகடியா நின்றது வுத்தேரானிடம்மூட்கொள்ளு மகிழ்ச்சியைக் காட்டினதாமே. இவர் கண்மகிழ்ந்த காரணங்காட்டுவதற்கோவென்னிற் கொடும் போர்க்களத்திலோடுந் தேர்ப்படையோசைபோல வொலியெழச் சிறகைப் புடைப்பனவென்றார். அதெப்படியென்னின் மகிழ்ச்சிமிகுதியைக்காட்டப் பேரொலியெழும்பச் சிறகையடித்ததாகச் சொல்லவேண்டுமாகி விடியொலிகடலொலியுவமையாக வெடுத்தாலல்லோபேரொலிக் குரியதாகு ... றுமிவற்றைவிட்டு வெம்போர்முகத்துத்திரியுந்தேரொலியொத்தவோசையெழும்பிற்றென்பதேதென்றாராயக்கடவோம். இடித்தமேக முல்லைநிலங்குளிர்ப்பப் பெய்தமையாலு முழங்கொலியுடைத்தினா கனைமேற்புளாதுயிர்க்கெலாம் பலநன்மை செய்தமையாலு முலமிற் காக்கினையாவது வுத்தேரானிகண் மகிழ்ச்சிக் கிடியொலி ... லியுரியதல்ல. பழியிற்பிறந்து பகை... கெடவேதநிறைகெட

க்கண்டு மகிழ்ந்தகளிப்பிற் சிறகைப்புடைத்தநர கவிட்டில்களாகிய லுத்தேரானிகள் மனக்களி ப்பாகவிடுமொலி கொடும்போர் முகத்திற்பகைமி க வுடலற வுயிர்கெட விரத்தமோடவோடுங்கொ டுந்தேர்ப்படை யொலிக்கொத்ததென்றது நியா யந்தானே. அப்படி- தருளாஉயகூ-ம். ஆண்டிற் சில லுத்தேரானிகள் கள்ளராகவிரவிற்போ யரு ந்தவஞ்செய்திருந்த வேழுகன்னிகளைக் கட்டாய மாகப்பறித்தழித்தசெய்தியை லுத்தேரறிந்து த வழுமொழியநீதியும் வழுவக்கன்னியுமழியப்பலவு யிர்கெட்டோரிரவிலளவிலாவிளைந்தபாவத்திரளை க்கண்டதறு லவன்கொண்ட மகிழ்ச்சியுள்ளடக்க மாட்டாமற்போர்முகத்துயிர்கள் கெடுகையின்மு ழங்கித்திரியுந்தேரொலியாகச்சிறகைப்புடைத்து ப்பொதுப்பிரசங்கந்திலேலபிக்கெழுமோசையோ டச்சண்டாளனை மிகவும்புகழ்ந்து துதித்தான். அப்படியாங்கிலிய தீவரசன் றன்ஸ்திரீயைமறு த்து மற்றொருவைப்பாட்டியைக் கைக்கொண்டா னென்றதற்கு- அர்ச். - பாப்புப்பலவழியன்போ டுசொன்ன நியாயங்களைக் கேளாமையாலவனைச் சபித்தார். சபிக்கப்பட்டவரசனுங்கீழ்ப்படியாம ற் பகைகொண்டாங்காரித்தான். இதோபலவுயி ர்க்கேடாகக்கொடும்போர் தொடங்கினதென்று லுத்தேரானிகள்கண் டுள்ளடங்கா மனக்களிப் பாக வோங்கித் தங்கடேர்ப்படையோட்டச் சம யமிதுவென வங்கேநுழைந்து படைத்தேரொலி யெழச் சிறகைப்புடைத்தலறி-அர்ச். - பாப்புக் கண்மேலு முரோமான்றிருச்சபைமேலும் விகற் பமாகப் பலவையுஞ்சொல்லியத்திவெல்லாங்கெ ட்டதறிவோம்.

# படைக்கரசன்.

௨௩. கடைசியில் -
வெப்படைசிதைத்தோன் வெந்திசையரச
ரிப்படைமிசையாங்கிறைவனென்றெழுமென-
என்பது.

சொன்ன விட்டிற்படைமேலெழுந்து சங்கரித்தா னென்னப்பட்ட நரகினரசனாகிய பசாசேப்படை நடத்தியாளு மன்னனாக நின்றதென்ர். அஃதேதெனிற் காணப்பட்டவிராசா தங்களமதத்துக் காகாதென்ற லுத்தேரானிகள் வேண்டாமெனினுங் காணப்படாதவிராசாவாகத்தகளை நடத்தியாளும் பசாசுண்டென்பது நிச்சத்தானே. அர்ச். - யோவென்பவரெழுதின படியே யாங்காரிகளுக்கெல்லாம் பசாசேயிராசாவாகையின் முன்சொன்னதன்மையோ டாங்காமிக மதிகெட்டுச் சலஞ்சாதித்த பதிதராகிய லுதேரானிகட்கே சொந்தவுரிய விராசாவாகப் சாசு நிற்பதென்பது நியாயமாமே. மீளவும் லுதேரெழுதினபடியே தான்றனக் கொருகுருவாப் பசாசையெண்ணி யதுவந்துரைத்த நரகபாதகமுறைகள் பிறழாதுண்டுபண்ணின தன்தவினத்தார்க் கரசனாகப்பசாசாகிய தன்குருவவைத்துப் போனானென்று னியாயமல்லோ.

# சங்கரித்தோன்.

௨௪. ஆகிலும்வேதத்திற்பசாசுக்குரிய பலபெர் சொல்லியிருக்க மற்றெல்லாவற்றையும்விட்டி

ங்கே யதைச்சங்கரித்தோனென்பதென்ன. சொ
ன்னவிட்டில்கள் லுத்தேரானிகளை யுவமையாகக்
காட்டினதனு லவற்றையாளா நின்றபசாசைச்ச
ங்கரித்தோனென்றார். அதேதெனி லிந்நாள்வ
ரைக்குந் திருச்சபையழிப்ப முளைத்த மற்றைப்ப
திதர் வகுப்பெல்லா மொவ்வொன்றெவ்வோரிரு
நன்முறைகளைக் கெடுக்கப் பகைசெய்தசொழிய
வேரோ டெல்லாவற்றையும் பிடுங்கி யழிப்பத்
துணிந்தவரில்லை. லுத்தே ரினத்தாரோவெனி
லொருப்பட வெல்லாவறமு மெல்லா முறை
யு மெல்லாத் தேவவாக்கியமும் பெயர்த் தழு
த்தொழிப்பத் திருச்சபையிற் சர்வசங்கார நி
னைத்த பெரும்பகைக்கொடியவுணர்வீனராக நர
கப்புகைப் பிறப்பென்று குழாங்கொடுமொய்த்த
வராகையிற் சங்கரித்தோனென்று பசாசிராசா
வாக வவர்களை நடத்தியாளாநிற்கு மென்றதா
மே. லுத்தேர்மதத்திற் பிறந்து பிரிந்தபலவகை
ப்பதிதரைக் கொண்டு திருச்சபைக்குள்ள நலமெ
ல்லாஞ்சங்கரித்தழிப்பப்பசாசுவருந்திற்றல்லோ
ஏககடவுட் கற்புதத்திரித்துவமறுக்கவுஞ் சேசு
கிறீஸ்துவுக்குந் தேவத்துவம்பறிக்கவும் அர்ச்சி
யசிஷ்டர்களுக்குப் பேரின்பமொழிக்கவும் வா
னோர்க்கெல்லாம் வணக்கமழிக்கவும் வருந்தின
தொழியப் பூவுலகுள்ள திருச்சபையிலே லுத்தே
ரானிகள் கெடுக்கத்துணியாமல்விட்ட நல்லதொ
ன்றுண்டோ. நொந்தார்க்காறுதன் மெலிந்தா
ர்க்குறுதி யிறப்பார்க் குரித்துணையாக நிற்குஞ்
சிலுவைமரத்ததையுண்ட கருத்தருருவமும் பரம
தேவதாயி னடைக்கலவுதவியு மற்றைவானோர் து
ணையாதரவு மெழுதப்பட்ட தேவவாக்கியவுரி
மையு மெழுதப்படாததேவவாக்கியப் பரம்பர

ழக்கமுந் தேவத்திரவிய- அநுமானங்களுங் கா
ரணக்குருக்க ளொழுங்குந் தேவபூசையுதவியு
நெறியினிறுத்தியாளுந் தலைமையுஞ் சந்நியாச
த்துறவுங் கன்னிமைவிளக்கமு நீதிமுறைகற்பனை
களும் பூரணபலன்களும் வேண்டுதனேர்ச்சியு ம
ந்திரத்தொகுதியுட் புதுமைநிலைமையுந் தவமொ
நசந்தி தயை பொறைதானநிறை நிலைகற்புநிழ
ன் மனுவாண்மை திவசம்விரதங்கலையன்பமலந்
தருமங்களு முருமைபெருமை கருணையுறுதி தகு
நதி யுதவியொடுக்க மொழுக்கமடக்கம் பரிவரச
முற வறிவறமதிவிநிதுதிகதி நயன்பயன்மற்றை
பல வலநலமெலா மொருங்குடன் வேரோடு பி
டுங்கியறுத்தெறிந்தாற்போலச் சொன்னதெல்
லாந் திருச்சபையி லில்லாதாகப் பிரயாசப்பட்டு
த்திரிபவர் லுத்தேரினத்தாரல்லோ. ஆகையானீ
தியாய தின்படியே லுத்தேரானிகளை யுவமை
யாகக்காட்டின விட்டிற்படைமே லரசனைச் சங்
கரித்தோ னென்னும் பசாசுநின்றதென்று- அ
. - அருளப்பர் கண்டார்.

## இறைப்பணி.

உஉ. இவையெல்லா முலகிற் கைத்தாமாக்கி
னையாகக் குன்றச்சத்தியவேதமொழியோடு- அ
ச். - அருளப்ப ரெழுதினபடியே பசாசும்லுத்
தேரானிகளைக்கொண்டு சொன்ன தன்மையாற்
சலுத்திக்கொண்டுவருகையி லினிக்கெடாதுயிர்
பிழைத்தொருவருந் தப்புவதரிதாமல்லோ. ஆ
கிலும்

தந்நுதலணியெனத் தற்பரன்குறியிலார்
றுன்னுதலொழியச் சூழ்பசும் புன்முதற்
றீண்டாதெனப்பணி செய்த திறையோன்
றுண்டாநீதித் சருதியிதுவென-

என்பது.

உலகெலாங்கெடுக்கப் படையணியாகநின்றுட
கைத்தவிட்டில்களாண்டவர்குறியை நுதலணி
யாகவைத்திராதமனிதரைக்கெடுப்பதொழியப்ப
சும்புன்முதலாய்த் தீண்டாதபடிக்குநீதிமுறைய
ன்படியே யாண்டவர்கற்பித்தருளினரென்றார்
கோடைவெப் பூன்முகத்திலீரமின்றிக் காய்ந்த
புல்லும் பசுமையின்றி யுணங்கினமரமும் போல
நல்வினையொழுக்க மிலாது சுடுநெஞ்சுடையார்
மாத்திரம் பூதத்தேர்மத்தி லுட்புகுவாரொழி
விசுவாசக் குளுமையு நம்பிக்கைப் பசுமையும்வ
டாது பத்திமுதலெல்லாவறத்தின் மணமெழு
பூத்தமாட்சியிற் சிறந்தயாவரும் பார்க்கி லதினு
ட்பட்டுக் கெடுவரொருவருமில்லை- இதற்குநான்
புறநாட்டுச்செய்திகளை யெழுதுவதென்ன. தா
ன்கண்டவற்றைப்பார்க்கி லிந்நா ளிந்நாட்டின
ன்று தரங்கம்பாடியிற்சேர்ந்து லுத்தேரினத்தி
ற்புகுந்த யாவருந் தம்ஸ்திரீயைமறுத்து வெள்
ளாட்டிகளைக் கைக்கொண்டவரும் பரதாரத்
தைப்பறித்தவரும்பிறர்கைப்பொருளைக்கவர்ந்தத
ருந்தாய் தகப்பனை நிந்தித்தடித்தவருங் கள்ளுஞ்
சாராயநிறையவுண்பவரு நாணமழிந்து குலவு
விழந்தவருந் தீயவொழுக்கத்தா னெடுநாட்கே
யிலுங்குருவு மிழந்துகிடந்தவருமித்தொகைத்த
ற்றத வுணர்வுமனிதர் லுத்தேரானிகளான தந்
லாதேயறநன்னெறியில் வழுவாதொழுகிநின்ற

வொருவனாயினு முரோமான் றிருச்சபைவிட்டு லு
த்தேர்மதத்திற்பட்டதாகவொருவருங்காட்ட
மாட்டார்கள். அப்படியேயறநெறியுமெற்கதியா
சையும்விடாதவ னுரோமான்றிருச்சபையும் வி
டான். பகைசினங்காமங்களவுகொலையுலோப மற்
றப்பாவமேலுத்தேர்மதத்திற்சேர்க்கும்வழித்
துணையாமே. இதனாலல்லோ பசுமையுமுடமலர்க்
கிளிர்ச்சியும் விடாததெல்லாவற்றையு மவ்விட்டி
றீண்டாதிருக்கக் கற்பனையாயிற்றென்க. ஆகை
யா லுயிர்கெட லுத்தே ருமிழ்ந்த விஷத்துக்கு
த்தம நன்மருந்தாகு நல்லொழுக்கந்தானே. ந
ல்வினை யாசையுந் தீவினை யச்சமும் விடாதவ
ர் லுத்தேரினத்தாரொளித்து விரித்ததந்திர
பலவகை வலைகளிலகப்பட் டுயிர்கெட மயங்கு
வானென் றஞ்சவுந் தேவையில்லை. மீளவுமிந்து
ராக்கினையி லகப்படத்தகுவர்யாவரு நெற்றிய
றியா யாண்டவர் குறியில்லாதா ரென்றபோ
த லுத்தேரானிக ளறிக்கைப் பட்டார்களென்ப
தற் கொருசந்தேகமில்லை. ஆண்டவர் முத்திரை
யாகிய சிலுவையடையாள நெற்றியில்வரைவ தக்
கியானமென் றதைவிலக்கித் தேவகுறியணியிழ
ந்தநெற்றி நிறுவித் திரிபவரவரல்லோ.

## சொன்னதற்கடைமானம்.

உ௩. அர்ச். — அருளப்பரிப்படித் தேவவிரகசி
யமாக வுவமைப்பேரார்வையான்மூடிச் சொன்ன
தற்கவரோ தினைத்தபயனிதுவென்று வேதசத்தி
மாகச் சொல்லமாட்டேனாயினும் பலதுறைகட

ந்த கல்விநல்லோர்பலருமதற்கிதுவேபயனென்
றெழுதினதொழிய நானேயிங்கே சொன்னதெ
ல்லாஞ் சலஞ்சாதியாமற் பார்த்தயாவர்க்கு நி
யாயத்துக் கொத்ததாகத் தோன்றுமென்பதற்
கையமில்லை. மற்றப்படி நானிங்கே லுத்தேரானி
கள் சொன்னதாகவுஞ் செய்ததாகவு மெழுதின
தெல்லா மெய்யோ பொய்யோவெனத் தனக்கை
யந்தோன்றி லவர்களெழுதி யச்சுப்பதித்த புத்
தகச் சாட்சியோ டெல்லாவற்றையு மொப்பிக்க
விருக்கிறோம். மீளவு முச்சிப்பகலொளியொப்ப
த்தெளிந்த விந்தநியாயமெல்லாமிருக்க லுத்தே
ரானிகளவற்றைக்காணுமன் மதிகெட்டபித்தனு
மஞ்சிச்சொல்லமாட்டாத வபத்தங்களைக் கூசா
தநுசரிப்பதென்னவென்றையமுந்தோன்றிலவ
ர்க ணரகப்புகைப்பிறப்பாகமுளைத்தவரென்று மு
ன்சொன்னதை நினைத்தாலல்லோ வையமு மதி
சயமுமெல்லாந் தனக்குத்தீரும். இருட்புகைநி
றைந்தவறையுணின்றவருள்ளிருக்குந்திண்மையு
ம் புறத்திருக்கு நன்மையுங்காணொன்றதுபோ
லப் புகையிற்பிறந்த லுத்தேரானிகளுந்தங்கண்
மதத்தினக்கிரமமு முரோமான்றிருச்சபையொ
ழுக்கமுமறிவதரிதாம். அவர்களும்புகைநீங்கிவெ
ளியேவந்தா லநுசரித்தமதத்தினபத்தத்தைக்
கண்டு நாணியதனை மறுத்துச்சத்தியத்தைக்கை
க்கொள்ளத்தாமதஞ்செய்யார்கள். ஆகையாலி
ருகண்மறைய மொய்த்தடர்ந்த விருட்புகைகட
ந்துவிட்டவர்களும்வெளிவந் தாண்டவர் திருவி
ளக்கொளியிற் றெளிந்து பொய்ம்மதமயக்க நீக்
கிக்கதிசேர் நன்னெறிவரவே தானுமிரங்கியவ
ர்களுக்குவேண்டிச் சுவாமியை மன்றாடச்செய்
வான்.

# கெடாததற்கெச்சரிக்கை.

உச. இற்றைவரைக்குஞ் சொன்னதைக்கொ
ண்டு தானெனக்கெழுதிக் கேட்டதெல்லாம்வெ
ரியாய் லுத்தேரியாரேயென்றும் லுத்தேரானி
ன்யாவரொன்று மெப்பிறப் பெவ்வியல்புடைய
ான்றுந் தானேணேதோன்றுமல்லோ. இந்நிலையி
நிறைமனிதராக்குந் தன்னைப்பொற்பொறி ய
ஒரு லேய்த்தபுத்தகத்தை யச்சுப்பதித்துத் த
தவர். இனிப்பூவுலகிற் காக்கினை விளைவிப்பதற்
ப் புகைப்பிறப்பாகமுளைத்தவிவ்வகை விட்டிற்
றலைவந்து தன்பயிரையேயாததற்குப் பூமல
மாறிக்காய்ந்த யாவையும் வெட்டிக்கெடுக்கும்
ட்டிலதென்று தன்பயிரெல்லாம் விசுவாசப்ப
மையு மற்றமலர்ச்சியும் விடாததற் கோயாமி
வெச்சரிக்கைவேண்டுமென்றறிக.

லுத்தேரினத்தியல்பு

முற்றும்.

# பொருளட்டவணை.